# கடவுளின் நாக்கு

## எஸ் ராமகிருஷ்ணன்

## மூலம் : ஆனந்த விகடன்

**இந்த மின்புத்தக ஆக்கம், அச்சுப்புத்தகங்களை பயன்படுத்த இயலாதவர்கள், பார்வை மாற்றுத்திறனாளிகள், அவர்களுக்கு உதவும் அமைப்புகள் தங்கள் சொந்தப்பயன்பாட்டிற்கு பயன்படுத்த மட்டுமே. மற்றவர்கள் பயன்படுத்துவது, மறுஆக்கம் செய்வது, பகிர்வது போன்றவை காப்புரிமைச் சட்டப்படி குற்றம்.**

# பொருளடக்கம்

பகுதி 1 - கதைகளின் தாயகம் ..... 5
பகுதி 2 - மனிதன் நல்லவனா? ..... 7
பகுதி 3 - அன்பின் அடையாளம் ..... 10
பகுதி 4 - காட்டின் அரசன்! ..... 13
பகுதி 5 - சிலந்திப் பெண்! ..... 16
பகுதி 6 - கண் திறவுங்கள் ..... 19
பகுதி 7 - வெங்காயத்தின் குரல்! ..... 22
பகுதி 8 - தேசங்களின் தலைவிதி ..... 25
பகுதி 9 - தேவையில்லாத கோபம்! ..... 28
பகுதி 10 - முதல் கண்ணீர்! ..... 30
பகுதி 11 - வான் நோக்கு! ..... 33
பகுதி 12 - எதில் போய் முடியும்? ..... 36
பகுதி 13 - தேடிச் சேர்த்த பணம்! ..... 39
பகுதி 14 - நாற்காலிக்கு கொம்பு உண்டு! ..... 41
பகுதி 15 - யாருக்கானது சட்டம்! ..... 44
பகுதி 16 - கவலையின் குரல்! ..... 46
பகுதி 17 - மழையை வரவழைப்பவர்கள்! ..... 49
பகுதி 18 - துரோகத்தின் நிழல்! ..... 52
பகுதி 19 - யானையின் கண்கள்! ..... 55
பகுதி 20 - பயத்தை சுமப்பவர்கள்! ..... 58
பகுதி 21 - தண்டனை மட்டுமா தீர்வு! ..... 61
பகுதி 22 - மரத்தில் காய்க்கும் அரிசி! ..... 63
பகுதி 23 - 'ஒடோமி' கதை ..... 66
பகுதி 24 - வெறும் கற்பனை! ..... 68
பகுதி 25 - ஆமையும் முரசும்! ..... 71
பகுதி 26 - வான் விருந்து! ..... 73
பகுதி 27 - இரும்பு மிருகம்! ..... 76
பகுதி 28 - ஈக்களும் சிலந்தியும்! ..... 78

பகுதி 29 - உப்பும் குற்றமும் ..... 81
பகுதி 30 - வாயைக் கட்டுங்கள்! ..... 83
பகுதி 31 - உதவிக் குரல்! ..... 85
பகுதி 32 - சந்தையின் தந்திரம்! ..... 88
பகுதி 33 - அழகின் அடையாளம்! ..... 91
பகுதி 34 - சிறுகல் போதும்! ..... 93
பகுதி 35 - நிறம் மாறிய பறவை! ..... 96
பகுதி 36 - அறிவின் துணை! ..... 98
பகுதி 37 - வாழ்வின் வியப்பு! ..... 100
பகுதி 38 - உழைப்பின் உன்னதம்! ..... 103
பகுதி 39 - கோடையும் இனிதே! ..... 106
பகுதி 40 - மறதியின் தேவதை! ..... 108
பகுதி 41 - எச்சில் கோபம்! ..... 111
பகுதி 42 - குடித்த கழுதை! ..... 113
பகுதி 43 - இரக்கத்தைக் கொள்ளையடிக்கிறார்கள்! ..... 116
பகுதி 44 - சிந்திக்கும் விலங்கு! ..... 119
பகுதி 45 - சந்தேகத்தின் நிழல்! ..... 122
பகுதி 46 - நேர்மையின் அர்த்தம்! ..... 124
பகுதி 47 - மவுனக் காட்சிகள்! ..... 126
பகுதி 48 - வாழ்தலின் இனிமை! ..... 129
பகுதி 49 - எதிர்பாராத சந்தோஷம்! ..... 132
பகுதி 50 - பாடம் மட்டுமே போதுமா! ..... 135
பகுதி 51 - உண்மை சுடும்! ..... 138
பகுதி 52 - பயணியின் கோபம்! ..... 140
பகுதி 53 - நம்மில் ஒருவன் ..... 143
பகுதி 54 - பெயரைக் கேளுங்கள்! ..... 146
பகுதி 55 - நிழலைப் புதைத்தவன்! ..... 150
பகுதி 56 - குறையும் நிறையும்! ..... 152
பகுதி 57 - கண்களைத் திருப்புங்கள்! ..... 154

பகுதி 58 - எதிர்காலம் எப்படியிருக்கும்? ..... 157
பகுதி 59 - காதலின் துயரம்! ..... 159
பகுதி 60 - உனக்குள்ளிருக்கும் புத்தன்! ..... 162
பகுதி 61 - மூடிய கைகள்! ..... 165
பகுதி 62 - வாளும் வித்தையும்! ..... 168
பகுதி 63 - பல்லாயிரம் பழக்கங்கள் ..... 171
பகுதி 64 - அலட்சியமாகும் விதிகள்! ..... 174
பகுதி 65 - சொல் ஓர் ஆயுதம்! ..... 177
பகுதி 66 - கூடி உண்போம்! ..... 179
பகுதி 67 - ஏழு அதிர்ஷ்டங்கள் ..... 182
பகுதி 68 - வீட்டின் தூண்கள்! ..... 185
பகுதி 69 - யானையும் கொசுவும்! ..... 188
பகுதி 70 - யார் துணை? ..... 192
பகுதி 71 - நட்பின் வயது ..... 194
பகுதி 72 - பறவைகளின் மொழி ..... 197
பகுதி 73 - உழைப்பின் பாடல்! ..... 201
பகுதி 74 - மனிதர்கள் பலவிதம் ..... 204
பகுதி 75 - குற்றத்தின் விதை ..... 207
பகுதி 76 - தந்தையெனும் தியாகி! ..... 210
பகுதி 77 - மவுனத்தின் எடை! ..... 213

## பகுதி 1 - கதைகளின் தாயகம்

உலகின் முதல்முதல் கதைசொல்லி கடவுள்தான் என்கிறார் கள் இன்கா பழங்குடி மக்கள். கடவுளின் நாக்குதான் முதல் கதையைச் சொல்லியது எனவும் அவர்கள் நம்புகிறார்கள். பூமியில் மனிதன் தோன்றிய நாட்களில் தன்னைச் சுற்றிய இயற்கையைக் கண்டு பயந்துபோனான். முதல் மனிதனால் எதையும் நினைவுவைத்துக்கொள்ள முடியவில்லை.

கடவுள் இந்த உலகைப் புரிந்துகொள்ளவும் நினைவு வைத்துக் கொள்ளவும் உலகை கதைகளாக உருமாற்றி சொல்லத் தொடங்கினார். அந்தக் கதைகளை கேட்டதன் காரணமாகவே மனிதனுக்கு நினைவாற்றல் உருவானது. அதன் பிறகு, கடவுள் சொல்லிய கதைகளை மறக்காமல் மனிதர்கள் சொல்லி வரத் தொடங்கினார்கள். அதனால்தான் தலைமுறை தலைமுறையாக இன்றும் கதை சொல்லப்படுகிறது என்றும் இன்கா பழங்குடிகள் கருதுகிறார்கள்.

கதைகள் உருவான விதம் பற்றி நிறையக் கதைகள் இருக்கின்றன. எது உலகின் முதல் கதை? எங்கே, எப்போது யார் சொல்லியிருப்பார்கள்... என யாராலும் கண்டறிய முடியவில்லை. குகை ஓவியங்களைப் போல கதைகளும் பெயரறியாத மனிதனின் சிருஷ்டியே!

இந்தியா கதைகளின் தாயகம். கடற்கரையில் உள்ள மணலின் எண்ணிக்கைளைவிட கதைகளின் எண்ணிக்கை அதிகமானது என்பார்கள். இந்திய மக்கள் தொகையைவிட இங்குள்ள கதைகளின் எண்ணிக்கை நிச்சயம் அதிகமிருக் கும். இந்தியாவில் இருந்து கதைகள் வேறுவேறு தேசங் களுக்குச் சென்றிருக்கின்றன. நாடோடிகள், வணிகர்கள், கதைசொல்லிகள் மூலம் கதைகள் தேசம்விட்டு தேசம் போனதற்கு சாட்சியாக இந்திய கதை களைக் கிரேக்கத்திலும், ஆப்பிரிக்கா விலும், சீனாவிலும் காண முடிகிறது.

கதைகளுக்கு என்றும் வயதா வது இல்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தபின்பும் கதை புத்தம் புதியதாக இருக்கிறது. உலகை ரட்சிக்க வந்த தீர்க்கதரிசிகள் அத்தனை பேரும் கதையைத்தான் தனது வெளிப்பாட்டுமுறையாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கதையைச் சொல்வதன் வழியே நினைவுகள் மீள்உருவாக்கம் செய்யப்படுகின்றன. கடந்த காலம் மீண்டும் உயிர்ப் பெறுகிறது. உலகில் ஒரு பொருளை நிலைபெறச் செய்வதற்கு அதைக் கதையில் இடம்பெறச் செய்துவிட வேண்டும் என்பதே நியதி.

கதை என்பது நினைவும், கற்பனையும், உண்மையும் கலந்து உருவாக்கப்பட்ட ஒரு விசித்திர கம்பளம். அரேபிய இரவுகள் கதையில்வரும் 'பறக்கும் கம்பளம்' போல எல்லா கதைகளும் நம்மை இருப்பிடம்விட்டு பறக்க செய்யும் விந்தைகளே!

கதை என்பதை வெறும் கற்பனையில்லை; அது ஞாபகங் களின் சேமிப்புக்கூடம், பண்பாட்டு மரபின் தொடர்ச்சி! கதைகள் நம் சமூகத்தின் மனசாட்சி. கதைகள் கேட்பவரைக் களிப்பூட்டுவதுடன் படிப்பினை ஒன்றையும் கற்றுத் தருகின்றன.

முன்பெல்லாம் கோடை விடுமுறை என்றாலே தாத்தா வீட்டுக்குப் போவது வழக்கம். பகல் முழுவதும் விளையாட்டும் இரவெல்லாம் கதை கேட்பதும் எனப் பொழுது கழியும். இன்று கோடை விடுமுறையில் புதிதாக என்ன படிக்க வைக்கலாம் என பிள்ளைகளை சம்மர் கேம்பில் சேர்த்துவிட்டு விடுகிறார்கள். இன்னொரு பக்கம் தாத்தா- பாட்டிகள் பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இன்றி பரிதவிக்கிறார்கள்.

குழந்தைகளுக்குச் சோறு ஊட்டும்போது அம்மா கதைகளையும் சேர்த்து ஊட்டுவார். குழந்தை இன்னொரு வாய் அதிகம் சாப்பிட வேண்டும் என்றால், அரக்கனின் உயிர் அடுத்த கடல் தாண்டிக் கிளியாகப் பறந்து போய்விடும். இன்றோ, சாப்பாட்டைத் தட்டில் போட்டு, குழந்தையை டி.வி முன்னால் உட்கார வைத்துவிடுகிறார்கள். தனது உணவோடு தொலைக்காட்சிப் பிம்பங்களையும் குழந்தைகள் அள்ளியள்ளி விழுங்குகின்றன.

ஆகவே, வன்முறைக் காட்சிகள் அதன் மனதில் ஆழமாக பதிந்துவிடுகின்றன. இதிலிருந்து விடுபடுவதற்கு குழந்தை களுக்கு நாம் கதைகள் சொல்லவும், அதற்காக நாம் கதை படிக்கவும் தொடங்க வேண்டும். கதை சொல்வதை கல்வி நிலையங்கள் பாடமாக வைக்க வேண்டும். மாணவர்கள் ஒன்றுகூடி கதைப் பேசுவதை வாரம் ஒருமுறை பள்ளியே நிகழ்த்தலாம்.

கதைகள் உருவானவிதம் பற்றி எத்தனையே அற்புதமான கதைகள் நம்மிடம் உள்ளன. அதில், கர்நாடகாவில் உள்ள கிராமப்புற கதை மறக்க முடியாதது. முன்னொரு காலத்தில் ஒரு பெண் மனதில் நிறைய கதைகளையும்,பாடல்களையும் வைத்திருந்தாள். ஆனால், அவள் யாருக்கும் ஒரு கதையைக் கூட சொன்னதே இல்லை. ஒரு பாடலை பாடியதும் இல்லை. இதனால் அவளது உடலில் இருந்த கதைகளும் பாடல்களும் எப்போது இன்னொருவரிடம் போய் சேருவோம் என வேதனைப்பட்டன.

ஒருநாள் அவள் உறங்கிக் கொண்டிருந்தபோது ஒரு கதையும், பாடலும் வாய்வழியாக வெளியேறிப் போய், வாசலில் செருப்பாகவும் குடையாகவும் உருமாறிக்கொண்டன. பெண்ணின் கணவன் வீடு திரும்பியபோது, வாசலில் கிடந்த செருப்பையும் குடையையும் கண்டு, “யார் வந்திருப்பது?” எனக் கேட்டான். அந்தப் பெண், யாரும் வரவில்லை என்றதும் அவள் நடத்தை மீது சந்தேகம்கொண்டு சண்டையிட்டான் கணவன். அன்றிரவு மனைவியிடம் கோபித்துக்கொண்டு கோயில் மடத்தில் போய் படுத்துக் கொண்டான்.

அந்த ஊரில் விளக்கின் தீபங்கள் இரவில் அணைக்கப்பட்ட வுடன், தீபச் சுடர்கள் எல்லாம் மடத்தில் ஒன்றுகூடிப் பேசுவது வழக்கம். அன்று ஒரேயொரு சுடர் மட்டும் தாமதமாக வந்து சேர்ந்தது. அதனிடம், “ஏன் நீ தாமதமாக வந்தாய்?” எனக் கேட்க, அந்தச் சுடர் மடத்தில் உறங்கிக்கொண்டிருந்தவனை காட்டி, “இவன் மனைவி நிறையக் கதைகளும் பாடலும் அறிந்தவள். ஆனால், யாரிடமும் சொல்ல மாட்டாள். இன்று பொறுக்க முடியாமல் அவள் வாயிலில் இருந்த கதையும் பாடலும் வெளியேறி செருப்பாகவும் குடையாகவும் உருமாறிவிட்டன. அதையறியாமல் அவளைச் சந்தேகப்பட்டு, அவளோடு சண்டைப் போட்டுவிட்டு இங்கு வந்து படுத்துக் கிடக்கிறான். பாவம் அந்தப் பெண்!” என்றது.

அதைக்கேட்ட பெண்ணின் கணவன் தன் மனைவி யைத் தவறாக புரிந்துகொண்டோமே என வருந்திய துடன், அவள் மனதில் உள்ள கதைகளையும் பாடல்களையும் எல்லோரிடமும் சொல்லும்படியாக செய்தான். அதன் பிறகு, அவள் சந்தோஷ மாக இருந்தாள் என கன்னட

நாட்டுப்புறக் கதை ஒன்று கூறுகிறது. கதை அறிந்தவர்கள் அதை வெளியே சொல்லாவிட்டால் என்ன ஆவார்கள் என்பதை வேடிக்கையாக இக்கதை விவரிக்கிறது. அதே நேரம் மறைத்துவைக்கப்பட்ட கதை என்றைக்காவது ஒருநாள், எப்படியாவது வெளியாகியே தீரும். அப்போது அது உருமாறிவிடும் என்பதையும் நினைவுப்படுத்துகிறது.

இந்தக் கதையைச் சொன்னவன் ஒரு தேர்ந்த கலைஞன் என்பதற்கு சாட்சிதான், தீபத்தின் சுடர்கள் ஒன்றுகூடிப் பேசும் கற்பனை. விளக்கின் சுடர்கள் அணைக்கபட்டவுடன் இருளில் மறைந்துவிடு வதில்லை. அவை ஒரு இடத்தில் ஒன்றுகூடி மனிதர்களைப் பற்றி பேசுகின்றன என்பது எவ்வளவு மகத்தான கற்பனை!

'மொகலே ஆஸம்' திரைப்படத்தில் "இரவில் எரியும் விளக்குகளை பகலில் ஏன் அணைத்து விடுகிறார்கள், தெரி யுமா?" என மன்னர் சலீம் கேட்பார். அதற்கு அந்தப் பணிப் பெண் "தெரியாது?" என்பாள். "இரவில் தான் கண்ட உண்மை களை யாரிடமும் சொல்லிவிடக்கூடாது என்பதற்காகத்தான்" என்பார் சலீம். எவ்வளவு அழகான கற்பனை!

இந்தக் கதையில் வரும் சுடர் உண்மையை எடுத்துச் சொல்லி கணவனுக்கு புரிய வைக்கிறது. எளிய கதைதான். ஆனால், அது முக்கியமான வாழ்க்கைப் பாடத்தை கற்றுத் தருகிறது. காரணம்இல்லாமல் உங்கள் மனைவியைச் சந்தேகித்து வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்ளாதீர்கள்; அடக்கப்பட்ட ஆசைகளே உடல்உபாதையாக உருமாறுகின்றன என்றும் இக்கதை சுட்டிக் காட்டுகிறது.

விளாதிமிர் பிராப் (Vladimir Propp) என்ற ரஷ்ய நாட்டார் வழக்காற்றியல் அறிஞர் நாட்டுப்புற கதைகளை வகைப்படுத்தி விரிவாக ஆய்வு செய்திருக்கிறார். இவரது Morphology of the Folktale மிக முக்கிய நூலாகும். இந்த வகைப்பாட்டு முறையைக் கொண்டே இன்றும் கதைகளைப் பிரித்துஅடையாளப்படுத்துகிறார்கள்.

குழந்தைகளுக்காக நீங்கள் கதை சொல்லுங்கள். குழந்தைகளிடம் கதை கேளுங்கள். அதுதான் உலகை அறிந்துகொள்வதற்கான எளிய வழி.

இணையவாசல்: உலகெங்கும் உள்ள நாட்டுப்புறக் கதைகளைப் படிக்க விரும்புகிறவர்களுக்கான இணையதளம்: http://www.pitt.edu/~dash/folktexts.html

## பகுதி 2 - மனிதன் நல்லவனா?

எனது கிராமத்தில் மாடு மேய்க்கும் ஒரு வயதானவர் சிறுவர்களுக்கு நிறையக் கதைகள் சொல்வார். ஒருமுறை அவரிடம் அற்புதமான கதை ஒன்றைக் கேட்டேன். இன்றும் நினைவில் பசுமையாக இருக்கிறது.

முன்னொரு காலத்தில் காட்டுக்குள் ஒரு மனிதன் புலியிடம் மாட்டிக்கொண்டான். புலி அவனை கொல்ல முயன்றபோது, அந்த மனிதன் "நான் நல்லவன், என்னை கொன்றுவிடாதே!" எனக் கெஞ்சினான்.

அதைக் கேட்ட புலி "அப்படியா! நீ நல்லவன் என்று யாராவது சொன்னால், உன்னை விட்டு விடுகிறேன்" என்றது.

அவன் ஒரு கிளிடம் போய் "கிளியே... கிளியே! நான் நல்லவன் என்பதை சொல்!" என்றான்.

அதற்குக் கிளி "மனுசங்க ரொம்ப மோசமான வங்க. சுதந்திரமாத் திரியுற என்னைப் பிடிச்சு என் றெக்கையை வெட்டிக் கூண்டுல அடைக்கிறது நீங்கதானே. பின்னே எப்படி நீ நல்லவனா இருப்பே?" என்று கேட்டது.

உடனே புலி அந்த மனிதனைப் பார்த்து "நான் உன்னைக் கொல்லப் போகிறேன்!" என சத்தமிட்டது.

அவன், 'எனக்கு இன்னொரு வாய்ப்பு கொடு" எனக் கேட்டு அனுமதிப் பெற்றான். காற்றிடம் சென்று "காற்றே... காற்றே! நான் நல்லவன் என நீயாவது சொல்லக் கூடாதா?" எனக் கேட்டான்.

அதற்குக் காற்று "மனுசங்க உயிர் வாழுறதுக்கு நான்தான் காரணம். என்னையே நாசமாக்கிட்டீங்க. அதோட, ஒரு மரமில்லாம வெட்டிட்டே வர்றீங்க. பிறகு, எப்படி நீ நல்லவனா இருக்க முடியும்?" என்றது.

உடனே அவன் நிலத்திடம் சென்று "பூமித் தாயே! நான் நல்லவன் என்று நீயாவது சொல்லேன்..." என்றான்.

அதற்கு நிலம் "நான் எவ்வளவுதான் விளைச் சல் கொடுத்தாலும், என்னோட அருமை மனுஷங் களுக்குப் புரியறதே இல்ல. நிலத்தை நாசமாக் கிட்டே வர்றாங்க. நீயும் அந்தக் கூட்டத்துல ஓர் ஆள்தானே, பிறகு நீ எப்படி நல்லவனாக இருப்பே?" எனக் கேட்டது.

உடனே புலி அவனைக் கொல்லப் போவதாக உறுமியது.

கடைசிமுறையாக அவன் ஆற்றிடம் சென்று, "நான் நல்லவன் என நீயாவது சொல்லக் கூடாதா?" எனக் கெஞ்சி கேட்டுக்கொண்டான்.

அதற்கு ஆறு "காலம் காலமாக மனுசங்க குடிப்பதற்கும், குளிப் பதற்கும், விவசாயம் செய்வதற்கும் உதவி செய்திருக்கிறேன். ஆனால், நீங்கள் என்னைப் பாழடித்துவிட்டீர் கள். தண்ணீரோட மதிப்பை உண ரவே இல்லை நீங்கள். நீ மட்டும் எப் படி நல்லவனாக இருப்பாய்?" எனக் கேட்டது.

இதற்கு மேலும் பொறுமை இல்லாத புலி அவன் மீது கொல்லப் பாய்ந்தபோது, மரக் கிளையில் இருந்த ஒரு காகம் புலியைப் பார்த்துச் சொன்னது: "பாவம், நல்ல மனுஷன்!"

உடனே புலி, "இவன் நல்லவன் என்று உனக் குத் தெரியுமா?" என காகத்தைப் பார்த்து கேட்டது

“என்னைப் போன்ற காகங்களுக்கு மனுஷங்க தான் சாப்பாடு போடுறாங்க. எத்தனையோ வீட்டுல அவங்கல்லாம் சாப்பிடுறதுக்கு முன்னாடியே எங்களுக்கு சோறு படைக்கிறாங்க. மனுஷங்க எல்லாரும் நல்லவங்க. ஆகவே, இவனும் நல்லவன்தான்!” என்றது காகம்

உடனே புலி அவனை உயிரோடு விட்டுவிட்டது. அந்த நன்றிக் கடனுக்காகவே இன்றைக்கும் காகங்களுக்கு சோறு போடும் பழக்கம் இருந்து வருகிறது எனக் கதையை முடித்தார் கிழவர்.

எளிமையான கதை. ஆனால், நம் மண்ணை யும், தண்ணீரையும், காற்றையும் நாசமாக்கி வருவதைக் கண்டிப்பதற்காக சொல்லப்பட்ட கதை. கிராமத்து மனிதர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவத்தில் இருந்து கதையை உருவாக்கிக் கொள்கிறார்கள். இக்கதையில் உயிருக்கு மன்றாடும் மனிதன் இயற்கையிடம், ‘நான் நல்லவனா?’ எனக் கேட்கும்போது இயற்கை ‘இல்லை!’ என்றே பதில் தருகிறது. அது நிதர்சனமான உண்மை.

அதே நேரம் காகம் மனிதனை உயர்வாக சொல் கிறது. இன்றைக்கும் காகங்களுக்கு உணவிடும் வழக்கம் இருந்து வருகிறது. உயிரை காப்பாற் றிய நன்றிக்காகத்தான் மனிதன் காகங்களுக்கு உணவிடுகிறான் என்பது புதிய பார்வை!

அடைத்து சாத்தப்பட்ட ஜன்னல்கொண்ட அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் வளரும் பிள்ளைகள், பறவைகள் எதையும் காண்பதே இல்லை. வானமே அவர்களுக்குத் தெரியாது. திறந்தவெளியில் படுத்தபடி ஆகாசத்தில் ஒளிரும் நட்சத்திரங்களை எண்ணி விளையாடும் விளையாட்டுத் தெரியாது. உதிர்ந்து கிடக்கும் நாவல்பழத்தின் ருசி தெரியாது. புளியம் பிஞ்சின் சுவை தெரியாது. பிரிஜ்ஜில் வைத்த ஆப்பிள் பழங்களைப் போல பிள்ளைகள் பத்திரமாக வளருகிறார்கள். அது, ஆரோக்கியமானது இல்லை.

பள்ளிப் பாடங்களுடன் அவர்களுக்கு இயற்கையும் நேரடியாக அறி முகம் ஆக வேண்டும். பூக்களின் பெயர் தெரியாமல், விதைகளைக் காணாமல், அருவியையும் நீரோடையையும் மலைகளையும் அறியாமல் பிள்ளைகள் வளருவது சரியானது இல்லை.

கரிசலில் பிறந்த குழந்தை களுக்கு மண்ணை கரைத்து நாக்கில் வைத்துவிடுவார்கள், முதலில் மண் ருசி அறிமுகமாகட்டும் என்று. மண், கையால் தொடக்கூடாத ஒரு பொருள் எனத் தொலைக்காட்சியில் இன்று கற்றுக் கொடுக்கிறார்கள். நாம் தண்ணீரை, நிலத்தை, காற்றை நேசிப்பதற்கு பழக வேண்டும். அதற்கு இதுபோன்ற கதைகள் உதவக்கூடும்.

தமிழ் இலக்கியத்தின் பீஷ்மர் என அழைக்கப்படும் எழுத்தாளர் கி.ராஜநாராயணன் கிராமப்புறங்களில் சொல்லப்பட்டு வந்த கதை களைத் தேடி, சேகரித்து நூலாக்கியிருக்கிறார். முல்லை முத்தையா, அ.லெ.நடராஜன், நெ.சி.தெய்வசிகாமணி போன்றவர்களும் வாய்மொழிக் கதைகளைச் சேகரித்து தொகுத் திருக்கிறார்கள்

தற்போது கழனியூரன், பாரததேவி, எஸ்.எஸ்.போத்தையா. எஸ்.ஏ.பெருமாள், கம்பீரன் என பலரும் நாட்டுப்புறக் கதைகளைத் தேடி பதிப்பித்து வருகிறார்கள். உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்களான இதாலோ கால்வினோ, ஹெர்மன்ஹெஸ்ஸே மற்றும் கவிஞர்களான யேட்ஸ், தாகூர் போன்றவர்களும் நாட்டுப்புறக் கதைகளைத் தேடி, சேகரித்து நூலாக்கியிருக்

கிறார்கள். தங்களின் கதை மரபைக் காப்பாற்ற வேண்டியது இலக்கியவாதிகளின் கடமை தானே!

மக்கள் மத்தியில் வழங்கிவரும் வாய்மொழிக் கதைகளைத் தேடி சேகரிப்பது அரும்பணி. கதைகள் மக்களின் ஆதிநினைவுகளின் வடிவம். கேட்டவுடன் யாரும் கதை சொல்லிவிட மாட்டார்கள். அதற்கு கிராமத்து மக்களிடம் நட்பாக பழக வேண்டும். கூச்சம் போன பிறகுதான் கதை சொல்ல ஆரம்பிப்பார்கள்.

ஆண்களை விடவும் பெண்களே அதிகம் கதை சொல்லக்கூடியவர்கள். அதிசயமான இந்தக் கதைகளை அவர்கள் யாரிடம் கேட்டார்கள்? எப்படி நினைவு வைத்திருக்கிறார்கள் என்பது வியப்பாக இருக்கும்.

பல்கலைக்கழகங்களில் உள்ள நாட்டுப்புறத் துறை மாணவர்களும் தமிழ் இலக்கியம் படிக்கிற ஆய்வு மாணவர்களும்கூட நாட்டுப்புறக் கதைகள், பாடல்களைத் தேடிச் சென்று, சேகரம் செய்து காப்பாற்றி வருகிறார்கள். நம் கையில் கிடைத்திருக்கும் கதைகள் குறைவு. காற்றில் அழிந்துபோனதுதான் அதிகம்.

கிராமப்புறக் கதைகளைப் போல நகரம்சார் கதைகளையும் தேடித் தேடி சேகரிக்க வேண்டும் என கி.ரா அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். சென்னையில் உள்ள மீனவ சமுதாயத் திடம் நிறைய வாய்மொழிக் கதைகள் இருக்கின்றன. அவற்றை ஆய்வுசெய்து சேகரிக்க வேண்டும்.

பள்ளி ஆண்டு விழாவுக்கு என்றே எழுதப்பட்டதோ எனக் கருதப்படும் சின்ட்ரெல்லா கதை தொடங்கி ஸ்நோ வொயிட், ப்யூட்டி அண்ட் ஃபீஸ்ட், ஹான்சல் அண்ட் கிரேட்டல், ராபுன்ஸேல் போன்ற பல முக்கியமான தேவதை கதைகளைத் தேடி சேகரித்துக் கொடுத்தவர்கள் கிரிம் சகோதரர்கள். ஒருவர் ஜேக்கப் கார்ல் கிரிம். மற்றவர் வில்ஹெம் கார்ல் கிரிம்.

கிரிம் சகோதரர்கள் ஜெர்மானிய நாட்டுப்புறக் கதைகளையும் தொன்மங்களையும் தொகுத்து 'கிரிம்மின் தேவதைக் கதைகள்' என்ற பெயரில் வெளியிட்டார்கள். அவை பெரும் புகழ் பெற்றன. இக்கதைகள் சிறார்களுக்கான கார்ட்டூன் படங்களாகவும் நாடகமாகவும் படக் கதைகளாகவும் வெளியாகி, இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

உங்கள் பகுதிகளில் சொல்லப்பட்டு வரும் கதைகளைத் தேடி, சேகரித்து காப்பாற்றுங்கள். அது விதைநெல்லை காப்பதைப் போன்று மிகவும் அவசியமானது.

இணையவாசல்: ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட வாய்மொழிக் கதைகளைப் படிக்க
http://folkmasa.org/yashpeh/mb_yash.php

## பகுதி 3 - அன்பின் அடையாளம்

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வியட்நாமில் சொல்லப்பட்ட கதை இது.

ஒரு மழைக் காலத்தில் பாம்பு ஒதுங்குவதற்கு இடமில்லாமல் அலைந்து ஒரு எலி வளையின் முன்பு வந்து நின்று, ``நண்பா என்னால் இந்த அடைமழையைத் தாங்க முடியவில்லை. உன் வீட்டில் இடம் கொடுப்பாயா?" என்று எலியிடம் கேட்டது.

அதற்கு எலி ``நீ என் எதிரி. உன்னை எப்படி என் வீட்டுக்குள் தங்கவிடுவது?" என்றது.

அதைக் கேட்ட பாம்பு சொன்னது: ``நான் இப்போது திருந்திவிட்டேன். உன்னையோ, உன் பிள்ளைகளையோ தொந்தரவு செய்ய மாட்டேன். என்னை நம்பு" என்று கெஞ்சியது.

அதை நம்பிய எலி, பாம்பை தனது வளைக்குள் தங்க அனுமதித்தது. பாம்பும் அமைதியாக எலி வளைக்குள் சுருண்டு கிடந்தது. எலிகளோடு ஒன்றாக உணவைச் சாப்பிட்டது. ஆனால், அதன் கண்கள் எபோதும் எலிக் குஞ்சுகள் மீதே இருந்தன. ஆஹா. இந்த எலிக் குஞ்சுகளை எப்படியாவது சாப்பிட வேண்டுமே என அது சந்தர்ப்பம் பார்த்து காத்துக் கிடந்தது.

முடிவில் ஒருநாள் எலி பாம்பின் பொறுப்பில் எலிக் குஞ்சுகளை விட்டுவிட்டு உணவைத் தேடிப் புறப்பட்டுப் போனது. அந்த நேரம் பார்த்து பாம்பு எலிக் குஞ்சுகளைக் கொன்று விழுங்கிவிட்டது. வீடு திரும்பிய எலி தனது பிள்ளைகளைக் காணவில்லையே என தேடியது.

அப்போது பாம்பு வருத்தமாக சொன்னது: ``நான் அசதியில் தூங்கிவிட்டேன். அந்நேரம் பார்த்து உன் பிள்ளைகள் வெளியே போய் விட்டார்கள். பருந்து அவற்றைத் தின்றுவிட்டது."

அதைக் கேட்டு எலி கண்ணீர்விட்டு அழுதது. ஆனாலும் அதற்கு பாம்பின் மீது சந்தேகம் வரவில்லை. மழைக் காலம் முடியப்போகிற நேரம். பாம்பு மீதமிருந்த எலியை கொல்வதற் காக ஒரு நாடகம் ஆடத் தொடங்கியது.

அதன்படி தனக்கு கண்வலி வந்துவிட்ட தாகச் சொல்லி தன் கண்ணுக்கு ஒத்தடம் தர முடியுமா என எலியிடம் கேட்டது.

எலியும் கிழிந்த துணியை எடுத்து பாம்பின் கண்ணுக்கு ஒத்தடம் தர முயன்றது. அப்போது பாம்பின் நாக்கு தன்னை அறியாமல் சீறிக் கொண்டு எலியின் மீது தடவியது. எலி பயந்து போய் விலகியதும் பாம்பு சொன்னது: ``பயப்படாதே. நான் உன்னை ஒன்றும் செய்துவிட மாட்டேன். நீ என் நண்பன்."

உடனே எலி மறுபடியும் கண்ணுக்கு ஒத்தடம் கொடுக்க முயன்றது. இப்போது அந்த கண்ணில் எலியைக் கொன்று சாப்பிட வேண்டும் என்ற பாம் பின் ஆசை ஒளிர்வதைக் கண்டுகொண்டது எலி.

மறு நிமிஷம் எலி சொன்னது: ``பச்சிலை பறித்துக் கொண்டு வந்து ஒத்தடம் தந்தால் இதமாக இருக்கும். இப்போ வந்துவிடுகிறேன்" என்று சொல்லி எலி வெளியே சென்றது.

எலியைக் கொல்வதற்காக பாம்பு காத்துக் கொண்டிருந்தபோது, காய்ந்த சுள்ளிகள், சருகு களை அள்ளி வந்து எலி வளையை அடைத்து வெளியே நெருப்பை வைத்துவிட்டது எலி.

தீயில் மாட்டிக்கொண்ட பாம்பு: ``நண்பா காப்பாற்று காப்பாற்று…” என கத்தியது.

அப்போது எலி சொன்னது: ``நான் உன்னை நண்பனாக நினைத்தேன். நீயோ உன் கெட்ட புத்தியை மாற்றிக்கொள்ளவே இல்லை. அடைக் கலம் கொடுத்த வீட்டில் என் பிள்ளைகளைக் கொன்று விழுங்கியிருக்கிறாய். இன்றைக்கு என்னையும் கொல்லப் பார்த்தாய். நன்றி மறந்தவனுக்கு இதுதான் தண்டனை!”

திகுதிகுவென எரியும் நெருப்பில் பாம்பு கருகி இறந்து போனது.

சிறார்களுக்குச் சொல்லப்பட்ட கதையாக இருந்தபோதும் இது பெரியவர்களுக்கானதே. கதையில் வரும் பாம்பு போன்ற மனிதர்கள் நம்மை சுற்றிலும் இருக்கிறார்கள். அவர்கள் நம்மை நம்ப வைத்து கழுத்தறுப்பவர்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் எதையும் செய்யும் இவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டாம் என்பதையே இக்கதை எடுத்துச் சொல்கிறது.

இக்கதையில் என்னை கவர்ந்த இடம் பாம்புக்கு எலி ஒத்தடம் தருவது. அந்தப் பரிவு முக்கியமானது. தாயைப் போலத்தான் பாம்பை எலி கவனித்துக் கொள்கிறது. ஆனால், பாம்பு அதை உணரவேயில்லை. உணவும், இடமும் தந்து தன்னைக் காப்பாற்றியது எலிதானே என பாம்பு யோசிக்கவே இல்லை. இதுவும் மனிதனின் குணம்தான். அதை பாம்பு வடிவில் ஏற்றி கதை சொல்கிறது.

வியட்நாம் மக்கள் உறுதியானவர்கள். போரில் அமெரிக்க ராணுவத்தைத் தோற் கடித்த போராளிகள். தங்களின் வாய்மொழிக் கதைகள், பாடல் கள், இசை நுண்கலைகள் போன்ற வற்றை தேசிய அடையாளமாக கருதும் வியட்நாம் அரசு, அவற்றை சேகரிக்கவும் ஆவணப் படுத்தவும் பெரிதும் உதவுகிறது. இதற்காக தேசமெங்கும் நாட்டுப் புற ஆய்வு மையங்களை உருவாக்கியுள்ளது.

தமிழகத்திலும் மாவட்டந்தோறும் நாட்டுபுற மையங்கள் உருவாக்கபட வேண்டும். அங்கே கிராமியக் கலைகள் மற்றும் கதைகளை ஆவணப்படுத்தி வைக்க வேண்டும். அத்துடன் அரசு விழாக்களில் கட்டாயம் கிராமியக் கலைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஓர் அரசாணை வெளியிடப்பட வேண்டும். அதுதான் கிராமியக் கலைகளை காப்பாற்றுவதற்கான ஒரே வழி.

வைக்கம் முகமது பஷீர் மலையாளத்தின் முக்கிய எழுத்தாளர். அவரைப் பற்றி ஒரு கதை சொல்லப்படுகிறது. எழுத்தாளர்கள் கதைகள் எழுதுவது இயல்பு. ஆனால், ஒரு எழுத்தாளனின் விசித்திர இயல்புகளைப் பற்றி கதைகள் உரு வாவது அபூர்வம். பஷீர் நடமாடும் கதாரூபம்.

ஒருநாள் பஷீர் சாப்பிடுவதற்காக ஒரு ஹோட்டலுக்குப் போயிருக்கிறார். புட்டும், பழமும், டீயும் சாப்பிட்டுவிட்டு பில் கொடுப்பதற்கு காசை தேடினால் பர்ஸை காணவில்லையாம். பஸ்ஸில் வரும்போது யாரோ பிக்பாக்கெட் அடித்துவிட்டிருந்தார்கள்.

என்ன செய்வது எனப் புரியாமல் ஹோட்டல் உரிமையாளரிடம் நடந்ததை சொன்னார். ``அவரோ இரக்கமில்லாமல் சாப்பிட்ட பில்லுக்கு பதிலாக உன் ஜிப்பா, வேஷ்டியைக் கழட்டி கொடுத்துட்டுப் போ’’ என்றார்.

பஷீருக்கு வேறு வழி தெரியவில்லை. தனது ஜிப்பாவைக் கழட்ட முயற்சிக்கும்போது "யாராடா இப்படி ஒரு மனிதனை பொது இடத்தில் அவமானப்படுத்துகிறவன்…" என்று ஒரு குரல் கேட்டது.

ஹோட்டல் முதலாளி பயத்துடன் திரும்பி பார்த்தபோது ஓர் ஆள் கடுமையான குரலில் "எதற்காக இப்படி ஜிப்பாவை கழட்ட சொல்கிறாய்?" எனக் கேட்டார்.

நடந்த விஷயத்தை ஹோட்டல் முதலாளி சொன்னதும், அந்த பில் பணத்தை தானே கொடுத்துவிட்டு ஜிப்பாவை அணிந்துகொள்ளும் படி பஷீரிடம் சொன்னார் அந்த மனிதர்.

பிறகு, இருவரும் ஹோட்டலைவிட்டு வெளியே வந்தார்கள். பஷீர் அந்த மனிதருக்கு நன்றி சொன்ன போது, அவர் உன் பர்ஸை பிக்பாக்கெட் அடித்ததே நான்தான். எது உன் பர்ஸ் என பார்த்து எடுத்துக் கொள்" என நாலைந்து பர்ஸைக் காட்டியுள்ளார்.

பஷீர் தனது பர்ஸை எடுத்துக் கொண்டார். பிறகு வியப்புடன் "நீயே ஒரு திருடன்; நீ ஏன் என்னைக் காப்பாற்றினாய்?" எனக் கேட்டார்.

அதற்கு அவன் "நான் திருடன்தான். ஆனால் ஒரு மனிதனை சட்டை, வேஷ்டியைக் கழட்ட சொல்லி ஒருவன் அவமானப்படுத்தும்போது பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். எனக்கும் மனசாட்சி இருக்கிறது" என்றார்.

பஷீர் அவருக்கு நன்றி சொன்னதாகவும், விடைபெற்று போனபிறகு அவரது பெயரை கேட்கவில்லை. ஒருவேளை அப்பெயர் 'கருணை' என தான் நினைத்துக் கொண்டதாகவும் கதை முடிகிறது.

நடந்த விஷயம் உண்மை சம்பவமா, கதையா என்பது தெரியாது. ஆனால், கதையின் வழியே பிக்பாக்கெட்காரனுக்குள்ளும் அன்பிருக்கிறது; மனிதனை மனிதன் அவமதிக்கும் போது ஆவேசம் பொங்கி எழவே செய்யும் என்பது வெளிப்படுத்தப் படுகிறது. இதுதான் மனிதனின் உண்மையான இயல்பு. வியட்நாம் கதை சொல்வதும் இதுபோன்ற அன்பின் அடையாளத்தையே!

இணையவாசல்: போதிசத்துவரின் பிறப்பைக் கூறும் புத்த ஜாதகப் கதைகளை அறிந்துகொள்ள http://tales.siththan.com/

## பகுதி 4 - காட்டின் அரசன்!

ஒடிசா மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பழங்குடி மக்களுடன் வாழ்ந்து அவர்களின் பண்பாட்டைக் காப்பாற்றப் போராடியவர் வெர்ரியர் எல்வின். அவரது வாழ்க்கை வரலாற்றை ராமச்சந்திர குஹா விரிவான புத்தகமாக எழுதியுள்ளார். அதன் தமிழாக்கத்தை 'வெர்ரியர் எல்வினும் அவரது பழங்குடிகளும்' என 'காலச்சுவடு' பதிப்பகம் வெளியிட்டுள்ளது. வேலு.இராஜகோபால் சிறப்பாக மொழியாக்கம் செய்துள்ளார். இதற்கு முன்னதாக வாசகர் வட்டம்1967-ல் 'எல்வின் கண்ட பழங்குடி மக்கள்' என்ற மொழியாக்க நூலை வெளியிட்டுள்ளது.

எல்வின் நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஆளுமை. இந்தியப் பழங்குடிகள் குறித்த ஆய்வாளராகவும் அவர்களின் மேம்பாட்டுக்கான அரசு அதிகாரியாகவும் செயல்பட்டவர் எல்வின்.

இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த இவர், கிறிஸ் துவ சமயப் பிரச்சாரம் மேற்கொள்ளவே இந்தியா வந்தார். ஆனால் காந்தியின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டார். காந்தியவாதியாக மாறியதும், 'கோண்டு' பழங்குடிகளோடு தங்கி, அவர்களுக்கு சேவை செய்ய விரும்பி ஒடிசா சென்றார்.

அங்கே 'கோசி' என்ற கோண்டு இனப் பெண்ணை திருமணம் செய்துகொண்டு அவர்களுடனே வாழ்ந்தார்.

ஒடிசா பழங்குடிகளின் உரிமைக்காக போராடிய எல்வினின் சேவையைப் பாராட்டி பண்டித நேரு வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள பழங்குடி மக்களின் மேம்பாட்டுக்கான சிறப்பு அதிகாரியாக இவரை நியமித்தார். இந்தியப் பழங்குடிகள் குறித்து எல்வின் எழுதியுள்ள புத்தகங்கள் சர்வதேச அளவில் புகழ்பெற்றவை.

ஒடிசா பழங்குடிகளின் வாழ்க்கையைப் பற்றி கூறும்போது, துர்கா பகவத் தொகுத்த 'மத்திய இந்தியாவின் பழங்கதைகள்' என்ற நூலில் உள்ள ஒரு கதையைக் கூறுகிறார். அக்கதை பழங்குடி பண்பாட்டின் அடையாளமாக விளங்குகிறது!

ஒருமுறை 'தங்களுக்காக ஏன் ஒர் அர சாங்கத்தை உருவாக்கக் கூடாது?' என்று மரங்கள் கடவுளிடம் முறையிட்டன. கட வுளுக்கு அது சரியான யோசனையா கவே தோன்றியது. ஆகவே, அவர் பீமனை காட்டுக்கு அனுப்பி 'வலிமை யான மரம் எது'வென தேர்வு செய்யச் சொன்னார்.

பீமனும் காட்டில் உள்ள பல்வேறு மரங் களைத் தேர்வுசெய்து விளையாட்டாக சண்டை செய்தான். புளியமரம் மற்ற மரங்களை விடவும் நன்றாக போராடியது. ஆகவே பீமனின் சிபாரிசின்பேரில் புளிய மரத்தை மரங்களின் அரசனாக கடவுள் நியமித்தார்.

ஆலமரத்தை மந்திரியாகவும், அரச மரத்தை காவல்காரனாகவும் நியமனம் செய்தார். அப் போது அரச மரத்திடம் 'காற்று வந்தால் மற்ற மரங்களை நீ எச்சரிக்கை செய்ய வேண்டும்!' என்று கட்டளையிட்டார். அதை அரச மரம் ஏற்றுக் கொண்டது.

அதனால்தான் இன்றும் மெல்லிய காற்று வீசினால் கூட அரசமரத்தின் இலைகள் சலசலத்து மற்ற மரங்களுக்குத் தெரிவிக்கின்றன என்கிறது இக்கதை.

புளிய மரத்தை 'மரங்களின் அரசன்' என்று சொல்வது முக்கியமானது. அரச மரத்தின் வேர் பகுதியில் பிரம்மனும், நடுவில் திருமாலும், உச்சியில் ஈசனும் வசிப்பதாக புராணங்கள் தெரிவிக்கின்றன . அதனாலேயே, அரச மரத்தை 'ராஜ விருட்சம்' என்பார்கள். போதி மரம் என்பதும் அரச மரம்தான்!

அரச மரப் பட்டையில் டேனின் எனும் ரசாயனம் உள்ளது. இதன் காரணமாக தோல் பதனிடுவதற்கு இம் மரப் பட்டைகள் பயன்படுத்தப் பட்டன. இத்தனை சிறப்புகள் இருந் தும் பழங்குடி மக்களின் பார்வை யில் புளியமரம்தான் அரசன்.

கதையில் மனிதர்களைப் போலவே மரங்களுக்குள் ஒரு நிர் வாக சபை தேவைப்படுகிறது. மரங் களில் யார் மந்திரி? யார் காவலாளி என கடவுள் நிர்ணயம் செய்கிறார்.

எனது சிறுவயதில் கிராமத்தில் வேப்ப மரத்துக்கும் அரசமரத்துக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். இதில், "எது ஆண்? எது பெண்" எனக் கேட் டேன். "வேப்ப மரம் பெண்; அரச மரம் ஆண்" என்றார்கள். வேடிக்கை கல்யாண மாக அது நடந்தேறியது. ஆனால், எனக்கு அதன் பிறகு ஊரில் எந்த மரத்தை பார்த்தா லும் அது 'ஆணா, பெண்ணா' என்ற சந்தேகம் உருவானது. இதைப் பற்றி கேட்டால் யாருக்கும் பதில் தெரிய வில்லை. அரச மரத்தின் இலைகள் ஒய்வில்லாமல் சலசலத்துக் கொண் டிருப்பதைப் பற்றி இப்படி ஒரு கதை இருப்பது வியப்பளிக்கிறது.

புளிய மரம் கடினமானது. ஆகவே அது இறைச்சிக் கடைகளில் அடிப் பலகையாக பயன்படுத்தப்படுகிறது. இந்தியா வில் பணியாற்றிய பிரிட்டிஷ்காரர்கள் புளியை சமையலில் சேர்ப்பதை விரும்பவில்லை. காரணம் அது வெண்கலப் பாத்திரங்களைத் துலக்கும் பொருள் என்றே கருதினார்கள். ஆகவே, உணவில் புளியைச் சேர்த்தால் தங்களின் வயிற்றை கெடுத்துவிடும் என அவர்கள் பயந்தார்கள்.

கோடைக்காலத்தில் வேட்டைக்கு செல்லும் நாட்களில் புளியும் வெல்லமும் கலந்த 'பானகம்' தரப்பட்டது. அதை குடித்து மயங்கிய பிறகே வெள்ளைக்காரர்கள் தங்கள் உணவில் புளியைச் சேர்த்துக்கொண்டார்கள் என்றொரு செய்தியும் இருக்கிறது

இக்கதையில் மரங்களின் வலிமையை சோதனை செய்ய கடவுள் பீமனை அனுப்பி வைக்கிறார். மகா பாரத கதாபாத்திரங்கள் மக்கள் மத்தியில் எந்த அளவு ஆழமாக பதிந்து போயிருக்கிறார்கள் என்பதற்கு, இது ஒரு சான்று. பழங்குடி மக்கள் மத்தியில் மகா பாரதத்தின் பல்வேறு கிளைக் கதைகள் உலவுகின்றன. மத் தியப்பிரதேசத்தில் 'பீல்' பழங் குடியினரிடம் ஒரு வகை மகாபாரதம் இருக்கிறது. அதன் பெயர் 'பீல் மகாபாரதம்' (Bheel Mahabharat). இதன் கதை நாம் அறிந்த மகாபாரத கதையில் இருந்து பெரிதும் மாறுபட்டது.

இதில் திரவுபதி பொன்னிற கேசம் கொண்டவளாகவும் பால் போல வெண்ணிறம் உடைய வளாகவும் சித்தரிக்கப்படுகிறாள். அஸ்தினாபுரத்தில் ஒருநாள் அவள் உறங்கும்போது அவளது கூந்தலில் இருந்து ஒரு பொன்னிற முடி காற்றில் பறந்து பாதாள உலகம் செல்கிறது.

பாதாள உலகின் அரசனான 12 தலைகொண்ட 'வாசுகி' எனும் பாம்பு அரசன் மீது அந்தப் பொன் னிற முடி இழை விழுகிறது. அந்தக் கூந்தலுக்கு உரியவளை அடைந்தே தீருவேன் என பாம்பு அரசன் பூமிக்கு வருகிறான். திரவுபதியின் பொன்னிற கூந்தலைப் பற்றி கேள்விபட்டு அவளை அடைய முயற்சிக்கிறான். அப்போது தன் கணவன் அர்ச்சுனன் வந்தால் உன்னை கொன்றுவிடுவான் என திரவுபதி எச்சரிக்கிறாள்.

வரச் சொல் பார்க்கலாம் என சவால் விடுகிறான் பாம்பு அரசன். அச்சமயம் அர்ச்சுனன் வந்து விடவே, இருவருக்கும் யுத்தம் நடக்கிறது. அதில் அர்ச்சுனனை வாசுகி தோற்கடித்துவிடுகிறான். திரவுபதியிடம் பாம்பு அரசன் "இனிமேல் நீ என்னுடைய மனைவி, எனக்கு சமையல் செய்து பரிமாறு" என்கிறான். வேறு வழியே இல்லாமல் திரவுபதி அவனுக்கு விருந்து சமைத்துப் பரிமாறு கிறாள். வாசுகியைக் கொல்லக் கூடிய ஒரே வீரன் கர்ணன் மட்டும்தான் என்பதை அறிந்து, அவனது உதவியை நாடுகிறாள் திரவுபதி. தனது சக்தி வாய்ந்த அக்னி கோடாரியைக் கொண்டு வாசுகி யோடு சண்டையிட்டு, அதன் 11 தலைகளை வெட்டிவிடுகிறான் கர்ணன். "இனிமேல் பூலோகம் பக்கம் வரவே மாட்டேன்" என்று சொல்லி, மீதமிருக்கும் தனது ஒற்றை தலையோடு 'வாசுகி' பாதாள உலகுக்குச் சென்றுவிடுகிறது.

இந்த பாம்புதான் 'பீல்' பழங்குடி மக்களின் தெய்வமாகக் கருதப்படுகிறது. ஆகவே, தங்களின் தெய்வத்தின் வீரசாகசத்தை சொல்ல, அவர்கள் மகா பாரதக் கதையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பழங்கால நாணயங்களை சேகரிப்பவர்கள் புழக்கத்தில் இல்லாத செல்லாக் காசுகளை இன்று ஆயிரக்கணக்கில் பணம் கொடுத்து வாங்குகிறார்கள். காரணம், அது கடந்த காலத்தின் சாட்சியம். வரலாற்று அடையாளம்! கதைகளும் அதுபோலத்தான். ஆனால், அதன் மதிப்பை நாம் இன்றும் உணரவே இல்லை!

இணையவாசல்: >கதை சொல்வது குறித்த சிறப்பான உரைக்கு
https://www.ted.com/talks/andrew_stanton_the_clues_to_a_great_story?language=en

## பகுதி 5 - சிலந்திப் பெண்!

உலகின் முதல் மனிதன் ஆப் பிரிக்காவில்தான் தோன்றி னான். ஆகவே உலகின் தாய்வீடு என ஆப்பிரிக்கா அழைக்கப்படுகிறது. மனிதர்கள் மட்டுமில்லை; கதைகளும் ஆப்பிரிக்காவில் இருந்தே அதிகம் உருவாகியிருக்கின்றன.

ஆப்பிரிக்க பழங்குடி மக்கள் கதை களின் வழியே இளம்தலைமுறைக்கு வாழ்க்கை பாடங்களைக் கற்றுத் தரு கிறார்கள். 'கூடிக் கதைகள் பேசுவது' அவர்களின் பண்பாட்டு நடவடிக்கை.

'புலியைப் படைத்ததற்காக கட வுளைத் திட்ட வேண்டாம். அதை சிறகு இல்லாமல் படைத்தற்காக நன்றி கூறுங் கள்' என்றொரு ஆப்பிரிக்க பழமொழி இருக்கிறது. இதுதான் ஆப்பிரிக்கர்களின் மனம். அவர்கள் கஷ்டத்தைக் கண்டு துவண்டுபோய்விடுவது இல்லை. எதிர்கொண்டு போராடுகிறார்கள்.

ஆப்பிரிக்கக் கதைகளில் சிலந்தி ஒரு முக்கிய கதாபாத்திரம். 'அனன்சி' என்ற சிலந்தியைப் பற்றி நிறையக் கதைகள் இருக்கின்றன. சிலந்தியைத் தங்களின் வழிகாட்டியாகவே கருது கிறார்கள் அவர்கள். காரணம், வலை பின்னுவதற்கான நேரம் வரட்டும் என சிலந்தி

காத்திருப்பதே இல்லை. தனக்கு சிறிய வலை போதும் எனவும் நினைப்பது இல்லை. மிகப் பெரிய வலையைப் பின்னுகிறது சிலந்தி.
எத்தனையோ முறை அறுந்து விழுந் தாலும் சிலந்தி தனது விடாமுயற்சியை எப்போதும் கைவிடுவதே இல்லை. அத்துடன் தன் வலை நேர்த்தியாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறையையும் காட்டுகிறது.

எல்லாவற்றையும்விட வலை பின்ன இன்னொரு சிலந்தியை அது ஒருபோதும் உதவிக்கு அழைப்பதே இல்லை. மேலும், வேறு சிலந்தியின் வலையைப் பார்த்து பொறாமை கொள் வதும் இல்லை. ஆகவே, சிலந்தியை ஆப்பிரிக்க மக்கள் ஞானியைப் போல கருதுகிறார்கள்!

'நிக் க்ரீவ்ஸ்' என்ற கதை சொல்லி தொகுத்த 'சிங்கம் பறந்தபோது முதலிய ஆப் பிரிக்க கதைகள்' என்ற புத்தகம் 'பிரிஜிட்டா ஜெயசீலன்' என்பவரால் தமி ழாக்கம் செய்யப்பட்டு வெளியாகியுள் ளது. இந்நூலை 'நேஷனல் புக் டிரஸ்ட்' வெளியிட்டுள்ளார்கள். கட்டாயம் சிறார் கள் வாசிக்க வேண்டிய புத்தகம் இது.

இந்தக் கதைத் தொகுப்பில் அங் கோனி, ஸ்வாஹிலி, புஷ்மேன், பட் டோங்கா, ஷோனா என்று பல்வேறு ஆப் பிரிக்க இன மக்களின் கதைகள் தொகுக் கப்பட்டுள்ளன. அதில், சாணத்தை உருட் டிக் கொண்டு செல்லும் 'சாணி வண்டு' பற்றி கானா மக்களிடம் வழங்கப்படும் ஒரு கதையும் இருக்கிறது.

அந்தக் காலத்தில் மழை பெய்ய வைக்கும் அதிசய சக்தி கொண்ட பச்சோந்தி ஒன்று இருந்தது. அதன் முதுகில் இரண்டு தட்டு தட்டி மந்திரச் சொல்லை உச்சரித்தால் உடனே மழை பெய்யும். 'அனன்சி' என்ற சிலந்தி பெருமழை வேண்டி பச்சோந்தியை ஓங்கி அடித்துவிட, பச்சோந்தி வலி தாங்க முடியாமல் செத்துப்போனது.

இதை அறிந்த கடவுள் இறந்துபோன பச்சோந்தி உடலை ஒரு டப்பாவில் அடைத்து உருட்டிக் கொண்டிருக்க வேண்டும் என சிலந்திக்கு ஆணையிட் டார். மண்ணில் அந்த டப்பாவை உருட்டி உருட்டி சிலந்தி களைத்துப் போனது.

ஒரு நாள் அவ்வழியே ஒரு வண்டு வந்தது. அதனிடம் தனக்கு உதவி செய்யுமாறு கேட்டது சிலந்தி. வண்டும் தான் உருட்டுவதாக ஒப்புக்கொண்டது. அடுத்த நொடியே வண்டினை ஏமாற்றி விட்டு சிலந்தி ஓடிவிட்டது. பாவம், அப் பாவி வண்டு அன்று முதல் அந்தச் சுமையை உருட்டிக்கொண்டே இருக் கிறது என கதை முடிகிறது. இப்படி சிலந்தியைப் பற்றி எல்லா நாடு களிலும் கதைகள் சொல்லப் படுகின்றன.

ஜப்பானில் ஒரு வாய்மொழிக் கதை இருக்கிறது.

அதில், ஒரு விவசாயி ஒரு நாள் பாம்பு உண்ண முயற்சித்த சிலந்தியைப் காப்பாற்றுகிறான். இது நடந்த சில நாட்களுக்குப் பிறகு அவனது வீடு தேடி ஒரு இளம்பெண் வந்து வேலை கேட்டாள்.

"உனக்கு என்ன வேலை தெரியும்?" என விவசாயி கேட்கும்போது, "நன்றாக நெசவு நெய்வேன்..." என்கிறாள் அந்தப் பெண்.

அவள் மீது பரிதாபம் கொண்டு அவளுக்கு வேலை தருகிறான் விவசாயி. அவள் ஒரு தறியை உருவாக்கிக் கொண்டு இரவு, பகலாக நெசவு செய் கிறாள். அந்தப் பெண் நெய்துவந்த துணி யின் அழகைக் கண்டு வியந்துபோன விவசாயி அவளிடம், "எப்படி இதை நெய்தாய்?" எனக் கேட்டான்.

"என்னிடம் எதையும் நீங்கள் கேட்கக் கூடாது. என் அனுமதில் இல்லாமல் என் அறைக்கும் வரக் கூடாது…" என்றாள்.

அவனும் அதை ஏற்றுக் கொண்டான். அவள் நெய்து தரும் விசித்திர ஆடைகளை விற்று நிறையப் பணம் சம்பாதித்தான் விவசாயி. அவனது வாழ்க்கை வளமானது.

ஒரு நாள் ஆர்வ மிகுதியால் 'அறைக் குள் அவள் என்னதான் செய்கிறாள்' என ஒளிந்திருந்து பார்த்தான். அதிர்ச்சி யாக இருந்தது அவனுக்கு. அவள் ஒரு சிலந்தியாக உருமாறி நெசவு செய்து கொண்டிருந்தாள்.

தன்னால் காப்பாற்றப்பட்ட சிலந்தி தனது நன்றிக் கடனைத் தீர்க்க பெண் ணாக உருமாறி வந்திருப்பதை அறிந்து கொள்கிறான். உண்மை தனக்குத் தெரி யும் என அவன் காட்டிக் கொள்ளவே இல்லை.

ஒருநாள் அவளுக்காக பஞ்சு வாங் கிக் கொண்டு வருவதற்காக, விவசாயி சந்தைக்கு சென்றான். பஞ்சுப் பொதி வாங்கிக்கொண்டு வரும்போது அசதி யில் ஓரிடத்தில் உறங்கிவிட்டான். அந்தப் பஞ்சுப் பொதியில் பாம்பு ஒன்று புகுந்துகொண்டது.

அதை அறியாமல் வீட்டுக்குப் போய் இளம்பெண்ணிடம் பஞ்சுப் பொதியை ஒப்படைத்தான் விவசாயி. அவளும் உற்சாகத்துடன் சிலந்தியாக உருமாறி பஞ்சை தனது வாயில் அடைத்துக் கொண்டு, அதில் இருந்து நூலை உருவாக்க முயற்சித்தாள்.

அப்போது பாம்பு பாய்ந்து அவளை கொல்ல முயன்றது. பயத்தில் சிலந்திப் பெண் தப்பி ஓடினாள். அவளது கஷ்டத் தைக் கண்ட சூரியன், அவளைக் காப் பாற்றி வானுலகுக்குக் கொண்டுச் சென்றது.

சூரியனுக்கு நன்றி செலுத்தும் வித மாக அவள் தன் வாயில் வைத்திருந்த பஞ்சைக் கொண்டு அழகான மேகங் களை உருவாக்கினாள். அப்படிதான் வானில் மேகங்கள் உருவாகின என்கிறது ஜப்பானியக் கதை.

உலகை வியப்பது கலையின் ஆதா ரச் செயல்களில் ஒன்று. குகையில் வசித்த காலத்தில் மனிதன் சூரியனையும், சந்திரனையும், காற்றையும், மழையை யும் கண்டு வியந்தான். பறவைகள், தாவ ரங்கள், விலங்குகள் என எல்லாவற்றை யும் நேசித்தான். குகை ஒவியங்களில் நாம் காணும் உருவங்கள் ஆதிமனிதனின் கற்பனைக்கு சான்று. ஆனால், கால மாற்றம் மனிதனை இயற்கை அழிப்பவனாக, சுயநலத்துக்காக கலைகளை அழிப் பவனாக உருமாற்றியது அவலமே.

ஒக்ககூரா என்ற ஜப்பானிய கலை விமர்சகர் போதி தர்மரின் ஒவியம் ஒன் றைப் பற்றி தனது கட்டுரை ஒன்றில் குறிப் பிடுகிறார். விலை மதிப்பில்லாத அந்த ஓவியம் ஒசாகாவில் உள்ள அரண்மனை ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது. ஒருமுறை அரண்மனையில் தீ பற்றிய போது, ஓவி யத்தைக் காப்பாற்றுவதற்காக வீரர்கள் போராடினார்கள். பற்றி எரியும் நெருப் பின் ஊடே புகுந்த ஒருவன் நெருப்பில் இருந்து அந்த ஓவியத்தை எப்படி காப் பாற்றுவது எனத் தெரியாமல் ஓவியத்தை, அதன் சட்டத்தைவிட்டு கழற்றிச் சுருட்டி, தனது வயிற்றை கிழித்து அதன் உள்ளே ஓவியத்தை சொருகிக் கொண்டு விட்டான்.

நெருப்பு அரண்மனையை அழித்தது. அந்த வீரன் வெந்து கருகிய பிணமாகக் கிடந்தான். ஆனால், அவன் வயிற்றில் போதி தர்மரின் ஓவியம் சேதம் அடையாமல் பாதுகாக்கப்பட்டிருந்தது. கலை பொக்கிஷத்தைக் காப்பாற்ற, தனது உயிரை அர்பணித்துவிட்டான் சாமுராய் என்று புகழாரம் சூட்டுகிறார் ஒக்ககூரா.

ஜப்பானியர்கள் கலையை எந்த அளவு நேசிக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்று. ஓவியம், சிற்பம், சினிமா மட்டும் கலையில்லை; கதை சொல்வதும் ஒரு கலையே! ஓவியம் பயிலுவது போல, சினிமா பயிலுவது போல கதை சொல் வதற்கும் பயிற்சி தேவை. அதை கல்வி புலத்தில் நாம் பாடமாக வைக்க வேண் டும். கதை சொல்ல தெரிந்தவர்களை சிறப்பு ஆசிரியர்களாக நியமிக்க வேண் டும். கதை சொல்லும் திருவிழாக்களை நடத்த வேண்டும். அதுவே ஊடக பிம்பங்களில் இருந்து சிறார்களைக் காப்பாற்றுவதற்கான ஒரே வழி.

இணையவாசல்: >ஆப்பிரிக்க கதைகளை அறிந்துகொள்ள http://www.allfolktales.com/folktales.php

## பகுதி 6 - கண் திறவுங்கள்

ஒரு மருத்துவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் ஆதங்கத்துடன் சொன்னார்:

``உடல்உறுப்புகளில் கண்களுக்குத் தான் அதிகம் வேலை கொடுக்கிறோம். ஆனால், கண்களைப் பராமரிப்பதில் யாரும் அக்கறை காட்டுவதே இல்லை. கண்கள் புத்துணர்வு கொள்ள எளிய பயிற்சிகள் இருக்கின்றன. அதை யாரும் பின்பற்றுவதில்லை. குளிர்ச் சாதன அறையின் செயற்கை வெளிச்சத்தை மட்டுமே பார்த்துப் பழகிய கண்களுக் குச் சூரிய வெளிச்சமே படுவதில்லை. வானத்தை அண்ணாந்துப் பார்க்கும் பழக்கமே இல்லை. நட்சத்திரங்கள் என்பது சினிமாவோடு தொடர்புடைய தாக மாறிவிட்டது கவலையளிக்கிறது. இன்றைய இளம்தலைமுறையினருக்கு போதுமான உறக்கம் கிடையாது. தூக்கம் கெடுவதுதான் மனம் மற்றும் உடல்நலம் கெடுவதற்கான அடிப்படை பிரச்சினை.”

அவரது ஆதங்கத்தைப் புரிந்து கொண்டது போலச் சொன்னேன்;

``உண்மை டாக்டர். மனிதர்களுக்குக் கண்கள் எப்படி வந்தது என்பதற்குக் கூடக் கதை இருக்கிறது...” என்றேன்.

குழந்தையைப் போல ஆர்வத்துடன், ``என்ன கதை..?” என்று கேட்டார்.

``இந்தோனேசியாவின் ஜாவா தீவில் வழங்கப்படும் கதை இது. கடவுளால் படைக்கப்பட்டபோது மனிதனுக்குக் கண்கள் கிடையாது. கண்கள் இல் லாமலே ஆணும் பெண்ணும் கூடி வாழ்ந் தார்கள். பார்வையில்லாமல் வாழும் போது பலமுறை ஆற்றில், மலையில், தடுமாறி விழுந்து இறந்து போனார் கள். அவர்களின் பரிதாப நிலை யைக் கண்ட கடவுள் மனிதனுக் குக் கண்களை உருவாக்கி தர வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் அவரது சேமிப்பில் கண்கள் இல்லை.

ஆகவே அவர் ஆந்தை யைப் பார்த்து, ``நீ பகலில் கண்களைப் பயன்படுத்து வதே இல்லையே, உன் கண்களை மனிதர்களுக்குத் தருவாயா?" எனக் கேட்டார்.

ஆந்தை, ``முடியாது, என் அழகே கண்கள்தான்" என்று மறுத்துவிட்டது.

பாம்பைப் பார்த்து கடவுள் கேட்டார்.

``உன் கண்கள் அழகானவை. நீயாவது மனிதனுக்குக் கண்ணைத் தருவாயா..?"

உடனே பாம்பு சொன்னது;

``கண் இல்லாவிட்டால் என்னைக் கொன்றுவிடுவார்கள். ஒருபோதும் நான் கண்ணை இழக்க மாட்டேன்."

இப்படி அவர் முயல், யானை, புலி என ஒவ்வொரு விலங்காகக் கண் களைத் தானம் செய்யும்படி கேட்டார். ஒரு விலங்கும் தருவதற்கு தயாராக இல்லை.

நாமே கண்களை உருவாக்கி வைத்து விட வேண்டியது என முடிவு செய்து, எதைக் கொண்டு உருவாக்குவது என யோசித்துக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு முத்துச்சிப்பித் தன்னைக் கடலில் யாரும் மதிப்பதே இல்லை என்று புகார் சொல்வதற்காகக் கடவுளைக் காண வந்திருந்தது. அதன் அழகை கண்ட கடவுள் முத்துச்சிப்பியிடம் கேட்டார்;

``உன் முத்தைக் கொண்டு மனிதனுக் குக் கண்ணை உருவாக்கப் போகிறேன். நீ அதற்குச் சம்மதிக்கிறாயா..?" முத்து சிப்பிச் சொன்னது.

``என்னால் முத்தைப் பிரிந்து இருக் கவே முடியாது."

அப்படியானால் உன்னையும் சேர்த்தே உருமாற்றிவிடுகிறேன் என்ற படியே முத்தை இரண்டாகப் பிளந்து, மனிதனின் முகத்தில் பதித்து, அதில் தன் விரலால் கருவட்டம் வரைந்து கண்களை உருவாக்கினார். சிப்பியை இரண்டு இமைகளாக்கினார். அப் படித்தான் மனிதனுக்குக் கண்கள் உருவாக்கபட்டன.

சிப்பி கண்களாக உருமாறிய தால்தான் கண் இமைகள் தானே திறந்து திறந்து மூடிக் கொள்கின்றன. முத்துச்சிப்பி கடலில் இருந்த காரணத்தால் தான் கண்ணீரும் உப்புக் கரிக்கிறது என்கிறது அந்தக் கதை.”

டாக்டர் கதையைக் கேட்டு உற்சாகமாகிச் சொன்னார்;

``கடவுள் கேட்டால் கூட எதுவும் எளிதாகக் கிடைத்துவிடாது போலும். கண்ணீர் உப்பு கரிப்பதற்கு இப்படி ஒரு காரணம் சொல்வது நன்றாகத்தான் இருக்கிறது.”

கண்கள்

பற்றி இப்படி எவ் வளவோ எழுதப்பட்டிருக்கின்றன. சொல்லப்பட்டிருக்கின்றன. மூன்றாவது கண் என்ற கருத்தாக்கம் நம்மிடம் உள்ளது. கண் திறப்பதுதான் சிற்பத்தின் உச்சம். ஓவியங்களில் வரையப்பட்ட விதவிதமான கண்களைப் பற்றி ‘தி ஐ இன் ஆர்ட்’ (The Eye in Art) என்றொரு சிறந்த தொகுப்பு நூலை ‘பப்ளிகேஷன்ஸ் டிவிசன்’ வெளியிட்டுள்ளது.

இயக்குநர் சாந்தாராமின் சிறந்த திரைப்படம் ‘தோ ஆங்கே பாரா ஹாத்’. இப்படம் 1957-ல் வெளியானது. .

‘தோ ஆங்கே பாரா ஹாத்’ என்றால் ‘இரு கண்களும் பன்னிரண்டு கைகளும்’ என்று பொருள். சிறை அதிகாரி ஒருவர் கொடூரமான ஆறு கொலைக் குற்றவாளிகளைத் தன்னுடைய பொறுப்பில் விடுவித்து, அவர்களைச் சீர்திருத்துவதே படத்தின் கதை. தமிழில் எம்.ஜி.ஆர் நடித்து ‘பல்லாண்டு வாழ்க’ என்ற படமாக வெளிவந்துள்ளது. படத்தில் ஆதினாத் எனும் சிறை அதிகாரி கதாபாத்திரத்தில் சாந்தாராம் நடித்திருப்பார். சீர்திருத்தம் செய்ய அழைத்துப் போன கைதிகள் அவரது பிடியிலிருந்து தப்பிப் போகும்போது, அவர்களைத் தடுத்து நிறுத்துவது சாந்தாராமின் கருணைமிக்கக் கண்களே. குற்றவாளிகள் அந்தக் கண்களுக்குப் பயந்து திரும்பிவிடுகிறார்கள்.

‘தவறு செய்தவன் தன்னை நேசிப்பவர்களின் கண்களை நேர் கொள்ளமுடியாமல் தடுமாறுவான்’ என்பதுதான் நியதி. ஒருவர் நேருக்கு நேராகக் கண்களைப் பார்த்து பேசு கிறார் எனில் அவரது மனதில் குழப் பம் இல்லை என்று புரிந்துகொள்ள லாம்.

முதன்முதலில் இத்தாலியில்தான் 1285-1289-களில் மூக்குக் கண்ணாடி வடி வமைக்கப்பட்டது என்கிறார்கள். காது களின் மேல் கண்ணாடியை மாட்டிக் கொள்ளுவதை ஸ்பெயின் நாட்டுக் கைவினைஞர்கள் 1600-ம் ஆண்டில் வழக்கத்துக்குக் கொண்டுவந்தார்கள். பட்டுத் துணியினால் ஒரு வளையம் செய்து கண்ணாடியுடன் இணைத்து காதில் மாட்டிக் கொள்ளும்படி செய் தனர்.

சீன கைவினைஞர்கள் உலோகத்தில் ஆன சிறிய எடையை இந்த ரிப்பன் களுடன் இணைத்தனர். இதனால் எடை கண்ணாடி கண்ணில் இருந்து நழுவாது. 1730 -ம் ஆண்டு எட்வர்ட் ஸ்கார்லெட் என்ற கண் மருத்துவர் இப்போது நாம் அணியும் கண்ணாடிகளில் உள்ளது போன்ற உறுதியான, பட்டியை வடிவமைத்தார்.

சீன தேசத்து நீதிபதிகள் வழக்கு விசாரணையின்போது தங்களது முக பாவனைகளை மறைக்க கறுப்புக் கண்ணாடிகளை அணிய ஆரம் பித்தனர். ஆரம்பத்தில் ராணுவ பயன் பாட்டுக்காகவே கூலிங்கிளாஸ்கள் தயாரிக்கபட்டன. 1930-களுக்குப் பின்பே பொதுமக்களிடம் விற்பனை செய்யப் பட்டன.

இந்தியாவில் கருவிழி நோயால் பாதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைக் காகக் காத்திருப்போர் மட்டும் 10 லட்சம் என்கிறார்கள். ஒரு ஆண்டுகு ஒரு லட்சம் வரை கருவிழிகள் தேவைப்படுகின்றன. ஆனால், கண்தானம் அவ்வளவு கிடைப்பதில்லை. ஆகவே நாம் ஒவ்வொருவரும் அவசியம் கண் தானம் செய்ய முன்வர வேண்டும்.

உலகை காண்பதற்கு மட்டும் கண்கள் பயன்படுவதில்லை. உள் ளத்தை வெளிப்படுத்தவும் கண்களே வாசல்களாக உள்ளன. பரிவும் அன்பும் கொண்ட கண்களை யாருக்குத்தான் பிடிக்காது! கோபமும் வெறுப்பும் கண்களில் தானே பீறிடு கின்றன. நம்மைச் சுற்றி நடக்கும் அநியாயங்களைக் கண்டு பலரும் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறார்களே என்றுதானே கோபம் வருகிறது.

'கண்கள் குதிரைகளைப் போன்றவை. அதன் கடிவாளத்தைப் பிடித்து மனதே செலுத்துகிறது' என சீனப் பழமொழி இருக்கிறது. ஆகவே, நம்மைச் சுற்றிலும் நடப்பதை கண்திறந்து பாருங்கள். எதிர்வினை செய்யுங்கள். உதவி செய்யுங்கள். அதுவே கண் பெற்றதன் உண்மைப் பயன்.

இணையவாசல்: ரஷ்ய நாட்டுப்புறக் கதைகளை அறிந்துகொள்ள
https://russian-crafts.com/tales.html

## பகுதி 7 - வெங்காயத்தின் குரல்!

கதைகள் நம்மை யோசிக்க வைக் கின்றன. சில கதைகளைக் கேட்டோ, வாசித்தோ முடிக்கும் போது இப்படியும் சிந்திக்க முடியுமா? கற்பனை செய்ய முடியுமா என வியப்பாக இருக்கிறது.

பெரியவர்கள் சொல்லும் கதைகள் ஒருவிதம் என்றால், சிறுவர்கள் சொல்லும் கதைகள் வேறுவிதம். நாம் குழந்தைகளுக்கு கதை சொல்வது போலவே, குழந்தைகளிடம் கதை கேட்க வும் வேண்டும். முடிந்தால் மகனோ, மகளோ, பேரன், பேத்தியோ சொன்ன கதைகளை சிறுநூலாக அச்சிட்டு, அவர்களின் பிறந்தநாள் பரிசாக தரலாம். பள்ளிக்கூடமே தனது மாணவர்கள் சொன்னக் கதைகளை அச்சிட்டு, சிறு வெளியீடாக கொண்டுவரலாம்.

சிறுவர்களிடம் 'எதைப் பற்றி கதை கேட்கப் பிடிக்கும்?' என்று கேட்டால், உடனே அவர்கள் 'சிங்கம், யானை, குரங்கு' ஆகிய மூன்றைத்தான் விரும் பித் தேர்வு செய்கிறார்கள்.

'சிங்கம்' பற்றி ஆயிரமாயிரம் கதைகள் சொல்லப்பட்டுள்ளன. எழுதப் பட்டுள்ளன. ஆனாலும், சிங்கத்தின் வசீகரம் குறையவே இல்லை.

நான் கூட சிறார்கள் செய்தித்தாள் படிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லும் விதமாக, நியூஸ் பேப்பர் படிக்கிற சிங்கம் பற்றி 'படிக்கத் தெரிந்த சிங்கம்' என்ற சிறார் நாவலை எழுதியிருக்கிறேன். இதனை 'டிஸ்கவரி புக் பேலஸ்' வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் சஞ்சீவ் சன்யால் எழுதிய 'ஏழு நதிகளின் நாடு' என்ற புத்தகத்தைப் படித்தேன். அதில் அவர் 'சிங்கம் எப்படி இந்தியாவில் இவ்வளவு முக்கியத்துவம் அடைந்தது?', 'மவுரியர்கள் ஏன் சிங் கத்தைச் சிற்பமாக செதுக்குவதில் இவ்வளவு ஆர்வம் காட்டினார்கள்?', 'சிந்து சமவெளி நாகரீகத்தில் சிங்கம் இருந்ததா, இல்லையா?' என பல செய்திகளைச் சுவாரஸ்யமாக எழுதி யிருக்கிறார். தமிழகத்தில் சிங்கம் இருந் ததா? சங்க இலக்கியத்தில் சிங்கம் இடம்பெற்றிருக்கிறதா என்பது பற்றி ஆய்வாளர்கள்தான் சொல்ல வேண்டும்.

துருக்கி நாட்டுப்புறக் கதை ஒன்று 'வெங்காயம் ஏன் சிறியதாக இருக் கிறது?', 'தர்பூசணி ஏன் பருமனாக இருக் கிறது?' என்பதற்கு பதில் சொல்கிறது. 'இதற்கெல்லாம் கூட கதைகள் இருக்குமா?' என யோசிக்க வைக்கிறது இக்கதை.

முன்னொரு காலத்தில் வெங் காயம்தான் மிகப் பருமனாக இருந்தது. சோம்பேறியாகவும் தூங்குமூஞ்சியாக வும் இருந்த வெங்காயத்துக்கு, வம்பு பேசுவதைத் தவிர எதிலும் விருப்பம் இல்லை. இதற்கு மாறாக, தர்பூசணி சிறியதாக எலுமிச்சை அளவில் இருந்தது. நாள் முழுவதும் சுறுசுறுப்பாகத் தாவிக் குதித்துக் கொண்டு உற்சாகமாக பேசிக் கொண்டிருந்தது. இந்த இரண்டும் ஒரே தோட்டத்தில் இருந்தன.

அங்கே ஒரு வாழை மரம் இருந்தது. அந்த மரத்தை வெங்காயத்துக்குப் பிடிக்கவே பிடிக்காது. வாழையும் அதன் பிள்ளைகளும் இருக்கிற தண்ணீரைக் குடித்துவிடுகிறார்கள் என்று ஆத்திரமே, அதற்கான காரணம். எப்போதும் வாழை மரத்தைக் குற்றம் சொல்லிக் கொண்டே இருந்தது வெங்காயம். இதற்கு மாற்றாக தர்பூசணிப் பழம் வாழை மரத்தை பாராட்டிக்கொண்டே இருந்தது.

ஒரு நாள் வாழை மரம் வெங்காயத் திடம் கேட்டது: "நீ ஏன் இப்படி உடம்பை வளர்த்துக் கொண்டு வீணாக இருக்கிறாய்? உன்னால் யாருக்கு என்ன பிரயோஜனம்?"

அதைக்கேட்ட வெங்காயம் சொன்னது: "நீ மற்றவர்களுக்குப் பிரயோ ஜனமாக இருக்கிறாய். அதற்காக உன்னை வெட்டாமல் விடுகிறார்களா? மனிதர்கள் உன் காய்களைப் பறித்துக் கொள்கிறார்கள். இலையை அறுத்துக் கொண்டுப் போகிறார்கள். பழங்களைத் தின்கிறார்கள். முடிவில் ஒருநாள் உன்னையே வெட்டிவிடுகிறார்கள். நல்லது செய்தால் ஒரு பயனும் இல்லை என்பதை உன்னிடம் இருந்தே கற்றுக் கொண்டேன்."

அதைக் கேட்ட வாழைமரம் சொன்னது: "அப்படிச் சொல்லாதே. இருப்பதை எல்லாம் அள்ளிக் கொடுப் பது சந்தோஷமானது. அதை அனுபவித் துப் பார் தெரியும்!"

"பொய். நீ ஒரு முட்டாள். ஏமாளி. வெட்ட வருபவனை உன்னால் எதிர்க் கவோ, தடுக்கவோ முடியாது. தைரிய மற்ற கோழை!" என்றது வெங்காயம்.

“அதெல்லாமில்லை. தைரியம் என்பது சண்டைபோடுவது இல்லை. வேதனையைத் தாங்கி நிற்பதே உண்மையான தைரியம்” என்று வாழை மரம் மறுபடியும் சொல்ல, அதைக் கேட்ட தர்பூசணி சொன்னது:

“வாழை மரம் சொல்வது உண்மை தான். தன்னைக் கஷ்டப்படுத்து கிறார்களே என்று வாழை ஒருபோதும் மனிதர்களுக்கு கசப்பான பழத்தைத் தருவதில்லை. சொல்லாலும் செய லாலும் அடுத்தவரை இம்சிக்காமல் வாழ்வது சிரமம். இந்த வாழை மரம் துறவியைப் போல வாழ்கிறது” என்றது.

இதை கேட்ட வெங்காயம் எரிச்சலான குரலில் சொன்னது: “இதெல்லாம் வெறும் நடிப்பு. சுயநலம். நான் நம்ப மாட்டேன்!”

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, அங்கே தோட்டக்காரன் வேலைக்கு வந்தான். அவனிடம் சென்று வெங்காயம் கண்ணீர் சிந்தியபடியே சொன்னது: “இந்த வாழை மரம் சுத்த மோசம். அதுவே எல்லாத் தண்ணீரையும் குடித்துவிடுகிறது. முதலில் இங்கிருந்து அதை வெட்டி எறி”என்றது.

இதைக் கேட்ட தர்பூசணி: “அய்யோ! வெட்ட வேண்டாம்” என்றது.

தோட்டக்காரன் வெங்காயத்தின் பேச்சைக் கேட்டு, வாழைமரத்தை வெட் டிப்போட்டான். துண்டாகி விழுந்த வாழைமரம் வெங்காயத்தைப் பார்த்து சாபமிட்டது: “வாழ்க்கையின் அர்த் தத்தை நீ உணரவில்லை. அதனால் மெலிந்து சுருங்கிப் போவாய். உண்ணும் பொருளாகி, நீயும் என்னைப் போல துண்டு துண்டாக்கப்படுவாய். உன்னால் கண்ணீர் வடிப்பவர்கள் தினமும் உன்னைத் திட்டுவார்கள்!”

வாழை மரத்தின் நிலையைக் கண்டு தர்பூசணி வருந்தியது. அதைக் கண்ட வாழை மரம் சொன்னது: “மனதில் நல்லதை நினைத்து, நல்லதைப் பாராட்டும் தர்பூசணியே... நீ உடல் பெருத்து, எப்போதும் கருணை ஈரத்துடன் மகிழ்ச்சியாக வாழ்வாய்!”

அன்று முதலே வெங்காயம் சுருங்கி சிறியதாகிவிட்டது. தர்பூசணி பருமனாகி பலராலும் விரும்பப்படுகிறதாம்.

உடற்பருமன் என்பது கேலிக்குரிய விஷயமில்லை. ஒருபோதும் எவரையும் அவரது உடலமைப்பை வைத்து கேலி செய்யவோ, அவமதிக்கவோ கூடாது. உலகப் புகழ்பெற்ற ஓவியரான ஹென்றி டாலெஸ் லாட்ரெக் நாலரை அடி உயரமுள்ளவர். ஆனால், அதை ஒரு குறையாக ஒருபோதும் அவர் கருதவேயில்லை.

உணவுப் பொருட்கள் உண்டான விதம் பற்றியும் தாவரங்கள் உருவான விதம் பற்றியும் நிறைய வாய்மொழிக் கதைகள் உள்ளன. ‘பிரம்மாஸ் ஹேர்’ (Brahma's Hair) என்ற மேனகா காந்தி தொகுத்த நூலில் இதுபோன்ற சிறந்த கதைகள் உள்ளன.

உலகில் அதிகம் உண்ணப்படும் பொருட்களில் ஆறாவது இடத்தில் வெங்காயம் உள்ளது. எகிப்தில் கி.மு-3500-ல் வெங்காயம் பயிரிட்டிருக் கிறார்கள். அங்கே வெங்காயம் புனிதப்

பொருளாகக் கருதப்பட்டது. எகிப்திய மன்னர்களைப் புதைக்கும்போது வெங்காயத்தையும் சேர்த்து வைத்து புதைத்திருக்கிறார்கள். மரணச் சடங்கு களில் வெங்காயம் முக்கிய பொருளாக இடம்பெற்றுள்ளது.

எகிப்திய மதகுருக்கள் வெங்காயத் தில் மந்திரத் தன்மை இருப்பதாகவும், இதன் மூலம் இறந்தவர்களை உயிர்ப் பிக்க முடியும் என நம்பினார்கள். கிரேக்க ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள் உடல் உறுதிக் காக வெங்காயத்தை நிறையச் சாப் பிட்டுள்ளார்கள். அத்தோடு நோய்த் தொற்றைத் தடுக்க உடலில் வெங்காயச் சாற்றை தேய்த்துக் கொள்வார்களாம்.

வாழ்க்கைப் பாடங்களை எளிமை யாகக் கற்றுத் தருவதற்கு கதைகள் அதிகம் உதவி செய்கின்றன. கதை வழியாகத்தான் வெங்காயமும் தர்பூசணி யும் பேசிக்கொள்கின்றன. இக்கதையை ஒரு சிறுவனிடம் சொன்னபோது அவன் உடனே, “வெங்காயத்தின் குரல் எப்படியிருக்கும்?” என்று கேட்டான்.

“நீயே சொல்லு!” என்றேன். அவன் உடனே கீச்சுக் குரலில் பேசத் தொடங்கினான். வெங்காயத்தின் குரல் இப்படிதான் இருக்கும் என சிறுவன் கற்பனை செய்யத் தொடங்கும் போது, அவனுக்குள் இருந்து படைப்பாற்றல் முளைவிடத் தொடங்குகிறது. இதற் காகத்தான் கதைகள் கேட்கவும் சொல்லவும் வேண்டியிருக்கிறது.

இணையவாசல்: >கதை சொல்லிகளுக்கு உதவும் இணையதளம்
http://www.aaronshep.com/stories/folk.html

## பகுதி 8 - தேசங்களின் தலைவிதி

கெய்ரோவில் சொல்லப்பட்டு வரும் கதை இது. ஹசன் என்றொரு பேராசைக்கார வணிகன் இருந் தான். அவன் தங்கத்தை எங்கே பார்த் தாலும் அதை தன்னுடையதாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படு வான். சில சமயங்களில் தங்கத்துக்காகத் திருட்டு வேலைகள் செய்வதும் உண்டு. அப்படி தேடிச் சேர்த்த தங்கத்தை, யாரும் திருடிப் போய்விடக்கூடாது என பூமிக்கு அடியில் புதைத்து வைத்திருந்தான். அவனிடம் 100 பானைகள் நிறைய தங்கம் இருந்தன. ஆனாலும், ஆசை அவனை விடவில்லை.

ஒரு நாள் சந்தைக்குப் போனபோது, பட்டுத் துணி விற்பவன் மேஜையில் ஒரு தங்க நாணயம் இருப்பதைக் கண்டான் ஹசன். யாராவது தன்னை கவனிக்கிறார்களா எனச் சுற்றிலும் பார்த்துவிட்டு, ரகசியமாக தங்க நாண யத்தை எடுத்து பையில் போட்டுக் கொண்டு வேகமாக வெளியேறி நடக்க ஆரம்பித்தான்.

சந்தையைத் தாண்டுவதற்குள் அவனை காவலர்கள் பிடித்துவிட்டார் கள். “இத்தனை பேர் கடையில் இருக்கும்போது தங்க நாணயத்தைத் திருடுகிறாயே, என்ன தைரியம்!” என்று காவலர் அடித்து உதைத்தபோது ஹசன் சொன்னான்:

“எனக்கு தங்கத்தைத் தவிர வேறு எதுவும் கண்ணுக்குத் தெரியவே இல்லை. சுற்றிலும் திரும்பிப் பார்த்தேன். ஓர் ஆள் கூட என் கண்ணில்படவில்லை. யாருக்கும் தெரியாது என்றுதான் எடுத்தேன்!”

ஹசனை சிறையில் அடைத்து வைத்தார்கள். தண்டனை முடிந்து வெளியே வந்தவுடன் தான் தங் கத்தை புதைத்து வைத்த இடத் துக்கு ஓடினான். அந்த இடத்தில் இப்போது பெரிய நந்தவனம் உருவாகியிருந்தது. தனது தங்கம் எங்கே போனது என்று தெரியாமல் மண்ணைத் தோண்டி, எதுவும் கிடைக் காமல் அழுது புலம்பி னான். முடிவில் பைத்தியக் காரனாகி தரையில் கிடக்கும் கற்களை எல்லாம் 'தங்கம் தங்கம்' என்று சேர்த்துக்கொள்ளத் தொடங்கினான்.

'பல ஆண்டுகளுக்குப் பிறகு அவன் இறந்தபோது அவனை சுற்றிலும் ஆயிரக்கணக்கான கற்கள் குவிந்து கிடந்தன. பாவம் ஹசன், வாழ்க்கையின் அர்த்தத்தை உணரவே இல்லை!' என்று அந்தக் கதை முடிகிறது.

தங்கம் பற்றிய கதையில்லாத சமூகமே இல்லை. மனிதனுக்கு ஆறாயிரம் வருஷங்களாக தங்கத்தை பற்றித் தெரியும். 2,500 ஆண்டுகளுக்கு முன்பே தங்க நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. தங்கத்தை வழிபாட்டுப் பொருளாக கருதி வணங்கி வந்தான் மனிதன். தங்கம் மந்திர சக்தி கொண்ட உலோகம் என்று அக்கால மனிதர்கள் நம்பினார்கள்.

பண்டைய காலத்தில் சீனர்கள் தங்கத்தை தீவினையின் அடையாள மாகக் கருதினார்கள். ஆகவே, சீனா வைத் தவிர வேறு எல்லா நாடுகளிலும் தங்கம் ஏதோவொரு விதத்தில் கடவுளாகக் கருதப்பட்டிருக்கிறது.

தங்கத்தை சூரியனோடு ஒப்பிடும் தொடர்பு மிகவும் பழமையானது. பைபிளின் பழைய ஏற்பாட்டில் தங்கம் என்ற சொல் 415 முறை பயன்படுத் தப்பட்டுள்ளது. இது, அக்காலகட்டத்தில் தங்கம் வகித்த சமூகப் பொருளாதார முக்கியத்துவத்தையே அடையாளப் படுத்துகிறது.

'உலகத்தின் உண்மையான அரசன் தங்கமே' என்றொரு புத்தகம் உள்ளது. பிராங்க்ளின் ஹாப்ஸ் எழுதியது. இதில் 'தேசங்களின் தலைவிதியை அதன் சேமிப்பில் உள்ள தங்கமே முடிவு செய்கிறது. உடலுக்கு ரத்தத்தைப் போல வர்த்தகத்துக்கு தங்கமே ஆதாரம்' என குறிப்பிடப்பட்டுள்ளது அப்புத்தகத்தில்.

தங்கம் சாதாரண உலோகம் இல்லை. மக்களுக்கு இடையே உள்ள சொத்து உறவுகளி லும், சந்தை பரிவர்த்தனை களிலும் தங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. தனிநபர் மற்றும் சமூகக் குழுக்களின் மூலதனமாகக் கருதப்படு வதுடன், அரசின் நிதிவளத் தையும் திட்டமிடுதலையும் தங்கமே தீர்மானிக்கிறது.

காகிதப் பணத்தைக் கண்டுபிடித்த ஜான் லோ என்ற ஸ்காட்லாந்துகாரர், செலாவணியில் தங்கத்துக்குப் பதிலாக காகிதப் பணத்தை உபயோகிப்பதன் மூலம், ஏழை எளிய மக்கள் அதிகம் பயன்பெறுவார்கள் என்று கருதினார். ஆனால், காலமாற்றத்தில் தங்கத்தை விட பணம் அதிக பிரச்சினைகளை உருவாக்கியது. பணவீக்கம் ஏற்பட்டு பெரும்நெருக்கடிகள் உருவாகி அரசு களே கவிழ்ந்தன.

தங்கத்தை அடைவதற்காகவே உலகில் அதிக குற்றங்கள் நடந் துள்ளன. கடலிலும், நிலத்திலும் எக் காலத்திலும் கண்டுபிடிக்கப்பட முடி யாத புதையலாக எவ்வளவு தங்கம் அழிந்துபோனது என்று யாருக்கும் தெரியாது. போர்ச்சுகீசியர்களின் தங்கப் பசியே அமெரிக்காவைக் கண்டுபிடிக்க முக்கிய காரணமாக இருந்தது. தங்கத்தின் மீதான கவர்ச்சியும், சந்தை மதிப்பில் தங்கம் கொண்டிருக்கும் இடமும் காலந்தோறும் உயர்ந்து கொண்டேயிருக்கிறது

இக்கதை தங்கத்தின் மீதான ஆசையை மட்டும் சொல்லவில்லை. மாறாக எந்த ஒன்றின் மீது பேராசை கொள்கிறோமோ, அப்போது அது மட்டுமே கண்ணுக்குத் தெரியும். சுற்றி யுள்ள யாவும் மறைந்து போய்விடும் என்று கூறுகிறது. இது அனுபவபூர்வமான உண்மை!

தங்கத்தை ஆசை ஆசையாக சேர்த்து வைப்பவர்கள் அதை அனுபவிப்பதில்லை. எப்படி பாதுகாத்து வைப்பது எனத் தெரியாமல் தடுமாறு கிறார்கள். பலநேரம் ஒளித்தும் மறைத் தும் வைத்த தங்கம் யாராலோ கண் டெடுக்கப்பட்டு, யாருக்கோ பயன் படுகிறது. தங்கத்தின் மீதான பேராசை ஹசனை மட்டுமில்லை; நம் காலத்தில் சகலரையும் பைத்தியமாக்குகிறது.

தங்கத்திலான சட்டை அணிந்து வந்த புனே வணிகர் ஒருவர் சமீபத்தில் கொலை செய்யப்பட்ட சம்பவம் ஊடகங்களில் முக்கிய செய்தியாக இடம்பெற்றது. அந்த வணிகர் அணிந் திருந்த தங்கச் சட்டை பலரையும் பொறாமை கொள்ளச் செய்தது என் பதே உண்மை.

'மெக்கனாஸ் கோல்டு' படத்தின் முடிவில் தங்கம் தேடிப் போகிறவர் களில் ஒரு பெண் தங்க ஆற்றில் குளிப்பாள். அவளது உடையில் தங்கம் ஒட்டிக் கொள்ளும். மலைமுழுவதும் தங்கப் பாளமாக ஒளிரும். வெட்டி எடுத்து பை பையாக நிரப்புவார்கள். அப்படம் உலகெங்கும் வெற்றி கரமாக ஓடியதற்குக் காரணம், அப்படியொரு தங்க மலையை அதன் முன்பு திரையில் கண்டதே இல்லை என்பதே.

மத்திய தர மக்களின் தீராக் கனவு தங்கம் சேர்ப்பது மட்டுமே. பிள்ளை களுக்கு தங்கத்தின் பெயரை வைக்குமளவு நாம் தங்கத்தைக் கொண்டாடி வருகிறோம். தங்கம் வாங்கச் சொல்லி தொலைக்காட்சி விளம்பரங்கள் நம்மை துரத்துகின்றன. நாளுக்கு நாள் தங்கத்தின் விலை உயர்ந்துகொண்டே போகிறது.

சென்னை போன்ற பெருநகரங்களில் தங்கத்துக்காக தொடர்ந்து நடைபெறும் வழிப்பறிகள், கொள்ளைகள் மற்றும் கொலைகளைக் காணும்போது அச்சமாகயிருக்கிறது. ஓர் உலோகம் மனிதர்களின் வாழ்க்கையை இவ்வளவு ஆட்டுவிக்கிறதே எனப் புதிராகவும் இருக்கிறது.

தங்கம் என்பது மனித விதியை மாற்றி விடும் பிசாசு என்கிறார் பால்சாக். வாழ்க்கையில் போதுமான அளவு தங்கத்தை அடைய முடியாதவர்கள் கதைகளின் வழியே தங்கக் கோட்டை களைக் கட்டி, தங்கக் கட்டிலில் அமர்ந்து கொண்டு, தங்கத் தட்டில் சாப்பிட்டு, தங்க விசிறிகளைக் கொண்டு வீசி கொள்வதாக கற்பனை செய்கிறார்கள். நம் இயலாமையும் ஏக் கமும்தான் கதைகளின் வழியாக தீர்த்துக் கொள்ளப்படுகின்றன.

மனிதனை ஆற்றுப்படுத்துவதுதான் கலை இலக்கியத்தின் வேலை. அதனை கதைகள் செய்கின்றன என்ப தால்தான் அதை நாம் கொண்டாட வேண்டியிருக்கிறது

இணையவாசல்: >எகிப்திய கதைகளை அறிந்துகொள்ள
http://www.egyptianmyths.net/

## பகுதி 9 - தேவையில்லாத கோபம்!

உறவுகளை சீர்படுத்திக்கொள்வ தற்குக் கதைகள் பெருமளவு உதவிபுரிகின்றன. குறிப்பா கத் திருமண உறவு குறித்து நிறையக் கதைகள் உலகெங்கும் காணப்படு கின்றன. மணமகன் அல்லது மணமகள் குடும்பம் சார்ந்தப் பெருமைகள், ஏழை - பணக்காரன் வேறுபாடுகள், பழக்க வழக்கங்களின் வேறுபாடுகள் குறித்து வாய்மொழிக் கதைகள் அதிகம் பேசுகின் றன. கேலி செய்வதைப்போல உண் மையை சுட்டிக்காட்டுவதே இந்தக் கதைகளின் நோக்கம்.

குறிப்பாக முட்டாள் மருமகனைப் பற் றிய கதைகள், எல்லா நாடுகளிலும் காணப் படுகின்றன. இந்தக் கதைகளின் ஒப்புமை களை ஆராய்ந்த ஆய்வாளர் லீலா பிர சாத், இந்தக் கதைகளை உருவாக்கிய வர்கள் பெண்களே என்கிறார். கூடவே தனது களஆய்வில் சேகரித்த காஷ்மீரக் கதை ஒன்றினையும் விவரிக்கிறார்.

புதிதாக திருமணமானவன் விருந்துக் காக மாமியார் வீட்டுக்குக் கிளம்பும் போது அவனது அம்மா அறிவுரைகள் சொல்வதில் இருந்து இந்தக் கதை தொடங்குகிறது.

“மாமியார் வீட்டில் உன்னை மதிக்க வேண்டும் என்றால் அவர்கள் வீட்டுக்கு போனதும் இருப்பதிலே உயரமான இருக்கையில் போய் உட்கார்ந்து கொள். யாராவது ஏதாவது பேச்சுக் கொடுத் தால் லேசில் வாயைத் திறக்காதே. பேச வேண்டியது வந்தால் கனமான விஷயங் களை மட்டும் பேசு. இல்லாவிட்டால் உன்னை முட்டாள் என நினைத்துவிடு வார்கள்” என அறிவுரை சொல்லி அனுப்பி வைக்கிறாள் அம்மா.

மாமியார் வீட்டுக்குப் போன புதுமாப்பிள்ளை, அங்கே எல்லா நாற்காலிகளும் ஒன்றுபோலவே இருந்ததைக் கண்டு குழப்பமடை கிறான். வீட்டில் இருப்பதிலேயே உயரமாக இருந்தது இரும்பு பீரோ. ஆகவே, ஒரு நாற் காலியைப் போட்டு பீரோ மீது ஏறி உட்கார்ந்துகொள் கிறான்.

புது மாப்பிள்ளையின் செயல்பாடுகளைக் கவ னித்த மாமியார், ‘இது என்ன கூத்து?’ எனப் புரியாமல், “விசிறிக் கொள்ள விசிறி வேணுமா மாப்பிள்ளை” என்று கேட்கிறார். ‘யாரிடமும் அவ்வளவு லேசில் பேசிவிடக் கூடாது’ என்ற தனது அம்மாவின் கட்டளையால் அவன் வாயை திறக்கவே இல்லை.

இதற்குள் வீடு தேடிவந்த உறவினர் கள் எல்லாம், ‘புது மாப்பிள்ளை எங்கே எனத் தேடினார்கள்’ அவனோ ஒரு பீரோ மீது ஏறி கம்பீரமாக உட்கார்ந்திருப்பதைக் கண்டு தங்களுக்குள் சிரித்துக் கொண்டார்கள்.

‘மருமகனை எப்படி சமாளிப்பது?’ என்று மாமியாருக்குத் தெரியவில்லை. எதையாவது, எப்படியாவது பேசி, மாப்பிள்ளையைக் கிழே இறங்கச் செய்துவிட வேண்டும் என

முடிவுசெய்து, “சாப்பிட என்ன வேண்டும் மாப்பிள்ளை” என்று கேட்டார். ‘தவிர்க்க முடியாமல் பேச வேண்டிய தருணம் வந்தால், கனமான விஷயங்களை மட்டுமே பேச வேண்டும்’ என்று அம்மா அறிவுரை சொல்லியிருந்தது நினைவுக்கு வந்ததால், உடனே அவன் சத்தமாக “திருகை வேண்டும்” என்றான்.

‘திருகையை எப்படி சாப்பிட முடியும்?’ என மாமியாருக்குப் புரியவில்லை. “வேறு ஏதாவது வேண்டுமா?” என்று மாமியார் கேட்க, அதற்கு மருமகன் “ஆட்டு உரல்” என்று சத்தமாக பதில் சொன்னான்.

“அய்யோ என் மகளை இப்படி ஒரு முட்டாளுக்குக் கட்டிக் கொடுத்துவிட் டேனே…” என்று மாமியார் ஒப்பாரி வைக்க தொடங்கினார். புது மாப்பிள்ளை யைப் பேய் பிடித்துவிட்டதாக உறவினர் களும் பயந்து ஓடினார்கள். ‘அம்மா சொன்னதைப் போலத்தானே நாம் நடந்துகொண்டோம். ஏன் இத்தனை குழப்பங்கள்?’ என புது மாப்பிள்ளைக்குப் புரியவே இல்லை என்பதுடன் அந்தக் கதை நிறைவு பெறுகிறது.

தமிழ்நாட்டிலும் இது போன்ற கதைகள் நிறைய இருக்கின்றன. புதுமாப் பிள்ளை என்றால் இப்படி தான் நடந்துகொள்ள வேண் டும் என்ற அறிவுரை இன்றைக்கும் சொல்லப் படுகிறது. மாமனார் வீட்டை முடிந்த அளவு உறிஞ்சிவிட வேண்டும் என நினைக்கும் மாப் பிள்ளைகள் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். முறுக்கிக் கொண்டு எதற்கெடுத்தாலும் சண்டை போடுபவர் களை எப்படி சமாளிப்பது எனத் தெரியாமல் பெண்வீட்டார் கவலையும் சங்கடமும் கொண்டு தவிக்கிறார்கள்

எனது நண்பர் ஒருவர் தன் மகளை கட்டிக் கொடுத்து பெங்களூரு அனுப்பி வைத்தார். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மகள் அப்பாவை காண்பதற்காக சென்னை வருவதை வழக்கமாக வைத்திருந்தார். ஒருமுறை வீட்டுக்கு வந்த மருமகன் சாப்பிடும்போது பெரிய ஆம்லேட் வேண்டும் எனக் கேட்டான்.

“நாலு முட்டையை ஆம்லேட் போட்டு எடுத்து வாம்மா” என மாமியார் கேலி செய்துவிடவே, மருமகனால் அதை தாங்கிக் கொள்ளவே முடியவில்லையாம்.

“உங்க அம்மா எப்படி என்னை கேலி செய்யலாம்?” என மனைவியிடம் கோபமாக சண்டையிட்டதோடு, இனி உன் வீட்டுக்கு வரவே மாட்டேன், உன் வீட்டில் இருந்து யாரும் பெங்களூரு வந்து போகக் கூடாது என்று கோபித்துக் கொண்டு போய்விட்டான்.

எவ்வளவோ முயன்றும் நண்பரால் மருமகனை சமாதானப்படுத்தவே முடியவில்லை. ஆனால், தன் மகளைப் பார்க்காமல் இருக்க முடியாத நண்பர், மாதம் ஒருமுறை பெங்களூருவுக்கு ரயி லில் போய் இறங்கி, ஆட்டோ பிடித்து மகள் வீட்டின் அருகில் உள்ள பூங்காவுக் குப் போய் காத்துக் கொண்டிருப்பார்.

மருமகன் அலுவலகம் போன பின்பு, மகள் பூங்காவுக்கு வருவாள். மதியம் வரை அவர்கள் பேசிக் கொண்டிருப் பார்கள். அப்பாவுக்குப் பிடித்த உணவை மகள் சமைத்து எடுத்துக்கொண்டு வந்திருப்பாள். இருவரும் ஒன்றாகச் சாப்பிடுவார்கள். மாலையானதும் அவர் சென்னைக்குக் கிளம்பிவிடுவார். இப்படி இரண்டு வருஷங்கள் ஓடின.

ஒருநாள் இந்த ரகசிய சந்திப்பை கண்டுபிடித்துவிட்ட மருமகன், மாம னாரைத் திட்டி சண்டை போடவே பிரச்சினை பெரியதாகி உறவு முற்றாக முறிந்துவிட்டது.

இதே கேலியை தனது அம்மா செய்திருந்தால் நிச்சயம் அந்தப் பையன் கோபித்துக் கொண்டிருக்க மாட்டான். ஆனால், மாமியார் செய்ததால் ஏன் இவ்வளவு ஆத்திரம்? 'மாமியார் வீட்டில் விட்டுக்கொடுத்துப் போய்விடக்கூடாது' என காலம் காலமாக சொல்லிக் கொடுக் கப்பட்டிருக்கிறது. ஆண், பெண் இருவர் மனதிலும் அது ஆழமாக வேரூன்றி யிருக்கிறது. அந்த இறுக்கத்தைத் தளர்த்தவே இதுபோல கதைகள் சொல்லப்படுகின்றன.

மருமகன் அல்லது மருமகளிடம் குற்றம் குறை கண்டுபிடிக்காத மாமி யாரோ, கோபித்துக் கொள்ளாத மருமகனோ அல்லது மருமகளோ கிடையாது என்பதன் சாட்சியம்தான் இது போன்ற கதைகள்.

கதையில் வரும் முட்டாள் மருமக னின் செயலை நாம் ரசித்து சிரிக் கிறோம். ஆனால், நிஜவாழ்வில் அதை அவமானமாகக் கருதுகிறோம். கோபித் துக் கொள்கிறோம். வாழ்வில் எதை எப்படி புரிந்துகொள்ள வேண்டும் என் பதை கற்றுக் கொடுக்கவே கதைகள் உதவுகின்றன.

முட்டாள் தினமாக 'ஏப்ரல்- 1' அறிவிக் கப்பட்டதற்குப் பின்னணியில்கூட இது போல சில சுவாரஸ்யமான விஷயங்கள் இருக்கின்றன.

16-ம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய நாடுகளில் ஏப்ரல்-1ம் நாளைத்தான் புத் தாண்டு தினமாகக் கொண்டாடி வந் துள்ளனர். 1562-ம் ஆண்டளவில் அப்போதைய போப்பாண்டவரான கிரிகொரி புதிய கிரேகோரியன் ஆண்டுக் கணிப்பு முறைப்படி ஜனவரி- 1 அன்றுதான் புத்தாண்டு ஆரம்பமாகிறது என அறிவித்தார்,

இந்த மாற்றத்தை ஐரோப்பிய தேச மக்கள் உடனேயே ஏற்றுக் கொள்ளவில்லை. தங்களின் பழைய வழக்கப்படி ஏப்ரல் முதல் தேதியன்றே புத்தாண்டைக் கொண்டாடினார்கள். அவர்களை, சீர்திருத்தவாதிகள் கேலிசெய்து முட்டாள் என அழைத் தார்கள். அதில் இருந்தே ஏப்ரல்-1 ம் தேதி முட்டாள்கள் தினமாக கருதப் படுகிறதாம்.

இணையவாசல் : >தொன்மம் மற்றும் சாகசக் கதைகளை வாசிக்க விரும்புவோருக்கானது
https://ztevetevans.wordpress.com/

## பகுதி 10 - முதல் கண்ணீர்!

நீங்கள் எப்போது முதன்முதலாகக் கண்ணீர்விட்டீர்கள்? எதற்காக கண்ணீர் விட்டீர்கள் என்று ஞாபகம் இருக்கிறதா?

பெரும்பான்மையினருக்கு நினைவிருக்காது. ஆனால், மறக்க முடியாதபடி கண்ணீர் வடித்த சம்பவம் ஏதாவது ஒன்று நிச்சயம் மனதில் இருக்கும். சிறுவர்கள் அதிகம் அழக்கூடியவர்கள்.

கோபித்துக் கொண்டாலோ, அவர்கள் ஆசைப்பட்ட ஒன்று கிடைக்காமல் போய்விட்டாலோ, உடனே கதறி அழுகையினை ஆயுதமாக்கி விடுகிறார்கள். பெரியவர்களிலும் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள அழுபவர்கள் இருக்கிறார்கள்.

சிரிப்பும் அழுகையும் இரட்டைப் பிள்ளைகள். அதிகமாகச் சிரித்தால் முடிவில் அழுதுவிடுவோம். சிரிப்போ, அழுகையோ அது வெளிப்படும் இடமும், வெளிப்படும் விதமும் நேரமும் முக்கியமானது.

வடதுருவப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் அழுகை எப்படி உருவானது என்பதைப் பற்றி ஒரு கதை சொல்கிறார்கள்.

வடதுருவப் பிரதேசங்களில் உள்ள பூர்வகுடி களை இனுயிட் (Inuit) என்று அழைக்கிறார்கள், இனுயிட் என்றால் மனிதர்கள் என்று அர்த்தம். அவர்கள் குடியிருக்கும் பகுதி முதல்தேசம் (First Nation) என்று அழைக்கப்படுகிறது,

எஸ்கிமோ என்று நாம் குறிப்பிட்டு வந்த சொல் தவறானது என்று இப்போது விலக்கப்பட்டிருக்கிறது, காரணம், எஸ்கிமோ (Eskimo) என்பதற்கு 'பச்சை மாமிசம் உண்பவர்கள்' என்று அர்த்தம். ஆகவே, அது பூர்வகுடிகளை இழிவுபடுத்துகிறது என்று கனடாவாசிகள் அதைப் பயன்படுத்துவதில்லை.

கனடாவின் துருவப் பகுதியில் யூபிக், இனுயிட் என (Yupik, Inuit) என இரண்டுவிதமான பூர்வகுடி மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கான பொதுச் சொல்லாக இனுயிட் என்ற சொல் பயன்படுத்தபடுகிறது,

உறைபனிப் பிரதேசத்தில் வாழ்பவர்கள் என்பதால் இவர்களது பண்பாடு தனித்துவமானது. இனுயிட் மக்களின் கலை, பண்பாடு மற்றும் வாழ்வியல் முறை குறித்து அறிந்துகொள்ள சிறப்பு மியூசியம் ஒன்று டொரன்டோவில் உள்ளது. அதை நேரில் சென்று பார்த்திருக்கிறேன்.

இனுயிட் மக்களின் வேட்டைக் கருவிகள், குளிராடைகள், வீடுகளின் அமைப்பு, மற்றும் உணவுப் பாத்திரங்கள், குலக் குறிகள், கைவினைப் பொருட்கள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அதில், கற்களைக் குவித்துவைத்து அதன் வழியே ஒரு செய்தியை சொல்லும் அடையாளக் குறிகளைக் கண்டேன்.

ஒரு கல் மீது இன்னொரு கல்லை நிற்கச் செய்து, தங்களின் செய்திகளைப் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். கற்கள்தான் அவர்களது தகவல் பலகைகள்.

துருவப் பகுதி மக்கள் கடல் சிங்கம் என்று அழைக்கப்படும் சீல்களை வேட்டையாடக் கூடியவர்கள். உண்மையில், ஒரு மிருகத்தை மனிதன் வேட்டையாடுவதில்லை. அந்த மிருகமே முன்வந்து, தன்னைப் பிடித்துக் கொள்ள அனுமதிக்கிறது என்று இனுயிட் நம்புகிறார்கள். ஆகவே, வேட்டையாடும்போது தான் கொன்ற மிருகத்திடம் மன்னிப்பு கேட்பவதை வழக்கமாக கொண்டிருக்கிறார்கள்.

அதனால்தான் இனுயிட்கள், சீல் மிருகத்தை வேட்டையாடி விட்டு, அதனுடைய குடலை கடலுக்குள் திரும்பப் போட்டுவிடு கிறார்கள். காரணம், அந்த சீல் மறுபடி பிறந்து, இவனிடமே வந்து சேருமென நம்பிக்கைதான்.

துருவப் பகுதியில் மனிதர்கள் வாழத் தொடங்கிய காலத் தில் ஒருவன் சீல் வேட்டைக்குச் சென்றான். கூட்டமாக சீல்களைக் கண்டதும் இவற்றை வேட்டையாடினால் குடும்பமே உட்கார்ந்து சாப்பிடலாமே என்று சந்தோஷ மாக ஈட்டியைக் குறிபார்த்தான். ஆனால், மனித அரவம் அறிந்த சீல்களின் கூட்டம் திடீரென நகரத் தொடங்கியது.

'அய்யோ! கண்முன்னே நமது இரை தப்பிப் போகிறதே' என்ற பதைபதைப்பில் அதைத் துரத்தினான். ஆனால், ஒன்றும் சிக்கவில்லை. கடைசியாக ஒரு சீல் மெதுவாகச் சென்றுகொண் டிருந்தது. அதை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என வேகமாகப் பாய்ந்தான். ஆனால், அந்த சீல் பனியை உடைத்துக் கொண்டு தாவி தண்ணீரினுள் போய் மறைந்துவிட்டது.

ஏமாற்றம். உணவுக்கு என்ன செய்வது என்ற பரிதவிப்பு. கண்முன்னே கிடைத்ததை தவறவிட்டோமே என்ற ஆத்திரம். அத்தனையும் ஒன்றுசேர்ந்தது. திடீரென அவன் கண்களில் தண்ணீர் கசிந்து வரத் தொடங்கியது.

என்ன இது எனப் புரியாமல் அவன் கைகளால் கண்ணீ ரைத் துடைத்தான். ஆனால், கண்ணீர் வருவது நிற்கவில்லை. அதை ருசித்துப் பார்த்தபோது உப்பாக இருந்தது. இது போலவே தொண்டையில் வலி ஏற்பட்டு பேசவும் முடியவில்லை. இரவு வீடு திரும்பியதும் தனது ஏமாற்றத்தை எடுத்துச் சொல்லி கண்ணீர் வந்த விஷயத்தைத் தன் மனைவியிடம் சொன்னான். அப்படித்தான் மனிதனுக்கு கண்ணீர் உருவானது என்கிறார்கள் இனுயிட் மக்கள்.

எப்போது நம் கண்முன்னே நாம் விரும்பியது கிடைக்காமல் போகிறதோ, எப்போது பசியை தாங்க முடியவில்லையோ, எப்போது கனவு நிர்மூலமாகிப் போகிறதோ, எப்போது காத்திருப்பு அர்த்தமற்றுப் போகிறதோ, எப்போது விரும்பியவர்களுக்கு உணவிட முடியாமல் போகிறதோ, எப்போது நாம் நிர்க்கதி என உணர்கிறோமோ , என்றைக்கு ஒரு மனிதன் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகிறதோ அப்போதெல்லாம் கண்ணில் இருந்து தானே கண்ணீர் வரும் என்று கடவுள் உணர்த்தியதன் அடையாளமே இந்தக் கதை என இனுயிட் மக்கள் நம்புகிறார்கள்.

துருவப் பிரதேசத்தின் இக்கதையை போல ஒவ்வொரு இனக் குழுவிலும் வேறு கதைகள் இருக்கவே செய்கின்றன. எவர் சொன்ன கதையாக இருந்தாலும் அதன் அடிப்படை உண்மை ஒன்று போலதான் இருக்கிறது.

இனுயிட் மக்களில் யாருக்காவது வேட்டையின்போது சீல் கிடைக்கவில்லையெனில், அவரும் அவரது குடும்பமும் பசியைப் போக்கிக்கொள்ள உதவ வேண்டியது அடுத்தவருடைய கடமை என்கிற மரபு இன்றைக்கும் இனுயிட் மக்களிடமிருந்து வருகிறது

இனுயிட் மக்களுக்கு ஆவியுலக நம்பிக்கை அதிகம். அதற்காக பூசாரிகளை நாடுகிறார்கள். அவர்கள் மேளம் அடித்து மயக்க நிலையில் ஆவிகளுடன் பேசி தங்கள் நலவாழ்வுக்கு வழிகாட்டுவார்கள் என்பது அவர்களது நம்பிக்கையாகும்.

இனுயிட் மக்கள் தாங்கள் கொன்ற மிருகத்தை உடனேயே உண்ணுவதையே விரும்புகிறார்கள். அப்போது மட்டுமே, இறைச்சி மிக ருசியாக இருக்குமாம். இல்லாவிட்டால் உறைந்து போய் இறைச்சியின் சுவை மாறிவிடும் என்கிறார்கள்.

ஐரோப்பியர்கள் கனடாவுக்கு வந்து குடியேறி, புதிய அரசாங்கத்தை உருவாக்கிய போது இனுயிட் மக்களின் உணவுப் பழக்கத்தை மாற்ற முயற்சித்தார்கள். இதற்காக அவர்களுக்குத் தேவையான, பால் பவுடர் மற்றும் தானியங்களை அனுப்பி வைத்தார்கள். இனியூட்டுகளுக்கு பால் ஒத்துக் கொள்ளவில்லை. பாலையும் தானியங்களையும் சாப்பிடாமல் கடலில் எறிந்தார்கள்.

ஆற்றாமையில் வரும் கண்ணீரைப் பற்றி இனுயிட் ஒரு கதை கூறுகிறது. ஆனால், கண்ணீரைப் பகடிசெய்வது போல 'ஆலீஸின் அற்புத உலகம்' கதையில் ஆலீஸ் அழுதழுது அவளைச் சுற்றிப் பெரிய கண்ணீர் குளம் உருவாகிவிடுகிறது. அதில் வாத்துகள் நீந்த தொடங்குகின்றன.எலிகள் நீச்சல் அடிக்கின்றன. அவளே நீச்சல் அடிக்க ஆரம்பித்துவிடுகிறாள். கண்ணீர்க் குளத்தை பற்றிப் படிக்கும்போது வேடிக்கையாக இருக்கும்.

இன்றைய தொலைக்காட்சித் தொடர்களைக் காணும்போது நம் வீடுகளில் அப்படியொரு கண்ணீர்க் குளம் நிரம்புவதை கண்முன்னே காண முடிகிறது.

சிரிப்பையும் கண்ணீரையும் சமமாக பாவிக்கத் தெரிந்தவனே முழுமையான மனிதன். பிறர் கண்ணீரைத் துடைத்து சந்தோஷத்தை உருவாக்குபவன் மகத்தான மனிதன். கண்ணீர் சொல்லும் கதைகள் காலத்தால் அழிக்க முடியாதவை. அதற்கு இனுயிட்டின் கதையே சாட்சி!
இணையவாசல்: >இனுயிட் மக்களின் கதைகளை வாசிக்க
http://www.sacred-texts.com/nam/inu/eft/index.htm

## பகுதி 11 - வான் நோக்கு!

'கடவுள் எங்கே இருக்கிறார்? ' என்று எவரைக் கேட்டாலும் வானை நோக்கித்தான் கையைக் காட்டுகிறார்கள். உலகெங்கும் இதுதான் பழக்கம். ஒருவர் கூட பூமியை நோக்கி கீழே கை காட்டுவது இல்லை. பூமி மனிதர்களுக்கானது. அங்கே கடவுள் இல்லை என்ற நம்பிக்கை ஆழமாக பதிந்து போயிருக்கிறது. பூமிக்குக் கீழே வசிப்பவர்கள் அரக்கர்கள், மோசமானவர்கள் என்ற தவறான கருத்தாக்கம் நீண்டகாலமாகவே இருந்துவருகிறது.

பாதாளத்தில் ஏழு லோகங்கள் உண்டு. அவை அதலம், விதலம், சுதலம், தலாதலம், மகாதலம், பாதாளம் மற்றும் ரஸாதலம் என்று இந்து புராணங்கள் கூறுகின்றன. ஊசி தரையில் விழுந்துவிட்டால் ஊசிக் கள்வர்கள் பூமிக்கு அடியில் இருந்து வந்து திருடிக் கொண்டுபோய்விடுவார்கள் என்று சிறுவயதில் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு எதற்கு

ஊசி என்று கேட்டபோது, பூமி கிழிந்து போய்விட்டதால் ஊசியை வைத்து தைப்பது அவர்களின் வேலை என்று பதில் கிடைத்தது.

பூமிக்குக் கீழே வசிப்பவர்களின் தலை முடிகள்தான் பூமியில் மரங்களாக முளைத்திருக்கின்றன என்றொரு கதையும் நம்மிடம் இருக்கிறது. இப்போதுகூட அடித்து உன்னை அதலபாதாளத்துக்கு அனுப்பிவிடுவேன் என்று கோபத்தில் சொல்பவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்!

பூமிக்குக் கீழே போகப் போக இருட்டு அதிகமாக இருக்கும். பூமிக்கு மேலே போகப் போக வெளிச்சம் அதிகமாக இருக்கும் என்பதே பொதுநம்பிக்கை. இருட்டிலே பிறந்து, இருட்டுக்குள்ளேயே வாழ்பவர்களுக்கு வெளிச்சத்தில் பொருட்கள் தெரிவதுபோல, கண் பழகிவிடும் என்பார்கள்.

‘இருக்கத்தான் செய்கிறது

எப்போதும்

இலையின் பின்பக்கம்

முன்பக்கத்திடம் சொல்வதற்கு

ஏதோ ஒன்று.

எப்போதும் இருக்கிறது

பின்பக்கம்

முன்பக்கத்திடம் சொல்ல முடியாத ஏதோ

ஒன்று!’

- என்ற தேவதச்சனின் கவிதை வரிகள் நினைவுக்கு வருகிறது. வெளிச்சமும் இருளும் இலையின் முன்பக்கமும், பின்பக்கமும் போன்றவைதானோ. சொல்லியும் சொல்லாமலும் இரண்டுக்குமான உறவு தொடரத்தானே செய்கிறது.

இன்றைய தலைமுறைக்கு பூமியுடன் எந்த உறவும் இல்லை. ‘தரையைத் தொடாதே, அழுக்கு’ என்று பழக்கி வைத்திருக்கிறோம். கையில் மண்பட்டுவிட்டால் அசுத்தம் என்று குழந்தை மனதில் ஆழமாக பதிந்து போய்விடுகிறது. மண்ணின் மணமும் ருசியும் அவர்களுக்குத் தெரியாது. மண்ணில் செய்த கலைப் பொருட்களை மலிவானவை என்று ஏளனம் செய்கிறார்கள். மண் பானையில் தண்ணீர் குடிப்பது இளக்காரமாகப் பார்க்கப்படுகிறது. மண்ணை அறியாத தலைமுறை எப்படி விவசாயத்தையும், விவசாயிகளையும் மதிப்பார்கள் என்று ஆதங்கமாகயிருக்கிறது.

நம்மால் புரிந்துகொள்ள முடியாதவற்றை கதையாக்கி விடுகிறோம். அல்லது கதை வழியே புரியாத ஒன்று புதிய அர்த்தம் பெறுகிறது.

நாய்கள் வானை நோக்கி குலைப்பதை கண்டிருக்கிறோம். ஆனால், எதற்காக நாய் வானை நோக்கி குலைக்கிறது என்பதற்கு நம்மிடம் இதுவரை சரியான விளக்கமில்லை.

தென்ஆப்பிரிக்க பழங்குடி சமூகம் இதற்கு ஒரு கதையைப் புனைந்திருக்கிறது.

முன்னொரு காலத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது உயிரினங்கள் யாவும் ஒன்று கூடி பஞ்சத்தில் நாம் உயிர் பிழைக்க வேண்டும் என்றால் சிலரை காவு கொடுக்க வேண்டும் என முடிவு செய்தன.

யாரைக் கொல்வது என்ற கேள்வி எழுந்தபோது, இளம் விலங்குகள் உயிர் வாழ்வதற்காக அதன் தாய் விலங்கை கொன்றுவிடலாம் என்று முடிவு எடுக்கப்படுகிறது. அதன்படி எல்லா கரடி, புலி, மான், நரி என எல்லா விலங்குகளும் தமது தாயைக் கொன்றன. ஆனால், நாய் மட்டும் அதன் தாயைக் கொல்ல விரும்பவில்லை.

மற்ற விலங்குகள் கண்ணுக்குப் படாமல் எங்கே ஒளித்துவைப்பது எனப் புரியாத நாய்க் குட்டி, தனது அம்மாவிடம் 'நீ வானில் போய் ஒளிந்துகொள். ஒவ்வொரு நாளும் எனக்கு உணவு கிடைத்தவுடன் உன்னைக் கூப்பிடுகிறேன்' என்றது.

அதன்படியே தாய் நாயும் வானில் ஏறி ஒளிந்துகொண்டது. ஒவ்வொரு நாள் உணவுவேளையிலும் நாய்க் குட்டி உணவு சேகரித்துக்கொண்டு தாயைத் தேடி புறப்படும். வெட்டவெளியில் நின்றபடி, வானை நோக்கி ஊளை யிடும். மறு நிமிடம் வானில் இருந்து தாய் நாய் கிழே இறங்கிவந்து குட்டி நாய் கொண்டுவந்திருந்திருக்கும் உணவை சாப்பிட்டுவிட்டு மீண்டும் வானத்துக்கே போய்விடுமாம்.

ஒரு நாள் இப்படி நாய்க் குட்டி செய்வதை ஒரு நரி ஒளிந்துகொண்டு பார்த்துக் கொண்டிருந்தது. மறுநாள் மதியம் நரி வெட்டவெளிக்குப் போய் நின்றுகொண்டு நாயின் குரலை போல சத்தமிட்டது. அதை நம்பி தாய் நாய் வானில் இருந்து பூமிக்கு வந்தது. திடீரென்று நரி அதன் மீது பாய்ந்து அதை கொன்று தின்றது. அதை அறியாமல் நாய்க் குட்டி தனது தாய் வானில் இருந்து வரக்கூடும் என்பதற்காக வானை நோக்கி குரைத்துக் கொண்டேயிருந்ததாம். இன்றைக்கும் அந்தப் பழக்கத்தின் காரணமாகவே

நாய்கள் வானை நோக்கி குரைக்கின்றன என முடிகிறது அந்தக் கதை.

தாய் மீது பேரன்பு கொண்ட நாய்க் குட்டியின் செயல் நம்மை நெகிழச் செய்கிறது. 'படித்த மனிதர்கள்தான் எதையும் எளிதாகப் புரிந்துகொள்ளாதவர்கள். ஆகவே அவர்களுக்கு எல்லாவற்றையும் விளக்கி சொல்ல வேண்டியிருக்கிறது. கதை கேட்டவுடன் அதைப் பற்றிய விளக்கத்தை பழங்குடிகள் எவரும் கேட்பதில்லை' என்கிறார் கேதலின் பர்க் என்ற ஆய்வாளர்.

கடந்த காலங்களில் பஞ்சத்தின்போது வயதானவர்களைக் கொல்லுகிற வழக்கம் சில சமூகங்களில் இருந் திருக்கிறது. வண்ணநிலவனின் புகழ்பெற்ற ‘எஸ்தர்’ சிறுகதையில் வரும் பாட்டியின் சாவு, இதுபோல ஒரு சம்பவம்தானே!

நாய்களைப் பற்றி எவ்வளவோ கதைகளும் கவிதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. ஹோமரின் ‘இலியட்’ காப்பியத்தில் 10 ஆண்டுகள் டிராய் யுத்தம் செய்தபிறகு வீடு திரும்புகிறான் யூலிசியஸ். ஊரில் அவனது மனைவியைப் பற்றி தவறான கதைகள் சொல்லப்படுகின்றன. அது உண்மையா எனப் பரிசோதிக்க மாற்று உருக்கொண்டு தன் வீட்டுக்குச் செல்கிறான். அவனை யாருக்கும் அடையாளம் தெரிய வில்லை. ஆனால், அவனது நாய் அர்கோஸ் அடையாளம் கண்டுவிடுகிறது.

உடல் மெலிந்து நோயுற்று கிடந்த அர்கோஸால் எழுந்துகொள்ள முடியவில்லை. யூலிசியஸ் தனது நாயின் பரிதாப நிலையைக் கண்டபோதும் மாற்றுருவில் இருப்பதால் எதுவும் செய்ய இயலவில்லை. அவன் வீட்டுக்குள் போன மறுநிமிடம் அர்கோஸ் இறந்து போய்விடுகிறது.

இங்கிலாந்தில் ‘பாபி’ என்ற நாய் இறந்துபோன தனது எஜமான் கல்லறையைவிட்டு நீங்காமல் 14 வருஷங்கள் கிடந்து, இறந்து போய்விட்டது என்கிறார்கள். இந்த இரண்டு நாய்களைப் பற்றியும் கதைகள் உள்ளன. கதைகள் வழியாகவே விலங்குகள் பேச ஆரம்பித்தன. கதை வழியாகவே மனிதர்கள் விலங்குகளின் இயல்புகளைப் புரிந்து கொண்டார்கள்.

பூமியில் வாழ்ந்த எத்தனையோ உயிரினங்கள் இன்று அழிந்துபோய்விட்டன. ஆனால், ‘டைனோசர்’ போன்ற சில அழிந்த உயிரினங்கள் இப்போதும் கதைகளின் வழியே வாழ்ந்துகொண்டிருக்கின்றன. கதைகளின் உலகம் அழிவற்றது. கதை சொல்வதன் வழியே உலகின் மிகப் பழமையான செயலை நீங்கள் மேற்கொள்கிறீர்கள். அந்த உணர்வோடு கதை சொல்லுங்கள். கேட்கும் மனது சந்தோஷம் கொள்ளும்!
இணையவாசல்: >இந்திய தேவதைக் கதைகளை வாசிக்க http://www.sacred-texts.com/hin/ift/

## பகுதி 12 - எதில் போய் முடியும்?

மனிதர்கள் எதன் மீது அன்பு வைக்கிறார்களோ அதை ஒருநாள் தேவையில்லை என வெறுத்து ஒதுக்கியும் விடுவார்கள். அதுதான் மனதின் இயல்பு!

ஒன்றை நேசிப்பதற்கு அதன் பயன்பாடு அல்லது எதிர்பார்ப்புதான் பெரும்பாலும் காரணமாக இருக்கிறது.

அன்பு செய்வதற்கு மட்டுமே வலியுறுத்த வேண்டியிருக்கிறது. வெறுப்போ, தானே உண்டாகி விடுகிறது. நம் ஒவ்வொருவரிடமும் நாம் நேசிப் பவர்களின் பட்டியலை விடவும் வெறுப்பவர்களின் பட்டியல் அதிகம் இருக்கிறது. வெறுப்பு வேகமாக பரவிவிடுகிறது. பலராலும் வளர்த்தெடுக்கப்படுகிறது.

அன்பு செலுத்தவே முன்னுதாரணம் தேவை. ஆனால், வெறுப்பதற்கு யாரும் கற்றுத் தர வேண்டியதே இல்லை. சமூக ஊடகங்கள் வெறுப்பை வேகமாக பரவவிடுகின்றன. சமூக பண்பாட்டுத் தளங்களில் வெளிப்படும் வெறுப்பு இன்னொரு மனிதனை சகித்துக் கொள்ள முடியாதபடி, அவனை கொல்லும் அளவு வளர்ந்து நிற்கிறது. உணவில் தொடங்கி மரணம் வரை எல்லாவற்றையும் அரசியலாக்கி வெறுப்பைத் தூண்டுகிறார்கள். விஷம் தடவப்பட்ட வார்த்தைகளை பொதுவெளியில் பரவவிடுகிறார்கள். விளைவு, சகலரின் மனதிலும் வெறுப்பின் கொடுவிஷம் கலந்துவிடுகிறது.

மனிதர்கள்

எதையும் கடைசிவரை நேசிக்க மாட்டார்கள் என்பதற்கு பிலிப்பைன்ஸ் பழங்குடிகள் சொல்லும் கதைகளில் ஒன்று உதாரணமாகயிருக்கிறது.

பழைய நார் கூடை ஒன்றை பிரயோஜனம் இல்லை என்று ஒருவன் ஆற்றில் தூக்கி எறிகிறான். தண்ணீரில் மிதந்து செல்லும் அந்தக் கூடை, 'தான் ஒரு காலத்தில் எப்படி எல்லாம் பாதுகாக்கப்பட்டோம்? பயன்பட்டோம்? தன்னை எப்படி கழுவி துடைத்து சுத்தமாக வைத்திருந்தார்கள்? கடவுளுக்குப் படையலிடும் தானியத்தைக் கூட நாம்தானே சுமந்து சென்றோம். இன்று நம்மை தூக்கி எறிந்துவிட்டார்களே...' என நினைத்து வருந்தியது.

கரைஒதுங்கி சேறு அப்பிய நிலையில் கிடந்தபோது, மனிதர்கள் ஏன் இப்படி நடந்து கொண்டார்கள் என அதற்குப் புரியவேயில்லை

மனத் துயரைப் போக்கிக் கொள்ள தன்னுடைய ஆற்றாமையை ஒரு பூனையிடம் வெளிப்படுத்தியது. அதைக் கேட்ட பூனை சொன்னது: "உனக்கு மட்டுமில்லை, எனக்கும் அதே கதிதான். நான் குட்டியாக இருந்தபோது தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சினார்கள். கிண்ணத்தில் பால் ஊற்றி குடிக்க சொன்னார்கள். பெரியவன் ஆனதும் எலி பிடிப்பதற்காக என்னை வைத்துக் கொண்டார்கள். இப்போது முதுமை வந்துவிட்டது. என்னை ஒருவருக்கும் பிடிக்கவில்லை. அடித்து துரத்திவிட்டார்கள். இதுதான் மனித இயல்பு" என்றது.

இதைக் கேட்டும் கூடைக்கு மன அமைதி ஏற்படவில்லை. ஆற்றங்கரையோரம் மேய வந்த பசுவிடம், தன்னை இப்படி கைவிட்டுவிட்டார்களே எனப் புலம்பியது கூடை.

அதைக் கேட்ட பசு சொன்னது:

"நான் ஆண்டுக்கு ஒரு கன்றை ஈன்றேன். எனது எஜமான் வீட்டில் பால் பெருகி ஓடியது. அவர்கள் வெண்ணெய்யும் நெய்யும் விரும்பி சாப்பிட்டார்கள். என் கன்றுக்குக் கூட பால் இல்லாமல் அவர்களே பீச்சிக் கொண்டார்கள். எனக்கு மடி வற்றியது. கன்று ஈனுவதும் நின்று போனது. இப்போது என்னை அடிமாடாக விற்கப் போகிறார்கள். மனிதர்களுக்கு நன்மை செய்தால் மிஞ்சுவது அவமதிப்பு மட்டுமே" என்றது.

இதைக் கேட்டதும், நார்கூடைக்கு வருத்தம் அதிக மானது. "இந்த உலகத்தில் நல்லதுக்கு காலமே இல்லையா?" எனக் கேட்டது.

அதற்கு ஆறு சொன்னது: “இவ்வளவு ஏன் என்னையே எடுத்துக் கொள். குடிப்பதற்கும், விவசாயத்துக்கும் என்னைதான் நம்பி இருக்கிறார்கள். ஆனால், என் மீதுதான் குப்பையும் கழிவும் கொட்டுகிறார்கள். ஒருவேளை தண்ணீர் வற்றிப்போனால் என்னை மறந்துவிடுவார்கள். இதுதான் மனிதர்களின் நியதி!”

இதைக் கேட்ட நார்கூடை கோபமாக கேட்டது: “இந்த மனிதர்களுக்காக நாம் ஏன் உதவ வேண்டும்?”

“அது நம் இயல்பு. மனிதர்களுக்காக நம் இயல்பை ஏன் நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்?” எனக் கேட்டன ஆறும், பசுவும், பூனையும்.

நார் கூடை வருத்தத்துடன் சொல்லியது:

“அதுவும் சரி! ஆனால், நம் இயல்பை இந்த மனிதர்கள் என்றுதான் புரிந்துகொள்வார்களோ?”

இந்த வருத்தம் நார் கூடைக்குரியது மட்டுமில்லை. வயதானவர்கள். மாற்றுத்திறனாளிகள், சிறுவர்கள். பெண்கள். கிராமியக் கலைஞர்கள். விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் தன்னை எவரும் புரிந்துகொள்ளவில்லை, ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்... என்ற ஆற்றாமையுடன்தான் வாழுகிறார்கள்.

எழுத்தாளர் ஜனநேசன் கதைச்சொல்லி இதழில் வெளியான தனது கட்டுரை ஒன்றில் சுவாரஸ்யமான விஷயம் ஒன்றினை தந்திருக்கிறார்.

வெங்கடாத்திரி என்ற பெரியவர் சொன்ன விஷயம் இது:

‘குக்க தின்னவாடு குருநாதடு

நக தின்னவாடு நாராயணடு

பந்தி தின்னவாடு பரமசிவடு

ஏனிக தின்னவாடு என்த்தபெத்தவாடோ?'

- இது என்ன புதிர் என விளக்கம் கேட்டதற்கு, வெங்கடாத்திரி சொன்ன பதில்:

“குக்க தின்னவாடு குருநாதடுன்னா நாயின் குணத்தை வென்று செரித்தவன். குருநாதனாக இருக்க தகுதி பெற்றவன். நக்கதின்னவாடு நாராயணடு என்றால் நரியின் தந்திரகுணங்களை எல்லாம் வென்று சீரணித்தவன். ஸ்ரீமன் நாராயணனாவான். பந்தி தின்னவாடு பரமசிவடு என்றால் பன்றியின் உக்கிரகுணங்களை கெலித்து செரித்தவன். பரமசிவனைப் போல ஆற்றல் உள்ளவனாவான். இவர்களில் ஏனிக தின்னவாடு என்த்த பெத்தவாடோ.... என்றால் உருவத்தில் பெரிய, பழிவாங்கல் குணம் கொண்ட யானையின் குணத்தை ஜெயித்து ஏப்பம் விட்டவன். எவ்வளவு பெரிய மகானாக இருப்பானோ” என அர்த்தம் என்றார்.

மனிதர்கள் யானையைப் பழக்கி அதன் கால்களில் விலங்கு மாட்டி தெருவில் யாசகம் கேட்க வைப்பவர்கள். அவர்களுக்கு யானையும் ஒன்றுதான் எறும்பும் ஒன்றுதான். பழங்குடி மக்கள் தங்கள் தேவைக்கு மேல் சேர்த்து வைக்கத் தெரியாதவர்கள். அடுத்தவர் சொத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்ற தந்திரம் அறியாதவர். ஆகவே, அவர்கள் சொல்லும் கதைகளில் எளிமையான அறமே மேலோங்கியிருக்கும்.

பழங்குடி மக்களை அழித்து காலனியமயமாக்கியதன் பின்னுள்ள வரலாற்றை, உருகுவே நாட்டை சேர்ந்த எழுத்தாளர் எடுவர்டோ கலியானோ (Eduardo Galeano) 'மெமரி ஆஃப் ஃபயர்' (Memory of Fire Trilogy) என மூன்று தொகுதிகளாக சிறப்பாக எழுதியிருக்கிறார்.

அழிந்து ஒழிக்கபட்டப் பழங்குடி மக்களின் நினைவுகளாக இன்று மிச்சமிருப்பது அவர்களின் கதைகளும் பாடல்களும் ஓவியங்களும்தான். கலையும் இலக்கியமுமே எப்போதும் மனித வாழ்வின் மிச்சங்களாக எஞ்சி நிற்கின்றன என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.

இணையவாசல்: >பிலிப்பைன்ஸ் தேச வாய்மொழிக் கதைகளை வாசிக்க
http://www.gutenberg.org/ebooks/12814?msg=welcome_stranger

## பகுதி 13 - தேடிச் சேர்த்த பணம்!

எதற்காக வேலைக்குப் போகிறீர்கள் என்ற கேள்விக்கு, பெரும்பான்மையான மக்களின் பதில் 'பணம் சேர்க்க வேண்டும் இல்லையா' என்பதுதான். தனக்கு, தன் குடும்பத்துக்கு, அடுத்த தலைமுறைக்கு மட்டுமல்ல ஆறேழு தலைமுறைகளுக்கு.. என சொத்து சேர்த்து வைத்துக்கொள்ள முற்படாத மனிதர்களே இல்லை.

பணம் சேர்த்து வைக்காத மனிதன் உருப்படாத ஆளாகவே கருதப்படுகிறான். அவனது வாழ்க்கையை வீணில் கழிந்ததாக தூற்றுகிறது நடைமுறை உலகம். ஆனால், எல்லோருக்கும் பொருள் தேடுவதில் ஆர்வம் இருப்பது இல்லை. சிலர் புகழ் தேடுகிறார்கள். சிலர் ஞானத்தைத் தேடுகிறார்கள். சிலர் அதிகாரத்தைத் தேடுகிறார்கள். சிலர் அமைதியைத் தேடுகிறார்கள்.

பொருள் தேடும்போது நாம் சம்பாதிக்கும் பணம் தீதின்றி வருகிறதா என்ற கேள்வியைக் கேட்கிறது திருக்குறள். இது ஒவ்வொருவரும் மனசாட்சியோடு கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி.

'பணம் எப்படி வருகிறது எனப் பார்க்கக் கூடாது; எப்படி செலவிடப்படுகிறது என்று தான் பார்க்க வேண்டும்' என கற்றுத் தருகிறது இன்றைய உலகம். அறம், நீதி, நம்பிக்கை போன்றவை இன்று வேண்டாத விஷயங்களாகப் பார்க்கப்படுகின்றன.

யூதர்கள் பணம் சம்பாதிப்பதில் கெட்டிக்காரர்கள். 'யூதனைப் போல வணிகம் செய்' என்று சொல்வார்கள். பணம் சேர்ப்பதில் காட்டும் கவனத்தை, செலவழிப்பதிலும் காட்டுவார்கள். யூதர்களுக்கு இறை நம்பிக்கை மிக அதிகம். யூத வணிகர்கள் தங்களுக்கு என அடிப்படை அறத்தை கொண்டிருக்கிறார்கள். பொருளீட்டுவதில் காட்டும் ஈடுபாட்டுக்கு நிகராக

மெய்ஞானத்திலும் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டும் எப்படி ஒன்றுகலந்திருக்கிறது என்பது முரணான விஷயம். ஆனால், யூதர்கள் அப்படித்தான்.

எகிப்தில் அடிமைகளாக இருந்த யூதர்களை மோசஸ் விடுதலை செய்து, செங்கடலை கடந்து, கூட்டிச் சென்றதாக பைபிள் கூறுகின்றது. அறிவியல் தொழில்நுட்பம், கலை, இசை, வணிகம் என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் யூதர்களே முன்னணியில் இருக்கிறார்கள். உலக வர்த்தகத்தில் 70 சதவீதம் யூதர்களின் கைவசமே உள்ளன.

யூதர்களின் பாரம்பரிய மொழி ஹிப்ரு. பைபிள் ஹிப்ரு மொழியிலே எழுதப்பட்டிருக்கிறது. யூத குடும்பங்களில் இருக்கும் கர்ப்பிணிப் பெண்கள் தங்களுக்கு பிறக்கப் போகும் குழந்தை எதிர்காலத்தில் அறிவாளியாக திகழ வேண்டும் என்பதற்காக இசை கேட்பதும், கணிதப் பயிற்சிகள் மேற்கொள்வதும், ஆரோக்கியமான உணவை எடுத்துக் கொள்வதும், இலக்கியங்களை வாசிப்பதும் வழக்கம். யூத ஆண்கள் 'கிப்பா' என்ற சிறிய தலைக் குல்லாவை அணிவார்கள். அது அவர்களின் அடையாளம். எல்லா இடங்களிலும் கட்டாயம் இந்தக் குல்லாவை அணிந்து கொண்டிருக்க வேண்டும்.

யூதர்களின் கோயில் 'சினகாக்' எனப்படுகிறது. இந்தியாவில் கொச்சி, மும்பை, கொல்கத்தா மற்றும் புனேவில் யூத 'சினகாக்' உள்ளன. கொச்சியின் மட்டாஞ்சேரியில் உள்ள யூதர்களின் தெருவில் உள்ள 'சினகாக்'கில் மட்டுமே தற்போது வழிபாடு நடத்தப்படுகிறது. கொச்சியில் இருந்த யூதர்கள் 'பெனி இஸ்ரேல்' என அறியப்படுகிறார்கள். 1694-ல் கொச்சினில் வந்து குடியேறிய முதல் யூதர் டேவிட் இசக்கியல் ரஹபி என்கிறார்கள்.

கொச்சியை ஆண்ட அரசர் ராஜா ரவிவர்மா யூதர்களை ஆதரித்தார். இன்றும் யூத குடும்பங்களின் வாரிசுகளில் ஒருசிலர் அங்கே வசிக்கிறார்கள்.

சமீபத்தில் 'The Trial of Viviane Amsalem' என்றொரு பிரெஞ்சு திரைப்படத்தைப் பார்த்தேன். ஒரு யூத பெண் விவாகரத்து வாங்குவதற்காக எப்படி எல்லாம் நீதிமன்றத்தில் அலைக்கழிக்கப்படுகிறாள் என்பதை மிக அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது.

யூத வாய்மொழிக் கதைகளில் ஒன்று மாயப் பை ஒன்றைப் பற்றி பேசுகிறது.

சாலையில் மாயப் பை ஒன்றைக் கண்டெடுக்கிறான் ஒரு ஏழை. அந்த மாயப் பையில் ஒரே ஒரு தங்க நாணயம் இருக்கிறது. அதை வெளியே எடுக்கும்போது ஒரு குரல் கேட்கிறது:

"இது ஒரு மாயப் பை. இதில் உள்ள தங்க நாணயத்தை நீ எடுத்துக்கொண்டால் உடனே இன்னொரு புதிய நாணயம் உருவாகிவிடும். எத்தனை முறை நாணயத்தை எடுத்தாலும் நாணயங்கள் புதிதாக வந்து கொண்டேதான் இருக்கும். ஆனால், நாணயத்தை செலவழிக்க நினைத்தால் அந்த மாயப் பையை ஆற்றில் தூக்கி எறிந்துவிட வேண்டும். அந்த மாயப் பை ஒரு மீனாக உருமாறி மறையும். அதன் பிறகே நாணயத்தை செலவழிக்க முடியும். ஒருவேளை அதற்கு முன்பு செலவழிக்க முயன்றால் தங்க காசு சாம்பலாகிவிடும்" என்றது அந்தக் குரல்.

‘ச்சே... தங்கக் காசு கிடைத்தும் செலவழிக்க முடியவில்லையே...’ என்று அந்த ஏழைக்கு ஆதங்கம்.

அவன் அந்த மாயப் பையில் இருந்து வேண்டுமான அளவு தங்க நாணயங்களை எடுத்தெடுத்து சேகரிக்கத் தொடங்கினான். பெட்டி பெட்டியாக தங்க நாணயம் சேர்ந்த போதும் அந்த மாயப் பையை ஆற்றில் தூக்கி எறிய மனம் வரவில்லை. அதனால் அதில் இருந்து எடுக்கும் நாணயத்தை அவன் செலவழிக்கவே இல்லை. தினமும் வீதியில் யாசகம் செய்து, அதன் மூலம் கிடைக்கும் பணத்தில்தான் வாழ்ந்து வந்தான். தன் வாழ்நாளின் இறுதிவரை அவனால் அந்த மாயப் பையைத் தூக்கி எறிந்துவிட்டு, சேகரித்த நாணயங்கள் போதும் என நினைக்கவே முடியவில்லை.

முடிவில் ஒருநாள் அந்த மனிதன் இறந்து போனான். அவன் வீட்டை சோதித்த உறவினர்கள், ‘இவ்வளவு தங்க நாணயங்களை சேகரித்து வைத்தவன், எதற்காக பிச்சைக்காரனைப் போல வாழ்ந்தான்?’ என்பது புரியாமல் திகைத்தார்கள்.

இந்தக் கதையில் வரும் மனிதனின் நிலைதான் இன்றைய நவீன வாழ்க்கை முறையும். பணம்... பணம்... எனத் தேடி சேகரித்து, அதைக் கொண்டு உரியமுறையில் வாழத் தெரியாமல், நோயும் அவதியும் பற்றிக்கொள்ள அற்ப ஆயுளில் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்கள்.

சாலையில் பலர்கூடி வேடிக்கை பார்க்க, தனது வாய்க்குள் நீண்ட கத்தியை விட்டு விழுங்கி காட்டுபவன்... பணம் சம்பாதிக்கவே அச்செயலை செய்து காட்டுகிறான். பணம், மனிதர்களைத் துரத்துகிறது. பணம், மனித மனதை உருமாற்றுகிறது. பணம், துட்டு, காசு என்பது வெறும் சொற்கள் இல்லை. நம் வாழ்க்கைமுறையின் அடையாளம்.

பணத்தை அடைவதும் காப்பாற்றுவதும் எளிதில்லை. பணம், எப்போதும் பிரச்சினையைக் கூட்டிக் கொண்டுதான் வரும். பணம், வேகமாக கைவிட்டுப் போய்விடும். பிரச்சினைகள் எளிதில் போய்விடாது. இதுவே உலகம் காட்டும் உண்மை.

இணையவாசல்: > யூத வாய்மொழிக் கதைகளை வாசிக்க
http://www.rodneyohebsion.com/jewish-folktales.htm

## பகுதி 14 - நாற்காலிக்கு கொம்பு உண்டு!

‘அதிகாரத்தின் இயல்பே அலட்சியம் செய்வதுதானா ?’ என ஒரு நண்பர் கேட்டார்.

அவர் அரசாங்க அலுவலகத்தில் வேலை செய்பவர். உயர் அதிகாரிகளின் குண விசித்திரங்களைப் பற்றி அடிக்கடி புலம்பிக்கொண்டே இருப்பார். அரசாங்க அலுவலகத்தில் நடைபெறும் குளறுபடிகளைப் பற்றி அவர் சொல்லும்போது அதிர்ச்சியாகவே இருக்கும்.

அன்று அவர் கேட்ட கேள்வி எளிதானதாக இல்லை. நான் அவரிடம் ஒரு சம்பவத்தை விவரித்தேன்.

ஜார் மன்னர் ஆட்சிக் காலத்தில் ரஷ்யாவில் ஒரு ராணுவ அதிகாரி இருந்தார். அவர் யாரையும் மதிக்கவே மாட்டார். ஊழியர்களை அலட்சியமாக நடத்துவார். இந்த அதிகாரியின் கடுமையைக் கண்டு அனைவரும் பயந்தார்கள். தன்னுடைய எல்லையற்ற அதிகாரத்தை நினைத்து, அந்த ராணுவ அதிகாரி பெருமை கொண்டிருந்தார்.

இந்த அதிகாரிக்கு காரின் என்ற பியூன் மட்டுமே விருப்பமான நபராக இருந்தார். காரினை அலுவலகத்தில் எவருக்குமே பிடிக்காது.

காரின் ஒய்வுபெறும் நாள் வந்தது. அதற்கான பிரிவு உபச்சார விருந்தில் கலந்துகொள்ளும்படி அலுவலக நண்பர்களை அழைத்தார் காரின். எவருமே வரவில்லை. ராணுவ அதிகாரியும் கூட வரவில்லை. கடைசியாக ஒரே ஒரு நண்பர் மட்டும் வந்திருந்தார்.

அவரும் கோபத்துடன் சொன்னார்: “நீ அந்த கேடு கெட்ட ராணுவ அதிகாரியின் கையாள். சரியான ஒட்டுண்ணி. உன்னோடு படித்தவன் என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமே நான் வந்திருக்கிறேன்” என்றார்.

அதைக் கேட்ட காரின் சொன்னார்: “நீ சொல்வது உண்மை தான். நான் ஒரு கடைநிலை ஊழியன். என்னால் அப்படித்தான் நடந்துகொள்ள முடியும். அதிகாரி மட்டும் முட்டாள் இல்லை; நீங்களும் முட்டாள்தான். நீங்கள் அதிகாரத்தின் இயல்பைப் புரிந்துகொள்ளவே இல்லை. அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு அவர்கள் எதைச் சொன்னாலும் சரி என தலையாட்ட ஓர் ஆள் வேண்டும். சொன்ன விஷயத்தை நாம் செய்ய வேண்டியதுகூட அவசியம் இல்லை.

முகஸ்துதிதான் அதிகாரிகளின் பலவீனம். இது அந்த நாற்காலியின் இயல்பு. அதில் யார் வந்து அமர்ந்தாலும், உடனே அவர்களுக்கு கொம்பு முளைத்துவிடும். அதிகாரி தன்னை ராஜாவாகவே கற்பனை செய்துகொண்டுவிடுவான். அகம்பாவமாக நடந்துகொள்வான். ஆனால், ஒன்றை மறந்துவிடாதே. வாளால் வெட்டி வீழ்த்தப்பட்டவர்களை விடவும் புகழ்ச்சியால் வீழ்த்தப்பட்டவர்களே அதிகம். எளிமை, நேர்மை, உண்மை இந்த மூன்றும் கொண்டவனே நல்ல அதிகாரி. அவர்கள் எப்போதும் புகழ்வெளிச்சத்தை விரும்புவதே இல்லை” என்றார்.

இந்த நிகழ்வைக் கேட்ட நண்பர் சலிப்போடு சொன்னார்: “அப்படி ஒன்றிரண்டு பேர்தானே நல்ல அதிகாரிகளாக இருக்கிறார்கள். மற்றவர்கள் சுயலாபத்துக்காக அதிகாரத்தை உபயோகிப்பவர்கள்தானே. அவர்களுடன் எப்படி வேலை செய்வது? அதுதான் நம் காலத்தின் சாபக்கேடு” என்றார்.

நண்பர் தனது ஆற்றாமையுடன் விடைபெற்றுப் போனார். அன்றிரவு வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் ‘சந்தால்’ பழங்குடிகளின் கதை ஒன்று இருந்தது. அது நாங்கள் பேசிக்கொண்டிருந்த விஷயத்தின் கதை வடிவமாகவே இருந்தது.

ஆச்சரியத்துடன் நண்பரை தொலைபேசியில் அழைத்துச் சொன்னேன்: “ஒரு நாள் உயரமான கோட்டை சுவர் ஒன்றின் மீது ஓர் ஆடு ஏறி நின்றுகொண்டது. அந்த வழியில் ஒரு ஓநாய்

போய்க் கொண்டிருந்தது. உயரத்தில் இருந்து ஓநாயைப் பார்த்த ஆடு இளக்காரமாக, 'ஏய் இங்கே வா…' எனக் கூப்பிட்டது.

ஓநாய் நிமிர்ந்து பார்த்து, தொலைவில் தன்னைப் பார்த்தவுடன் பயந்தோடும் ஆடு, இன்று அலட்சியமாகக் கூப்பிடுகிறதே என திகைப்புடன் யோசித்தது. ஓநாய் தன்னை முறைப்பதை கண்ட ஆடு சொன்னது: 'என்ன முறைக்கிறே? அந்தச் செடியில் இருந்து நாலு இலை பறிச்சிட்டு வா. எனக்குப் பசியா இருக்கு!'

ஓநாய் அதைக் கண்டுகொள்ளாமல் நடந்தது. அதைக் கண்ட ஆடு கோபத்துடன் சொன்னது: 'ஏய்… நான் சொல்றது காதில் கேட்கலையா? நான் கீழே இறங்கி வந்தா, என்ன நடக்கும் தெரியுமா?'

அதைக் கேட்ட ஓநாய் சொன்னது: 'வந்து பார் தெரியும். நீ ஏறி நிற்கிற உயரம்தான் உன்னை இப்படி பேச வைக்குது. இறங்கி வா, அப்போ நீ யார் என்ற உண்மை தெரியும்' என்றது'' என்றேன்.

எளிமையான கதை. உயரத்துக்குப் போகப் போக ஒருவரின் இயல்பு எப்படி மாறிவிடுகிறது என்பதற்கு அடையாம்தான் இந்தக் கதை.

அதிகாரிகள் எல்லோரும் ஆமாம் சாமிகள் இல்லை. சிலர் அதிகாரத்தை மக்களுக்கு சேவையாற்றும் அறமாகக் கருதுகிறார்கள். எவ்விதமாகவும் வளைந்து கொடுக்காமல் நேர்மையாகப் பணியாற்றுகிறார்கள். உண்மையை நிலைநிறுத்த தன்னையே பலி கொடுத்துக் கொண்டவர்களும் உண்டு.

'எ மேன் ஃபார் ஆல் சீசன்ஸ்' (A Man for All Seasons) என்ற திரைப்படம் 1966-ல் வெளியானது. பிரெட் சின்மேன் தயாரித்து இயக்கியது. இங்கிலாந்து அரசரான எட்டாம் ஹென்றிக்கு வாரிசு இல்லாமல் போகவே அவர் தனது பட்டத்து அரசியான கேதரீனை விவாகரத்து செய்துவிட்டு, ஆனி போல்யன் என்ற பெண்ணை இரண்டாவதாகத் திருமணம் செய்துகொள்ள விரும்பினார்.

அதற்கு திருச்சபை அனுமதி அளிக்கவில்லை. கோபம் அடைந்த மன்னர் திருச்சபையின் அதிகாரங்களை ரத்து செய்ததோடு, தானே 'கிறிஸ்துவ சபையின் முழு அதிகாரம் கொண்டவன்' என்று அறிவித்துவிட்டு, அதுவரை இருந்த கார்டினலின் அதிகாரத்தையும் பறித்துக் கொண்டார்.

எட்டாம் ஹென்றியின் வழிகாட்டியாகவும் மந்திரியாகவும் இருந்த தாமஸ் மோர் அந்தச் செயலை ஆதரிக்கவில்லை. வெளிப்படையாக எதிர்த்தார். அதன் காரணமாக இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடு உருவானது. எட்டாம் ஹென்றி எல்லா எதிர்ப்புகளையும் மீறி ஆனியை இரண்டாம் திருமணம் செய்துகொண்டார்.

தாமஸ் மோர் அதைக் கண்டிக்கவே, அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. மன்னரே தவறு செய்தால்கூட அதைக் கண்டிக்க வேண்டும் என்ற மன உறுதியோடு செயல்பட்ட தாமஸ் மோரின் வாழ்வை இந்தப் படம் மிகச் சிறப்பாக விவரிக்கிறது. ஆறு ஆஸ்கர் விருதுகளைப் பெற்றுள்ள இந்தத் திரைப்படத்தை அனைவரும் அவசியம் பார்க்க வேண்டும்.

பழங்குடி மக்கள் தங்கள் எதிர்ப்பு உணர்வை, சுதந்திர மனப் போக்கினை வெளிப்படுத்தவே கதைகள் மற்றும் பாடல்களைப் புனைந்தனர். 'கொடிய மிருகத்தை அம்பால் வீழ்த்த வேண்டும்; கொடிய மனிதனை கதையால் வீழ்த்த வேண்டும்' என பழங்குடியினப் பாடல் கூறுகிறது. கதைகளும் ஆயுதம்தான். அதை ஆயுமாக்க வேண்டியது கதை சொல்லியின் வேலை!

இணையவாசல்: சிறுவர்களுக்கான வேடிக்கை கதைகளை வாசிக்க
http://www.kidsgen.com/stories/folk_tales/

## பகுதி 15 - யாருக்கானது சட்டம்!

பல்வேறு துறைகள் சார்ந்து புதிது புதிதாக சட்டங்கள் இயற்றப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இந்தச் சட்டங்களின் பயன் என்ன? அதை எப்படி பயன்படுத்துவது என்பதைப் பற்றி மக்கள் அறிந்திருக்கவே இல்லை. உண்மையில் இந்தச் சட்டங்களில் பலவும் ஏட்டளவில் மட்டுமே உள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்தச் செய்வது மிகவும் கடினம்.

நீதியரசர் சந்துரு தனது உயர் நீதிமன்ற பணிக் காலத்தில் வழங்கிய தீர்ப்புகளைத் தொகுத்து, 'அம்பேத்கர் ஒளியில் எனது தீர்ப்புகள்' என்ற நூலாக வெளியிட்டிருக்கிறார். அதில், மிக முக்கிய சமூகப் பிரச்சினை களாக இருந்த வழக்குகளுக்கு அவர் எவ்வாறு தீர்ப்பு வழங்கினார் என்பதை சிறப்பாக விளக்குகிறார்.

'அடித்தட்டு மக்களின் மேம்பாட்டுக்காக இவ்வளவு சட்டங்கள் இருக்கின்றன. அதை செயல்படுத்த வேண்டியது நமது கடமை!' என நீதியரசர் அழுத்தமாக குறிப்பிடுகிறார்.

பழங்குடி மக்களுக்கு நேர்ந்த துயரங்களுக்கு நாகரீகம் அடைந்த நாமே முக்கிய காரணம். பழங்குடி மக்களுக்குள் சமூகத் தடைகளை உருவாக்கி, புரியாத சட்டங்களின் மூலம் அவர்களின் வாழ்வுரிமையைப் பறித்து வருகிறோம்.

தாதுக் கொள்ளைக்காக காடு சூறையாடப்படுகிறது. வனவாசி கள் வெளியேற்றப்படுகிறார்கள். தங்கள் அடையாளங்களை, உரிமைகளை இழந்த மக்கள் குழுவாக இணைந்து போராடுகிறார்கள். இப்பிரச்சினை வடகிழக்கு மாநிலங்களில் இன்று வளர்ந்தோங்கி நிற்கிறது.

'நீதி என்பது வெறும்கால் கொண்டவனை கடிக்கும் பாம்பு' எனச் சொல்கிறார் எழுத்தாளர் எடுவார்டோ கலியானோ. அது உண்மை. பணம் படைத்தவனுக்கு சட்டம் வளையவே செய்கிறது. வசதியானவன் செய்யும் குற்றங்கள் கண்டுகொள்ளப்படுவதே இல்லை.

ஆப்பிரிக்க பழங்கதை ஒன்றிருக்கிறது. அதில் பாம்புகள் ஒன்றுசேர்ந்து புதிதாக சட்டம் ஒன்றை உருவாக்கு கின்றன. அதன்படி 'இனிமேல் எலிகளின் வளைக்குள் முன்அனுமதியில் லாமல் போகக் கூடாது. மீறிப் போவது குற்றம். அப்படி போகிற பாம்பு தண்டிக்கப்படும்' என அறிவிக்கிறார்கள்.

எலிகளின் நலனுக்காக தாங்கள் கொண்டுவந்துள்ள இந்தச் சட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல எலிகளைத் தேடி ஒரு பாம்புச் சென்றது.

பாம்பை கண்டதும் ஒரு எலிகூட வெளியே வரவில்லை. ஒரு எலி வளையின் முன்பாக பாம்பு நின்றுகொண்டு “நண்பனே... என்னைக் கண்டு பயப்படாதே! உன் அனுமதியின்றி உன் வீட்டுக்குள் நான் வர மாட்டேன். அப்படி வருவது குற்றம் என ஒரு புதிய சட்டம் இயற்றியிருக்கிறோம். அதை உன்னிடம் தெரிவிக்கவே வந்தேன்” என்றது.

எலிக்கு ஒன்றுமே புரியவில்லை. அது பதுங்கிக் கொண்டு வெளியே வரவே இல்லை.

‘தான் சொன்ன சட்டம் எலிக்குப் புரியவில்லையோ...’ என நினைத்த பாம்பு, எலி வளைக்குள் போய் அங்கிருந்த எலியைப் பிடித்து தின்றுவிட்டுச் சொன்னது:

“இப்படிச் செய்வது தவறு என சட்டம் இயற்றியிருக்கிறோம். புரிகிறதா?”

பாம்பின் செயலைக் கண்ட எலிக் குஞ்சுகள் பயந்து ஒடுங்கியிருந்தன.

பாம்பு சொன்னது: “என் மீது இப்போது நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். நீதி மன்றத்துக்குச் செல்லுங்கள்!”

இதைக் கேட்ட எலிக் குஞ்சுகளில் ஒன்று கூட வாயைத் திறக்கவில்லை.

“முட்டாள் எலிக்குஞ்சுகளே! உங்களுக்கு எப்படித்தான் சட்டத்தைப் புரிய வைப்பது...” என்று சொல்லியபடியே ஒவ்வொரு எலியாகப் பிடித்துத் தின்னத் தொடங்கியது.

கடைசி எலிக் குஞ்சு சொன்னது: “மன்னிக்கவும்! இந்தச் சட்டம் எதற்காக? இதனால் ஒரு பயனும் இல்லை. சட்டத்தை உண்டாக்கியது நீங்கள். நீதி விசாரணை செய்யப்போவதும் நீங்கள். உங்களை எதிர்த்து நாங்கள் எப்படி வழக்காட முடியும்? எங்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்?

“அடேய் முட்டாள் எலிக்குஞ்சே! சட்டத்தைதானே உங்களுக்கு அறிமுகம் செய்து காட்டுகிறேன். இது கூடவா புரியவில்லை. இப்படி சட்டத்தை மதிக்காமல் இருந்தால் உன்னை தண்டிக்கத்தானே வேண்டும்?” என்று சொல்லியபடி அந்த எலிக் குஞ்சையும் பிடித்துத் தின்றுவிட்டது.

பாம்புகள் எலியின் நலனுக்காக சட்டம் போட்டால் இப்படித்தான் இருக்கும்!

பழங்குடி சமூகத்தில் அதிக சட்டங்கள் இல்லை. ஆனால், கறாரான நீதியிருந்தது. அவர்கள் இயற்கையோடு வாழ்ந்தபோதும் இயற்கையைச் சூறையாடவில்லை. சுய லாபத்துக்காக விற்று பணமாக்கவில்லை. ஆனால், வெளியில் இருந்த வந்த மனிதர்களே வனவளத்தைக் கொள்ளையடித்தார்கள். அதோடு பழங்குடி மக்களின் நலனுக்காக என புதிய வரிகளையும் சட்டங்களையும் அறிமுகம் செய்தார்கள்

பழங்குடி மக்கள் இலைஆடைகளை அணியக் கூடாது என ஆங்கில அதிகாரிகள் ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள். அதன்படி அவர்களின் இலை ஆடைகள் பறிக்கபட்டு தீவைத்து எரிக்கப்பட்டன. தைக்கப்பட்ட துணி ஆடைகளை அவர்களுக்கு மாற்றாக தந்தார்கள். அந்த அதிர்ச்சியை 'ஜுயாங்' பழங்குடி மக்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நாங்கள் இயற்கையை ஆடையாக உடுத்திக் கொள்கிறோம். அதில் என்ன தவறு என போர்க் குரல் எழுப்பினார்கள். அந்த எழுச்சி அதிகாரத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டது.

பழங்குடி சமூகத்தில் பெண்களுக்கு உயர்ந்த இடம் இருந்தது. அவர்கள் சுதந்திரமாக செயல்படக்கூடியவர்கள். கடின உழைப்பாளிகள். உடலும் மனமும் முதிர்ச்சி அடைந்த பிறகே திருமணம் செய்துகொள்வார்கள். திருமணத்துக்கு முன்பு பாலுறவு அனுமதிக்கபட்டது. தோல்வியுற்ற திருமணத்தில் இருந்து மணவிலக்கு பெற்றுக் கொள்ளமுடியும். கணவன் இறந்துவிட்டால் மறுமணம் செய்துகொள்ளலாம். பல இனங்களில் பெண்களுக்கு சொத்துரிமை உண்டு. எப்போது காட்டுக்குள் வாகனங்களின் ஒலி கேட்கத் தொடங்கியேதோ, அதுதான் பழங்குடி மக்களின் சாவு மணியானது. காலனிய கொள்கைகள் காரணமாகவே பழங்குடி மக்களின் தனித்துவமிக்க பண்பாடு அழித்து ஒழிக்கபட்டது.

பழங்குடி இனத்தின் உணவளிக்கும் தெய்வமான 'அன்னதேவ்' காட்டைவிட்டுத் தப்பியோடி ரயிலேறி மும்பை நகரத்தில் ஒளிந்துகொண்டுவிட்டது. வற்றாத உணவு தரும் தெய்வம் வசிப்பதால்தான் நகரவாசிகள் உண்டு கொழுக்கிறார்கள். ஊதிப் பெருக்கிறார்கள். தங்களை கடவுளும் கைவிட்டுப் போக, காட்டில் தாங்கள் அநாதை களைப் போல துரத்தப்படுவதாகவே பழங்குடிகள் கூறுகிறார்கள்.

பழங்குடி மக்களை மிருகக் காட்சிச் சாலையில் உள்ள மிருகங்களைப் போல வேடிக்கை பார்ப்பதை நாம் கைவிட வேண்டும். பழங்குடிகளுக்கான பொருளாதாரத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். நாம் அனைவருமே இயற்கையின் பகுதிகள்தான். இயற்கைக்கு எதிராக இழைக்கப்படும் எந்த ஒரு குற்றமும் மானுடத்துக்கு எதிரான குற்றமே. ஆகவே, பழங்குடிகள் காட்டில் இருந்து வெளியேற்றப்படும்போது அதற்கான எதிர் குரலை ஒலிக்க வேண்டியது நமது சமூக கடமை!

இணையவாசல்: ஆப்பிரிக்க நாட்டுபுறக் கதைகளை வாசிக்க
http://africa.mrdonn.org/fables.html

## பகுதி 16 - கவலையின் குரல்!

என்னோடு சேர்ந்து என் கவலைகளுக்கும் வயதாகிறது என்ற எஹுதா அமிக்ஹாய்யின் (Yehuda Amichai) கவிதை வரி மனதில் சில நாட்களாகவே ஓடிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு எளிமையாக வாழ்க்கையின் உண்மையை எழுதியிருக் கிறார். கவிஞன், உலகின் துயரங்களை ஏற்றுக்கொள்கிறவன். தனது சொற்களால் மனதின் காயங்களை சொஸ்தப்படுத்துகிறவன். இஸ்ரேலைச் சேர்ந்த அமிக்ஹாய் நம் காலத்தின் மகத்தான கவி. 'கவிதை எழுதுவது என்பது மலையுடன் போரிடும் புல்டோஸர் இயந்திரத்தைப் போன்றது' என்கிறது அமிக்ஹாயின் இன்னொரு வரி.

கவலைகளின் துறைமுகமாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அமிக்ஹாய் அழகாக சுட்டிக் காட்டுகிறார். நம் கவலைகள் குடும்பத்தால், சமூகத்தால், வரலாற்றால் அளிக்கப்பட்டவை. உங்களின் முதல் கவலை எது? எப்போது உருவானது? கவலையை எதற்காக உங்கள் மனதில் அனுமதித்தீர்கள்? வீட்டின் இருண்ட மூலையைப் போல மனதின் ஒரு மூலை கவலைகளுக்கானதுதான் போலும். மனிதர்களைப் போலவே கவலைகளும் நிறையப் பிள்ளைகள் பெற்று, தன்னை பெருக்கிக் கொண்டுவிடுகிறது.

கவலைகள் சேரச் சேர மனம் கனமாகத் தொடங்குகிறது. ஒரு கவலை நீங்கும்போது புதிதாக இன்னொரு கவலை வந்து சேர்ந்துவிடுகிறது. இந்தத் தலைமுறையின் சாபம் எல்.கே.ஜி குழந்தை கூட கவலைப்படுவதுதான். 'எப்போது பள்ளி விடுமுறை விடப்படும்? ஹோம்வொர்க் முடிக்காவிட்டால் என்ன தண்டனை கிடைக்கும்' என கவலை கொள்கிறது.

கவலைகள்தான் பயமாகிறது. பயம் தாழ்வுணர்ச்சியை உருவாக்குகிறது. தாழ்வுணர்ச்சி நம்மை இயங்கவிடாமல் தடுத்துவிடுகிறது.

சில கவலைகளை வீடு நமக்கு பரிசாக அளிக்கிறது. அப்படி தந்தையால் அளிக்கப்பட்ட கவலைகளை, பிள்ளைகள் வாழ்நாள் எல்லாம் சுமந்து அலைய வேண்டியிருக்கிறது. ஆண்களை விட பெண்கள் அதிகம் கவலை கொண்டவர்கள். பிரார்த்தனைகளின் வழியே அவற்றை இறக்கிவைக்கவும் கடந்து போகவும் அவர்கள் பழகிக் கொள்கிறார்கள்.

'பயணத்திலும் கூட சூட்கேஸ் நிறைய எனது கவலைகளை தான் எடுத்துக் கொண்டு போகிறேன்' என்கிறார் எழுத்தாளர் பில் மோரிசன். இயற்கை கவலை கொள்வதில்லை. இலைகளை உதிர்க்கும் மரம் 'இது பருவகால மாற்றம்... மீண்டும் இலைகள் துளிர்க்கும் என காத்திருக்கிறது. இழந்துவிட்ட இலைகளுக்காக ஒருபோதும் கவலைகொள்வதில்லை பருவ காலங்கள்!

நாகரீகம் அடைந்த மனிதர்களைவிட கானகத்தில் வாழும் பழங்குடிகளிடம் கவலைகள் குறைவு. அவர்கள் கவலைகளைப் பொதுவிஷயமாகக் கருதுகிறார்கள். மனம்விட்டுப் பேசி தீர்க்க முயற்சிக்கிறார்கள். தங்கள் கவலைகளை அவர்கள் இன்னொருவரிடம் திணிப்பதில்லை. 'ஒரு கைவிரல்களின் எண்ணிக்கைக்குள் கவலைகள் அடங்கிவிட வேண்டும்...' என்கிறது பழங்குடி மரபு.

சீனாவில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு கவலை என்றால் என்னவென்றே தெரியாது. சந்தோஷமாக வாழ்ந்த அவன் ஒருநாள் தனது சபையைக் கூட்டி, "கவலை என்றால் என்ன? கவலை எப்படியிருக்கும்? என்ன செய்யும்...?" எனக் கேட்டான்.

"இது தேவையில்லாத விஷயம் மன்னரே! அதைப் பற்றியெல்லாம் நாம் அறிந்துகொள்ள தேவையில்லை" என்றார் அமைச்சர்.

மன்னர் விடாப்பிடியாக ' 'எனக்குக் கவலை யைப் பற்றி உடனடியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். யாராவது விளக்கிச் சொல்லுங் கள்..." என்றார்.

ஆளாளுக்கு கவலையைப் பற்றி சொன்னார்கள். “இவ்வளவுதானா கவலை? இது வெறும் பயம். இதற்குப் போயா நீங்கள் எல்லோரும் ஒரேயடியாக வருந்துகிறீர்கள்?” என மன்னர் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்தார்.

‘கவலை என்பதை மன்னருக்கு எப்படி உணர்த்துவது?’ என எவருக்கும் தெரியவில்லை. அப்போது அரண்மனை ஓவியன் “மன்னரே நான் கவலையை ஓவியமாக வரைந்திருக்கிறேன். பாருங்கள்…” எனக் காட்டினான்.

அதை வாங்கிப் பார்த்த மன்னன் திகைத்துப் போனார். காரணம், அதில் அவரது உருவம் மெலிந்து, நரைத்து, முகமெல்லாம் சுருக்கம் விழுந்து, ஒரு நோயாளியைப் போல் இருந்தது. அவர் ஆத்திரத்தில் “முதுமையில் நான் இப்படி ஆகிவிடுவேனா..?” எனக் கேட்டார்.

அதற்கு ஓவியன் “முதுமையில் நீங்கள் இப்படி ஆவதற்கும் வாய்ப்பு இருக்கிறது” என்று பதில் சொன்னான்.

“இதை எப்படி தடுப்பது? வாழ்நாள் முழுவதும் இதே இளமையுடன் சந்தோஷத்துடன் எப்படி வாழ்வது?” எனக் கேட்டார் மன்னர்.

ஒருவரிடமும் பதில் இல்லை. அன்றிரவு மன்னரால் உறங்க முடியவில்லை. மறுநாள் சபைக்கு வந்தபோது அமைச்சர் சொன்னார்: “மன்னா உங்கள் முகத்தில் கவலை படர்ந்திருக் கிறது. மனித மனதில் ஒரேயொரு கவலை புகுந்துவிட்டால் போதும், அது பெருகி வளர்ந்துவிடும். இனி நீங்கள் நினைத்தாலும் கவலையில் இருந்து விடுபடவே முடியாது!”

மன்னர் வருத்தமான குரலில் கேட்டார்: “முதுமையில் நான் மெலிந்து நோயாளி போலாகிவிடுவேனா..?”

“இது உங்கள் குரல் இல்லை. கவலையின் குரல். இனி, உங்களால் கவலையில் இருந்து விடுபடவே முடியாது!” என்றார் அமைச்சர்.

துறவிகளும் ஞானிகளும்கூட கவலையில் இருந்து தப்பிக்கவே முடியாது. அவரவருக்கு அவரவர் கவலை. அதன் சுமை ஆளுக்கு ஆள் வேறுபடக்கூடியது.

கவலைகளின் சுமை நம்மை அழுத்தும்போது அதில் இருந்து விடுபடவும், புரிந்துகொள்ளவும், தீர்த்துக்கொள்ளவும் கலை இலக்கியங்கள் உதவி செய்கின்றன. குறிப்பாக கதை, கவிதைகளின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்று கவலையில் இருந்து மனிதனை விடுவிப்பதாகும்.

‘தி ரெட் பலூன்’ என்ற பிரெஞ்சு மொழி படம் திரைக் கவிதை போல உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆல்பர்ட் லமொரீஸ் இயக் கிய இப்படம் இணையத்தில் காணக் கிடைக்கிறது. அதை ஒருமுறை பாருங்கள். எவ்வளவு கவலையாக இருந்தாலும் அதில் இருந்து விடுபட்டு புத்துணர்வு அடைவீர்கள்.

பள்ளிச் சிறுவன் ஒருவன் சாலையோரக் கம்பத்தில் சிவப்பு நிற பலூன் ஒன்று சிக்கி ஆடிக்கொண்டிருப்பதை பார்க்கிறான். கம்பத்தில் ஏறி அந்த பலூனை எடுக்கிறான், பலூனுடன்

விளையாடியபடியே தெருக்களில் நடந்துசெல்கிறான். அவனது அம்மா பலூனை வீட்டுக்குள் கொண்டுவரக்கூடாது என வெளியே வீசி ஜன்னலை மூடிவிடுகிறாள். ஆனால், அந்த பலூன் பறந்து போகாமல் ஜன்னல் அருகிலேயே சுற்றிக்கொண்டிருக்கிறது.

சிறிது நேரத்துக்குப் பின்பு சிறுவன் ஜன்னலைத் திறந்த போது அதே பலூன் அவன் கைகளில் வந்துசேருகிறது. மறுநாள் பள்ளிக்கு பலூனைக் கொண்டுபோகிறான். பலூன் வகுப்பறைக்குள் நுழைந்துவிடுகிறது. அதைப் பிடிக்க மற்ற சிறுவர்களும் ஆசிரியர்களும் முயற்சிக்கிறார்கள். அதனால் ஒரே கூச்சல், குழப்பம்.

மெல்ல பலூனுக்கும் சிறுவனுக்கும் இடையே நெருக்க மான உறவு ஏற்படுகிறது. இது சகமாணவர்களிடையே பொறா மையை ஏற்படுத்துகிறது. அவனிடம் இருந்து பலூனைக் பிடுங்கி உடைக்கிறார்கள். காற்றுபோன பலூன் வெறும் ரப்பர் துண்டாகக் கீழே விழுகிறது. சிறுவன் கண் கலங்குகிறான்

மறுநிமிஷம், அந்த ஊரில் இருந்த அத்தனை பலூன்களும் தானாகவே வானில் பறக்கத் தொடங்குகின்றன. தெருவில் பலூன் விற்றுக்கொண்டிருப்பவர் கைகளில் இருக்கும் பலூன்கள்கூட தானே விடுபட்டுப் பறக்கத் தொடங்குகின்றன. வானம் முழுவதும் பலூன்களின் அணிவகுப்பு!

தனது சிவப்பு பலூனை இழந்து அழுதுகொண்டிருக்கும் சிறுவனின் முன்னால் அத்தனை பலூன்களும் போய் இறங்கு கின்றன. சிறுவன் முகத்தில் சந்தோஷம் பொங்குகிறது. அந்த பலூன்களின் கயிறுகளைப் ஒன்றாக்கி கையில் பிடிக்கிறான். அத்தனை பலூன்களும் அவனைத் தூக்கிக்கொண்டு வானத்தில் பறக்கின்றன. பலூன்களோடு சிறுவன் வானில் பறந்து செல்வதுடன் படம் நிறைவடைகிறது.

இப்படம் மகத்தான வாழ்க்கைப் பாடத்தை நமக்கு போதிக்கிறது. உயிரற்ற பொருட்கள் கூட நாம் நேசிப்பதால் உயிருள்ளதாகிவிடும். எது நம்மை சந்தோஷப்படுத்துகிறதோ, அது பொறாமையையும் உருவாக்கும். ஒருவர் சந்தோஷமே மற்றவரின் பொறாமைக்கான காரணம். ஆனால், 'ஒன்றை பறிகொடுத்தால் அதற்கு ஓராயிரம் ஈடு கிடைக்கும்...' என்ற நம்பிக்கையைப் படத்தின் இறுதிக் காட்சி உருவாக்குகிறது.

நம்பிக்கை தருவதும், இப்படி சந்தோஷத்தை பற்றிக்கொண்டு பறக்க வைப்பதும்தானே கதைகளின் வேலை. காலம் காலமாக அப்பணி சிறப்பாக தொடரவே செய்கிறது!

இணையவாசல்: எத்தியோப்பிய கதைகளை அறிந்துகொள்ள
http://www.ethiopianfolktales.com/

## பகுதி 17 - மழையை வரவழைப்பவர்கள்!

நான் சிறுவனாக இருந்தபோது எப்போது மழை வரும் எனக் காத்திருப்பேன். மழை பெய்யத் தொடங்கியதும் காகிதக் கப்பல் செய்து மிதக்கவிடுவேன். தண்ணீர்த் துளிகளைச் சுமந்து

செல்லும் அந்தக் கப்பல் தடுமாறி நகர்ந்து மூழ்கிப் போய்விடும். மழை வெறித்த பிறகு, நனைந்து கிடக்கும் காகிதக் கப்பலைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கும்.

காகிதக் கப்பல் செய்வதில் சிறார்களுக்கு இடையே போட்டி உருவாகும். காகிதத்தில் பெரிய கப்பலை செய்துவரும் சிறுவன், அதுதான் வேகமாக போகும் என நம்புவான். ஆனால், சிறிய கப்பலை பெரிய கப்பலால் முந்தமுடியாது என்பதே மழையின் விதி.

தன் பெயர் எழுதிய காகிதக் கப்பலை நீரோடையில் விடும் அனுபவம் பற்றி மகாகவி தாகூர் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். சிறந்த கவிதை அது. இன்றைக்கு மழை பெய்யும் நாட்களில் சிறுவர்கள் எவரும் காகிதக் கப்பல் செய்து தரும்படி கேட்பதில்லை. அவர்களும் கப்பல் செய்து தண்ணீரில் விடுவதில்லை. “மழை பெய்கிறது… ஜன்னலை மூடி வையுங்கள்!” என அவர்களே முதற்குரல் தருகிறார்கள்.

மழையை வேடிக்கை பார்ப்பது மனிதனின் ஆதிகுணம். பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதர்கள் மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னமும் வியப்பு தீரவே இல்லை!

ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடம் ‘ரெய்ன் மேக்கர்’ எனப்படும் மழையை வரவழைப்பவர் பற்றிய நம்பிக்கை இருக்கிறது. வானத்துடன் பேசி மழையை வரவழைக்கும் இதைப் போன்ற மாய மனிதர்கள் பல்வேறு பழங்குடிகளிலும் இருக்கிறார்கள். இவர்கள் மழை பெய்ய வைப்பதற்காக பணம் வாங்குவதில்லை. அதை ஒரு சேவையாக, கடமையாகவே செய்கிறார்கள்.

மழையற்ற காலத்தில் இவர்களை அழைத்துவந்து பூஜை செய்தால் மழையை வரவழைத்துவிடுவார்கள் என பழங்குடிகள் நம்புகிறார்கள். “மழையை வரவழைக்கும் அந்த மனிதன் அரூபமாக உள்ள தனது மூதாதையர்களை அழைத்து, வானத்தில் இருந்து மழையை வரவழைக்கிறான்” என்கிறார்கள்.

அவன் நடந்து போகும்போது தலைக்கு மேலே மழை மேகங் கள் கூடவே போகுமாம். எந்த இடத்தில் நின்று “மழை பெய்…” என்று அவன் சொன்னாலும் உடனே மழை பெய்து விடுமாம்.

“அவன் மாய மந்திரம் மூலம் இதை செய்கிறான் எனச் சொன்னாலும், அதன் பின்னே ஒரு உண்மை ஒளிந்திருக்கிறது. மழை வரவழைப்பவன் சீதோஷ்ண நிலை மாற்றங்களைப் பற்றி துல்லியமாக அறிந்து வைத்திருக்கிறான். என்ன செய்தால் மேகங்களை ஒன்றுதிரட்ட முடியும் என அறிந்துள்ள ரகசியமே இதற்குக் காரணம்…” என்கிறார் மானுடவியலாளர் எரிக் வில்லியம்.

மகாபாரத்தில் அங்கதேசம் மழையில்லாமல் போய் காய்ந்து வறண்டு போகிறது. இதற்கு ‘பெண் அறியாத ஒருவன் நாட்டிற்கு வந்தால் மழை பெய்யும்…’ என தீர்வு சொல்கிறார்கள். ரிஷிகுமாரானாகிய ரிஷ்யசிருங்கன் என்பவன் பெண் அறியாதவன். அவனை மயக்கி அங்க தேசத்துக்கு அழைத்து வருகிறாள் ஒரு பெண். உடனே அங்கே மழை பெய்கிறது. மழை பெய்வதற்கான ஐதீகங்களில் இதுவும் ஒன்று. இப்படி மழையைப் பற்றி நிறைய கதைகள் உள்ளன.

அதில் ஆஸ்திரேலியப் பழங்குடி கதை ஒன்று, பூமிக்கும் வானுக்கும் நடந்த சண்டையைப் பற்றிச் சொல்கிறது

பல ஆண்டுகளாக மழையற்றுப் போய் பூமி வறண்டுபோனது. ஒவ்வொரு நாளும் பூமியானது வானத்தைப் பார்த்து மழை பெய்யும்படி கேட்டுக்கொண்டே இருந்தது. ஆனால், வானம் அதைப் பொருட்படுத்தவே இல்லை. முடிவில் ஒருநாள் பூமி, "நீயாக மழை பெய்யப் போகிறாயா? இல்லை, உன்னோடு போர் தொடுத்து உன்னிடமிருந்து மழையைக் கைப்பற்ற வேண்டுமா?" எனக் கேட்டது.

அதற்கு வானம் "உன்னால் முடிந்தால் என்னோடு போரிட்டுப் பார்…" என்றது. உடனே பூமி "வானின் மீது நாம் போர் தொடுப்போம்… வாருங்கள்" என சகல மரம், செடி, கொடிகள் மற்றும் விலங்குகளை எல்லாம் ஒன்றுசேர்த்தது.

ஒன்று சேர்ந்த அவற்றால் வானத்துக்கு எப்படிச் செல்வது? எப்படி மழையைக் கைப்பற்றுவது என்கிற விவரம் தெரியவில்லை. அப்போது கரடி ஒரு யோசனை சொன்னது:

"பூமியில் உள்ள கற்களை எடுத்து வானை நோக்கி வீசுவோம். வானம் கிழிந்து மழை கொட்ட ஆரம்பித்துவிடும்!"

கரடியின் யோசனை சரியெனப்பட்டது. உடனே பூமியில் இருந்த கற்களை எடுத்து வானத்தை நோக்கி வீச ஆரம்பித்தன. இரவு பகலாக இந்த யுத்தம் நடந்தது. ஆனால், வானில் சிறுகீறல் கூட விழவில்லை. மாறாக வானை நோக்கி எறியப்பட்ட கற்கள் பூமியில் வந்து விழுந்து நிலமெங்கும் பள்ளமானது. இதனால் பூமி வருத்தம் கொண்டது. "தண்ணீர் இல்லாமல் எப்படி வாழ்வது..?" எனப் புலம்பியது. பூமியின் அழுகை குரலைக் கேட்ட கடவுள், பூமியிடமும் வானத்திடமும் "ஏன் சண்டை போடுகிறீர்கள்" என்று விசாரித்தார்.

அதற்கு வானம் சொன்னது: "பூமியில் இருந்து வெளியாகும் புகையும், தூசியும் என்னைப் பாதிக்கிறது. என் நலனைப் பற்றி பூமி யோசிப்பதே இல்லை!"

அதற்கு பூமி சொன்னது: "இந்த வானம் என்னை மதிப்பதே இல்லை. ஒன்று, மழையைக் கொட்டித் தீர்க்கிறது. அல்லது மழை பெய்வதே இல்லை. அதுதான் எங்களுக்குள் சண்டை!"

வானம், பூமி இரண்டின் குற்றச்சாட்டுகளையும் கேட்ட கடவுள் சொன்னார்:

"இனிமேல் இருவரும் பரஸ்பர அக்கறையுடன் நடந்துகொள்ள வேண்டும். பூமியைக் காக்க வேண்டியது வானத்தின் கடமை; வானத்தைக் காக்க வேண்டியது பூமியின் பொறுப்பு!"

அன்று முதலே பூமியில் இயற்கை பல்கி பெருகியது. வானமும் பொலிவுடன் ஒளிரத் தொடங்கியது.

வானுக்கும் பூமிக்கும் இடையில் போடப்பட்ட கடவுளின் ஒப்பந்தமானது, இன்று மனிதனால் வீசி எறியப்பட்டுவிட்டது. உலகெங்கும் வானையும் பூமியையும் சுயலாபத்துக்காக சிதைத்தும் அழித்தும் வரும் இச்சூழலில் இந்தக் கதை முக்கியமானதாகப்படுகிறது.

கி.ராஜநாராயணனின 'நிலைநிறுத்தல்' என்ற சிறுகதையில் மழை பெய்யாமல் போய் விவசாயிகள் படும்கஷ்டத்தைக் கண்ட மாசாணம், மழை பெய்யவேண்டி உண்ணாவிரதம் இருக்க தொடங்கிவிடுவான். மழை பெய்தால் மட்டுமே தனது உண்ணாவிரதத்தை கைவிடுவேன் என உறுதியாக இருக்கிறான் மாசாணம். அவனது மன உறுதிக்கு அடிபணியும் விதமாக இறுதியில் மழை வருகிறது.

மனிதர்கள் அழைத்தால் மழை வரும் என்ற நம்பிக்கை உலகெங்குமே இருக்கிறது. ஆனால், மாசாணம் போல ஊரின் நலம்பொருட்டு தன்னை வருத்திக் கொள்ளும் எளிய மனிதன்தான் இன்று நம்மிடயே இல்லை.

மழையில்லாமல் படும் பாடு ஒரு பக்கம் என்றால், பெய்த மழை நீரை முறையாக தேக்கி வைத்து பாதுகாக்கவும். பயன்படுத்தவும் அக்கறையற்று இருப்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம்.

சில நாட்களுக்கு முன்பு 'நேஷனல் ஜியாகிரபி' சேனலில் ஆப்பிரிக்க பழங்குடி மக்கள் பற்றி ஆவணப்படம் ஒன்றை பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் நகருக்கு வரும் ஆதிவாசி ஒருவன், பாட்டிலில் அடைத்து தண்ணீர் விற்கப்படுவதைக் கண்டு பயந்துபோய் தண்ணீரிடம் மன்னிப்பு கேட்கிறான். அவன் என்ன பேசுகிறான் எனப் புரியவில்லை. ஆனால், அந்தக் கண் களில் பெருங்குற்றத்தை கண்டுவிட்ட பரிதவிப்பு இருந்தது.

மனசாட்சி உள்ளவர்கள் அப்படிதான் நடந்துகொள்வார்கள். நாம்தான் எதையும் விற்க தயங்காதவர்கள் ஆயிற்றே. நமக்கு இது வெறும் வேடிக்கை காட்சியாகத்தான் தோன்றும்!

இணையவாசல்: சர்வதேச சிறார் கதைகளை அறிந்து கொள்ள உதவும் இணையதளம் http://spiritoftrees.org/featured-folktales

## பகுதி 18 - துரோகத்தின் நிழல்!

பியரெத் ஃப்லுசியோ எழுதிய 'சின்னச் சின்ன வாக்கியங்கள்' என்ற பிரெஞ்சு நாவலை தமிழில் 'க்ரியா' பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இதில் தன்னுடைய ஊரில் வசிக்கும் மனிதர்கள் எல்லோருமே கண்ணுக்குத்தெரியாத கண்ணாடித் தாள் ஒன்றை கவசம் போல அணிந்துகொண்டு வாழ்கிறார்கள் என ஒரு பெண் நினைக்கிறாள். இந்தக் கண்ணாடித் தாளைக் கிழித்துக்கொண்டு அவர்களால் வெளியே வர முடியாது. நிஜ உலகை, நேரடியாக ஸ்பரிசிக்க எவரும் தயாராகயில்லை என வருத்தப்படுகிறாள். வாசிக்க வேண்டிய முக்கியமான நாவல் இது.

உறவுகள் பொய்த்துப் போன காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது நாவலைப் படித்து முடித்தபோது எனக்குத் தோன்றியது. எல்லா உறவுகளிலும் பொய் கலந்துவிட்டது. நல்லுறவு நீடிப்பதுபோல நாம் பொய்யாக நடித்துக் கொண்டிருக்கிறோம். நமது

போலித்தனம்தான் கண்ணாடித் தாளாக உருமாறி நம்மைச் சுற்றியிருக் கிறது. அதில் இருந்து நாம் விடுபடுவது எளிதானது இல்லை.

'யாரை நம்புவது?' என்கிற கேள்வி, வயது வேறுபாடின்றி அனைவராலும் கேட்கப்படுகிறது. 'எவரையுமே நம்ப முடிய வில்லை!' என்கிற பதில் அனைவராலும் சொல்லப்படுகிறது. 'இது நம்மையும் சேர்த்துத்தான் சொல்லப்படுகிறது' என, ஏன் ஒருவருமே குற்றவுணர்ச்சி கொள்வதில்லை?

காவல்துறை அதிகாரி ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது சொன்னார்: "பெருகிவரும் குற்றங்களுக்கு மூலக் காரணம் துரோகம். காதலிக்குக் காதலன் செய்யும் துரோகம்; மனைவிக்குக் கணவன் செய்யும் துரோகம்; கணவனுக்கு மனைவி செய்யும் துரோகம்; பெற்றோருக்குப் பிள்ளைகள் செய்யும் துரோகம்; சகஊழியர்களுக்கு அதிகாரிகள் செய்யும் துரோகம்; மக்களுக்கு அரசியல்வாதிகள் செய்யும் துரோகம்; நோயாளிக்கு மருத்துவர் செய்யும் துரோகம்; தேசத்துக்கு தீவிரவாதிகள் செய்யும் துரோகம்… என துரோகத்தின் பட்டியல் முடிவற்றது. வயது வேறுபாடின்றி அனைவரும் துரோகத்தைச் சந்திக்கிறார்கள். வேதனைப்படுகிறார்கள்!"

அவர் சொன்னதைக் கேட்டு சிரித்தபடியே சொன்னேன்: "கனவில் கூட துரோகம் இழைக்க மாட்டார் என நட்பின் உறுதியைப் பற்றி கூறுவார்கள். இன்று அதெல்லாம் வெறும் கற்பனை. நம்பிக்கை துரோகம் செய்வது இயல்பாகிவிட்டிருக்கிறது. மனசாட்சி உள்ளவர்கள்தான் துன்பப்படுகிறார்கள். துரோகத்தின் வரலாறு மிக நெடியது. பல்லாயிரம் முறை நிகழ்த்தப்பட்டபோதும் மனிதர்களால் துரோகத்தை விலக்க முடியவேயில்லை. பர்மீய மக்கள் 'வவ்வால்கள் ஏன் இடிந்த கட்டிடங்களில் வசிக்கிறது?' என்பதற்கு ஒரு கதை சொல்கிறார்கள். அதுவும் துரோகத்தைப் பற்றியே பேசுகிறது" என்றேன்.

"என்ன கதை..?" என ஆர்வத்துடன் கேட்டார் காவல்துறை அதிகாரி.

"வயதோ, படிப்போ, வேலையோ எதுவும் கதை கேட்கும் ஆர்வத்தைத் தடுத்துவிடுவதில்லைதானே. அவருக்காக அந்த பர்மீயக் கதையைச் சொன்னேன்:

ஒரு காட்டில் வாழும் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் திடீரென ஒருநாள் காடு யாருக்குச் சொந்தம் என்கிற பிரச்சினை உருவானது. 'காலம் காலமாக மரங்களில் நாங்கள் கூடுகட்டி வாழ்கிறோம். அதனால் காடு எங்களுடையது' என்றன பறவைகள் .

விலங்குகளோ 'இது நாங்கள் பிறந்த இடம். காட்டினை நம்பியே நாங்கள் வாழ்கிறோம். ஆகவே காடு எங்களுடையது!' என்றன. இதனால் சண்டை உருவானது. ஒன்றையொன்று தாக்கிக் கொண்டன.

பறவைகள் தங்கள் பக்கம் சண்டையிட வருமாறு வவ்வாலை அழைத்தன. வவ்வாலுக்கு அதில் விருப்பமில்லை. அது சுகமாக பழங்களைத் தின்றபடியே 'எனக்கு கண் வலி. இல்லாவிட்டால் நிச்சயம் உங்களுக்காக சண்டைபோட வருவேன்' என்றது. 'நன்றி நண்பனே..!' என பறவைகள் விடைபெற்றன.

சண்டையில் விலங்குகள் ஜெயிப்பது போன்ற சூழல் உருவானது. ஒருவேளை விலங்குகள் ஜெயித்துவிட்டால் பறவைகளைக் காட்டைவிட்டு வெளியேற்றிவிடுவார்கள். அதற்கு முன்பாக நாம் விலங்குகளுடன் சேர்ந்துகொண்டுவிட வேண்டும் என்று வவ்வால் யோசித்தது.

உடனே விலங்குகளின் கூட்டணியில் தன்னை இணைத்துக் கொள்ளும்படி கேட்டது. 'நீ ஒரு பறவை. உன்னை சேர்த்துக்கொள்ள முடியாது!' என்றன விலங்குகள்.

'இல்லை! சிறகுகள் இருந்தாலும் நான் பறவை இனமில்லை. குட்டி போட்டு பால் தருவதால் நானும் விலங்கினமே..' என்றது வவ்வால். விலங்குகளும் வவ்வாலை தங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டன. உடனே வவ்வால் சொன்னது: 'பறவைகளின் பலவீனம் பசி. தானியத்தைக் காட்டி பறவைகளை எளிதாகப் பிடித்துவிடலாம். பறவைகள் குடிக்கும் நீரில் விஷத்தைக் கலந்துவிட்டால் அவற்றை மொத்தமாகக் கொன்றுவிடலாம்!'

இதைக் கேட்ட விலங்குகள் ஆரவாரம் செய்தன. சண்டை தொடர்ந்தது. திடீரென பறவைகள் பக்கம் ஜெயிப்பது போன்ற சூழல் உருவானது. உடனே வவ்வால் பறவைகளிடம் வந்து சேர்ந்தது.

'சகோதரா! நான் குட்டிப் போட்டு பாலூட்டினாலும் நான் விலங்கினமில்லை. நான் உங்களைப் போல பறப்பவன். விலங்குகள் என்னை மிரட்டியதால் இதுவரையில் அவர்கள் பக்கம் இருந்தேன்!' என்றது.

இப்போது வவ்வாலைப் பறவைகள் தங்கள் அணியில் சேர்த்துக்கொண்டன. 'விலங்குகள் நெருப்புக்கு பயந்தவை. காட்டுக்கு தீ வைத்துவிட்டால் விலங்குகள் மொத்தமாக அழிந்துவிடும். மிருகங்களுக்கு அறிவு கிடையாது. பறவைகள்தான் புத்திசாலிகள்..' என்றது வவ்வால். அதைக் கேட்டு பறவைகள் மகிழ்ச்சியில் சிறகடித்தன. சண்டை தொடர்ந்தது. முடிவில் கடவுள் தலையிடவே சமாதானம் ஏற்பட்டது.

'காடு அனைவருக்கும் சொந்தமானது. மின்மினிப் பூச்சிகள் அழிந்துபோனால்கூட காடு அழியத் தொடங்கி விடும். காட்டில் எவரும் பெரியவரும் இல்லை; எவரும் சிறியவரும் இல்லை' என கடவுள் அறிவித்தார். அதன்படி பறவைகளும் விலங்குகளும் இணைந்து வாழ்வதற்கு சம்மதித்தன.

பறவைகளும் விலங்குகளும் ஒன்றுகூடி கடவுளிடம் தெரிவித்தன: 'சுயநலத்தோடு இனத்தை காட்டிக் கொடுத்த வவ்வாலுக்கு இனி காட்டில் இடம் தரமுடியாது; இடிந்த கட்டிடங்களில் இருட்டில் தலைகீழாகத் தொங்கி வாழட்டும்!'

அதைக் கேட்ட கடவுள் சொன்னார்: 'துரோகிக்கு இதுதான் சரியான தண்டனை!'

விலங்குகளும் பறவைகளும் ஒன்றுசேர்ந்து வவ்வாலைக் காட்டை விட்டு வெளியே துரத்தின.

இனத்தைக் காட்டிக் கொடுத்து சுகமாக வாழ நினைத்தால், கடைசியில் நாமே விரட்டியடிக்கப்படுவோம் என்பதையே இக்கதை உணர்த்துகிறது. துரோகத்தால் வெளியேற்றப்பட்ட வவ்வால்கள் இடிந்த கோயில்களிலும் கட்டிடங்களிலும் வாழ்கின்றன.

ஆனால் நம் உலகிலோ இனம், மொழி, நிலத்துக்குத் துரோகம் செய்பவர்கள் அதிகாரத்திலும் செல்வச் செழிப்பிலும் திளைக்கிறார்கள். அவர்களின் துரோகம் விருதுகளால் அங்கீகரிக்கப்படுகிறது. துரோகம் செய்வது தனித் திறமையாகக் கருதப்படுகிறது.

பாவம் எளிய மனிதர்கள்! எவரை நம்புவது? எதன் மீது நம்பிக்கை வைப்பது? ஏன் நம்பிக்கை துரோகம் இழைக்கப்படுகிறது… என்பதெல்லாம் அறியாமல் தடுமாறுகிறார்கள். வரலாறு துரோகிகளை ஒருபோதும் மன்னிப்பதில்லை. அத்துடன் துரோகத்துக்குத் துணை போனவர்களையும் அடையாளம் காட்ட மறப்பதில்லை. வரலாறு கற்றுத் தரும் இப்பாடத்தை நாம் ஏன் எப்போதும் மறந்து போகிறோம்?

இணையவாசல்: புகழ்பெற்ற நாட்டுப்புறக் கதைகளை அனிமேஷன் திரைப்படமாக காண விரும்புகிறவர்களுக்கான இணையதளம்
https://animation-stories.com/category/folklore-based-animation/

## பகுதி 19 - யானையின் கண்கள்!

ஒரு காலத்தில் யானைகளுக்குத் தன் பருத்த உடலைப் போலவே பருத்த கண்கள் இருந்தன. தன் விருப்பம் போல சாப்பிட்டு சந்தோஷமாக வாழ்ந்தன. 'நம்மால் ஒரு பிடி கூட சாப்பிட முடிய வில்லை; ஆனால் யானை இவ்வளவு சாப்பிடுகிறதே…' என்று ஒரு ஆமை பொறாமை கொண்டது.

ஆகவே, 'யானை மற்றவர்களை விட அதிகம் சாப்பிடுகிறது. இப்படி சாப்பிட்டால் காடே அழிந்துவிடும்' என்று ஆமை அவதூறு பரப்பத் தொடங்கியது. மற்ற விலங்குகளும் அதை நம்பி கடவுளிடம் சென்று முறையிட்டன.

நீதி விசாரணைக்காக யானையை அழைத்து வரும்படி ஆணையிட்டார் கடவுள். யானையோ கரும்பை ருசித்து தின்றபடி 'பிறகு வருகிறேன்…' என்று அலட்சியமாக சொன்னது.

கடவுளுக்கு கோபம் வந்து, யானையின் கண்களை அம்பு எய்தி குருடாக்கிவிட்டார். அத்துடன் 'உனக்கு பசி தீரவே தீராது' என்று சாபமும் கொடுத்துவிட்டார். பாவம், யானை. கண்தெரியாமல் பசியோடு அலைந்தது. அப்போது, ஒரு புழு யானைக்கு உதவுவதற்கு முன்வந்தது.

"நண்பா, வேண்டுமானால் ஒரு நாளைக்கு என் கண் களைக் கடனாகத் தருகிறேன். வைத்துக்கொள்" என்றது. சந்தோஷத்துடன் யானைபுழுவின் கண்களை ஏற்றுக்கொண் டது. அப்படித்தான் யானைக்கு சிறிய கண்கள் உருவாகின. யானையும் காட்டில் உணவுத் தேடி பசியாற்றிக் கொண்டது.

மறுநாள், தன் கண்களைத் திரும்பக் கேட்க யானையைத் தேடி வந்தது புழு. யானைக்கு அதைத் திருப்பித் தர மனமில்லை. ஆகவே, யானை தன் பலமான காலால் புழுவை நசுக்கிக் கொன்றுவிட்டது.

அன்று முதல் இன்றுவரை புழு தன் கண்களைத் திரும்ப கேட்பதற்காக யானையைப் பின்தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. யானையும் அலட்சியமாகத் தன் காலால் புழுவை நசுக்கி கொல்வதும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கிறது என்கிறது தாய்லாந்து நாட்டுப்புறக் கதை ஒன்று.

நன்றி மறந்தவர்கள் எப்போதும் குரூரமாகவே நடந்துகொள் வார்கள். கொடுத்த பொருளைத் திரும்பக் கேட்டால் கிடைக்காது என்பதற்கு உதாரணமாக இக்கதையைச் சொல்கிறார்கள்.

யானை தன் பசிக்குச் சாப்பிடுகிறது. ஆனால், அது ஒரு ஆமைக்கு பொறாமையை ஏற்படுத்துகிறது. உணவு விஷயத்தில் மனிதர்கள் அதிகம் பொறாமை கொள்கிறார்கள். அலுவலகங்களில், உணவகங்களில், விருந்தில் அடுத்தவர் என்ன சாப்பிடுகிறார்கள்? எவ்வளவு சாப்பிடுகிறார்கள் என கண்காணிக்காத ஆட்களே இல்லை. ருசித்து அதிகம் சாப்பிடுகிறவர்களைப் பொறாமையோடுதான் பார்க்கிறார்கள். கேலி செய்கிறார்கள். அவமானப்படுத்து கிறார்கள்.

உழைக்கும் மக்கள் சாப்பிடும் அளவுக்கு, உட்கார்ந்து வேலை செய்கிறவர்கள் சாப்பிட முடியாது. அதற்காக, அவர்கள் மீது ஏன் பொறாமை ஏற்பட வேண்டும்? ஏன் அவர்களைக் கீழாக நினைக்க வேண்டும்? உணவு என்பது அவரவர் தேர்வு. யார் எதைச் சாப்பிட வேண்டும் என்று கட்டளையிடுவது அராஜகம்.

ஒருவர் உணவை மற்றவர் பகிர்ந்து கொள் வது இயல்பானது. ரயில் பயணங்களில் அப்படி யாரோ கொடுத்த இட்லியை, எலுமிச்சைச் சோற்றை நான் சாப்பிட்டிருக்கிறேன். இப்போது மறைத்து உட்கார்ந்துகொண்டு, சிறுவர் சிறுமிகள் பார்த்துக்கொண்டிருந்தால் கூட ‘ஒரு வாய் தரட்டும்மா?’ எனக் கேட் காத மனிதர்களைத்தான் பயணங்களில் பார்க்கிறேன். சாப்பாட்டினைக் கையில் கொண்டுபோவதை அசிங்கமாக நினைக்கிறார்கள் பலர். ஒரு பருக்கைக் கூட சிந்தாமல் சாப்பிட வேண்டும் என்று வீட்டில் பழக்குவார்கள். இன்று சிந்திச் சிதறிச் சாப்பிட்டு, பாதிக்குமேல் உணவை வீணடிக்கிறார்கள். குப்பையில் கொண்டுபோய் கொட்டுகிறார்கள். கல்யாண விருந்துகளை நினைத்தால் ஆற்றாமையாக உள்ளது. எவ்வளவு பணம்? எவ்வளவு உணவு வீணடிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் பணியாற்றுகிற ஒரு நண்பர் சொன்னார். எங்கள் அலுவலகத்தில் மதிய உணவு நேரத்தில் எல்லோரின் உணவையும் ஒரு மேஜையில் வைத்துவிடுவோம்.

எல்லா உணவுகளையும் ஒன்றாக திறந்து வைத்து, யாருக்கு எது பிடிக்கிறதோ, அதை எடுத்து சாப்பிட்டுக்கொள்ளலாம் என்பதே நடைமுறை. இதனால் இந்திய உணவு, சீன உணவு, இத்தாலிய உணவு, மெக்சிகன் உணவு, அரபு உணவு என பல்வேறு தேசங்களின் உணவை ருசிக்க முடிகிறது. அலுவலகத்தில் பகிர்ந்து உண்பதால் நாங்கள் ஒரு குடும்பம் போலவே உணருகிறோம். நாம் செய்ய வேண்டியது நம் உணவை பொதுவில் வைக்க வேண்டும் என்பது மட்டுமே. யார் எவ்வளவு உணவு கொண்டுவருகிறார்கள்? என்ன கொண்டுவருகிறார்கள் என்பது முக்கியமில்லை. 125 ஊழியர்கள் இருப்பதால் தினமும் குறைந்தது நூறு விதமான உணவு கிடைக்கிறது. உண்மையில் தினமும் விருந்து சாப்பிடுகிறோம்’ என்றார்.

யோசித்துப் பாருங்கள். எவ்வளவு எளிய வழி. ஆனால், ஏன் இதைச் சாத்தியமாக்க நாம் யோசிக்கவே இல்லை. குறைந்தபட்சம் பள்ளிகளில் இதை நடைமுறைப்படுத்தலாமே.

வீட்டில் செய்த எள்ளுருண்டையை டப்பாவில் போட்டு எடுத்துக்கொண்டு100 மைல் பயணம் செய்து, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொண்டுபோய் கொடுத்து வருகிற மனசு முந்திய தலைமுறைக்கு இருந்தது. இன்றைக்கு கடைகளில் வாங்கிய இனிப்புகளில் மீதமானவற்றைக் கூட எவருக்கும் பகிர்ந்து தர மனமற்றவர்களாக வாழும் மனிதர்கள் அதிகமாகிவிட்டார்கள்.

யானையின் பசியை நினைத்து புழு கவலைப்படுகிறது. தன் கண்களைக் கொடுத்து யானைக்கு உதவி செய்ய முன்வருகிறது. எளியவர்களின் இயல்பு இதுவே! ஆனால், கண் கொடுத்த புழுவை தன் கால்களால் நசுக்கிக் கொல்கிறது யானை. பலமானவர்கள் எப்போதும் எளியோர்கள் செய்த உதவியை நினைப்பதே இல்லை.

'புத்த ஜாதக'க் கதை ஒன்றில் பசியால் வாடும் துறவிக்குக் கொடுப்பதற்கு எதுவுமில்லை என்று உணர்ந்த முயல், நெருப்பில் பாய்ந்து தன்னையே உண்ணும்படி தருகிறது. தியாகத்தின் உச்சநிலை இது. 'பசிப் பிணி போக்குவதே… அறம்' என்கிறாள் மணிமேகலை. அவள் கையில் உள்ள அமுத சுரபியில் அள்ள அள்ள உணவு வந்துகொண்டே இருக்கிறது. உலகின் வேறு எந்த இலக்கியத்திலும் அமுதசுரபி போல ஒரு பொருள் இடம்பெற்றிருக்குமா எனத் தெரியாது. இந்திய மனதால் மட்டுமே அமுதசுரபியைக் கற்பனை செய்ய முடியும் என்று தோன்றுகிறது. பசியை முற்றிலும் உணர்ந்தவர்கள். பசியாற்றுதலை அறமாக கொண்டவர்கள் இந்தியர்கள்.

'அன்னதாதா சுகி பவ'

அதாவதும்

'அன்னத்தை வழங்குபவர் சுகமாக வாழ்வார்'

என்கிறது மூதுரை.

'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றான் பொருள்வைப் புழி'

- என்கிறது திருக்குறள். அன்னதானம் இட்ட பிறகே உண்ணும் வழக்கம் கொண்ட சிறுத்தொண்டர், சிவனடியார் பசியைப் போக்க பிள்ளைக் கறி சமைத்து தந்த கதையைச் சொல்கிறது பெரிய புராணம். இப்படி பசியாற்றுதலின் ஆயிரம் கதைகள் நம்மிடம் உள்ளன.

இலவசமாக உணவு தரக்கூடிய அறச்சாலைகள் இந்தியா அளவுக்கு வேறு எந்த தேசத்திலும் கிடையாது என்பதே சுற்றியலைந்து நான் கண்ட உண்மை. உணவைப் பகிர்வதே உலகைப் பகிர்வதின் முதற்படி.

இணையவாசல்: தாய்லாந்து நாட்டுப்புறக் கதைகளை வாசிக்க - http://www.xinxii.com/gratis/118976rd1350284693.pdf

## பகுதி 20 - பயத்தை சுமப்பவர்கள்!

'கொனார்க் போய் வரலாம் என நினைக்கிறோம். உங்கள் ஆலோசனை தேவை' என்று சொல்லி, ஒரு இளைஞர் எனக்கு மின்னஞ்சல் அனுப்பியிருந்தார். 'நேரில் சந்திக்கலாம்...' என வரச் சொல்லியிருந்தேன்.

வந்தவர் தானும் நண்பர்கள் மூவரும் காரில் கொனார்க் போகத் திட்டமிட்டிருக்கிறோம் என்றார்.

"மகிழ்ச்சி, என்ன ஆலோசனை தேவை?" எனக் கேட்டேன்.

"எங்கே என்ன சாப்பிட கிடைக்கும்? எது நல்ல தங்கும் விடுதி? எந்த ஊரில் விலை மலிவாக கலைப் பொருட்கள் கிடைக்கும்? நாட்டு சாராயம் எங்கே விற்பார்கள்..." எனக் கேட்டுக் கொண்டிருந்தார் அந்த இளைஞர்.

"நான் டூரிஸ்ட் கைடு இல்லை..." என்று சொன்னேன்.

உடனே அவர், "இதெல்லாம்கூட கூகுள்ல பார்த்துத் தெரிஞ் சிக்கிடலாம். டிராவல்ல நோய் வந்துட்டா என்ன செய்யறது? பணத்தை எப்படி பாதுகாப்பாகக் கொண்டுபோறது? ஆயுதம் ஏதாவது வைத்துக் கொள்ளலாமா? வழிப்பறிக் கொள்ளை நடக்கும் என்கிறார்களே... நிஜமா?" என கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனார்.

"இவ்வளவு பயத்துடன் ஏன் பயணம் போகிறீர்கள்?" எனக் கேட்டேன்.

"டிராவல்ல எந்த ரிஸ்க்கும் எடுக்கக் கூடாது" என்றார் அந்த இளைஞர்.

"அப்போ பேசாமல் வீட்டுக்குள் முடங்கிக் கிடங்கள்..." என்று சற்றுகோபமாகவே சொன்னேன்.

"நாங்க டூர் போறது ஜாலியா என்ஜாய் பண்ணத்தான்..." என்று சொன்னார் அவர்.

"நான் ஜாலிக்காக டூர் போகிறவனில்லை..." என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தேன். அன்று இரவெல்லாம் மனதில் என்னென்னமோ தோன்றியபடியே இருந்தது. ஒரு பயணம் போவதற்கு ஏன் இவ்வளவு பயப்படுகிறார்கள்? வீட்டை ஏன் முதுகில் தூக்கிக்கொண்டு போக துடிக்கிறார்கள்? சகல வசதிகளுடன் அலுங்காமல் போய் வருவதற்கு பெயர் பயணமா? கொஞ்சம் ரிஸ்க் எடுத்துப் பாருங்களேன். வயது இருபத்தைந்துதானே ஆகிறது!

உலகின் ஏதோவொரு கோடியில் இருந்து 80 வயதில் ஒருவர் கன்னியாகுமரியைப் பார்க்க வந்து நிற்கிறாரே, அந்த வெள்ளைக்காரருக்கு இருக்கும் தைரியம் ஏன் நமக்கு இல்லை? சைக்கிளிலேயே உலகம் சுற்றிவருகிறாரே ஒரு இளைஞர் அவருக்கும் வயது 25-தானே! கண் தெரியாமல் இமயமலை மீது ஏறி சாதனை செய்தவருக்கு இவ்வளவு கேள்விகள்... பயம் இருந்திருக்குமா?

இது இளைஞனின் பிரச்சினை மட்டுமில்லை; நம்மில் பலரும் பயணம் செய்வதற்கு தயங்குகிறோம், பயப்படுகிறோம். ஏதாவது வசதி குறைவாக கிடைத்துவிட்டால் புலம்புகிறோம். மாறுபட்ட அனுபவத்தைத் தருவதே பயணம் என ஒருவருக்கும் புரிவதில்லை.

ஜிப்சிகள் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கி வாழாமல் தங்கள் கூடார வண்டிகளில் சுற்றியபடியே உலகை வலம் வருகிறார்கள். இவர்கள் சொத்து சேர்ப்பதிலும், சம்பாதிப்பதிலும் அக்கறை காட்டுவதில்லை. மாறாக, கலைகளை மட்டுமே பிரதானமாக கருதுகிறார்கள்.

ஜிப்சிகள் பல்வேறு பெயர்களில் அழைக்கப் படுகிறார்கள். நார்வே , ஸ்வீடன், டென்மார்க் போன்ற நாடுகளில் 'சிக்கொயின' என்றும், இத்தாலியில் 'ரோம்' எனவும், துருக்கியில் 'சிக்கேனா' என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

ஜிப்சிகள் தங்கள் மொழியை ரோம் ( Rom ) என அழைக்கிறார்கள் .இந்த மொழிக்கு எழுத்து வடிவம் கிடையாது. ஊர் சுற்றி வாழும் ஜிப்சி இனத்தைப் பெருமளவு அழித்தவர் ஹிட்லர். ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட ஜிப்சிகள் நாஜிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஜிப்சிகளை அழித்தாலும் அவர்களின் இசை மரபை அழிக்கமுடியவில்லை. இன்றும் வீரியத்துடன் தொடரவே செய்கிறது.

மனிதர்கள் மட்டும் பயணம் செய்வதில்லை. கதைகளும் பயணம் செய்கின்றன. கிரேக்கத்தில் ஈசாப்பால் சொல்லப்பட்ட 'காகம் நரி' கதை இந்தியாவுக்குப் பயணம் செய்து வந்திருக்கிறது. இந்தியாவில் சொல்லப்பட்ட குரங்கு முதலை கதை கிரேக்கத்துக்குச் சென்றிருக்கிறது. உலகெங்கும் கதைகள் பயணித்துக்கொண்டே இருக்கின்றன. மனிதர்களைப் போலவே கதைகளும் தாங்கள் வாழும் இடங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்கின்றன.

அரபு வணிகர்கள் உலகம் முழுவதும் சுற்றிப் பயணம் செய்திருக்கிறார்கள். அரபுதேசக் கதையொன்று 'கடற்பூதம்' என்ற பயத்தை பற்றிப் பேசுகிறது. அராபிய வணிகன் ஒரு வன் தனது ஆட்களுடன் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அதில் ஒரு இளைஞன் முதன்முறையாக கடலில் பயணம் செய்கிறான். அவன் பயணம் புறப்பட்டதில் இருந்து 'அய்யோ... நாம் கப்பல் கடலில் மூழ்கிப்போய்விடப் போகிறோம். கடற்பூதம் நம்மைப் பிடித்துக் கொள்ளப்போகிறது. நாம் கடலில் மூழ்கி செத்துப்போய்விடப் போகிறோம்...' என்று கத்திக்கொண்டே இருந்தான்.

இவனால் கப்பலில் இருந்த மற்றவர்களும் பயப்பட ஆரம்பித்தார்கள்.

'கப்பல் உறுதியானது. கடற்பூதம் என்று ஒன்றுமே இல்லை. கடலில் எதுவும் நடந்துவிடாது. நீ தேவையில்லாமல் பயப்படாதே..." என்று மாலுமி சொன்னபோதும், அவன் கத்துவதை நிறுத்தவே இல்லை.

‘எப்படியும் கடற்பூதம் நம்மைப் பிடிக்கப் போகிறது, நாம் கடலில் மூழ்கிச் சாகப்போகிறோம்’ என்று புலம்பிக் கொண்டேயிருந்தான் அவன். இது பெரிய தொந்தரவாக மாறியது,

‘இவனை எப்படி சமாதானம் செய்வது?’ என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

அப்போது கப்பல் மருத்துவர் ‘இதற்கு ஒரு வைத்தியம் இருக்கிறது…’ என்று மாலுமியிடம் சொன்னார்.

“எதையாவது செய்து அவன் பயத்தைப் போக்குங்கள் என்றார் மாலுமி. உடனே அந்த இளைஞனைத் தூக்கி கடலில் வீசும்படி மருத்துவர் கட்டளையிட்டார்.

மறுநிமிசம் காவல் வீரர்கள் அவனைத் தூக்கி கடலில் போட்டார்கள். அந்த இளைஞன் அலைகளுக்குள் நீந்த முடியாமல் திக்குமுக்காடினான். அவன் கடலினுள் மூழ்கப்போகும் நேரம் காவலாளிகள் குதித்து, அவனை மீட்டு கப்பலுக்குக் கொண்டு வந்தார்கள்

உயிர் பிழைத்தவன் அதன்பிறகு வாயைத் திறக்கவே இல்லை.

மாலுமி ஆச்சர்யமடைந்து , “இது எப்படி சாத்தியமானது..?” என்று கேட்டார்.

அதற்கு அந்த மருத்துவர் “இந்த இளைஞனுக்கு கடலில் மூழ்கிப் போவது என்றால் என்னவென்று தெரியவில்லை, ஆகவே கப்பல் தரும் பாதுகாப்பை அவன் உணரவில்லை. ஆபத்தை அனுபவித்தவனே, பாதுகாப்பு என்பதை நன்றாக அறிவான்.

நாம் வரப்போவதைப் பற்றி நினைத்து பயப்படுவதால் ஒன்றுமே ஆகப்போவதில்லை, எதையும் தைரியமாக எதிர் கொண்டால் ஆபத்திலும் கூட நாம் வெற்றி பெற முடியும் என்றார்.

என்றோ ஒரு கதையில் அரபு வணிகர்களுக்குச் சொல்லப் பட்ட இந்த வழிகாட்டுதல், இன்றைய தலைமுறைக்கும் பொருந்தக்கூடியதே.

ஜிப்ஸி பாடல்களில் ஒன்று இப்படி தொடங்குகிறது:

‘காற்றை போல நாங்கள் அலைந்து கொண்டேயிருப்போம்

தைரியம்தான் எங்களின் சொத்து

உலகை காதலிப்பவர்களால் ஒருபோதும்

வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கமுடியாது’

எவ்வளவு அற்புதமான வரிகள். நாடோடியின் பாடலுக்கு வயதாவதில்லை. அது சொல்லும் உண்மையே பயணத்தின் முதல் பாடமாகும்!

இணையவாசல்: ஜிப்சிகளின் கதைகளை அறிந்துகொள்ள
http://sacred-texts.com/neu/roma/gft/index.htm

## பகுதி 21 - தண்டனை மட்டுமா தீர்வு!

ஒருவர் ஏதோவொரு தப்புச் செய்துவிட்டார் எனத் தண்டிக்கப்படும்போது அதே தப்பை திரும்பச் செய்யாமல் இருக்க வேண்டும் என்பதே தண்டனை தருவதின் நோக்கம். ஆனால், பெரும்பான்மை மனிதர்கள் அதை உணர்வதே இல்லை.

தப்பு என்பது அறிந்து செய்கிற செயல். அதைத் தொடர்ந்து செய்வதன் வழியே தப்பை நியாயப்படுத்தவே முயற்சிக்கிறோம்.

'எதுவுமே தப்பில்லை என்ற எண்ணம் இன்று வேகமாக வளர்ந்து வருகிறது. இது அபாயகரமான பிரச்சினை. முரட்டுதோல் கொண்ட உயிரினங்களுக்கு ஊசிவைத்து குத்தினாலும் வலிக்காது. அப்படித்தான் இன்றைய மனிதர்களும் மாறிவருகிறார்கள். 'சூடு சொரணையில்லையா...' எனக் கிராமப்புறத்தில் கேட்பார்கள். இன்று அந்தச் சொற்கள் வழக்கொழிந்துபோய்விட்டன.

கல்விக் கடன் வாங்குவதற்காக வருவாய் சான்றிதழ் கேட்டதற்கு ஒரு அரசு அலுவலர் லஞ்சம் கேட்கிறார் என்று ஒரு மாணவன் பேருந்தில் ஏறிப் பிச்சை எடுத்திருக்கிறான். அவன் கையில் 'லஞ்சம் கொடுக்கப் பத்தாயிரம் தேவைப்படுகிறது. உதவி செய்யுங்கள்' என்ற அறிவிப்புப் பலகை இருந்தது என ஒரு நண்பர் சொன்னார்

"பேருந்தில் இருந்தவர்கள் என்ன செய்தார்கள்..?" எனக் கேட்டேன்.

"சிலர் சிரித்தார்கள். சிலர் செல்போனில் போட்டோ எடுத்தார்கள். சிலர் பத்து, இருபது ரூபாய் பணம் கொடுத்தார்கள். ஆனால் ஒருவரும் 'யார் லஞ்சம் கேட்ட ஆள்..?' எனக் கோபம் கொள்ளவேயில்லை" என்றார் நண்பர்.

இதுதான் பொதுபுத்தியின் அடையாளம். எல்லாவற்றையும் சகித்துக்கொண்டுப் போகப் பழகிவிட்டார்கள். தனது தவற்றை உணரவோ, அதில் இருந்து விடுபடவோ, மோசடிகளுக்கு எதிராகப் போராடவோ நாம் தயாராகவே இல்லை.

பின்லாந்து நாட்டுப்புறக் கதை ஒன்றிருக்கிறது. அதில், ஒரு திருட்டு நரி வருகிறது. அந்த நரி எதையும் திருடிச் சாப்பிடக்கூடியது. யாராவது பிடிக்க முயன்றால் 'திருடுவது என் உரிமை' என்று வீறாப்பு பேசியது.

ஒரு நாள் அந்த நரி, மாடு வளர்க்கும் ஒருவர் வைத்திருந்த பாலைக் குடித்துவிட்டது. உடனே அவர் பாய்ந்து வந்து, அதன் வாலை அறுத்துவிட்டார். வால் இல்லாத நரி காட்டுக்குள் ஓடியது. அங்கே எல்லா விலங்குகளும் அதை 'வால் அறுந்த நரி' எனக் கேலி செய்தன.

'சே... இப்படி மாட்டுக்காரர் தன்னை அவமானப்படுத்தி விட்டாரே. அவரிடம் எப்படியாவது பேசி, அறுந்த வாலை வாங்கிக் கொண்டுவந்தால் ஒட்டவைத்துவிடலாமே..!' என நரி நினைத்தது. இதனால் அவர் வீட்டுக்குத் திரும்பிப் போனது.

அவர் மாடுகளுக்குப் புல்வெட்டிக் கொண்டிருந்தார்.

"என் தவறை உணர்ந்துவிட்டேன். என் வாலை திருப்பிக் கொடுத்துவிடு..!" என்றது நரி.

"அப்படியானால், ஒரு குவளைப் பாலைத் திருப்பி ஈடாகக் கொடு... தருகிறேன்" என்றார் மாட்டுக்காரர்.

உடனே, அந்த நரி பசுவிடம் போய் "பசுவே, பசுவே... என் வாலை மாட்டுக்காரர் துண்டித்துவிட்டார். ஒரு குவளைப் பால் கொடு. இதைக் கொடுத்துவிட்டு... அதைத் திருப்பி வாங்கிவிடுகிறேன்!" என்றது.

அதைக் கேட்ட பசுமாடு, "நல்லது. நீ திருந்திவிட்டாய் என்பது எனக்கு சந்தோஷம் தருகிறது. ஒரு குவளைப் பால் வேண்டுமானால் ஈடாக ஒரு கட்டுப் புல் கொண்டுவா!" என்றது.

உடனே, அந்த நரி புல்வெளியை நோக்கிப் போனது.

"புல்லே... புல்லே. என் அறுந்த வாலை மீட்க, ஒரு கட்டுப் புல் தேவைப்படுகிறது. அறுத்துக் கொள்ளட்டுமா?" என்று கேட்டது.

அதற்குப் புல் சந்தோஷமாக, "அறுத்துக் கொள். ஆனால், அதற்கு முன்பு ஒரு வாளி தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி, என் தாகத்தைத் தீர்த்துவிடு. பிறகு அறுக்கலாம்" என்றது.

உடனே நரி, ஆற்றிடம் போய்த் தன் கோரிக்கையை வைத்தது. உடனே ஆறு, "நீ திருந்த வேண்டும் என்பதுதான் முக்கியம். ஒரு வாளி தண்ணீர் தருகிறேன். அதன் முன்பு என் கரையில் உள்ள மண் உடைந்துபோய்விட்டது. ஒரு மூட்டை மண் போட்டு கரையைச் சரி செய்துவிடு, தண்ணீர் தருகிறேன்" என்றது.

உடனே நரி மண்மேட்டுக்குப் போய்த் தனது நிலையை எடுத்துச் சொன்னது. அதற்கு மண், "நல்ல காரியம்; நிச்சயம் தருகிறேன். ஆனால், அதற்கு முன்பு நீ ஒரேயொரு விதையை நட்டு வைத்து, அதைச் செடியாக்கிக் காட்டு. உடனே ஒரு மூட்டை மண் அள்ளிக்கொண்டு போக அனுமதிக்கிறேன்" என்றது.

'இவ்வளவுதானா..!' என நரி உடனே ஒரு விதையை மண்ணில் புதைத்துவிட்டு, அது எப்போது முளைக்கும் எனக் காத்திருந்தது. மழை பெய்து, தானாக விதை முளைக் கும் வரை நரி

காத்துக் கொண்டிருக்க வேண்டியதாகி விட்டது. பின்பு விதை சிறு செடியாவதற்கு ஒரு மாதமானது.

'ஒரு சிறுசெடி முளைப்பதற்கே இவ்வளவு காலமாகிறதே. எவ்வளவு மெனக்கெட வேண்டியிருக்கிறது. அதை உணராமல் நாம் அடுத்தவர் பொருளைத் திருடித் தின்கிறோமோ. அது அவர்களுக்கு எவ்வளவு துன்பத்தைத் தரும்..?' என நரி கவலைப்பட்டது.

உடனே நரி மண்ணிடம் சென்று, "என் தவற்றை உணர்ந்து கொண்டுவிட்டேன். என்னை மன்னித்துவிடு..." என்றது. அது போலவே, தண்ணீரிடமும் புல்லிடமும் பசுவிடமும் மாடு வளர்ப்பவரிடமும் சென்று, "நீங்கள் மற்றவர்களுக்காக வாழ்கிறீர்கள். என் தவற்றை உணர்ந்துகொண்டேன்" என்று மன்னிப்பு கேட்டது.

உடனே மாடு வளர்ப்பவர் அறுந்த வாலை நரியிடமே திரும்பக் கொடுத்துவிட்டார். ஆனால் அந்த நரி வாலை வாங்கிக் கொள்ளவில்லை. 'இப்படியே வால் அறுந்த நரியாக இருந்துவிடுகிறேன். என்னைப் பார்த்து மற்ற நரிகள் திருந்தட்டும்...' என்றது.

கதையில் வரும் நரியாவது தன்னை உணர்ந்துகொண்டு முடிவில் திருந்துகிறது. ஆனால் தவறு செய்து தண்டிக்கப்பட்ட மனிதர்களில் எத்தனை பேர் திருந்தியிருக்கிறார்கள்? நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் கூட அதிகாரமிக்கவர்களாக வலம் வருகிறார்கள். ஆனால் தவறைத் தட்டிக் கேட்பவர்களின் குரல்வளையோ எப் போதும் அதிகாரத்தால் ஒடுக்கப்படுகிறது. எதற்கும் தண்டனை மட்டும் தீர்வு இல்லை. தன்னை உணர்ந்து மாறுவதே சரியான வழி!

கதைகள் எப்போதும் நம் மனசாட்சியின் குரலை எதிரொலிப்பவை. நிகழ்காலம் சில விஷயங்களில் கண்மூடி இருக்கலாம். அதற்காகத் தவறுகள் ஒரு போதும் நியாயமானவையில்லை. என்றோ, எங்கோ சொல்லப்பட்ட ஒரு கதை உண்மையின் ஒளியோடு விளங்குவதால்தான் இன்றைக்கும் உலகம் அதைக் கொண்டாடுகிறது. திரும்பச் சொல்லுகிறது!

இணையவாசல்: >பின்லாந்து நாட்டுப்புறக் கதைகளை அறிந்துகொள்ள
http://oaks.nvg.org/finnish-folktales.html

## பகுதி 22 - மரத்தில் காய்க்கும் அரிசி!

சாமானியர்களின் புத்திசாலித் தனத்தைப் பற்றியும் அரசர் களின் முட்டாள்தனத்தைக் குறித்தும் உலகெங்கும் நிறைய கதை கள் உள்ளன.

மக்கள் தங்கள் மனதில் இருப்பதை வெளிப்படையாகச் சொல்வதற்கு பதிலா கவே கதையாக, பாடலாக உருமாற்றி சொல்கிறார்கள். கதை கேட்கும் மக் களுக்கு யாரைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று நன்றாகவே தெரியும். ஆகவே, அதை உணர்ந்து சிரிப்பார்கள்.

அப்படி கர்நாடக மாநிலத்தில் சொல்லப்படும் ஒரு கதையைப் படித்தபோது வாய்விட்டுச் சிரித்தேன். மிகச் சிறந்த அரசியல் நையாண்டி கதை அது. வாய்மொழிக் கதைகளின் சிறப்பு கதையை நினைத்து நினைத்துச் சிரிக்க செய்யும் தன்மைக்கொண்டதாகும். இந்தக் கதையும் அது போன்றதே.

ஒருநாள் காட்டில் உள்ள குரங்குகள் யாவும் ஒன்றுசேர்ந்து உலக நன்மைக்காக ஒருநாள் உண்ணாவிரதம் இருப்பது என முடிவு செய்துகொண்டன. உடனே, தலைவராக இருந்த கிழட்டுக் குரங்கு சொன்னது: "உண்ணாவிரதம் தொடங்கு வதற்கு முன்பு நமக்குத் தேவையான உணவை சேகரித்துக் கொண்டுவந்து வைத்துக்கொள்வோம். உண்ணாவிரதம் முடியும்போது அலைந்து உணவு தேட தெம்பு இருக்காது!"

"நல்ல யோசனை..!" என குரங்குகள் ஆமோதித்தன. உடனே காட்டில் இருந்த வாழைப் பழங்கள் அத்தனையையும் பிடுங்கிக் கொண்டுவந்தன.

உடனே கிழட்டுக் குரங்கு சொன்னது: "உண்ணாவிரதம் முடியும்போது நாம் மிகவும் பசியோடு இருப்போம். ஆகவே, இப்போதே அவரவருக்கு உரியதைப் பகிர்ந்துகொள்வோம்!"

மறுநிமிஷம் அத்தனை குரங்குகளும் வாழைப் பழங்களைப் பிரித்து எடுத்துக் கொண்டன.

மீண்டும் கிழட்டுக் குரங்கு சொன்னது: "உண்ணாவிரதம் முடியும்போது வாழைப் பழத் தோலை உரிக்க உடம் பில் தெம்பு இருக்காது. எனவே, இப் போதே பழத்தை உரித்து வைத்துக் கொள்வது நல்லது!"

அதைக் கேட்ட குரங்குகள் நல்ல யோசனை என்று வாழைப் பழத் தோலை உரித்து வைத்துக்கொண்டன.

பலத்த யோசனைக்குப் பிறகு கிழட் டுக் குரங்கு சொன்னது: "உரித்த வாழைப் பழத்தை நாம் வாயில் வைத்துக் கொண்டுவிடலாம். அப்படியானால் உண்ணாவிரதம் முடிந்தவுடனே சாப்பிட எளிதாக இருக்கும் அல்லவா!"

உடனே, எல்லாக் குரங்குகளும் உரித்த வாழைப் பழங்களை வாயில் திணித்துக் கொண்டன.

கிழட்டுக் குரங்கு கடைசியில் சொன் னது: "முன்கூட்டியே வாழைப் பழத்தை விழுங்கிவிட்டால் உண்ணாவிரதம் இருக் கும்போது தெம்பாக இருக்கும். எப்படி என் யோசனை?"

மகத்தான யோசனை என்று சொல்லி விட்டு எல்லாக் குரங்குகளும் வாழைப் பழங்களைத் தின்றுவிட்டு, வெற்றி கரமாக தனது உண்ணாவிரத்தைத் தொடங்கின.

காட்டில் மட்டுமில்லை, நாட்டிலும் கூட இதுபோன்ற கேலிக் கூத்துகள் நடக் கவே செய்கின்றன. அரசியல் காரணங் களுக்காக உண்ணாவிரதம் இருப்பது வேறு; எந்த நாட்டைவிடவும் இந்தியாவில் தான் இந்தக் கேலிக் கூத்துகள் அதிகம். வெள்ளைக்காரர்களுக்கு எதிராக காந்தி தொடங்கிய உண்ணாவிரதம் முதல், ராணுவ ஒடுக்குமுறைகளுக்கு எதிராக

மணிப்பூரில் உண்ணாவிரதம் இருந்த ஐரோம் ஷர்மிளா வரை எத்தனையோ வலிமையான உண்ணா விரதங்களை இந்தியா கண்டு உள்ளது.

ஐரீஷ்காரர்கள்தான் உண்ணாவிர தத்தை எதிர்ப்பு அடையாளமாக மாற்றி யவர்கள். அதிகாரத்தை எதிர்த்து உண்ணாவிரதம் இருப்பதை முதன் முதலாகத் தொடங்கியது ரஷ்யா. சைபீரியாவில் உள்ள சிறைச்சாலை யில் பெண் கைதிகள் கொடுமைப் படுத்தப்படுவதை எதிர்த்து 1888-ம் ஆண்டு கைதிகள் உண்ணாவிரதம் தொடங்கினர். அந்த உண்ணாவிரதத்தை அரசாங்கம் கண்டுகொள்ளவே இல்லை. உண்ணாவிரதம் இருந்த ஆறு கைதிகள் இறந்துபோனதால் போராட்டம் வலிமை அடைந்தது. அதைத் தொடர்ந்து, கைதிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தி சிறை அதிகாரியை இடமாற்றம் செய்ததோடு, அடிப்படை வசதிகளையும் செய்துகொடுத்தது. இங்கிலாந்திலும் முதல் உண்ணாவிரதம் இருந்தவர் ஓர் பெண் கைதியே!

இந்தியாவில் உண்ணாவிரதத்தைப் போராட்ட முறையாக்கி வெற்றிபெற்ற பகத்சிங், தன்னுடைய சிறை வாழ்வில் 114 நாட்கள் உண்ணாவிரதம் இருந் திருக்கிறார். மகாத்மா காந்தி, தன்னுடைய பொதுவாழ்வில் மொத்தம் 17 முறை உண்ணாவிரதம் இருந்திருக்கிறார். வன்முறைக்கு எதிராகவும். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் தீண்டாமை கொடுமையைப் போக்குவதற்காகவும் மதக் கலவரத்தை தடுக்கவும் காந்தி உண்ணாவிரதம் இருந்திருக்கிறார். அஹிம்சை போராட்டத்தில் முக்கிய அம்சமாக இருந்தது உண்ணாநோன்பே!

தமிழ்நாட்டுக்கு அப்பெயர் சூட்டப் படுவதற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார் சங்கரலிங்கனார். எத்தனை கல்வி நிலையங்களில் அவரது உருவப்படம் மாட்டப்பட்டிருக்கிறது சொல்லுங்கள்?

வெள்ளைக்காரர்கள் நம்மை ஆண்ட காலத்தில் இங்கிலாந்துக்கு இந்திய மந்திரி ஒருவர் சென்றிருந்தார். அவரிடம் அந்த நாட்டு மகாராணி “உங்கள் நாட்டில் அரிசி எந்த மரத்தில் காய்க்கிறது?” என்று கேட்டார். மகாராணிக்கு நெல்லைப் பற்றி எதுவும் தெரியாது.

இந்திய மந்திரியோ ஒருநாளும் வயல்வெளி பக்கம் எட்டிக்கூடப் பார்த்தவரில்லை. ஆகவே, விசாரித்து பதில் எழுதுவதாகச் சொல்லி இந்தியா திரும்பினார். வந்தவுடன் கவர்னருக்கு இதுபற்றி விசாரித்து அறிக்கை தாக்கல் செய்யும்படியாக ஆணையிட்டார். கவர்னரும் வெள்ளைக்காரர். ஆகவே, அவருக்கும் பதில் தெரியவில்லை. விரைந்து நடவடிக்கை எடுத்து உண்மை அறிக்கை தாக்கல் செய்யும்படி அவர் கலெக்டருக்கு அனுப்பி வைத்தார்.

கலெக்டர் அவசரக் கடிதத்தைக் கண்டு உடனே உண்மையைக் கண்டறிந்து பதில் எழுதும்படி ரெவின்யூ இன்ஸ் பெக்டருக்கு அனுப்பி வைத்தார். ரெவின்யூ அதிகாரிக்கு வயல் இருந்தது. ஆனால், கவர்னர் எந்த மரத்தில் அரிசி காய்க்கிறது என்று கேட்கிறார் என்றால், நிச்சயம் அப்படி அரிசி காய்க்கும் மரம் ஒன்று இருக்கக்கூடும். நாம் முட்டாள்தனமாக பதில் எழுதி விடக்கூடாது என முடிவு செய்து உண்மையைக் கண்டறிந்து, உடனே தகவல் அனுப்பும்படி தலையாரி ஒருவருக்குக் கடிதம் அனுப்பி வைத்தார்

தலையாரியோ குடிகாரன். அவன் கடிதத்தைப் படித்து முடித்தவுடன் என்ன முட்டாள்தனமான கேள்வி என நினைத்தான். ஆனால், அரசாங்க காரியம். பொறுப்பாக பதில் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்து, தான் கள் குடித்துக் கொண்டிருந்த மரத்தை நிமிர்ந்து பார்த்தான்.

அது பனைமரம். உடனே, அரிசி பனைமரத்தில் காய்க்கிறது என பதில் எழுதி அனுப்பி வைத்தான். அந்த பதில், உடனே கலெக்டர் மூலம் கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கவர்னர் அதை மந்திரிக்கு அனுப்பி வைத்தார். உடனே இங்கிலாந்துக்கு இந்த விவரம் தந்தியில் தெரிவிக்கப்பட்டது. மறுநாள் மகாராணி 'இந்தியாவில் பனை மரத்தில் அரிசி விளைகிறது' என்று அறிவிப்பு செய்தார் என்று கேலியாக சொல்கிறது தமிழக நாட்டுப்புறக் கதை ஒன்று. இதன் பல்வேறு வடிவங் கள் புழக்கத்தில் உள்ளன. எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களும் இது போன்ற கதை ஒன்றை தொகுத்திருக் கிறார்

மக்கள் தங்களை ஆள்பவர்கள் மீதும். அரசியல் செயல்பாடுகளின் மீது கொண்டிருந்த அவநம்பிக்கையைத் தான் இந்த இரண்டு கதைகளும் அடையாளப்படுத்துகின்றன. இக்கதை களைக் கேட்கும்போது வேடிக்கையாக இருந்தாலும் முடிவில் உண்மை சுடவே செய்கிறது. அதுதான் இவை காலம் கடந்து நிற்கும் கதைகள் என்பதற்கான சான்று!

இணையவாசல்: >இந்திய நாட்டுப்புறக் கதைகளை அறிந்துகொள்ள
http://mocomi.com/fun/stories/indian-folk-tales/

## பகுதி 23 - 'ஒடோமி' கதை

ஒவ்வொரு மனிதனும் தன்னை மட்டுமே கஷ்டங்கள் துரத்துவதாகவே எண்ணி, நினைத்து வருந்துகிறான். கஷ்டகாலத்தில் மனிதர்களுக்கு துணையாக இருப்பது ஆறுதலான வார்த்தைகள்தான். அதை எப்படி பயன்படுத்துவது என்றுதான் நாம் அறிவதில்லை.

ஒருநாள் என் வீட்டின் அருகிலுள்ள மரத்தில் இருந்து ஒரு காக்கை குஞ்சு கீழே விழுந்துவிட்டது. உடனே காகங்கள் கூட்டமாக ஒன்றுகூடி, அதைக் காப்பாற்ற எத்தனித்தன. குஞ்சு எழுந்து இயலாமல் தடுமாறியது. காகங்கள் ஒன்றுகூடி கரைந்து சத்தமிட்டன. அந்தக் காட்சியைப் பார்க்கும்போது மனதை பிசைந்தது. ஏதோ ஒரு காகத்தின் குஞ்சு கஷ்டப்பட்டால் நமக்கென்ன என காகங்கள் சும்மா இருக்கவில்லை..

ஒருநாள் குழிக்குள் விழுந்துவிட்ட யானைக் குட்டியைக் காப்பாற்ற காட்டு யானைகள் ஒன்றுசேர்ந்து முயன்றதையும், காப்பாற்ற முடியாமல் போனபோது கண்ணீர்விட்டபடியே குழியைச் சுற்றிச் சுற்றி வந்ததையும் தொலைக்காட்சியில் ஒருநாள் பார்த்தேன்.

யானைகளுக்கு அடுத்தவர் கஷ்டத்துக்கு உதவி செய்யுங்கள் என்று யாரும் பாடம் நடத்தியதில்லை. மனிதர்களுக்குத்தான் எதையும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். ஆயிரம் அறத்தைப் புகட்டினாலும் மனிதன் சுயநலத்தைவிட்டு எளிதில் வெளிவரவே மாட்டான்.

ஒரு காலத்தில் விவசாயிக்கு கை காலின்றி ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் 'லெப்போ'. அவன் புழுவைப் போல ஊர்ந்து கொண்டிருப்பது பெற்றோருக்கு வருத்தம் தந்தது. 'லெப்போ' தனது தந்தையிடம், தான் கடவுளைச் சந்தித்து மன்றாடப் போவதாகச் சொல்லிப் புறப்பட்டான். அவன் உருண்டபடியே போய்க் கொண்டிருந்தபோது, ஒரு விவசாயி "எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?' ' எனக் கேட்டான்.

"கடவுளைக் காணப் போய்க்கொண்டிருக்கிறேன்!" என்று 'லெப்போ' சொன்னபோது, "கடவுளை பார்த்தால் எனக்காக ஒரு கேள்வி கேள். நான் கஷ்டப்பட்டு உழைத்தாலும் ஏன் முன்னேற முடியவில்லை என்பதை அறிந்துகொண்டு வா" என்றான்.

இன்னொரு ஊரில் ஒரு நெசவாளி , "நானும் ஐந்து சகோதரர்களும் ஒன்றாக நெசவு நெய்கிறோம். சகோதர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார்கள். நான் மட்டும் நோயாளியாக இருக்க என்ன காரணம் என கேள்வி கேட்டு வா…" என்றான்.

கடவுளைக் காண, இன்னொரு ஊரைக் கடந்து சென்றபோது லெப்போவிடன் ஒரு செல்வந்தப் பெண் "நீ கடவுளை பார்த்தால் எனக்கு எல்லா செல்வங்களும் இருந்தும் குழந்தை செல்வம் இல்லாமல் போனது ஏன், எனக் கேட்டு வா" என்றாள்

மூன்று கேள்விகளையும் மனதில் நிறுத்திக்கொண்டு, கடவுளைத் தேடி அலைந்தான் 'லெப்போ'. வருஷங்கள் ஓடின. கடவுளைக் கண்டுபிடிக்க முடியாமல் சோர்ந்து போனான்.

முடிவில் ஒருநாள் சாலையில் கண் தெரியாத ஒரு கிழவர் மயங்கிக் கிடப்பதைக் கண்டு, தனது வாயிலேயே நீரை உறிஞ்சிக் கொண்டுவந்து, கிழவர் மீது தெளித்து எழுப்பினான் 'லெப்போ'.

மயக்கம் தெளிந்த கிழவர், "நீ யார்?" எனக் கேட்டார்.

"என் பெயர் 'லெப்போ". எனக்கு கை காலில்லை. அதை கேட்டு வாங்க கடவுளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்!" என்றான்

அதைக் கேட்ட கிழவர், "எனக்கு கடவுளின் வீடு தெரியும். அதைச் சொல்ல வேண்டும் என்றால் உன் கண்களை ஈடாகத் தர வேண்டும்!" என்றார். 'லெப்போ' உடனே தன் கண்களைத் தோண்டி எடுத்து அந்தக் கிழவரிடம் நீட்டினான்.

மறுநிமிடம் கிழவரின் உருவம் மறைந்து, கடவுள் அவன் முன்னால் தோன்றினார். 'லெப்போ'வுக்கு உடனே கைகால்கள் உருவாகின. சந்தோஷத்துடன் அவன் தன்னிடம் விவசாயியும், நெசவாளியும், பெண்ணும், கேட்ட கேள்விகளைக் கடவுளிடம் கேட்டான்.

கடவுள் பதில் சொன்னார்:

"விவசாயி தனது நிலத்தில் விளைந்த தானியங்களைக் கூலியாட்களுக்குப் பகிர்ந்து அளிப்பதில்லை. அதனால் அவன் கஷ்டப்படுகிறான். நெசவாளியோ, தனது சகோதரர்களின்

உழைப்பைத் திருடி பொருள் சேர்க்கிறான். ஆகவே, அவன் நோயாளியாக இருக்கிறான்!' என்றார் கடவுள்.

"சரி, அந்தப் பெண்ணுக்கு ஏன் குழந்தை இல்லை?" என்று கேட்டதற்கும் "அவளிடம் அன்பே இல்லை. பணப் பேயாக இருக்கிறாள். எப்போது தனது செல்வத்தை இல்லாதவர்களுக்கு பகிர்ந்து தருகிறாளோ, மற்ற குழந்தைகளைத் தன் குழந்தையைப் போல நினைக்கிறாளோ… அப்போது அவளுக்குக் குழந்தைப் பிறக்கும்!"

கடவுளின் பதில்களைக் கேட்டு, 'நமது செயல்களே நமது கஷ்டத்துக்கான மூலக் காரணம் என்பதைப் புரிந்துகொண்ட 'லெப்போ' கடவுளிடம் கடைசியாக கேட்டான்: "மனிதனுக்கு கை கால்களை எதற்காக படைத்தீர்கள்?"

"ஓடோடிச் சென்று உதவி செய்ய கால்களையும், அள்ளி தரவும் அரவணைக்கவும் கைகளையும் படைத்தேன்!" என்றார் கடவுள். 'நமது கை கால்கள் நமக்குரியது மட்டுமில்லை; அடுத்தவர் துயர் துடைப்பதற்குமானது' என்பதை புரிந்துகொண்டான் 'லெப்போ'

இந்தக் கதை 'ஒடோமி' பழங்குடி மக்களால் சொல்லப்படுகிறது. கதையின் வயது ஆயிரம் வருஷத்துக்கு மேல் இருக்கும். என்றாலும், அது சொல்லும் உண்மை காலத்தைத் தாண்டி ஒளிர்ந்துகொண்டேதான் இருக்கிறது!

## பகுதி 24 - வெறும் கற்பனை!

நம்மில் பலர் கற்பனையிலேதான் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். எதிர்காலத்தில் கிடைக்கப்போகிற பணம், அதைக் கொண்டு வாங்கப் போகிற கார், வீடு, வசதிகளைப் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றி ஆளப் போவதாக தங்களுக்குத் தானே பேசிக் கொள்கிறார்கள்.

ஆசைப்படுவது வேறு. பேராசைப் படுவது வேறு. ஆசைப்படுவதை அடைவது எளிதில்லை. உறுதியா கப் போராட வேண்டும். விடாப்பிடி யாக முன்னேற வேண்டும். உற்ற துணையும் நல்யோசனைகளும் வழி காட்டவேண்டும். ஆனால், வெறும் கற்பனையில் திளைப்பதற்கு இவை எதுவும் தேவையில்லை.

இன்றைக்கு செங்கல்பட்டு பக்கம் அரை கிரவுண்ட் வாங்கிப் போட்டால் 2050-ல் நிச்சயம் அது 50 கோடி போகும் என்று பேசிக்கொண்டு இருக்கும் பலரை நான் அறிவேன். கையில் பணம் வைத்திருப்பவர்கள் இப்படியான யோசனைகளில் ஈடுபடுவது இல்லை. வெறும் ஆட்கள்தான் ஆயிரம் யோசனை வைத்திருக்கிறார்கள். தேடித் தேடி அறிவுரை சொல்கிறார்கள்.

குழந்தை பிறந்தவுடனே அது படித்து பெரியவனாகி, அமெரிக்கா போய் சம்பாதித்து அனுப்புகிற பணத்தில் எங்கே வீடு வாங்குவது என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இதை எதிர்கால கனவு என்று சொல்ல முடியாது. அசட்டு கற்பனை என்று வேண்டுமானால் சொல்லலாம்.

சினிமாவிலும், அரசியலிலும் தன் னைப் பற்றி மிகையான எண்ணம் கொண்ட மனிதர்கள் நிறைய இருக்கிறார் கள். அவர்களை நம்புகிறவர்களும் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் பேசிக் கொள்வதைக் கேட் டால் வேடிக்கையாக இருக்கும். நிஜத்தை ஏன் புரிந்துகொள்ள மறுக் கிறார்கள்?

ஸ்பெயின் நாட்டில் ஒரு கதை சொல்கிறார்கள். ஒரு சேவல் தண்ணீரில் தன் முகத்தை பார்த்தது. தனக்கு அழ கான ஒரு செங்கொண்டை இருப்பதை கண்டதும், அது உற்சாகத்துடன் சொன்னது: “நான்தான் இனிமேல் இந்தத் தேசத்தின் புதிய மன்னர்!”

அப்படி தன்னை அது நினைத்துக் கொண்டவுடன் அதற்கு ஏற்பட்ட உற்சாகம், அந்தச் சேவலை உரத்து கூவச் செய்தது. ‘இனி, தன்னுடைய வேலை தலைநகருக்குப் போய், முடி சூடிக்கொள்ள வேண்டியதுதான்’ என்று அந்தச் சேவல் நினைத்துக்கொண்டது.

மறுநாள் அது தன்னை அலங்கரித்துக் கொண்டு தலைநகரை நோக்கிப் புறப்பட்டது. போகிற வழியில் ஒரு கோழி அந்தச் சேவலிடம் “எங்கே போகிறாய்? நானும் உன்னுடன் வரலாமா?” எனக் கேட்டது.

அதற்கு சேவல், “நான் புதிய மன்னராக முடி சூடிக்கொள்ளப்போகிறேன். அழகி யான நீதான் இனிமேல் ராணி. வா… நாம் சேர்ந்தே இருவரும் பயணம் செய்வோம்!” என்றது.

அவை இரண்டும் கம்பீரமாக நடந்து சென்றுகொண்டு இருந்தன. அப்போது அந்த வழியில் இருந்த எலிகளும், அணில்களும் அவற்றைப் பார்த்து “புது ராஜா… வாழ்க வாழ்க!” என வாழ்த்தொலி செய்தன.

வழியில் ஒரு முயல் அவற்றைப் பார்த்து “எங்கே போகிறீர்கள்… நானும் உங்களுடன் வரலாமா?” எனக் கேட்டது.

“நான் தேசத்தின் புதிய மன்னராக பதவியேற்க போகிறேன். இவள் என் ராணி!” என்றது சேவல்.

அதைக் கேட்ட முயல் வியந்து போய், “எனக்கு ஒரு மந்திரி பதவி கிடைக்குமா?!” எனக் கேட்டது.

உடனே சேவல், “உன்னைப் பார்த்தால் படித்த முயலைப் போல தெரிகிறது. இன்று முதல் நீதான் என் பிரதான அமைச்சர்!” என்றது.

அவர்கள் மூவரும் தலைநகரை நோக்கி நடந்தார்கள். அப்போது ஒரு வான்கோழி அவற்றிடம் “எங்கே போகிறீர்கள் மூவரும்?” என விசாரித் தது. சேவல் உண்மையைச் சொன்னதும், “நானும் கூட வரலாமா?” எனக் கேட்டது. உடனே சேவல், வான்கோழியை தன்னு டைய தேசத்தின் ‘அரண்மனை நாட்டியக் காரி’யாக நியமித்தது.

சேவலும் கோழியும் முயலும் வான் கோழியும் தலைநகருக்குள் நுழைந்தன. பதவியேற்கும் முன்பாக தேவாலயத் துக்குப் போய் வணங்க வேண்டும் என முடிவு செய்தது சேவல்.

அதன்படியே சேவலும் கூட்டாளிகளும் அங்கிருந்த ஒரு பழைய தேவலாயத்துக்குள் சென் றன. அங்கிருந்த மதகுரு சேவலையும் கூட்டாளிகளையும் பார்த்த வுடன் வேகமாக கதவை அடைத்தான். தனக்கு விசேஷ மரியாதை செய்யப் போகிறான் என்று சேவல் கம்பீரமாக நின்றது.

மதகுருவோ தன் பணியாளர்களை அழைத்து சொன்னான்: “இவற்றை பிடித்து அடித்துக் கொல்லுங்கள். விருந்து சாப்பிட்டு நிறைய நாட்களாகி விட்டது!”

மறு நிமிடம் பணியாளர்கள் வான் கோழியையும் முயலையும் கோழியை யும் வளைத்துப் பிடித்துக் கொன்றார்கள். பயந்து போன சேவல் “நான் இந்த நாட்டின் ராஜா.... ராஜா!” என்று கத்தியது.

“அப்படி வேற நினைப்பு இருக்கா உனக்கு?!” என்று தடியால் ஓங்கி அடித்தான் பணியாளன்.

உருப்படாத ஆசையால் தான் கெட் டதுமில்லாமல், உடன் இருந்தவர்களை யும் சாகடித்தது சேவல். இந்தச் சேவலைப் போல நடந்துகொள்பவர்கள் எங்கும் இருக்கிறார்கள். அவர்கள் தனக்கென ஒரு துதிபாடும் கூட்டத்தையும் சேர்த்துக் கொண்டுவிடுகிறார்கள். உண்மையை ஒருபோதும் அவர்கள் ஏற்றுக்கொள்வதே இல்லை.

திறமையுள்ளவர்கள் தாழ்வுணர்ச்சி யால் அவதிப்பட்டுக் கொண்டு குறுகிய வட்டத்துக்குள் உழன்று கொண்டிருப் பதும்; ஒன்றுமில்லாதவர்கள் ஆர்ப்பாட்ட மாக நடந்துகொள்வதும் இன்றைய உலகின் இயல்பாகவே இருக்கிறது.

சீனாவில் நான்காம் நூற்றாண்டில் ஹுவா என்றொரு கவிஞன் இருந் தான். அவன் குப்பைமேட்டில் திரியும் சிறுகுருவி ஒன்றைப் பற்றி வியந்து கவிதை எழுதியிருக்கிறான். அக்கவிதையில் கிளிகள் அழகாக இருக்கின்றன. பழக்கப்படுத்தினால் மனிதர்களைப் போல பேசுகின்றன. அதனாலே அதை கூண்டில் அடைத்து சிறைப்படுத்திவிடுகிறார்கள்.

கழுகு வலிமையானது. கூர்மையான கண்களைக் கொண்டது. அதன் சிறகடிப்பில் வானமே அதிரக்கூடியது. ஆனால், அதையும் வேட்டைக்காரர்கள் வேட்டையாடிவிடுகிறார்கள். வெண் ணிறப் புறாக்கள் அமைதியானவை. ஆனால், அவை பலி கொடுக்கப் பட்டுவிடுகின்றன.

அழகில்லாத, எவருக்கும் விருப்பமில் லாத இந்த குப்பைக் குருவியோ சுதந்திரமாக இருக்கிறது. வேட்டைக் காரனைப் பற்றியோ, கூண்டை பற் றியோ எந்த பயமும் அதற்குக் கிடையாது.

சிறிய உயிர்களை உலகம் கண்டு கொள்வதில்லை. அவையும் உலகை கண்டு பயப்படுவதில்லை. தன் சுதந் திரத்தில் தன் விருப்பப்படி வாழ் கின்றன என்று முடிகிறது அந்தக் கவிதை.

எளிய மனிதர்கள் கஷ்டத்தில் உழலு கிறார்கள். சிரமப்படுகிறார்கள். ஆனால், சேவலைப் போல வீண்கற்பனையில் திளைப்பதில்லை. பேராசைக் கொள் வதில்லை. பாமர மக்களை விட

படித்தவர்களிடம்தான் பேராசை அதி கமிருக்கிறது. இதைத்தான் படிப்பு உருவாக்கியிருக்கிறது என்றால் அதற் காக வேதனைப்படவே வேண்டியிருக்கிறது!

## பகுதி 25 - ஆமையும் முரசும்!

நாம் யார் என்பதை நமது செயல் களே தீர்மானிக்கின்றன. சிறி யதோ, பெரியதோ எப்படியிருப் பினும் ஒரு செயலின் பின்னுள்ள எண் ணம் முக்கியமானது. நற்செயல்கள் புரி வதற்கு நல்லெண்ணங்களே முதற்படி.

உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் நமக்கு தெரியும். ஆனால், நல்ல எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளவும் கடை பிடிக்கவும் என்ன வழிமுறைகள் இருக்கின்றன? அதில் எத்தனை பேர் அக்கறை காட்டுகிறார்கள்?

நம் பிள்ளைகளிடம் நாம் சுயநலத்தை மட்டுமே அறிமுகம் செய்கிறோம். அடுத்தவர் என்பவரை எதிரியாகவே அடையாளம் காட்டுகிறோம். நல்ல எண்ணங்கள் மனதில் படிய வேண்டும் என்பதற்காக முந்தைய தலைமுறை பெற்றோர்கள், ஒரே விஷயத்தை பலமுறை சொல்லிக்கொண்டே இருப் பார்கள். அது மனதில் ஆழமாக பதிந்துவிடும்.

அடுத்தவருக்கு இடையூறு செய் கிறோம் என்று தெரிந்திருந்தபோதும் அதைப் பற்றி துளிக் கூட குற்றவுணர்ச் சிக் கொள்ளாத இளம்தலைமுறை உரு வாகி வருவது ஆபத்தானது. எதையும் நினைவில் வைத்துக்கொள்ளும் ஆற்றல் இல்லாத தலைமுறை உருவாகி வருகிறது.

கம்ப ராமாயணத்தில் ஆயிரம் பாடல் களை மனதில் இருந்து சொல்லக்கூடி யவர்கள் அன்று இருந்தார்கள். திருக் குறள், சிலப்பதிகாரம் முழுமையாக அறிந்தவர்கள். ஷேக்ஸ்பியரின் முழு நாட கத்தையும் நினைவில் வைத்திருந்து எடுத்துச் சொல்லும் திறன்கொண்டவர் கள் பலர் இருந்தார்கள்.

இன்று நாம் கணிணியை அதிகம் சார்ந்து இயங்குவதால் நினைவாற்றலை இழந்து வருகிறோம். இப்படியே போனால் அடுத்த தலைமுறைக்கு தனது தந்தை, தாயின் பெயரைத் தவிர வேறு எதுவுமே நினைவில் நிற்காது. கவிதை படித்தல் என்பது நினைவைக் காப்பாற்றும் வழி என்கிறார் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் மரியோ வர்கஸ் லோசா.

பல ஆண்டுகளுக்கு முன்பாக ஜெர்மானியச் சிறுகதை ஒன்றை வாசித்தேன். அதில் ஒரு அப்பாவும் மகனும் நண்பர் ஒருவரின் வீட்டுக்கு விருந்துக்குப் போகிறார்கள்.

விருந்துக்கு முன்பாக அவர்களுக்குத் தேநீர் வழங்கப்படுகிறது. அப்பா கையில் எடுப்பதற்கு முன்பு தேநீர் கோப்பை தவறி கிழே விழுந்து உடைந்துவிடுகிறது. சத்தம் கேட்டு வெளியே

வந்த நண்பர், “அழகான சீனக் கோப்பை இது. எப்படி உடைந்தது?” என ஆதங்கமாகக் கேட் கிறார்

“எனது கை தவறி கீழே விழுந்து உடைந்துவிட்டது” என அப்பா வருத்த மான குரலில் சொல்லவே, நண்பர் உடைந்த பீங்கான்களை அள்ளிக் கொண்டு போனார். இதைக் கண்ட மகன் அப்பாவிடம் கேட்டான்:

“உங்கள் கை கோப்பையில்படவே இல்லையே. பின்பு ஏன் நீங்கள் செய்யாத குற்றத்தை ஒப்புக் கொண்டீர்கள்?”

“உண்மைதான்! தேநீர் கோப்பை யைக் கொண்டுவந்து வைத்தது நண்பரின் மகள். அவள் கவனமாக மேஜை மீது அதை வைக்கவில்லை. ஆகவே தவறி விழுந்துவிட்டது. இந்த உண்மையைச் சொன்னால் நண்பர் ஏற்றுக்கொள்வாரா? நிச்சயம் என் மீது சந்தேகப்படவே செய்வார். அதற்குப் பதிலாகச் செய்யாத குற்றத்தை ஏற்றுக் கொண்டுவிடுவதே சரி என நினைத் தேன். ஒருவேளை இந்த உண்மைக்கு நீதான் சாட்சி என விளக்கி சொல்லி யிருந்தால் அவர் மகளைக் கோபித்துக் கொண்டிருப்பார். அதன்பிறகு அவரது மகளுக்கு என்னைப் பிடிக்காமல் போய்விடும். மெல்ல எங்கள் நட்பில் விரிசல் ஏற்பட்டுவிடும். உறவுகள் உடை படாமல் காப்பாற்ற இப்படிச் சிறு பொய் கள் தேவைப்படவே செய்கின்றன!” என்றார்.

அப்பாவின் முப்பது ஆண்டுகால அனுபவம் அவரை இந்த முடிவு எடுக் கச் செய்கிறது. வாழ்க்கை நமக்குக் கற்றுத்தரும் பாடம் இதுபோன்றது தானே!

இதற்கு மாறாகச் சிலர் தங்களின் சுயநலத்துக்காகக் குடும்ப உறவு களைச் சிதைப்பதுடன் மற்றவர் களின் சந்தோஷத்தையும் கெடுத்துவிடு கிறார்கள். உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது எளிது. காப்பாற்றுவது எளி தில்லை. விட்டுக்கொடுத்தலும், புரிந்து கொள்ளுதலும் அரவணைத்துப்போவ தும் அவசியமானது.

ஒரு காலத்தில் ஆமைகள் அரண் மனையில் செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்டன. அப்படி ஒரு ஆமை மன்னரின் செல்லமாக விளங்கியது. அந்த அரண்மனையில் விநோதமான முரசு ஒன்றிருந்தது. அதை நான்கு முறை ஒலித்தால் தேவையான உணவும் தங்க நாணயங்களும் வெளிப்படும். இதற்குப் பதிலாக எட்டுமுறை ஒலித்தால் அதில் இருந்து ராட்ச மனிதர்கள் வெளிப்பட்டுத் துவம்சம் பண்ணிவிடுவார்கள்.

இந்த முரசை எப்படியாவது தன தாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆமை ஆசைப்பட்டது. அதற்காக ராணியை அடிக்கடி சந்தித்து அவளைப் புகழ்ந்து பேசியது. வானளாவ பாராட் டியது. இதனால் ராணி மயங்கிப்போய் “உனக்கு என்ன பரிசு வேண்டும்... கேள்!” என்றாள்.

“எனக்கு மாய முரசு வேண்டும்!” என்றது ஆமை.

மகாராணி வேறு வழியில்லாமல் மன்னருக்குத் தெரியாமல் மாய முரசை ஆமைக்குப் பரிசாகக் கொண்டுவந்து கொடுத்தாள்.

ஆமை அதைக் கண்டவுடன் பேராசைக் கொண்டு, நான்கு முறை அடிப்பதற்குப் பதிலாகப் பதினாறு முறை அடித்தது. அவ்வளவுதான். ராட்சச மிருகங்களும், மனிதர்களும் அதில் இருந்து வெளிப்பட்டு ஆமையைக் கொல்வதற்காகத் துரத்தினார்கள்.

கண்ணில் பட்ட வேறு ஆமைகளை எல்லாம் கொன்று குவித்தார்கள். இந்த ராட்சச மனிதர்களிடம் இருந்து தப்பிப் பிழைக்கவே மன்னரின் ஆமை தண்ணீ ருக்குள் போய் ஒளிந்துகொண்டது. வெளியே வரவேயில்லை.

அன்று முதல்தான் ஆமைகள் தண் ணீருக்குள் வாழத் தொடங்கின. இப் போதும் தன்னைக் கொல்வதற்காக ராட்சச மனிதர்கள் வெளியே இருக் கிறார்களா எனப் பார்ப்பதற்குத்தான் ஆமை தண்ணீருக்கு மேலாக வந்து போகிறது என்கிறது அந்தக் கதை.

நைஜீரியா பழங்குடி மக்கள் சொல் லும் இந்தக் கதையில் தனக்குத் தேவையில்லாத ஒன்றை அடைய முயன்ற ஆமை, முடிவில் உயிர் பயத்தில் அலைகிறது. மனிதர்களும் இப்படித்தான், பேராசையால் ஏதாவது ஒரு பிரச்சினையில் மாட்டிக்கொண்டு உயிர் தப்ப ஒளிந்து அலைகிறார்கள்.

ஆயிரம் நற்செயல்கள் நம்மைச் சுற்றி நடந்தாலும், எதையும் நாம் பின்பற்று வதில்லை. ஆனால், ஒரேயொரு மோசடி வேலை நடந்தாலும் அதை நாமும் செய்து பார்த்தால் என்னவென்று யோசிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். நல்லதை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்க வேண்டியுள்ளது. கெட்டது தானே ஒட்டிக்கொண்டுவிடுகிறது.

பச்சிலைகள் உடலை நலப்படுத்து வது போலவே கதைகள் மனிதர்களின் அகத்தை நலப்படுத்துகின்றன. கதை கேட்பதும், சொல்வதும் வெறும் செய லில்லை. பரஸ்பரம் உற்சாகம் கொள் ளவும், தைரியம் தரவும், உலகைப் புரிந்து கொள்ளவும் உதவும் வழிகாட்டுதலாகும். அதனால்தான் உலகில் இத்தனை லட்சம் கதைகள் கொட்டிக்கிடக்கின்றன. கதை சொல்லிகள் உருவாகிக்கொண்டே இருக்கிறார்கள்.

## பகுதி 26 - வான் விருந்து!

எனக்குத் தெரிந்த ஒரு பேராசிரியரு டன் பேசிக் கொண்டிருந்தேன். தனது மகனின் திருமணம் நடந்தது பற்றி சொல்லிக் கொண்டு வந்தபோது, ஒரு நபரைப் பற்றி குறிப்பிட்டார்:

“எமகாதகன் சார். என் வாழ்க்கையில் அவனை இனி ஒரு தடவைக்கூட சந்திக்க மாட்டேன்!”

ஒருவரைக் கண்டு இவ்வளவு ஏன் பயப்படுகிறார்? அப்படி என்ன செய்துவிட்டார் என்று கேட்டேன்.

பேராசிரியர் சொன்னார்: “பெண் வீட்டுக்குத் திருமணம் பேசுவதற்காக சென்றபோது, துணைக்கு இருக்கட்டுமே என ஒரு நண்பரை அழைத்துக்கொண்டு போனேன். அவர் இன்சூரன்ஸ் துறை

யில் இருப்பவர். நிறைய மனிதர்களை அறிந்தவர் என்பதால், உடன் அழைத் துக்கொண்டு போனேன்.

அவரோ பெண் வீட்டுக்குப் போன நேரத்தில் இருந்து விபத்து, சாவு. இழப் பீடு, மோசடி என அவரது துறையைப் பற்றியே பேச ஆரம்பித்துவிட்டார். பெண் வீட்டாருக்கு அவரது பேச்சு பிடிக்கவே இல்லை. பேச்சை மாற்றினாலும் அவர் விடவில்லை. கடைசியில் ஒருவர் கோபித் துக்கொண்ட பிறகுதான் பேச்சை நிறுத்தினார்.

இருப்பினும் அமெரிக்காவில் வசிக் கும் அவரது மகனைப் பற்றி உயர்வாக பேசுகிறேன் என்று தப்பும் தவறுமாக நண்பர் பேசவே, அந்தத் திருமணமே நின்றுபோய்விட்டது. பின்பு, வேறொரு பெண் பார்த்து திருமணம் செய்தோம். அன்றோடு அந்த நல்ல மனிதரின் உறவை முறித்துக் கொண்டுவிட்டேன்.

'உதவிக்கு இருக்கட்டுமே என நினைத்து உபத்திரவத்தைத் தேடிக் கொள்ளாதே' எனப் பெரியவர்கள் சொல் வார்கள். அதைக் கேட்டால் புரியாது. அனுபவித்தால்தான் உணர முடியும்!" என்றார் பேராசிரியர்.

அவர் சொன்னது நிஜம்! நானும் அப்படியான மனிதர்களை அறிந்திருக் கிறேன். பாண்டிச்சேரியில் ஒரு இலக் கியக் கூட்டத்துக்குப் புறப்பட்டுக் கொண்டு இருந்தபோது, "நானும் கூட வரட்டுமா?" என ஒரு நண்பர் கேட்டார். பேச்சுத் துணைக்கு இருக்கட்டும் என அழைத்துக் கொண்டேன். கார் புறப்பட் டதும் அவர் தனது பென்டிரைவ்வை சொருகி ரீமிக்ஸ் பாடல்களைக் கேட் கத் தொடங்கினார். கொடூரம் தாங்கமுடி யாமல் அதை அணைத்துவிடும்படி சொல் லியதும், அவர் பாடத் தொடங்கிவிட் டார். அது, இதை விட கொடுமை.

நான் புத்தகம் ஒன்றை கையில் எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். அவர் சாலை யோரக் கடை எதைக் கண்டாலும் காரை நிறுத்தச் சொல்லி இறங்கிப் போய்விடு வார். சிகரெட், பபிள்கம், இளநீர், டீ, சமோசா, பான்பராக் என கார் முப்பது இடங்களில் நின்று நின்றுபோனது. ஒரு வழியாக புதுச்சேரிக்குச் சென்றபோது கூட்டம் நடக்கும் இடத்தில் என்னை இறக்கிவிட்டு, "காரை எடுத்துக்கொண்டு அருகிலுள்ள சிதம்பரம் கோயில் வரை போய்விட்டு வரட்டுமா?" எனக் கேட்டார்.

"அதெல்லாம் முடியாது. கூட்டம் முடிந்தவுடன் நான் கிளம்பிவிடுவேன்" என்றேன். அவர் கூட்டத்தின் உள்ளே வரவேயில்லை. தலைவலிக்கு மாத் திரை வாங்க வேண்டும் எனச் சொல்லி கிளம்பிப் போனார்.

மதியம் கூட்டம் முடிந்து புறப்படத் தயா ரானபோது முழுபோதையில் அவர் காரின் பின்சீட்டில் உறங்கிக் கொண்டி ருந்தார். எழுப்பவே முடியவில்லை. ராட்சஸக் குறட்டை. அப்படியே அவரை சென்னைக்கு அழைத்து வந்தேன். மகாபலிபுரம் கடந்தவுடன், காரை நிறுத் தச் சொல்லி இறங்கிப் போய் சிறுநீர் கழித்துவிட்டு வந்தார். தனக்கு பசி அதிகமாகிவிட்டது, கட்டாயம் பிரியாணி வேண்டும் என்றார்.

வேறு வழியின்றி அதையும் வாங்கித் தந்தேன். தன்னை தி. நகரில் விட்டுவிடவும் என உரிமையோடு சொல்லி இறங்கிக் கொண்டார். நான் வீடு வந்து சேரும்போது ஒரு குறுந்தகவல்

வந்தது. அவரேதான். தன்னை அழைத்துக்கொண்டு போய் அவமானப்படுத்திவிட்டதாக மிக மோச மாக எழுதியிருந்தார்.

இது நான் அனுப்பவேண்டிய குறுஞ் செய்தி அல்லவா என நொந்துகொண் டேன். அதன் பிறகு அவர் என்னைத் தொடர்புகொள்ளவே இல்லை. சில நாட்களுக்கு முன்பாக “அடுத்த கூட்டம் எங்கே உடன் வரலாமா?” எனக் கேட்டு ஒரு குறுஞ்செய்தி வந்தது. பதறிப் போய்விட்டேன்.

ஒற்றை அனுபவத்தில் நம்மை நிலை குலையச் செய்துவிடும் வல்லமை கொண்டவர்கள் நிறைய இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவி செய்வதோ, அரவணைத்துச் செல்வதோ தவறானது.

சந்தர்ப்பம் கிடைத்தால் சிலர் எவ் வளவு மோசமாக நடந்துகொள்வார்கள் என்பதை நம்மால் நினைத்துக் கூட பார்க்க முடியாது.

ஆப்பிரிக்கப் பழங்கதை ஒன்று இதைப் பற்றிப் பேசுகிறது. பூமியில் பஞ்சம் ஏற்பட்டு விடவே பறவைகள் உண வின்றித் தவித்தன. இதைக் கண்ட மேகங் கள் “எங்கள் வீட்டுக்கு வாருங்கள். விருந்து தருகிறோம்!” எனப் பறவை களை அழைத்தன. இதை ஏற்றுக் கொண்ட பறவைகள் மறுநாள் விருந் துக்கு வருவதாகச் சொல்லி அனுப்பின.

வான் மேகங்கள் கொடுக்கப்போகும் விருந்தைப் பற்றி அறிந்த ஒரு நண்டு “என்னாலும் பசி தாங்க முடியவில்லை. என்னையும் வானத்துக்கு அழைத்துப் போங்கள்” என்றது. “உன்னால்தான் பறக்க முடியாதே… எப்படி எங்களோடு வருவாய்” என பறவைகள் கேட்டன. அதற்கு நண்டு “ஏதாவது ஓர் உபாயம் கண்டுபிடித்து என்னை அழைத்துப் போனால், என்றைக்கும் உங்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன்!” என்றது.

உடனே ஒரு பறவை தன்னுடைய காலை இறுக்கமாகப் பிடித்துக்கொண் டால் அழைத்துப் போவதாக ஆலோ சனை சொன்னது. அதன்படி மறுநாள் பறவைகளுடன் நண்டும் வானை நோக்கிப் பறந்தது.

அங்கே பறவைகள் நண்டை தங் களின் அரசன் என்று அறிமுகம் செய்து வைத்தன. மேகங்கள் நண்டை வரவேற்று வீட்டுக்கு அழைத்துப் போயின. அங்கே பெரிய விருந்து தயாராக இருந்தது.

தான் அரசன் என்பதால், தான் சாப் பிட்ட பிறகே பறவைகள் சாப்பிட வேண் டும் என்று கட்டளைப் பிறப்பித்தது நண்டு. வந்த இடத்தில் எதற்கு சண்டை என பறவைகளும் அதை ஒப்புக்கொண்டன.

பசியில் அங்கிருந்த உணவு வகை கள் அத்தனையும் நண்டு ஒரே ஆளாகத் தின்று தீர்த்துவிட்டது. பாவம் பறவைகள், உணவு கிடைக்காமல் திரும்பிப் போவது என முடிவு செய்தன. அத்துடன் தங் களை ஏமாற்றிய நண்டை அப்படியே விட்டுவிடக்கூடாது என முடிவெடுத்து வானத்தில் இருந்து கீழே தள்ளிவிட்டன. பாறையில் விழுந்த நண்டு, துண்டுத் துண்டாகச் சிதறிப் போனது.

இந்தக் கதை மேகங்களின் கொடைத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. கூடவே, இடம் கிடைத்தவுடனே நண்டு எப்படி மாறிவிடுகிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

இந்த நண்டுக் கதை வங்கப் பஞ்சத் தின்போது நிஜமாகவே நடந்தேறியிருக் கிறது. வணிகர்கள் அரிசி, கோதுமை களைப் பதுக்கி வைத்துக்கொண்டு கொள்ளை லாபத்துக்கு விற்றிருக்கிறார் கள். அரசாங்கத்திடம் போராடி மக்கள் பெற்ற தானியங்களை அதிகாரிகள் கள்ளச் சந்தையில் கொண்டுபோய் விற் றார்கள். வங்கப் பஞ்சம் வெள்ளைக் காரர்களால் திட்டமிட்டு உருவாக்கப் பட்டது.

உணவுப் பிரச்சினையோ, பணப் பிரச்சினையோ எதுவாக இருந்தாலும் எப்போதும் பாதிக்கப்படுகிறவர்கள் சாமானியர்களே. அது எந்த காலத்திலும் மாறவேயில்லை என்பதுதான் வருத்தம் அளிக்கிறது.

இணையவாசல்: >இயற்கை குறித்த பழங்கதைகளை அறிந்துகொள்ள
http://africa.mrdonn.org/fables.html

## பகுதி 27 - இரும்பு மிருகம்!

சாலை விபத்து என்ற ஒன்றே பழங்குடி மக்கள் அறியாதது. அவர்கள் உலகில் வாகன இரைச்சலோ, நெருக்கடியோ, டிரா∴பிக் ஜாமோ எதுவுமே கிடையாது. உண்மையில் அவர்கள் சாலைகளைக் கண்டு பயப்படுகிறார்கள். காட்டுக்குள் சாலை அமைக்கபட்டதுதான், தங்கள் அழிவின் முதற்படி எனக் கருதுகிறார்கள் அவர்கள். வானில் பறவைகளைப் போலப் பறப்பதையும் ஆற்றில் மீன்களைப் போல நீந்துவதையும் பற்றிய கதைகள் அவர்களிடம் இருக்கின்றன. ஆனால், சாலைகளைப் பற்றியோ, வாகனங்களைப் பற்றியோ கதைகள் ஏதும் அவர்களிடத்தில் இல்லை.

வனக் காவலர்கள் காட்டுக்குள் ஜீப்பில் வருவதைக் கண்ட அவர்கள், அதை 'இரும்பு மிருகம்' என்றே கருதினார்கள். ஜீப்பில் ஏறப் பயப்பட்டார்கள். வாகனங்களில் அடிபட்டு மான்கள் செத்துக் கிடப்பதை காணும்போது ஜீப்பை ரத்தம் குடிக்கும் மிருகமாகவே நினைத்தார்கள்.

இடப்பெயர்வு என்பது இன்று சகல மனிதர்களையும் வாழ்விடத்தில் இருந்து பிடுங்கி எறிந்துவிட்டது. பிழைப்புத் தேடி காட்டை விட்டு வெளியேறிய பழங்குடிகள் நகரங்களை வெறுப்பதற்கு முக்கிய காரணம் வாகனங்களே.

இரும்பு, மனிதர்கள் கண்ணில் படாமல் பூமியில் புதையுண்டு கிடந்தது. மனிதன் அதைத் தேடிக் கண்டுபிடித்து உலகுக்கு அறிமுகப்படுத்தியதுதான் இதற்கெல்லாம் காரணம் என்று பழங்குடிகள் நம்புகிறார்கள்.

பிஹாரில் இரும்புத் தாது கண்டுபிடிக்கபட்டது பற்றிய கதைகள் இருக்கின்றன. அதில் ஒரு கதையில், இரும்பை பூமியில் புதைத்து வைத்த கடவுள், அதை மனிதனுக்கு அடையாளம் காட்ட மறுக்கிறது. அவன் கடவுளிடம் இரும்பைக் கொண்டு உழுகருவிகள் செய்யப் போவதாக

சொல்லியே கடவுளிடம் இருந்து இரும்பை வாங்குகிறான். அப்போது கடவுள் அவனிடத்தில் ”இரும்பைக் கையாளுவது அவ்வளவு எளிதில்லை!” என்று எச்சரிக்கை செய்கிறார். அப்போது மனிதன் ”இரும்பால் ஒரு ஆபத்துமே வராது!” என உறுதி தருகிறான்.

இரும்பு மனித வாழ்க்கையைப் பெரிதும் மேம்படுத்தியிருக்கிறது. ஆனால், அதைக் கொண்டுதான் ஆயுதங்களும் வானகங்களும் தயாரிக்கப்படுகின்றன. அவைத் தவறான கைகளில் சேரும்போது விளைவுகள் படுமோசமாகி விடுகின்றன.

ஜெர்மனியில் இருந்து வந்திருந்த தமிழ் குடும்பம் ஒன்று சென்னையில் சாலையைக் கடக்க முயன்றபோது, கார் மோதி மருத்துவமனையில் அனுமதிக்கபட்டதாக செய்தி ஒன்றை வாசித்தேன். பாவம் அவர்கள். தங்கள் ஊரை நினைத்துக்கொண்டு சென்னையில் சாலையைக் கடந்திருக்கிறார்கள்.

எத்தனை எத்தனையோ விபத்துகள், உயிரிழப்புகள் வந்தாலும் மாநகரில் சாலை விதிகளை எவரும் பின்பற்றுவதே இல்லை. வாகனங்களின் குறுக்கே புகுவது. சிக்னலை மீறுவது, நடைபாதைவாசிகளை உரசிக்கொண்டுப் போவது, கண்ட இடத்திலும் சாலையைக் கடப்பது, வாகனத்தை அப்படி அப்படியே நிறுத்திவிட்டுப் போய்விடுவது என மாநகரம் போக்குவரத்து பிரச்சினைகளால் அல்லாடுகிறது. ஆனால், இதை முறைப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதே இல்லை.

திருமண மண்டபங்கள் உள்ள சாலைகளில் வாகனங்களை அப்படி அப்படியே நிறுத்திவிட்டுப் போய்விடுகிறார்கள். எண்பதடி சாலையில் நாற்பது அடி சாலை ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. கேட்பாரே கிடையாது. பள்ளிகள் உள்ள சாலைகளில் ஒவ்வொரு நாளும் விபத்துகள் நடக்கின்றன. யாரோ ஒரு மாணவன் அடிபடுகிறான். குறிப்பாக சைக்கிளில் வரும் மாணவர்கள் பாடு பெரும் திண்டாட்டம். ஆனால், இவற்றை யாரும் கண்டுகொள்வதேயில்லை.

சாலை விபத்துகளைப் பற்றி பேசும் நாம் சாலை விதிகளை மீறுபவர்களைத் தண்டிக்க எந்த வழிமுறைகளையும் கையாள்வது இல்லை. அமெரிக்க பயணத்தின்போது எங்கே சென்றாலும் கறாரான சாலை விதிகள் கடைபிடிக்கப்படுவதையும், மீறுபவர்கள் உடனடியாக டிக்கெட் வழங்கபட்டு அபராதம் செலுத்தபட வேண்டியதையும் கண்டிருக்கிறேன். சென்னையில் சாலைக்கு சாலை பைக்கில் வருபவர்களை நிறுத்தி வசூல்வேட்டை செய்வதைத் தவிர, காவலர்களின் வேறு எந்த நடவடிக்கையையும் கண்ட தில்லை.

வாடகை கார் ஒட்டுபவர் ஒருமுறை என்னிடம் சொன்னார்: சாலையில் எந்த பக்கம் போகப் போகிறார்கள்? எங்கே திரும்புவார்கள் என எதுவும் தெரிவதில்லை. கண்ணைக் கட்டிக்கொண்டு கார் ஒட்டுவது போலவே இருக்கிறது. கார் ஓட்டத் தெரிந்தவர்களில் பாதிப் பேர் அரைகுறையாக அறிந்தவர்கள். சாலை விதிகளைப் பற்றித் தெரியாதவர்கள். லைசென்ஸ் கிடைப்பது மிக எளிதாக இருப்பதும் ஒரு காரணம். நாம் சரியாக கார் ஓட்டினால் மட்டும் போதாது. அருகில் வருபவரும் எதிரில் கடப்பவரும் சரியாக கார் ஓட்ட வேண்டும். அந்த உணர்வே பலருக்கும் கிடையாது. வாகனங்கள் பெருகிவிட்டன. பதற்றமும் குழப்பமும்

அவசரமுமாகவே வண்டி ஓட்டுகிறார்கள். ஒவ்வொரு நாள் வீடு போய் சேருவதற்கு முன்பும் உயிர் போய் உயிர் திரும்பிவிடுகிறது.

அவர் சொன்னது நிஜம். வாகன நெருக்கடி அதிகமாகிவிட்டதுதான். ஆனால், அதைக் காரணம் காட்டி சாலை விதிகளை மதிக்காமல் இருப்பது எந்த வகையில் நியாயம்? கறாராக சட்டத்தை அமுல்படுத்தி சாலையைச் சீர்செய்ய வேண்டியது அரசின் கடமை இல்லையா? ஒவ்வொரு நாளையும் பயத்தோடு தான் தொடங்க வேண்டுமா?

பிஹார் மாநிலத்தில் உள்ள பழங்குடிகளிடம் ஒரு கதை இருக்கிறது. பறவைகள் ஒருநாள் ஒன்றுகூடி, "நாம் யாருக்கு மிகவும் பயப்பட வேண்டும்?" என்று தங்களுக்குள் உரையாடின.

அதில் ஒரு புறா சொன்னது: "திறமையான வேட்டைகாரர்களைல் கண்டுதான் நாம் பயப்பட வேண்டும். அவர்கள் துப்பாக்கி குறிவைத்தால் நம்மால் தப்பவே முடியாது!"

அதைக் கேட்ட இன்னொரு புறா சொன்னது: "இல்லை! அதைவிட நாம் பயப்பட வேண்டியது கத்துக்குட்டி வேட்டைக்காரனிடம்தான். அவனுக்கு வேட்டையாடத் தெரியாது. ஆனால், பெரிய துப்பாக்கியோடு வந்திருப்பான். அவனால் ஒருபோதும் சரியாக இலக்கை அடிக்க முடியாது. கண்டபடி சுடுவான். அதனால் ஏதோவொரு பறவை கொல்லப்படக்கூடும். துப்பாக்கியைப் பயன்படுத்தத் தெரியாத வேட்டைக்காரன்தான் ஆபத்தானவன். அவனை கண்டே நாம் பயப்பட வேண்டும்!"

அதை அங்கிருந்த அத்தனை பறவைகளும் ஒப்புக்கொண்டன.

அரைகுறைகள் எப்போதும் ஆபத்தானவை என்று பழங்குடிகள் நன்றாக அறிந்திருந்தார்கள். சாலையில் இன்று வாகனங்களில் செல்பவர்களுக்கும் இக்கதையே பாடம் என்று தோன்றுகிறது.

இணையவாசல்: இந்திய நாட்டுப்புறக்கதைகளை வாசிக்க
http://www.mythfolklore.net/3043mythfolklore/reading/india/pages/08.htm

## பகுதி 28 - ஈக்களும் சிலந்தியும்!

குழந்தைகளுக்காக எழுதப்பட்ட நாவல்களில் 'ஆலீஸின் அற்புத உலகம்' மிக முக்கியமானது. 155 ஆண்டுகளுக்கு முன்பு லூயி கரோல் எழுதியுள்ள இந்தப் புத்தகம் இன்று வரை 10 கோடி பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியுள்ளன. இதனை தமிழில் நான் மொழியாக்கம் செய்திருக்கிறேன். 'வம்சி' பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இந்நூலின் 2-வது அத்தியாயத்தில் 'டோடோ' என்ற அழிந்துபோன பறவை ஒன்று இடம் பெற்றுள்ளது. உலகில் இருந்து மறைந்துபோன இந்தப் பறவை கதையின் வழியே இன்றும்

நினைவுகொள்ளப்பட்டு வருகிறது. அதுதான் எழுத்தின் சிறப்பு! கதையில் இடம்பெற்றுவிட்ட விலங்குகளும், பறவைகளும் காலங்களைத் தாண்டியும் வாழக்கூடியவை. கதையில்லாத விலங்குகளும், பறவைகளும் வேகமாக மனிதர்களின் நினைவில் இருந்து மறைந்துவிடுகின்றன.

மொரீசியஸ் தீவில் வாழ்ந்த அழிந்துபோன பறவையினங்களில் ஒன்று 'டோடோ'. போர்த்துகீசிய மொழியில் 'டோடோ' என்ற சொல்லுக்கு 'முட்டாள்!' என்பது பொருள். 'டோடோ'வின் உருவம் வான்கோழியை விட சற்றுப் பெரியது. வளைந்த பெரிய அலகு கொண்டது. கால்கள் குட்டையானவை. 'டோடோ'வால் பறக்கவோ, ஓடவோ இயலாது. ஆகவே, மொரீசியஸ் தீவுக்கு கடலோடியாக வந்த போர்த்துகீசியர்கள் எளிதாக வேட்டையாடி அவற்றை கொன்றொழித்தார்கள். ஒரு 'டோடோ' கூட மிஞ்சவில்லை.
'டோடோ' பறவையின் அழிவால் மொரீசியஸ் தீவில் அங்கங்கும் பிரம்மாண்டமாக நின்றுகொண்டிருந்த 'கல்வாரியா' (Calvaria) என்னும் மர இனம் வேக வேகமாக அழியத் தொடங்கியது. 'பறவைக்கும் இந்த மரத்துக்கும் என்ன தொடர்பு' என்பதுதான் இயற்கையின் விசித்திரம்!

கல்வாரியா மரத்தின் பழங்களை 'டோடோ' பறவை விரும்பி உண்ணும். 'டோடோ'க்களின் வயிற்றுக்குள் புகுந்து வெளியேறும் கல்வாரியா விதைகள் மட்டுமே முளைக்கும் திறனைப் பெற்றிருந்தன என்பதுதான் இதில் உள்ள சிறப்பு. ஆகவே, 'டோடோ' பறவைகள் அழிந்தவுடன் கல்வாரியா மரங்களும் அழியத் தொடங்கிவிட்டன. இயற்கை ஒவ்வோர் உயிரையும் இன்னொரு உயிருடன் இணைத்து ஒரு சமநிலையை ஏற்படுத்தக்கூடியது. எந்த உயிரினமும் இயற்கையால் வீணாக உருவாக்கப்பட்டதே இல்லை.

நாம்தான் சில பறவைகளை, விலங்குகளைப் புனிதமாகவும் சிலவற்றை அசிங்கமாகவும், அருவருப்பாகவும், தேவையற்றதாகவும் கருதுகிறோம். இயற்கையிடத்தில் அப்படி எந்த ஒரு பேதமும் துளியும் இல்லை.

ஜியாங் ரோங் எழுதிய 'ஓநாய் குலச் சின்னம்' (Wolf Totem)' என்ற சீன நாவலில் 'மான்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டால் புல்வெளி முற்றிலும் அழிக்கப்பட்டுவிடும். அந்த அபாயத்தில் இருந்து காப்பதற்காகவே ஓநாய்கள் மான்களை வேட்டையாடுகின்றன. ஓநாய்களை நாம் ஒட்டுமொத்தமாகச் கொன்று தீர்த்துவிட்டால் மான்களால் வேகமாக மங்கோலிய புல்வெளி அழிக்கப்பட்டுவிடும்!' என்ற உண்மை சுட்டிக் காட்டப்படுகிறது.

நாம் கொடிய விலங்காக கருதும் ஓநாய்க்குக் கூட இயற்கையில் ஒரு தேவையும் ஒரு அவசியமும் இருக்கிறது. இதை நாம் உணர வேண்டும் என்பதற்காகவே கதைகளில் விலங்குகளைக் கதாபாத்திரங்களாக்கி அவர்களின் இயல்பையும், அவசியத்தையும் வலியுறுத்தினார்கள் கதை சொல்லிகள்.

விலங்குகள், பறவைகள் பற்றிய கதைகள் இல்லாத மொழிகளே இல்லை. அரிய வகை விலங்குகளை, பறவைகளைக் கதை வழியாக மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம். அந்த வகையில் கதைகள் பெரும் காப்பகம் போலவே செயல்படுகின்றன.

'பிரளயத்தின்போது நோவாவின் கப்பலில் உலகில் உள்ள எல்லா உயிரினங்களில் இருந்தும் ஒரு ஜோடியை தனது கப்பலில் ஏற்றிக்கொண்டு நோவா சென்றார்' என்று பைபிள் கூறுகிறது. எழுத்தாளர்கள் செய்வதும் அதே வேலையைத்தான். ஒவ்வொரு எழுத்தாளனும் ஒரு நோவாதான். அழியும் உலகில் இருந்து மீட்க வேண்டிய உயிரினங்களை தனது எழுத்து எனும் கப்பலில் ஏற்றிக் கொண்டுபோய் காப்பாற்றி தருகிறான் எழுத்தாளன்.

மனிதர்களுக்குப் பிடித்தமான விலங்குகள் அடிமைப்படுத்தப்பட்டுவிடுகின்றன. பிடிக்காத விலங்குகள் அழிக்கப்பட்டுவிடுகின்றன. இதுதான் மனிதகுல வரலாற்றில் தொடர்ந்து நாம் காணும் உண்மை.

ஒரு சூடான் நாட்டுக் கதை. அந்தக் கதையில் ஒரு மன்னனுக்கு ஈக்களையும் சிலந்தியையும் பிடிக்கவே பிடிக்காது. அவற்றை மொத்தமாக அழித்து ஒழிக்கவேண்டும் என்று கட்டளையிட்டான். அதை அறிந்த மன்னனின் தாய், "அப்படியெல்லாம் செய்யக் கூடாது. ஒவ்வோர் உயிரும் முக்கியமானதே. அதை நீ புரிந்துகொள்ள வேண்டும்!" என்று அறிவுரை கூறினாள்.

மன்னன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சில மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள், அந்த மன்னனின் அரண்மனை மீது எதிரிகள் படைஎடுத்து வந்து தாக்கினார்கள். எதிரிகளோடு மன்னனும் சண்டையிட்டான். ஆனால், எதிரிகள் சதிசெய்து அரண்மனையை எப்படியோ கைப்பற்றிவிட்டார்கள்.

தப்பியோடிய மன்னன் மலைக் குகை ஒன்றில்போய் ஒளிந்துகொண்டான். அவனைத் தேடி எதிரி நாட்டு படை வீரர்கள் மலையைச் சுற்றிலும் அலைந்தார்கள். ஒவ்வொரு குகையாகத் தேடினார்கள். மன்னர் ஒளிந்துகொண்டுள்ள குகைக்கு உள்ளே தேட வரும்போது, அங்கே சுவரில் படிந்திருந்த சிலந்தி வலையைக் காட்டி ஒரு சிப்பாய் சொன்னான்:

"சிலந்தி வலை பின்னியிருக்கிறது. இதற்குள் நிச்சயம் மன்னன் இருக்க மாட்டான். வா, வேறு குகையில் போய்த் தேடுவோம்!"

மன்னன் தன் உயிரை இந்தச் சிலந்தி காப்பாற்றிவிட்டதே என நன்றியுணர்ச்சியோடு அதை நோக்கினான். அப்போது அவனது அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது.

குகையில் இருந்து வெளியேறிய மன்னன், தனது நண்பனின் நாட்டை நோக்கி சென்றான். பகல் முழுவதும் குதிரைப் பயணம் செய்த களைப்பில் ஒரு மரத்தடியில் உறங்கிப்போனான். திடீரென அவன் மூக்கில் ஒரு ஈ வந்து உட்கார்ந்தது. சட்டென விழித்துக்கொண்ட அவன், மூக்கில் வந்து உட்கார்ந்த அந்த ஈயை அடித்து கொல்ல முயன்றான். அப்போது அவனை தேடிக் கொண்டு எதிரிகள் நெருங்கி வந்துகொண்டிருப்பதை அறிந்துகொண்டான்.

'நல்லவேளை! இந்த ஈ என் மூக்கில் அமராவிட்டால் ஆழ்ந்து உறங்கிக்கொண்டே இருந்திருப்பேன். எதிரிகள் என்னைச் சுற்றி வளைத்துக் கொன்றிருப்பார்கள்...' என அந்த ஈயை நன்றியோடு நினைத்துக்கொண்டு அங்கிருந்தும் தப்பிச் சென்றான்.

அம்மா சொன்னதன் பொருள் அப்போது அவனுக்கு முழுமையாகப் புரிந்தது. 'நான் தேவையற்றதாக கருதிய ஈயும், சிலந்தியும்தான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கின்றன. எதையும் அற்பமாக நாம் நினைக்கக்கூடாது. சகல உயிர் களும் சமமானதே!' என மன்னன் உணர்ந்து கொண்டான். அதன் பிறகு தனது படைகளைத் திரட்டிச் சென்று சண்டையிட்டு அரியணையை மீட்டான் என அந்தக் கதை முடிகிறது.

'சில சந்தர்ப்பங்களில் நமக்கு உதவி செய்யக்கூடியவர்கள் நம்மால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருக்கக்கூடும்' என்ற உண்மையைச் சொல்கிறது என்பதே இக்கதையின் சிறப்பு! உலகெங்கும் கதைகள் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுக்கொண்டே இருப்பதற்கு காரணம், மனிதர்கள் நல்ல விஷயங்களைக் கூட எளிதில் மறந்துவிடுவார்கள் என்பதனால்தான்.

கதைகளும் பாடல்களும்தான் மனிதனை எளிதாக விழிப்புணர்வு கொள்ளச் செய்யக் கூடியவை. 'கதை சொல்லியின் உதடு தேய்ந்து போய்விடாது!' என்றொரு ஆப்பிரிக்க பழமொழி இருக்கிறது. அது என்றைக்கும் பொருந்தக் கூடியதே.

## பகுதி 29 - உப்பும் குற்றமும்

ஆறு லட்ச ரூபாய் லஞ்சம் வாங்கியதாக பெண் அதிகாரி கைது என்ற செய்தி ஒன்றை நாளிதழில் வாசித்தேன். நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக அவர் மீது தொடர் புகார் வந்து கொண்டிருந்ததாம். இன்று லஞ்சம் இல்லாத அரசு அலுவலகங்களே கிடையாது. உண்மையில் இந்தக் கைது சம்பவம் ஒரு நாடகம்தானா? அந்த அலுவலகத்தில் அன்று ஒருநாள் மற்ற ஊழியர்கள் லஞ்சம் வாங்காமல் இருந்திருப்பார்கள். மறுநாள் கைநீட்டி காசு வாங்கத் தயங்க மாட்டார்கள்தானே!

ஒருநாளில் இது போல ஆயிரம் குற்றச்செய்திகள் நாளிதழில் வெளி யாகின்றன. ஆனால் இந்த ஒரு செய்தி என்னை ஏன் துன்புறுத்து கிறது? அந்தப் பெண்ணின் புகைப் படம்தான் காரணம்.

சாந்தமான முகம். அகலமான குங்குமப் பொட்டு. ஓய்வு பெறப் போகும் வயதில் உள்ளவர் என்பது புகைப்படத்தைக் காணும்போதே தெரிகிறது.

அந்தப் பெண்மணி சிறையில் அடைக்கப்படுவாரா? எத்தனை ஆண்டுகள் நீதிமன்றத்துக்கு அவர் அலைய வேண்டும்? அல்லது மாட்டிக்கொள்ளாமல் லஞ்சம் வாங் கத் தெரியாத அப்பாவி என தன்னை சுயமதிப்பீடு செய்துகொள்வாரா? இவரது கணவர், மகன், மகள், மற்றும் உறவினர்கள் இந்த கைது செய்யப்பட்டது பற்றி என்ன நினைப்பார்கள்? இவருடைய கைது, இவரைப் போல லஞ்சம் வாங்கும் ஒருவருக்காவது அச்சத்தை உருவாக்குமா?

எழுத்தாளன் என்பதால் இதுபோல எனக்கு ஆயிரம் யோசனைகள் தோன்றுகின்றன. வழக்கறிஞர் நண்பரிடம் இதைப் பற்றி நான் ஆதங்கப்பட்டபோது, அவர் சொன்னார்:

"காசைக் கொடுத்து கேஸை ஒண்ணும் இல்லாமல் பண்ணிடு வாங்க. ரேஷன் கடையில் ஆரம் பித்து ராணுவத் தளவாடம் வரைக் கும் லஞ்சம். எவ்வளவு கேட்டாலும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, தன்னுடைய வேலையை முடிக்கணும்னுதான் மக்களும் நினைக்கிறாங்க. ஆறு வருஷமா அந்த அம்மா மேல புகார் போய்க்கொண்டு இருந்த தென்றால், அவங்க எவ்வளவு லஞ்சம் வாங்கியிருப்பாங்க? அந்தப் பணத்தை எல்லாம் இப்போ பறிமுதல் பண்ணிடுவாங்களா? இதெல்லாம் ஒரு டிராமா!"

அவர் சொன்னதுபோல இது ஒன்றுமில்லாத விஷயம்தானா?

தவறு செய்யப் பழகுகிறவன், அதை நியாயப்படுத்த எவ்வளவு காரணங்களைக் கண்டுபிடித்துக் கொள்கிறான்? தான் நிரபராதி, தன்னைவிட மோசமானவர்கள் அதிகமிருக்கிறார்கள் என்று வெளியே சுட்டுவிரலை நீட்டிக் காட்டுகிறான்.

தங்களின் சுயலாபத்துக்காக அப்பாவி மக்கள் பாதிக்கப்படு கிறார்களே என்கிற குற்றவுணர்வு ஏன் எவருக்கும் இருப்பதில்லை? நீதிமொழிகள், அறவுரைகளை வெறும் வேடிக்கை செய்திகளாகத் தான் சமூகம் கருதுகிறதா? ஆறுலட்சம் லஞ்சம் வாங்கியவர் மாட்டிக் கொள்வதும் பல லட்சம் கோடிகள் லஞ்சம் பெற்றவர்கள் அதிகாரத்துடன் கம்பீரமாக வலம் வருவதும்தான் சமநீதியா?

இது புத்தர் சொன்ன கதை: ஒரு முட்டாள் நண்பன் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றான். உப்பும் சுவை யும் குறைவான உணவை எப்படி சாப்பிடுவது என நண்பனிடம் முட்டாள் கோபித்துக்கொண்டான். நண்பருடைய மனைவி உப்பை கொண்டு வந்து தர, தேவையான உப்பை உணவில் சேர்த்துக் கொண்டு முட்டாள் சாப்பிடத் தொடங்கினான். 'துளி உப்பை சேர்த்ததுமே உணவு இவ்வளவு ருசியாக இருக்கிறதே. உப்பை மட்டும் தனியாக சாப்பிட்டால் எவ்வளவு ருசியாக இருக்கும்' என்றெண்ணி… இலை நிறைய உப்பைக் கொட்டச் சொன்னான். இலை நிறைய உப்பு பரிமாறப் பட்டது.

அவன் கை நிறைய உப்பை அள்ளி அள்ளி உப்பைத் தின்று, முடிவில் சுயநினைவின்றி மயங்கி விழுந்தான். இப்படித்தான் தவறு செய்கிறவர்கள், தவறின் ருசிக்கு மயங்கி மெல்ல தன்னையே இழந்துவிடுகிறார்கள்.

புத்தர் சொன்ன கதையில் வருபவன் முட்டாள். ஆகவே, அவனுக்கு உப்பைப் பற்றி தெரிந்திருக்கவில்லை. ஆனால், லஞ்சம் வாங்குபவர்கள் அறிந்தே தவறு செய்பவர்கள்.

நம் காலம் தீமையின் யுகம். எல்லா தீமைகளும் பொதுவெளி யில் களியாட்டம் புரிகின்றன. தீமை யின் அலங்காரமும் வசீகரமும் அனைவரையும் ஈர்க்கின்றன. ஆயி ரம் வேஷங்கள் புனைந்தாலும் தீமை ஒருபோதும் நன்மையாகி விடாதே. எழுத்தாளர்கள் எப் போதும் நன்மையின் குரலையே ஒலித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய சந்தைமயமாகிப் போன உலகில் இவை எல்லாம் பரிகசிக்கப்படக்கூடும். ஆனால் நன்மையின் குரலை ஒலிக்கும் கலைஞர்கள் வந்துகொண்டே தான் இருப்பார்கள்.

நிறைய வீடுகளில் இன்று புத்தர் சிலைகள் அலங்காரப்பொருளாக வைக்கப்பட்டிருப்பதை காண்கி றேன். புத்தர் வெறும் அலங்காரப் பொருள் இல்லை. அவரது சிந்த னைகள் நமக்குள் பெரும் மாற் றத்தை உருவாக்கக் கூடியவை.

இணைய வாசல்: >புத்தரின் நீதிக்கதைகளை அறிந்துகொள்ள
http://www.buddhanet.net/bt1_conts.htm

## பகுதி 30 - வாயைக் கட்டுங்கள்!

திரையரங்கம் ஒன்றின் வெளியே படம் ஆரம்பிப்பதற்காக காத்திருந்தேன். அருகில் உள்ள இருக்கைகளில் இருந்த இருவர் தங்கள் குடும்ப விஷயங் களைப் பற்றி பேசிக்கொண்டு இருந்தார் கள். தாங்கள் அமர்ந்திருப்பது ஒரு பொது இடம். தங்களுடைய குடும்ப விவகாரங் களைப் பலரும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்கிற நினைப்பே அவர்களுக்கு இல்லை.

இதில் சத்தமாக திட்டிக்கொள்ளவும் செய்தார்கள். வீட்டு விஷயங்களைப் பொதுவெளியில் ஏன் பேசிக்கொள்கிறார் கள்? வீடு என்பது சேர்ந்து சாப்பிடவும், உறங்கவும், ஓய்வு எடுக்கவும் மட்டுமே யான இடம்தானா?

தங்கள் அபிப்ராயங்களை, கஷ்டங் களை, பிரச்சினைகளை வீட்டுக்குள்ளா கவே பேசிக் கொள்ளலாம்தானே?!

முந்தைய தலைமுறையினர் இதில் மிகவும் கவனமாகவே இருந்தார்கள். எவ்வளவு சண்டை சச்சரவுகள் இருந்தா லும், வீட்டுப் படியைத் தாண்டினால் அதைக் காட்டிக் கொள்ளவே மாட்டார் கள். இன்று அப்படியில்லை. ரயில் பய ணத்தில், அலுவலகத்தில், பொது வெளிகளில் வீட்டுச் சண்டைகள் அரங்கேறுகின்றன.

தங்கள் கோபத்தை எப்படி காட்டிக் கொள்வது என்பது கூட அவர்களுக்குத் தெரியவில்லை. உரக்கக் கத்துகிறார்கள். அழுகிறார்கள் அவ்வளவே. உணர்ச்சி களைக் கட்டுப்படுத்தவும், கையாளவும் தெரியாத தலைமுறையாக ஏன் இருக்கிறார்கள்?

கடந்தகாலங்களை விடவும் இன்று பொருளாதாரரீதியாக ஓரளவு தன் னிறைவுப் பெற்ற குடும்பங்கள் அதி கரித்துள்ளன. அடிப்படை தேவைகளை யும், வசதிகளையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால், ஒருவரையொருவர் புரிந்து கொள்வது, விட்டுக்கொடுப்பது, அனு சரித்துப்போவது, அக்கறை காட்டுவது போன்றவற்றில் கடும் சிக்கல்களும், சிடுக்குகளும் தோன்றுகின்றன. அதைச் சுட்டிக்காட்டும்போது சண்டை தொடங்கி விடுகிறது.

வீட்டுச் சண்டைகள் கோடை மழை போன்றது. சடசடவெனத் தொடங்கி வேகமெடுத்து சட்டென அடங்கிவிடும் என்பார்கள். ஆனால், இன்று கருத்து வேற்றுமை காரணமாக சேர்ந்துவாழ முடியவில்லை என திருமணமான நான் கைந்து மாதங்களிலேயே விவாகரத்து கேட்கிறவர்கள் அதிகமாகிவிட்டார்கள்.

‘அமெரிக்காவின் பூர்வகுடி இந்தியர் கள் நாய்களுக்கு ஏன் நாக்கு இவ்வளவு நீளமாக தொங்கிக் கொண்டிருக்கிறது?’ என்பதற்கு ஒரு கதை சொல்கிறார்கள். அக்கதை குடும்ப விவகாரங்களைப் பற்றியதே.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நாய்களும் மனிதர்களைப் போலவே பேசின. ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு நாய்கள் இருந்தன. கணவன் வேட்டைக் குப் போகிற காலத்தில் நாயை உடன் அழைத்துக்கொண்டுப் போவான். மற் றொரு நாய் வீட்டில் மனைவி, பிள்ளை களுக்குத் துணையாக இருக்கும்.

வேட்டையின்போது என்ன நடந் தது? எங்கே தங்கினோம்? என்ன சாப்பிட் டோம் என்பதை வீடு திரும்பியதும் விலா வாரியாக வேட்டைநாய் விவரிப்பது வழக்கம். இதுபோலவே வீட்டில் என்ன நடந்தது? என்ன சமைத்தார்கள்? என்ன சாப்பிட்டார்கள்? எப்படி பொழுதை கழித்தார்கள் என்பதை வீட்டு நாய் விவரிக்கும். நாய்களின் உதவியால் மனிதர்கள் ஒருவருக்கொருவர் நடந்த விஷயங்களைப் பேசிக்கொண்டார்கள்.

நாய்களுக்கு எதையும் ஒளிக்கவோ, மறைக்கவோ தெரியாது என்பதால், தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் மனிதர்களிடத்தில் அப்படியே அவை பகிர்ந்துகொண்டன. இதனால் பல வீடுகளிலும் பிரச்சினைகள் உருவாயின. இந்த நாய்களால்தான் தங்களுக்குள் சண்டை வருகிறது என உணர்ந்த பலரும், “வாயை மூடிகிட்டு சும்மா கிட நாயே…” என்று நாய்களைத் திட்டினார்கள். ஆனால், நாய்கள் வாயை மூடவில்லை. பொதுவெளியில் ஒன்றுகூடி வீட்டில் நடப்பவற்றைப் பேசிக் கொண்டன. இதனால் வீட்டின் அந்தரங்கம் வெளியில் பரவியது.

‘நாய்களின் வாயைக் கட்ட என்ன செய் வது?’ என காட்டுவாசிகளுக்குப் புரிய வில்லை. அதேநேரம் நாய்களே வேண் டாம் என விலக்கிவிடவும் முடியவில்லை.

கடவுளிடம் சென்று முறையிட்டார்கள். கடவுளும் நாய்களை அழைத்து “வீட்டு விஷயங்களை வெளியே பேச வேண் டாம்!” என கட்டளையிட்டார். ஆனால், நாய்கள் அதற்குக் கட்டுப்படவில்லை. வீதியில் ஒன்றுகூடி இன்னும் கூடுத லான சுவாரஸ்யத்துடன் வீட்டுச் சண்டை களைப் பற்றி பேசிக்கொண்டன.

கோபம் கொண்ட கடவுள், நாய்களின் நாக்கை வெளியே இழுத்துவிட்டு, “இனி மனிதர்களின் மொழியால் உங்களால் பேச முடியாது. ஊர் வம்பு பேசிய தால் இனி உங்கள் நாக்கு துடித்துக் கொண்டே இருக்கட்டும் என சாபம் கொடுத்துவிட்டார். அன்று தொடங்கி நாயின் நாக்கு வெளியே தொங்கிக் கொண்டிருக்கிறது என அந்தக் கதை கூறுகிறது.

பழங்குடி மனிதர்கள் தாங்கள் பயந்த, கண்டுவியந்த எல்லாவற்றையும் பற்றி கதைகளாக புனைந்திருக்கிறார்கள். அப்படி புனையப்பட்ட கதைகளில் ஒன்றாகவே இதையும் கருத வேண்டும்.

இக்கதை குடும்ப விஷயங்களை பொதுவெளியில் பேசிக்கொள்ளக் கூடாது. சம்பந்தபட்டவர்கள் வெளியே பேசிக் கொள்ளாவிட்டாலும் உடனிருப் பவர்கள் பேசிக் கொள்ளத் தொடங்கி விடுவார்கள். ஆகவே எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

எதை பொதுவெளியில் பேசுவது? எப்படி பேசுவது? எதை வீட்டுக்குள் மட்டுமே பேச வேண்டும் என்பதை பற்றி இளம்தலைமுறைக்குக் கற்றுத் தர வேண்டியது அவசியம்.

குறிப்பாக, சமூக ஊடகங்களில் அர்த்தம் தெரியாமலே பல ஆபாச வார்த்தைகளை இளையோர் பயன் படுத்துகிறார்கள். அதே வசைச் சொற் களைக் கோபத்தில் வீட்டில் உள்ள மூத்தவர்களை நோக்கியும் வீசுகிறார்கள். வீடும் கல்வி நிலையங்களும் கற்றுத் தராத இந்த வசைகளை எங்கிருந்து கற்றுக்கொண்டார்கள் இவர்கள்? ஊடகங்களில் இருந்தும் இணையத்தில் இருந்தும்தானா?!

ஒரு நண்பர் சொன்னார், “வீட்டில் நானும் என் மனைவியும் மட்டும் இருக்கும் வரையில் எந்தப் பிரச்சினையும் ஏற்படுவது இல்லை. யாராவது உறவினர் கள் வந்துவிட்டால் என் மனைவியின் இயல்பு மாறிவிடுகிறது. சிடுசிடுப்பு, கோபம், எரிச்சல் என ஆளே மாறிவிடு கிறாள். அவர்களைத் துரத்தி அனுப்பு வதிலேயே குறியாக இருக்கிறாள். இதைப் பற்றி பேசினால் எங்களுக்குள் சண்டை வந்துவிடுகிறது.

அவள் வீட்டில் ஒரே பெண்ணாக வளர்ந்தவள், ஆனால், என் குடும்பம் பெரியது. நிறைய உறவினர்கள். நிச்சயம் அவர்கள் என்னைத் தேடி வரவே செய் வார்கள். இதை அவளால் ஏற்றுக்கொள் ளவே முடியவில்லை. நாங்கள் இருவரும் சம்பாதிக்கிறோம். கையில் பணமும் இருக்கிறது. ஆனால், ஏன் உறவுகளை நேசிப்பதில் மனமற்று போய்விடுகிறது? அதுதான் புரியவில்லை.

நண்பர் சொன்னது உண்மை. இதன் மறுபக்கம் கணவனும் இப்படி நடந்துகொள்ளக்கூடும்.

பணம் சேர்க்க வேண்டும். வசதி களைப் பெருக்கிக்கொள்ள வேண்டும், உல்லாசமாக இருக்க வேண்டும் என்ப தைத் தவிர, வேறு எதையும் குடும்பம் முக்கியமாக கருதுவதே இல்லை.

ஆபத்து காலங்களில் எச்சரிக்கை மணி ஒலிப்பதைப் போலவே நாம் தவிர்க்க வேண்டிய, விலக்க வேண் டிய விஷயங்களைக் கதைகள் எச்சரிக் கின்றன. அவற்றை அறிந்துகொண்டு விழிப்புணர்வு கொள்வது நமது பொறுப்பு.

இணையவாசல்: >அமெரிக்காவின் பூர்வகுடி இந்தியர்களின் கதைகளை அறிந்துகொள்ள
http://www.native-languages.org/caddo-legends.htm

## பகுதி 31 - உதவிக் குரல்!

இரண்டு நாட்களுக்கு முன்பாக கர்நாடகாவில் ஒரு சாலை விபத்தில் காவல்துறை அதிகாரி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில், அங்கு கூடிய பொதுமக்கள் அவரை காப்பாற்றுவதற்கு பதிலாக செல்போனில் போட்டோ எடுப்பதற்கு போட்டி போட்டார்கள். சம்பவ இடத்திலேயே அவர் உயிர் பிரிந்தார் என்ற செய்தியை தொலைக்காட்சியில் பார்த்தேன்.

ஒரு மனிதன் சாலை விபத்தில் உயிருக்குப் போராடும்போது எப்படி இத்தனை பேருக்கு போட்டோ எடுக்க மனம் வந்தது? உயிரின் மதிப்பு இவ்வளவுதானா? சாலை விபத்தோ, திருட்டோ, வன்முறையோ எது நடந்தாலும் உடனே புகைப்படம் எடுக்க செல்போன் கேமராவை வெளியே எடுக்கிறார்களே தவிர, கை கொடுத்து உதவிசெய்ய பலரும் முன்வருவதே இல்லை. எப்படி இந்த மோசமான மனநிலை உருவானது?

நம் காலத்தில் அந்தரங்கம் கடை விரிக்கப்படுகிறது. காட்சிப்படுத்தப்படு கிறது. அதை ரசிக்க பெரும் கூட்டம் காத்திருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத கேமரா ஒன்று நம்மை பின்தொடர்கிறது என்ற அச்சம் பெண்களை மிகவும் தொல்லைப்படுத்துகிறது. தங்கும் விடுதிகள், உணவகங்கள், பொது இடங்கள் என எங்கும் இந்த கேமராக் கள் தொடர்கின்றன. அறிந்தும் அறி யாமலும் இதில் மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆம்னி பேருந்து ஒன்றில் ஓர் இளம் பெண் தன்னை அறியாமல் சரிந்து உறங்கிக் கொண்டிருக்கிறாள். அவள் உறக்கத்தை யாரோ ஒருவன் முழுமை யாகப் படம் எடுத்து இணையத்தில் உலவவிடுகிறான். அதைப் பார்த்த சக ஊழியர்கள், மறுநாள் அலுவலகத்துக்கு வந்த அந்தப் பெண்ணிடம் எச்சரிக்கை செய்கிறார்கள். உடைந்துபோய் அந்தப் பெண் தற்கொலை முயற்சி செய்து, மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டதாக சில மாதங்கள் முன்பு ஒரு செய்தி வெளியானது. உறங்கும்போது கூடவா பெண்களுக்குப் பிரச்சினை. என்ன உலகமிது?

பொருளாதாரக் குற்றங்களைவிடவும் இதுபோன்ற தொழில்நுட்ப வளர்ச்சி யால் உருவாகும் குற்றங்கள் அதிகமாகி விட்டன. இந்தக் குற்றங்களில் ஈடுபடும் பலர் இதை பொழுதுபோக்காகக் கருது கிறார்கள். இணையத்திலோ, செல் போனிலோ, பொதுவெளியிலோ ஆபாச மானப் புகைப்படங்களை, வசைகளைப் பகிர்ந்தால் தண்டிக்கப்படுவோம் என் கிற பயமே இல்லை.

ஒரு பக்கம் மனிதர்கள் அன்புக்காக ஏங்குகிறார்கள். இன்னொரு பக்கம் சகமனிதனை உதாசீனம் செய்து அவமதித்து விரட்டுகிறார்கள். இந்த முரணே... இன்றைய வாழ்க்கை. குறுக்குவழியில் பணம் சேர்ப்பதற்குப் போட்டியிடும் இவர்கள், மறுபக்கம் 'உலகம் கெட்டுப்போய்விட்டது என்று கூச்சலும் இடுகிறார்கள்

முல்லா நசுருதீன் ஒருமுறை சந்தைக்குச் சென்றிருந்தார். அங்கே ஒரு வணிகர் "உங்களால் நூறு முட்டாள்களை ஒரே இடத்தில் ஒன்றுகூட்ட முடியுமா?" என முல்லாவிடம் கேட்டார்.

அதைக் கேட்ட முல்லா "இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. எளிதான வேலை!" என்றார். அதை செய்துகாட்டினால் நூறு தங்கக் காசுகள் தருவதாக வணிகர் சவால்விட்டார்.

உடனே முல்லா சந்தையின் நடுவில் நின்றபடியே "உழைக்காமல், சிரமப்படாமல் பணக்காரன் ஆவதற்கு ஆலோசனை சொல்லப் போகிறேன். யாருக்கு இந்த ஆலோசனை தேவையோ உடனே வாருங்கள்!" என்று உரக்கக் கூவினார். சந்தை முழுவதும் செய்தி வேகமாக பரவியது.

முல்லா சொல்லப்போகும் ஆலோ சனைக்காக பெருங்கூட்டம் கூடிவிட்டது. அப்போது, முல்லா தன்னோடு இருந்த வணிகரிடம் சொன்னார்: "நீங்கள் நூறு முட்டாளை

ஒன்றுகூட்டும்படிதான் சொன் னீர்கள். இதோ பாருங்கள் பல நூறு முட்டாள்கள் கூடிவிட்டனர். இவர்களை எண்ணிக்கொள்ளுங்கள்!” என்றார்

அதை கேட்ட வணிகர் ”இவர்கள் முட்டாள் என எப்படி நம்புவது?” எனக் கேட்டார்.

அதற்கு முல்லா பதில் சொன் னார்: “உழைக்காமலேயே, குறுக்கு வழியில் பெரும் பணக்காரனாக ஆசைப்படுகிறவர்கள் நிச்சயம் முட்டாள் கள்தான்!” என்ற சொல்லியபடியே தனக்கு உரிய நூறு தங்கக் காசுகளைப் பெற்றுக்கொண்டார் என முடிகிறது கதை. முல்லா வேடிக்கையாக செய்த செயல் என்றபோதும், அவர் சுட்டிக் காட்டும் உண்மை முக்கியமானது அல்லவா!

நாட்டுப்புறக் கதைகள் இதுபோன்ற மோசடி முயற்சிகளைக் கேலி செய்கின்றன. ஏமாற்றுக்காரன் எப்படி நடந்துகொள்வான் என அடையாளம் காட்டுகின்றன. அவ்வகையில் கதைகள் எச்சரிக்கை மணி போன்றவை.

உலகம் தன்னைக் கைவிட்டா லும் உறவுகள் தன்னைக் காப்பாற்றி விடுவார்கள் என பலரும் நம்பு கிறார்கள். ஆனால், நிஜத்தில் அப்படி நடப்பதில்லை. நம் காலத்தில் ரத்த உறவுகள் கைவிட்ட மனிதனை, நண்பர்கள் உதவிகள் செய்து காப்பாற்றிவிடுவதைக் காணமுடிகிறது. நண்பர்களை உருவாக்கிக்கொள்வதும். நட்பை பேணுவதுமே நம் காலத்தின் ஆதாரச் செயல்கள்!

இணையத்தில் வாசித்த நாட்டார் கதைகளில் ஒன்று உதவி செய்வதன் அவசியத்தை எடுத்துச் சொல்கிறது.

ஓர் ஊரில் ஒரு பெரிய அரச மரம் இருந்தது. அம்மரத்தின் அருகே ஒரு பள் ளம் இருந்தது. இலையுதிர் காலத்தில் மரத்தில் இருந்த இலைகள் பழுத்து கீழே விழ ஆரம்பித்தன. அப்போது மரம் பள்ளத்தைப் பார்த்துச் சொன்னது:

“பாவம் இந்த இலைகள்! நீ இவை களையெல்லாம் ஏற்றுக்கொண்டு காப் பாற்று. இல்லாவிடில் அடிக்கும் காற்றில் இலைகள் எங்கே போகும் எனத் தெரியாது!”

இதைக் கேட்ட பள்ளம் கோபமாக சொன்னது: “உதிர்ந்த இலைகளால் எனக்கு என்ன லாபம்? நான் ஏன் இலைகளுக்கு உதவி செய்ய வேண் டும்? இலைகளால் எனக்கு எந்தப் பயனும் இல்லாதபோது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது!”

உதிர்ந்த இலைகள் எல்லாம் காற்றில் பறந்து எங்கோ குப்பையில் போய் விழுந்து மக்கிப் போயின.

சில மாதங்களுக்குப் பிறகு மழைக் காலம் ஆரம்பித்து, பெருமழை கொட்டத் தொடங்கியது. அப் போது பள்ளம் மரத்தைப் பார்த்துச் சொன்னது:

“மரமே நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். இலைகளை உதிர்த்து என்னை மூடிக் கொள். இல்லாவிடில் மழை நீர் என்னுள் நிரம்பி, என்னை மூழ்கடித்துவிடும். மேலும் மண்ணும் சரிந்து என்னை மூடிவிடும்!”

பள்ளம் கேட்டுக்கொண்டதை மரம் கேட்காதது போலிருந்தது. உடனே ஆதங்கத்துடன் பள்ளம் சொன்னது: “நண்பனே! உன்னை விட்டால் எனக்கு வேறு துணையே இல்லை. எப்படி யாவது என்னைக் காப்பாற்று. மழை வேகமாகிக்கொண்டே போகிறது.

அதைக் கேட்ட அரசர மரம் சொன் னது: சுற்றியிருப்பவர்களுக்கு உதவி செய்ய மறுத்தாய். அதற்கான தண் டனையைதான் இப்போது அனுபவிக்க போகிறாய். உன் கஷ்டத்தை நீயே அனுபவி. என்னால் உனக்கு உதவி செய்ய முடியாது!”

பள்ளத்தில் மழை நீர் தேங்கியது. மண் சரிந்து பள்ளத்தை மூடியது. முடிவில் பள்ளம் இருந்த இடம் தெரியாமலே மறைந்து போனது.

இது ஒரு எளிய கதை. ஆனால், முக் கியமான படிப்பினையைக் கற்றுதரும் கதை. கதைகளின் இயல்பே வாழ்க் கையை நெறிப்படுத்துவதுதானே! இந்த இரண்டு கதைகளும் அதையே செய்கின்றன.

இணையவாசல்: தமிழகத்தில் சேகரிக்கப்பட்ட சில நாட்டுபுறக் கதைகளை வாசிக்க
http://www.storytellinginstitute.org/99.pdf

## பகுதி 32 - சந்தையின் தந்திரம்!

கதை சொல்லிகளால் போர்க்களத் தில் பட்டாளத்தின் முன் நின்று யுத் தத்தை நிறுத்தமுடியாது. ஆனால் போர் தொடங்குவதற்கு முன்பாக மக்க ளிடம் சென்று போர்வெறி ஏன் ஏற்படு கிறது? போரை யார் விரும்புகிறார்கள்? போரில் ஏன் பெண்கள் பாதிப்படை கிறார்கள் என்பது குறித்த கதைகளைச் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்திவிட முடியும். கதை சொல்லிகள் காலம் கால மாக இதையேதான் செய்துவருகிறார்கள் என்கிறார் புகழ்பெற்ற ஆப்பிரிக்க எழுத்தாளர் சினுவா அச்சுபே.

கதை சொல்லிகளின் ஆயுதம் சொற் கள். அதைக் கொண்டு அவர்கள் எதை யும் சாதிக்க கூடியவர்கள். மறைக்கப்பட்ட உண்மையை, மறந்துபோன நினைவு களைக் கதை சொல்லிகள் மீட்டு தரு கிறார்கள். கதைகள் வழியாக மறைக்கப் பட்ட ரகசியங்கள் வெளியேறுகின்றன.

கதைகளை மக்கள் நினைவுபடுத் திக்கொள்ள சில எளிய பிம்பங்களை, குறியீடுகளைக் கதை சொல்லிகள் உரு வாக்குகிறார்கள். முதலையின் முதுகில் குரங்கு அமர்ந்து செல்லும் சிற்பம் ஒன்றை தொல்லியல்துறை கண் டெடுத்துள்ளது. கதைகள் சிற்ப வடிவம் கொண்டதற்கான சாட்சி அது.

அஜந்தாவில் காணப்படும் ஓவியங் கள் எல்லாமே புத்த ஜாதகக் கதையி னையே விளக்குகின்றன. இப்படி கதை கள் ஓவியமாக, சிற்பமாக, பானைகள், தட்டுகளில் செய்யப்படும் அலங்கார மாக, துணியில் செய்யப்படும் பூ வேலைப்பாடுகளாக பல்வேறு விதங் களில் உருமாறுகின்றன.

நாகரிகம் அடைந்த சமூகம் என்பதன் அடையாளங்களில் ஒன்று, அங்கு காணப்படும் பல்வகைக் கதைகள். தேவதை கதைகளில் இடம்பெற்றுள்ள காடு எப்படிப்பட்டது? அங்கு என்னவித மான விலங்குகள், மரம் செடிகொடிகள், குகைகள், தட்பவெப்ப நிலை, பூக்கள், மற்றும் கனிம வளங்கள் காணப்படுகின் றன என்றொரு ஆய்வை சாரா மெய்ட் லண்ட் என்ற ஆய்வாளர் மேற் கொண்டார்.

குழந்தைகளுக்கு விளையாட்டாக சொல்லப்படுகிற தேவதை கதைகளின் பின்னனியில் அரிய பல உண்மைகள் புதைந்திருக்கின்றன என்றும், உண்மை யில் இந்தக் கதைகள் எல்லாம் இயற்கை குறித்த ஆவணத்தொகுப்பு என்றும், இதில் தொல்பழங்கால படிவங்கள் முதல் காட்டின் நுண்ணுயிரிகள் வரை முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் சாரா மெய்ட்லண்ட் குறிப்பிடு கிறார். ஒரு தேசத்தில் எவ்வளவு சதவீதம் காடு இருந்தது என்பதை அங்குள்ள தேவதை கதைகளைக் கொண்டே அறிந்துவிட முடியும் என்கிறார் சாரா.

தேவதை கதைகளைத் தேடித் தொகுத்தவர்களில் முக்கியமானவர்கள் கிரிம் சகோதரர்கள். ஜெர்மனி எங்கும் தேடி இவர்கள் கதைகளைச் சேகரித்து எழுத்து வடிவம் கொடுத்தார்கள். ஜேக் கப், வில்ஹெம் என்ற அந்த இருவரின் முயற்சியே ‘சிண்ட்ரல்லா’ போன்ற புகழ்பெற்ற தேவதை கதைகள் அச்சேறு வதற்கு காரணமாக இருந்தன. வறுமை யான சூழலில் வாழ்ந்தபோதும் கிரிம் சகோதரர்கள் தங்களின் தீராத ஆர்வத் தின் காரணமாக தேடித் தேடிக் கதைகளை சேகரித்தார்கள். ஜேக்கப் நூலகராக பணியாற்றினார். அவரது உதவியை கொண்டு பல்கலைக்கழகத்தில் படித்தார் வில்ஹெம். இவர்கள் தொகுத்த தேவ தைக் கதைகள் நூற்றுக்கும் மேற் பட்ட மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

கிராமப்புறக் கதைகளைப் பொறுத்த வரை அந்தக் கதையை முதலில் சொன் னவர் யார் என்று கண்டறிய முடிவ தில்லை. சில நேரம் கதையை உரு வாக்கியவரேகூட தன் அடையாளத்தை மறைத்துக்கொண்டு கதை சொல் லக்கூடும். வேறு எங்கேயே கேட்ட, யாரோ சொன்ன கதையைத் திரும்ப சொல்வதாக கேட்பவர்களை அவர்கள் நம்ப வைப்பார்கள். ஆகவே, நதிமூலம் ரிஷிமூலம் போல கதைமூலத்தையும் நாம் கண்டறிய முடிவதில்லை.

அரபுக் கதை ஒன்று மக்கள் எப்படி ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை சுட்டிக் காட்டுகிறது.

கெய்ரோ நகரின் சந்தையில் ஒரு முதியவர் மாதுளம் பழங்களை விற்றுக் கொண்டிருந்தார். ஒரு தினாருக்கு ஐந்து பழங்கள் என கூவிக் கூவி விற்றுக் கொண்டிருந்தார். அவரிடம் யாரும் பழங்கள் வாங்க வரவே இல்லை. அதே நேரம் ஓர் இளைஞன் அதே சந்தையில் ஒரு தினாருக்கு ஆறு பழங்கள் என விற்றான். அவனிடம் உள்ள மொத்த பழங்களும் சில நிமிடங்களில் விற்றுப் போயின. முதியவரிடம் ஓர் ஆள் வந்து ”உனக்கு வியாபார சூட்சுமம் தெரியவே இல்லை. அதோ அந்த இளைஞனிடம் கற்றுக் கொள்!” என அறிவுரை கூற, அதற்கு அந்த முதியவர் சொன்னார்: அந்த இளைஞன் என் மகன்தான். நான்தான் அப்படி ஒரு தினாருக்கு ஆறு பழங்களை விற்கும்படி கூறினேன். எப்போதும் போட்டி இருந்தால்தான்

விற்பனை சூடு பிடிக்கும். யாரோ ஒருவன் நம்மோடு போட்டியிடுவதற்கு பதிலாக நாமே பொய்யாக ஒரு போட்டியை உருவாக்கிவிடலாம் என நடத்திய நாடகம் இது. ஒருவேளை நானே கூட ஒரு தினாருக்கு ஆறு பழங்கள் தருவதாக சொல்லியிருந்தால் நீங்கள் வாங்கியிருக்க மாட்டீர்கள்.

மக்களை ஏமாற்றுவது எளிது. விலை மலிவு எனக் கூறப்படுவது சந்தையின் தந்திரம். விற்காத பொருளையோ அல்லது கூடுதல் விலை வைத்து அதில் தள்ளுபடி தருவதையோ மறைக்கும் வழிமுறை அது. மக்கள் எதையும் ஆராய்வதே இல்லை. சந்தைக்கு வரும் புத்திசாலிகூட எங்கள் பேச்சில் எளிதாக ஏமாந்துவிடுவான்" என்றார் முதியவர்.

இந்தக் கதை சந்தையின் சூட்சுமத்தை மக்களுக்கு புரியவைக்கிறது. இதே தந்திரத்தைதான் இன்றைய பன்னாட்டு நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின் றன. ஒரே நிறுவனம்தான் பல்வேறு பெயர்களில் பற்பசை தயாரிக்கிறது. ஒரே நிறுவனம்தான் பல்வேறு நிறங்களில், ருசிகளில் குளிர்பானம் தயாரிக்கிறது. சிப்ஸ் விற்பனை செய்கிறது. கிடைக்கும் லாபம் யாவும் ஒரே நிறுவனத்துக்கே போய் சேருகிறது.

சலுகை விலையில் வாங்கி திறமையாக நடந்துகொண்டுவிட்டதாக பொதுமக்கள் நினைக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஏமாற்றப்படுகிறார் கள். சலுகை என்பது உண்மையில் ஒரு தந்திரம். பரிசு தருகிறார்கள் என்பது வெறும் கவர்ச்சி. தரமான பொருளின் விலை பெரிதாக குறைவதே இல்லை.

இன்று நடைபெற்றுவரும் மிகப் பெரிய மோசடிகளில் ஒன்று பிளாஸ்டிக் முட்டை. பெரியவர்கள், குழந்தைகள், நோயாளிகள் என பலரும் சாப்பிடும் முட்டையை செயற்கையாக பிளாஸ்டிக் கில் செய்து விற்பனை செய்துவருகிறார் கள். வெளியே பார்க்க எந்த வித்தியாச மும் தெரியாது. முட்டையை உடைத்தால் உள்ளே பிளாஸ்டிக் உரிந்து வருகிறது. உள்ளே இருக்கும் மஞ்சள் கரு செயற்கை யான வேதிப் பொருள். சாப்பிட்டால் நோய் வந்து விடும். இப்படி ஒரு மோச டியை ஏன் அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது? இக்குற்றத்தில் ஈடுபட்டவர்களில் எவராவது இதுவரை தண்டிக்கப்பட்டிருக்கிறாரா?

எனவேதான் அரபிக் கதையை இப்போது நினைவூட்டவேண்டியிருக் கிறது.

சந்தையில் எதையும் கண்ணை மூடிக் கொண்டு வாங்காதீர்கள். மோசடி செய் பவர்கள் மீது புகார் கொடுங்கள். மோசடி களைப் பொதுவெளியில் அம்பலப் படுத்துங்கள்.

தேவதை கதைகளில் பலம் வாய்ந்த அரக்கனை எதிர்த்து சண்டையிட்டு வெல் பவன் சாமானியனே. தைரியமும், தியாக மும், அன்பும் இருப்பவனே வெல்கிறான் என்பதை அடையாளம் காட்டவே தேவதை கதைகள் உருவாக்கப்பட்டுள் ளன. இந்த உண்மையே அக்கதைகளை காலம் காலமாக வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன.

இணையவாசல்: >ஜப்பானிய கதைகளை வாசிக்க
http://fairytalez.com/region/japanese

## பகுதி 33 - அழகின் அடையாளம்!

அழகு என்ற சொல்லின் அர்த்தம் மாறிக்கொண்டே வருகிறது. சென்ற தலைமுறையினர் அழகு எனப் பட்டியலிட்ட பல விஷயங்கள் இன்றைக்குக் கேலிக்குரியதாக மாறி விட்டன. இன்றைய தலைமுறை அழகு எனக் கருதுபவற்றை, மூத்தவர்கள் "இதுவா அழகு?" என ஏளனம் செய்கிறார்கள்.

சில வாரங்களுக்கு முன்பு, உலக அழகியாக வென்றவரின் புகைப்படம் ஒன்றை நாளிதழில் வெளியிட்டிருந்தார் கள். சலூனுக்கு சவரம் செய்துகொள்ள வந்த முதியவர் அந்தப் புகைப்படத்தைப் பார்த்துவிட்டு, "ஒட்டடைக் குச்சி மாதிரி இருக்கா... இவளைப் போய் எப்படி உலக அழகின்னு செலெக்ட் செஞ்சாங்க?" எனக் கேட்டார்.

சலூன்காரர் சிரித்தபடியே, "சீக்கு வந்த கோழி மாதிரி இருக்கவதான் உலக அழகியாம்!" எனக் கேலி செய்தார். ஆனால், சவரம் செய்துகொள்ள காத் திருந்த ஓர் இளைஞன், அந்த உலக அழகி போட்டோவைப் பார்த்துவிட்டு "சூப்பரா இருக்கா... செம கிளாமர்!" என்றான் புன்னகையுடன். 'கிளாமர்' என்ற வார்த்தையின் அர்த்தமும் மாறிவிட்டது போலும்.

'அழகு ஆபத்தானது!' என்ற எண்ணம் பொதுப் புத்தியில் நெடுங்காலமாக இருந்து வருகிறது. ரசனைதான் அழகு பற் றிய வரையறைகளை உருவாக்குகிறது. ஒரு பண்பாட்டினுடைய அழகு குறித்த எண்ணங்கள் இன்னொரு பண்பாட் டுக்குப் பொருந்தக்கூடியது இல்லை. ரசனை உருவாக்கத்தில் பொருளாதாரம், வர்க்கம் மற்றும் சமயம் (மதம்) முக்கியமான பங்கு வகிக்கின்றன. 'மஹாலட்சுமி மாதிரி பொண்ணு இருக்கா!' என்று வரையறை செய்வதன் பின்னே இருப்பது, சமயம் உருவாக்கிய அழகியல்தானே!

அழகை மேம்படுத்துவதாகக் கூறி பெரும் சந்தை கடைவிரிக்கப்படுகிறது. 'வெள்ளை அல்லது சிவப்பு நிறத் தோல் களே அழகானவை; கருப்பு மாற்றப்பட வேண்டிய நிறம்; கருப்பு நிறத்தை ஒரு வருக்கும் பிடிக்காது...' என்ற தவறான எண்ணம் ஊடகங்கள் வழியே தொடர்ந்து ஆழமாக பதிய வைக்கப்படுகின்றன.

ஜேம்ஸ் பால்ட்வின் என்ற புகழ்பெற்ற கருப்பின கவிஞர் ஒரு நிகழ்வைப் பதிவு செய்திருக்கிறார். லண்டன் மியூசியம் ஒன்றை பார்வையிடச் சென்றுள்ளார் பால்ட்வின். அங்கே தரையைச் சுத்தம் செய்யும் கருப்பின கிழவர் ஒருவர், பால்ட்வின்னிடம் "உனது ஊர் எது?" எனக் கேட்டிருக்கிறார்.

"அமெரிக்கா என்று இவர் பதில் சொன்னதும், "அதைக் கேட்கவில்லை. உன் தந்தையின் ஊர் எது?" எனக் கேட்டிருக்கிறார்.

"நியூ ஆர்லைன்ஸ்" என்ற அமெரிக்க நகரை கூறியுள்ளார் பால்ட்வின்.

"நான் கேட்டது அதைப் பற்றி யில்லை. உன் பாட்டனின் பாட்டன் எந்த ஊரில் பிறந்தார்? ஆப்பிரிக்காவின் எந்தப் பகுதியில் இருந்து நீங்கள் புலம்பெயர்ந்து அமெரிக்கா வந்தீர்கள்? உனது பூர்வீக ஊர் எது?" என கிழவர் திரும்பக் கேட்டுள்ளார்.

“எனது பூர்வீகம் பற்றி எதுவுமே எனக்குத் தெரியாது” என்ற பால்ட்வினின் பதிலால் ஏமாற்றம் அடைந்த அந்தக் கருப்பினக் கிழவர், “படித்தவர்களே கூட, தனது பூர்வீகத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டாமல் இருப் பது, ரொம்பவும் வருத்தமளிக்கிறது!” என்று வருத்தமுடன் சொல்லியிருக் கிறார்.

கருப்பினக் கிழவருடைய கேள்வியின் வழி பால்ட்வினை உலுக்கி எடுத்துள்ளது. ‘அந்தக் கேள்வியின் வழியேதான் கருப்பின வம்சத்தின் தொடர்ச்சி படித்த அமெரிக்கவாசியில்லை என்கிற உணர்வு அழுத்தமாக தனக்கு ஏற்பட்டது’ என ஜேம்ஸ் பால்ட்வின் கூறுகிறார். இது உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும் பொருந்தக்கூடியதே.

கருப்பின மக்களின் அழகியலை அழித்து, அவர்களை வெள்ளைக்காரர் களின் அழகியலை ஏற்றுக்கொள்ள வைத் தது காலனிய அரசுகளின் அராஜகம். இதற்கு எதிராகத்தான் தான் கவிதைகள் எழுதுவதாக கூறுகிறார் பால்ட்வின்.

அழகியல் எவ்வாறு அரசியலாக்கப் பட்டது? யாருடைய அழகியல் கோட்பாடு களை, யார் பின்பற்றுவது என்கிற விவாதம் இன்று உலக அரங்கில் தொடர்ந்து உரத்துப் பேசப்படுகிறது.

பழங்குடி மக்களை ‘நாகரீகமற்றவர் கள்’ என முத்திரைக் குத்தி காட்டை விட்டு வெளியேற்றும் அதிகாரம், அவர் களின் கலைகளை விற்பனைப் பொரு ளாக்கி சந்தையில் பெரும் லாபம் சம் பாதிக்கவும் செய்கிறது. பழங்குடி மக் களால் செய்யப்பட்டது போன்ற கலைப் பொருட்களை இயந்திரங் களின் உதவியால் செய்து, சந்தையில் விற்பனை செய்கிறார்கள். உண்மை யில் இது ஒரு தந்திரம். உண்மை யான பழங்குடி மக்களின் கலைப் பொருட் களை சந்தைப்படுத்தப்படும்போது லாபம் சம்பாதிப்பது இடைத்தரகர்களும் வணிகர்களுமே.

பொதுவாக கதைகளில் வெள்ளை அல்லது சிவப்பு மட்டுமே அழகின் நிறமாக சித்தரிக்கப்படுவது இல்லை. மாறாக, பேரழகியாக சித்தரிக்கப்படுகிற மகாராணி கூட தவளையைத் திரு மணம் செய்துகொள்வாள். பேரரச னால் காப்பாற்ற முடியாத இள வரசியை, ஆடு மேய்கிற ஒருவன் காப்பாற்றி அரசனாகிவிடுகிறான். இப்படி உலகம் எதையெல்லாம் செய்யத் தயங்குகிறதோ, தடுத்து வைத்திருக்கிறதோ அதையெல்லாம் கதைகள் செய்து காட்டிவிடுகின்றன.

ஒரு காட்டில் நிறைய பறவைகள் வசித்து வந்தன. அங்கே வசித்த ஒரு குயில், தான் மட்டுமே கருப்பாக இருப்பதாகவும் மற்ற பறவை களெல்லாம் அழகாக இருப்பதாக வும் கருதி பொறாமைப் பட்டுக்கொண்டே யிருந்தது. குறிப்பாக, மயிலைப் போல தான் அழகாக இல்லையே என்கிற வருத்தம் குயிலுக்கு.

ஒரு நாள் காட்டில் ஒரு விழா நடந்தது. அங்கே மயில் தோகை விரித்து ஆடத் தொடங்கியது. அதன் அழகைக் கண்டு எல்லாப் பறவைகளும் வியந்து பாராட்டின. குயிலோ ‘அய்யோ நமக்கு இப்படியொரு அழகில்லையே!’ என மனசுக்குள் ஏங்கித் தவித்தது.

அழகான மயிலை பாடும்படியாக சிங்கம் கட்டளையிட்டது. மயிலும் உற்சாகம்கொண்டு பாடத் தொடங்கியது. அதன் குரலைக் கேட்க சகிக்கவில்லை. அதைக் கண்ட குயில் "நான் மயிலைப் போல அழகில்லைதான். ஆனால், என் குரல் இனியது!" என்று சொல்லி பாடத் தொடங்கியது. எல்லாப் பறவைகளும் குயிலின் குரலைப் பாராட்டின.

கடைசியாக சிங்கம் சொன்னது: "உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் எதாவது ஒரு சிறப்பும் ஒரு குறையும் இருக்கும்; குறையை மட்டுமே நினைத்து வருத்தப்படக்கூடாது. எது திறமையோ அதை மேம்படுத்தி பெயரும், பாராட்டும் பெற வேண்டும்!"

அந்த நிமிடத்தில் தன் தவறை உணர்ந்த குயில், அதன் பிறகு தனது கருப்பு நிறத்தைப் பற்றி கவலைப்படவே யில்லை என்று முடிகிறது பிஹார் மாநில நாட்டுப்புறக் கதை ஒன்று.

அழகாகிறோம் என நினைத்து தன்னை வருத்திக்கொள்கிறவர்களையும், தன் ஆரோக்கியத்தைக் கெடுத்துக்கொள் கிறவர்களையும் நினைத்தால் வருத்த மாக உள்ளது. சந்தை சூழ்ச்சிக்கு தன்னைப் பலி கொடுத்தவர்கள் என்றே இவர்களைக் கூறுவேன். அழகின் முடிவற்ற சாத்தியங்களை நிகழ்த்திக் காட்டிக்கொண்டேயிருக்கிறது இயற்கை. அதில், புற்களின் பசுமை மட்டுமே அழகானதில்லை; உதிர்ந்த சருகின் பழுப்பும்கூட அழகுதான்!

எது அழகு என்பதை சந்தை முடிவு செய்ய நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. ஒவ்வொருவருக்கும் தனது தாய் தான் பேரழகி. அந்தந்த தாய்க்கோ, தன் பிள்ளைகள்தான் அழகிகள், அழகன் கள்! இந்த எண்ணம் உலகெங்கும் ஒன்றுபோலதான் இருக்கிறது. அழகு குறித்த மற்ற வரையறைகள் யாவும் பண்பாடு உருவாக்கிய அடையாளங்கள் மட்டுமே.

இணையவாசல்: >ரஷ்ய தேவதைக் கதைகளை வாசிக்க
http://www.artrusse.ca/fairytales/frog-princess.htm

## பகுதி 34 - சிறுகல் போதும்!

ஜப்பானிய சாமுராய்களுக்கு சொல் லப்படும் கதைகளில் ஒன்று பொறுமையின் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டுகிறது. ஒரு சாமுராய் வீரனின் வீட்டில் எலித் தொல்லை அதிகமிருந்தது. குறிப்பாக, ஒரு முரட்டு எலி அந்த வீட்டில் இருந்த உணவுப் பொருட்களைத் திருடித் தின்றபடியே இருந்தது. வீட்டுப் பூனையால் அந்த எலியைப் பிடிக்கவே முடியவில்லை. அத்துடன் பூனையை அந்த எலி பாய்ந்து தாக்கிக் காயப்படுத்தியது.

ஆகவே சாமுராய் தனது அண்டை வீட்டில் இருந்த இரண்டு பூனைகளை அழைத்து வந்து முரட்டு எலியைப் பிடிக்க முயற்சி செய்தான்.

இரண்டு பூனைகளும் முரட்டு எலி யைத் துரத்தின. ஆனால், எலி ஆவே சத்துடன் பாய்ந்து தாக்கி அந்தப் பூனை களையும் காயப்படுத்தியது. முடிவில் சாமுராய் தானே எலியைக் கொல்வது என முடிவுசெய்து, ஒரு தடியை எடுத்துக்கொண்டுபோய்த் துரத்தினான்.

எலி அவனிடம் இருந்து தப்பி தப்பி ஒடியது. முடிவில் குளியலறைப் பொந் துக்குள் ஒளிந்துகொண்டபோது அவன் குனிந்து அதனைத் தாக்க முயற்சித்தான். வேறொரு வழியாக எலி வெளியே வந்து அவன் மீது பாய்ந்து தாக்கியது. அதில் அவனும் காயம் அடைந்தான். 'ஒரு முரட்டு எலியை நம்மால் பிடிக்க முடியவில்லை; நாமெல்லாம் ஒரு சாமு ராயா?' என அவமானம் அடைந்தான்.

அவனது மனவேதனையை அறிந்த ஒரு நண்பர், "அருகில் உள்ள மலையில் ஒரு கிழட்டு பூனை இருக்கிறது. அந்தப் பூனையால் எந்த எலியையும் பிடித்து விட முடியும்!" என ஆலோசனை சொன்னார்.

சாமுராயும் வேறுவழியில்லாமல் அந்தக் கிழட்டு பூனையைத் தேடிப் போய் உதவி கேட்டான். பூனையும் உதவி செய்வதாக ஒப்புக்கொண்டது. அதன்படி மறுநாள் சாமுராய் வீட்டுக்கு அந்தக் கிழட்டு பூனை வருகை தந்தது. பூனை இருப்பதை அறிந்த எலி, தயங்கித் தயங்கி வெளியே வந்தது. கிழட்டு பூனை தன் இடத்தை விட்டு நகரவேயில்லை. எலி தைரியமாக அங்கு மிங்கும் ஒடுவதும் வெண்ணெய்க் கட்டி களைத் திருடித் தின்பதுமாகயிருந்தது.

மற்ற பூனைகளாவது எலியைத் துரத்த முயற்சியாவது செய்தன. ஆனால், இந்தக் கிழட்டு பூனையோ இருந்த இடத்தைவிட்டு அசையவே மறுக்கிறதே என சாமுராய் அதன் மீது எரிச்சல் அடைந்தான்.

ஒருநாள் முழுவதும் அந்தப் பூனை அசையமல் அப்படியே இருந்தது.

மறுநாள் வழக்கம்போல எலி வளையைவிட்டு வெளியே வந்தது. சமையலறையில் போய் இனிப்பு உருண்டைகளை ஆசையாக தின்று விட்டு மெதுவாக திரும்பியது.

திடீரென பாய்ந்த கிழட்டு பூனை ஒரே அடியில் அந்த எலியைப் பிடித்து கடித்து கொன்றுபோட்டது. சாமுராய் அதை எதிர்பார்க்கவேயில்லை. இவ் வளவு பெரிய முரட்டு எலியை ஒரே அடியில் எப்படி அந்தக் கிழட்டு பூனை வீழ்த்தியது என வியப்படைந்தான்.

இந்தச் செய்தியை அறிந்துகொண்ட பூனைகளெல்லாம் ஒன்றுகூடி "எப்படி முரட்டு எலியைக் கொன்றாய்? இதில் என்ன சூட்சுமம்?" எனக் கேட்டன.

"ஒரு சூட்சுமமும் இல்லை. பொறுமை யாக காத்திருந்தேன். நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை அந்த எலி நன்றாக அறிந்திருந்தது. ஆகவே, அது தன்னை தற்காத்துக்கொள்ள பழகியிருந்தது. நான் நிதானமாக, பொறுமையாக காத்துக்கிடந்தபோது அது என்னை செயலற்றவன் என நினைத்துக்கொண்டது.

ஆயுதத்தைவிட பல மடங்கு வலிமை யானது நிதானம். எதிரி நாம் செய்யப்போவதை ஊகிக்க முடிந்தால் அது நமது பலவீனம். வலிமையானவன் தனது சரியான சந்தர்ப்பத்துக்காக காத்துக்கொண்டுதான் இருப்பான்!" என்றது கிழட்டு பூனை. அப்போது மற்றோரு பூனை கேட்டது: "நான் பாய்ந்து தாக்குவதற்கு பல ஆண்டுகள் பயிற்சி எடுத்திருக்கிறேன். என் நகங்கள் கூர்மையானவை. ஆனாலும் என்னால் ஏன் அந்த முரட்டு எலியைக் கொல்ல முடியவில்லை!"

''உன் பலத்தை போலவே எலியும் தன்னை காத்துக்கொள்ள பழகியிருக் கிறது. எல்லா எலிகளும் பூனைகளுக்கு பயந்தவை இல்லை. நான் ஒரு பூனை என்ற அகம்பாவம் உன்னிடம் மேலோங்கியிருக்கும். ஆகவே ஒரு எலி திரும்பி தாக்க முயற்சிக்கிறது என்ற வுடனே நீ பயப்படத் தொடங்கியிருப்பாய். ஆகவே உன்னை துரத்தி அடித்து எலி காயப்படுத்தியது.

ஆவேசமாக கூச்சலிடுபவர்கள். கோபம் கொள்கிறவர்கள், அவசரக்காரர் கள் தங்களின் பலவீனத்தை உலகுக்கு வெளிச்சமிட்டு காட்டுகிறார்கள். பலவான் தனது பேச்சிலும், செயலிலும் அமைதியாகவே இருப்பான். உலகம் அவனை பரிகசிக்கவும் கூடும். ஆனால் தகுந்த நேரத்தில் அவன் தன் திறமையை நிரூபித்து வெற்றியடைவான்!'' என்றது கிழட்டு பூனை.

சாமுராய்களுக்கு மட்டுமில்லை சாமானியர்களுக்கும் இந்தக் கதை பொருந்தக்கூடியதே. மற்ற பூனைகளிடம் இல்லாத ஒரு தனித் திறமையும் கிழட்டு பூனையிடம் கிடையாது. ஆனால், அது தன் பலத்தை மட்டும் நம்பாமல் எதிரியின் பலவீனத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டது. வாய்ச் சவடால் விடுவதைவிட காரியம் செய்து முடிப்பது முக்கியம் என அனுபவம் அதற்கு உணர்த்தியிருந்தது. காத்திருப்பது முட்டாள்தனமில்லை என அந்தப் பூனை உணர்ந்திருந்தது.

வீட்டில், அலுவலகத்தில், பொது வெளியில் நாம் எதற்கும் அவசரம் காட்டு கிறோம். கோபத்தில் கத்தி கூப்பாடு போடுகிறோம். நம்மைவிட வலிமையான வர்கள் நம் முன்னே இருக்கிறார்கள் என அறியாமல் சவால்விடுகிறோம்.

அறிவை துணையாகக் கொண்டவர் கள் அளந்து பேசுவார்கள். எதையும் செய்வதற்கு முன்பு நிதானமாக அணுகு வார்கள். கோபத்தால் ஒரு பயனும் இல்லை. வீண்விரோதமே எழும் என அறிந்திருப்பார்கள். ஆயிரம் வார்த்தை களைக் கொட்டி இறைப்பதை விடவும் மவுனமாக நடந்து ஜெயித்துவிடமுடியும் என உணர்ந்திருப்பார்கள்.

போர்க் கலைப் பயிலும் சாமுராய் களுக்கு உடல் மட்டுமில்லை; மனமும் பயிற்றுவிக்கப்பட வேண்டியது என கற்றுத் தருகிறார்கள். மனதின் உறுதிக் கும் வடிவமிருக்கிறது. அதை கையா ளத் தெரியும்போதுதான் ஒருவன் முழுவீரனாகிறான் என்றே அறிவுறுத்து கிறார்கள்.

கிராமப்புறங்களில் பார்த்திருக் கிறேன். அற்பர்கள்தான் தெருச் சண்டை யிடுவார்கள். பத்து பேரை அடித்துப் போடும் வலிமைகொண்டவன் கைகட்டி அமைதியாகப் பார்த்துக்கொண்டே இருப்பான்.

பைபிள் கதையில் வரும் கோலி யாத்தை தாவீது வென்றது வெறும் கவண் கல்லை வீசிதான். தற்பெருமை கொண்டவனை வீழ்த்துவதற்கு சிறுகல் போதும் என்பதன் அடையாளம் அது.

வெற்றியை தீர்மானிப்பது ஆயுதங் களில் இல்லை. மனத் தெளிவும், நிதான மும், தகுந்த நேரத்தில் தன் திறமையை முழுமையாக வெளிப்படுத்துவதே ஆகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்ட இந்த ஜப்பான் கதை நம் காலத்துக்கும் பொருத்தமான வழிகாட்டுதலே ஆகும்.

## பகுதி 35 - நிறம் மாறிய பறவை!

பெரும்பான்மை மனிதர்களிடம் குறு கிய எண்ணங்களே காணப்படு கின்றன. உலகை நேசிக்கிறேன் என்று பொதுவாகச் சொல்லப்படுவது வெறும் மாயை. உலகை நேசிப்பது என்பது பரந்து விரிந்த எண்ணம். பேதமற்று, வெறுப்புக் கசப்புகள் நீங்கி உயிர்களிடத்தே அன்பு செலுத்தும் செயலே உலகை நேசிப்பது.

நுகர்வுபொருட்களுக்கான சந்தையே உலகை ஒன்றுசேர்த்து வைத்திருக்கிறது. உண்மையில் உலகம் ஒன்று என மனிதர்கள் நினைப்பதில்லை. தான் வாழும் இடத்தை மட்டுமே உலகம் என்று நினைக்கிறார்கள். `வண்ணம் பூசியப் பறவை' என்றொரு நாவலை ஜெர்சி கோஸின்ஸ்கி என்ற யூத எழுத்தாளர் எழுதியி ருக்கிறார். அதில் பறவைகளைப் பிடித்து விற்கும் லேக் என்றொரு கதாபாத்திரம் இடம்பெற்றுள்ளது. லேக் விசித்திரமானவன். கண்ணி வைத்துப் பறவைகளைப் பிடித்து விற்பவன். ஒருமுறை, இவன் கண்ணி வைத்துப் பிடித்தப் பறவை ஒன்றுக்கு சாயம் அடித்து, அதன் வண்ணத்தை மாற்றிவிடுகிறான். பின்பு, அதை வானில் பறக்கவிடுகிறான். வண்ணம் தீட்டப்பட்டப் பறவையின் குரலை கேட்ட மற்ற பறவைகள் திரும்பிப் பார்க்கின்றன. ஆனால், தங்களைப் போல நிறமில்லையே என அதைத் தாக்கத் தொடங்கின. வண்ணம் மாறிய பறவையோ தான் எதிரியில்லை என நிரூபிக்கும் விதமாக நெருக்கத்திலேயே பறந்தது. யாரோ ஒரு அந்நியப் பறவை என முடிவு செய்துகொண்ட பறவைகள் அதைக் கொத்தி வீழ்த்துகின்றன. பறவை மண்ணில் விழுந்து செத்துப் போகிறது. பறவையின் நிறத்தை வண்ணம் பூசி மாற்றிவிடுவதைப் போன்ற செயலைதான் நுகர்வு கலாச்சாரம் மேற்கொள்கிறது. வேற்று நிறங்களைப் பூசிக்கொண்டவர்கள் நிலத்தின் அந்நியர்களாகிவிடுகிறார்கள்.

பறவைகள் கட்டாயத்தில் வண்ணம் மாற்றப்படுகின்றன. நாமோ, விரும்பி நம் வண்ணத்தை மாற்றிக் கொள்கிறோம். இது நம் பண்பாட்டில், உருவத் தில், செயல்களில் வெளிப்படையாகத் தெரிகிறது. குறுகிய எண்ணம் கொண்டிருப்பவன் அதைப் பற்றி உணர்வதே இல்லை. மாறாக, பரந்த எண்ணம் கொண்டவர்களைப் பரிகாசம் செய்கிறான். உலகம் தனக்குத் தேவையில்லை என்று ஏளனம் செய்கிறான். பரந்த எண்ணம் கொண்டவன் அதை எல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்வதே இல்லை. முழுநிலவு எதைக் கண்டு பொறாமைப்படப் போகிறது சொல்லுங்கள்.

பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மனிதர்கள் தங்கள் எண்ணத்தின் அடிப் படையிலேயே வாழ்கிறார்கள். கோடி கோடியாக பணம் வைத்துக்கொண்டு அடுத்தவருக்கு ஒருபிடிச் சோறு தராதவர் களும் இருக்கிறார்கள். வறுமையானச் சூழலில்கூட தேடிவந்தவர்களுக்கு உணவு அளிப்பவர்களும் இருக்கிறார்கள். எண்ணம்தானே செயலுக்கான காரணம். பரந்த எண்ணம் என்பது சுயநலத்தை முதன்மைப்படுத்தாது. அதற்காகத் தன்னை நிராகரிப்பதில்லை. தன்னையும் சகஉயிர்களையும் சமமாகக் கருதுவது. தனக்குப் பசிப்பதைப் போல இன்னொரு உயிருக்கும் பசிக்கும் என உணர்ந்து கொள்வது. சுகதுக்கங்கள் பொது வானவை. அவற்றைச் சந்திக்கவும் வென்று கடக்கவும் தைரியம் கொள்வதற்கும், வழிகாட்டுவதற்கும் பரந்த எண்ணங்கள் தேவைப்படுகின்றன.

ஒன்றாம் வகுப்பில் படிக்கிற பைய னுக்குப் பத்தாம் வகுப்புப் பாடம் நிச்சயம் புரியாதுதான். அவன் அதைக் கேலி செய்யவே செய்வான். அப்படித்தான் குறுகிய எண்ணம்

கொண்டவர்களால் பரந்த எண்ணம் கொண்டவர்களைப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் பத்தாம் வகுப்பு படிக்கிறவனுக்கு ஒன்றாம் வகுப்புப் பாடங்கள் எளிமையானவை. ஆகவே, பரந்த மனதுகொண்டவர்கள் குறுகிய மனது உடையவர்களை வெறுப்பதில்லை. பாவம் அறியாமையில் உழலுகிறார்கள் என்று புரிந்து கொள்கிறார்கள். சொர்க்கம் என்பது எங்கேயிருக்கிறது எனக் கேட்டால் பலரும் வானைக் காட்டுவார்கள். அது உண்மையில்லை. கீழேதான் இருக்கிறது. பூமியை விடச் சொர்க்கம் எதுவுமில்லை. சொர்க்கம் என்பது ஒரு வசிப்பிடமில்லை, அதுவொரு நிலை! வாழும்போதே அந்த நிலையை ஒருவனால் அடைந்து விட முடியும். ஞானிகள் அதையே வாழ்ந்து காட்டுகிறார்கள். ஞானியின் ஆசனத்தில் ஒருவன் உட்கார்ந்துவிடுவதால் அவனும் ஞானியாகிவிட முடியாது. ஞானம் என்பது முடிவற்ற தேடலில் கிடைக்கும் உன்னதம்.

வீட்டின் சுவர்கள் அடுத்த வீட்டினையும் நம்மையும் பிரிக்கின்றன. அதுபோல எண்ணிக்கையற்ற சுவர்களை மனிதர்கள் தனது எண்ணத்தால் உருவாக்கியிருக்கி றார்கள். அந்தச் சுவர்கள் தடையாக உயர்ந்து நிற்கின்றன. தான் எழுப்பிய சுவருக்குள்ளாகவே வாழ வேண்டும் என்று அவர்கள் தன் குடும்பத்தையும் கட்டுப்படுத்துகிறார்கள்.

சுவர்கள் மனிதர்களைக் கட்டுபடுத்தும் பறவைகளைக் கட்டுபடுத்தாது. அவை தன் எளிய சிறகுகளைக்கொண்டு எவ்வளவு நீளமான, உயரமான சுவரையும் தாண்டி பறந்துவிடும். ஆற்றின் வேகமே படகை செலுத்திவிடும் என்றாலும் துடுப்புகள் தேவைப்படத்தானே செய்கின்றன. துடுப்புகள் இல்லாத படகு விரும்பிய திசையை போய்ச் சேரமுடியாது. கட்டு பாடற்ற எண்ணங்களால் அலைக்கழிக்கப் படுகிறவர்கள் ஞானத்தால் வழிநடத்தப்பட வேண்டும் என்பதே உலக நியதி.

சிறுவர்களுக்காகச் சொல்லப்படும் நீதிக் கதைகளில் ஒன்றை இணையத்தில் வாசித்தேன். அதில், ஒருநாள் ஒரு விறகு வெட்டி காட்டில் மரம் வெட்டிக்கொண் டிருந்தான். அப்போது ஒரு புலி அவனைத் துரத்த ஆரம்பித்தது. உயிர் தப்பிக்க அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது ஏறிக்கொண்டான். அந்த மரத்தில் ஒரு குரங்கு வசித்து வந்தது. அந்தக் குரங்கு விறகுவெட்டியிடம் ``பயப்படாதே, புலியால் உன்னை நெருங்கவே முடி யாது. நான் இருக்கிறேன்…” என்று தைரியம் சொன்னது.

புலி பசியோடு மரத்தடியிலே காத் திருந்தது. பகல் மறைந்து மாலையும் வந்தது. விறகுவெட்டிக்கு பசி எடுத்தது. அவன் குரங்கிடம் உதவி கேட்டான். உடனே குரங்கும் பழங்களைப் பறித்து வந்து கொடுத்தது.

கோபமடைந்த புலி குரங்கிடம் சொன்னது: ``நீயும் என்னைப் போல ஒரு விலங்கு. மனிதர்களை நம்பாதே. அவனைக் கீழே தள்ளு. என்னால் பசி தாங்க முடியவில்லை” ஆனால், குரங்கோ ``உயிருக்குப் போராடுகிறவர் யாராக இருந்தாலும் எனது நண்பனே. நம்பியவருக்கு துரோகம் செய்யக்கூடாது’’ என மறுத்தது.

பிறகு குரங்கு மரக் கிளையைப் பற்றிக்கொண்டு தூங்க ஆரம்பித்தது. அப்போது புலி சொன்னது: ``விறகு வெட்டியே... எவ்வளவு நாள் ஆனாலும் நான் இங்கிருந்து போக மாட்டேன். என் பசியைத் தீர்த்துக்கொள்ளும்வரை இங்கேதான் இருப்பேன். உன்னை உயிரோடு

விட்டுவிடுகிறேன். அந்தக் குரங்கை கிழே தள்ளிவிடு. அதை சாப்பிட்டுவிட்டுப் போய்விடுகிறேன்" என்றது.

உடனே விறகுவெட்டி, தூங்கும் குரங்கை கிழே தள்ளிவிட்டான். புலி பாய்ந்து அதைத் தின்றுவிட்டு மறைந் தது. சுயநலம் மனிதர்களை என்ன வேண்டுமானாலும் செய்யவைக்கும் என்பதையே இந்தக் கதை நமக்கு அடையாளம் காட்டுகிறது.

அடிமைத்தனம் என்பது உலகில் முற்றிலும் ஒழிக்கப்படவில்லை. அதன் வடிவம் மட்டுமே மாறியிருக்கிறது என்கிறார் கவிஞர் சார்லஸ் புகோவெஸ்கி. அதன் நிரூபணம் போலவே கார்ப் பரேட் நிறுவனங்களும், தனியார் கல்வி நிலையங்களும், அரசு உயரதிகார அமைப்பும் நடந்துகொள்கின்றன.

புத்தகங்களே விழிப்புணர்வூட்டும் எண்ணங்களையும் அனுபவங்களையும் அறிவையும் நமக்குத் தருகின்றன. உலகைப் புரிந்துகொள்ளவும், இணைந்து வளர்த்தெடுக்கவும். நம்மையும், சமூ கத்தையும் மேம்படுத்தவே புத்தகங்கள் துணைசெய்கின்றன. இன்றும் அதன் மதிப்பை பலரும் உணராமல் இருப்பது அவர்கள் அறியாமையே.

இணைய வாசல்: >ரஷ்ய சிறார் கதைகள், அழகிய படங்கள், சிறுவர் பாடல்களை அறிந்துகொள்ள http://www.neerottam.com/

## பகுதி 36 - அறிவின் துணை!

'ஒரு வில்லாளி அம்பை எய்கிறான். அது இலக்கைத் தாக்கவில்லை என்றால் அவன் தனது அம்பைக் குற்றம் சொல்வதில்லை. தவறு தன் னுடையது என்று ஒப்புக்கொள்கிறான். அது போலவே, அரசும் அதன் நலத் திட்டங்கள் உரியவருக்குச் சென்று சேர வில்லை என்றால் தனது இயலாமையை ஒப்புக்கொள்ள வேண்டும். மாறாக, தவறு மக்களுடையது எனக் குற்றம் சாட்டக்கூடாது. அப்படி குற்றம்சாட்டி னால் அது மோசமான அரசாங்கமாக கருதப்படும்' என்கிறார் கன்பூசியஸ்.

"உங்களின் உயர்வுக்கான காரணம் எது?" என்று கேட்டதற்கு, "அனுபவங் களில் இருந்து பெற்ற அறிவே முதல் காரணம்!" என்றார் கன்பூசியஸ்.

அனுபவங்களைப் பெற்ற அத் தனை பேரும் வாழ்வில் உயர்ந்து விடுவதில்லை. அனுபவத்தில் இருந்து பாடம் கற்றுக்கொள்பவரே உயர் நிலையை அடைகிறார்கள். அதற்கு அறிவை விருத்தி செய்துகொள்வதும், கடின உழைப்பும், தெளிந்த சிந்தனை யும், நல்வாக்கும் அவசியமாகும். உண்மையில் பாமர மக்களின் அறி யாமையை விடவும் படித்தவர்களிடமே அறியாமை அதிகமிருக்கிறது.

'சமயோசிதம் உள்ளவன் வாழ்க் கையில் வெற்றி பெறுவான்!' என்று பெரியவர்கள் சொல்லிக் கொடுத்தார்கள். இந்த அறிவுரையை விளக்குவதற்கு பள்ளி நாட்களில் கதைகளும் சொல்லித் தந்தார்கள்.

அந்தக் காலத்தில் வெளியூர் பயணம் செய்கிறவர்களுக்கு, "போகிற இடத்தில் சமயோசிதமாக நடந்துகொள்ளுங்கள்!" என்று ஆலோசனை சொல்லி அனுப்பி வைப்பார்கள். நல்ல காரியம் பேசப் போகிற இடத்தில் சமயோசிதமாக நடந்துகொள்ள வேண்டும் என் பதற்காகவே அனுபவசாலி ஒருவரை உடன் அழைத்துக்கொண்டுப் போவார் கள். இன்றைய தலைமுறையினரிடம் "சமயோசிதமாக நடந்துகொள்" என்று யாரும் யாரையும் பார்த்துச் சொல்வதாகத் தெரியவில்லை.

சமயோசிதத்தின் வரலாறு மிக நீண்டது. தன்னை அச்சுறுத்தும் வலிமையுள்ளவனைச் சமயோசிதம் மூலம் எளியவர்கள் வென்ற நிகழ்ச்சிகள் ஏராளமிருக்கின்றன. உண்மையில் சம யோசிதம் என்பது அனுபவத்தில் இருந்து பிறந்த வழிகாட்டுதல். நெருக் கடியில் இருந்து தப்பிக்க மனிதர்கள் சுயமாகக் கண்டறிந்த தீர்வுதான் அது. பீர்பாலும், முல்லாவும் நடந்து கொண்ட முறைகள் பெரிதும் சமயோசிதத்தை அடிப்படையாகக் கொண்டவைகளே.

அரபுக் கதை ஒன்றில் குடுவை ஒன்றில் அடைபட்டு கிடந்த பூதம் ஒன்றை, ஒரு வணிகன் தெரியாமல் திறந்துவிட்டு விடுகிறான். அந்த பூதம் எந்த வேலை கொடுத்தாலும் நொடியில் செய்து முடித்துவிடும். அதே நேரம் வேலை கொடுக்காவிட்டால் எஜமான னைக் கொன்றுவிடும். வணிகன் அந்த பூதத்தை தனக்கு ஒரு மாளிகை கட்டும் படி கேட்டுக்கொண்டான். மறுநிமிசமே எஜமானன் சொன்னதுபோலவே ஒரு மாளிகையைக் கட்டி முடித்துவிட்டது. நீருற்றுகள் கொண்ட வசந்த மண்டபத்தை உருவாக்க கட்டளையிட்டான். அதையும் நிமிசத்தில் செய்து முடித்துவிட்டது பூதம். இப்படி அவன் இட்ட கட்டளைகளை எல்லாம் கண்மூடித் திறப்பதற்குள் செய்துமுடித்துவிட்டு, 'அடுத்து என்ன வேலை?' எனக் கேட்டது அந்த பூதம்.

வணிகன் தடுமாறிப் போனான். அதற்கு என்ன வேலை கொடுப்பது எனப் புரியவில்லை. வேலை கொடுக்கா விட்டால் தனது உயிர் போய்விடுமே என பயந்து நடுங்கினான். அப்போது வணிகனின் மனைவி "இவ்வளவுதானா? இதற்குப் போய் ஏன் பயப்படுகிறீர்கள்?" எனக் கூறி, தனது சுருண்ட தலைமுடியில் ஒன்றை பூதத்திடம்கொடுத்து, ' 'இதை நேராக்கிக் கொடு!" என்றாள்.

பூதம் எவ்வளவு முயன்றாலும் சுருள் முடி நேராகவில்லை. பூதம் தன் னால் அந்த வேலையை செய்யமுடிய வில்லை என்று ஒப்புக்கொண்டுத் தோற்றுப்போனது. இந்தக் கதையில் வரும் பெண் செய்வதுதான் சமயோசி தம். அவள் பெரிய கட்டளைகள் எதையும் இடவில்லை. ஆனால் சாதுர்யமாக நடந்துகொண்டு பூதத்தைத் தோற்கடித்துவிட்டாள்.

நடைமுறை வாழ்க்கையில் இது போன்ற யோசனைகள்தான் பிரச்சினை களில் இருந்து நம்மைக் காப்பாற்றக் கூடியவை. எல்லா சிக்கல்களுக்கும் தீர்வு இருக்கிறது. எப்படி அதை தீர்த்துக்கொள்வது என்று நமக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், நம்மோடு இருப்பவர்களில் ஒருவர் அதை எளிதாகத் தீர்த்துவிட முடியும். ஆகவே, நெருக்கடியின்போது ஆலோ சனை கேட்பது அவசியமாகிறது. சமயோசித அறிவு என்பதை மாற்று கோணத்தில் எதனையும் பார்ப்பது என்றும் பொருள்கொள்ளலாம்.

கெட்டிகாரத்தனம் கொண்ட பலரும் கூட சமயோசிதம் இல்லாமல் நடந்து கொள்வதால் தோல்வியடைந்துவிடு கிறார்கள். சமயோசிதம் என்பது அறிவை சாதுர்யமாகப் பயன்படுத்தி

செயலாற்றுவதாகும். அதே நேரம் சந்தர்ப்பவாதிகள் மற்றவர் செய்த வேலையை, தான் செய்ததாகச் சொல்லி குறுக்குவழியில் ஒன்றை அடைய முயற்சிக்கிறார்கள். சந்தர்ப்பவாதம் என்பது ஒருபோதும் சமயோசித மாகாது.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் கதை ஒன்றிருக்கிறது. அதில், காளி கோயிலில் ஒருநாள் பிரசாதமாக தருவதற்கு லட்டு பிடித்துக்கொண்டிருந்தார்கள். எங்கிருந்தோ சாரை சாரையாக எறும்புகள் லட்டை நோக்கி வரத் தொடங்கின. லட்டு பிடித்துக் கொண்டி ருந்தவர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. “எறும்பை கொல்லாமல் எப்படி விரட்டுவது?” என ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஆலோசனை கேட்கப்பட்டது.

“எறும்புகள் வரும் வழியில் சர்க்கரையால் ஒரு வட்டம் போடுங்கள். இனிப்பைத் தேடி வரும் எறும்புகள் அதை சாப்பிட்டுவிட்டுப் போய்விடும். லட்டை நோக்கி வரவே வராது!” என்று சொன்னார் ராமகிருஷ்ண பரம்ஹம்சர்.

பரமஹம்சர் சொன்னதைப் போலவே எறும்புகள் வரும் வழியில் சர்க்கரை யைக் கொண்டு பெரிய வட்டம் போடப்பட்டது. லட்டை நோக்கி சாரை சாரையாக படையெடுத்து வந்த எறும்புகளெல்லாம் வழியில் இருந்த சர்க்கரைத் துகள்களைக் கண்டதும், அதை இழுத்துக்கொண்டு போகத் தொடங்கின. பிரச்சினை தீர்ந்தது.

இதைப் பார்த்துக்கொண்டே இருந்த ராமகிருஷ்ண பரமஹம்சர், “மனிதர் களும் இந்த எறும்புகளைப் போன்ற வர்களே. தாங்கள் அடைய நினைத்த ஒன்றை விட்டுவிட்டு, வழியில் கிடைப் பதே போதும் என்று நினைத்து விடுகிறார்கள். சர்க்கரை வேண்டாம் லட்டுதான் வேண்டும் என்று ஒரு எறும்பும் முனைந்து செல்வதில்லை. கிடைப்பதைக் கொண்டு திருப்தி அடைந்துவிடுவதே நமது பழக்கம். சர்க்கரைத் துகள் அளவு சந் தோஷமே போதும் என்று பலரும் நினைத்துவிடுகிறார்கள். லட்டு போல முழுமையான சந்தோஷத்தை நாடி வெகுசிலரே முனைகிறார்கள்!” என்றார்.

அரபுக் கதையும் சரி, ராமகிருஷ்ண பரமஹம்சரின் கதையும் சரி… எளிய தீர்வுகளின் வழியே பிரச்சினை யில் இருந்து விடுபட வழிகாட்டு கின்றன. அருளுரைகள், உபதேசங் கள். ஞானமொழிகள் மட்டும் மக் களுக்கு வழிகாட்டுவதில்லை. கதை களும் நமக்கான தீர்வுகளை அடை யாளம் காட்டுகின்றன. அதைப் புரிந்து கொள்வதும் பின்பற்ற வேண்டியதும் நமது கடமையாகும்.

இணைய வாசல்: ராமகிருஷ்ண பரமஹம்சரின் கதைகளை அறிந்துகொள்ள
http://www.rkmpune.org/readings/srk_parables.html

## பகுதி 37 - வாழ்வின் வியப்பு!

எதிர்பாராமல் எந்த விஷயம் நடந் தாலும் நாம் வியப்படைகிறோம். எப்படி நடந்தது என புரியாமல் திகைத்துப் போகிறோம். எதிர்பாராத சந்திப்பு, எதிர்பாராத கடிதம், எதிர் பாராமல்

கிடைக்கும் பணம் அல்லது பதவி, வெற்றிகள் என எல்லா விஷயங்களும் சந்தோஷம் தருகின்றன.

எதிர்பார்த்த விஷயங்கள் நடக்காமல் போய்விடுவதும் எதிர்பார்க்காமல் ஒன்று நடந்தேறிவிடுவதும் புதிரே. நம் விருப்பம் மட்டுமே ஒரு செயலை வெற்றிபெறச் செய்வது இல்லை. ஒரு செயல் வெற்றியடைய எதிர்பாராமல் ஒன்று நடக்க வேண்டியிருக்கிறது. அது என்னவென்று யாராலும் முன்னறிந்து சொல்ல முடியாது.

சில தருணங்களில் இனி நடக்காது என நாம் கைவிட்ட விஷயங்கள் ஏதோவொரு விந்தையால் சட்டென நடந்து முடிந்துவிடுகின்றன. வாழ்வின் வியப்பே அதன் போக்கை நாம் முடிவு செய்ய முடியாது என்பதுதானே!

பிரபல ரஷ்ய இயக்குநர் ஆந்த்ரேய் தர்க்கோவ்ஸ்கி ஒரு சம்பவத்தை நினைவு கூர்கிறார். புதிய திரைப்படம் ஒன்றின் ஸ்கிரிப்ட்டை முடித்து வைத்துக்கொண்டு தயாரிப்பாளர்களைத் தேடி அலைந்து கொண்டிருந்தார் அவர். நினைத்ததைப் போல தயாரிப்பாளர் எவருமே கிடைக்க வில்லை. விரக்தியில் ஒரு வாடகை டாக்ஸியில் பயணிக்கும்போது தனது புதிய படத்தின் திரைக்கதைப் பிரதியைத் தவறவிட்டுவிட்டார். அந்த டாக்ஸியின் நம்பர் தெரியாது. அவரிடம் இருந்தது திரைக்கதையில் ஒரே ஒரு பிரதி மட்டும் தான். அது தொலைந்து போனதால் முழு திரைக்கதையையும் திரும்பவும் எழுத வேண்டிய நிலைமை. எல்லாக் காட்சிகளும் அவரது நினைவிலும் இல்லை. திகைப்பும் குழப்பமுமாக செய்வதறியாமல் தடுமாறிப் போனார்.

இவ்வளவு பெரிய மாஸ்கோ நகரில் எந்த டாக்ஸியில் தவறவிட்டோம்? எப்படி அதைக் கண்டுபிடிப்பது என மன உளைச் சல்தான் மிஞ்சியது. அவர் தவறவிட்ட அந்தத் திரைக்கதைப் பிரதியில் அவரது பெயரோ, முகவரியோ எதுவுமே கிடையாது. ஆகவே, டாக்ஸி டிரைவர் அதனைக் கண்டெடுத்தால் கூட இவ ரைத் தேடிவந்து ஒப்படைக்க முடியாது.

இனி, அந்தத் திரைக்கதைப் பிரதி கிடைக்கவே கிடைக்காது என முடிவு செய்துகொண்டு, மாலையில் ஒரு வீதி வழியாக சோர்வுடன் நடந்து சென்றுகொண்டிருக்கும்போது, ஒரு டாக்ஸி ஆந்த்ரேய் தர்க்கோவ்ஸ்கியின் அருகில் வந்து நின்றது.

டாக்ஸி ஓட்டுநர் கீழே இறங்கி வந்து “உங்கள் திரைக்கதையை எனது டாக்ஸி யில் தவறவிட்டுவிட்டீர்கள்” என நீட்டினார்.

“எப்படி இது என்னுடைய ஸ்கிரிப்ட் என கண்டுபிடித்தீர்கள்?” எனக் கேட்ட தற்கு ”உங்களைப் பார்த்தால் திரைப்பட இயக்குநர் போல தோன்றினீர்கள். எனது டாக்ஸியில் வரும்போது ஒரு வார்த்தை கூட நீங்கள் பேசவே இல்லை. ஏதோ சிந் தித்தபடியே வந்துகொண்டிருந்தீர்கள்!” எனச் சொல்லி சிரித்தார் டாக்ஸி ஓட்டுநர்.

நன்றி தெரிவித்த தார்க்கோவ்ஸ்கி இனிமேல் கிடைக்கவே கிடைக்காது என நினைத்த விஷயம் எதிர்பாராமல் கைக்கு வந்து சேருகிறது என்றால், நிச் சயம் தனது முயற்சி வெற்றிபெறும் என நம்பினார். அவர் நினைத்தபடியே ‘ஆந்த்ரே ரூபலேவ்’ என்ற படத்தை இயக் கினார். அப்படம் பெரும் புகழ்பெற்று பல்வேறு சர்வதேச விருதுகளை வென்றது.

வாழ்வின் சுவாரஸ்யங்களில் ஒன்று எதிர்பாராமை. யார், யாரை எப்போது சந்தித்துக் கொள்வார்கள். நட்புகொள் வார்கள். காதலிப்பார்கள். பிரிந்து போவார்கள்? ஒரு மனிதன் எப்போது வாழ்வில் முன்னேறுவான்? எப்போது வீழ்ச்சியடைவான்? சாவு எப்படி, எப் போது நேரும் என்று நீளும் எதிர்பாரா மையின் பட்டியல் முடிவற்றது.

தமிழக நாட்டுப்புறக் கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

பஞ்ச காலத்தில் ஒரு விவசாயி மிகவும் கஷ்டப்பட்டான். ஒருவேளை கஞ்சிக்குக் கூட வழியில்லை. குடும்பத்தினர் பட்டினி யில் வாடினார்கள். வேலைத் தேடிப் போய் பிழைக்கவும் வழியில்லை. பேசா மல் தூக்கு போட்டு செத்துப் போய் விடலாம் என நினைத்து பாழடைந்த ஒரு மண்டபத்துக்குச் சென்றான்.

அங்கே ஒரு பூதம் குடியிருந்தது. அதைப் பற்றி அறிந்திருந்தபோதும், 'சாகத்தானே போகிறோம். பூதம் நம்மை என்ன செய்துவிடப் போகிறது?' என்று நினைத்துக்கொண்டு, தூக்குக் கயிற்றை மாட்டுவதற்கு ஓர் இடம் தேடினான். அப்போது "இங்கிருந்து போகிறாயா… இல்லை போடட்டுமா?" என்றொரு முரட்டு குரல் கேட்டது.

அவன் அதைக் கண்டுகொள்ள வில்லை. தூக்குக் கயிற்றை உயரமான இடத்தில் மாட்டினான். திரும்பவும், "போகிறாயா இல்லை… போடட்டுமா?" என்ற குரல் கேட்டது.

'சே… இது என்ன இழவு! நானாக தூக்கி மாட்டி செத்தால் என்ன? பூதத்திடம் சிக்கி செத்தால் என்ன?' என நினைத்தபடியே கோபத்துடன் சொன்னான்: "போடுறதா இருந்தா மொத்தமா போட்டுத் தீர்த்துவிடு!"

மறுநிமிஷம் எங்கிருந்தோ பொல பொலவென தங்கக் கட்டிகள் மழை யாகக் கொட்ட ஆரம்பித்தன. அப்போது தான் புரிந்தது அந்தப் பூதம் தங்கத்தை காவல் காக்கிறது என்பது. இத்தனை ஆண்டு காலமாக தங்கத்தைப் போடவா, போடவா எனக் கேட்டுக் கொண்டேயிருந் துள்ளது. உண்மை தெரியாத பயத்தில் எவருமே போடச் சொல்லவே இல்லை. விவசாயி இப்போது மொத்தத்தையும் போடு என்றதும், அது வரையில் பாதுகாத்து வைத்திருந்த தங்கம் அனைத்தையும் போட்டுவிட்டது.

'ஆஹா! தனக்கு இப்படி ஓர் அதிர்ஷ டமா!' என நினைத்துக்கொண்டு அவன் தங்கத்தை சேகரித்துக் கொண்டுபோய் பணக்காரனாக வாழத் தொடங்கினான் என முடிகிறது அந்தக் கதை.

பூதம் தங்கம் தருமா எனத் தெரியாது. ஆனால், உங்களை அச்சுறுத்தும் விஷ யம்கூட உங்களுக்கு சாதகமாக முடியக் கூடும். அதில் இருந்தும் நீங்கள் பயனை அடையக் கூடும் என்பதை சுட்டிக்காட் டவே இக்கதைச் சொல்லப்படுகிறது.

பெரு நாட்டில் உள்ள செயிண்ட் லூயிஸ் ரே பாலம் மிக புராதனமானது. லிமா என்ற நகரின் வெளியில் இரண்டு மலைகளுக்கு நடுவில் அமைக்கப்பட் டுள்ள அந்தக் கயிற்றுப் பாலம் பழமை யானது. 1714-ம் ஆண்டு ஒரு நாள் இந்தப் பாலம் அறுந்து விழுந்து, பாலத்தைக் கடக்க முயன்ற 5 பேர் பள்ளத்தாக்கினுள் விழுந்து உயிரிழந்த னர். இதை மையமாகக் கொண்டு

'தான்டர்ன் ஒயில்டர்' என்ற எழுத்தாளர் 'தி பிரிட்ஜ் ஆஃப் சென் லூயிஸ் ரே' என்ற நாவலை எழுதியிருக்கிறார்.

பாலத்தில் இருந்து கீழே விழுந்து இறந்து போன ஐந்து பேருக்குள்ளும் ஏதாவது பொதுத் தன்மை, மறைமுகமான தொடர்பு இருக்கிறதா என்று ஜெனோபர் என்ற மதகுரு ஆராயத் தொடங்கினார்.

ஐந்து பேரின் வாழ்க்கைக்கும் சில பொதுத் தன்மைகள் இருப்பதை அவர் கண்டறிந்தார். இவர்களின் மரணத்தின் மூலம் கடவுள் உலகுக்கு ஒரு செய்தியை சொல்ல முயற்சிக்கிறார் என நம்புகிறார் ஜெனோபர். தனது கள ஆய்வினை விரிவாக தொகுத்து ஆர்ஷ் பிஷப்பிடம் சமர்ப்பிக்கிறார். அவரோ இது ஓர் அபத்த மான கற்பனை என புறந்தள்ளிவிடுகிறார்.

ஜெனோபர் கண்டறிந்த உண்மை என்பது எதிர்பாராமையினுள் சில ரக சியங்கள் ஒளிந்திருக்கின்றன. அவை மேல்பார்வைக்குப் புலப்படாது. ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் அதன் உண்மை யைப் புரிந்து கொள்ளமுடியும் என்பதே.

எந்தவொரு நிகழ்வும் காரணகாரிய மற்றதல்ல. அறிந்தும் அறியாமலும் பல்வேறு காரணிகள், பின்னல்கள் இணைந்தே ஒரு செயல் நடைபெறு கிறது என்பதையே நாவல் சுட்டிக்காட்டு கிறது. வாழ்வின் புதிர்களை அவிழ்த்துக் காட்டுவதும் புரிந்துகொள்ள வைப் பதும்தானே இலக்கியத்தின் வேலை.

இணைய வாசல்: தமிழக நாட்டுபுறக் கதைகளை வாசிக்க
http://www.storytellinginstitute.org/85.pdf

## பகுதி 38 - உழைப்பின் உன்னதம்!

ஒரு நேரத்தில் ஒரு வேலையை ஒழுங்காக செய்து முடிக்கவே நம்மால் இயலவில்லை. ஆனால், சிலர் ஒரே நேரத்தில் நாலைந்து வேலைகளை மிகச் சரியாக செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டிருக்கிறார் கள். இருந்த இடத்தில் இருந்தே பல வேலைகளில் கச்சிதமாகச் செய்யும் சிலரை நான் அறிவேன்.

விவசாயிகளின் இயல்பு ஒரே நேரத்தில் பல்வேறு வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது. ஒவ்வொன்றிலும் அவர்களின் கவனம் முழுமையாகவே இருக்கும்.

பயிற்சி செய்தால் ஒருவரால் ஒரு நேரத்தில் நூறு வேலைகளில் ஈடுபட முடியும் என்கிறது அவதானக் கலை. எந்த ஒன்றிலும் ஐந்து நிமிஷங்களுக்கு மேல் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியாதபடியான கவனச் சிதறல் இன்று எல்லோருக்கும் வளர்ந்துவிட்டது. செல்போன் அடிக்கிறதோ இல்லையோ, ஐந்து நிமிடத்துக்கு ஒருமுறை அதை எடுத்துப் பார்த்துக் கொள்கிறார்கள். அரைமணி நேரம் வேலை செய்துவிட் டால் ஒரு மணி நேரம் ஒய்வெடுத்துக் கொள்ள விரும்புகிறார்கள்.

தன் திறனை முழுமையாகப் பயன்படுத்த பெரும்பான்மையினர் விரும்புவதே இல்லை. கட்டாயப்படுத்தி, தண்டனை தரப் போவதாக மிரட்டினால் வேலை நடக்கிறது. அப்போதும் ஈடுபாடு இல்லாமல் செயல்படுவதால் செய் நேர்த்தியில்லாமல் போய்விடுகிறது.

நிர்வாகத் திறமையின்மை என்பது நாட்டின் பிரச்சினை மட்டுமில்லை; வீட்டிலும் இதுவே முக்கிய பிரச்சினை. பொருளாதாரத்தையும் நிர்வகிக்கத் தெரியவில்லை. காலத்தையும் நிர்வகிக் கத் தெரியவில்லை. ஒத்திப்போடுவதும், அடுத்தவர்கள் செய்வார்கள் என விலக்கி வைப்பதும், செய்ய மறுப்பதற் கான காரணங்களை உருவாக்கிக் கொள்வதுமே நடைமுறையாகியிருக் கிறது.

அடுத்தவர் வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்பவர்கள் இன்றில்லை. ஒருவேளை அப்படி ஒருவர் வேலை செய்தால் அவரை உலகம் முட்டாளாகக் கருதுகிறது. ஆனால், முந்தைய காலங்களில் உழைப்பாளிகள் முழுமையாக உழைத்தார்கள். காலை 6 மணிக்கு வேலைக்கு வருபவர்கள், சூரிய அஸ்தமனம் வரை உடல் நோகப் பாடுபட்டார்கள். ஆனால், போதுமான கூலி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இன்று எல்லாத் துறைகளிலும் அடிப்படை ஊதியம் உயர்ந்திருக்கிறது. ஆனால், கடினவேலைகள் செய்வதற்கு ஆள் கிடைக்காமல்தானிருக்கிறது.

துருக்கி நாட்டுக் கதை ஒன்றிருக்கிறது. துருக்கியின் அரசன் ஒருநாள் வேட்டைக்கு சென்றிருந்தான். பயண வழியில் ஓர் இரவு வழியில் இருந்த ஒரு நெசவாளியின் வீட்டில் தங்கினான். அவர்களுக்கு தன் வீட்டுக்கு வந்து தங்கியிருப்பது அரசன் என்பது தெரியாது. யாரோ ஒரு வேட்டைக்காரன் வந்திருக்கிறான் என நினைத்துக்கொண்டு தங்க வசதி செய்து கொடுத்தார்கள்.

அரசன் காலையில் எழுந்து கொண்டபோது நெசவாளி நூல் நூற்கத் தொடங்கியிருந்தான். அவனது இடது கையில் ஒரு கயிறு கட்டப்பட்டிருந்தது. அரசன் அந்த நெசவாளியைப் பார்த்து, “இது என்ன உனது இடது கையில் கயிறு?” என்று கேட்டான். “தொட்டிலில் உள்ள குழந்தையை ஆட்டுவதற்கானது. குழந்தை அழுதால் இதை இழுப்பேன்…” என்றான் நெசவாளி நூல் நூற்றுக்கொண்டே.

அவன் அருகில் ஒரு நீண்ட குச்சியிருந்தது. “இந்தக் குச்சி எதற்கு?” எனக் கேட்டான் அரசன். “வெளியே என் மனைவி தானியங்களை வெயிலில் காயப்போட்டிருக்கிறாள். இந்தக் குச்சியின் மறுமுனையில் கருப்பு கொடியைக் கட்டியிருக்கிறேன். இதை அசைத்தால் பறவைகள் அருகில் வராது’’ என்றான்.

அந்த நெசவாளி தனது இடுப்பில் மணிகளைக் கட்டியிருந்தான். “இந்த மணியை எதற்கு கட்டியிருக்கிறாய்?” எனக் கேட்டான் அரசன்.

“வீட்டில் ஒரு எலி இருக்கிறது. அதன் தொல்லையை சமாளிக்க இந்த மணியை ஒலித்தால்போதும், ஒடிவிடும்!” என்று பதில் சொன்னான்.

அவனது வீட்டின் ஜன்னலுக்கு வெளியே நாலைந்து சிறார்களின் முகம் தெரிந்தது. நெசவாளியைப் பார்த்து “அவர்கள் என்ன செய்கிறார்கள்?” என்று கேட்டான் அரசன்.

“நூற்பு வேலை செய்துகொண்டிருக் கும்போது வாய் சும்மாதானே இருக் கிறது. அதனால், அவர்களுக்கு எனக்குத் தெரிந்த பாடங்களை நடத்துகிறேன். அவர்கள் வெளியே இருந்து கேட்டுக் கொள்வார்கள்!” என்றான்.

“அவர்கள் ஏன் வெளியே இருக்கிறார்கள்? உள்ளே வரலாம்தானே எனக் கேட்டான் அரசன். அதற்கு நெசவாளி சொன்னான்: “அவர்கள் காதுதான் நான் நடத்தும் பாடங்களைக் கேட்கப் போகிறது. ஆகவே, அவர்களை என் வீட்டுக்கு முன்னால் உள்ள மண்ணை குழைத்துத் தரும்படி செய்திருக்கிறேன். என்னிடம் பாடம் கேட்கும்போது அவர்கள் காலால் சேற்றை குழைத்துக் கொண்டிருப்பார்கள்” என்றான்.

ஒரே நேரத்தில் இவ்வளவு விஷயங்களை ஒருவன் செய்யமுடியுமா என அரசனுக்கு வியப்பு தாங்கமுடியவில்லை.

நெசவாளி சொன்னான்: “இது மட்டுமில்லை. என் மனைவி கிரேக்கத்துப் பெண். ஒவ்வொரு நாளும் பத்து கிரேக்கச் சொற்களை சிலேட்டில் எழுதி வைத்துப் போகிறாள். வேலை செய்துகொண்டே அதையும் கற்று வருகிறேன்.”

ஒருவன் விரும்பினால் ஒரே நேரத் தில் கற்றுக்கொள்ளவும், கற்றுத் தரவும், வேலை செய்யவும், வீட்டை கவனிக்க வும் முடியும் என்பதற்கு இந்த நெசவாளி தான் சாட்சி. ஒரு தேசத்தை நிர்வாகம் செய்வதற்கு இப்படியானவர்களே தேவை என்று முடிவு செய்த அரசன், அந்த நெசவாளியைத் தனது நாட்டின் மந்திரியாக நியமித்தான் என முடிகிறது கதை.

இயற்கையாகவே பெண்கள் மல்டி-டாஸ்கிங் செய்யக் கூடியவர்கள். அதை தனித்திறனாக ஒருபோதும் அவர்கள் கருதுவதில்லை. எந்த வேலை செய்வதாகயிருந்தாலும் ஒவ்வொரு எட்டு நிமிடங்களுக்கு ஒருமுறை நம் கவனம் சிதறுகிறது என்கிறார்கள். இது இயல்பாக நடக்கும் விஷயம். ஆனால், அதை சாக்காக வைத்துக்கொண்டு நாம் எந்த வேலையிலும் முழு ஈடுபாட்டுடன் வேலை செய்வதில்லை.

எது நம்மை வேலை செய்யவிடாமல் தடுக்கிறது? நிச்சயம் திறமையின்மை இல்லை. போதும் என்ற நினைப்பு. செய்து என்ன ஆகப்போகிறது என்ற விரக்தி. எதற்கு செய்ய வேண்டும் என்ற வீராப்பு. செய்யாவிட்டாலும் சம்பளம் கிடைக்கத்தானே போகிறது என்ற நம்பிக்கை. இப்படி நூறு காரணங்கள் இருக்கின்றன.

பெரும்பான்மையினர் வேலைக்குச் செல்வதற்கு மேற்கொள்ளும் பயணம், எத்தனிப்புகளிலே தனது எனர்ஜியில் பாதியை இழந்துவிடுகிறார்கள். செய்கிற வேலையைப் பலரும் விரும்புவது இல்லை. கட்டாயத்தின்பேரில் செய்வதாக நினைக்கிறார்கள்.

ஒரு வேலையைக் குறிப்பிட்ட காலத் துக்குள் செய்து முடிக்காமலோ, செய்ய விரும்பாமலோ போகும்போதுதான் லஞ்சம் தரவேண்டிய சூழல் உருவாகி றது. வெளிப்படையான நிர்வாகம் என்பது லஞ்சத்தைத் தடுத்துவிடக்கூடியது.

கதையில் வரும் நெசவாளி தன் வீடு, தன் வேலை என்று மட்டும் நினைக்கவில்லை. தனக்குத் தெரிந்த விஷயங்களைக் குழந்தைகளுக்குக் கற்றுத் தருகிறான். இந்த மனப்பாங்கு படித்தவர்கள் எத்தனை பேரிடம் காணப்படுகிறது? சமூக வலைதளங்களை, இதுபோன்று கற்றுத் தருவதற்கு நாம் பயன்படுத்தத் தொடங்கினால் அதன் மூலம் மிகப் பெரிய வளர்ச்சியை அடைய முடியும்.

தொழில்நுட்பம் நமது அறிவுத் திறனை, வேலையை வளர்த்துக்கொள் வதற்காகத்தான் உருவாக்கப்பட்டது. அதை, ஆக்க பூர்வமாகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டியது நமது கடமை.

இணைய வாசல்: >துருக்கி நாட்டுக் கதைகள் http://chestofbooks.com/fairy-tale/Turkish/

## பகுதி 39 - கோடையும் இனிதே!

கோடை பிறக்கப் போகிறது. இந்த ஆண்டு வெயில் மிகவும் அதிகமாக இருக்கக் கூடும் என்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டி லும் முந்தைய ஆண்டின் வெயிலை விட அதிகம் இருப்பதாகவே மக்கள் உணர்கிறார்கள். சலித்துக்கொள் கிறார்கள்.

12 மாதங்களில் அதிகம் வெறுக்கப் படுவது மே மாதம் மட்டுமே. கோடையைப் பெரும்பான்மையானவர்களுக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக, வெயிலின் உஷ்ணத்தைக் கண்டு பதறுகிறார்கள். குளிர்ச் சாதன அறையைவிட்டு வெளியே வரக்கூடாது என எச்சரிக்கை செய்கிறார்கள். காலம் காலமாக வெயிலில் நடந்து திரிந்து, வேலை செய்த இந்திய மக்களின் உடல்வாகை கடந்த 50 ஆண்டுகளுக்குள் அறிமுகமான குளிர்ச் சாதன வசதி மாற்றிவிட்டது. இன்று வெயிலை வெறுக்கிறார்கள். திட்டுகிறார்கள்.

அந்தக் காலத்தில் இருந்ததுபோல மரங்களும் நீர்நிலைகளும் இன்றில்லை. அதனால், வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கிறது என்பது உண்மையே. ஆனால், கோடை வெறுக்கப்படும் ஒன்றல்ல.

சிறுவயதில் கோடை எப்போது வரும் என காத்திருப்பேன். காரணம், அதுதான் விடுமுறைக் காலம். இரண்டு மாத காலங்கள் விளையாடவும், ஊர்சுற்ற வும், கூடிக் களிக்கவும் செய்யலாம். நாட்கள் போவதே தெரியாது.

கோடையில் ருசிப்பதற்கென்றே நுங்கு, வெள்ளரிக்காய், மோர், இளநீர், மாம்பழம் போன்றவை கிடைக்கும். வீதிக்கு வீதி தண்ணீர்ப் பந்தல் வைத்திருப் பார்கள். மண் பானையில் வெட்டிவேர் மணக்கும் தண்ணீரைக் குடித்தால் தொண்டையில் குளிர்ச்சி பரவும்.

கோடைக் காலத்தில்தான் திருவிழாக் கள் நடக்கும். பொருட்காட்சி நடை பெறும். இரவில் பொருட்காட்சியின் மினுங்கும் வெளிச்சத்தின் ஊடே சுற்றி யலைவதும், ராட்டினம் ஏறி மகிழ்வதும் பொருட்காட்சி கடையில் பந்து வாங்கி விளையாடியதும் மறக்கமுடியாத அனுபவங்கள்.

உச்சிவெயிலில் அதன் உஷ்ணம் மறந்து சிறுவர்கள் தெருவில் விளை யாடிக் கொண்டிருப்போம். பெரியவர் களில் சிலர் நிழலில் போய் விளையாடுங்கள் என்று திட்டுவார்கள். வேம்பின் நிழல் தன் அகன்ற கைகளை நீட்டி வரவேற்கும்.

இன்று வீதியில் விளையாடும் சிறுவர் களைக் காண்பது அபூர்வம். கோடை யிலும் சம்மர் கேம்ப் வகுப்புகளுக்கு போகிறார்கள். வீட்டுக்குள் வீடியோ கேம் ஆடுகிறார்கள். அல்லது கம்ப்யூட்டரில் நேரம் கழிக்கிறார்கள்.

கோடைக்கு என தனியே ஒரு குணம் இருக்கிறது. கோடையின் பகலுக்கு என்று விசேஷமான தன்மையும் இருக்கிறது. இன்றுள்ள கோடை காலி செய்யப்பட்ட வீட்டை போல வெறிச்சோடியிருக்கிறது. நினைவிலுள்ள கோடை என்பது சந்தோஷத்தின் ஊற்றாகயிருக்கிறது. கோடைக் கால மழை உக்கிரமானது. அதன் வேகம், சீற்றம் கொண்டதாக இருக்கும். எப்படியும் சில நாட்கள் மழை பெய்துவிடும். ஆகவே, நீந்திக் குளிப்பதற்கு கண்மாய்க்கோ, குளத்துக்கோ போகலாம்.

இன்று மழைக்காலத்தில் கூட மழை யைக் காண முடியவில்லை. கோடையை விட்டு தப்பி எங்காவது வெளியேறிப் போய்விட வேண்டும் என பலரும் நினைக்கிறார்கள். மலை வாழிடங்களே புகலிடம். ஆனால், கோடையில் ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களுக் குப் போனால் சந்திக்க வேண்டிய நெருக்கடிகள் மிக அதிகம். சந்தைக் கடை போலாகியிருக்கும்.

தார் பாலைவனத்துக்கு நான் போயி ருக்கிறேன். வெயிலின் உச்சம் அது. ஆனால், அங்கே வசிப்பவர்களில் ஒருவர் கூட வெயிலைப் பற்றி புகார் சொல்வ தில்லை. எரிச்சல் அடைவதில்லை. பாலைவனச் சூரியனை அன்றாடம் வழிபடுகிறார்கள். வெக்கையை தணித் துக் கொள்ள தயிர், மோர், நெய் அதிகம் சேர்த்துக் கொள்கிறார்கள்.

தகிக்கும் பாலையின்ஊடே ஆடுகள் மேய்த்துக்கொண்டிருக்கும் கிழவர்கள் நிலா வெளிச்சத்தில் நடந்து போவதைப் போல மெதுவாக போகிறார்கள். வெயிலுக்குப் பழகிய மனிதர்கள் அதன் மீது கோபம் கொள்வதில்லை.

இயற்கையை அழித்துவிட்டு, விவ சாயத்தை ஒழித்துவிட்டு, நீர்நிலைகளை மூடி, வீடுகளை கட்டி, மாநகரங்களை உருவாக்கினால் கோடை நிச்சயம் கொடுமையாகத்தான் இருக்கும்.

டேனிஷ் கதைகளில் ஒன்று, ஆண்டில் எது சிறந்த மாதம் என்பதைப் பற்றி கூறுகிறது. அடர்ந்த ஒரு காட்டில் '12 மாதங்கள்' வசித்து வந்தன. மாதங்களுக்குள் யார் சிறந்த மாதம் என்றொரு பிரச்சினை. நானே சிறந்தவன் என தங்களுக்குள் சண்டையிட்டன.

அப்போது இரண்டு பெண்கள் காட்டுக்குள் விறகு பொறுக்குவதற்காக சென்றார்கள். அவர்களை வழிமறித்த 12 மாதங்களும் எங்களில் சிறந்தவர் யார் என்பதை நீங்கள்தான் முடிவு செய்து சொல்ல வேண்டும் என்றன.

ஒருத்தி சொன்னாள்: "எல்லா மாதங்களும் மோசமானவையே. மழை, வெயில், பனி, காற்று அத்தனையும் நோயை உண்டாக்கக் கூடியவை. எனக்கு எந்த மாதத்தையும் பிடிக்காது. நான் வீட்டை விட்டு வெளியே போகவே மாட்டேன்"

மற்றவள் சொன்னாள்: "மழையும் வெயிலும் காற்றும் பனியும் இயற்கை அளிக்கும் பரிசு. அவற்றை பெறுவதற்காக நான் காத்துக்கிடப்பேன். ஆண்டின் ஒவ்வொரு மாதமும் ஒரு சிறப்பு கொண்டது. ஆகவே, 12 மாதங்களும் விசேஷமானவையே. இதில் மிகச்சிறந்த மாதம் என ஒன்றுகிடையாது என்றாள்.

இதைக் கேட்ட 12 மாதங்களும், அவர்களுக்கு நன்றி சொல்லி ஆளுக்கு ஒரு பெட்டியைப் பரிசாகத் தந்தன. அதில் என்ன இருக்கிறது என அவர்கள் கேட்டபோது, வீட்டுக்குப் போய் திறந்து பாருங்கள்!" என்றன.

மாதங்களைப் பாராட்டியவள் வீட்டுக்குப் போய் பெட்டியைத் திறந்து பார்த்தாள். உள்ளே ஒரு தங்க நாணயம் இருந்தது. அதைக் கண்டு அவள் சந்தோஷம் அடைந்தாள். மாதங்களை வெறுத்தவள் பெட்டியைத் திறந்து பார்த்தாள். உள்ளே நாற்றம் அடிக்கும் சாணத்தில் புழுக்கள் நெளிந்து கொண்டிருந்தன. அவள் மரப் பெட்டியைத் தூக்கி எறிந்துவிட்டு மற்றவளிடம் போய் புகார் சொன்னாள்.

அதற்கு மாதங்களைப் பாராட்டியவள் பதில் சொன்னாள்: நாம் இயற்கையை நேசித்தால், அது உயரிய பரிசை நமக்குத் தருகிறது. அதே நேரம் இயற்கையை வெறுப்பவர்களுக்கு, அது நோயை உருவாக்கிவிடுகிறது.

மழைக் காலம் மட்டுமில்லை; கோடைக் காலமும் இயற்கையின் பரிசே. அதை உணர்ந்து கொண்டு கோடையை எதிர்கொள்ளவும், அதற்கேற்ற உணவை உட்கொள்ளவும், உடைகளை அணிந்து கொள்ளவும் கூடிக் களிக்கவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

சிறுவர்கள் கூடிக் கதைகள் பேசவும், விரும்பியதைப் படிக்கவும், சேர்ந்து விளையாடவும், தாத்தா - பாட்டி வீடுகளுக்குப் போய் அவர்கள் அன்பை முழுமையாக உணரவும் கோடையே வழிகாட்டுகிறது. பெரியவர்களாகிய நாம் அதற்குத் தடையாக இருந்துவிடக் கூடாது என்பதே முக்கியம்.

இணைய வாசல்: >டேனிஷ் கதைகளை அறிந்துகொள்ள
http://oaks.nvg.org/danish-folktales.html

## பகுதி 40 - மறதியின் தேவதை!

நினைவாற்றல் என்பது மனிதனுக்குக் கிடைத்த மகத்தான பரிசு! மனிதர்களைப் போல வேறு எந்த உயிரினமும் இவ்வளவு நினைவாற்றல் கொண்டதாக இல்லை. அதிலும் குறிப்பாக ஆண்களைவிட பெண்கள் அதிகம் நினைவாற்றல் கொண்டவர்கள்.

முதுமை நினைவாற்றலை இழக்கச் செய்கிறது. முதுமையில் சிலருக்கு தன் சொந்தப் பிள்ளைகளை, மனைவியை அடையாளம் தெரியாத அளவுக்கு நினைவாற்றல் பறிபோய்விடுவது உண்டு. உடலாக அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், நினைவுச் சங்கிலி அறுபட்டுப் போய்விடுகிறது.

நினைவைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமெனில், கூடிப் கூடிப் பேசுங்கள்; மனம்விட்டுப் பகிர்ந்துகொள்ளுங்கள் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். குறிப்பாக, முதியவர்கள் பேச்சுத் துணையின்றிப் போனால் நினைவாற்றலை இழந்துவிடுவார்கள் என்கிறார்கள்.

மறதிதான் மனிதனைத் தொடர்ந்து இயங்கச் செய்கிறது. கடந்த காலத் துயரங்களை, வேதனைகளை மறந்து எதிர்காலம் பற்றிக் கனவு காண வைக்கிறது. ஆனால், அதே மறதி சாபமாகவும் மாறிவிடுவதும் உண்டு.

அன்றாட வாழ்க்கையில் மறதி பலருக்கும் பெரும்பிரச் சினை. செல்போனில் தொடங்கி வீட்டு சாவி வரை எத்தனையோ பொருட்களை எங்கே வைத்தோம் எனத் தேடுவது நமது வழக்கம். பேசிக் கொண்டிருக்கும்போதே என்ன பேசினோம் என மறந்துவிடுவதும் உண்டு. எதிரில் இருப்பவரிடம் 'நான் இப்போ என்ன பேசிக்கிட்டு இருந்தேன்' எனக் கேட்பவர்கள் இருக்கிறார்கள்.

மறதி சிலந்திவலையைப் போல படரத் தொடங்கி மெல்ல மனித மூளையின் நினைவாற்றலை அழிக்கத் தொடங்கிவிடுகிறது. எதை மறக்க வேண்டும்? எதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நமக்குத் தெரிவதில்லை. பலரும் மறக்க வேண்டிய சண்டை சச்சரவுகளை நினைவில் வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். நினைத்து நினைத்து சந்தோஷம் கொள்ள வேண்டிய நினைவுகளை உடனே மறந்துவிடுகிறார்கள்.

உதவி செய்த மனிதர்களை, தியாகம் செய்த தலைவர்களை சமூகம் மறந்துவிட்டது என்பதுதானே இன்றைய அவலம். மறதிக்கு எதிராகவே எப்போதும் கலையும் இலக்கியமும் இயங்கி வருகின்றன.

மறந்து போன விஷயங்களை மீள்உருவாக்கம் செய்வது கலையின் செயல்பாடுகளில் முக்கியமானது. வரலாறு என்பதே நினைவுப்படுத்துதல்தானே! மறதி ஏன் வருகிறது என்பதைப் பற்றி அறிவியல்பூர்வமாக நிறைய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. மன அழுத்தம், கவனமின்மை, அதிக உணர்ச்சிவசப்படல், அதிக தனிமை, கவலை, துயரம், இவையெல்லாம்கூட மறதியை உருவாக்கிவிடும் என்கிறார்கள். 'ஆட்டை தோள்ல போட்டுக் கொண்டே ஆட்டை தேடுனானாம் ஒருத்தன்' என்கிற சொலவடையே நம்மிடம் உண்டு.

சென்ற தலைமுறையில் கம்ப ராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற புத்தகங்களை முழுமையாக மனதில் பதியவைத்து நினைவில் இருந்து எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்ற அறிஞர்கள் இருந்தார்கள். இன்றைய செல்போன் யுகத்தில் எட்டு இலக்க தொலைபேசி எண் கூட நினைவில் இருப்பதில்லை. கவிதை வாசித்தல் என்பது நினைவாற்றலை வளர்க்கும் பயிற்சி. ஆழ்ந்து கவிதையை ஊன்றி படித்து வரும் சிறார்களுக்கு நினைவாற்றல் அதிகமிருக்கும்.

யூதர்கள் மறதிக்கு என்று ஒரு தேவதை இருப்பதாக நம்புகிறார்கள். அந்த தேவதை ஒருவனின் மூக்கில்தான் முத்தமிடுமாம். அப்படி முத்தமிட்டுவிட்டால் அவனுக்கு நினைவாற்றல் போய்விடும் என்கிறார்கள். இந்த தேவதை, மறதியை உருவாக்கி நல்லதே செய்யும் எனவும் நம்புகிறார்கள். அதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்லப்படுகிறது.

கொலை குற்றத்துக்காக யூத வணிகன் ஒருவனை அரசாங்கம் கைது செய்தது. அவன் அப்பாவி. நிரபராதி. யாரோ செய்த கொலைக்கு அவனைக் கைது செய்து தூக்கு தண்டனை விதித்துவிட்டது அரசு.

தூக்கு தண்டனை நிறைவேற்றுவதற்கான நாளுக்கு முதல் நாள் யூத வணிகனின் குடும்பம் அவனைக் காண வந்திருந்தது. யூத வணிகன் கண்ணீர்விட்டு அழுது தன் உயிரைக் காப்பாற்றும்படி வேண்டினான். குடும்பத்தினருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவர்கள் மண்டியிட்டு மறதியின் தேவதையை வணங்கி, உன்னால் மட்டுமே காப்பாற்ற முடியும் என்று பிரார்த்தித்தார்கள்.

மறுநாள் காலை, வணிகனை தூக்கிலிடுவதற்காக அழைத்துக் கொண்டுப் போனார்கள். ஒருவனை தூக்கிலிடுவதற்கு முன்பு அவன் எதற்காக கொல்லப்படுகிறான் என்ற விவரம் அடங்கிய அரசு உத்தரவை வாசிப்பது வழக்கம்.

அன்றைக்கு அந்த உத்தரவுள்ள காகிதத்தைக் காணவில்லை. சிறை அதிகாரி அதை மறதியில் எங்கோ வைத்துவிட்டார். உடனே தேடும்படி அவர் சிறைக் காவலர்களிடம் உத்தரவிட்டார். அவர்கள் எங்கு தேடியும் அதனைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. உடனே, நீதிபதியிடம் போய் அந்த வழக்கைப் பற்றி சொல்லி புதிய உத்தரவு பெற்றுவரும்படி சிறை அதிகாரி உத்தரவிட்டார்.

இரண்டு காவலர்கள் உடனடியாக நீதிபதி வீட்டுக்குச் சென்றார்கள். அவருக்கு அந்த வழக்கை பற்றி எதுவும் நினைவில் இருக்கவில்லை. எல்லாமும் மறந்து போயிருந்தது. அவர் நீதிமன்றத்தில் போய் பதிவாளரிடம் விவரங்களைக் கேட்டுவரும்படி சொன்னார்.

உடனே பதிவாளரைத் தேடிச் சென்றார்கள். அவருக்கும் அது என்ன வழக்கு? என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது என ஒரு விவரமும் நினைவில் இல்லை. இப்படி வழக்குத் தொடர்பான எல்லா விவரங்களும் மறந்து போயிருந்தன.

முடிவில் அரசாங்க உத்தரவில்லாமல் தண்டிக்க முடியாது எனக் கூறி யூத வணிகன் விடுதலை செய்யப்பட்டான்.

அவன் வீடு திரும்பி மனைவி பிள்ளைகளிடம் இந்த அதிசயம் எப்படி நடந்தது எனக் கேட்டான். அப்போது மறதியின் தேவதை அவர்கள் முன் தோன்றி, நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பதற்காக நான்தான் அவர்களின் மூக்கில் முத்தமிட்டேன் என்றது. அந்தக் குடும்பமே மறதியின் தேவதையை வணங்கி, நன்றி சொன்னார்கள் என அந்தக் கதை முடிகிறது.

இப்படி மறதியால் உருவாகும் நன்மைகள் ஒருபக்கம் இருந்தாலும் மறதியால் ஏற்படும் நெருக்கடிகளே அதிகம் என்று தோன்றுகிறது. தானே ஏற்படும் மறதியைப் புரிந்து கொள்ள

முடிகிறது. மறதியை ஒரு தந்திரமாகப் பயன்படுத்துவதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை. மறதி இன்று தேசிய வியாதியாக மாறியிருக்கிறது. மறதியை ஒப்புக்கொள்ள பலரும் விரும்புவதே இல்லை. மறதி இயல்பானதுதானே; அதை மறைக்க ஏன் இத்தனை பொய்கள்!

‘ஆசை முகம் மறந்து போச்சே -இதை

யாரிடம் சொல்வேனடி தோழி

நேசம் மறக்கவில்லை நெஞ்சம் எனில்

நினைவு முகம் மறக்கலாமோ?’

எனப் பாடுகிறார் பாரதி. இது முற்றிலும் உண்மை. நமக்கு மிகவும் விருப்பமானவர்களின் முகம் திடீரென நினைவுக்கு வரவே வராது. ஆசை முகமும் கூட மறந்து போகவே செய்யும்.

கடந்த காலத்தின் வலியும் வேதனையும் மறந்து போக வேண்டியவை. அதில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்கள்தான் முக்கியமானவை. மற்றபடி நேற்றைய துயரைச் சொல்லிகொண்டே இருந்தால் அதனால் ஒன்றும் ஆகிவிடப்போவதில்லை.

நம்மை நேசிப்பவர்களை, நன்றிக்குரியவர்களை, வழிகாட்டிகளை, ஆசான்களை, நமக்காக வாழ்பவர்களை ஒருபோதும் மறக்கக்கூடாது. நம் நினைவுகளை மட்டுமின்றி, தேசத்தின் நினைவுகளையும், அதற்கு உயிர் தியாகம் செய்தவர்களின் நினைவுகளையும் காப்பாற்ற வேண்டியது நமது பொறுப்பே.
இணைய வாசல்: >யூதர்களின் மரபுக் கதைகளை அறிந்துகொள்ள
http://www.rodneyohebsion.com/jewish-folktales.htm

## பகுதி 41 - எச்சில் கோபம்!

நெருக்கடியான சூழ்நிலையில் எந்தப் பொருளையும் ஆயுதமாகப் பயன் படுத்தக்கூடியவன் மனிதன். கல் தான் உலகின் முதல் ஆயுதம். கற் காலத்தில் கல்லை பயன்படுத்தி கற் கோடாரிகளை உருவாக்கியிருக்கிறார் கள். கல்லை உரசி நெருப்பு பற்ற வைத் திருக்கிறார்கள். இரும்பு கண்டுபிடிக் கப்பட்ட பிறகு புதிய புதிய ஆயுதங் கள் உருவாக ஆரம்பித்தன. சீனர்கள் வெடிமருந்தை ஆயுதமாகப் பயன் படுத்தத் தொடங்கியது வரலாற்றின் போக்கையே உருமாற்றியது.

இன்று அணுகுண்டு முதல் ரசாயனப் புகை வரை அச்சமூட்டும் பல நூறு ஆயுதங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. 'சக்கரவர்த்தி திருமகள்' படத்தில் இடம்பெற்றுள்ள ஒரு பாடலில் 'உலகத்திலே பயங்கரமான ஆயுதம் எது?' என கலைவாணர் கேட்கும் கேள்விக்கு, 'நயவஞ்சகரின் நாக்கு' என பதில் சொல்வார் எம்.ஜி.ஆர். அது முற்றிலும் உண்மை!

நாக்கு மென்மையானது. ஆனால், அதில் இருந்து வெளிப்படும் சொற்கள் மென்மை யானவை இல்லை. அதிலும் கோபத்தில் ஒருவரை நோக்கி வீசப்படும் சொற்கள் வலிமையான ஆயுதமாகவே உருமாறிவிடுகிறது.

கோபத்தைக் கையாளத் தெரிய வில்லை என்பதுதான் பலருக்கும் பிரச்சினை. அது போலவே யாரிடம் கோபம் கொள்ளவேண்டும் என்றும் தெரி வது இல்லை. பெரும்பான்மையினரின் கோபம் வீட்டில்தான் அரங்கேறுகிறது. இன்னும் சிலர் எதற்கு கோபம் கொள்கிறார்கள் என்று அறியாமலே வெடிக்கிறார்கள். எளிய மனிதர்கள் கோபம் கொண்டாலும், அதைக் காட்ட முடிவதில்லை. மனதுக்குள்ளாகவே அடக்கிக் கொள்கிறார்கள்.

சிலருக்கு கோபம் வரும்போது எவ் வளவு முட்டாள்தனமாக நடந்துகொள் வார்கள் என அவர்களுக்கே தெரிவ தில்லை. ரொம்பவும் கோபப்படுகிறவர் களுடன் யாரும் பழக மாட்டார்கள். பலரும் யாராவது கோபப்படுத்தினால், சட்டென வார்த்தைகளைக் கொட்டி விடுகிறார்கள்.

கோபத்தின் முக்கிய காரணி வெறுப்பே. ஒரு மனிதனின் வெற்றிக் குத் தடையாக இருப்பதில் மிக முக்கிய மானது கோபம். கோபம் கொள்வதால் நமது சிந்தனையும், கவனமும் சிதறடிக் கப்படுகின்றன. கோபம் வராவிட்டால் சுயமரியாதை உள்ள மனிதனாக வாழ முடியாது. கோபத்தை வெளிக் காட்டக் கூடாது என்று முயற்சிக்கும்போதும், அவனை சமூகம் பலவீனமானவன் என கேலி செய்வதுடன், அவமதிக்கவும் தொடங்குகிறது. கோபம் வலிமையான தொரு ஆயுதம்! அதை முறையாகக் கையாள நமக்கு தெரிய வேண்டும்.

நைஜீரியாவில் ஒரு பழங்கதை உண்டு. ஒரு வணிகனின் கடைக்கு ஒரு பிச்சைக்காரி தனது குழந்தைகளுடன் யாசகம் கேட்டு வருகிறாள். அவளுக்குப் பிச்சை போட மனமில்லாத வியாபாரி அவளை அங்கிருந்து துரத்துகிறான். அவள் கடையை விட்டு போக மறுக் கிறாள். கோபமடைந்து அவளை நோக்கி காறித் துப்புகிறான். அந்த எச்சில் அவளது குழந்தைகள் மீது தெறிக்கிறது. அவள் கோபத்தில் ஏதோ சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விடுகிறாள்.

இரவு வியாபாரி வீட்டுக்குப் போகி றான். உறங்குகிறான். காலையில் எழுந்த போது ஒரே தாகமாக இருக்கிறது. தண் ணீர் குடிக்கிறான். அப்படியும் தாகம் தீர வில்லை. கொஞ்ச நேரத்தில் அவனது நாக்கு உலர்ந்து போய்விடுகிறது. எவ் வளவு தண்ணீர் குடித்தாலும் நாக்கில் ஈரமே இல்லை. அந்தப் பிச்சைக்காரி ஏதோ சாபம் கொடுத்துவிட்டாள் என நினைத்துப் பயந்துபோன வியாபாரி, அவளைத் தேடி அழைத்துவரும்படி ஆளை அனுப்பினான்.

பிச்சைக்காரி யைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. நாட்கள் கடந்து போனது. சொம்பு சொம்பாகத் தண்ணீர் குடித்தும் அவனது நாக்கில் ஈரமே இல்லை. ஆள் மெலிந்து ஒடுங்கிப் போனான்.

ஒருநாள் அதே பிச்சைக்காரியை வீதி யில் பார்த்தான். ஓடிப்போய் அவளிடம் மன்னிப்பு கேட்டு தன்னுடைய பிரச்சினை யைப் பற்றி அவளிடம் சொன்னான். அப்போது அந்தப் பிச்சைக்காரி சொன்னாள்: "உன் பிரச்சினை தீர ஒரேயொரு வழிதான் இருக்கிறது. இந்த ஊரிலுள்ள எல்லாப் பிச்சைக்காரர்களும் உன் மீது காறித் துப்ப வேண்டும். அப்படி செய்தால் சரியாகிவிடும்!" என்றாள்.

அவன் வேறுவழியில்லாமல் அதற்கு ஒப்புக்கொண்டான். மறுநாள் அந்த ஊரில் இருந்த அத்தனை பிச்சைக்காரர் களும் ஒன்றுதிரண்டு அவன் கடைக்கு முன்னால் வந்தார்கள். வியாபாரி கடை யின் முன்பு உட்கார்ந்துகொண்டான். அத்தனை பேரும் ஒரே நேரத்தில் அவன் முகத்தில் காறித் துப்பினார்கள். அவன் மீது எச்சில் வழிந்தோடியது. சில நிமிஷங்களில் வியாபாரியின் நாக்கில் ஈரம் சுரக்க ஆரம்பித்தது. அவன் நல மடைந்தான். அன்றோடு பிச்சைக்கார் களை நோக்கி காறித் துப்புவதை மக்கள் நிறுத்திக் கொண்டார்கள் என்று அந்தக் கதை முடிகிறது.

உண்மையில் பிச்சைக்காரியின் சாபம்தான் அவனது நாக்கை உலர செய்ததா? அவனது குற்றவுணர்ச்சியே அவனது நோயாக உருமாறுகிறது. ஆகவேதான் எச்சில் பட்டு அடைந்த அவமானம் எச்சில் வழியாகவே தீர்க்கப்படுகிறது.

மனசாட்சியின் உறுத்துதலே அவ னைப் பீடித்த நோய். அவன் மன்னிப்பு கேட்டு பிச்சைக்காரர்களின் எச்சிலை ஏற்றுக்கொள்வதன் மூலம் தவறில் இருந்து விடுபடுகிறான். கோபத்தில் உமிழப்படும் எச்சில் கூட சாபமாக மாறி விடும் என்பதை இக்கதை சுட்டிக் காட்டுகிறது

இது போன்ற சம்பவங்கள் இந்தியா விலும் நடந்திருக்கின்றன. ஆந்திராவில் வீட்டுக்கு வெள்ளை அடித்துக் கொண் டிருந்த ஒருவன் வெற்றிலை போட்டு எச்சில் துப்புகிறான். அது காற்றில் பறந்து வரி வசூலிக்க வந்த வெள்ளைக்கார அதிகாரி மீது விழுந்து விடுகிறது. அதற்கு தண்டனையாக வெள்ளை அடித்துக் கொண்டிருந்தவன் நாக்கு துண்டிக்கப்பட்டதாக கர்னல் லெயிட்டன் குறிப்பு கூறுகிறது.

தாசியின் வெற்றிலை எச்சில் கோயில் சுவரில் பட்டதற்காக அவளுக்கு சவுக்கடி தண்டனை விதிக்கப்பட்டது என்கிறது தமிழக வரலாறு. குழந்தைகளுக்குப் பேசக் கற்றுக் கொடுப்பது போலவே எப்போது மவுனமாக இருக்க வேண்டும் என்பதற்கும் நாம் கற்றுத் தர வேண்டும். 'மவுனம் சம்மதம்' என்பார்கள். அது உண்மையில்லை. எதிர்ப்பின் அடை யாளமாகவும் இருக்கக்கூடும்.

'கடிவாளம் இல்லாத குதிரையைச் செலுத்தமுடியாது' என்பார்கள். கதை களும் ஒரு வகையில் கடிவாளமே. கதை கள் மனித வாழ்க்கையை நெறிப்படுத்த உதவி செய்கின்றன. ஒரு கதையின் வயது எவ்வளவு என அதை கேட்பவரால் கண்டறிய முடியாது. கதைகள் காலத்தின் ரேகைகள் படியாதவை. அவை என்றும் இளமையாக இருப்பதாலே காலந்தோறும் சொல்லப்பட்டும், கேட் கப்பட்டும் வருகின்றன.

இணைய வாசல்: >நைஜீரியப் பழங்கதைகளை அறிந்துகொள்ள
http://www.sacred-texts.com/afr/fssn/

## பகுதி 42 - குடித்த கழுதை!

ஞாயிற்றுக்கிழமை காலை நேரம் வீட்டின் அருகில் உள்ள சாலையில் பெரிய கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. வரிசை வரிசையாக பைக்குகள். கார்கள். நீண்ட வரிசை. தள்ளுமுள்ளு. எதற்காக இவ்வளவு பேர் முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள் எனப் பார்த்தால், அது டாஸ்மாக் மதுக்கடை.

உச்ச நீதிமன்ற உத்தரவின் காரணமாக சாலையோர மதுக்கடைகள் மூடப்பட்டுவிட்டன. ஆகவே, இங்கே கூட்டம் மொய்க்கிறது என்றார் பெட்டிக் கடைக்காரர். மதுக்கடையில் வரிசையில் நின்று அடித்து சண்டையிட்டு மதுவை வாங்க போட்டிப் போடுவதை காணும் போது, அதிர்ச்சியாகவே இருந்தது. வாழ்வில் ஒருமுறைகூட இவர்களில் எவரும் ரேஷன் கடை வரிசையில் நின்றிருக்கவே மாட்டார்கள்.

நல்லதொரு இசை நிகழ்ச்சிக்கோ, இலக்கிய நிகழ்ச்சிக்கோ இப்படி ஒரு கூட்டம் அலைமோதியதாக வரலாறே கிடையாது. இவ்வளவு ஏன், உடல் நலமற்று மருத்துவமனைக்குப் போக வேண்டிய நிலை வந்தால்கூட, 10 நிமிஷம் காத்திருக்க முடியாமல் சலித்துக் கொள்பவர்களாகத்தானே இருக்கிறார்கள். ஆனால், இப்படி வெயிலில் காத்துக் கிடந்து, முட்டி மோதி மது பாட்டில்களை வாங்க போட்டியிடுகிறார்கள் என்றால், இதை காலக்கொடுமை என்றுதானே சொல்லவேண்டும்.

இதில் கூட்டத்தை முறைப்படுத்த இரண்டு காவலர்கள் நின்றிருந்தார்கள். சாலையை அடைத்து பைக், கார்களை நிறுத்திவிட்டதால் போக்குவரத்து இடையூறு வேறு. உலகில் வேறு எங்காவது இப்படி மதுக்கடைகளின் முன்பாக இவ் வளவு கூட்டம் நிரம்பி வழிந்து, தள்ளுமுள்ளுகள் நடக்குமா எனத் தெரியவில்லை.

குடி, தமிழகத்தை சீரழிக்கும் மிக மோசமான நோய். மதுவுக்கு எதிரான தொடர் போராட்டங்கள், விழிப்புணர்வு கூட்டங்கள், பாத யாத்திரைகள் ஒரு பக்கம் நடைபெறுகின்றன. மறுபக்கம் பெண்கள் மதுக்கடைகளின் முன்பு திரண்டு போராடுகிறார்கள். உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆனால், யார் என்னவிதமான எதிர்ப்பைக் காட்டியும் ஒரு பலனும் இல்லை என்பதுதான் நிஜம்!

மதுவுக்கு எதிராக போராடுகிறவர்களைப் பொதுமக்களே கேலி செய்கிறார்கள். முட்டாள்களாக கருதுகிறார்கள். பள்ளி மாணவன் தொடங்கி 80 வயது கிழவர் வரை போதை அடிமைகளாக மாறிய நிலையில், குற்றமும் வன்முறையும் மோசடிகளும்தான் பெருகி வருகின்றன.

புகழ்பெற்ற அமெரிக்க விண்வெளி வீரரும் நிலவில் இறங்கிய இரண்டாவது மனிதருமான ஆல்ட்ரின் மிக மோசமான குடிகாரர். நிலாவுக்குச் சென்று திரும்பிய பின்பு, தன் வாழ்நாளில் பெரும்பகுதியை அவர் குடியிலேயே கழித்தார். குடி அவரை மிக மோசமான மனச் சோர்வுக்கு உள்ளாக்கியது. தனது வாழ்வை குடித்தே அழித்துக்கொண்டவர் ஆல்ட்ரின்.

இங்கிலாந்து முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், காலை கண் விழித்தவுடன் குடிக்க ஆரம்பித்துவிடுவாராம். மிதமிஞ்சி குடிக்கக் கூடியவர் அவர். எழுத்தாளர் ஹெமிங்வே விடிய விடிய குடித்து மகிழ்பவர். இப்படி குடியால் அழிந்த தலைவர்கள், கலைஞர்கள் ஏராளம்.

உலகெங்கும் குடிக்கு எதிராக நிறையக் கதைகள் சொல்லப்படுகின்றன. அதில் ஒரு கதை குடிகாரக் கழுதையைப் பற்றியது. உக்ரேனில் சொல்லப்படும் கதை இது.

வான்கோழி ஒன்றும் கழுதையும் நண்பர்களாக இருந்தன. கழுதை எப்போதுமே தன்னை ஒருவரும் மதிப்பதில்லை; ஒயாமல் வேலை செய்யச் சொல்கிறார்கள்; வாழ்க்கையில் எந்த இன்பத்தையும் அனுபவித்ததே இல்லை என புலம்பிக்கொண்டே இருந்தது. ஆனால், வான்கோழியோ எப்போதும் சந்தோஷத்துடன் ஆடிப் பாடியபடி உற்சாகமாக இருந்தது.

கழுதைக்கு நீண்டநாட்களாக விருந்து சாப்பாடு சாப்பிட வேண்டும் என்று ஓர் ஆசை இருந்துகொண்டே இருந்தது. ஒருமுறை ஒரு பண்ணை வீட்டில் பெரிய விருந்து. கழுதையின் ஆசையை நிறைவேற்றிவைக்க நினைத்த வான்கோழி, கழுதையை அந்த விருந்துக்கு அழைத்துச் சென்றது.

விதவிதமான உணவு வகைகளைக் கண்ட கழுதை, ஆசை ஆசையாக சாப்பிடத் தொடங்கியது. அப்போது பண்ணை முதலாளி ஒரு கோப்பையில் மது அருந்திக் கொண்டிருந்தான். அதைக் கண்டதும் கழுதைக்கும் மது அருந்தும் ஆசை உண்டானது. உடனே, மதுப் போத்தல் ஒன்றை எடுத்து முழுவதையும் குடித்து முடித்தது. போதை தலைக்கேறிய கழுதை, தன்னுடைய உடலை சிலிர்த்துக்கொண்டு பாடத் தொடங்கிவிட்டது. பயந்துபோன வான்கோழியோ, “ஏய் கழுதை! வாயை மூடு” என சத்தமிட்டது.

ஆனாலும் கழுதை அடங்க மறுத்தது. அது இன்னும் கூடுதல் உற்சாகத்தில் தனது கால்களை உதைத்துக்கொண்டு, வாலை ஆட்டியபடி ஆடத் தொடங்கியது. கழுதையின் ஆட்டம்பாட்டத்தில் விருந்துக்கான உணவுப் பாத்திரங்கள் எல்லாம் கவிழ்ந்தன.

போதையில் ஆர்ப்பாட்டம் செய்கிற கழுதையைக் கட்டுப்படுத்த வான்கோழி முயன்றபோது, கழுதை அதை ஓங்கி உதைத்து தள்ளிவிட்டது. அதுமட்டுமல்ல; விருந்துக்கு வந்திருந்த இளம்பெண் ஒருத்தியைக் கட்டிக்கொண்டு ஆடுவதற்கும் கழுதை முயற்சித்தது.

அந்தப் பெண் வீறிட்டு அலறினாள். இதைப் பார்த்த பண்ணை ஆட்கள் கழுதையை அடித்து உதைத்து வெளியே துரத்திவிட்டார்கள். அப்படியும் கழுதைக்கு போதை தெளியவே இல்லை. அது இரவெல்லாம் கத்திக் கொண்டேயிருந்தது. மறுநாள் கழுதையை விருந்துக்கு அழைத்துவந்த காரணத்துக்காக வான்கோழியைப் பண்ணை யில் இருந்தே துரத்திவிட்டார்கள்.

போக்கிடம் இல்லாத வான்கோழி காட்டை நோக்கிச் சென்றது. வழியில் அடிபட்டு கிடந்த கழுதையைக் கண்டது. காயத்துடன் இருந்த கழுதை, “நேற்றிரவு எனக்கு என்ன நடந்தது? எதற்காக என்னை இப்படி அடித்திருக்கிறார்கள்?” எனக் கேட்டது.

“நடந்த எதுவுமே உனக்கு நினைவில்லையா..?” என வான்கோழி கேட்டது.

“என்ன செய்தேன் என்று எனக்கு துளியும் ஞாபகமில்லை!” என்றது கழுதை.

அதைக் கேட்ட வான்கோழி, “குடியால் நீ கெட்டதோடு, உன்னை பண்ணை வீட்டு விருந்துக்கு அழைத்துப்போன என்னையும் வெளியே துரத்தும்படி செய்துவிட்டாய். உன்னோடு நட்பு கொண்டதற்காக உதை வாங்கியதுதான் மிச்சம்.

இனி, நமக்குள் நட்பு வேண்டாம்!” என விலகிப்போனது வான்கோழி.

உக்ரேனியக் கதையில் ‘குடிப்பவனுடன் நட்பே வேண்டாம்’ என விலகிப் போகிறது வான்கோழி. ஆனால், நடப்பு உலகில் நட்பு உருவாவதற்கு குடியே மையப் புள்ளியாக உள்ளது. நட்பை கொண்டாடக் குடிக்கிறார்கள். மது விடுதிகளில் அன்பு பெருக்கெடுத்து ஓடுகிறது. பரஸ்பரம் ஊட்டிவிடுகிறார்கள். தமிழ் சமூகத்தின் இன்றைய முகம் போதையேறிய குடிகாரனின் தோற்றமே.

பேருந்தில், ரயிலில், திருமண வீடுகளில், விருந்துகளில், விழாக்களில், நிகழ்ச்சிகளில், பொது இடங்களில் குடிப்பவர்களால் ஏற்படும் பிரச்சினைகளைப் பொதுமக்கள் அன்றாடம் சந்தித்தே ஆகவேண்டியிருக்கிறது. நகரத்தில் கூடிக் கூடி குடித்தது போதாதென்று, இன்றைய நாளில் காட்டையும் தேடிப் போய் குடிக்கிறார்கள். காலி பாட்டில்கள், பிளாஸ்டிக் போத்தல்களைக் குப்பையாக வனங்களில் வீசி எறிந்துவிட்டு வந்துவிடுகிறார்கள். சுற்றுலாத் தலங்கள் எங்கே சென்றாலும் குடி பெருகியோடுகிறது. கோயில் பிரகாரங்களில் கூட குடிக்கிறார்கள். குடி அனுமதிக்கபடாத தங்கும்விடுதிகளே கிடையாது. குடியை ஊடகங்கள் கொண்டாடுகின்றன.

தன்னைச் சுற்றி நடக்கும் இந்தக் காட்சிகளை குழந்தைகள் மவுனமாகப் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். குழந்தைகள் மனதில் இவை அழுத்தமாக ஊன்றப்படுகின்றன. இதன் விளைவு என்னவாகும் என்பது மிகுந்த கவலையளிக்கவே செய்கிறது.

## பகுதி 43 - இரக்கத்தைக் கொள்ளையடிக்கிறார்கள்!

வீட்டின் காலிங்பெல்லை அடிக்கும் சத்தம் கேட்டு கதவைத் திறந்தேன். வெளியே ஒரு நபர் நின்றிருந்தார். 60 வயதுக்கும் மேலிருக் கும். மேல்சட்டை அணிந்திருக்கவில்லை. ஊதா நிற பட்டுச் சால்வை ஒன்றை உடலை மறைத்துப் போட்டிருந்தார். காவி நிற வேட்டி, நெற்றியில் பட்டையாக திருநீறு, கையில் பித்தளைக் காப்புடன் துணிப் பை ஒன்றை இடதுகையில் வைத்திருந்தார்.

அதில் இருந்து ஒரு திருமணப் பத்திரிகையை எடுத்து நீட்டி, “பொண்ணுக்குக் கல்யாணம் வெச்சிருக்கேன். உங்களாலே முடிஞ்சதைக் கொடுங்க…” என மெதுவான குரலில் கேட்டார்.

அந்தப் பத்திரிகையைக் கையில் வாங்கிப் பார்த்தேன். பெண் பெயர் உமா. மாப்பிள்ளை பெயர் மோகன். திருமணம் நடக்கப் போகிற இடம் குன்றத்தூர் என அதில் விவரங்கள் இருந்தன.

இதே நபர் இரண்டு மாதங்களுக்கு முன்பாக எனது நண்பரின் குடியிருப்புக்கு வந்தபோது அங்கே நானிருந்தேன். இதே பணிவுடன் இதைப் போலவே ஒரு பத்திரிகையை நண்பனின்

முன்னே நீட்டினார். அவனும் கல்யாண காரியமாக கேட்கிறாரே என, ஒரு 500 ரூபாயைக் கொடுத்தான். நன்றி தெரிவித்தபடியே திருமணப் பத்திரிகையை மறக்காமல் திரும்ப வாங்கிக் கொண்டார்.

அதே ஆள்தான் இப்போது வாசலில் நின்றிருந்தார். அவரிடம் எதுவும் தெரியாததைப் போல விசாரிக்க ஆரம்பித்தேன். அந்த ஆள் கடகடவென ஒரு கதையைச் சொல்லத் தொடங்கினார்.

கேட்டு முடித்த பிறகு, உங்களை இரண்டு மாதம் முன்பாக தியாகராய நகரில் சந்தித்திருக்கிறேன். இது போல திருமணப் பத்திரிகை ஒன்றை கொடுத்தீர்கள். ஒரே வித்தியாசம், அப் போது பெண் பெயர் காயத்ரி என்றிருந்தது எனச் சொன்னேன்.

அவரது முகம் சட்டென்று மாறிவிட்டது. "நீங்க யாரையோ பாத்துட்டுச் சொல்றீங்க…" என்றார்.

"இல்லை நீங்களேதான். சால்வை கூட மாறலை…" என்றேன்.

"என்னை சந்தேகப்படுறீங்களா.." எனக் கேட்டார் அந்த நபர்.

"ஆமாம். ஏன் இப்படி ஃபிராடு வேலை பண்ணுறீங்க…" எனக் கேட்டேன்.

அந்த ஆள் என்னை முறைத்தபடியே இருந்தார். பிறகு, "இன்விடேஷனைக் குடுங்க" எனக் கேட்டார்.

"இல்லை, எனக்கு வேணும்" என்றேன்

"குடுறா…" என அந்த ஆள் குரலை உயர்த்தியதோடு, என் கையில் இருந்த பத்திரிகையை வெடுக்கெனப் பிடுங்கிய படியே படியிறங்கி வெளியே போக ஆரம்பித்தார். நிற்கச் சொல்வதற்குள் வெளியேறியிருந்தார் அவர். அந்த ஆள் தனி நபரில்லை. அவருடன் இரண்டு பேர் உடன் வந்திருந்தார்கள். அவர்களுடன் பைக்கில் ஏறிக் கிளம்பிப் போய்விட்டார்.

இந்த ஃபிராடினை முன்கூட்டி சந்தித்த காரணத்தால் பணம் தராமல் துரத்திவிட்டேன். ஆனால், இதை அறியாத எத் தனையோ பேர் ஏமாந்து போயிருப்பார்கள். மாநக ரில் புதிது புதிதாக ஃபிராடுகள் பெருகிக் கொண்டே இருக்கிறார்கள். மக்களிடம் கொஞ்சநஞ்சமிருக் கும் இரக்கத்தைக் கொள்ளையடிக்கிறார்கள். இவர்களிடம் ஏமாந்து போன மக்கள் உண்மையில் யாருக்காவது உதவி தேவைப்பட்டால் கூட செய்ய மாட்டார்கள். நம் காலத்தில் மிகப் பெரிய மோசடி, உதவி கேட்டு ஏமாற்றுவதே!

அறியாத ஊரில் தெரியாமல் ஏமாறுவது வேறு. ஆனால், வீடு தேடி வந்து நம்மை ஏமாற்றுகிறார் கள் என்றால் மோசடியின் உச்சத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம் என்றுதானே அர்த்தம்! தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை மோசடிப் பேர் வழிகளைப் போல அதிகம் உபயோகம் செய்பவர்கள் யாருமே இல்லை. ஏமாற்றுக்காரர்கள் தனிநபர் களுமில்லை.

ஏமாற்றுவதை பெரும் சாகசம் போல காட்டுகின்றன திரைப்படங்கள். கதாநாயகன் விதவிதமான முறைகளில் ஏமாற்றுகிறான் என்பதை கைத்தட்டி ரசித்துக் கொண்டாடு

கிறார்கள். இதே நபர்கள் தன் பொருளை யாராவது ஏமாற்றிப் பறிக்கும்போது சூப்பர் எனக் கைத்தட்டிக் கொண்டாடுவார் களா என்ன? குற்றங்கள் கொண்டாடப்படும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது பெரிதும் அச்சமூட்டுகிறது.

வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறை வேற்றிக்கொள்ள முடியாமல் எத்தனையோ பேர் உழைத்துப் போராடுகிறார்கள். ஒருவேளை உண்பதாக இருந்தாலும் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்று நினைக்கிறார் கள். வறுமையை, ஏமாற்றத்தைத் தாங்கிக்கொண்டு என்றாவது நல்லது நடந்துவிடும் என நம்பிக்கொண்டிருக் கிறார்கள். உலகம் இவர்களின் துயரைப் புரிந்துகொள்வதே இல்லை.

ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன் எழுதிய 'தீக்குச்சி விற்கும் சிறுமி' என்ற கதை இந்த உண்மையைத்தான் உலகுக்கு சொல்கிறது.

புதுவருஷம் பிறக்கப் போகும் நேரம். கொட்டும் பனியில் கால்செருப்புக் கூட இல்லாமல் ஒரு சிறுமி வீடு திரும்பிக்கொண் டிருந்தாள். அவள் தீக்குச்சி விற்பவள். அன்று ஒரு கட்டு தீக்குச்சியைக் கூட அவளால் விற்க முடியவில்லை. வெறும் காலோடு பனியில் நடப்பது சிரமமாக இருந்தது அவளுக்கு.

ஏமாற்றத்துடன் வீடு வந்து சேர்ந்தாள். சின்னஞ்சிறிய அறை. அவளுக்குத் தாங்க முடியாத பசி. குளிரும் சேர்ந்து வேதனைப்படுத்தியது. நெருப்பில் குளிர் காய்ந்தால் இதமாக இருக்குமே என அச்சிறுமி ஒரு தீக்குச்சியை உரசினாள். வெளிச்சம் உருவானது. அதனுள் விதவிதமான கேக்குகள். உணவு வகைகள் உள்ள மேஜையொன்று அவளுடைய கண்ணுக்குத் தெரிந்தது. ஆசையாக அதையெடுத்து சாப்பிட முயற்சித்தாள். ஆனால், தீக்குச்சி அணைந்தவுடன் காட்சி மறைந்துவிட்டது.

உடனே இன்னொரு தீக்குச்சியை உரசினாள். அந்த ஒளிவட்டத்தினுள் கிறிஸ்துமஸ் மரத்தின் விளக்குகள் வானத்தை நோக்கி உயரச் சென்றுகொண்டிருந்தன. தீக்குச்சி அணைந்தவுடன் அந்தக் காட்சியும் மறைந்துபோனது.

ஆசையாக அடுத்த குச்சியை உரசினாள். அந்த ஒளிவட் டத்தில் அவளுடைய வயதான பாட்டி கனிவான பார்வையோடு நின்றிருந்தாள். எங்கே தீக்குச்சி அணைந்து போனால் பாட்டி மறைந்து போய்விடுவாளோ எனப் பயந்த சிறுமி கையில் இருந்த கட்டுத் தீக்குச்சிகளை ஒரே நேரத்தில் உரசினாள். வெயிலைக் காட்டிலும் பிரகாசமான ஒளிவட்டம் உரு வானது. அதில் பாட்டி பேரழகுடன் ஒளிர்ந்துகொண்டிருந் தாள். அவளை நோக்கி ஆசையோடு கையை நீட்டினாள் சிறுமி.

பாட்டி அந்த இளம் தேவதையைக் கைகளில் ஏந்திக் கொண்டாள். இருவரும் ஒளிவானத்தில் மிதந்து மறைந்தனர். பின்பு அந்தச் சிறுமிக்கு குளிரோ, பசியோ எதுவும் தெரியவில்லை. ஆம். அவள் இறந்து போயிருந்தாள்!

மறுநாள் இறந்து கிடந்த சிறுமியை வேடிக்கை பார்க்க வந்த எவருக்குமே அவள் தன் பாட்டியோடு ஒளிவானத்தில் புகுந்துபோனது தெரியாது. அந்த ஒளிவானத்தை அவர்கள் கனவிலும் கண்டதில்லை என, அந்தக் கதை முடிகிறது.

உலகமே புத்தாண்டு கொண்டாடும்போது எங்கோ ஒரு மூலையில் ஒரு சிறுமி பசியில், குளிரில் வாடி இறந்து போவதும் நடக்கவே செய்கிறது என்ற துயரத்தையே இந்தக் கதை சொல்கிறது.

சிறுமியின் ஆசைகளே தீக்குச்சி வெளிச்சத்தில் அவள் கண்முன்னே நிஜமாக தோன்றுகின்றன. வெளிச்சம் அவளை அரவணைத்துக்கொள்கிறது. அன்பு செலுத்த யாருமில்லாத சிறுமி முடிவில் பாட்டியோடு ஒளியில் கலந்துவிடுவது பெருஞ்சோகம்.

இச்சிறுமியைப் போல எத்தனையோ பேர் வறுமையில். பசியில், நோயில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்கிறோம் என சிலர் பொதுமக்களிடம் உதவி கேட்டு ஏமாற்றி, கொள்ளையடித்து சுகபோகங்களை அனுபவிப்பது பெருங்குற்றம்.

'மனிதன் ஒரு மகத்தான சல்லிப் பயல்' என்றார் எழுத்தாளர் ஜி.நாகராஜன். அது மறுக்க முடியாத உண்மையே!

இணைய வாசல்: ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன் எழுதிய சிறார் கதைகளை வாசிக்க http://hca.gilead.org.il/

## பகுதி 44 - சிந்திக்கும் விலங்கு!

மூன்று தலைகள், ஆறு கைகள் என பல் வேறு வகை கடவுள் இருக்கிறார்கள். "மூன்று கால் உள்ள கடவுள் யாராவது இந்தியாவில் இருக்கிறார்களா?" என நண்பர் ஒரு வரிடம் கேட்டேன். "இல்லை…" என்றதோடு "எப்படி இதுபோல யோசிக்கிறீர்கள்?" எனக் கேட்டார்
"இது ஒரு எளிய சந்தேகம்தான். திடீரென தோன் றியது. விடை தேடிப் பார்த்தேன். கண்டறிய முடிய வில்லை. அதுதான் உங்களிடம் கேட்டேன்!" என்றேன்.

சிரித்தபடியே நண்பர் கேட்டார்: "எல்லோரும் ஏற்றுக்கொள்கிற விஷயத்தை, ஏன் எழுத்தாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள்? ஒவ்வொன்றையும் ஏன் ஆராய்கிறீர்கள்? அப்படி என்ன கிடைத்துவிடப்போகிறது?"

உண்மை! எழுத்தாளர்கள், கலைஞர்கள், சிந்தனை யாளர்கள் எதையும் அப்படியே ஏற்றுக் கொள்வதில்லை தன். சுயசிந்தனையைச் சார்ந்தே முடிவுகள் எடுக்கிறார்கள். பொதுப் புத்தி சொல்வதை அப்படியே அவர்கள் நம்புவ தில்லை. ஆராய்ந்து பார்க்கிறார்கள். விசாரணை செய்கிறார்கள். ஆகவே, அவர்களால் தனித்துவமான பார்வையுடன் ஒன்றைப் பார்க்கவும், புரிந்துகொள்ளவும், வெளிப்படுத்தவும் முடிகிறது.

சுயசிந்தனையும் நுண்ணுணர்வும் கொண்டிருப்பதால்தான் படைப்பாளிகள் கொண்டாடப்படுகிறார்கள். அதனாலேதான் அவர்கள் வாழ்க்கை நரகமாகிப் போகிறது. நுண்ணுணர்வு கொண்ட ஒருவனை சமூகம் வாழ அனுமதிப்பதில்லை. சகல நெருக்கடிகளையும் அவன் மீது திணிக்கிறது. பொதுப் புத்தியே போதும் என அறிவுறுத்துகிறது.

ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் நுகர்வு கலாச்சாரத்தினுள் முழ்கி கிடக்கவேண்டும் என்பதே உலகின் பொதுவிதி. அதை மீறுகிறவர்களை ஒதுக்கியும், பரிகசித்தும், விலக்கிவைத்தும் சமூகம் துண்டாடுகிறது.

படிப்பின் பயன் என்பது வேலை தேடுவது, சம்பாதிப்பது மட்டுமில்லை; சுயசிந்தனையுடன் தேடலுடன் உலகை புரிந்துகொள்வதாகும். சாக்ரடீஸ் எழுப்பிய கேள்விகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் நம்மிடையே எதிரொலித்துக்கொண்டேதான் இருக்கின்றன. அது சிந்தனை யின் வலிமையைக் காட்டுகிறது. எது குறித்தும் கேள்வி கேட்டு, அதன் அடிப்படைகளைப் பற்றிய உண்மையை அறிந்துகொள்வதே சாக்ரடீஸின் பாணி.

ஏதென்ஸ் மக்கள் சாக்ரடீஸிடம் பேசினால் தங்களுக்குத் தெளிவு கிடைக்கும் என்று நம்பினார்கள். சாக்ரடீஸ் பிரச்சினைகளுக்கு எளிய தீர்வுகளைச் சொல்வது இல்லை. மாறாக, பிரச்சினைகளின் காரணத்தை கேள்வியின் மூலம் உணரச்செய்கிறார். அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைப் பகுத்தறிவுகொண்டு சிந்திக்க வைக்கிறார்.

இதனால் பொது மக்கள் பிரச்சினைகள் எதனால் உருவா கிறது என்பதை நன்றாகப் புரிந்துகொண்டார்கள். அதைப் போக்குவதற்குக் குரலும் கொடுத்தார்கள். சாக்ரடீஸ் தனது காலத்திய சமூக பழக்க வழக்கங்களை ஆராய்ந்து கேள்விகள் எழுப்பியதுடன் அரசாங்கத்தை, அதிகாரத்தைக் கடுமையாக விமர்சனமும் செய்தார். அந்தத் துணிச்சல், நேர்மை, மன உறுதியே இன்றளவும் சிந்தனையாளர்களுக்கு வழிகாட்டுகிறது.

விஷம் குடித்து சாக வேண்டும் என சாக்ரடீஸ் தண்டிக்கப்பட்டார். அப்போதும் அவர் விஷத்தைக் கண்டு பயப்படவில்லை. கையில் வாங்கி விரும்பிக் குடித்தார். தான் தீர்க்க வேண்டிய கடன் பாக்கியை நினைவுபடுத்திவிட்டே அவர் மரணத்தை சந்தித்தார். சாக்ரடீஸின் மரணத்தைப் பற்றி குறிப்பிடும்போது ‘சாக்ரடீஸ் சிந்திப்பதை நிறுத்தி விட்டார்’ என்றே சீடர்கள் அறிவித்தார்கள். சிந்திப்பதே மனிதனின் சிறப்பியல்பு. ‘மனிதன் என்பவன் மதிப்பீடு களை உருவாக்கிக்கொண்டு வாழும் ஒரு விலங்கு’ என்பார்கள்.

ராபர்ட் ஓவன் என்ற எழுத்தாளர் ‘எ நியூ வியூ ஆஃப் சொசைட்டி’ என்ற நூலில், மக்கள் அனைவருக்கும் முறையாக கல்வி, பயிற்சி மற்றும் வேலையும் அளிக்கப்பட்டால் சமூகம் எவ்வாறு வளர்ச்சியடையும் என்பதை விளக்கி எழுதியிருக்கிறார்.

அதில் ‘தொழிற்புரட்சியினால் ஒரு சிலருக்கே லாபம் கிடைத்தது. அவர்கள் சந்தையைப் பயன்படுத்தி பெரும் செல்வந்தர்கள் ஆனார்கள். ஆனால், பல்லாயிரம் உழைப் பாளர்கள் கஷ்ட நிலையில்தான் வாழவேண்டிய துரதிருஷ்டம் ஏற்பட்டது. இந்நிலை மாற்றப்படவேண்டும்’ என்கிறார்.

சமூகம் குறித்து நாம் சிந்திக்கவும், ஆராயவும், தேடவும் விடா மல் நுகர்வு கலாச்சாரம் நம்மை விழுங்கிக்கொண்டிருக்கிறது. அதில் இருந்து விடுபடவே கலைஞர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் களச் செயற்பாட்டாளர்கள் முயற்சித்து வருகிறார்கள். அவர்களைப் புரிந்துகொள்வதோடு தேவையான ஒத்துழைப்பும் உறுதுணையும் தரவேண்டியது சமூகத்தின் கடமையாகும்.

வில்லியம் ஸ்டான்லி மெர்வின் எனப்படும் டபிள்யூ.எஸ்.மெர்வின் அமெரிக்காவின் புகழ்பெற்ற கவிஞர். இவரது 'மணல்' என்ற சிறுகதை இரண்டே பக்கங்கள் கொண்டது. அபாரமான இச்சிறுகதை உலகச் சிறுகதைகள் வரிசையில் இடம்பெற்றுள்ளது.

மணல் கடிகாரம் ஒன்றினுள் நிரப்பப்பட்ட மணலிலுள் எப்படியோ ஓர் எறும்பு பிறந்து விடுகிறது. அதற்கு வெளியுலகம் என்ற ஒன்றே தெரியாது. மணல் துகள்களைத் தனது சகோதரர்களாக நினைக்கிறது. மேலிருந்துக் கீழாக, பின்பு கீழிருந்து மேலாக எதற்காக இப்படி தொடர்ந்து பயணம் செய்துகொண்டிருக்கிறோம் எனக் குழம்பியது. தன்னை எதற்காக மணல் துகள்கள் இப்படி இடித்துத் தள்ளுகின்றன. தன்னைப் போல அவை சுதந்திரமாக நகர ஏன் முயற்சிப்பதில்லை என யோசிக்கிறது. கண்ணாடி குடுவைக்கு வெளியே உலகம் இயங்கிக்கொண்டிருப்பதோ, அங்கே எறும்புகளால் சர்வ சுதந்திரமாக உலவ முடியும் என்றோ அதற்குத் தெரியவில்லை.

முடிவில்லாமல் அது மணல் துகள்களுடன் இழுபட்டபடியே இருந்தது. தன்னைச் சுற்றிய மணல் துகள்களைக் கணக்கிட முயன்று தோற்றுப்போனது. தான் தனியாக இருக்கிறோம் என்பதைக் கூட அந்த எறும்பு உணரவில்லை என்பதுடன் அக்கதை முடிகிறது.

இக்கதையை வாசித்த கணத்தில் அதிர்ந்துபோனேன். இது எறும்பின் கதையில்லை. நம் கதை. நவீன மனிதனின் கதை. மணல் துகள்களுக்குள் கலந்துபோய்விட்ட, ஆனால் விழிப்புணர்வுகொண்ட எறும்புபோலத்தானே எழுத்தாளனும் இருக்கிறான். 'தான் வேறு' என உணரத் தொடங்குகிற ஒருவனின் தத்தளிப்பை, இவ்வளவு அழுத்தமாக இரண்டே பக்கங்களில் சொல்லமுடிவது மெர்வினின் எழுத்தாற்றலே.

மணல் துகள்களோடு வாழும் எறும்பு 'தான் உயிருள்ள ஓர் உயிரி' என உணரத் தொடங்கியது தவறா? அப்படி உணர்ந்துகொண்டாலும் மணல் துகள்களுடன்தான் இழுபட வேண்டுமா? அன்றாட வாழ்க்கை என்பது அலைக்கழிக்கப்படுவது மட்டும்தானா?

தன்னையும் மணல் துகள் என எறும்பு நினைத்துக் கொள்வதுதான் கதையின் உச்சம். ஆனால், தன்னைப் போல ஏன் மணல் துகள்கள் சுயவிருப்பத்தின்படி நடப்பதில்லை என எறும்புக்குப் புரிவதில்லை. தப்பிக்க முடியாத நெருக்கடி என்பார்களே அதற்கு இந்த எறும்பே சரியான உதாரணம்.

கிணற்றுத் தவளைகள் இப்போது வெளியேறியிருக்கின்றன. ஆனால், அதன் கிணற்றுத் தவளை மனோபாவம் மாறவேயில்லை. அவை எங்கே போனாலும் தனக்கென ஒரு கிணற்றை உருவாக்கிக் கொள்ள முயற்சிக்கின்றன. தன்னைப் போன்ற மனநிலை கொண்டவர்களிடம் மட்டுமே பழகுகின்றன. கிணறுகள் மறைந்துபோனாலும் கிணற்றுத் தவளைகள் மறைவதில்லை!

இணைய வாசல்: நவீன ஈசாப் கதைகளை வாசிக்க
https://www.umass.edu/aesop/fables.php

## பகுதி 45 - சந்தேகத்தின் நிழல்!

‘ஒருவரது வீட்டுக்குள் சந்தேகம் நுழையும் போது சந்தோஷம் வெளியேறிப் போய் விடும்’ என்பார்கள். சந்தேகம் என்பது தீர்க்க முடியாத மன வியாதி; சமூகத்தில் வேகமாக பரவி வரும் விஷக் கிருமி!

உண்மையை மறைப்பதே சந்தேகத்தின் தோற்றுவாய். உண்மையை அறிந்துகொள்ள சந்தேகம் தேவைப்படுகிறது. அரசும் அதிகாரமும் தங்களை ஏமாற்றுகிறது என மக்கள் சந்தேகம் கொள்வது தவறில்லை. சுயலாபங்களுக்காக வணிக நிறுவனங்கள் மோசடி செய்கின்றன என்று சாமானியன் சந்தேகப்படுவது தவறில்லை. நீதி மறுக்கப்படும்போதும், உரிமைகள் பறிக்கப்படும்போதும் அதிகாரத்தை சந்தேகம் கொள்ளவேண்டியது இயற் கையே. ஆனால், குடும்ப உறவுகளை சந்தேகப்படுவதும், வீண்சந்தேகத்தின்பேரில் தன்னை வதைத்துக்கொள்வ தும், கண்டிக்கவும் களையவும் வேண்டிய விஷயம்!

கவிஞர் தஞ்சை என்.ராமையாதாஸ் ஒரு பாடலில் ‘தன்னைத் தானே நம்பாதது சந்தேகம்; அதற்கு சந்தர்ப்பம் சூழ்நிலை தாய் தந்தையாகும்’ என்கிறார். மிகச் சரியான விளக்கம் அது.

இந்திய வரலாற்றில் சந்தேகத்தின்பேரில் கொல்லப் பட்டவர்கள் ஏராளம். அதில், சிலரே வஞ்சகர்கள். பெரும்பாலும் அப்பாவிகளே சந்தேகத்தின்பேரில் துரோகிகளாக சித்தரிக் கப்பட்டிருக்கிறார்கள். தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். காலம் கடந்து உண்மை வெளிப்பட்டபோதும் அவர்கள் மீது படிந்த கறை நீங்குவதில்லை.

ஷேக்ஸ்பியரின் ஒத்தல்லோவை சந்தேகத்தின் உருவமாகச் சொல்வார்கள். அவன் மனைவி டெஸ்டிமோனாவைச் சந்தேகம்கொண்டு கொன்றுவிடுகிறான். முடிவில், அவள் அப்பாவி எனத் தெரியவருகிறது. ஒத்தல்லோவிடம் இருந்து உலகம் பாடம் கற்றுக் கொள்ளவில்லை. மாறாக, ஊருக்கு ஒரு ஒத்தல்லோ உருவாகி வருகிறார்கள்.

இன்று, எத்தனையோ குடும்பங்கள் சந்தேகத்தால் பிரிந்து, நீதிமன்ற வாசல்களில் நிற்கின்றன. சமூக ஊடகங்கள் அதுவும் ஃபேஸ்புக் போன்றவற்றின் வளர்ச்சி சந்தேகத்தின் வேகத்தை அதிகமாக்கிவிட்டது. ஃபேஸ்புக்கில் தனது மனைவி அல்லது காதலி தனக்குத் தெரியாமல் யாருடனோ பேசிப் பழகிவருகிறாள் என்ற சந்தேகம் ஆண்கள் பலருக்கு இருக்கிறது. இதுபோலவே கணவன் அல்லது காதலன் யாருடனோ ரகசியமாகப் பழகுவதாக நினைக்கும் பெண்களும் இருக்கிறார்கள். இரண்டிலும் சந்தேகப்பட வேண்டிய காரியங்கள் நடக்கவும் செய்கின்றன. ஆனால் எது நிஜம் என்று அறியாமல், சந்தேகத்தின் விஷம் ஒருவருக்குள் ஆழமாக இறங்கி வன்கொலையில் போய் முடிகிறது என்பதே துயரம்.

ஸ்பை கேமரா, ஸ்பை ரெக்கார்டர் போன்றவை இன்று அதிகமாக விற்பனையாகின்றன. இவற்றை வாங்கிப் பயன்படுத்துகிறவர்கள் துப்பறியும் நிபுணர்கள் இல்லை; சந்தேகவாதிகளே. பரஸ்பர நம்பிக்கைகள் தகர்ந்துவருவதும்; வீட்டுக்குள்ளாக ஒருவரையொருவர் ஏமாற்றி வாழமுடியும் என்ற கள்ளத்தனம் உருவானதும், அறம் அழிந்துபோன சமூகச் செயல்களுமே சந்தேகத்துக்கான முக்கிய காரணங்கள்!

‘ஒரு சொட்டு சந்தேகம் போதும் ஒருவரின் வாழ்க்கை நரகமாக!’ என்கிறது துருக்கி கதை. பாக்தாத் நகரில் மாறாத அன்பு கொண்ட இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். இருவரும் ஒன்றாகவே கடை நடத்தினார்கள். சகோதரிகளை திருமணம் செய்துகொண்டிருந்தார்கள். ஒரே வீட்டில் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவர்களின் அன்பைக் கண்டு வியக்காதவர்களே கிடையாது. சந்தையில் அவர்கள் நடந்து போகும்போது ’அண்ணன், தம்பி என்றால் இப்படித்தான் வாழ வேண்டும்!’ என்று அடையாளம் காட்டுவார்கள். அவ்வளவு சிறப்பான மனிதர்களாக வாழ்ந்தார்கள்.

ஒருநாள் அண்ணன் கடையை மூடும்போது தங்கக் காதணி ஒன்றைப் பார்த்தான். அது தன் மனைவியின் காதணி. இது எப்படி கடைக்குள் வந்தது என்று யோசித்தான். தம்பியிடம் இதைப் பற்றி கேட்கலாம் என நினைத்தான். ஆனால், கேட்கவில்லை.

மாறாக தம்பி மீது சந்தேகம் கொள்ளத் தொடங்கினான். ஒவ்வொரு நாளும் தம்பி உச்சிவேளையில் யாருக்கும் தெரியாமல் வெளியே போவதும், சற்று நேரத்தில் அமைதியாக வந்து வேலையைத் தொடர்வதையும் கண்ட அண்ணனுக்கு சந்தேகம் அதிகமானது.

அது போலவே ஓர் இரவு தன் மனைவியிடம் தம்பி ஏதோ பேசிக் கொண்டிருப்பதும், அவள் ரகசியமாக எதையோ தருவதையும் கண்ட அண்ணனுக்கு சந்தேகம் உறுதியானது, அன்று முதல் அவன் தம்பியைக் கண்டாலே எரிந்துவிழத் தொடங்கினான். மனைவியைக் காரணம் இல்லாமல் அடித்தான். தம்பியோ அண்ணனின் கோபத்தை தாங்கிக் கொண்டான். அண்ணன் ஏன் இப்படி நடந்துகொள்கிறான் எனப் புரியாமல் தவித்தான் தம்பி.

அண்ணன் தானாக கற்பனை செய்ய ஆரம்பித்தான். தம்பி தன்னை ஏமாற்றி பணம் சேர்க்கிறான். தன் மனைவியோடு கள்ளத்தனமாகப் பழகுகிறான். தனது பிள்ளைகள் அவனுக்கு பிறந்தவையாக இருக்கக்கூடும். முடிவில் ஒருநாள் தன்னை கொன்றுவிட்டு சொத்தை முழுவதுமாக அபகரிக்க தம்பி திட்டம் போடுகிறான் என அண்ணன் நினைத்தான். இந்தக் கவலை அவனை வாட்டியது. உறக்கம் இல்லாமல் தவிக்க வைத்தது.

முடிவில் ஒருநாள் தான் வணிகத்தின் பொருட்டு வெளியூர் போய்வருவதாகக் கூறிவிட்டு உள்ளூரிலே ரகசியமாக தங்கிக் கொண்டான் அண்ணன். தான் இல்லாத நேரத்தில் தம்பி ரகசியமாக ஒரு வீட்டுக்குப் போய் பணம் தருவதையும், தன் மனைவி யாருக்கும் தெரியாமல் உணவு கொண்டுவந்து தருவதையும் கண்டு கொதித்துப் போனான். கடையை மூடிவிட்டு தம்பி திரும்பி வரும்போது, அவனை மறைந்திருந்து கொலை செய்துவிட்டு, தன் மனைவியைக் கொல்ல வீட்டுக்குப் போனான்.

மனைவி உறங்கிக் கொண்டிருந்தாள். அவளை வாளால் வெட்டி துண்டிக்கப்போகும்போது அவள் “ஏன் என்னைக் கொல்கிறீர்கள்? அந்தக் காரணத்தை மட்டும் சொல்லுங்கள்” எனக் கதறினாள். அண்ணன் நடந்த விஷயங்களைக் கூறினான். அதற்கு மனைவி “என் காதணியை உங்கள் சிறிய மகன்தான் எடுத்து உங்கள் சட்டைப் பையில் போட்டிருக்கிறான். அதைக் காணவில்லை என்று தேடிக் கொண்டிருந்தேன். உங்களுக்குத் தெரிந்தால் கோபம் கொள்வீர்களோ எனச் சொல்லவில்லை” என்றாள்.

“பொய் சொல்லாதே. என் தம்பி ரகசியமாக வெளியே போவதும். நீ அவனுடன் இரவில் பேசுவதும், அவனுக்கு சாப்பாடு தருவதும் சல்லாபம் இல்லையா?’ எனக் கத்தினான். அதற்கு அவள் சொன்னாள்: “உங்கள் தம்பி குடற்புண்ணால் அவதிப்படுகிறார். அதற்கு வைத்தியம் பார்த்து வந்தார். இந்த விஷயம் தெரிந்தால் நீங்கள் வருத்தப்படுவீர்கள். தம்பியை ஒய்வெடுக்கச் சொல்லிவிட்டு கடைவேலையை நீங்களே பார்ப்பீர்கள் என நினைத்து அதை மறைத்துவிட்டார். அவர் மனைவிக்கு பத்தியச் சாப்பாடு செய்யத் தெரியாது என்பதால் நான் தயாரித்துக் கொடுத்தேன். உங்கள் சந்தேகம் உங்கள் மீது மாறாத அன்பு வைத்த சகோதரனைக் கொன்றுவிட்டது. இப்போது உங்களுக்காகவே வாழ்ந்து வரும் என்னை கொல்லத் துடிக்கிறது. வாருங்கள்… என் தலையைத் துண்டியுங்கள்!” என அழுதாள்.

‘உண்மையை உணர்ந்த வணிகன் தன் சந்தேகம் எவ்வளவு முட்டாள்தனமானது என உணர்ந்து அதே வாளால் தன்னை வெட்டி சாய்த்துக்கொண்டான்’ என கதை முடிகிறது.

சந்தேகத்தின் விளைவுகளைப் பற்றி இப்படி ஆயிரமாயிரம் கதைகள் உலகெங்கும் இருக்கின்றன. ஆனால், இன்றும் படித்தவர் பாமரர் எனப் பேதமின்றி மனிதர்கள் சந்தேகத்துக்கு பலியாகி வருகிறார்கள் என்பது வருத்தத்துக்குரிய விஷயமாகவே உள்ளது!
இணைய வாசல்: துருக்கிப் பழங்கதைகளை வாசிக்க - >http://elfinspell.com/TurkishFables1.html

## பகுதி 46 - நேர்மையின் அர்த்தம்!

’சமூகம் சீரழிந்துக் கிடக்கிறது. அதைப் பற்றி யாருக்காவது குற்றவுணர்வு இருக்கிறதா? ஒருவேளை அப்படியிருந்தால் அந்தக் குற்றவுணர்வை அவர் எப்படி வெளிப்படுத்துகிறார் சொல்லுங்கள்’ என்று ஒரு கலந்துரையாடல் நிகழ்வின்போது ஒரு வாசகர் கேட்டார். அவர் அதை அவர் கேட்டவிதம் மிகுந்த ஆற்றாமையும் வருத்தமும் நிரம்பியிருந்தது.

கேட்டவருக்கு வயது 50-கும் மேல். 20 வயது இளைஞனிடம் இப்படியொரு கேள்வியே கிடையாது. இதை தேவையற்ற ஒன்றாகவே கருதுவான். ஒருவேளை யாராவது இப்படி கேள்விகேட்டால் கூட ’என் தவறுகளுக்கே நான் பொறுப்பேற்பது இல்லை. யாரோ செய்யும் தவறுகளுக்கு நான் ஏன் குற்றவுணர்ச்சி அடைய வேண்டும்?’ என்று திரும்பக் கேட்பான். அப்படித்தான் இன்றையச் சூழல் இருக்கிறது.

தனி நபர்களுக்கு மனசாட்சியிருப்பது போல (உண்மையில் அப்படியொன்று இருக்கிறதா என்றே சந்தேகமாகயிருக்கிறது) சமூகத்துக்கும் மனசாட்சி இருக்கத்தானே செய்யும். அந்த பொது மனசாட்சியின் குரல் ஏன் இப்போது வெளிப்படுவது இல்லை? அந்தக் குரல் நுகர்வு சந்தையின் ஓலங்களுக்குள் ஒடுங்கிப் போய்விட்டதா?

’குற்றவுணர்ச்சி என்பதற்கு பதிலாக பொறுப்புணர்ச்சி என்று எடுத்துக் கொள்ளலாமா’ என அந்த வாசகரிடம் கேட்டேன்.

பொறுப்புணர்ச்சியற்றவர்களுக்கு எப்படி குற்றவுணர்வு உருவாகும்? பொறுப்புணர்வு என்பது சட்டம் போட்டு மட்டும் உருவாக்கிவிடக்கூடியதா? ஏன், தன் பொறுப்பை பலரும் அலட்சியம்

செய்கிறார்கள்? குற்றவுணர்ச்சி தொடர்பாக இந்தப் பிரச்சினையை அணுகும்போது, அது தொடர்பற்ற ஒன்றாக மாறிவிடுகிறது. அதுவே பொறுப்புணர்வு பற்றியதாக விவாதிக்கப்படும்போது ஒருவரின் கடமையாக மாறுகிறது இல்லையா. இன்று நம் முன் உள்ள பெரும் பிரச்சினை தங்களின் பொறுப்புணர்ச்சியைப் பலரும் மதிப்பதில்லை என்பதே!

பொதுக்காரியம், பொதுநலம், பொதுவிஷயம் எல்லாமும் இன்று தேவையற்றச் செயல்களாகக் கருதப்படுகின்றன. பொது என்ற சொல்லே சிலருக்கு அசூசையாக இருக்கிறது. பொது என்ற சொல் எவ்வளவு சிறியதாக இருக்கிறது? ஆனால், அது எவ்வளவு பிரம்மாண்டமான தோற்றம் கொண்டது. பொதுவிஷயங்களில் நமக்கு ஒரு பங்கு இருக்கிறது. நாம் அதை மறந்துவிடக்கூடாது என்றுதான் கடந்த தலைமுறையினர் தங்கள் பிள்ளைகளைச் சொல்லிச் சொல்லி வளர்த்தார்கள்.

இன்று பொது விஷயங்கள் எதைப் பற்றியும் யோசிக்கவோ, செயல்படவோ கூடாதென்று குடும்பம் கட்டுப்படுத்துகிறது. பொது விஷயங்களைப் பற்றிக் கவலைப்படுகிறவன் முட்டாளாகக் கருதப்படுகிறான். பொது விஷயங்களை யாரோ பார்த்துக்கொள்வார்கள் என அனைவரும் நினைக்கிறார்கள். அந்த யாரோ என்பவர் யார்? ஏன் இந்த அலட்சியம்?

மாற்றங்கள் வேண்டும் என்று நினைப்பவர்கள், அதை யாரோ உருவாக்கித் தருவார்கள் என்று ஒதுங்கிக்கொள்கிறார்கள். ஒருவேளை யாரோ அதற்கு முயற்சித்தால்கூட உறுதுணை செய்வது இல்லை. ஒன்றுகூடிப் போராடாமல் எந்த மாற்றத்தையும் உருவாக்கிவிட முடியாது.

பிரபஞ்சன் சிறுகதை ஒன்றில் சுதந்திரப் போராட்டத் தியாகி ஒருவர் தாலுகா அலுவலகத்துக்குச் சென்று தனக்கு அரசு வழங்கி வரும் தியாகி பென்ஷன் பணம் இனி வேண்டாம் என்று எழுதிக் கொடுக்க முயற்சிப்பார். எதற்காக என தாலுகா அதிகாரி கேட்டபோது, 'பையன் வேலைக்கு போய் சம்பாதிக்கிறான்; ஆகவே எனக்கு தியாகி பென்ஷன் வேண்டாம்' என்பார்.
தாலுகா அதிகாரி 'அரசாங்கத்திடம் இருந்து ஒன்றை வாங்குவது கஷ்டம். அதைப் போய் வேண்டாம் என்கிறாயே, பணம்தானே வைத்துக் கொண்டு ஜாலியாக செலவு செய்...' என்கிறார். அதற்கு தியாகி 'அப்படி செய்ய என்னால் முடியாது. அது தவறானது. எனக்கு பொறுப்புணர்ச்சி இருக்கிறது. இந்தப் பென்ஷனை என்னால் ஏற்க முடியாது என்று வாதிடுகிறார்.

அதிகாரி அவரை பைத்தியம் எனத் திட்டியதோடு, நாலைந்துமுறை அலைய வைக்கிறார். முடிவில் தியாகி தனது மனசாட்சியின்படி பென்ஷன் பணம் வேண்டாம் என ஒப்படைத்துவிடுகிறார்.

இந்தக் கதையை ஒரு கல்லூரியில் கூடி வாசித்து விவாதித்தபோது, சுதந்திரப் போராட்ட தியாகின்னா அப்படித்தான் இருப்பார்கள் எனப் பலரும் கேலி செய்தார்கள். அதைக் கேட்டபோது நேர்மை என்ற சொல்லின் அர்த்தம் தெரியாத தலைமுறையாக இருக்கிறார்களே என வருத்தமாக இருந்தது.

பாலஸ்தீன நாட்டுப்புறக் கதை ஒன்று இதைப் பற்றிக் கூறுகிறது. காஸாவில் ஒரு துறவி இருந்தான். அவன் ஒரு வீதியில் நடந்து போய்க்கொண்டிருந்தபோது ஒரு வீட்டின் மாடியில்

இருந்து யாரோ குப்பையை அவன் தலையில் கொட்டிவிட்டார்கள். துறவி உடனே இது குறித்து நீதிசபையில் புகார் கொடுத்தான்.

குப்பையைக் கொட்டிய வீட்டுக்காரனை ஏன் இப்படி பொறுப்பற்று நடந்துகொண்டாய் என விசாரித்தார்கள். அவன் தான் செய்தது குற்றமில்லை. அந்தக் குப்பை பக்கத்துவீட்டுக்காரன் தன் மாடியில் கொட்டியது. அவனை விசாரியுங்கள் என்றான்.

பக்கத்துவீட்டுக்காரனை அழைத்து வந்தார்கள். அவன் வீதியில் உள்ள குப்பைத் தொட்டி நிரம்பி வழிகிறது. துப்பரவு செய்யவேயில்லை ஆகவே குப்பையைப் பக்கத்து வீட்டில் கொட்டினேன். நீங்கள் விசாரிக்க வேண்டியது துப்புரவு அதிகாரியை என்றான்.

துப்புரவு அதிகாரி வரவழைக்கபட்டான். அவன் இதில் என் தவறு ஒன்றுமே இல்லை. ஒரு வாரமாக மந்திரி வீட்டில் அவரது மகளது திருமண வேலை நடந்தது. ஆகவே, பணியாளர்கள் அனைவரும் அங்கே போய்விட்டார்கள். மேலும் அவர்களுக்கு மூன்று மாத சம்பள பாக்கி உள்ளதால் பாதி பேருக்கு மேல் வேலைக்கே வரவில்லை. ஆகவே, பொக்கிஷக் காப்பாளரும் மந்திரியுமே தவறு செய்தவர்கள். அவர்களை விசாரியுங்கள் என்றான்.

அவர்கள் இருவரையும் அழைத்து வந்து விசாரணை செய்தார்கள். மந்திரி சொன்னார் 'என் வீட்டு திருமணத்துக்கு மன்னர் வருவதாகச் சொல்லியிருந்தார். ஆகவே, அதிக பணியாளர்கள் தேவைப்பட்டார்கள். இதில் என் தவறு ஒன்றுமில்லை. இது போலவே பொக்கிஷ காப்பாளரும் கஜானாவில் இருந்து பணம் அனுப்பப்படவில்லை. ஆகவே தவறு மன்னருடையது என்றார். குற்றம் மன்னருடையது என்பதால் மன்னரை விசாரிக்க அழைத்தார்கள்.

அவர் சொன்னார், 'யார் தலையிலோ யாரோ குப்பைப் போட்டதற்கு நான் எப்படி பொறுப்பு ஏற்க முடியும்? புகார் சொன்னவனைப் பிடித்து பத்து சவுக்கடி கொடுங்கள். இனி, இதுபோல அற்ப விஷயங்களைப் புகார் செய்ய மாட்டான்'.

மன்னன் சொன்னதை அந்த நீதிசபை ஏற்றுக்கொண்டது. குப்பை போடும் நேரத்தில் குறுக்கே வந்தது துறவின் தவறு என்று தீர்ப்பு வழங்கப்பட்டு, உடனடியாக அவருக்கு பத்து சவுக்கடி தரப்பட்டது என அந்தக் கதை முடிகிறது.

வேடிக்கை கதை என்றாலும், யாரும் தன் தவறுக்கு வருந்துவதில்லை; பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள்; மேலும் சிறு தவறுகளுக்குப் பின்னால் அதிகாரத்தின் உச்சம் வரை தொடர்பிருக்கிறது என்ற உண்மை இதன் மூலம் புலப்படுகிறது. நம்மை சந்தோஷப்படுத்துவது மட்டும் கதைகளின் வேலையில்லை. திருத்துவதும்தானே.

இணைய வாசல்: பாலஸ்தீன நாட்டுப்புறக் கதைகளை வாசிக்க
https://publishing.cdlib.org/ucpressebooks/view?docId=ft4s2005r4&brand=ucpress

## பகுதி 47 - மவுனக் காட்சிகள்!

மருத்துவமனை ஒன்றின் பார்வையாளர்கள் பகுதியில் காத்திருந்தேன். அங்கிருந்த தொலைக்காட்சி மவுனமாக ஓடிக்கொண்டிருந்தது. அதன் முன்னே நாற்பது, ஐம்பது பேர் கலக்கமான முகத்துடன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சத்தமே இல்லாமல் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்ப்பது முற்றிலும் அபத்தமாக இருந்தது. அதுவும் நகைச்சுவைக் காட்சிகளைச் சத்தம் இல்லாமல் பார்ப்பது பேரபத்தம். ஆனால், ஒருவர்கூட அதைப் பொருட்படுத்தவே இல்லை, எதற்காக இப்படி மவுனமாக ஓடும் தொலைக்காட்சி தேவைப்படுகிறது? தன் வேதனையை மறைத்துக்கொள்ள ஏதாவது ஒரு காட்சி தேவையாக இருக்கிறதா அவர்களுக்கு?

வீட்டில் இப்படி ஐந்து நிமிஷங்கள் தொலைக்காட்சியைச் சத்தமில்லாமல் வைத்து இவர்களால் பார்க்க முடியுமா என்ன?!

மனதில் 'நாற்பது இன்ச் மவுனம்' என்றொரு சொல் எழுந்து ததும்பிக்கொண்டிருந்தது. மருத்துவமனையில் காத்திருப்பது என்பது மிகவும் நெருக்கடியானது. யார் நோயாளி? யார் பார்வையாளர்கள் எனத் தெரியாது. எல்லோரது முகத்திலும் கவலை படிந்திருக்கிறது. உடலின் குரலைக் கேட்க மறந்தவர்களுக்கு உடல் தன் இருப்பை வலிமையாக காட்டிக்கொள்கிறது.

பரபரப்பான நகர வாழ்க்கையில் இருசக்கர வாகனங்கள்கூட முறையாக பராமரிக்கப்படுகின்றன. கார்களை ஒழுங்காக சர்வீஸ் செய்து வைத்துக்கொள்கிறார்கள். ஆனால், உடலை ஒருபோதும் கட்டுக்குள் வைத்துக்கொள்வது இல்லை. உடலும் மனமும் புத்துணர்வு கொள்ளவேண்டும் என்பதை எவரும் யோசிப்பதே இல்லை. நோயுற்ற பின்பே யோகா, தியானம், உணவுக் கட்டுப்பாடு, இயற்கை உணவு எனத் தேடி ஓடுகிறார்கள்.

அவசரமும் பதற்றமும் இல்லாத ஒரு மனிதனைக்கூட மாநகரில் காணவே முடியவில்லை. நகரம் சத்தங்களால் நிரம்பி வழிகிறது. மனிதர்கள் இயற்கையைத் தேடி ஓடுவதற்கு முக்கியமான காரணம், அங்கே செயற்கையாக உருவாக்கப்பட்ட எந்த சத்தமும் இல்லை என்பதுதான்!

சத்தமே இல்லாமல் இருக்க முடியாத நிலைக்கு நகரவாசிகள் பழக்கப்படுத்தப்பட்டு விட்டார்கள். ஏன் சத்தமோ, காட்சியோ ஏதோ ஒன்று நமக்கு எப்போதும் தேவைப்படுகிறது? முக்கியமான காரணம், மவுனமாகக் கண்களை மூடியிருந்தால் நம்மைப் பற்றி யோசிக்கத் தொடங்கிவிடுகிறோம். தன்னைப் பற்றி நினைத்துக்கொண்டால் பலருக்கும் தாழ்வு மனப்பான்மை அதிகரித்துவிடுகிறது. அதனால்தான் ஏதாவது ஒரு காட்சி, அல்லது இசையில் தன்னை மறைத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள்.

உண்மையில் தன்னை அறிவதும், தன் நிறைகுறைகளை ஆராய்வதும் ஒவ்வொருவரும் முனைந்து செய்யவேண்டிய செயல். தனிமை கொள்வது அவசியமானதுதான். ஆனால் தனிமையை சுகிக்கவும் தனித்திருக்கவும் நாம் பயம் கொள்கிறோம். அது துறவிகளுக்கானது என நினைக்கிறோம். அது வெறும் கற்பிதம்!

மருத்துவமனையில் கண்களை விரித்து வைத்தால் கதைகள் எழுதுவதற்கான நூறு விஷயங்கள் கண்முன்னே நடக்கின்றன. கடைசி வரிசையில் ஒரு பெண் தனியே அமர்ந்து கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறாள். ஆறுதலாக யாரும் ஒரு வார்த்தை சொல்லவில்லை.

அவளது விசும்பலை நேர்கொள்ளாமல் தலை திருப்பிக்கொள்கிறார்கள். அவளுக்கு என்ன துயரமோ? கண்ணீரால் வேதனையைக் கரைத்துக்கொண்டிருக்கிறாள்.

உதடு கிழிந்த மூன்று வயது சிறுமி ஒருத்தி, கையில் ரப்பர் பந்து வைத்தபடியே உட்கார்ந்திருக்கிறாள். ஒரு முதியவரின் கைகள் தானே நடுங்கிக் கொண்டிருக்கின்றன. முக்காடு போட்ட ஒரு பெண் கையில் பைபிள் வைத்து முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார். யாரோ சத்தமாக போனில் ஹெல்த் இன்சூரன்ஸ் கம்பெனியோடு சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். 10 நாட்கள் மருத்துவமனை காத்திருப்புப் பகுதியில் ஒருவன் இருந்தால்போதும், மனதின் ரவுத்திரம், வன்மம், கோபம் எல்லாம் தானே ஒடுங்கிப் போய்விடும்.

முடிவே இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் பிரம்மாண்டமான நதி என்பது நமது உடலின் ரத்த ஓட்டம்தான். அந்த நதியின் குரலை நாம் பொருட்படுத்துவதே இல்லை. ரத்த வேகம்தான் எல்லா செயல்களுக்கும் காரணம் என்கிறார்கள். ஆனால், குருதியைக் கண்ணால் பார்க்கக்கூட பலருக்கும் பயமாக இருக்கிறது.

எத்தனை வயதானாலும், எவ்வளவு வசதி, எவ்வளவு அதிகாரம் இருந்தாலும் வலியை எதிர்கொள்ளத்தானே வேண்டும். வலி யாருக்கும் கருணை காட்டுவது இல்லை. வலியின் முன்பு அனைவரும் சமமே. உண்மையில் வலி கற்றுத்தருகிறது. வலியின்போது வரும் கண்ணீர் நமக்கு சில பாடங்களைப் புகட்டுகிறது. மருத்துவமனையைவிட்டு வெளியே வந்தவுடன் அந்தப் பாடங்களை நாம் மறந்துவிடுகிறோம்.

அங்கோலா நாட்டின் நாட்டுப்புறக்கதை ஒன்று மனிதர்களுக்கு ஏன் நோய் உருவானது என்பதைப் பற்றிக் கூறுகிறது.

உலகில் மனிதர்கள் படைக்கப்பட்டபோது அவர்களுக்கு நோயோ, வலியோ எதுவும் கிடையாது. இயற்கையோடு இணைந்து உறுதியான உடலோடுதான் வாழ்ந்தார்கள். மரணம் இல்லாத வாழ்க்கை என்பதால் மனிதர்கள் எதற்கும் அச்சம் கொள்ளவில்லை. பூமியில் கொண்டாட்டத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

ஒருமுறை கடவுள் பூமிக்கு வந்தபோது மனிதர்களில் ஒருவன், 'நீங்கள் எங்களைவிட எந்த விதத்திலும் உயர்ந்தவர் இல்லை; உங்களை ஏன் வணங்க வேண்டும்?' என கேலி பேசினான். இதனால் கோபம் அடைந்த கடவுள், மனிதர்கள் தன்னை உணர்வதற்காக 'நோயும், சாவும் உண்டாகட்டும்' என சாபம் கொடுத்தார். அதன் பிறகே மனிதர்கள் நோயுறத் தொடங்கினார்கள். இறந்து போனார்கள். ஆகவேதான் நோயுற்ற மனிதன் தன்னை தண்டித்த கடவுளிடம் மன்னித்துக் கொள்ளும்படி மன்றாடுகிறான் என்கிறது கதை.

மதம் நோயைக் காட்டி மனிதனை பயம்கொள்ள வைக்கிறது. விஞ்ஞானம் 'நான் இருக்கிறேன், அச்சம் வேண்டாம்' என தைரியம் தருகிறது. இரண்டுக்கும் இடையில் மனிதர்கள் ஊசலாடிக்கொண்டே இருக்கிறார்கள்.

வாழ்க்கை சிலருக்கு நோயின் வழியாகவே பாடம் கற்றுத்தருகிறது. நோய் தீர்ப்பது குறித்தும், நோய் வந்தால் செய்யவேண்டிய சடங்குகள் குறித்தும், நோயில் இருந்து தற்காத்துக்கொள்ள

கடவுளுக்கு செய்யப்படும் பூஜைகள் குறித்தும், உலகெங்கும் விதவிதமான கதைகள் உலவுகின்றன. வாதைக்கு என்று தனியாக ஒரு கடவுளே இந்தியாவில் இருக்கிறார். நோய் வரப்போவதாக நினைத்து, பயப்படும் குணத்தை கதைகள் கேலி பேசுகின்றன. நலமடைந்த மனிதன் எவ்வளவு நன்றியுள்ளவனாக நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் கதைகள் சுட்டிக்காட்டுகின்றன.

'வாயைக் கட்டிக்கொள்' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது உணவு விஷயத்துக்கு மட்டுமல்ல; பேச்சு விஷயத்திலும்தான். இரண்டையும் இன்று கைவிட்டுவிட்டார்கள் என்பதே நோயுறுவதற்கான முதல் காரணம்.

இணைய வாசல்: அங்கோலா நாட்டுப்புறக் கதைகளை வாசிக்க
https://archive.org/details/folktalesangola00chatgoog

## பகுதி 48 - வாழ்தலின் இனிமை!

டேனிஷ் பழங்கதை ஒன்று வாழ்வதற்கான உரிமை அனைவருக்கும் சமமானது என்பதைப் பற்றிப் பேசுகிறது. முன்னொரு காலத்தில் ஒரு தச்சன் இருந்தான். அவன் காட்டில் தான் வெட்டுவதற்கு விரும்புகிற மரத்திடம் சென்று 'உன்னை வெட்டுவதற்கு என்னை அனுமதிப்பாயா?' எனக் கேட்கக்கூடியவன். மரம் சம்மதித்தால் மட்டுமே அதை வெட்டுவான். தான் அந்த மரத்தை என்ன பொருளாக செய்ய விரும்புகிறான் என்பதையும் அந்த மரத்திடம் தெரிவிப்பான். மரம் சம்மதம் தந்த பிறகே அந்த மரத்தை வெட்டுவான். அப்படி ஒரு முறை ஒரு கருங்காலி மரத்திடம் சென்று "நீ மூப்படைந்துவிட்டாய்; உன்னை வெட்டி மேஜை செய்யலாம் என்றிருக்கிறேன்" என்றான். அதைக் கேட்ட மரம் சொன்னது:

"நானே இலைகளை உதிர்த்துவிட்டு நிற்கிறேன். மழைக் காலம்வேறு தொடங்கப் போகிறது. மழையின் குளுமையை உள்வாங்கி, புத்துயிர்ப்புக் கொள்ள ஆசைப்படுகிறேன். மழைக் காலம் முடிந்தவுடன், வா!" என்றது.

தச்சன் மறுவார்த்தைப் பேசவில்லை. மழைக் காலம் தொடங்கி முடியும் வரை, காத்திருந்தான். மழைக்குப் பிறகு அந்தக் காட்டின் தோற்றமே உருமாறியிருந்தது. தான் வெட்டுவதற்கு விரும்பிய மரத்திடம் போய், "உன்னை நான் வெட்டிக்கொள்ளலாமா?' எனக் கேட்டான்.

"அவசரப்படுகிறாயே, குளிர்காலப் பனி என்னைத் தழுவிக்கொள்வதை அனுபவிக்க வேண்டாமா? நான் வாழ ஆசைப்படுகிறேன். குளிர்காலம் முடியும் வரை காத்திரு…" என்றது மரம்.

தச்சன் இன்னும் மூன்று மாதங்கள்தானே எனக் காத்திருந்தான். அந்த ஆண்டு குளிர் அதிகமாகவே இருந்தது. காட்டில் பனிமூட்டம் அடர்ந்திருந்தது. குளிர்காலம் முடிந்து கோடரியோடு காட்டுக்குப் போனான்.

மரம் சொன்னது: அதிக குளிரில் வாடிப்போயிருக்கிறேன். கோடை சூரியனில் என்னை சூடுபடுத்திக்கொள்கிறேன். கோடையைக் காணாத வாழ்க்கை என்ன வாழ்க்கை!'' என்றான். தச்சனுக்கு சலிப்பாக இருந்தது. ஆனாலும், தன் அறத்தை மீறி நடந்துகொள்ள முடியாதே என அவன் வெறுங்கையோடு வீடு திரும்பினான்.

கோடையின் முரட்டு சூரியன் காட்டின் மீது தன் எரிகொம்புகளை ஊன்றி கடந்துபோனது. வெயிலின் உக்கிரம் காடெங்கும் பரவியது. மரம் வெயிலில் உலர்ந்து போனது. தச்சன் மீண்டும் காட்டுக்குத் திரும்பிப் போனான்.

இப்போது மரம் சொன்னது:

''வெட்டுண்டுப் போகப் போகிறோம் என உணர்ந்த பிறகு மழை, பனி, வெய்யிலை அனுபவிப்பது எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது! வாழ்வதுதானே இனிமை! என்னை வெட்டி ஒரு மேஜையாக்கிவிட்டால், இந்த சுகங்களை நான் இழந்துவிடுவேனே. நான் வாழ ஆசைப்படுகிறேன். என்னை வாழ அனுமதிப்பதும் வெட்டிக் கொண்டுபோவதும் உன் விருப்பம்!''

அதைக் கேட்ட தச்சன் சொன்னான்:

''வாழ்வதற்கான உரிமை அனைவருக்கும் சமமானதே. உன்னை வெட்டிக் கொண்டுபோக எனக்கு மனமில்லை. உண்மையில் நீ எனக்கொரு பாடம் புகட்டியிருக்கிறாய். உனக்காகக் காத்திருந்தபொழுதுகளில் நானும் மழைக் காலத்தில் மழையை, குளிர்காலத்தில் பனியை, கோடையில் வெய்யிலை, வசந்த காலத்தை முழுமையாக அனுபவித்தேன். வாழ்வின் இனிமையை இப்போதுதான் நான் முழுமையாக அறிந்துகொண்டேன். 'நாங்கள் எதற்கும் பயப்படாதவர்கள்' என்பதைப் போல மரங்கள் வான்நோக்கி நிமிர்ந்து நிற்பதன் அர்த்தம் இன்றுதான் நான் புரிந்துகொண்டேன். இனி, இந்தக் காட்டில் கிடைப்பதை உண்டு, நானும் உன்னைப் போலவே வாழப் போகிறேன்'' என அவன் கோடரியை வீசி எறிந்துவிட்டு, காட்டிலேயே வாழத் தொடங்கினான் என முடிகிறது அந்தக் கதை.
மரம் என்றில்லை. சிறுபுல் கூட தன்னளவில் முழுமையாகவே வாழ்கிறது. மழையை, வெய்யிலை, பனியை நேரடியாக எதிர்கொள்கிறது. வாழ்தலை முழுமையாக அனுபவிக்கிறது. மனிதர்கள்தான் வாழ்க்கையைத் துண்டு துண்டுகளாக்கி எதையும் அனுபவிக் காமல் சலித்துக்கொண்டே இருக்கிறார்கள். மழை, வெயில், பனி, காற்று எதுவும் பிடிப்பதில்லை அவர்களுக்கு. உண்ணும் உணவைக் கூட சலிப்புடன் சாப்பிடுகிறவர்கள் எத்தனையோ பேர். 'வாழ்க்கை இன்பம்' என்பது பணம் மட்டுமில்லை; விலையில்லாத உலகம் ஒன்று கண்முன்னே விரிந்து கிடக்கிறது. அதன் அருமையை நாம் உணர்வதே இல்லை.

இன்றைய உலகம் சந்திக்கும் பிரதான பிரச்சினை வாழ்வுரிமை மறுக்கப்படுவதே. தேசம் ஓர் இனத்தின் வாழ்வுரிமையை மறுக்கிறது. அதிகாரம் வாழ்வுரிமையைப் பறிக்கிறது. மதமும், சாதியும் வாழ்வுரிமையோடு விளையாடுகின்றன. வாழ்வுரிமையைப் பறிகொடுத்த மனிதர்கள், நீதி கேட்டு குரல் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். உலகின் காதுகளில் அந்தக் குரல் எட்டவேயில்லை.

நிலம், நீர், உணவு... என தனது ஆதாரங்களை மனிதர்கள் இழந்து வருகிறார்கள். யாவும் சந்தைப் பொருளாகிவிட்டன. தண்ணீர் ஒவ்வொரு மனிதனின் வாழ்வுரிமையாகும். ஆனால்,

இன்றும் முடிவில்லாமல் நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினைகள் மாநிலங்களுக்கு இடையே நீண்டுவருகின்றன. அதற்குக் காரணம் 'அவை தேசிய அரசியலுக்குத் தேவையாக இருக்கிறது' என்பதே.

பாதுகாப்பான குடிநீர் கிடைக்காமல் அவதிப்படுகிறவர்களில் அதிகமானோர் அடித்தட்டு மக்களும் ஒடுக்கப்பட்ட மக்களுமே ஆவர். இந்தியாவைப் பொறுத்தவரை, தண்ணீர் பிரச்சினை சாதிப் பிரச்சினையுடன் தொடர்புடையது.

தண்ணீர் பிரச்சினையால் அதிகம் பாதிக்கப்படுகிறவர்கள் பெண்களே. தண்ணீரைக் கண்டடைவது, கொண்டு வந்து சேர்ப்பது, பெண்களின் வேலையாக மட்டுமே கருதப்படுகிறது.

'தி சோர்ஸ்' என்றொரு பிரெஞ்சு திரைப்படத்தை சமீபத்தில் பார்த்தேன். அதில், ஆப்பிரிக்காவில் ஒரு கர்ப்பிணிப் பெண். அவர் நெடுந்தூரம் சென்று தண்ணீர் எடுத்துக் கொண்டுவரும்போது அடிபட்டுவிடுகிறாள். இதனால், உள்ளூர் பெண்கள் கவலையடைகிறார்கள். ஆண்கள் எவரும் தண்ணீர் கொண்டுவருவதற்கு ஒத்துழைப்பு தருவதில்லை என்று உணர்ந்த பெண்கள், 'இனி ஆண்களுடன் படுக்கையைப் பகிர்ந்துகொள்ள மாட்டோம்' என்றொரு போராட்டத்தைத் தொடங்குகிறார்கள். இது ஆண்களின் தன்மானப் பிரச்சினையாக உருமாறுகிறது. முடிவில் பெண்கள் எப்படி வெற்றி பெறுகிறார்கள் என்பதை படம் அற்புதமாக சித்தரிக்கிறது.

இந்திய அரசு விரைவில் நாடு முழுவதும் விவசாயம், குடிநீர் உள்ளிட்ட அத்தனை தண்ணீர் விநியோகத்தையும் தனியாரிடம் வழங்கலாம் என திட்டமிட்டு வருகிறது. இது மோசமான செயல் திட்டமாகும்.

தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க புத்தனே முயன்றிருக்கிறான். 'சாக்கியர்களுக்கும் கோலியர்களுக்கும் இடையில் நதிநீர் பங்கீடு குறித்து எழுந்த பிரச்சினையைப் புத்தன் தீர்த்து வைத்தான்' என்கிறது வரலாறு. ஆனால், இன்று நீதிமன்றம் தலையிட்டும்கூட காவிரி நதிநீர் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை.

உணவு, உடை, நீர், கல்வி, வேலை, மொழி என அத்தனை உரிமைகளையும் பறிகொடுத்துவிட்டு வாழ்ந்து என்ன செய்யப் போகிறோம்? சவம் மட்டும்தான் எதையும் ஏற்றுக்கொள்ளும். மவுனமாகக் கிடக்கும்.

வாழ்வுரிமை மறுக்கப்படுவதற்கு எதிராக உலகம் முழுவதும் சமூகப் போராளிகள் தொடர்ந்து குரல் கொடுத்தபடியே இருக்கிறார்கள். தொடர் போராட்டங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. 'நமக்கென்ன ஆகப் போகிறது?' என ஒதுங்கிப்போய்விடாமல் பறிக்கப்படும் உரிமைகள் குறித்து எதிர்ப்பை வெளிப்படுத்துவதே வாழ்தலின் அர்த்தம்!

இணைய வாசல்: டேனிஷ் நாட்டுப்புறக் கதைகளை வாசிக்க
http://fairytalez.com/region/danish/

## பகுதி 49 - எதிர்பாராத சந்தோஷம்!

சந்தோஷத்தை ஏற்படுத்தித் தருவது எளிதானது இல்லை. சிலரே, தன்னைச் சுற்றிலும் வெளிச்சத்தைப் போல சந்தோஷத்தைப் பரவவிடுகிறார்கள். ஒரு சிலரோ, அடுத்தவர் சந்தோஷப்படுகிறார்களே என நினைத்து நினைத்து, பொறாமையும் வயிற்றெரிச்சலும் அடைகிறார்கள்.

அன்றாடம் இரவானதும் விளக்குகளை எரியவிடுகிறோம். காரணம், இருட்டோடு வாழ்வது நமக்குப் பிடிப்பது இல்லை. ஆனால், அன்றாடம் வீட்டில் சந்தோஷத்தை ஒளிரவிடுகிறோமா என்றால், இல்லை என்றே பதில் கிடைக்கிறது.

ஒருவரை சந்தோஷப்படுத்த என்ன செய்ய வேண்டும்? பணம் தருவது, உணவு தருவது, உடை தருவது, பரிசுப் பொருட்களை வாங்கித் தருவது… இவைதான் சந்தோஷத்தின் அடையாளமாக உள்ளன. ஆனால், இவற்றைவிடவும் மேலான சந்தோஷங்கள் உலகில் நிறையவே இருக்கின்றன. அந்த சந்தோஷங்களை உருவாக்கிக்கொள்ள பணமோ, பரிசோ தேவையில்லை. சொற்களே போதுமானது!

உலகில் அதிகமானோர் சந்தோஷப்படுவது பாராட்டு சொற்களால்தான். அதுவும் மனம் நிறைய யாராவது பாராட்டும்போது ஒருவர் அடையும் சந்தோஷத்துக்கு நிகரே இல்லை. ஆனால், ஆயிரம் முறை கோபம் கொள்ளும் ஒருவர் பத்து முறைப் பாராட்டுவதற்கு யோசிப்பவராக இருக்கிறார்.

பாராட்டுவது, உற்சாகப்படுத்துவது, உத்வேகம் அளிப்பது, நம்பிக்கையை உருவாக்குவது, ஆறுதல் படுத்துவது… என சொற்களைக் கொண்டு, பலவிதமாக நாம் சந்தோஷங்களை உருவாக்கவும் பகிர்ந்து தரவும் முடியும்.

சந்தோஷம் நம் மனதில் இருந்தால் நிச்சயம் அதன் வெளிச்சம் வெளியே பரவவே செய்யும். நமக்குள் வெறுப்பும், கசப்பும், குரோதமும், கருமைப் புகை எனப் படிந்திருந்தால் எப்படி சந்தோஷத்தை உருவாக்க முடியும்?

குழந்தைப் பருவத்தை நினைத்து நினைத்து பலரும் மகிழ்வதற்கு முக்கிய காரணம், நிறைய சந்தோஷங்களை எதிர்கொண்டதும் அனுபவித்ததுமே ஆகும்.

குழந்தைகள் சந்தோஷத்துக்காக ஏங்குகிறார்கள். சந்தோஷத்தைப் பற்றி கனவு காணுகிறார்கள். சந்தோஷம் கிடைக்காதபோது வேதனை அடைகிறார்கள்.

குழந்தைகளை சந்தோஷப்படுத்துவது எளிதானது. ஒரு காகிதக் கப்பல், ஒரு காகிதப் பறவை, ஒரு சாக்லேட் போதுமானது. ஆனால், வளர்ந்த மனிதர்கள் சந்தோஷத்தை தான் விரும்பிய வடிவத்தில் எதிர்பார்க்கிறார்கள். சந்தோஷம் அவர்களிடத்தில் பொருள்வடிவம் கொண்டுவிடுகிறது. வெறும் வார்த்தைகளால் பரிமாறப்படும் சந்தோஷம் வளர்ந்த மனிதர்களுக்கு போதுமானதாக இல்லை.

எதிர்பாராத சந்தோஷம் கிடைக்கும்போது நாம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறோம்! இதுபோலவே எதிர்பாராத சந்தோஷத்தை நாம் யாருக்காவது உருவாக்கி தருகிறோமா என்ன?

சீனாவின் பழங்கதை ஒன்று இதைப் பற்றிப் பேசுகிறது. அந்தக் காலங்களில் உறைவிடப் பள்ளி ஆசிரியர்கள் வருஷத்துக்கு ஒருமுறை மட்டுமே வீடு செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அதுவும் குறிப்பாக புத்தாண்டு தொடங்கும்போது 10 நாட்கள் அவர்களுக்கு விடுமுறை அளிக்கப்படும். அப்போது சிறப்பு சம்பளமும் பெறுவார்கள்.

வாங் என்ற ஆசிரியர் புத்தாண்டு விடுமுறைக்காக ஊருக்குப் புறப்பட்டார். தனக்காக மனைவி காத்திருப்பாளே என நினைத்து வேகவேகமாக தன் கிராமத்தை நோக்கிப் பயணம் மேற்கொண்டார். அவரது நண்பரான ஷாங் உடன் பயணம் செய்தார். மூன்று நாட்கள் பயணம் செய்தால்தான் வாங் தன்னுடைய கிராமத்தை அடைய முடியும்.

பயண வழியில் ஷாங் தன் கையில் இருந்த பணத்தில் குடித்தார். சூதாடினார். கடனாளியாகியாகவே வீட்டுக்குத் திரும்பி போனால் மனைவியும் பிள்ளைகளும் திட்டுவார்களே என நினைத்து பள்ளிக்கே திரும்பி போய்விட்டார்.

ஆனால், வாங் மனைவிக்கான புத்தாடை மற்றும் இனிப்புகளுடன் வீடு நோக்கிப் பயணித்தார். வாங் தனது கிராமத்துக்குப் போகிற வழியில்தான் ஷாங்கின் ஊர் இருந்தது. அதைக் கடக்கும்போது ஷாங்கின் மனைவியும் பிள்ளைகளும் அவருக்காக காத்திருப்பதைக் கண்டார். ஷாங்கின் மனைவி வாங்கிடம் தன் கணவரைப் பற்றி விசாரித்தாள். "புத்தாண்டு கொண்டாட எங்களிடம் பணமில்லை. அவர் வந்தால்தான் பிள்ளைகளின் பசி தீரும். அவர் எப்போது வருவார்?" எனக் கேட்டாள். அதைக் கேட்ட வாங்கிற்கு என்ன பதில் சொல்வது எனப் புரியவில்லை.

தன் கையில் இருந்த புத்தாடை, இனிப்பு மற்றும் தனது சம்பளப் பணம் அத்தனையையும் அவர்களிடம் கொடுத்து "ஷாங்கிற்கு விடுமுறை கிடைக்கவில்லை என்பதால் இவற்றைக் கொடுத்து அனுப்பினார். அவர் வசந்த காலத்தில் ஊருக்கு வருவதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறார்" என்றார்.

புத்தாடை, இனிப்பு, பணம் இவற்றை கண்ட ஷாங்கின் குடும்பம் சந்தோஷத்தில் மூழ்கியது. வீட்டில் இருந்த ஒவ்வொருவரும் வாங்கிற்கு நன்றி சொன்னார்கள்.

வெறும்கையோடு வாங் வீடு திரும்பினார். நடந்த விஷயத்தை அவர் மனைவியிடம் சொன்னதும் அவள் கோபித்துக் கொண்டாள். "வெறும்கையை வைத்துக் கொண்டு எப்படி புத்தாண்டு கொண்டாடுவது? யாரோ ஒருவருக்கு பணத்தைத் தூக்கி கொடுத்தது உங்கள் தவறு!" என்று சண்டையிட்டாள்.

வாங் அவளை சமாதானம் செய்ய முயற்சித்துத் தோற்றுப் போனார்.

விடிந்தால் புத்தாண்டு. வாங்கின் வீடு இருண்டு கிடந்தது.

இரவில் மனைவி ஓர் ஆலோசனை சொன்னாள்: "இந்த ஊரில் உங்களிடம் படித்த மாணவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களிடம் போய் கடன் கேளுங்கள். கடனாக பணம் வாங்கி வந்தால் மட்டுமே நாளை நம் வீட்டில் உணவு. இல்லாவிட்டால் புத்தாண்டில் நாம் பட்டினி கிடக்க வேண்டியதுதான்!"

"மாணவர்களிடம் கடன் கேட்பது தவறானது. அதுவும் புத்தாண்டு அன்று ஒருவன் கடன் கேட்கக் கூடாது" என வாங் மறுத்துவிட்டார். வாங்கின் மனைவி அவரை மோசமாகத் திட்டினாள்.

புத்தாண்டு பிறந்தது. வாங் வீட்டில் எந்த விசேஷமும் இல்லை. கதவைக்கூட அவர்கள் திறக்கவில்லை.

திடீரென யாரோ கதவை தட்டும் சத்தம் கேட்டு, வாங்கின் மனைவி கதவைத் திறந்தாள்.

வாசலில் பத்து மாணவர்கள், ஆளுக்கு ஒரு தட்டில் பரிசு, புத்தாடை, உணவு, இனிப்புகளுடன் நின்றிருந்தார்கள். தங்கள் ஆசிரியருக்கு புத்தாண்டுப் பரிசாக இவற்றை அளிக்க விரும்புவதாகச் சொன்னார்கள்.

வாங்கின் மனைவியால் நம்பவேமுடியவில்லை. உள்ளே அழைத்தாள். வாங் தனது மாணவர்களின் அன்பை கண்டு சந்தோஷம் அடைந்தார்.

மீண்டும் வாசல் கதவு தட்டப்பட்டது.

வாசலில் ஷாங்கின் மனைவியும் பிள்ளைகளும் நின்றிருந்தார்கள். அவர்கள் கையிலும் பரிசுப் பொருட்கள் இருந்தன.

ஷாங்கின் மனைவி சொன்னாள்: "நேற்றிரவு எனது கணவர் வீடு திரும்பிவிட்டார். அவர் குடித்தும் சூதாடியும் சம்பளப் பணத்தை இழந்த கதையைச் சொன்னார். உங்கள் பணத்தை எங்கள் சந்தோஷத்துக்காக நீங்கள் தந்தது உங்களின் பெருந்தன்மை. இந்த மனசு யாருக்குமே வராது. பெரிய மனசோடு நீங்கள் கொடுத்தப் பணத்தை செலவு செய்ய மனமில்லை. ஆகவே, திரும்பி தந்துவிட்டுப் போக வந்திருக்கிறோம்!"

"ஏழு குழந்தைகள், வயதான தந்தை- தாய்… என உங்கள் குடும்பம் பெரிசு. நீங்கள் புத்தாண்டு கொண்டாடுவதுதான் பொருத்தமானது. இங்கே நான் என் மனைவி இருவர்தானே. ஆகவேதான் எனது சம்பளப் பணத்தை உங்களுக்காகக் கொடுத்தேன். உங்கள் சகோதரன் கொடுத்த பணமாக நினைத்து புத்தாண்டு கொண்டாடுங்கள்!" என்றார்.

"வாங் உங்களின் அன்பு மகத்தானது. 'ஆசிரியரே அதிகமானவர்களை சந்தோஷப்படுத்துகிறவர்' என்பதற்கு அடையாளமாக இருக்கிறீர்கள், நன்றி நன்றி!" என அந்தக் குடும்பமே நன்றி சொல்லிப் போனது;

இந்த விஷயம் ஊருக்குள் பரவியது. உடனே ஊரில் இருந்த அத்தனை பேரும் தனது மனைவி பிள்ளைகளுடன் புத்தாண்டில் வாங்கிடம் ஆசி பெற வேண்டும் என விரும்பி பரிசுப்

பொருட்கள், இனிப்புகளுடன் திரண்டு வந்தார்கள். வாங்கின் வீடு நிறைய பரிசுப் பொருட்களும் இனிப்புகளும் நிரம்பின என முடிகிறது அந்தக் கதை.

எளிய மனிதர்கள் தங்களால் முடிந்த அளவு சந்தோஷத்தை உருவாக்கவே முனைகிறார்கள். பணம் படைத்தவர்களோ, சந்தோஷத்தை இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்துக்கொள்கிறார்கள். சந்தோஷப்படுத்துவதில்தான் வாழ்க்கையின் இன்பம் இருக்கிறது என்பதை அறியாமல்.

இணைய வாசல்: சீன மரபுக் கதையை வாசிக்க
https://archive.org/details/chinesefablesfol00davi

## பகுதி 50 - பாடம் மட்டுமே போதுமா!

ஒரு பள்ளி ஆசிரியையிடம் பேசிக் கொண் டிருந்தேன். மனதில் இருந்த ஆதங்கங்களைக் கொட்டத் தொடங்கினார்.

“இப்போதெல்லாம் பசங்க படிக்கிறதுல, நல்ல மார்க் வாங்குறதுல முன்பைவிட ரொம்ப முன்னேறியிருக்காங்க. ஆனா, அவங்க பழக்கவழக்கம், எண்ணங்கள்தான் ரொம்ப மோசமாகிட்டு வருது. குறிப்பா செல்போன், இன்டர்நெட், சோஷியல் நெட்வொர்க் மூலமா பசங்க எதையெல்லாம் கத்துக்கிடக் கூடாதோ, அத்தனையும் ஈஸியா கத்துகிடுறாங்க.

அவங்க மனசைக் கெடுக்கிறதுல பெரிய பங்கு செல்போனுக்கு இருக்கு. ஒரு டீச்சரா இதை தடுக்க முடியலையேன்னு வருத்தப்படுறேன். வகுப்பறையில் நான் செல்போனை தடுக்க முடியும். ஆனா, பள்ளியைவிட்டு வெளியே போன தும் அவன் கையில் போன் வந்துருதே. என்ன செய்யறது?

பசங்க செல்போனை எப்படி பயன்படுத்துறாங்கன்னு, வீட்டுல யாரும் கவலைப்படுவதே இல்லை. ஆபாசப் படம். ஆபாசப் பாட்டு. வீடியோகேம், சாட்டிங். நினைக்கவே முடியாத பயங்கரம் எல்லாம் ஈஸியா நடந்துட்டு இருக்கு. இது பையனுங்கப் பிரச்சினை மட்டுமில்லை. பொண்ணுகளையும் சேர்த்துதான்.

என் ஸ்கூல்ல பத்தாம் வகுப்புப் படிக்கிற பையன் என்னை டீச்சர்னுகூட நினைக்காம, உடம்பையே வெறிச்சிப் பார்த்துகிட்டு இருக்கான். பக்கத்துல கூப்பிட்டு பேசினா, என்னை உரச டிரை பண்ணுறான். இப்படி இருந்தா எப்படி பாடம் சொல்லிக் கொடுக்கிறது?

நிறைய நேரம் வெறும் பாடம் மட்டுமே நடத்துற டீச்சராவே இருக்கிறேன்னு எனக்கே குற்றவுணர்ச்சியிருக்கு. கூடவே என் பிள்ளைகளும் இப்படித்தானே கெட்டுப் போவாங்கன்னு பயமாவும் இருக்கு.

ஸ்கூல் பசங்க செல்போன், இன்டர்நெட் எல்லாம் பயன்படுத்தாம கவர்மென்டே தடுக்க முடியாதா? எதை பசங்க பார்க்கணும்? பார்க்கக் கூடாதுன்னு இன்டர்நெட்டுக்கு சென்சாரே

கிடையாதா? பாடத்தில் மட்டும் ஒழுக்கத்தை கற்பித்தா போதுமா? படிக்கிற பிள்ளைகளை ஏன் சார் இப்படி கெடுக்குறாங்க? இதை ஏன் சமுதாயத்துல யாரும் கண்டுகிடவே மாட்டேங்குறாங்க?" என்றார்.

அந்த டீச்சரின் ஆதங்கக் குரலைக் கேட்க வருத்தமாக இருந்தது. அது தனிக் குரல் இல்லை. கடந்த 10 ஆண்டுகளில் கல்விச் சூழலில் ஏற்பட்டுவரும் சீர்கேட்டின் எதிரொலி. பெருநகரப் பள்ளிகள் தொடங்கி சிற்றூர்களின் பள்ளி வரை மாணவர் மத்தியில் ஆபாசப் படங்கள், பாடல்கள், உரையாடல்கள் தொற்றுநோயென பரவிவிட்டன. மாணவர்கள் ஆபாசப்படங்களைத் தரவிறக்கம் செய்து பரிமாறிக் கொள்கிறார்கள். கூடிக் குடிப்பதும். குற்றச்செயல்களில் ஈடுபடுவதும் அதிகமாகிக் கொண்டே வருகிறது.

கல்வித்துறைப் பாடத் திட்டங்களில் மாற்றம் கொண்டுவருவது, பயிற்றுவித்தலில் மாற்றம் கொண்டு வருவது வரவேற்க வேண்டிய முயற்சி. ஆனால், அவற்றைவிட ஆதாரமாக பள்ளி மாணவர்கள் மத்தியில் புரையோடிவிட்ட இந்தச் சீரழிவுகளை எப்படி தடுத்து நிறுத்தப் போகிறோம்? இதற்கு ஆசிரியர், பெற்றோர். கல்வி நிறுவனங்கள் என்ன செய்யப் போகின்றன என்பது பதிலற்ற கேள்வியாகவே உள்ளது.

அமெரிக்கா போன்ற நாடுகளில்கூட மாணவர்கள் இணையம் மற்றும் செல்போனை எங்கே, எப்படி உபயோகம் செய்வது என்பதில் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஆனால், நம் ஊரில் பொதுக் கழிப்பறையைப்போல செல்போனை உபயோகம் செய்து வருகிறோம்.

ஒழுக்கமும் பண்பாடும் இல்லாத கல்வி, மாணவர்களின் எதிர்காலத்தை மட்டுமின்றி சமூகத்தின் எதிர்காலத்தையும் சேர்ந்து நாசப்படுத்தக் கூடியது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடுவே ஆலோசகர்கள் தேவைப்படுகிறார்கள். குறிப்பாக, உளவியல் ஆலோசகர்களின் தேவை அதிகமிருக்கிறது. அவர்கள் மாணவர்களுடன் கலந்து பேசி நெறிப்படுத்தினால் கல்வியின் தரம் மட்டுமின்றி, மாணவர்களின் ஆளுமையிலும் மாற்றங்கள் உருவாகும்.

ஜப்பானில் ஒரு பவுத்த மடாலயம் இருந்தது. அங்கே, இளந் துறவிகள் பலர் வேறு வேறு ஊர்களில் இருந்து வந்து தங்கி பவுத்த ஞானத்தைப் பயின்றார்கள். அந்தத் துறவியர் மடாலயத்துக்கு ஒரு இளந்துறவி வந்து சேர்ந்தான். அவன் மதுப் பழக்கம் உள்ளவன். யாருக்கும் தெரியாமல் இரவில் அவன் மடாலயத்துக்கு வெளியே சென்று குடித்துவிட்டு வருவான். அதைக் கண்ட மூத்த துறவி, தலைமை குருவிடம் புகார் சொன்னார்.

அதைக் கேட்ட தலைமை குரு சொன்னார்: "அவசரப் படாதே. கல்வி கற்க வருபவனைக் கடுமையாக தண்டித்து துரத்திவிடக் கூடாது. அறிவுரை சொன்னால் திருந்திவிடுவான்!" என்று சொன்னவர், மறுநாள் அவனை அழைத்து அறிவுரை வழங்கினார்.

ஆனால், அவன் அதற்குக் கட்டுப்படவில்லை. ஆகவே, மடாலயத்தின் கதவுகளை இரவில் பூட்டிவைக்கும்படி உத்தரவு போட்டார் மூத்த துறவி. இப்போது அந்த இளந்துறவி குடிப்பதற்கு பகலிலேயே வெளியே போய்வரத் தொடங்கினான்.

இதை தலைமை குருவிடம் சொன்னபோது அவர் சொன்னார்: "அவசரப்படாதே, காசு இருந்தால்தானே குடிக்கச் செல்வான். அவனிடம் உள்ள காசை பறித்துவிடு!" என்றார்.

அப்படியே காசை பறித்து, அவன் பகலில் வெளியே செல்லக்கூடாது என தடுத்து, நிறைய வேலைகளை செய்ய வைத்தார்கள். அவனோ, வேலை செய்யாமல் சோம்பேறியாக இருந்ததோடு மட்டுமல்லாமல், குடிப்பதற்காக திருடவும் தொடங்கினான். அத்துடன் சேர்ந்து குடிக்க சிலரை துணைக்கும் சேர்த்துக்கொண்டான்.

மூத்த துறவிக்கு என்ன செய்வது எனத் தெரியவில்லை. அவர் தலைமை குருவிடம் மறுபடியும் முறையிட்டார். அதற்கு அவர் சொன்னார்:

"அவசரப்படாதே. இப்போதும் அவனை திருத்த வழி இருக் கிறது. நானே அவனிடம் பேசுகிறேன்."

தலைமை குரு அந்த இளந்துறவியைக் கூப்பிட்டு அறிவுரை சொன்னார். அவன் ஏற்றுக் கொண்டதைப் போல நடித்தான். ஆனால், மறுநாள் பகலில் அவன் சிலரை அழைத்துக் கொண்டு குடிக்கப் போனதுடன், மது விடுதியில் பணியாற்றும் ஒரு பெண்ணிடம் தவறாக நடக்க முயற்சித்து அடி, உதை வாங்கித் திரும்பினான்.

இப்போது தலைமை குரு சொன்னார்: "போதும் அந்த இளந்துறவியை அடித்து துரத்திவிடு. அவன் கல்வி பயில லாயக்கற்றவன். ஒரு தவறான மாணவன் நூறு தவறான மாணவர்களை உருவாக்கிவிடுவான் என்பது உண்மை. சுய ஒழுக்கமும், அறமும், கட்டுப்பாடுகளும் இல்லாத மடாலயம் சூதாட்ட விடுதி போலாகிவிடும் என்பதை புரிந்து கொண்டேன்.அவனை துரத்திவிடு!" என்றார்.

இளந்துறவியை மட்டுமின்றி, சேர்ந்து குடித்தவர்கள் அத்தனை பேரையும் உடனே மடாலயத்தில் இருந்து துரத்தி விட்டார்கள் என்று முடிகிறது அந்த ஜப்பானியக் கதை.

அன்பை போதிக்கும் பவுத்த மடாலயம் என்றாலும் கட்டுப்பாடுகளும் ஒழுக்கமும் தேவையாகத்தானே இருக்கின் றன. இன்று கட்டணம் கொடுத்து, அதுவும் அநியாயக் கொள்ளையாக பணம் பறிக்கும் கல்விநிலையங்களில் பணம் கட்டிப் படிக்கும் மாணவர்கள் தங்கள் தவறுகளைத் தட்டிக் கேட்க, கல்வி நிலையத்துக்கு என்ன உரிமை இருக்கிறது என கேள்வி கேட்கிறார்கள்.

கல்வியை சந்தைப் பொருளாக்கியதால் கல்வியின் தரம் மட்டும் பாதிக்கப்படவில்லை. மாணவர்களின் இயல்பும், ஒழுக்கமும், சேர்ந்தே பாதிக்கப்படுகின்றன. இதன் விளைவாகவே நாட்டில் வன்முறையும் குற்றங்களும் பெருகி வளர்கின்றன.

தங்கள் பிள்ளை நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற ஆசைப்படும் பெற்றோர், அவன் மனதளவில் எத்தனை சதவீதம் தூயவனாக, நல்லெண்ணங்கள் கொண்டவனாக இருக்கிறான் என்பதைப் பற்றி கவலைப்படுவதே இல்லை. புற்றுநோயைத் தடுக்க எத்தனையோ மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், புரையோடிப் போன கல்விச் சீர்கேட்டினைத் தடுக்க என்ன மருந்து தரப் போகிறோம் என்றுதான் தெரியவில்லை.

இணைய வாசல்: >ஜப்பானிய ஜென் கதைகளை வாசிக்க
http://www.101zenstories.org/101-zen-stories-table-of-contents/

## பகுதி 51 - உண்மை சுடும்!

'யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலை' என்றொரு சினிமா பாடல் இருக்கிறது. அது வெறும் பாடல் இல்லை; சமகால உண்மை! எல்லாத் துறைகளிலும் யாரை எங்கே வைப்பது எனத் தெரியாத மூடத்தனம் மேலோங்கி வருகிறது.

திறமையைவிட, அறிவைவிட பரஸ்பர புகழ்ச்சியும், துதி பாடுதலும், முதுகு சொறிந்துவிடுதலுமே ஒருவரை அங்கீகரிக்கவும் உயரத்தில் தூக்கிவைத்துக் கொண்டாடவும் காரணமாக இருக்கிறது என்பது வெட்கப்பட வேண்டிய விஷயம்.

காட்டில் வாழும் சிங்கம் ஒருபோதும் மற்ற விலங்குகளிடம் போய், 'நான் ஒரு சிங்கம்; என்னை மதியுங்கள்' என்று கேட்பதில்லை. அது தன் இயல்பில், தனது கம்பீரத்தில், தனது வலிமையில்… தான் யார் எனக் காட்டிக்கொள்கிறது. சிங்கம் மதிக்கப்படுவதற்குக் காரணம், அது தனித்துச் செயல்படுவதே ஆகும்!

தன்னைச் சுற்றிலும் ஜால்ராக்களை வைத்துக்கொண்டு, 'நான் ஒரு அஞ்சாத சிங்கம்!' என ஒருபோதும் அது, துதி பாட விடுவதில்லை. தன் வலிமையை அறிந்தவன் அடுத்தவரின் அங்கீகாரத்துக்காகக் காத்திருப்பதே இல்லை. அவன், தன்னை நிரூபணம் செய்துகொள்வதன் வழியே ஒன்றை வெற்றிகொள்கிறான். ஆனால், சமகால சூழல் அப்படிப்பட்டது இல்லை. துறைதோறும் உதவாக்கரைகளே மேதைகளாக முன்னிறுத்தப்படுகிறார்கள். ஒரு நிகழ்வுக்குச் சென்றிருந்தேன். அது வரலாறு தொடர்பான ஆய்வரங்கம். அங்கே வரலாறு பற்றிய எவ்விதமான அறிவும் இல்லாத ஒரு தொழிலதிபர் தலைமை தாங்கிப் பேசினார். அவரது உளறல்களைத் தாங்கமுடியாமல் நிகழ்வுக்கு வந்திருந்த அறிஞர்கள் பலரும் நெளிந்தார்கள். ஆனால்,ஒருவர்கூட அவர் பேசியது உளறல் என சுட்டிக்காட்டவில்லை.

எனது உரையில் அவர் பேசிய விஷயங்கள ஆதார மற்றவை என சுட்டிக்காட்டியபோது, அதை அவர் கண்டுகொள்ளவே இல்லை. மறுநாள், நாளிதழ்களில் அந்தத் தொழிலதிபரின் உரை மட்டுமே வெளியாகியிருந்தது.

நண்பர்கள் போன் செய்து 'இதுதான் இன்றைய நிலை. இதில் நீ நியாயம் பேசி என்ன ஆகப் போகிறது?' என கேலி செய்தார்கள். உண்மைதான்! அதற்காக கண்முன்னே ஒருவர் உளறுவதை யாரும் கண்டிக்கவோ, மறுக்கவோ கூடாதா என்ன! தகுதியற்ற ஒருவருக்கு விருதோ, கவுரவமோ, பதவியோ அளிக்கப்படும்போது வாய்மூடி இருப்பது என்பது மன்னிக்க முடியாத குற்றம் இல்லையா? அதுதானே தொடர் தவறுகளுக்குக் காரணமாக விளங்குகிறது..!

மத்தியபிரதேச மாநிலத்தில் வழங்கப்படும் நாட்டுப்புறக் கதைகளில் ஒன்று இதைப் பற்றிப் பேசுகிறது:

உஜ்ஜயினில் ஆண்டுதோறும் இசைக் கச்சேரி நடப்பது வழக்கம். இதற்காக சிறந்த இசைக் கலைஞர்களை அழைத்துப்போய் பாட வைத்து கவுரவித்து அனுப்புவார்கள். இதில் ஒருவருக்கு ‘இசைச் சக்கரவர்த்தி’ என்று பட்டமளிப்பார்கள். அந்த இசை நிகழ்ச்சி நடைபெறப் போவதாக உஜ்ஜயினி அரசன் அறிவித்தான்.

தன் நாட்டில் இருந்து எந்த இசைக் கலைஞரைப் பாட வைப்பது என மன்னருக்கு யோசனையாக இருந்தது. மந்திரிகள் சில இசைவாணர்கள் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால், மன்னருக்கு அவர் களில் ஒருவரையுமே பிடிக்கவில்லை.

ஒருநாள் இரவு மன்னர் படுக்கையில் இருந்தபோது, கொசு ஒன்று அவரது காதைச் சுற்றி ரீங்காரமிட்டது. திடீரென மன்னருக்கு ஒரு யோசனை உருவானது. இவ்வளவு அழகாக பாடுகிறதே இந்தக் கொசு, இதை ஏன் நாம் அங்கீகரித்துக் கவுரவிக்கக் கூடாது என யோசித்தார்.

மறுநிமிடமே மந்திரிகளை அழைத்து “இந்த ஆண்டு நம் தேசத்தின் சார்பில் கொசுக்கள்தான் பாடப் போகின்றன!” என்றார். இதைக் கேட்ட மந்திரிகளுக்கு ‘இது என்ன முட்டாள்தனம்!’ எனத் தோன்றியபோதும், “ஆஹா பிரமாத மான விஷயம்! கொசுவைவிட சிறந்த வித்வான் யார் இருக்கிறார்கள்?” எனப் புகழாரம் சூட்டினார்கள்.

இதைக் கேட்ட மன்னர் சந்தோஷம் மிகுதியாக, தன் நாட்டு கொசுக்களுடன் போட்டி இட்டு பாடுவதற்கு யாராவது தயாரா என சவால்விட்டார்.

இது என்ன சோதனை என நினைத்த இசைக் கலைஞர்கள் ஒருவரும் உஜ்ஜயினி இசை விழாவுக்குப் போகவேயில்லை. தன் நாட்டு கொசுகளை எதிர்த்து பாட ஒருவருமே இல்லை என்பதால் மன்னர் கொசுக்களே நாட்டின் இசைச் சக்கரவர்த்தி என அறிவித்து சிறப்பு கச்சேரி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார்.

என்னதான் கிரீடம் சூட்டினாலும், கொசு இசைவாணரா என்ன?!

கொசுக்கள் ஒன்று கூடி ‘ரீ ரீரீ’ என ரீங்காரமிட்டன. அதை மன்னரும் மந்திரிகளும் “ஆஹா என்னவொரு இசை!” என ஆரவாரம் செய்தார்கள்.

இந்த அபத்தத்தைத் தாங்கமுடியாத ஓர் இசை ரசிகர், அரங்கில் இருந்து எழுந்து சொன்னார்: “மன்னா! கொசுவின் இசையில் மெய்மறந்துப் போனேன். அதைப் பாராட்ட ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்!”

மன்னரும் அந்த இசை ரசிகரை பாராட்ட அனுமதித்தார்.

இசை ரசிகர் கொசுக்களின் அருகே போய், தன் இரண்டு கைகளையும் ஒங்கி அடித்தார். அவ்வளவுதான் கைகளுக்கு இடையே சிக்கிய கொசுக்கள் செத்து ஒழிந்தன.

இதைத் தொடர்ந்து இசை ரசிகர் அமைதியாக சொன்னார்:

"முட்டாள்தனத்தின் முகத்தில் அறைவதற்கு ஒருவராவது வேண்டும்தானே!"

அதைக் கேட்ட கூட்டம் இசை ரசிகர் செய்ததே சரியெனப் பாராட்டியது என அந்தக் கதை முடிகிறது.

கதையிலாவது கொசுக்கள் 'தானே இசைச் சக்கரவர்த்தியாக வேண்டும்' என ஆசைப்படவில்லை. மன்னரின் முட்டாள்தனம் அவர்களை இசைச் சக்கரவர்த்தியாக்கியது. ஆனால், இன் றைய சமூகச் சூழலில் கொசுக்கள், தங்களைத் தானே இசைச் சக்ரவர்த்தி என பட்டம் சூட்டிக்கொள்வதுடன், உண்மையான இசைவாணர்களின் காதுகளைச் சுற்றிச் சுற்றிவந்து 'என்னை விட நீ ஒன்றும் பெரிய ஆள் இல்லை!' என உளறுகின்றன.

அங்கீகாரம், விருதுகள், கவுரவங்கள் எல்லாமும் ஒருநாள் கூத்துதானே. அதை அடைவதற்கு எதற்கு இத்தனை கீழான வேலைகள்; துதி பாடல்கள்? தன் படைப்புத் திறனை நம்பும் ஒருவன், வேறு எந்த இழிசெயல்களிலும் ஒருபோதும் ஈடுபட மாட்டான்.

மகத்தான கோயில் சிற்பங்களைச் செய்தவன், தன் பெயரை அதில் போட்டுக்கொள்ளவில்லை. வானுயரக் கோபுரங்களைக் கட்டியவன் தன் பெயரை கல்வெட்டில் பொறித்துக்கொள்ளவே இல்லை. ஆனால், கோயிலில் டியூப் லைட் போட்டவன் தன் பெயரை அந்த டியூப் லைட்டின் அடியிலே எழுதி போட்டுக்கொள்கிறான். வெட்கமாக உணர வேண்டாமா? இப்படி எழுதலாமா எனக் கூச்சம் வேண்டாமா?

புகழ்ச்சிக்கு ஏங்குவது மனித இயல்பு என்கிறார்கள். அதற்காக இப்படி, எதையும் செய்து புகழ்பெறுவது என்பது பிச்சை எடுப்பதற்கு சமம் இல்லையா?

உண்மையான கலையோ, கலைஞர்களோ தாங்கள் கண்டுகொள்ளாமல் இருப்பதைப் பற்றி ஒருபோதும் புகார்பட்டியல் வாசிப்பதே இல்லை. தன் இடமும், நிலையும் அறியாத கொசுக்கள்தான் அனைவரது காதருகிலும் வந்து ரீங்காரம் பாடுகின்றன. பாவம் கொசுக்கள், அடுத்தவர் ரத்தம் குடித்து வாழப் பழகியவை. உழைப்பில் வாழ்வதன் பெருமைப் பற்றி அதற்கு எப்படி தெரியப் போகிறது?

இணைய வாசல்: இந்திய நாட்டுப்புறக் கதைகளை வாசிக்க
http://www.arvindguptatoys.com/arvindgupta/cbt9-Indian%20Tales%20&%20Folk%20Tales.pdf

## பகுதி 52 - பயணியின் கோபம்!

'பயணத்தைப் பற்றி இவ்வளவு புகழ்ந்து எழுதுகிறீர்களே, உங்களுக்குத் தெரியுமா? ஒவ்வொரு முறை குடும்பத்துடன் பயணம் போய்வரும்போதும் நிறைய ஏமாற்றப் பட்டதாகவே உணர்கிறேன். தங்குமிடம், உணவகம், டாக்ஸி, நினைவுப் பொருட்கள் என எல்லாவற்றிலும் ஏமாற்றுகிறார்கள். கடந்த சில ஆண்டுகளில், இந்தியாவின் பல்வேறு சுற்றுலா மையங்களுக்கும் போய்வந்துவிட்டேன். எல்லாமே ஏமாற்றம் தரும் அனுபவங்கள்தான். இந்தக்

கசப்பை மனதில் வைத்துக்கொண்டு எப்படி நிம்மதியாகப் பயணத்தை அனுபவிப்பது? இனிமேல் பயணமே போகக் கூடாது என முடிவு செய்துவிட்டேன்' என ஒரு நண்பர் எனக்கு மின்னஞ்சல் அனுப்பியிருந்தார்.

அவர் சொன்னது நிஜம். நானும் அனுபவித்திருக்கிறேன். ஆனால், பயணத்தில் மட்டும்தான் ஏமாற்றுகிறார்களா? சொந்த ஊரின் ஷாப்பிங் மால்களில், உணவகங்களில், கடைகளில் ஏமாற்றவில்லையா என்ன? ஆனாலும், ஒன்றை ஒப்புக்கொள்ளவேண்டும்.

**திறந்தவெளி கொள்ளைக் கூடங்கள்**

சுற்றுலா மையங்கள் திறந்தவெளி கொள்ளைக் கூடங்களாக மாறிவிட்டன. இணையதள வசதி வந்த பிறகு இந்தக் கொள்ளை எளிதாகிவிட்டது. பொய்யாக எதைஎதையோ காட்டி எளிதாக ஏமாற்றிவிடுகிறார்கள்.

நண்பர் ஒருவரின் குடும்பம் இணையதளம் மூலம் மூணாரில் தங்கும் அறை ஒன்றை புக் செய்தார்கள். இணையத்தில் காணப்பட்ட அறையின் புகைப்படங்கள் அற்புதமாக இருந்தன. ஆனால், மூணாருக்கு நேரில் சென்றாலோ அறை ஒரு சவப் பெட்டியைப் போல இருந்தது. இதற்கு ஒரு நாளைக்கு 4 ஆயிரம் ரூபாயா என சண்டையிட்டதற்கு, இணையவழி பதிவு செய்த அறைகளை கேன்சல் செய்ய முடியாது என அந்த விடுதி நிர்வாகத்தினர் சண்டையிட்டுள்ளார்கள். போலீஸுக்குப் போவதாக மிரட்டவே பாதி பணம் மட்டும் தரப்பட்டுள்ளது. அப்புறம் தேடி அலைந்து வேறு ஓர் அறையில் போய்த் தங்கியிருக்கிறார்கள்.

மூணாரில் உள்ள ஓர் உணவகத்தில் போய் சாப்பிடுவதற்கு பட்டர் நான் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். வந்தது சுட வைத்து பட்டர் தடவிய பீட்சா ரொட்டி. ‘இதுதான் இந்த ஊரின் பட்டர் நான். இதன் விலை 240 ரூபாய்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த உணவகத்திலும் சண்டை. இது போல டிரக்கிங் ஜீப், தைலம் விற்கும் கடை என எல்லாவற்றிலும் மோசடி. அவர்கள் மிக மோசமான அனுபவத்துக்கு உள்ளாகி ஏன் விடுமுறையை இப்படி நாசமாக்கிக் கொண்டோம் என வருத்தமாக வீடு திரும்பியிருக்கிறார்கள். இது ஓர் உதாரணம்தான். இந்தியாவின் பல்வேறு சுற்றுலாத் தலங்கள் அல்லது இயற்கை வாழிடங்களுக்குப் போய்வந்த பலருக்கும் இதுவே அனுபவம்.

அரசு தரப்பில் இயங்கும் தங்குமிடங்கள், உணவகங்களின் நிலை இதை விட மோசம். அரிதாக ஒன்றிரண்டு சுற்றுலாத் துறை தங்குமிடங்களே முறையாகப் பராமரிக்கப்படுகின்றன. ஆனால், அங்கும் குடிகாரர்கள் நிரம்பி வழிகிறார்கள். குடித்துவிட்டுத் தூக்கி யெறிந்த பாட்டில்கள் எங்கும் குவிந்து கிடக்கின்றன. உணவுகளின் தரமோ மிக மிக மோசம்.

சுற்றுலாத் தலங்களில்தான் இப்படியென்றால், புகழ்பெற்ற கோயில்கள் உள்ள ஊர்களைப் பற்றி கேட்கவே வேண்டாம். காலில் போட்டிருக்கும் காலணியைக் கழற்றிப் போடத் தொடங்கும் இடத்தில் இருந்து மொட்டை போடுவது, அர்ச்சனைக்கு தேங்காய்ப் பழம் வாங்குவது, சாமி தரிசனம் வரை கொள்ளை. பக்தர்களை விதவிதமாக ஏமாற்றுகிறார்கள்.

கோயில்களில் விற்கப்படும் உணவுப் பொருட்களுக்கு தரப் பரிசோதனை ஏதாவது இருக்கிறதா என்றே தெரியவில்லை. சாமி தரிசனம் பண்ணி வைக்கிறேன் என அலையும் புரோக்கர்களின்

தொல்லை ஒரு பக்கம். புகழ்பெற்ற ஒரு முருகன் கோயிலில் புரோக்கர் ஒருவரின் பெயர் ‘ஹார்லிக்ஸ்’. அவ்வளவு ஊட்டமாக சம்பாதிக்கக் கூடியவர் என்கிறார்கள். சாமி தரிசனத்துக்கு ஏற்பாடு செய்ய, ஒரு குடும்பத்துக்கு அவர் 5 ஆயிரம் கட்டணம் வசூலிக்கிறார். அதை கொடுத்துவிட்டால் போதும். உங்கள் மடியிலேயே சாமியைத் தூக்கி வைத்து, தொட்டு கும்பிட்டுக் கொள்ளுங்கள் என விட்டுவிடுவார். அவ்வளவு செல்வாக்கு!

கோயிலைச் சுற்றியுள்ள வெளிப்புறங்களில் ‘திருடர்கள் ஜாக்கிரதை’ என காவல்துறை சிலருடைய புகைப் படங்களை ஒட்டியிருக்கிறார்கள். அதில், இப்படியான புரோக்கர்களின் மோசமான வணிகர்களின் படங்கள் ஒட்டப்பட்டதில்லை.

ஒரு நாளைக்கு லட்சம் பேருக்கும் மேல் வந்து செல்லும் திருப்பதி எவ்வளவு முறையாக இயங்குகிறது? அப்படி முறையாக இயங்கும் ஒரு கோயிலையாவது தமிழகத்தில் காட்ட முடியுமா என ஆதங்கமாக இருக்கிறது.

சுற்றுலாத் தலங்கள் ஏன் கொள்ளைக் கூடங்களாக மாறிப்போயின? முதல் காரணம், கையில் காசு இருப்பதால்தானே இங்கே வருகிறார்கள்; செலவு செய்யட்டுமே என்கிற எண்ணம். இரண்டாவது, எந்தக் கண்காணிப்பும் கட்டுப்பாடும் இல்லாமல் திறந்துவிடப்பட்ட சூழல். இதற்கு உடந்தையாக இருக்கிற அரசியல்வாதிகள். மூன்றாவது இவர்களைத் தவிர மாற்றுவழிகள், தங்குமிடங்கள், ஆரோக்கியமான உணவகங்கள் எதுவுமில்லாதது. நான்காவது, இது போலவரும் புகார்களை விசாரிக்க, நடவடிக்கை எடுக்க தனிப் பிரிவு இல்லாதது போன்றவைதான் மிக மிக முக்கிய காரணங்கள்.

**புனித யாத்திரை**

இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டவர்கள் பலரும் புலம்பித் தள்ளுகிறார்கள். குறைந்தபட்சம் இது போன்ற சுற்றுலாப் பயணிகள் புகார் செய்யவும்; அதன் மீதான உடனடி நடவடிக்கைக்கும் ஓர் இணையதளமோ, அவசர தொலைபேசி எண்ணோ உருவாக்கலாம் அல்லவா? அரசு சார்பிலே ஓர் இரவுக்கான பொது தங்குமிடங்கள், பொது குளியல் அறைகள், சுகாதாரமான குடிநீர், மற்றும் உணவு வழங்கல், முறையான வாகன நிறுத்தம், மருத்துவ வசதிகள் போன்றவற்றை உருவாக்கித் தர வேண்டும் இல்லையா?

பயணிகளை எப்படி எல்லாம் ஏமாற்றுவார்கள் என்பதை, ஓர் தைவான் கதை சுட்டிக்காட்டுகிறது.

மன நிம்மதியைத் தேடி மனிதர்கள் புனித யாத்திரைக்குப் போய் வருவதைக் கண்ட நாய்கள், தாங்களும் புனித யாத்திரை போய் வரலாமே என முடிவு செய்தன.

“புனித யாத்திரை எதற்காக?” எனக் கேட்டது ஒரு நாய். அதற்கு இன்னொரு நாய் பதில் சொன்னது: “நாம் கோபத்தில் அதிகம் கத்திக் கொண்டிருக்கிறோம் அல்லவா. ஆகவே, அமைதியாக, ஒருமுறை கூட குரைக்காமல் வாயை மூடிக் கொண்டு பயணம் மேற்கொண்டால் நம் கோபம் அடங்கிவிடும். ஆகவே, ஜென்லான் புத்தர் கோயிலுக்குப் போய் வரலாம் என நாங்கள் முடிவு செய்துள்ளோம்!”

ஒரு பவுர்ணமி நாளில் நாய்களின் பயணம் தொடங்கியது. புனித யாத்திரை செய்யும் நாய்களைப் பயணிகள் எல்லோரும் கேலி செய்தார்கள். அடித்து துரத்தினார்கள். ஆனால், அவை பதிலுக்கு குரைக்கவே இல்லை.

பயண வழியில் நாய்களுக்கு பசி எடுத்தது. ஓர் உணவகத்தில் ஏதாவது மிச்சம் மீதி கிடைக்குமா என எட்டிப் பார்த்தன. ஆனால், கெட்டுப்போன மீனைக் கொடுத்து தங்களைக் கடைக்காரன் ஏமாற்றிவிட்டான் என ஒரு பயணி அங்கே சண்டை போட்டுக் கொண்டிருந்தான். கடைக்காரன் அவனை அடித்துத் துரத்தினான். அதை கண்ட நாய்கள் பயந்துபோய் அங்கிருந்து அமைதியாகத் திரும்பி நடக்க ஆரம்பித்தன.

ஜென்லான் கோயிலின் வாசலில் ஊதுபத்தி, தாமரை மலர்கள் விற்பவர்கள் அநியாய விலைக்கு அவற்றை விற்பனை செய்தார்கள். சாமி தரிசனம் செய்ய வந்த பயணிகள் அந்த வியாபாரிகளிடம் சண்டை போட்டார்கள். ஜென்லான் பவுத்த ஆலயத்துக்குள் போனால், அங்கே இருந்த பவுத்த துறவிகள், பயணிகளிடம் காணிக்கை கேட்டு தொல்லைக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நாய்கள், அமைதியாக புத்தர் கோயிலை வணங்கிவிட்டு வெளியே வந்தன. அப்போது ஒரு நாய் சொன்னது: “பயணங்களில்தான் மனிதர்கள் அதிகம் ஏமாற்றப்படுகிறார்கள். கோபம் அடைகிறார்கள். சண்டை போடுகிறார்கள். நம்மை விட மோசமாகக் குரைக்கிறார்கள். இவர்களைவிட நமது பயணம் எவ்வளவோ சிறந்தது!”

நாய்கள் சொன்னது முற்றிலும் உண்மை! மனசாந்தி தேடிப் போகிற பயணங்கள், இருக்கிற அமைதியையும் இழக்கவே வைக்கின்றன. தன்னை திருத்திக் கொள்ள நாய்கள் கூட முற்படுகின்றன. ஆனால், பேராசை கொண்ட மனிதர்கள்தான் ஒருபோதும் திருந்துவதே இல்லை!

இணைய வாசல்: >தைவான் நாட்டுப்புறக் கதைகளை வாசிக்க

http://www.taiwandc.org/folk.htm

## பகுதி 53 - நம்மில் ஒருவன்

நம் காலத்தின் நெருக்கடிகளில் ஒன்று, நல்லவனாக இருப்பது. யார் நல்லவர், யார் கெட்டவர்? எனப் பகுத்தறிவது எளிதாக இல்லை. ‘நல்லவன்’ என்ற சொல்லை இன்று பயன்படும் பொருளில் முந்தைய தலைமுறையினர் பயன்படுத்தவில்லை. நாம் இன்று பயன்படுத்தும் நிறைய சொற்கள், கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்ட அர்த்தத்தில் இருந்து வெகுவாக மாறியுள்ளன.

‘நல்லவன்’ என்ற சொல்லே இன்று கேலிக்குரியதாகிவிட்டது. திரையில் எல்லா கதாநாயகர்களும் கெட்டவர்களாக நடிக்கவே ஆசைப்படுகிறார்கள். பொது வாழ்க்கையிலோ குற்றவாளிகள், மோசடிப் பேர்வழிகள், கெடுசெயல் செய்தவர்கள் சகல வசதிகளுடன் வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள், அதிகாரத்தை ருசிக்கிறார்கள். நல்லவர்களோ நிழல்களைப் போல அடையாளமே இல்லாமல் ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கெட்டவர்கள் வேறு கிரகத்தில் இருந்து பூமிக்கு வந்து போகிறவர்கள் இல்லை. நம்மில் ஒருவரே கெட்டவர். எவர் முகமும் அந்த உருவத்துக்குப் பொருந்தக்கூடியதே.

நல்லவை குறித்து பேசுவதும், விவாதிப்பதும், கற்றுத் தருவதுமே பண்பாட்டின் ஆதாரச் செயல்கள். வீடும், ஊரும், சமூகமும் நன்மையின் விளைநிலங்களாகக் கருதப்பட்டன. இன்று, நிலைமை மாறிவிட்டது. எனக்கு எது நல்லதோ, அதுவே போதும் என்ற நிலை உருவாகியுள்ளது.

சுயநலம், பொதுநலம் என்ற இரண்டு வார்த்தைகளை நாம் முறையாக அறிந்திருக்கிறோமா என சந்தேகமாகவே உள்ளது. உண்மையில், சுயநலம் என்பது விரிந்துகொண்டே போகிறது. பொதுநலம் என்பது சுருங்கிக்கொண்டே வருகிறது.

காலம் காலமாக நற்செயல்களே நல்லவனின் அடையாளமாகக் கருதப்பட்டன. ஆனால், இன்று கல்வி உதவிகள் தருவது, அன்னதானம் செய்வது, புனிதப் பயணங்களுக்கு உதவுவது, இலவச மருத்துவ வசதிகள் செய்து தருவது போன்றவற்றில் ஈடுபடுகிறவர்களில் பாதிக்கு மேல் கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள். தவறான வழிகளில் பொருள் ஈட்டியவர்கள். அவர்களின் செயல்கள் நன்மை தருவதால் அவர்களே நல்லவர்களாக அறியப்படுகிறார்கள். உலகை ஏமாற்றுவது எவ்வளவு எளிதாக இருக்கிறது பாருங்கள்!

தீமையின் வசீகரம் எப்போதுமே ஈர்ப்புடையது என்பார்கள். எந்த ஒரு குற்றச்செயலைப் பற்றி வாசித்தாலும், கேள்விப்பட்டாலும் மனது உடனடியாக அதில் நாமும் ஈடுபட்டிருக்கலாமோ என ரகசியமாக யோசிக்கவே செய்யும். கடவுள் என்ற ஒருவர் இல்லாமல் போயிருந்தால் எல்லாக் குற்றங்களும் அனுமதிக்கப்பட்டிருக்கும் என்ற தஸ்தாயெவ்ஸ்கியின் வரியே நினைவுக்கு வருகிறது.

நல்லது எது, தீயது எது? என்பதை பண்பாடே தீர்மானிக்கிறது. மதமும், சட்டமும் அதை வரையறை செய்யவும், நெறிப்படுத்தவும் முயற்சிக்கின்றன. சாமானிய மனிதன் நல்லது செய்வதை மாபெரும் விஷயமாகக் கருதுவதில்லை. தன் உடல், மனம், செயல் களால் எந்த ஒருவருக்கும் தீங்கு இழைக்காமல் இருந்தால் போதும், அதுவே நல்லவனின் அடையாளம் என நினைக்கிறார்கள்.

சாமானிய மக்கள் தங்களால் முடிந்த நன்மைகளை உலகுக்குச் செய்யவே முயற் சிக்கிறார்கள். அதை வெளிச்சமிட்டுக் காட்டிக்கொள்வதில்லை, அவ்வளவுதான்.

நண்பர் வீட்டுக்குப் போயிருந்தபோது, டிவியில் ஒரு திரைப்படம் ஓடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த அவரது 12 வயது மகன் கேட்டான்: “வில்லன்கள் எல்லாமே எப்படிப்பா ரிச்சா இருக்காங்க? ஹீரோவா இருந்தா ரொம்ப கஷ்டப்படணும், அடிபடணுமா? வில்லன்கிட்ட இருக்கிற கார், பங்களா எதுவும் ஹீரோகிட்ட இல்லையே, ஏன்பா?”

“அது சினிமா! அப்படித்தான் இருக்கும்” என்றார் நண்பர்.

நான் குறுக்கிட்டு, “சினிமாவில் மட்டுமல்ல; நிஜ வாழ்க்கையிலும் அப்படித்தானே இருக்கிறது” என்றேன்.

“நான் பெரிய ஆளா வளர்ந்து, பெரிய வில்லனா ஆகிடுவேன்..” என்று உற்சாகமாகச் சொன்னான் அந்தப் பையன்.

இந்த விதை எண்ணிக்கையற்ற சிறார் மனதில் அன்றாடம் ஊன்றப்பட்டுக் கொண்டே இருக்கிறது என்பதுதான் அபாயம்!

இது வெறும் சினிமா பற்றிய விஷயமில்லை. தன் வாழ் நாள் முழுவதும் சமூகப் போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்ற ஆளுமைகள் டவுன்பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கள்ளச் சாராயம் விற்றவர் களோ சொகுசான ஆடி காரில் போகிறார்கள்.

நல்லவை எவை? நல்லவை நாட என்ன செய்ய வேண்டும்? என்பதையே இலக்கியங்கள் திரும்பத் திரும்பப் பேசுகின்றன. நன்மையின் வெளிச்சத்தை உயர்த்திப் பிடிக்கவே முற்படுகின்றன.

புத்த ஜாதகக் கதை ஒன்று. போதிசத்துவர் காட்டில் வாழும் ஒரு வெள்ளை யானையாகப் பிறக்கிறார். ஒருநாள் காட்டில் வழிதவறிய மனிதனின் குரல் கேட்டு உதவி செய்ய முன்வருகிறார். வெள்ளை யானையைப் பார்த்த மனிதன் பயந்து பின்னோடினான்.

‘உதவி செய்யத்தானே வருகிறேன், ஏன் பயப்படுகிறான்?’ என யோசித்த வெள்ளை யானை அவன் முன்னால் மண்டியிட்டது. தன்னைத் துரத்திவரும் யானையால் ஆபத்து எதுவும் உருவாகாது என உணர்ந்த பிறகு, அவன் நெருங்கிப் போனான். அது மனிதர்களைப் போலவே பேசியது வியப்பாக இருந்தது.

“நான் காட்டில் வழிதவறிவிட்டேன். வெளியேற உதவி செய்வாயா?” என அந்த யானையிடம் கேட்டான் மனிதன். அவனை தன்மேல் ஏற்றிக்கொண்டு காட்டில் நடந்தது யானை. வழியில் பழங்களைப் பறித்து சாப்பிடத் தந்தது. ஆற்றைக் கடந்து வாரணாசி நோக்கிச் செல்லும் பாதையைக் காட்டி, “அதோ நகரம், இனி நீ போகலாம்!” என விடை கொடுத்தது.

வாரணாசியில் தன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தவன் நடந்தவற்றை எல்லாம் தனது நண்பனிடம் சொன்னான்.

அதைக் கேட்ட நண்பன், “நீ அந்த வெள்ளை யானையின் தந்தங்களைக் கொண்டுவந்திருந்தால், விற்று நிறைய பணம் சம்பாதித்திருக்கலாம்” என்று தூண்டிவிட்டான்.

பேராசை கொண்ட மனிதன் மறுபடியும் காட்டுக்குப் போய், யானையைத் தேடிக் கண்டுபிடித்தான். அந்த யானையிடம், “உன் தந்தங்களில் ஒன்றைத் தந்தால் என் வறுமை தீரும். கடன்களை அடைத்துவிடுவேன். தருவாயா?” என்று கேட்டான்.

வெள்ளை யானை மறுப்பு எதுவும் சொல்லவில்லை. “சரி, என் தந்தத்தை வெட்டி எடுத்துக்கொள்” என்றது.

ஒரு தந்தத்தை வெட்டி எடுத்துக்கொண்டு வாரணாசிக்குப் போய் விற்றான். நிறைய பணம் கிடைத்தது. அதைக் கொண்டு உல்லாசமாக வாழ்ந்தான். சில மாதங்களில் கைப்பணம் செலவாகிவிடவே, திரும்பவும் வெள்ளை யானையைத் தேடிப் போனான்.

“இன்னொரு தந்தமும் வேண்டும். அப்போதுதான் என் குடும்ப கஷ்டம் எல்லாம் தீரும்” என்றான்.

“இரண்டு தந்தங்களையும் இழந்துவிட்டால் என்னால் வாழ முடியாது” என்றது யானை.

“இதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை” என்று அவன் கண்ணீர்விட்டு அழுதான்.

“உனக்காக என் இரண்டாவது தந்தத்தையும் தருகிறேன், எடுத்துக்கொள்” என்றது வெள்ளை யானை.

தந்தத்தைத் துண்டித்தான். அப்போது யானை வலியில் அலறியது. ரத்தம் பீறிட்டு ஓடியது. அவன் அதைப் பற்றி கவலையின்றி தந்தத்தை எடுத்துக்கொண்டு காட்டை விட்டு வெளியேறி நடந்தான். காட்டினுள்ளே அந்த வெள்ளை யானை வலி தாங்கமுடியாமல் பிளிறி செத்துப் போனது.

தந்தத்தை அதிக விலைக்கு விற்று வசதியாக வாழலாம் எனக் கற்பனை செய்தபடியே நடந்தான். திடீரென காட்டில் பெருமழை தொடங்கியது. காட்டாறு பெருகியது. தந்தத்தைத் தூக்கிக்கொண்டு அவனால் ஆற்றைக் கடக்க முடியவில்லை. வெள்ளம் பெருகியோடியது. நன்றி மறந்த அந்த மனிதன் பேராசையுடன் ஆற்றில் இறங்கி நடந்தான். வெள்ளம் இழுத்துக்கொண்டு போகவே, தண்ணீரில் மூழ்கி செத்துப்போனான் என அந்தக் கதை முடிகிறது.

தனக்கு உதவி செய்தவர்களிடம் நன்றியில்லாமல் அவர்களை ஏமாற்றுவதும், தன்னையே கொடுக்க முன்வந்த நிலையில்கூட அவர்களது வலியை, வேதனையைப் புரிந்துகொள்ளாமல் சுயநலத்துடன் நடந்துகொள்வதும் மனிதர்கள் செய்யும் தவறு. அதை சுட்டிக்காட்டவும், திருத்தவுமே ஜாதகக் கதை முற்படுகிறது.

திருத்திக்கொள்ள வேண்டியது நமது கடமை இல்லையா?

இணைய வாசல்: புத்த ஜாதகக் கதைகளை அறிந்துகொள்ள: http://www.pitt.edu/~dash/jataka.html

## பகுதி 54 - பெயரைக் கேளுங்கள்!

சமூகத்தில் தன் அடையாளங்களை, தனித்துவங்களை ஒளித்துக்கொண்டு வாழ்பவர்களே அதிகம் இருக்கிறார்கள். நண்பர் ஒருவரின் அலுவலகத்துக்குப் போயிருந்தேன் அந்தக் கட்டிடத்தின் லிஃப்ட் ஆபரேட்டர் ஒருவர் எனக்கு வணக்கம் வைத்தார். பதிலுக்கு நானும் அவருக்கு வணக்கம் சொன்னேன். அலுவலகத்தில் இருந்த நண்பனிடம், லிஃப்ட் ஆபரேட்டர் பெயர் என்னவென்று கேட்டேன். “ஆறு வருஷமா இங்கே வேலை பார்க்கிறார். பேரு… பழனினு நினைக்கிறேன்…” என்றான்.

“தினமும் அவரைப் பார்க்கிறாய், பேசுகிறாய். அவர் பெயர் தெரியாதா?” எனக் கேட்டதற்கு, “என்னமோ… கேட்கணும்னு தோணலை…” என்று சொன்னவன், உடனே போனில் லிஃப்ட் ஆபரேட்டரை உள்ளே வரச் சொல்லி அழைத்தான்.

அவரிடம் உங்க பெயர் என்னவென்று கேட்டபோது, அவர் மெல்லிய குரலில் “ஸ்டீபன் சார்!” என்றார்.

“சாரி ஸ்டீபன்! இத்தனை நாளா உங்கப் பேரைக்கூட தெரிஞ்சுக்கிடலை…” என நண்பன் சொன்னதும், “அதனாலே என்ன சார்? நான் லிஃப்ட் ஆபரேட்டர்தானே…” என்றார் அவர்.

அவரிடம் “இந்த ஆபீஸ்ல உள்ள எல்லோரது பெயரும் உங்களுக்குத் தெரியுமா?” எனக் கேட்டேன்.

“நல்லா தெரியும் சார். யாரு, எப்போ வருவாங்க? எப்போ போவாங்கனுகூட தெரியும். ஆபீஸுக்கு யாரு புதுசா வந்தாலும் பேரை கேட்டு குறிச்சி வெச்சிக்கிடுவேன். இதுக்கு லிஃப்ட்ல ஒரு நோட்டுகூட வெச்சிருக்கேன்…” என்றார்.

எல்லோரது பெயர்களையும் நினைவு வைத்துக்கொண்டிருப்பவரின் பெயரை, எவரும் நினைவு வைத்துக்கொள்வது இல்லை. இது தனிப்பட்ட ஒருவரின் பிரச்சினை இல்லை.

நம் வீட்டுக்கு பால் பாக்கெட் போடுகிறவர், பேப்பர் போடும் பையன், கீரை கொண்டுவரும் பாட்டி, சிலிண்டர் கொண்டுவருகிறவர், இஸ்திரி போடுகிறவர், தெருமுனையில் காய்கறி விற்பவர் என எவர் பெயரும் நமக்குத் தெரியாது. ஆனால் சினிமா, கிரிக்கெட், அரசியல் உலகில்

இயங்கும் அத்தனை பேர்களின் பெயர்களும் அவர்களின் தனிப்பட்ட குடும்ப விஷயங்கள் வரை தெரியும். ஒருவேளை தெரியாவிட்டால் யாரிடமாவது கேட்டோ, படித்தோ, தெரிந்துகொண்டுவிடுகிறோம்.

’எப்போதுமே எளியவர்களின் பெயர்கள்தான் புறக்கணிக்கப்படுகின்றன. அவர்களின் உதவி தேவை. ஆனால், அவர்களின் பெயரும் விவரமும் நமக்குத் தேவையற்றவை’ என்பது என்ன வகையான மனப்போக்கு?

இது, இன்று தொடங்கிய விஷயம் இல்லை. காலம் காலமாகவே வரலாற்றில் மன்னர் பெயர்கள் மட்டும்தானே இடம்பெற்றுவருகின்றன!

மன்னர்... தனி ஆளாக படை நடத்திச் சென்று, வெற்றி பெற்றாரா என்ன?

ஒருவரின் பெயரைத் தெரிந்துகொள்ளத் தொடங்கும்போதுதான் உறவு ஏற்படத் தொடங்குகிறது. பரஸ்பரம் பெயரைச் சொல்லி அழைக்கும்போது, நட்பு உருவாகவும் வளரவும் ஆரம்பிக்கிறது. நட்பு வளர்ந்த பிறகு பெயர்கள் முக்கியமற்றுப் போய்விடுகின்றன. நீண்ட உறவுகொண்டவர்களிடையே பெயர்கள் விலகி 'என்னங்க, என்னம்மா...' என்கிறச் சொல்லே போதுமானதாகிவிடுகிறது.

பள்ளி நாட்களில் சினிமா தியேட்டர் ஆபரேட்டர் பெயர்களைத் தெரிந்து வைத்துக்கொள்ள ஆர்வம் காட்டுவோம். காரணம், அவர் பெயரைச் சொன்னால் எளிதாக உள்ளே போய் டிக்கெட் வாங்கிவிடலாம். அது போலவே படம் ஏதாவது ஒரு ரீலில் கட் ஆனால் தியேட்டரே அவர் பெயர் சொல்லி அலறும். அடையாளமற்ற மனிதராக அவர் ஆபரேட்டர் அறைக்குள் இருந்தபோதும் அவரது பெயர் அரங்கில் ஒளிர்ந்துகொண்டுதான் இருந்தது.

இதுபோல ஒவ்வோர் ஊரிலும் சில மருத்துவர்களின் பெயர்கள் அடையாளமாக மாறிப் போயிருப்பதை நான் கண்டிருக்கிறேன். பேருந்து

நிறுத்தங்கள் கூட மருத்துவர்களின் பெயர்களில் இருக்கின்றன.

எப்போதுமே மருத்துவர்களின் பெயர்களை மக்கள் முழுமையாகவே சொல்கிறார்கள். ஒரு போதும் சுருக்கிச் சொல்வதில்லை. ஆனால்,

மருத்துவர்களின் பெயர்களை நினைவு வைத்திருப்பவர்கள் செவிலியர் பெயர்களை நினைவு வைத்துக்கொள்வது இல்லை. 'சிஸ்டர்' என்று

பொதுவாகவே அழைக்கிறார்கள்.

தன் பெயரை பிறர் அறிந்துகொள்ளவில்லையே என்ற ஆதங்கம்கூட எளிய மனிதர்களிடம் கிடையாது. படித்தவர்களைப் போல அவர்கள்

விசிட்டிங் கார்டு அடித்து வைத்துக்கொள்வது இல்லை. தன்னை அறிமுகம் செய்துகொள்ள வேண்டும் என்றுகூட அவர்கள் விரும்புவது இல்லை.

தன் வேலை மட்டுமே முக்கியமானது என நினைக்கிறார்கள்.

பெயர்கள் அறியாமல் வாழ்வது ஒருபுறம் என்றால், மறுபுறம் தனித் திறமைகளை வெளிப்படுத்திக் கொள்ளாமல், சொன்ன வேலையை மட்டுமே செய்துபோகிறவர்கள் மறுபுறம்.

மதுரை பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது விடுதி ஒன்றின் காவலராக இருந்தவர் முத்துசாமி. 'விடுதி நாள்' (ஹாஸ்டல் டே) அன்று, தான் ஒரு பாடல் பாடவா என்று கேட்டார். மாணவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அவரைப் பாடச் சொன்னோம். அவர் சிதம்பரம் ஜெயராமன் பாடிய 'தன்னைத் தானே நம்பாதது சந்தேகம்...' என்ற பாடலை தன்னை

மறந்து பாடியபோது, 'இத்தனை அற்புதமான குரல் கொண்டிருக்கிறாரே, ஏன் இதை வெளிக்காட்டிக்கொள்ளவே இல்லை இவர்!' என வியந்துபோனோம்.

எத்தனையோ திறமைகள் இருந்தபோதும் தாங்கள் செய்யும் வேலைக்காக தங்கள் திறமைகளை மறைத்துக்கொண்டு வாழ்பவர்களே அதிகம் இருக்கிறார்கள். இதில் பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டவர்கள். மணிப்பூரி நாட்டுப்புறக்கதை ஒன்று உள்ளது.

ஒரு காலத்தில் பேன்கள் வாயாடிகளாக இருந்தனவாம். சதா பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருக்குமாம். ஒருமுறை கடவுள் எல்லா உயிரினங்களையும் அழைத்து, அதன் திறமைகளுக்கு ஏற்ப பரிசு வழங்குவதாகக் கூறினார். மான், மயில், கிளி, யானை, குரங்கு என

ஒவ்வொன்றும் தனது திறமைகளைக் காட்டி பரிசுகளை வாங்கிச் சென்றன. அப்போதும் பேன்கள் தங்களுக்குள் அரட்டை அடித்துக்கொண்டு கடவுளின் அழைப்பைக் கண்டுகொள்ளாமல் இருந்தன.

எல்லாப் பரிசுகளையும் கொடுத்துமுடித்த கடவுள், "பேன்கள் ஏன் வரவில்லை?" எனக் கேட்டார்.

"அவை வெட்டி அரட்டை அடித்துக்கொண்டு தன் இடத்திலேயே தங்கிவிட்டன…" என்று விலங்குகள் பதில் தந்தன.

கோபமான கடவுள் "இனி பேன்களுக்கு வீடு இல்லாமலும் வாய் பேசமுடியாமலும் போகட்டும்" என சாபம் கொடுத்துவிட்டார். பேன்கள்

தங்களின் தவறை ஒப்புக்கொண்டு கடவுளிடம் மன்னிப்பு கேட்கவே, "வீடில்லாத நீங்கள் மனிதர்களின் தலையில் குடியிருங்கள். உங்களைக் கண்டுபிடித்தால் கொன்றுவிடுவார்கள். ஆகவே, இருக்குமிடம் தெரியாமல் வாழுங்கள்" என்று ஆணையிட்டாராம். அப்படிதான் மனிதர்கள் தலைக்கு பேன்கள் வந்து குடியேறின என்கிறது மணிப்பூரி நாட்டுப்புறக் கதை ஒன்று.

சாபத்தால் தன்னை மறைத்துக்கொண்டு வாழுகின்றன பேன்கள். ஆனால் ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களோ சமூகக் கொடுமையால் தங்கள் பெயர்களை, அடையாளங்களை மறைத்துக்கொண்டு வாழ வேண்டிய நிலையுள்ளது. நாய்களுக்குக் கூட பெயர்சூட்டி கொஞ்சும் நாம்தான், நமக்காக உழைக்கும் பலரது பெயர்களைப் புறக்கணிக்கிறோம்.

வரலாற்றின் உதடுகள் உச்சரிக்காத சில பெயர்களை உரத்துச் சொல்ல வேண்டிய காலம் இது. எளிய மனிதர்கள் நம்மிடம் கேட்பது அன்பையும் நேசத்தையும் மட்டும்தான். அதை சிலரோடு மட்டும்தான் வெளிப்படுத்துவேன் என்பது அநாகரீகம் இல்லையா?!

இணையவாசல்: மணிப்பூரி நாட்டுப்புறக் கதைகளை வாசிக்க
http://www.e-pao.net/epSubPageExtractor.asp?src=manipur.Folks.Folk_Tales

## பகுதி 55 - நிழலைப் புதைத்தவன்!

'கன்னத்தில் கை வைக்கக் கூடாது; அது கவலையின் அடையாளம்' என திட்டுவார்கள். இன்று கன்னத்தில் கை வைப்பது இயல்பாகிவிட்டது. பின்பு எப்படி கவலையை வெளிப்படுத்துகிறார்கள்? கவலைதான் கோபமாகிறது. கவலைதான் பொறாமையாகிறது. கவலைதான் இயலாமையாகிறது. கவலைதான் குரோதமாகிறது. கவலைகள் பல்வேறு விதங்களில் வெளிப்படுகின்றன. மனதில் ஒரு கவலை தீரும்போது, இன்னொரு கவலை உருவாகிவிடுகிறது.

கவலையே இல்லாமல் வாழ வேண்டும் என்றுதான் ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். ஆனால், கவலைகளின் கூடாரமாகவே பலர் இங்கு வாழ்கிறார்கள். தலைமுறையாக சில கவலைகள் கடத்தப்படுகின்றன. ஏன் கவலைகளை விலக்க முடிவதேயில்லை?

கவலைகள் ஏன் மனித முகத்தை இவ்வளவு வாட்டம் கொள்ளச் செய்கின்றன? கோயிலுக்குப் போகும் போது கவலை படிந்த முகங்களை நிறைய காண்கிறேன். அந்த முகமே அவர்களின் துயரத்தை சொல்லிவிடுகிறது.

ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு விதமான கவலை நம்மைப் பற்றிக் கொள்கிறது. நாளை விடுமுறையாக இருந்தால் நன்றாக இருக்குமே என்கிற கவலை சிறார்களுக்கு. கடனை எப்படி அடைப்பது? எப்போது வீடு வாங்குவது? எப்போது கார் வாங்குவது? திருமணம் எப்போது நடக்கும் என ஆளுக்கு ஒரு விதமான கவலை. தன் கவலைகளை யாரிடமாவது கொட்டிவிடவே பெரும்பான்மையினர் முயற்சிக்கிறார்கள். தேடிப் போய் கவலைகளை பரிமாறுகிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒருவர், தனது கவலையை மறக்க நிறைய சாப்பிடுவார். அதுவும் தேடித் தேடிப் போய் விதவிதமாக அசைவ உணவுகளை சாப்பிடுவார். எதற்காக சாப்பாட்டில் இவ்வளவு ஆர்வம் எனக் கேட்டால், "மனசு நிறைய கவலையிருக்கு சார்; அதை மறைக்கிறதுக்கு இப்படி எதையாவது செய்ய வேண்டியிருக்கு…" என்பார்.

இன்னொரு ' பெண் கவலையாக இருக்கிறது…' என்று சொல்லி சாப்பிடவே மாட்டார். வற்புறுத்தினால் ஒரு இட்லி அல்லது ஒரு டம்ளர் பால் இவ்வளவே அவரது ஒருநாள் உணவு. ஒருவர் அப்படி; மற்றவர் இப்படி. இருவரும் கவலையால் பீடிக்கப்பட்டவர்களே.

நம் கவலைக்கு சிலர் காரணமாக இருப்பதைப் போல, சிலரது கவலைக்கு நாம் காரணமாக இருக்கிறோம் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். கவலைகொள்வது அலாரத்தில் மணி அடிப்பதைப் போன்றது. நாம்தான் அந்த அலாரத்தை செட் செய்து வைத்திருக்கிறோம். அது அடிக்கும்போது சத்தமாக ஒலிக்க வேண்டும் என்று ரெடி செய்திருக்கிறோம். அலாரம் அடிக்கும்போது நமக்கு அது பிடிக்கவில்லை என்றால், தவறு யார் மீது? எந்த அலாரமும் தானே அடித்துக் கொள்வதில்லையே!

எப்போதுமே நம் மனம் கவலைப்பட்டு முன்பாகவே சில செய்திகளை நமக்கு சொல்லிவிடுகிறது. நாம்தான் அதைக் கேட்காமல் அலட்சியப்படுத்துகிறோம். வீண்

எதிர்ப்பார்ப்புகளை, பொய்யான நம்பிக்கைகளை ஏற்படுத்திக் கொள்கிறோம். அல்லது குருட்டு அதிர்ஷ்டத்தை எதிர்ப்பார்க்கிறோம். நாம் ஏமாற்றப்படும்போதோ, நாம் நினைத்தபடி நடக்காதபோதோ, விரும்பியது கிடைக்காதபோதோ நாம் கவலைப்படுகிறோம். அப்போது நாம், ' அப்பவே நினைச்சேன்' என நமக்குள் சொல்லிக் கொள்ளவே செய்கிறோம். அது மனம் சொன்னதை கேட்காமல் விட்டுவிட்டோம் என்பதன் அறிகுறியே.

சந்தோஷத்தை உண்டாக்கவும், பகிரவும் தெரியாமல் போவதே கவலை கொள்வதற்கான காரணம். உங்களுக்கு வாழ்க்கையில் கிடைத்த வாய்ப்பு சிறியதாக இருக்கலாம். ஆனால், அதில் நீங்கள் செய்யும் வேலை சிறியதாக இருக்கக் கூடாது. எவ்வளவு சிறப்பாக செயலை செய்து முடிக்க முடியுமோ, அவ்வளவு சிறப்பாகச் செய்யுங்கள். நிறைவான வேலை செய்துவிட்டவனுக்கு கவலைகள் தோன்றாது.

நமக்கு எது தேவை என்பதைப் போலவே, எது தேவை இல்லை என்பதும் மிக முக்கியமானது. கடவுளிடம் கேட்டது கிடைக்கவில்லையே என்று வருத்தப்படுகிறோம். ஆனால், ஒவ்வொரு பிரார்த்தனைக்கும் பலன்கள் மட்டுமே தீர்வு கிடையாது. சில தீர்வுகள் நாம் அறியாத வடிவத்தில் அறியாத விதத்தில், எந்த நேரத்தில் வந்து சேரக்கூடும் என்பதை உணர முயற்சியுங்கள்.

உண்மையில் நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஓர் எதிரி இருக்கிறான். அவன் நாம் விரும்பாததை நம்மைக் கொண்டே செய்ய வைக்கிறான். அவனைக் கண்டறிவதும், அவன் உருவாகும் விதம் பற்றி ஆராய்வதுமே கவலையை விரட்டுவதற்கான வழிகள்.

அரபுக் கதை ஒன்றிருக்கிறது. அதில் ஒரு மனிதன் தன் நிழல் ஏன் கூடவே வருகிறது? அதை எப்படியாவது விரட்டியடிக்க வேண்டும் என விரும்புகிறான். என்ன செய்தாலும் அவனால் தன் நிழலை விரட்டவே முடியவில்லை. நிழலை விரட்ட இருட்டுக்குள் போய்விடுவது ஒரு வழியாக அவனுக்குத் தெரிந்தது. ஆனால், அவனுக்கு இருட்டு என்றால் பயம். வெளிச்சத்திலும் வாழவேண்டும்; ஆனால் நிழலும் இருக்கக் கூடாது என நினைத்தான்.

அவனுக்கு திடீரென ஒரு யோசனை தோன்றியது. தன் நிழலை புதைத்துவிட்டால் என்னவென்று நினைத்து, ஓர் ஆளை அழைத்து குழி தோண்ட வைத்தான். மேட்டில் நின்று கொண்டு, தன் நிழல் குழியில் விழும்போது மண்ணை போட்டு மூடினான். பெரிய புதைமேடு உருவானது. ' நல்லவேளை நிழலைப் புதைத்துவிட்டேன்…' என சந்தோஷமாக நினைத்தபோது புதைமேட்டின் மீது அவனது நிழல் தெரிந்தது. பாவம் அவன் ஏமாந்து போனான் என கதை நிறைவு பெறுகிறது.

நிழலைப் புதைக்க முயன்ற மனிதனை போன்றதே கவலையை ஒழிக்க முயற்சிப்பதும். எதிர்பார்ப்புகள் யாவும் எளிதாக நிறைவேறுவதில்லை என்ற உண்மையைத்தான் கவலைகள் புலப்படுத்துகின்றன.

வறுமையும், நோயும், உடற்குறைபாடுகளும் ஏற்படுத்திய கவலைகளைத் தாண்டி எத்தனையோ மனிதர்கள் அரும்பெரும் சாதனைகள் செய்திருக்கிறார்கள். ஒருவரது சந்தோஷம் மற்றவருக்குத் தொற்றிக் கொள்வதில்லை. ஆனால், கவலைகள் உடனே தொற்றிக் கொண்டுவிடுகின்றன.

வயல் இருக்கும் வரை களைகள் முளைக்கவே செய்யும். களைகளைக் கண்டறிந்து பிடுங்கி எறிவதுதான் விவசாயி செய்யும் முதற்பணி. அற்ப கவலைகள் விஷயத்தில் அதுதான் நாம் செய்யவேண்டிய வேலையும் ஆகும்.

இணையவாசல்: அரபுக் கதைகளை வாசிக்க
http://al-hakawati.net/english/stories_tales/stories.asp

## பகுதி 56 - குறையும் நிறையும்!

பெரும் பணக்காரர்கள் யாரும் பெரிய அறிவாளியாக இல்லையே, பின்பு எப்படி அவர்களால் சம்பாதிக்க முடிந்தது? - என ஒரு வாசகர் மின்னஞ்சலில் கேட்டிருந்தார். காலந்தோறும் இந்த கேள்வி கேட்கப்பட்டே வருகிறது. எத்தனையோ பதில்கள் இதற்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எதுவும் திருப்திகரமாகவே இல்லை. '100 நாட்களில் பணக்காரன் ஆவது எப்படி?' என்ற புத்தகத்தை நூலகத்தில் எடுப்பதற்கு பெரும்போட்டி நிலவும். அதன் அத்தனை பக்கங்களிலும் அடிக்கோடு போட்டிருப்பார்கள். அதைப் படித்தவர்களில் ஒருவர்கூட பணக்காரர் ஆகியிருப்பார் என்று தோன்றவில்லை. பணம் எல்லோருக்கும்தான் தேவையாக இருக்கிறது. அதை அடைய ஆயிரம் வழிகளும் இருக்கின்றன. ஆனால், எல்லோரிடமும் பணம் சேர்வது இல்லை. சிலருக்கு பணம் கொட்டிக்கொண்டே இருக்கிறது. பலரோ, வாழ்நாளெல்லாம் பணத்தைத் துரத்திக்கொண்டே இருக்கிறார்கள். அவமானங்களும், வலிகளும்தான் அவர்களுக்கு மிச்சம்.

அறிவுத்திறன் கொண்டவர்கள் எல்லோரும் வாழ்வில் ஜெயித்துவிடுவது இல்லை. மாறாக, பெரிய திட்டம் ஒன்றை மனதில் உருவாக்கிக் கொண்டு, அதை நோக்கி மெல்ல செயல்பட்டு போராடி உழைப்பவர்களே வெல்கிறார்கள். உண்மையில் ஒருவர் எவ்வளவு அறிவுத்திறன் கொண்டிருக்கிறார் என்பது முக்கியமில்லை. அதை எப்படி பயன்படுத்துகிறார் என்பதே முக்கியம். எந்த எண்ணம் அறிவை வழிநடத்துகிறதோ, அதை நோக்கியே நாம் செல்கிறோம். நம் அறிவுத்திறனை எப்போதுமே குறைவாக எடைபோடுவதுடன் அடுத்தவர் அறிவுத்திறனை மிகையாக மதிப்பிடுகிறோம். குறைந்த அறிவுத்திறன் கொண்டவர் என்பதால் தோற்றுப்போகிறவர்கள் மிக மிக குறைவு. அவநம்பிக்கையும், பயமும், எதிர்மறை எண்ணங்களுமே தோல்விக்கு முக்கிய காரணங்கள்.

இதன் காரணமாகவே சிறார்களுக்கு சொல்லப்படும் கதைகள், எதிர்பாராத சூழலில் எப்படி நடந்துகொள்வது? பிரச்சினைகளை எப்படி சந்திப்பது? அதை மதியூகத்தின் வழியே எவ்வாறு வெல்வது என்பதை கற்றுத் தருகின்றன. 'ஏழு கடல், ஏழு மலை தாண்டி அரக்கன் உயிர் இருக்கிறது' என்று கதை சொல்வதற்கு காரணம், செய்து முடிக்க முடியாத சவாலை ஒருவன் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காகவே!

சிறார் கதைகளில் வரும் நாயகர்கள் பெரிய ஆயுதங்கள் எதையும் கைக்கொள்வதில்லை. அரக்கனை முறியடிக்க நண்பர்களைத் துணை சேர்க்கிறார்கள். எறும்பு முதல் யானை வரை பேதமின்றி நண்பர்களாக ஒன்றுசேர்ந்து உதவுகிறார்கள், முடிவில், எதிரியை தேடிச் சென்று வீழ்த்துகிறார்கள். இதுதான் கதை கற்றுத் தரும் பாடம்.

வெற்றிக்கு முதல் தேவை நம்பிக்கை. இரண்டாவது தேவை நட்பு வட்டம். மூன்றாவது அச்சமின்றி நடந்துகொள்வது. இதை வலியுறுத்தவே கதைகளில் இளவரசன் காட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகிறான். வெல்லமுடியாத அரக்கனைக் கொல்ல நல்ல நண்பர்களைத் துணைக்குக் கொள்கிறான். எதிரியின் இடத்துக்கே தேடிச் சென்று அவனை வீழ்த்துகிறான். சிறார்களுக்கு சொல்லப்படும் பெரும்பான்மை கதைகள் வெற்றியோடுதான் நிறைவு பெறுகின்றன. அது, எப்போதும் நன்மையே வெற்றியடையும் என்ற எண்ணத்தை சிறார் மனதில் ஆழமாக விதைத்துவிடுகிறது.

எந்தக் கதையிலும் கதாநாயகன் உடனடியாக ஜெயித்துவிடுவதில்லை. அவன் பல்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்கொள்கிறான். அவற்றில் சிக்கிக்கொண்டு சிரமங்களை அனுபவிக்கிறான். முடிவில்தான் வெற்றிபெறுகிறான். இது ஓர் அனுபவ பாடம். அசாத்தியமான திறமைகள், மிகையான அறிவுத்திறன் எதுவும் வெற்றியாளனுக்குத் தேவையில்லை. அவன் சந்தர்ப்பத்துக்கு ஏற்றார்போல அறிவைப் பயன்படுத்தினால் போதும் என்றே கதைகள் கூறுகின்றன.

தேவதை கதையில் அரக்கனைக் கொல்ல செல்லும் கதாநாயகன் வழியில் பலருக்கும் உதவிகள் செய்கிறான். அவன் செய்த நன்மைகளே அவனது சவாலுக்கான விடையை அறிய உதவுகின்றன. நானே பிரச்சினையில் இருக்கிறேன் என ஒதுங்கிப் போகக் கூடாது. அதைத் தாண்டி அடுத்தவருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதைத்தானே இது சுட்டிக்காட்டுகிறது. வாழ்வில் மனிதர்கள் கடைபிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்களை, அறத்தை கதைகள் நமக்கு போதிக்கின்றன. அது, தேன் கலந்து மாத்திரைகளை சாப்பிடத் தருவதை போன்ற வழி.

மாலத்தீவு பழங்குடியினரிடம் ஒரு கதை காணப்படுகிறது. மீன்களுக்கு ஏன் செவுள் கிழிந்துபோய் காணப்படுகிறது என்பதற்கு சொல்லப்படும் கதை அது. கடலில் நண்டு, ஆமை, கடல்குதிரை, ஆக்டோபஸ் என ஒவ்வோர் உயிரினத்துக்கும் கடவுள் ஒரு வேலையைக் கொடுத்திருந்தார்.

கடலை சுத்தப்படுத்த வேண்டிய வேலை மீன்களுடையது. மற்ற மீன்கள் ஓடியோடி குப்பைகளை அகற்றிக்கொண்டே இருக்கும்போது குகை மீன்கள் மட்டும் தங்களுக்குள் அரட்டை அடித்துக்கொண்டு இருந்தன. தினமும் இதை பார்த்துக்கொண்டே இருந்த மீன்கள், கடவுள் நம்மை மட்டும் ஏன் வேலை செய்ய வைக்கிறார்? வேலை செய்யாத இந்தக் குகை மீனை தண்டிக்கவில்லையே என நினைத்து குமுறினார்கள். முடிவில் ஒருநாள் நாங்களும் வேலை செய்ய மாட்டோம் என கடலை சுத்தம் செய்யாமல் விளையாடத் தொடங்கினார்கள். இதனால் கடல் முழுவதும் குப்பை சேர்ந்து துர்நாற்றம் பரவத் தொடங்கியது. விஷயம் அறிந்த கடவுள், மீன்களை அழைத்து ஏன் வேலை செய்யவில்லை எனக் கோபித்துக்கொண்டார்

மீன்களைத் தவறாக வழிநடத்தியது குகை மீன்களின் செயல் என்ற உண்மை வெளிப்பட்டது. இதனால் ஆத்திரமான கடவுள், ‘குகை மீன்களுக்கு இனி கண்கள் கிடையாது. இரை தேடக்கூட சிரமப்படட்டும்’ என அதன் கண்களைப் பறித்துவிட்டாராம். அதுபோலவே, அடுத்தவரைப் பார்த்து தவறாக நடந்துகொண்ட மீன்களுக்கு தண்டனையாக, தனது கத்தியால் மீனின் வாயைக் கிழித்துவிட்டார். அன்று முதலே மீன்கள் கிழிந்த செவுளோடு வாழ்கின்றன என முடிகிறது அந்த மீன் கதை.

தான் வேலை செய்யாதது மட்டுமின்றி, வேலை செய்கிற மற்றவரைக் கெடுப்பதும் சிலரது இயல்பு. அதற்கு நாம் பலியாகிவிடக்கூடாது என்பதை இக்கதை வலியுறுத்துகிறது.

அரசு சம்பளம் வாங்கிக் கொண்டு, தன் வேலையைக் கண்டுகொள்ளாமல், வெளிவேலைகள் செய்து சம்பாதிக்கும் பலரை எனக்குத் தெரியும். சிலர் வெறுமனே கையெழுத்து போட்டுவிட்டு தங்களுக்குப் பிடித்தமான விஷயங்களை செய்ய வெளியே கிளம்பிவிடுகிறார்கள். சம்பளம் தர ஒருவர் வேண்டும். ஆனால், வேலை செய்யமாட்டேன் என்பது என்னவிதமான மனநிலை? தனியார் நிறுவனங்களில் இப்படி செய்ய முடியுமா? அரசு அலுவலகங்களில் கறாரான கண்காணிப்பு முறைகள் இல்லாத காரணத்தால் வேலை கெடுகிறது என்பதே உண்மை.

இன்று பெருநகரங்களில் ஆணும் பெண்ணும் இணையாக சம்பாதிக்கிறார்கள், ஆனால், இணையான சுதந்திரம் இல்லை. பணத்தின் மதிப்பு தெரியாத தலைமுறை உருவாகிவிட்டது. லட்சம், கோடி என்பதெல்லாம் இவர்களுக்கு வெறும் எண்களே. பணம் இல்லாதவன் சந்திக்கும் பிரச்சினைகளைவிட பணம் உள்ளவன் சந்திக்கும் பிரச்சினைகள் அதிகம். ஆனால், உலகின் கண்களுக்கு அது தெரியாது. உறவுகளையும் நட்பையும் பணம் எளிதாகப் பிரித்துவிடுகிறது. இந்த உலகில் மிக பயங்கரமான ஆயுதம் காகிதத்தில் செய்யப்பட்ட பணமே. அதை எளிதாகக் கையாளுகிறோம் என்பதாலேயே அதன் முழு வலிமையையும் நாம் உணரவே இல்லை.

## பகுதி 57 - கண்களைத் திருப்புங்கள்!

மதுரையில் உள்ள உணவகம் ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். பக்கத்து மேஜையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் திடீரென குரலை உயர்த்தி, சத்தம் போடத் தொடங்கினார்.

"என்ன பிரச்சினை?" என மேலாளர் வந்து கேட்கவே, "அந்த ஆள் ரொம்ப நேரமா நான் சாப்பிடுறதைப் பாத்துட்டே இருக்கான். என் இலையில் என்ன இருக்கோ, அதையே வாங்கித் திங்குறான். அடுத்த ஆள் பாத்துகிட்டே இருந்தா எப்படி சாப்பிடுறது" என ஒரு ஆளைச் சுட்டிக்காட்டி கத்தினார்.

"சார் இது வீடு இல்லை. ஹோட்டல். நாலு பேரு பாக்கத்தான் செய்வாங்க. நீங்க சாப்பிடுங்க…" என மேலாளர் சமாதானம் சொன்னபோதும் அவர் அடங்கவில்லை.

"அடுத்தவன் என்ன சாப்பிடுறான்னு பாக்கறதுக்கு அலையுறாங்க சார். அது ஒரு வியாதி, இவங்களை எல்லாம் திருத்தவே முடியாது" என்றார்.

இவ்வளவு சண்டைக்கும் காரணமாக இருந்தவர் அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சத்தம் போட்டவருக்கு வேறு இடம் கொடுத்து வேறு இலை போடச்சொல்லி, புதிதாக அசைவ வகைகளைக் கொண்டுவந்து தரச் சொன்னார் மேலாளர்.

சத்தம் போட்டவர் உள்ளே எழுந்து போன பிறகு, அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவரிடம் மேலாளர் , "அடுத்தவர் சாப்பிடுறதை எதுக்கு முறைச்சுப் பாக்கறீங்க... தப்பில்லையா?" எனக் கேட்டார்.

"அந்த ஆள் எட்டு கோலா உருண்டை சாப்பிட்டான் சார். பிரியாணி, கோழி, கறி, மீனு, ஆம்லேட்.. எவ்வளவு திங்குறான்! அதான்.. ஆச்சரியமா பாத்துட்டு இருந்தேன்.." என வெளிப்படையாகக் கூறினார்.

பக்கத்து மேஜைகளில் இருந்தவர்கள் அதைக் கேட்டு சிரித்தார்கள். மேலாளரும் சிரித்துவிட்டார்.

ஒவ்வொருவரும் எவ்வளவு சாப்பிடுகிறார்கள் என்பது அவரவர் உடல்வாகையும், உழைப்பின் தேவையையும் பொருத்தது. சில நேரம் சிலர் ருசிக்காக அதிகம் சாப்பிடுவதும் உண்டு. ஆனால், அதை மற்றவர் கண்காணிப்பது என்ன பழக்கம்?

அந்த மனிதர் கோபித்துக்கொண்டது போல, அடுத்தவர் சாப்பிடுவதை வெறித்துப் பார்த்தது ஒரு நோய்தானா? ஹோட்டல்களில் என்றில்லை; ரயிலில், டீக்கடையில், திருமண விருந்தில் இப்படியான ஆட்களை நான் பார்த்திருக்கிறேன்.

அவர்களுக்கு தனது சாப்பாட்டைவிடவும் அடுத்தவர்கள் என்ன சாப்பிடுகிறார்கள் என்று பார்ப்பதில்தான் கூடுதல் கவனம் இருக்கும். சில நேரம் அவர் என்ன ஆர்டர் செய்கிறாரோ, அதையே இவர்களும் ஆர்டர் செய்வார்கள். ஹோட்டலில் என்ன சாப்பிடுவது என்றுகூடவா சுயமாக முடிவு எடுக்க முடியாது!

ரயில் பயணங்களில் அடுத்தவர் பார்த்துவிடக்கூடாது என்று திரும்பி உட்கார்ந்து சாப்பிடுகிறவர்களையும் கண்டிருக்கிறேன். வட இந்திய ரயில்களில் இந்தப் பழக்கத்தைக் காண முடியாது. ரொட்டியோ, சப்பாத்தியோ எதுவாக இருந்தாலும் நமக்கும் ஒரு துண்டு கொடுத்துதான் சாப்பிடுவார்கள்.

பசிக்குத்தான் உணவு என்றாலும், அது எப்படி? யாரால்? எவ்வளவு? தரப்பட வேண்டும் என்பதில் ஆளுக்கு ஆள் ஒரு கொள்கை வைத்திருக்கிறார்கள். பருமனாக உள்ளவர்கள் அதிகம் சாப்பிடுவார்கள் என்பதும், ஒல்லியாக இருப்பவர்கள் குறைவாகச் சாப்பிடுவார்கள் என்பதும் வெறும் பொய். சிலர் சாப்பிடுவதற்காகவே பிறந்திருக்கிறார்கள். சிலர் பசித்த வேளையில் மட்டுமே சாப்பிடுகிறார்கள். சிலரோ சாப்பாட்டைக் கண்டுகொள்வதே இல்லை.

பஞ்சாப் மாநிலத்தில் ஒரு கதை இருக்கிறது. பூதம் ஒன்று மலையில் உள்ள குகையில் வசித்து வந்தது. என்ன கிடைத்தாலும், எவ்வளவு கொடுத்தாலும் சாப்பிட்டுத் தீர்த்துவிடும். அந்த பூதம் தங்களை சாப்பிட்டுவிடக் கூடாது என பயந்து மக்கள் அதற்கு வண்டி வண்டியாகச் சாப்பாடு கொண்டுபோய் கொடுத்தார்கள்.

அந்த ஊரில் ஒரு விறகுவெட்டி இருந்தான். அவனுக்கு ஏழு பிள்ளைகள். அவனது வருமானத்தில் அந்தப் பிள்ளைகளுக்குப் போதுமான உணவு தர முடியவில்லை. ஒருநாள்

அந்தப் பிள்ளைகள் பூதத்துக்குச் சாப்பாடு கொண்டுபோகிற வண்டியைத் துரத்திக்கொண்டு அதன் குகைக்குப் போனார்கள்.

பூதம் அவர்களைப் பார்த்து, “இங்கே எதற்காக வந்தீர்கள்?” என்று கோபமாகக் கேட்டது.

“பசிக்கிறது. நீ சாப்பிட்டது போக மிச்சம் இருந்தால் எங்களுக்குக் கொடு..” என்று கேட்டார்கள்.

பூதம் கண்களை உருட்டியபடியே, “மிச்சமா.. அப்படி ஒரு விஷயமே என்னிடம் கிடையாது” என, கொண்டுவந்த மொத்த ரொட்டிகளையும் சாப்பிட்டு முடித்தது. பசியோடு ஏமாந்துபோய் ஏழு பிள்ளைகளும் வீடு திரும்பினார்கள்.

அடுத்த நாளும் இதுபோல அந்தப் பிள்ளைகள், பூதம் சாப்பிடும்போது மிச்சம் கிடைக்குமா என்று பார்க்கப் போனார்கள். பூதம் அவர்களைக் கண்டுகொள்ளவே இல்லை.

நான்காம் நாள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, பூதம் அந்தப் பிள்ளைகளை ஏறிட்டுப் பார்த்தது. பூதம் சாப்பிடுவதை அவர்கள் நாக்கில் எச்சில் ஒழுக வெறித்துப் பார்த்த படியே இருந்தார்கள். அதைப் பார்த்தபிறகு பூதத்தால் சாப்பிட முடியவில்லை. தொண்டையை எதுவோ அடைப்பது போல இருந்தது.

அன்று பூதம் ஒரு துண்டு ரொட்டியை மிச்சம் வைத்தது. அதை ஏழு பிள்ளைகளும் ஆசை ஆசையாகச் சாப்பிட்டார்கள். அடுத்த நாள் அந்த பூதம் சாப்பிட உட்கார்ந்தபோது அந்தக் குழந்தைகள் வெறித்துப் பார்க்கவே, அது கோபம்கொண்டு அவர்களை விரட்டி அடித்தது.

அவர்கள் குகை வாசலில் நின்றபடியே பூதம் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு துண்டு ரொட்டியைப் பிய்த்து வாயில் திணித்த பூதம், அப்படியே சாப்பாட்டை நிறுத்திவிட்டு அவர்களை வெறித்துப் பார்த்தது. ‘பாவம் இந்தக் குழந்தைகள். எலும்பும் தோலுமான உடல். எண்ணெய் இல்லாத தலை. கண்ணில் ஆசை. இவர்களைப் பார்க்கவைத்து எப்படிப் சாப்பிடுவது?’ என்று குழம்பியது.

பின்பு பூதம் ரொட்டிகளை அப்படியே வைத்துவிட்டு, அந்தப் பிள்ளைகளை அழைத்து சாப்பிடச் சொன்னது. அவர்கள் பசிதீர சாப்பிட்டார்கள். மறுநாளில் இருந்து அந்த பூதம், “இனி எனக்கு யாரும் சாப்பாடு கொண்டுவர வேண்டாம். பசியில் வாடும் குழந்தைகளுக்கு அந்த உணவைக் கொடுங்கள்…” என்று ஊர்மக்களிடம் சொல்லிவிட்டு, அந்த குகையைவிட்டுப் போய்விட்டது. குழந்தைகளைப் பார்க்கவைத்துக்கொண்டு, கொடூரமான பூதம்கூட சாப்பிட முடியாது என அந்த பஞ்சாபிக் கதை கூறுகிறது. ஆனால், இந்த நவீன வாழ்க்கையில் பூதத்தை விடவும் கொடூரமான மனது கொண்டவர்கள் அதிகம் உலவுகிறார்கள். அவர்கள் தனக்கு போக மீதமான உணவைக்கூட யாருக்கும் தரமாட்டார்கள். ரயிலில், பேருந்தில், பொதுவெளியில் குழந்தைகளுக்கு ஒரு பிஸ்கட்கூட தரமாட்டார்கள்.

அடுத்தவர் வீட்டு உணவுக்கு தனி ருசி இருக்கிறது. அதைக் குழந்தைகள் அறிவார்கள். ஆனால், எப்படிக் கேட்டு வாங்கிச் சாப்பிடுவது என்ற கூச்சம் அவர்களைத் தடுத்துவிடும். நாமாக கொடுத்தால், அவர்கள் சந்தோஷமாகச் சாப்பிடுவார்கள். சாப்பிட்டு முடித்தபிறகு ரகசியமான குரலில் ‘நான் சாப்பிட்டதை எங்க வீட்ல சொல்லிராதீங்க…’ என எச்சரிக்கை தருவார்கள்.

சந்தோஷத்தில் பெரிய சந்தோஷம் இப்படி சிறுவர்களைச் சாப்பிடவைத்துப் பார்ப்பதுதான். இன்று பலருக்கும் அதுகூட புரியவில்லை என்பதுதான் வருத்தமாக இருக்கிறது.

## பகுதி 58 - எதிர்காலம் எப்படியிருக்கும்?

க்ஸ்பியரின் 'மேக்பெத்' நாடகத்தில் ஒரு காட்சி. போரில் வெற்றிபெற்றுவரும் மேக்பெத்தை சூனியக்காரிகள் எதிர்கொண்டு வாழ்த்துகிறார்கள். அதில், ஒரு சூனியக்காரி மேக்பெத்தைப் பார்த்து "வருங்கால மன்னனே வருக!" என வாழ்த்துகிறாள். போர்புரிவது மட்டுமே தனது கடமை என்றிருந்த மேக்பெத்தின் மனதில் இந்தப் புகழுரை 'தான் எப்படி மன்னராக முடியும்?' என்ற குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

அப்போது அவனது நண்பன் பாங்கோ சூனியக்காரிகளைப் பார்த்து "காலத்தின் விதிகளை ஊடுருவிப் பார்த்து, உங்களால் வருவதை உரைக்க முடியும் என்றால் உண்மையைக் கூறுங்கள். எந்த விதை முளைக்கும்? எந்த விதை கருகும் என்று தெளிவாகச் சொல்லுங்கள்..." என்று கேட்கிறான்.

சூனியக்காரிகள் பதில் சொல்லாமல் புகைபோல காற்றில் மறைந்துவிடுகிறார்கள்.

1606-ல் நிகழ்த்தப்பட்ட ஷேக்ஸ்பியரின் இந்த நாடகம் இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் இன்றைக்கும் பொருத்தமானதாகவே இருக்கிறது. எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதைத் தெரிந்துகொள்ள மனித மனம் எப்போதுமே ஆசைப்படுகிறது. அதற்காகத்தான் சாமியார்களைத் தேடி சிலர் போகிறார்கள். ஆருடம் கேட்கிறார்கள். மாய மந்திர வழிகளைக் கையாள்கிறார்கள். யாரோ, ஏதோ சக்தியால் சொல்லும் ஆருடங்களை நிஜம் என நம்புகிறார்கள். சாவு எப்படி வரும் என அறிந்துகொண்டவனால் நிம்ம தியாக வாழ முடியுமா? அது போலவே எதிர்காலம் எப்படி இருக்கும் என அறிந்துகொண்டுவிட்டால் நிகழ்காலம் நரகமாகிவிடும்.

எதிர்காலத்தைக் கண்டு நம் ஏன் பயப்படுகிறோம்? தனது தவறுகளுக்காக தண்டிக்கப்படுவோம் என்ற குற்ற மனப்பாங்கு பலருடைய மனதிலும் ஒளிந்திருக்கிறது. துணிந்து ஏமாற்று வேலைகளை, மோசடிகளைச் செய்யும் ஒருவன், 'ஒருவேளை இதற்காகத்தான் எதிர்காலத்தில் தண்டிக்கப்படக்கூடுமோ?' எனப் பயப்படுகிறான்.
'சாமானிய மனிதர்கள் தனது கஷ்டங்கள் தீர்ந்து போய் விடாதா?' என அறிந்து கொள்வதற்காகவே எதிர்காலம் பற்றிக் கவலைப்படுகிறார்கள். ஆனால் வசதி படைத்தவர்களும், அரசியல்வாதிகளும் அதிகாரமும், செல்வச் செழுமையும் தனக்கு கிட்டுமா என அறிந்துகொள்ளவே எதிர்காலத்தைப் பற்றி தெரிந்துகொள்ளத் துடிக்கிறார்கள்.

நகை வணிகம் செய்யும் ஒரு நண்பர் தனது கடையில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார். 'புதிய ஜிஎஸ்டி வரிவிதிப்பின் காரணமாக, தங்க நகைகளின் விலை இனிமேல் குறைய வாய்ப்பு இல்லை' என வாடிக்கையாளர் பெண்மணியிடம் சொன்னாராம். உடனே அந்தப் பெண்மணியின் முகம் வாடிப்போக, "நிஜமாகவே நீங்கள் சொன்னதுபோல விலை

குறையாமலே போகட்டுமே, ஆனால் விலை குறையும் என்று ஒரு பொய்யாவது சொல்லுங்களேன். அந்த நம்பிக்கை என்னை ஆறுதல் படுத்தும். நிதர்சனமாக உண்மையைச் சொல்லாதீர்கள். அதை தாங்கிக் கொள்ள முடியவில்லை" என்றாராம்.

இதுதான் பொதுமக்களின் மனநிலை. அவர்கள் சில உண்மைகளை ஏற்றுக்கொள்ள தயாராகவே இல்லை. 'பொய்யாக ஒரு நம்பிக்கையைக் கொடுங்கள்' என்றுதான் கேட்கிறார்கள். எதிர்காலம் பற்றிய பல ஆருடங்கள் இதுபோன்ற பொய் நம்பிக்கையைத்தான் தருகின்றன.

தனது வாழ்வில் மேன்மைகள் வந்துவிடும் என யார் சொன்னாலும் மனிதர்கள் நம்பத் தொடங்கிவிடுகிறார்கள். எப்படி உருவாகும்? அதற்காக தான் எவ்வளவு உழைக்க வேண்டும் என எதைப் பற்றியும் கவலைப் படுவதில்லை. மரத்தில் இருந்து பழம் தானே விழுந்துவிடுவதைப் போல, ஏதாவது நடந்து தனது வாழ்க்கை உயர்ந்துவிடும் என நினைக்கத் தொடங்கிவிடுகிறார்கள். அப்படி நடக்காதபோது எதிர்காலக் கணிப்பு தவறானது என நினைப்பதில்லை. இந்தமுறை கணிப்பு தவறிவிட்டது என்று மட்டுமே முடிவு செய்கிறார்கள்.

திபெத் கதை ஒன்று எதிர்காலத்தை அறிந்த மனிதனின் துயரைப் பற்றி பேசுகிறது. ஆறு குழந்தைகளுடன் வறுமையில் வாடிக் கொண்டிருந்த ஒரு விவசாயி இருந்தான். அவனால் குடும்பத்தின் கஷ்டங்களைத் தீர்க்க முடியவில்லை. தனது எதிர்காலம் எப்படியிருக்கும் என அறிந்துகொள்ள மந்திரவாதிகள். ஆருடம் சொல்பவர்கள் எனப் பலரையும் தேடிச் சென்றான். எவரது கணிப்பும் பலிக்கவில்லை.

ஒருநாள் இரவு அவன் வீட்டுக்கு ஒரு துறவி வந்து கதவை தட்டினார். குளிரில் நடந்து வந்த களைப்பு, கடும்பசி. ஏதாவது உணவு கிடைக்குமா எனக் கேட்டார். அவன் தன்னிடம் சமைத்த உணவு எதுவுமில்லை. ஆனால் ஆட்டுபால் தரமுடியும் எனச் சொல்லி கொஞ்சம் பாலை கொண்டுவந்து கொடுத்தான். அதை குடித்துவிட்டு அவர் நன்றியுணர்ச்சியோடு வீட்டில் தங்கிக் கொண்டார்.

இரவில் அந்த விவசாயிக்கும் அவன் மனைவிக்கும் இடையில் சண்டை வந்தது. "குடும்பத்தின் நிலைமை இப்படியே இருந்தால் மாறவே மாறாது. பிழைப்புத் தேடி வேறு ஊர் போகத்தான் வேண்டும்!" என மனைவி அந்த விவசாயியைத் திட்டிக் கொண்டிருந்தாள். விவசாயி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தச் சண்டை இரவெல்லாம் நீடித்தது.

விடிகாலையில் துறவி அந்த விவசாயியை அழைத்துச் சொன்னார். "உன் பிரச்சினையை அறிந்துகொண்டேன். இந்த மந்திரப் பொடியைத் தண்ணீரில் போடு. அது உன் எதிர்காலத்தை காட்டும். ஆனால், நீ அறிந்துகொண்ட உனது எதிர்காலத்தைப் பற்றி எவரிடமாவது வாய்திறந்து சொன்னால், மறு நிமிடமே நீ இறந்துவிடுவாய்.." என்றார்.

விவசாயி அதை ஏற்றுக்கொண்டு அந்த மந்திரப் பொடியைக் கொண்டு போய் தண்ணீரில் போட்டான். மறு நிமிடம் எதிர்கால காட்சிகள் கண்முன்னே அவனுக்குத் தெரிய ஆரம்பித்தன. திருவிழாவுக்குச் சென்ற அவன் மனைவி, வழியில் பாம்பு கடித்து செத்துப்போகிறாள். மூத்தமகன் ஒருவனோடு சண்டையிட்டு சிறைக்குப் போகிறான். மகள் பிரவசத்தில் இறந்து போகிறாள். கடனை அடைக்க முடியாததால் அவர்களுடைய சொந்த நிலம் பறிபோகிறது.

பிச்சைக்காரனைப் போல தாடி, மீசை வளர்ந்து அந்த விவசாயி தெருவில் யாசகம் கேட்கிறான்.

தனது எதிர்கால நிலைமையைப் பார்த்தமாத்திரத்தில் அந்த விவசாயியின் உடம்பு நடுங்கிப் போய்விடுகிறது. 'இதுதானா நம் என் எதிர்கால வாழ்க்கை? என் மனைவியை நான் எப்படி காப்பாற்றுவேன்? மகனை எப்படி தடுப்பேன்? நிலத்தை எப்படி பாதுகாப்பேன்...' எனப் புரியாமல் புலம்பினான். தான் கண்ட எதிர்காலத்தைப் பற்றி மனைவியிடம் சொல்ல முடியவில்லை. 'எதிர்காலத்தைப் பற்றி ஏன் நாம் தெரிந்துகொண்டோமோ?' என நினைத்து நினைத்து அழுதான். அவன் மனைவிக்கு எதுவும் புரியவில்லை.

நடக்கப் போவதைத் தன்னால் தடுக்க முடியாதபோது, எதற்காக அதை அறிந்து கொண்டோம் எனப் புலம்பினான். அழுதான். அவனால் சாப்பிடவும் உறங்கவும் முடியவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு அதே துறவி அவர்கள்

வீட்டுக்கு வந்தார். அவரிடம் தனது துயரை சொல்லிப் புலம்பினான்.

அவர் சொன்னார்: "நீ கண்டது உண்மையில்லை. வெறும் பொய்தோற்றம். உண்மையாக என்ன நடக்கும் என யாராலும் சொல்ல முடியாது. எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டும் என்றால் நிகழ்காலத்தில் உன்னால் முடிந்த நல்லதை பிறருக்குச் செய். நல்லதை நினை. நல்லவனாக நடந்துகொள். இந்த மூன்றையும் செய்தால் எதிர்காலம் நிச்சயம் சிறப்பாகவே இருக்கும். அதன் பிறகு அந்த விவசாயி எதிர்காலத்தைப் பற்றி கவலையேபடவில்லை என அந்தக் கதை முடிகிறது.

துறவி சொன்ன விதிகள் திபெத்திய விவசாயிக்கு மட்டுமில்லை; நம் எல்லோருக்கும் பொருந்தக்கூடியதே. நீங்கள் பிறரை நேசிப்பவராக, நன்மைகள் செய்பவராக, அன்பு செலுத்துபவராக இருந்தால் நிச்சயம் உங்கள் எதிர்காலம் நல்லதாகவே அமையும். நிகழ்காலத்தின் விதைகள்தானே எதிர்காலத்தின் விருட்சங்களாக மாறுகின்றன!

## பகுதி 59 - காதலின் துயரம்!

ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் இழந்த காதலை நினைத்தபடியே மனதுக்குள் வருந்திக்கொள்வது இயல்பே. சிலர் நிறைவேறாத தனது முதற்காதலை நினைத்து ஏங்கிக் கொண்டேதான் இருக்கிறார்கள். திரும்ப ஒருமுறை அந்தப் பெண்ணை அல்லது அந்த ஆணை சந்தித்துவிட முடியாதா என ஏக்கம் கொண்டிருக்கிறார்கள். விழித்த பின்பு கனவுக்குள் திரும்பப் போவது எளிதா என்ன?!

ஒருவேளை, சந்தர்ப்பவசமாக சந்தித்தால்கூட அது சந்தோஷமான நிகழ்வாக இருப்பது இல்லை. நிரப்பவே முடியாத இடைவெளி அல்லவா அது! காதல் விசித்திரமானது. யாரை, எப்போது தீண்டும் என, எவராலுமே கணிக்க முடியாது. இலக்கியத்தில் காதலின் துயரமே

அதிகம் எழுதப்பட்டுள்ளது. திரையில், பாடல்களில், நினைவுகளில் காதலின் வேதனையே திரும்பத் திரும்பப் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

தோற்றுப்போன காதலின் குறியீடு - தேவதாஸ். நாகேஸ்வர ராவ் நடிப்பில் அற்புதமாக உருவாக்கப்பட்ட 'தேவதாஸ்' மறக்க முடியாத திரைப்படம். அப்படத்தில் எனக்கு மிகவும் பிடித்த காட்சி, மரணத்தின் முன்பாக பார்வதியை ஒருமுறை காண விரும்பி, ரயிலைவிட்டு இறங்கி வரும் தேவதாஸின் கடைசி நிமிடங்கள்தான்.

பார்வதியைக் காண விரும்பும் தேவதாஸ், ரயிலைவிட்டு அவசரமாக இறங்கி, மழையோடு அவளது ஊரைத்தேடி மாட்டுவண்டியில் செல்கிறான். வண்டி சகதியில் மாட்டிக்கொள்கிறது. மழையில் நனைகிறான். உடல் தடுமாடுகிறது. மூச்சு முட்டுகிறது. தட்டுத் தடுமாறி பார்வதியின் வீட்டின் முன்புறம் உள்ள மரத்தின் அடியில் வண்டிக்காரனால் படுக்க வைக்கப்படுகிறான்.

தேவதாஸின் எதிரே சாத்தப்பட்ட கதவுக்குப் பின்னால் பார்வதி இருக்கிறாள். அவன் கதவைத் தட்டவில்லை. அவளைப் பெயர் சொல்லி அழைக்கவில்லை. மரணத்தருவாயில் மவுனமாக அவளது வீட்டை வெறித்துப் பார்த்துக் கண்ணீர் விடுகிறான். மனசுக்குள் அவளது நினைவு ஒளிர்கிறது. பார்வதியைச் சந்திக்காமலே தேவதாஸ் இறந்தும்விடுகிறான். காதலின் மீளாத் துயரம் பார்வையாளர்களின் மனதை உருக்கிவிடுகிறது.

சரத் சந்திரர் எழுதிய 'தேவதாஸ் நாவல்' 1917-ல் வெளியானது. இதைப்போலவே காதலின் துயரைப் பேசிய சிறுநாவல்களாக மூன்றைச் சொல்வேன். ஒன்று, வைக்கம் முகமது பஷீரின் 'பால்யகால சகி'. 2-வது, கவிஞர் கதேயின் 'இளம் வெர்தரின் துயரங்கள்', 3-வது பியோதர் தஸ்தாயெவ்ஸ்கியின் 'வெண்ணிற இரவுகள்'. இந்த மூன்றும் நிறைவேறாத காதலின் துயரத்தைச் சொல்கின்றன. இன்று காதலை வெறும் உடல் கவர்ச்சியாக, விளையாட்டாக, பொழுதுபோக்காகக் கருதும் இளம் தலைமுறை உருவாகிவிட்டது. காவியக் காதல்கள் எல்லாம் கேலிப் பொருளாக மாறிவிட்டன. உண்மையில் காதல் வெறும் பொழுதுபோக்கு இல்லை. ஏமாற்று நாடகமும் இல்லை. தன் வாழ்க்கையின் சுக துக்கங்களைப் பகிர்ந்துகொள்ளும் துணையைக் கண்டறிவதே காதல். படகும் துடுப்பும் ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பது போன்றதே காதல்!

இன்று, காதல் அரசியலாகிவிட்டது. இளம் காதலர்கள் பண்பாட்டின் பெயரால், சாதிய, மத துவேஷத்தால் அடித்துக் கொல்லப்படுகிறார்கள். பொதுவெளியில் காதலர்களைத் தடியால் அடித்துத் துன்புறுத்தும் வெறியர்கள் பெருகிவிட்டார்கள்.

சமீபத்தில் இணையத்தில் அப்படி ஒரு வீடியோவை கண்டேன். ஓர் இளம்பெண் காதலிக்கிறாள் என்பதற்காக தெருவில் நிறுத்திவைத்து, கட்டையால் மாறி மாறி அடிக்கிறார்கள். அவள் துடிக்கிறாள். அலறுகிறாள். அடிப்பவர்களை சிலர் வேடிக்கை பார்க்கிறார்கள்.

ஒருவரும் உதவி செய்யவில்லை. அந்தப் பெண்ணை அடித்து, சித்ரவதை செய்பவர்கள் அவளது குடும்பத்து மனிதர்கள் இல்லை. கலாச்சாரக் காவலர்களாகத் தன்னைக் கருதிக் கொள்ளும் பொறுக்கிகள்தான் அவர்கள். அந்தப் பெண்ணுடைய குரல் இந்தியாவின்

மனசாட்சியை நோக்கிய கூக்குரலாகவே இருக்கிறது. இதுதானா பெண்மையைப் போற்றும் லட்சணம்?

இழந்த காதலின் வலியை மனிதர்கள் மட்டும் உணர்வதில்லை; பொருட்களும்கூட உணர்கின்றன எனக் கூறுகிறது ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சனின் கதை.

ஒரு வீட்டின் இழுப்பறைக்குள் ஒரு பந்தும், பம்பரமும் ஒன்றாக இருந்தன. அழகான பந்தின் மீது பம்பரம் காதல் கொண்டது. அது ஆசையோடு பந்திடம் சென்று, "நாம் இருவரும் திருமணம் செய்துகொள்வோமா?" எனக் கேட்டது.

அதற்கு பந்து "நீ ஒன்றும் அவ்வளவு அழகாக இல்லை. உன் உருவம் கேலிக்குரியதாக இருக்கிறது!" என்றது.

இதனால் பம்பரம் கவலைகொண்டது. சில நாட்களுக்குப் பிறகு அந்தப் பம்பரத்தை வெளியே எடுத்த சிறுவன், அதற்கு அழகான வண்ணம் தீட்டிச் சுழலவிட்டான். புதிதாக உருமாறிய பம்பரம் ஆசையோடு மீண்டும் பந்திடம் சென்று, "நீ துள்ளக்கூடியவள். நான் நடனமாடக்கூடியவன். நமக்குள் நல்ல பொருத்தம் இருக்கிறது. இப்போது சொல், நாம் திருமணம் செய்துகொள்ளலாமா?" என்று கேட்டது.

இதைக் கேட்ட பந்து சொன்னது: "உண்மையில் நான் ஒரு குருவியை விரும்புகிறேன். ஒருநாள் சிறுவன் என்னை ஆகாசத்தில் வீசியபோது ஒரு குருவியைக் கண்டேன். அது ஆசையோடு 'என்னை கட்டிக்கொள்கிறாயா?' எனக் கேட்டது. எனக்கும் பறக்க வேண்டும் என்ற ஆசை இருந்த காரணத்தால் அதற்கு ஒப்புக்கொண்டேன். ஆகவே, உன்னை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றது.

இதைக் கேட்ட பம்பரம் மனவருத்தம் அடைந்தது. சில நாட்களுக்குப் பிறகு ஒருநாள் அந்தச் சிறுவன் பந்தை எடுத்து எறிந்து எறிந்து விளையாடிக்கொண்டிருந்தான். ஒருமுறை எறிந்தபோது வானில் உயரப் போன பந்து எங்கோ விழுந்து காணாமல் போய்விட்டது.

'அந்தப் பந்து நிச்சயம் குருவியின் கூட்டுக்குள்தான் போய் விழுந்திருக்கும். நிச்சயம் அந்தக் குருவியை பந்து திருமணம் செய்துகொண்டிருக்கும்' என நினைத்தது பம்பரம். அன்று முதல் இழந்த தன் காதலை நினைத்து நினைத்து வருந்திக்கொண்டே இருந்தது பம்பரம். காலம் மாறியது. பம்பரம் பயன்படுத்தி தூக்கி வீசி எறியப்பட்டது. ஒரு குப்பைத் தொட்டியில் கிடந்த பம்பரம், அங்கே அழுக்கேறி கிழிந்த நிலையில் உள்ள பந்து ஒன்றை கண்டது. அது, தான் காதலித்த அதே பந்துதான் என்பதைக் கண்டுகொண்டது.

பம்பரத்துக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை கிடைத்திருக்கும் என நம்பிய பந்து, இப்படி குப்பையில் கிடக்கிறதே என வருத்தம் கொண்டது.

அப்போது பம்பரத்திடம் பந்து சொன்னது: "வானில் இருந்து சாக்கடையில் தவறி விழுந்து, சிக்கி சின்னாபின்னமாகி என் வாழ்க்கை திசை மாறிவிட்டது. சாக்கடை நீரில் நனைந்து ஊறிப்போய், என் உருவமே மாறிவிட்டது. இப்போது என்னை யாருக்கும் பிடிக்கவில்லை. ஆசைப்பட்டதை நான் அடையவில்லை. இவ்வளவுதான் என் வாழ்க்கை!" என்றது.

அதைக் கேட்டு பம்பரம் வருந்தியது. தான் விரும்பிய பந்துதான் என்றாலும் குப்பையில் கிடந்து அழுக்கேறி அழிந்துகொண்டிருக்கும் அதை என்ன செய்வது எனப் புரியவில்லை. பம்பரம் தன் பழைய காதலைப் பற்றி பேசவே இல்லை என கதை முடிகிறது.

பம்பரமும் பந்தும் காதலிக்கிற கதைகூட துயரத்தில்தான் முடிகிறது. வாழ்க்கை எல்லோரது கனவுகளையும் நனவாக்கிவிடுவதில்லை. எத்தனையோ பேர் நிறைவேறாத காதலை நினைத்து வருந்திக் கொண்டிருக்கிறார்கள். சிலரோ, ஆசை ஆசையாகக் காதலித்து திருமணம் செய்துகொண்டு இப்போது அதன் அருமை உணராமல் மோசமாக நடந்துகொள்கிறார்கள்.

'இட் இஸ் எ வொண்டர்ஃபுல் லைஃப்' என்ற ஹாலிவுட் படம் இணையத்தில் கிடைக்கிறது. 1946-ல் வெளியான இந்தப் படம் நாம் பிறந்ததற்கு என்ன காரணம் இருக்கிறது என்பதை கண்டறிய முயற்சிக்கும் ஒருவனது கதையை விவரிக்கிறது. வாழ்வின் மகத்துவத்தைச் சொல்லும் உன்னதமான திரைப்படம் அது.

வாழ்வின் உண்மைகளைதான் கதைகளும் பேசுகின்றன. கதைகளில் படித்து, காதலைக் கொண்டாடும் பலர் நிஜவாழ்வில் அதை ஏற்றுக்கொள்ளத் தயங்குவது கண்டிக்க வேண்டியதே!

இணையவாசல்: ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சனின் கதைகளை வாசிக்க
http://hca.gilead.org.il/

## பகுதி 60 - உனக்குள்ளிருக்கும் புத்தன்!

வாழ்க்கையில் நிகழும் மாற்றங்களை எதிர்கொள்ள இயலாதவர்கள் ஒருபோதும் மேன்மை அடைவது இல்லை. 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பார் காரல் மார்க்ஸ். மாற்றங்கள் நாம் விரும்பியபடி ஏற்படுபவை அல்ல. அதற்காக நாம் எப்போதும் பாதுகாப்பு வளையம் ஒன்றுக்குள்ளாகவே வசிக்க முடியாது இல்லையா?

மாற்றங்களை எதிர்கொள்ள துணிவற்றவர்கள் முடங்கிவிடுகிறார்கள். மாற்றங்களைத் தேடிப் போகிறவர்கள், மாற்றங்களைக் கண்டு அஞ்சாதவர்கள், மாற்றங்களுக்கு ஏற்ப தன் திறமைகளை வளர்த்துக் கொள்கிறவர்கள் மட்டுமே வாழ்வில் வெற்றிபெறுகிறார்கள்.

### எதைக் கைவிடுவது?

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் துயரங்களும் துரதிர்ஷ்டங்களும் வந்து போகவே செய்கின்றன. ஆனாலும், நம்பிக்கையே வாழ்க்கையை முன்னெடுத்துப் போகிறது. வெறும் நம்பிக்கை மட்டும் வாழ்க்கை இல்லை. மாற்றங்களைப் புரிந்துகொண்டு எதை கைவிடுவது?

எதை தக்க வைத்துக் கொள்வது? எப்படி மாற்றிக் கொள்வது என்பதை, முடிவு செய்ய வேண்டியது பகுத்தறிவு கொண்ட மனிதனின் கடமை!

உலகில் எதுவும் மாறவே கூடாது என நினைத்தால், வாழ்க்கை நம் கையைவிட்டுப் போய்விடும். ஆகவே, மாற்றங்களைக் கண்டு பயங்கொள்ள வேண்டாம். நாம் எவ்வளவு சீக்கிரம் மாற்றங்களைப் புரிந்துகொள்ளக் கற்றுக் கொள்கிறோமோ, அந்த அளவுக்கு நமக்கு நன்மை பயக்கும்.

மாற்றங்களை எப்போதும் பண்பாடு எளிதாக ஏற்றுக் கொள்வதே இல்லை. பலத்த எதிர்ப்பு உருவாகும். பிரச்சினைகள் கிளம்பும். ஆனால், காலமும் சூழலும் இணைந்து பின்பு மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வைக்கும் என்பதே உண்மை. நட்பிலும், வேலையிலும், திருமண வாழ்விலும், சமூக உறவுகளிலும் தேவையான மாற்றங்களை அனுமதிக்க மறுத்தால் நம் வாழ்க்கை நரகம் ஆகிவிடும்.

100 வருஷங்களுக்கு முன்பு, காதல் திருமணம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விஷயம். ஒரு ஊரில் அபூர்வமாக ஒன்றிரண்டு பேர் மட்டுமே காதல் திருமணம் செய்திருப்பார்கள். ஆனால், இன்று காதல் திருமணத்தை பண்பாடு ஏற்றுக் கொண்டுவிட்டது. பாதிக்கும் மேலான திருமணங்கள் காதல் திருமணங்களே. இந்த மாற்றம் ஒரு நாளில் ஏற்பட்டது இல்லை.

**தனக்குள் ஓர் உலகம்**

சிலர் பிறந்தது முதல் கடைசி வரை தனது சொந்த ஊரைவிட்டு போகவே மாட்டார்கள். சொந்தம் தவிர வேறு யாருடனும் பழக மாட்டார்கள். உள்ளூரைத் தவிர வேறு இடங்களில் வணிகம் செய்ய மாட்டார்கள். இப்படி உலகில் எந்த மாற்றம் வந்தாலும் அவர்கள் தங்கள் உலகுக்குள் மட்டுமே வாழ்வார்கள். அவர்களைப் பொறுத்தவரை உலகம் என்பது வெறும் சொல் மட்டுமே. 'கல்லில் அடித்து வைத்துவிட்டதைப் போல வாழ்கிறார்கள்' என்று கிராமத்தில் கேலி செய்வார்கள்.

உண்மையில் கற்கள் கூட மாற விரும்புகின்றன. 'எத்தனை நாட்கள் இப்படியே தெருவோரத்திலேயே கிடப்பது. சலிப்பாக இல்லையா?' என கற்கள் முணுமுணுப்பதாக ஜென் கதை ஒன்று சொல்கிறது.

ஜப்பானின் புகழ்பெற்ற ஜென் கதைகள் தத்துவ சார்பு கொண்டவை. ஜென் துறவிகள் ஞானத்தை எளிய மனிதனும் புரிந்துகொள்ளும் வகையில் குட்டிக் கதைகளாக சொன்னார்கள். அப்படி ஒரு ஜென் கதையில் இரண்டு பாறைகளின் வாழ்க்கை எப்படி மாறியது எனக் காட்டப்படுகிறது.

**உளி வலி**

ஒரு மலையின் அடிவாரத்தில் இரண்டு பெரிய பாறைகள் இருந்தன. அவை, பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் நகராமல் இருந்தன. ஆகவே, வெயிலும் மழையும் அதன் நிறத்தை

மாற்றியிருந்தன. ‘எத்தனை காலம் மாற்றமே இல்லாமல் இப்படியே கிடப்பது’ என, ஒரு பாறைக்கு ரொம்பவும் சலிப்பாக இருந்தது.

“என்றைக்காவது நாம் இங்கிருந்து நகர்வோமா?” என்று மிகவும் ஏக்கத்தோடு கேட்டது முதற்பாறை. அதற்கு இரண்டாவது பாறை சொன்னது: “எங்கே போனாலும் இதே வாழ்க்கை தானே. எதற்காக போக வேண்டும்? இப்படியே இருக்கலாம்!”

ஒரு நாள் பவுத்த ஆலயம் ஒன்றை கட்டுவதற்காக கற்களைத் தேடிக் கொண்டு சிலர் வந்தார்கள். இரண்டு பெரிய பாறைகளையும் பார்த்து உற்சாகமாக சொன்னார்கள்: “இந்த பாறைகளைக் கொண்டுபோய் சிற்பங்கள் செய்யலாம்!”

சிற்பி இரண்டு பாறைகளையும் பரிசோதனை செய்துவிட்டு சொன்னார்: இதைக் கொண்டு அழகான புத்தனின் சிலையை செய்துவிடலாம். நாளைக்கே வண்டியில் ஏற்றிக்கொண்டு போய்விடலாம்.

சிற்பிகள் திரும்பிச் சென்ற பிறகு முதல் பாறை சொன்னது: ‘ ‘ஆஹா! நாம் நினைத்தது போல மாற்றம் வரப் போகிறது. நாம நகரத்துக்குப் போகப் போகிறோம்.”

இரண்டாவது பாறை கோபமாக திட்டியது: “அட முட்டாளே! அவர்களை நம்மை அடித்து உடைத்து செதுக்கி, சிலையாக மாற்றப் போகிறார்கள். உளி கொண்டு செதுக்கினால் எவ்வளவு வலி ஏற்படும் தெரியுமா?”

அதைக்கேட்ட முதற்பாறை சொன்னது:

“ஆனால், நாம் புத்தனாகிவிட்டால் நம்மை வணங்குவார்களே! இன்று வரை நம்மை யாரும் கண்டுகொள்ளவே இல்லையே. ஒன்றைப் பெறவேண்டுமானால் கஷ்டத்தை, வலியைப் பொறுத்துத்தானே ஆக வேண்டும்!”

அதைக் கேட்ட இரண்டாவது பாறை, ‘ ‘என்னால் முடியாது. இங்கே சுகமாக இருப்பதைவிட்டு, எதற்கு கஷ்டப்பட வேண்டும்? நாளை அவர்கள் வரும்போது என்னை தூக்க முடியாதபடியே இறுகிப்போய்விடுவேன். எனக்கு இந்த இடமே போதும். இந்த வாழ்க்கையே போதும்!” என்று சொன்னது.

“உன்னை என்னால் திருத்த முடியாது. சந்தர்ப்பம் வரும்போது மாறிக் கொள்ளத் தவறினால், நீ விரும்பும்போது சந்தர்ப்பம் உன்னை தேடி வராது” என்றது முதற்பாறை.

இரண்டாவது பாறை பிடிவாதமாக அங்கிருந்து மாற விரும்பவில்லை என்றது. மறுநாள் சிற்பிகள் வண்டியோடு வந்தார்கள். முதல் பாறையைக் கட்டித் தூக்கி வண்டியில் வைத்தார்கள். இரண்டாவது பாறையை அசைக்க பார்த்தார்கள். முடியவே இல்லை.
“சரி, கிடைத்து ஒரு பாறை! போதும்” என அவர்கள் திரும்பிச் சென்றார்கள்

ஆறு மாத காலம் அந்தப் பாறையை உடைத்து, செதுக்கி, புத்தரின் உருவத்தை அழகுற செதுக்கினார்கள். அந்த நாட்களில் பாறை கண்ணீர்விட்டது. இரண்டாவது பாறை சொன்னதே

சரி என புலம்பியது. ஆனால், ஆறு மாதங்களுக்குப் பிறகு தான் ஒரு புத்தனின் உருவமாக மாறியதைக் கண்டபோது, அந்தப் பாறையால் நம்பவே முடியவில்லை. 'நமக்குள் ஒரு புத்தன் மறைந்திருந்தானா?' என வியந்துபோனது.

சிற்பி தனது சீடர்களிடம்: "இனிமேல் இந்தச் சிற்பம் இருக்கவேண்டிய இடம் பரிசுத்த ஆலயம்தான்!" என்று சொல்ல, அடுத்த வாரமே அந்தப் புத்தனின் சிற்பம் ஆலயத்தில் வைக்கப்பட்டது. வழிபாடு நடத்தப்பட்டது. அன்று முதல் அந்தச் சிலையை ஒவ்வொரு நாளும் பலரும் வழிபடத் தொடங்கினார்கள்.

**புதைபடும் கல்**

மாறவே கூடாது என நினைத்த பாறை, அதே இடத்தில் அடையாளம் மாறிப்போய் எதற்கும் உதவாத ஒன்றாகக் கிடந்தது. பின்பு, சாலை போடுவதற்காக அதை துண்டு துண்டாக உடைத்துக் கொண்டு போனார்கள். அப்போது அந்தப் பாறை கதறியபடியே சொன்னது:' 'நானும் புத்தனாக மாறவேண்டியவன்தான். ஆனால், எனது பிடிவாதத்தால் மாற மறுத்தேன். இப்போது சிதறுண்டு சாலையில் புதைபடப் போகிறேன். '

இந்தக் கதை நாம் மாற்றத்தை எதிர்கொள்ளவும்; உட்படவும் வேண்டும் என்பதை அழகாக விளக்குகிறது.

நம்மில் சிலரும் இரண்டாவது பாறையைப் போலவே பிடிவாதமாக, இருக்கும் நிலையே போதும் என நினைக்கிறார்கள். உலகம் அவர்களை ஒருபோதும் உயர்த்திவிடாது என்பதே நிஜம். கஷ்டங்களும் வலியும் சேர்ந்துதான் பாறையைப் புத்தனாக்கியது. நமக்குள்ளும் ஒரு புத்தன் இருக்கிறான்தானே! அவனை செதுக்கி வெளிக்கொண்டு வர நாம் தயாராக வேண்டுமில்லையா..?

## பகுதி 61 - மூடிய கைகள்!

பூங்காவில் இரண்டு பள்ளிச் சிறுவர்கள் பேசிக்கொண்டு இருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். உயரமான பையன் சொன்னான் "எட்டாம் வகுப்பு சார், எப்போ பாரு மூஞ்சிய உர்ருன்னு வெச்சிட்டுருக்காரு. அவரு சிரிச்சு நான் பார்த்ததே கிடையாது. கிளாஸ் ஒர்க் நோட்டுல கையெழுத்து வாங்கப் போனா, கொரில்லாக் கிட்டே போற மாதிரி பயமா இருக்குடா. வீட்லயும் இப்படிதான் இருப்பாராடா?" '

"ஆமான்டா! அவரு பொறக்கும்போதே சிடுமூஞ்சியாதான் பொறந்தாராம்" என்றான் மற்ற மாணவன். பேசிக்கொண்டே அவர்கள் சத்தமாக சிரித்தும் கொண்டார்கள். ஏதோவொரு பள்ளியில், எங்கோ ஓர் ஆசிரியர் இப்படி இருப்பதை கேலி செய்து பேசிக் கொள்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம். பெரும்பான்மையான பள்ளிகளில் ஆசிரியர்கள் பலரும் இப்படி சிடுமூஞ்சியாகத்தான் இருக்கிறார்கள்.

இதுகுறித்து ஆசிரியர்களிடம் கேட்டால், “நாங்கள் மட்டுமா இப்படி இருக்கிறோம்? எத்தனை அரசு அலுவலர்கள், அதிகாரிகள், மருத்துவர்கள், வங்கி மேலாளர்கள், வாகன ஓட்டிகள், பேருந்து நடத்துநர்கள் இப்படி சிடுசிடுவென இருக்கிறார்கள். வேலை நெருக்கடி எங்களை இப்படியாக்கிவிட்டது. சிரித்துப் பேசி, நட்புடன் இருந்தால் வேலை நடக்காது சார்” என்கிறார்கள்.

கண்டிப்புடன் நடந்துகொள்வது வேறு. கொரில்லாவாக இருப்பது வேறு.

பேருந்தில்,கோயில்களில், ஷாப்பிங் மால்களில் எதிர்படும் முகங்களில் பெரும்பான்மை கசக்கி எறியப்பட்ட காகிதம் போலத்தான் இருக்கிறது. கையெடுத்து வணங்கும்படியான முகத்தை காண்பதே அரிது. ஏதேதோ யோசனைகள், குழப்பங்கள், சிந்தனைகள், கவலை, கோபம், ஆத்திரம் பீறிடும் முகங்களே நம்மை கடந்து செல்கின்றன.

வெட்டவெளியில், கொளுத்தும் வெய்யிலில் ஆடு மேய்க்கும் சிறுமியின் முகத்தில் இப்படியான கோபம் இருப்பது இல்லை. நாள் முழுவதும் இரும்பு அடிக்கும் தொழிலாளி முகத்திலோ, கடலோடி வரும் மீனவர் முகத்திலோ இப்படியான வெறுப்பும், கசப்பும் பீறிடுவது இல்லை. சாலையோரத்தில் வசிப்பவர்கள் ஏழ்மையில் இருந்தபோதும் முகத்தில் பொலிவுடன் இருக்கிறார்கள். படித்த, மத்திய தர மனிதர்களின் முகம்தான் உருமாறிப்போயிருக்கிறது.

**தோற்றம் பாதிக்கும்**

சந்தோஷமான, மலர்ச்சியான முகங்கள் ஏன் மறைந்துபோயின? ஒரு நாளின் தொடக்கம் என்பது பிரச்சினைகளின் ஆரம்பமாகவே இங்கே பலருக்கும் இருக்கிறது. வேலைக்கு, பள்ளிக்கு, கல்லூரிக்கு உரிய நேரத்தில் போய்ச் சேரவேண்டிய பரபரப்பு. சாப்பாட்டில் கவனம் இல்லை. பதற்றம். உடலை பேணாமல் விட்டதால் உருவான நோய்கள். கடன் பிரச்சினை… இப்படி ஆயிரம் சிக்கல்களுக்குள் சுழன்றபடியேதான் நாளைக் கடந்து போகிறார்கள். இந்த நெருக்கடி அவர்களின் முகத்திலும் பிரதிபலிக்கிறது.

ஆசிரியர்களின் தோற்றம் என்பது மாணவர்கள் மனதில் ஆழமாக பதிந்துவிடக்கூடியது. அவர்களின் நடை, உடை, பாவனை மாணவர்களைப் பாதிக்கக் கூடியது. அதை உணர்ந்துகொண்டு செயல்படுகிறவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள்.

**காந்தியின் புன்னகை**

மகாத்மா காந்தியின் புகைப்படங்களைப் பாருங்கள். எத்தனை அழகான புன்னகையுடன் அவரது முகம் ஒளிர்கிறது. ஒரு கருப்பு - வெள்ளை படத்தில் அவரும் நேருவும் அருகருகில் அமர்ந்துகொண்டு, தன்னை மறந்து சிரித்துக் கொண்டிருப்பார்கள். மறக்கவே முடியாத புகைப்படம் அது. அந்த நாட்களில் தேசம் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தது. கண் முன்னே ஆயிரம் பிரச்சினைகள். சிக்கல்கள். போராட்டத்தைத் தலைமையேற்க வேண்டிய சூழல். ஆனாலும், காந்தியின் முகத்தில் இருந்து புன்னகை மறையவே இல்லை.
இறுக்கமான, கோபமான முகத்துடன் இருப்பவர்களை எப்படி திருத்துவது என்பதற்கு ஒரு கதை இருக்கிறது. தைவானில் சொல்லப்படும் கதை இது.

முன்னொரு காலத்தில் தைவானில் ஒரு வணிகன் வசித்து வந்தான். அவனது மனைவி மிகவும் கோபக்காரி. வீட்டில் உள்ளவர்களை எப்போதும் திட்டிக்கொண்டே இருப்பாள். வீட்டுக்கு விருந்தினர்கள் யார் வந்தாலும் கோபித்துக் கொண்டு சண்டையிடுவாள். அவள் சிரித்து ஒருவரும் பார்த்ததே இல்லை. எப்போதும் சிடுசிடுவென்ற முகத்துடன்தான் இருப்பாள். அவளை சாந்தப்படுத்த அவளது கணவனும், பிள்ளைகளும் எவ்வளவோ முயற்சித்தார்கள். ஆனால், எதுவுமே பலிக்கவில்லை. ஆகவே, அவர்கள் வீட்டுக்கு உறவினர்கள், நண்பர்கள் எவரும் வருவதற்கு பயந்தார்கள்.

இதனால் வணிகன் மனமுடைந்து போனான். அவர்களின் ஊருக்கு ஒரு நாள் ஒரு துறவி வருகை புரிந்தார். பலரும் துறவியிடம் நல்லாசி பெறப் போனார்கள். வணிகனும் சென்றான். அவன் தன் மனைவியைப் பற்றி எடுத்துச் சொல்லி, “இவளை உங்களால் திருத்த முடியுமா?” எனக் கேட்டான்.

“இது ஒன்றும் பெரிய விஷயமே இல்லை. நாளை உன் வீட்டுக்கு சாப்பிட வருகிறேன். உணவு தயார் செய்” என்று சொன்னார் துறவி.

சாப்பிட வந்த துறவியை மனைவி அவமானப்படுத்திவிடுவாளோ என வணிகனுக்கு உள்ளுக்குள் பயம். ஆனாலும், மனைவியிடம் “உன்னதமான சக்திகள் கொண்ட துறவி ஒருவர் வந்திருக்கிறார். அவருக்கு உணவு படைத்தால், நீ விரும்பியதைத் தருவார்” என்று நைசாகப் பேசி, சம்மதம் பெற்று விருந்துக்கு ஏற்பாடு செய்ய வைத்தான்

மறுநாள் துறவி அவனது வீட்டுக்கு வந்தார். சிடுசிடுத்த முகத்துடன் வணிகனின் மனைவி அவரை முறைத்தபடியே சாப்பிட அழைத்தாள்.

துறவி தனது வலது கையை மூடியபடியே சாப்பிட அமர்ந்தார்.

“கையை மூடிக்கொண்டு எப்படி சாப்பிடுவீர்கள்?” எனக் கேட்டாள் .

“நீண்ட நாட்களாகவே நான் இந்தக் கையை இறுக்கமாக மூடிக்கொண்டுதான் இருக்கிறேன். அதுவே என் இயல்பாகிவிட்டது. கையை மூடியபடியேதான் சாப்பிடுவேன், வேலைகள் செய்வேன்!” என்றார்.

“இது என்ன முட்டாள்தனமான செயல். கையை மூடிக்கொண் டால் எப்படி உணவை எடுத்து சாப்பிட முடியும்? வேலைகள் செய்ய முடியும்? கைகள் எப்போதும் திறந்து இருப்பதுதானே கையினுடைய இயல்பு” என, துறவியிடம் கோபமாக கேட்டாள் வணிகனின் மனைவி.

“உண்மைதான்! கை மட்டுமில்லை. முகமும் திறந்துதான் இருக்க வேண்டும். மூடிய கைகளைப் போல இறுக்கமான, கோபமான முகத்தை வைத்துக் கொண்டு நீ சிடுசிடுப்பாக இருப்பது தவறு இல்லையா?

திறந்த கைகளால் ஒன்றை எடுக்கவும், கொடுக்கவும் முடிவது போல, சிரித்த முகத்தால் அன்பை கொடுக்கவும் பெறவும் முடியும். உன் முகம் என்பது உனக்கு மட்டுமே சொந்தமானது இல்லை. அது உலகுக்கு உன்னைக் காட்டும் கண்ணாடி. உனது முகத்தை கொண்டுதான்

உலகம் உன்னை அறிந்துகொள்கிறது. மூடிய கைகளைக் கொண்டவனால் எப்படி உணவை சாப்பிட முடியாதோ? அப்படித்தான் சிடுமூஞ்சிகளால் அன்பை தரவே முடியாது!” என்றார் துறவி.

அந்தப் பெண்ணுக்கு தன்னுடைய தவறு புரிந்தது. அன்று முதல் அவள் தனது சிடுசிடுப்பை மாற்றிக் கொண்டாள். புன்னகை ததும்பும் முகத்துடன் இனிமையாகப் பேசவும் பழகவும் தொடங்கினாள் என்று முடிகிறது அந்தக் கதை.

**முதல் புள்ளி**

எவ்வளவு பெரிய விஷயத்தை கதை எளிதாக உணர்த்திவிடுகிறது. நம் கைகள் தானே மூடிக்கொள்வது இல்லை. நாம்தான் அதை இறுக்கமாக மூடிக்கொண்டு, பிறருக்கு எதையும் தரக் கூடாது என நினைக்கிறோம். அப்படித்தான் பிறரை வெறுக்கவும், ஒதுக்கவும், துரத்தவும் கோபமான முகத்தைக் கொள்கிறோம்.

மலர்ந்த முகம் என்பது தெளிந்த மனதின் அடையாளம்! கண்ணாடியாக இருந்தாலும் அதை துடைத்து சுத்தம் செய்து கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் முகம் தெரியாமல் போய்விடும். நம் முகமும் அப்படிப்பட்டதுதான். உடலில் சேரும் அழுக்கைப் போக்கிக் கொள்ள தெரிந்த நமக்கு, மனதில் சேரும் கசடுகளை நீக்க ஏன் தெரிவதில்லை?

உங்கள் முகம் உங்களைப் பற்றிய செய்தியை உலகுக்குச் சொல்கிறது என்பதை நீங்கள் முழுமையாக உணருங்கள். தொடங்க வேண்டிய மாற்றத்தின் முதல் புள்ளியாக உங்கள் புன்னகை இருக்கட்டும்!

## பகுதி 62 - வாளும் வித்தையும்!

ஆசைப்பட்டவற்றை நிஜத்தில் அடைவது எளிதானதில்லை. பலரும் அவற்றை கற்பனையிலே அடைந்துகொள்கிறார்கள். அதுவே போதும் என்றுகூட நினைக்கிறார்கள். கற்பனைக்கும் நிஜத்துக்குமான இடைவெளியைக் கடந்து வருவது எளிதில்லை.

ஆசைப்பட்டவற்றை அடைந்தால் எப்படியிருக்கும் என கற்பனை செய்வது தேவையானதுதான். ஆனால், எந்த முயற்சியும் அற்று பழம் தானே கைக்கு வந்து சேர்ந்துவிடும் என கனவு கண்டுகொண்டிருப்பது தவறானது.

இன்றைய விஞ்ஞானச் சாதனைகள் யாவும் நேற்றைய கற்பனைகளே. ஆனால், அந்தக் கற்பனைகளுக்கு உயிர் கொடுப்பதற்கு விஞ்ஞானிகள், தொழில்நுட்ப அறிஞர்கள் பெரும் சவால்களைச் சந்தித்திருக்கிறார்கள். தோல்வியும், அவமானமும், புறக்கணிப்பும் அவர்களைத் துவளச் செய்திருக்கின்றன. ஆனால், விடாமுயற்சியுடன் செயல்பட்டு நினைத்தவற்றை சாதித்து காட்டியிருக்கிறார்கள்.

**எதிர்மறை கற்பனை**

பழைய திரைப்படம் ஒன்றில் நாகேஷ் எதையும் எதிர்மறையாக கற்பனை செய்து பார்க்கிற கதாபாத்திரமாக நடித்திருப்பார். கல்யாண வீட்டுக்குப் போகும்போது அழுவார். காரணம் கேட்டால், விளக்கு தட்டி விழுந்து பந்தல் தீப்பற்றி எரிந்துவிட்டால் என்ன செய்வது எனக் கேட்பார். அவரது கற்பனை முழுவதும் எதிர்மறையாகவே இருக்கும். திரைப்படத்தில் அது நகைச்சுவையாக சித்தரிக்கப்பட்டாலும், அவரைப் போல நிறையப் பேர் எதிர்மறையான எண்ணங்களைக் கொண்டு, தன்னுடைய வாழ்க்கையையும் உடன் இருப்பவர்களின் வாழ்க்கையையும் நரகமாக்கிக் கொள்கிறார்கள்.

எங்கேயோ, எப்போதோ, யாரோ சொன்ன கெட்டவிஷயங்கள் யாவும் மனதில் தங்கிவிடுகின்றன. நல்ல விஷயங்கள் உடனடியாக மறந்து போய்விடுகின்றன. திறமை இருந்தும் சிலர் வெற்றிபெறாமல் போவதற்குக் காரணம் அவர்களிடம் இருந்த எதிர்மறை எண்ணங்களே.

**பயத்துடன் பயணம்**

கெய்ரோவில் ஒரு வணிகன் இருந்தான். அவன் ஒவ்வொரு நாளும் இரவு கடையை மூடிவிட்டு, வீட்டுக்குத் திரும்பி போகும்போது போகிற வழியில் இருந்த உயரமான கட்டிடம் ஒன்றை நிமிர்ந்து பார்ப்பான். கட்டிட உச்சியில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கி உடைந்து விழுந்துவிடப்போகிறது என்கிற பயம் அவனுக்கிருந்தது. ஆகவே, பயத்துடன்தான் எப்போது அதைக் கடந்து போவான்.

உறுதியான இடிதாங்கி என்பதால் அது அசைவற்றிருந்தது. ஒருநாள் நிச்சயம் அது இடிந்துவிழுந்துவிடும் என்றே அந்த வணிகன் நம்பினான். ஒரு மழைக்கால இரவில் அவன் வீடு திரும்பும்போதும் அந்த இடிதாங்கியை ஏறிட்டுப் பார்த்தான். அவன் நினைத்ததைப் போலவே அந்த இடிதாங்கி உடைந்து, நேராக அவன் மீதே விழுந்து மண்டை உடைந்து ரத்தம் கொட்டியது.

அலறி வீழ்ந்தவனை ஓடிவந்து சில ஆட்கள் தூக்கினார்கள். ‘இடிதாங்கி விழுந்துவிடும் என்பதை நான் முன்பே அறிந்திருந்தேன். நான் நினைத்தபடியே அது நடந்துவிட்டது...’ எனப் புலம்பினான்.

அப்போது அவனை தூக்க வந்தவர்களில் ஒரு வயதானவர் சொன்னார்: “அப்படியில்லை. அந்த இடிதாங்கி உன்மீது விழுந்துவிடும்... விழுந்துவிடும் என நீ நினைத்துக் கொண்டேயிருந்தாய். அதனால்தான் உன் மீது அது விழுந்துவிட்டது. எதிர்மறையானவற்றை நினைத்துக் கொண்டேயிருந்தால் நிச்சயம் அது நடந்தேறிவிடும்!”

பெரியவர் சொன்னதை விஞ்ஞானபூர்வமாக நிரூபணம் செய்ய இயலாதுதான். ஆனால், உளவியல் நம்பிக்கையின்படி எதிர்மறை எண்ணங்கள் ஒருவனை ஆழமாக பாதிக்கவே செய்கிறது. ஆகவே, ‘ஏதோவொன்று நடந்துவிடும்... நடந்துவிடும்’ என வீண் கற்பனை செய்து கொண்டேயிருக்க வேண்டாம்.

சிறிய விஷயங்கள் கூட தேவையற்ற கற்பனையால் பெரிதாக்கப்பட்டுவிடுகின்றன. தவறாக புரிந்து கொள்ளப்பட்டு விடுகின்றன. விளைவு, பகையும் வெறுப்பும் குரோதமும்

உருவாகிவிடுகிறது. தன்னைப் பற்றிய சுயமதிப்பிடலில்தான் பிரச்சினைகள் தோன்றுகின்றன. சட்டைப்பையில் சில்லறைகள் சேர்ந்துவிட்டால் கனக்கத் தொடங்கிவிடும். அது போலவே நிறைய புகழ்ச்சிகள் சேர்ந்துவிட்டால் மனது சுயபெருமை கொள்ளத் தொடங்கிவிடும். 'நான் யார் தெரியுமா?' என தன்னைப் பற்றிய பிம்பத்தை மனசு ஊதிப்பெருக்க வைக்கத் தொடங்கிவிடும்.

வணிக தந்திரங்களில் ஒன்று பொறாமையைத் தூண்டுவது. அதற்காக தான் இவ்வளவு தொலைக்காட்சி, ஊடக விளம்பரங்கள். நம்மை அறியாமலே அழகாக நகை அணிந்த பெண்ணை, விலை உயர்ந்த கார் வைத்திருப்பவரை, ஆடம்பரமான வீடு உள்ளவரை, அழகான உடலமைப்பு கொண்டவர்களை, சுவையான உணவை ருசிப்பவரைப் பார்த்து பொறாமைப்படுகிறோம்.

**பொறாமையின் வரலாறு**

அந்தப் பொறாமை நமக்குள் ஆசையாக உருமாறுகிறது. அதை நோக்கி நாமும் முன்னேறத் தொடங்குகிறோம். ஒவ்வொரு நாளும் புதுப்புது ஆசைகள் விதைக்கபட்டுக் கொண்டேயிருக்கின்றன. அதில் இருந்து நாம் தப்பிப்பது எளிதானதில்லை.

பொறாமையின் வரலாறு மிக நீண்டது. வரலாற்றின் கூடவே பொறாமையின் கதை உடன்வருகிறது. மனிதர்கள் எல்லாவற்றையும் கண்டு பொறாமை கொள்ளக்கூடியவர்கள், நோயைத் தவிர. அவருக்கு இவ்வளவு நோய்கள் இருக்கிறது. நமக்கு இல்லையே என யாரும் பொறாமை கொள்வதில்லை. எலும்புத் துண்டைக் கவ்விக் கொண்டுபோகும் தெருநாயைப் பார்த்துக் கூட மனிதர்கள் பொறாமை கொள்ளக்கூடியவர் என்று எழுதியிருக்கிறார் ஆன்டன் செகாவ். அது முற்றிலும் உண்மை!

**வாள் செய்யத் தெரிந்தவன்**

சீனாவில் வாள் செய்வதில் சிறப்பாக ஒருவன் இருந்தான். அவன் பெயர் சென் யுவான். அவன் செய்து கொடுத்த வாளைதான் மாமன்னர் கூட பயன்படுத்தினார்.

தான் செய்து கொடுத்த வாளால் மன்னருக்கும், தளபதிக்கும் பெருமை கிடைக்கிறதே அன்றி; தன்னை யாரும் புகழ்வதில்லையே என அவனுக்கு உள்ளுக்குள் கோபம் இருந்தது. ஒருமுறை வாள்போட்டி ஒன்று நடைபெறப் போவதாக அறிவிக்கப்பட்டது. உடனே சென் யுவான் சிறப்பான வாள் ஒன்றை செய்துகொண்டு போட்டியில் கலந்து கொள்ளச் சென்றான்.

மன்னருக்கே வாள் செய்து தருகிற சென் யுவானே வாள் சண்டைக்கு வந்துவிட்டான் என்பதால் பலரும் அவனுடன் சண்டையிட பயந்தார்கள். ஆனால், இளைஞன் ஒருவன் அவனை எதிர்த்துச் சண்டையிட்டான். சில நிமிடங்களிலே சென் யுவானைத் தோற்கடித்து அவன் கையில் வைத்திருந்த வாளை உடைத்து போட்டான் அந்த இளைஞன்.

சென் யுவான் அவமானப்பட்டு தலைகுனிந்து நின்றான். மன்னர் அவனை அழைத்துச் சொன்னார்: "நீ வாள் செய்பவன். அது ஒரு கலை. உன்னால் மிகச் சிறப்பாக வாள் செய்து தர

முடியும். ஆனால், போர்வீரனால் மட்டுமே சண்டையிட முடியும். வாளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற சூட்சுமத்தை வீரனே அறிவான். அது அவனது திறமை!

நீ வாளை ஒரு பொருளாக நினைக்கிறாய். அவன் தனது இன்னொரு கரமாகக் கருதுகிறான். வாளை செய்து முடித்தவுடன், அதன் மூலம் பெறப் போகும் பணமே உன் மனதில் முக்கியமாக இருக்கிறது. அவன் பணம் கிடைக்கும் என்பதற்காக சண்டையிடவில்லை. தனது வீரத்தைக் காட்டவே அவன் சண்டையிடுகிறான். தேசத்துக்கு தன் உயிரைக்கூட கொடுக்கவே அவன் போர்ப் படையில் இருக்கிறான்.

தேவையற்ற உனது கர்வம் காரணமாகவே நீ தோற்றுப் போனாய். உன்னை எதிர்த்து சண்டையிட்டானே அவனது கையில் இருந்ததும் நீ செய்து கொடுத்த வாள்தான். இதற்கு முன்னால் ஒரு சமயம் அவனது திறமையைப் பாராட்டி நான்தான் எனது வாளை பரிசாகக் கொடுத்தேன். உன்னை வென்றது நீ செய்து கொடுத்த வாளே!" என்றார்.

வாளை செய்வது வேறு. வாள் வீரனாக மாறுவது வேறு என்பதை அந்தப் போட்டி அந்த வாள் செய்பவனுக்கு உணர்த்திவிட்டது. சென் யுவான் தனது தவறை உணர்ந்து கொண்டான் என முடிகிறது அந்தச் சீனக் கதை.

நம்மில் பலரும் தன்னுடைய பலம், பலவீனத்தை உணராமலே இருக்கிறோம். வெறும் வாய்சொல்லிலே தன்னை வெல்ல யாருமில்லை என சுயதம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். 'சிறந்த வீரர்கள் கூச்சலிடுவதில்லை. தேவையில்லாமல் வாளை வெளியே உருவுவதில்லை' என்று சாமுராய்களைப் பற்றி சொல்வார்கள். இது வாள்வித்தைக்கு மட்டுமில்லை. எல்லா விஷயங்களுக்கும் பொருந்தக்கூடியதே.

## பகுதி 63 - பல்லாயிரம் பழக்கங்கள்

ஒரு செயலை பழக்கமாக்கிக் கொள்வது எளிதானது இல்லை. எது சரி? எது தவறு என அறியாமலே சில பழக்கங்களை நாம் கைக்கொண்டு வருகிறோம். "என்ன செய்யறது பழக்கமாயிருச்சு" எனச் சொல்லியவாறு, பல பேர் தவறான செயல்களைச் செய்வதைப் பர்க்கிறோம். எது நல்ல பழக்கம்? எது கெட்ட பழக்கம் என்பதற்கு அளவுகோல் என்ன?

'பழக்கங்களை மாற்றிக் கொள்வதோ, அதைக் கைவிடுவதோ முடியாத செயல்' எனப் பலரும் நம்புகிறார்கள். ஆனால், அது உண்மையில்லை. எந்தப் பழக்கத்தையும் மாற்றிக் கொள்ளவும், கைவிடவும் நிச்சயம் முடியும். அதற்கு நாம் தீவிரமாக முனைந்து செயல்பட வேண்டும். உறுதியான மனதுடன் இருக்க வேண்டும்.

ஜாகிங் போகப்போகிறேன் எனப் புது ஷூ வாங்கி வைத்துவிட்டு, இரண்டு நாட்கள் கூட கடைபிடிக்க முடியாதவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். பதற்றத்தில் நகம் கடிப்பது; பேன்ட் பாக்கெட்டில் பணத்தை வைத்துவிட்டு அப்படியே அழுக்குக் கூடையில் போட்டுவிடுவது; சாவியை ஆணியில் மாட்டாமல் தூக்கி எறிவது; சாப்பிடும்போது போன் பேசுவது; நிறைய நொறுக்குத் தீனி தின்பது; குளிர்பானம் குடிப்பது; எப்போதும் படுக்கையில் கிடப்பது என எளிய

பழக்கங்கள் தொடங்கி, போதை மருந்து உட்கொள்வது, கஞ்சா புகைப்பது, மது குடிப்பது, போதையில் தவறாக நடந்துகொள்வது என மோசமான பழக்கங்கள் வரை பல்லாயிரம் விதங்கள் மனிதர்களைப் பீடித்துள்ளன.

இதன் காரணமாகவே வீடுதோறும் சண்டை நடக்கிறது. ஆணும், பெண்ணும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொள்கிறார்கள். ஆனால், பழக்கத்தை மாற்றிக் கொள்ள முயற்சிப்பதே இல்லை.

**பழக்கமும் வெகுமதியும்**

'ஒருமுறை தோன்றிவிட்டால் பழக்கத்தை மாற்றவே முடியாது ' என்பதும் உண்மையில்லை. பழக்கம் உருவா வதற்கு ஏதாவது ஒரு தூண்டுகோல் தேவைப்படுகிறது. பழக்கத்தைத் தொடர்வதற்கு அதன் வழியே கிடைக்கும் வெகுமதி காரணமாகயிருக்கிறது. இந்த வெகுமதி என்பது புத்துணர்வாகவோ, சந்தோஷமாகவோ, திருப்தியாகவோ, வெறுமையாகவோ, தனியாக உணர்தலாகவோ, ஏக்கமாகவோ, ஏன் அகந்தையாகவோ கூட இருக்கக்கூடும்.

பெரும்பான்மையினரின் தோல்விக்கு அவர்களின் சில பழக்கங்களே காரணமாக உள்ளன என்கிறார்கள் உளவியல் ஆய்வாளர்கள். அது உண்மை. பழக்கம் என்பது எளிமையான விஷயமில்லை. அது மனிதர்களை ஆட்டிப் படைக்கக் கூடியது. பழக்கம் நரம்பு மண்டலத்தில் ஏக்கத்தை உருவாக்கக் கூடியது. ஆரம்பத்தில் அதன் தாக்கத்தைப் பலரும் உணர்வதே இல்லை. ஆனால், நாளடைவில் அந்த ஏக்கம் பழக்கத்தை தீவிர மானதாக்கிவிடு கிறது.

**சமையல் திருடன்**

கேரளாவில் ஒரு திருடன் சில ஆண்டுகளுக்கு முன்பு பிடிப்பட்டான். ஆள் இல்லாத வீடுகளிகளில் பூட்டை உடைத்து திருடப்போகிற அவனுக்கு ஒரு பழக்கம் இருந்தது. அது திருடப்போகிற வீட்டில் சமைத்து சாப்பிடுவது.

அவனுக்குப் பிடித்தமான உணவை சமைத்து சாப்பிட்டுவிட்டுதான் அவன் அங்கிருந்து வெளியேறிப்போவான். இந்த ஒரு துப்பை கொண்டு அவனை எளிதாக மடக்கி பிடித்துவிட்டார்கள். திருடப்போகிற இடத்தில் சமைத்து சாப்பிட வேண்டும் என்ற பழக்கம் எப்படி அவனுக்கு உருவானதோ, தெரியாது. ஆனால், அந்தப் பழக்கம்தான் அவனைக் கைதுசெய்ய உதவியது.

கைவிட வேண்டிய பழக்கங்களை ஒரு நாளில் நிறுத்திவிடமுடியாது. ஆனால், நிறுத்திவிட வேண்டும் என்ற முனைப்பும் தொடர்ந்த செயல்பாடும் இருந்தால் நிச்சயம் நிறுத்திவிடலாம்.

**வாசிப்பு மந்திரம்**

பல பேர் என்னிடம் 'தனக்குப் புத்தகம் படிக்கிற பழக்கமே இல்லை. அதை எப்படி ஏற்படுத்திக் கொள்வது' எனக் கேட்டிருக்கிறார்கள்.

'புத்தக வாசிப்பு எப்போதும் வீட்டில் இருந்து தொடங்க வேண்டும்.
கல்வி நிலையங்களில் தொடரப்பட வேண்டும்.

பொதுவெளியில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்!'

குறிப்பாகப் பள்ளி செல்லும் வயதிலே குழந்தைகளுக்குச் சிறிய படக் கதைகளை வாசிக்கப் பழக்க வேண்டும். பின்பு, படமும் எழுத்தும் கொண்ட புத்தகங்களை அறிமுகம் செய்ய வேண்டும்.

10 வயதில் சிறிய நூல்களை வாசிக்கப் பயிற்சித் தர வேண்டும். 18 வயதுக்குள் பெரிய நூல்களை வாசிக்கப் பழகி விட வேண்டும். பின்பு, தேர்வு செய்து நூல்களை வாசிக்கவும், குறிப்பெடுத்துக் கொள்ளவும், வாசித்தவற்றைப் பகிர்ந்துகொள்ளவும், விவாதிக்கவும் வேண்டும். இந்தப் பழக்கதை உருவாக்கிக் கொண்டுவிட்டால் வாழ்நாள் முழுவதும் உங்களின் ஆளுமை வளர்ந்து கொண்டேயிருக்கும். வாழ்வின் துன்பங்களை எளிதாகச் சந்திக்கவும், கடந்து செல்லவும், வெற்றிகொள்ளவும் பழகிவிடுவீர்கள்.

புத்தகம் மட்டுமின்றி, கிண்டிலில் அல்லது இணையத்தில் இ-புத்தகம், கட்டுரைகள், கதைகள் போன்றவற்றை வாசிப்பதும்கூட வாசிக்கும் பழக்கத்தில் சேர்ந்ததுதான். இளைய தலைமுறை அதையாவது கைக்கொள்ளலாமே!

படிக்கவோ, நடக்கவோ, பாடவோ ஆரம்பிக்கும்போது மிக எளிமையாக 5 அல்லது 10 நிமிஷம் எனத் தொடங்குங்கள். அடுத்த சில நாட்களில் 15 நிமிடம், பின்பு 20, 30 என அதிகப்படுத்துங்கள். இதுவே நீங்கள் நினைத்ததை அடைய சுலபமான வழி. 90 நாட்கள் தொடர்ந்து செய்துவிட்டால் எதுவும் பழக்கமாக உருமாறிவிடும்.

**வாழ்க்கையை மாற்றும் வார்த்தை**

நெடும்காலத்துக்கு முன்பாக, காசியில் ஒரு பிச்சைக்கா ரன் வாழ்ந்து வந்தான். கையேந்தி காசு கேட்பதே அவனது வாழ்க்கை. ஒரு நாள் காசிக்கு ஞானி ஒருவர் வந்திருந்தார். அவரிடம் “தன் வாழ்க்கையை மாற்ற ஏதாவது உபதேசம் செய்யுங்கள்” எனக் கேட்டான்.

அதற்கு அந்த ஞானி, “நாளை முதல் நீ எவரை சந்தித்தாலும் காசு கொடுங்கள் எனக் கேட்பதற்குப் பதிலாக, நன்றாக இருங்கள் என வாழ்த்த வேண்டும். இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டால் உன் வாழ்க்கை மாறிவிடும்” என்றார். பிச்சைக்காரனுக்கு நம்பிக்கையில்லை. ஆனாலும், ஞானியின் வாக்கை கடைபிடித்துப் பார்ப்போமே என முடிவுசெய்து, மறுநாள் முதல் சாலையில் எதிர்படும் மனிதர்களைப் பார்த்து “நன்றாக இருங்கள்…” என மனதார வாழ்த்தினான்.

ஆரம்பத்தில் அந்த வாழ்த்தொலிக்கு பயன் கிடைக்கவில்லை. ஆனால், அடுத்த சில நாட்களில் அவனது செயலை மக்கள் கவனிக்க ஆரம்பித்தார்கள். சுபகாரியம் செய்யபோகிறவர்கள் அவன் முன்னால் போய் ஆசி வாங்கினார்கள். காணிக்கை கொடுத்தார்கள். சில மாதங்களில் அவனது ஆசிர்வாதப் புகழ் பரவியது. வெவ்வேறு ஊர்களில் இருந்து ஆட்கள் அவனைத் தேடி வந்து வாழ்த்துப் பெறத் தொடங்கினார்கள். அவனுக்கான உணவும், உடையும், இருப்பிடமும் அவர்களே அமைத்துக் கொடுத்தார்கள்.

இரண்டே இரண்டு நல்ல வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு, அதைத் தொடர்ந்து சொல்லிவந்தால்... வாழ்க்கையில் எவ்வளவு மேம்பாடு ஏற்படுகிறது என்பதைப் பிச்சைக்காரன் உணர்ந்துகொண்டான். ஒரு நல்ல பழக்கம் வாழ்க்கையையே மாற்றிவிடும் என்பதற்கு அந்தப் பிச்சைக்காரனே சாட்சி!

**முயற்சி... முன்னேறு...**

ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளவும், உறவுகளைச் சீரமைத்துக் கொள்வதற்கும், குடும்பத்தின் மகிழ்ச்சிக்கும், தனிநபரின் மேம்பாட்டுக்கும் நல்ல பழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டியது அவசியம். அவற்றை முனைந்துதான் செயல்படுத்த வேண்டும். அதற்கு உங்கள் பழக்கங்களைப் பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். அதில் எதைக் கைவிட வேண்டும்? ஏன் கைவிட வேண்டும் எனப் பரி சீலனை செய்யுங்கள். பின்பு உங்கள் முடிவை நடைமுறைப்படுத்துங்கள். நிச்சயம் வெற்றி காண்பீர்கள்!

## பகுதி 64 - அலட்சியமாகும் விதிகள்!

மூன்று நாட்களுக்கு முன்பாக மாலை நேரம். எண்பதடி சாலையின் சிக்னல் அருகே ஐந்து வயது மகளுடன் வந்த இளம்பெண்ணை பைக்கில் வேகமாக வந்த ஒருவன் இடித்துத் தள்ளிவிட்டு, எந்த சுரணையுமின்றி பறந்து போய்விட்டான். அந்தப் பெண் தரையில் விழுந்துகிடந்தார், அவரது கையில் ரத்தம் சொட்டியது.

அம்மாவின் கையில் ரத்தம் வருவதைக் கண்டு, மகள் கதறி அழுதாள். அந்தப் பெண் அவசரமாக ஒரு ஆட்டோவில் ஏறி மருத்துவ மனைக்குச் சென்றார். சாலையில் ஒரு சலனமும் இல்லை. அந்தப் பெண்ணுக்கு நடந்ததை விபத்து என்று கூற முடியாது. அநியாயமான செயல் என்றே கூறவேண்டும். இந்தத் தாக்குதலுக்கு முக்கிய காரணம், இரண்டு பக்கமும் உள்ள திருமண மண்டபங்கள். அங்கு நடந்த திருமணங்களுக்கு வந்தவர்கள் சாலையை இரண்டு பக்கங்களையும் ஆக்கிரமித்து நிறுத்திப் போயிருந்த கார்கள், அதன் ஊடாக நுழைந்து அதிவேகமாக வரும் பைக் ஒட்டிகள். இவ்வளவு நடக்கும்போதும் அங்கே காவலர் ஒருவருமே இல்லை.

நடந்து போகிறவர்கள் உயிரை கையில் பிடித்த படியேதான் நகரச் சாலைகளில் செல்ல வேண்டியிருக்கிறது. சாலை விதிகளை ஒருவரும் கண்டுகொள்வதே இல்லை.

இந்தியாவின் அதிக வாகன நெருக்கடி கொண்ட நகரம் என்கிற பட்டியலில் சென்னைதான் முதல் இடத்தை பெற்றிருக்கிறது. அதிலும் மழைக் காலங்களில் சென்னை நரகம் ஆகிவிடுகிறது.

எப்போதும் சென்னை சாலைகளில் ஆங்காங்கே ஆள் உயரத்துக்கு குழி தோண்டி, மண்ணை குவித்து வைத்துவிடுகிறார்கள். கழிவுநீர் கால்வாய்க்கான குழியாகவோ அல்லது தொலைபேசித் துறை, இன்டர்நெட் காரர்களோ யார் தோண்டி யிருக்கிறார்கள்? எப்போது அதை மூடுவார்கள் என்கிற ஒரு அறிவிப்பும் கிடையாது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பானில் ஒரு சாலையில் பயணித்துக் கொண்டிருந்தேன். இரவில் அந்தச் சாலையில் பழுது பார்க்க போகிறார்கள். ஆகவே இரவு 11 மணி முதல் 2 மணி வரை அந்தச் சாலையின் ஒரு பகுதியை மட்டுமே பயன்படுத்த முடியும் என, ஒரு காவலர் ஒவ்வொரு காராக நிறுத்தி சொல்லிக் கொண்டிருந்தார். இரவு அந்த வழியாக திரும்பி வந்தபோது ஏற்பட்ட சிரமத்துக்கு மன்னிக்கும்படியாக இரண்டு காவலர்கள் நின்று, வாகன ஒட்டி களிடம் மன்னிப்பு கேட்டு அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார்கள். சாலை போக்குவரத்தை எப்படி சீராக நடைமுறைப் படுத்துவது என்பதற்கு ஜப்பான் ஒரு முன்னோடி நாடு.

ஒழுங்கை உருவாக்கவும் தேவையற்ற மோதல்கள், சச்சரவுகள், பிரச்சினைகளைத் தவிர்க்கவுமே விதிகள் உருவாக்கப்படுகின்றன. விதிகளை நடைமுறைபடுத்தவும், மீறும்போது தண்டிக்கவுமே சட்டங்கள் ஏற்படுத்தபட்டுள்ளன. சாலை விதிகளைப் பொறுத்தவரை எத்தனை சட்டங்கள் இயற்றினாலும் அதை ஒருவரும் பொருட்படுத்துவதே இல்லை. சென்னை மாநகரில் சாலை விதிகள் ஒரு சதவீதம் கூட கடைபிடிக்கப்படுவதில்லை. மாநகரில் ஆயிரக்கணக்கான கல்யாண மண்டபங்கள் இருக்கின்றன. இவற்றில் 10 சதவீதம் மட்டுமே போதுமான வாகன நிறுத்தும் வசதி கொண்டவை. மற்றவை அத்தனையிலும் கார்கள் சாலையிலே நிறுத்தப்படுகின்றன. இதனால் பெரும் போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. இந்நாள் வரை ஒருமுறை கூட இதை காவல்துறை தடுத்து நிறுத்தவோ, முறைப்படுத்தவோ முயற்சிக்கவில்லை.

**துரத்தும் மாநகரம்**

இதுபோல வெளியூர் பயணிகள் சென்னைக்குள் நுழைவதற்குள் விழிபிதுங்கிவிடுகிறார்கள். வண்டலூர், பெருங்களத்தூரைத் தாண்டி உள்ளே சென்னைக்குள் வருவதும் போவதும் பெருஞ்சிரமமாக இருக்கிறது. 'இந்த நகருக்குள் ஏன் வருகிறீர்கள்?' என்பது போலவே துரத்துகிறது மாநகரம்.

எத்தனையோ விஷயங்களுக்கு பொது வழக்குத் தொடுக்கிறார்கள். நீதிமன்றம் உரிய வழிகாட்டுகிறது. இது போல திருமண மண்டபங்களில் நிறுத்தப்படும் கார்களுக்கோ, சாலையில் அத்துமீறி நிறுத்தப்படும் வாகனங்களுக்கோ தடைவிதிக்க ஒருவரும் ஏன் முயற்சிப்பதேயில்லை? நீதியரசர்கள் வரும் வாகனங்களும் இதே நெருக்கடியைத் தானே சந்திக்கின்றன.

சாலைவிதிகளும் சட்டங்களும் நமது நலனுக்கானவை என வாகன ஒட்டிகளில் பெரும்பான்மையினர் நினைப்பதே இல்லை. சாலைவிதிகளை மீறுகிறவர்கள் நம்மை, யார் என்ன செய்துவிடுவார்கள் என்ற அலட்சியத்தில் செல்கிறார்கள். ஒரு நாளில் எத்தனையோ விபத்துகள். உயிரிழப்புகள்.

**எதுவும் நம்மிடமில்லை**

ஒரு முறை, அரசுப் பொது மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவருடன் பேசிக் கொண்டிருந்தேன். சென்னையில் வெள்ளி மற்றும் சனிக்கிழமை இரவு, இந்த இரண்டு

நாட்களிலும் நடக்கும் விபத்துகளின் எண்ணிக்கை மட்டும் அதிகம். விடிய விடிய ஆம்புலன்ஸ் போய்க் கொண்டேயிருக்கிறது. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கடைபிடிக்கப்படும் சாலை கண்காணிப்பு, கெடுபிடிகள் நீதிமன்றத் தண்டனைகள் எதுவும் நம்மிடமில்லை. ஆகவே, விபத்தின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறது என்றார்.

வாகனங்கள் அதிகமாகிவிட்டது. மக்கள் தொகை பெருகிவிட்டது என்பதெல்லாம் உண்மையே. அதற்காக எந்த இடத்திலும், யாரையும் மோதிவிட்டு போய்விடுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்ன? இதுபோல மக்களை தினந்தோறும் பாதிக்கும் பிரச்சினைகளை, அரசியல் கட்சிகள் ஏன் கண்டுகொள்வதே இல்லை? வாகன நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக மாநகரின் முக்கிய இடங்களில் மல்டி லெவல் பார்க்கிங் தளம் அமைக்கலாம் , போக்குவரத்து காவலர் எண்ணிக்கையை அதிகமாக்கலாம். கண்காணிப்பையும் தீவிரப்படுத்தலாம்.

**ஒரு முல்லா கதை**

முல்லா நஸ்ருதீனின் பக்கத்து வீட்டுக்காரர் கிணற்றில் தனது மகன் தண்ணீர் இறைக்கப் போகும்போது சத்தமாக சொன்னார்: “மண்பானை, கவனமாகக் கொண்டு போ... உடைத்துவிடாதே!”

அந்தப் பையன் அதை காதில் கேட்டுக்கொள்ளவே இல்லை. உடனே பக்கத்து வீட்டுக்காரர் ஆத்திரத்துடன் ஒரு குச்சியை எடுத்துக் கொண்டுபோய் “மண்பானை, கவனமாகக் கொண்டு போ.... உடைத்துவிடாதே!” எனச் சொல்லி அவனுக்கு ஒரு அடி கொடுத்தார் இதைக் கண்ட முல்லா, “ ஏன் சிறுவனை அடிக்கிறீர்கள்? அவன் தான் பானையை உடைக்கவில்லையே...?” என்றார்.அதற்கு பக்கத்து வீட்டுக்காரர் சொன்னார்: “இப்போது கண்டிக்காவிட்டால் பானையை உடைத்தப் பிறகு கண்டித்து எந்தப் பிரயோசனமும் இல்லையே...” என்றார்

அதற்கு முல்லா, “யாரோ எப்போதோ பானையை உடைத்துவிட்டார்கள் என்பதற்காக, சொந்த மகனை இப்படித் திட்டுவதா?” என திரும்பவும் கேட்டார். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே மகன் கிணற்றில் தண்ணீர் இறைத்து தூக்கும்போது கைக்கழுவி பானையைப் போட்டு உடைத்துவிட்டான்.

இப்போது பக்கத்து வீட்டுக்காரர் சொன்னார்: “பார்த்தீர்களா, எத்தனை தடவை அவனுக்கு படித்துப் படித்து சொன்னேன். காதில் வாங்கவேயில்லை. இப்போது பானை போய்விட்டது. கவனத்தில் நிறுத்த வேண்டிய விஷயத்தை நூறு முறை சொல்வதில் தப்பில்லை. இத்துடன் நான்கு பானைகள் உடைந்துவிட்டன!”

இதைக் கேட்ட முல்லா சொன்னார்: “அலட்சியம்தான் இதற்குக் காரணம்! அறிவுரை சொல்லி அதனைத் திருத்தி விட முடியாது. உணரச் செய்ய வேண்டும். பானையை உடைத்தால் ஒரு நாள் பட்டினி போடுங்கள். பிறகு ஒருபோதும் உடைக்க மாட்டான்!”

முல்லா கதையில் வரும் சிறுவனின் அலட்சியம் போன்றதே, மாநகர வாகன ஒட்டிகளின் அலட்சியமும். அதை தடுத்து நிறுத்தாவிட்டால் விளைவுகள் மிக மோசமாகவே இருக்கும்.

## பகுதி 65 - சொல் ஓர் ஆயுதம்!

கடற்கரையில் ஒருவர் அருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன்.

``நாலு அடி அடிச்சிருந்தாக் கூட மறந்து போயிருப்பேன். ஆனா, அவன் பேசின பேச்சை மறக்கவே முடியலை. ஒவ்வொரு சொல்லும் மனசைச் சுடுது'' என்றார்.

அவர் சொல்வது உண்மை. இது, ஒருவரின் புலம்பல் இல்லை. பலரும் சுடுசொல்லை மறக்க முடியாதவர்களே. ஏதோ ஒரு தருணத்தில், யாரோ நம்மை நோக்கிச் சொல்லும் சுடுசொல் அப்படியே முனை முறிந்த முள்ளைப் போல மனதில் தங்கிவிடுகிறது. அந்தச் சொல்லை மனதில் இருந்து அப்புறப்படுத்த முடிவதே இல்லை. புரையோடிப் போய் என்றைக்கும் வலி தந்தபடியே இருக்கிறது.

மனிதர்கள் உடற்காயங்களை, வலியைத் தாங்கிக் கொள்ளக் கூடியவர்கள். ஆனால், மனதைத் தாக்கும் சொற்களின் வலியை தாங்க முடியாதவர்கள். சொல் ஓர்ஆயுதம்! எவ்வளவு பெரிய மனிதரையும் ஒரு சொல் வீழ்த்திவிடும். கோபத்தில் சொன்ன வசைச் சொற்கள் காரணமாக தொடரும் தலைமுறைப் பகையை நான் அறிவேன்.

ஒரு வசைச் சொல்லை தாங்க முடியாமல் உடைந்து போய் அழும் மனிதர்களைக் காணும்போது, சொல்லின் இயல்பு அதிர்ச்சியளிக்கிறது. வசையோ, சுடுசொல்லோ கேட்டவுடன் ஏன் ரத்தம் சூடாகிறது? ஏன் கோபம் தலைக்கு ஏறுகிறது? கைகளும் முகமும் ஏன் இறுக்கமடைகின்றன? பலவீனமானவன் எனக் கருதப்படுபவன் கூட தன் கைவசம் பல நூறு சுடுசொற்களை வைத்திருக்கிறான். அவற்றால் தாக்குகிறான். குழந்தைகள், பெண்கள், வயசாளிகள் சுடுசொற்களைத் தாங்க முடியாமல் அதிகம் வேதனை கொள்கிறார்கள். நினைத்து நினைத்து அழுகிறார்கள்.

பொது வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு சொல்லின் வலி பழகிப் போய்விடுகிறது. எத்தனையோ ஆயிரம் வசைகள். கோபப் பேச்சுகள். அவதூறு வீசும் சொற்கள் அவர்களை தாக்கியபோதும் அவர்கள் நிலை குலைவதில்லை. சொல் தாங் கும் மனதை பெற்றவர்களாகிவிடுகிறார்கள்.

**சொற்களின் வெளிச்சம்**

சில சமயம் கோபத்தில் வெளிப்பட்ட சுடுசொல் சிலரது வாழ்க்கையையே மாற்றிவிடுகிறது. புளோரிடாவில் வசித்து வந்த ஜாக் என்ற கடை ஊழியரை அவரது முதலாளி கோபத்தில் மிக மோசமாக திட்டிவிட்டார். ஜாக்கிற்கு அதை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. வேலையை விட்டு நின்றுகொண்டார். ஆனாலும் மனதில் அந்த வலி மறையவே இல்லை. தான் ஓர் உதவாக்கரை. திறமையற்றவன். முட்டாள் என முதலாளி திட்டிய சொற்கள் மனதில் மோதிக் கொண்டே இருந்தன. அந்தச் சொற்கள் உண்மைதானோ என, தன் மீதே அவர் சந்தேகம் கொள்ளவும் தொடங்கினார். இதனால் அவர் புதிய வேலையைத் தேடிக் கொள்ள முடியாமல் முடங்கிக் கிடந்தார். திடீரென ஓர் இரவு சொற்கள் வெளிச்சத்தில் உருவம் போல அவருக்கு

முன் தோன்றின. அந்தச் சொற்களை வெறித்து பார்த்துக் கொண்டேயிருந்தார். அவை தனக்காக உருவாக்கபட்ட சொற்களில்லை; அதே சொற்களைக் கொண்டு தானே பலரை திட்டியிருக்கிறோம். ஆனால், இன்று அந்தச் சொற்கள் நம்மீது பாயும்போது மனது உடையக் காரணம், நமது பலவீனம்தான். இந்த பல வீனத்தைக் கடந்து போயாக வேண்டும்.

அச்சொல் உண்மையில்லை என நிரூபணம் செய்தாக வேண்டும். அந்தச் சொல்லுக்கு மாற்றாக இன்னொரு சொல் தன்முன்னே தோன்ற வேண்டும் என உறுதி கொண்டார். உடனே, தனது வாழ்க்கைமுறையை மாற்றிக் கொள்ளத் தொடங்கினார். உடலை வலுவாக்குவதே மனதை ஒருமுகப்படுத்துவதற்கான முதல் வழி என நினைத்தார்.

அதற்காக நடைப்பயிற்சி. நீச்சல், டென்னிஸ் என தீவிரமாக நேரத்தை செலவிட்டார். கூடவே, தன்னு டைய பேச்சுத் திறனை வளர்த்துக் கொண்டார். ஒரே ஊரிலேயே பல ஆண்டுகள் தங்கிவிட்டோம் என நினைத்து வேறு மாநிலத்துக்கு இடம் மாறினார். புதிய வேலை கிடைத்தது. வாழ்க்கையில் மாற்றங்கள் உருவாக ஆரம்பித்தன. அவரை பலரும் புகழத் தொடங்கினார்கள். திறமைசாலி என பாராட்டினார்கள்.

பின்பு ஒருநாள் அவர் தனது பழைய முதலாளியைத் தற்செயலாக ஒரு விடுதியில் சந்திக்க நேர்ந்தது. அப்போது ஜாக் தன்னை அறிமுகம் செய்துகொண்டு, தன்னை அவர் திட்டிப் பேசியதை நினைவுகூர்ந்தார். ஆனால் அந்த முதலாளிக்கு ஒரு சொல் கூட நினைவில் இல்லை. இவ்வளவு பெரிய திறமைசாலியா நம்மிடம் வேலைக்கு இருந்தார் என வியந்து ஜாக்கை பாராட்டினார். ஜாக்கின் மனதில் இப்போது திறமைசாலி, நல்லமனிதன் என்ற சொற்கள் வெளிச்சத்தில் உருவம் போல தோன்றி மறைந்தது. ஜாக் இந்த அனுபவத்தை இணையத்தில் பகிர்ந்து கொண்டி ருக்கிறார்

ஜாக்கிற்கு நடந்தது போல நம்மில் பலரை எத்தனையோ முறை வசைச் சொற்களும், சுடுசொல்லும் தாக்கியிருக்கின்றன. அவற்றை மனதில் ஊறவைத்தபடியே இருக்கிறோமே அன்றி, அதில் இருந்து விடுபட்டு புதுவாழ்வு வாழ முயற்சிக்கவில்லை. சொற்களைக் கையாள நமக்குத் தெரியவேண்டும். சொற்களைக் கவனமாக வெளிப்படுத்த வேண்டும். 'இன்சொல் பேசுங்கள்' என்பது, எங்கேயோ கேட்ட பழைய விஷயமாக தோன்றினாலும் அது எக்காலத்துக்குமான உண்மை!

**கிளிக்கு சொந்தமில்லா மொழி**

ஒரு காலத்தில் வணிகன் ஒருவன் ஒரு கிளியை வளர்த்து வந்தான். அந்தக் கிளி அவன் பேசும் எல்லா வசைச் சொற் களையும் தானும் பழகியிருந்தது. ஆகவே, கடைக்கு வரு பவர்களை அது தன் கொச்சைக் குரலில் திட்டிப் பேசியது. இதைக் கேட்டு வாடிக்கையாளர்கள் பலரும் கோபம் கொண்டார்கள். ஆனால், வணிகன் அதை ரசித்தான். தன்னை விடவும் தனது கிளி மிக மோசமாக திட்டுகிறது என சந்தோஷம் அடைந்தான்.

அந்தக் கிளிக்கு புதிது புதிதாக வசைச் சொற்களை கற்றுக் கொடுத்தபடியே இருந்தான் அந்த வணிகன். ஒரு நாள் அவனது கடைக்கு துறவி ஒருவர் வருகை தந்தார். வணிகன் அவரை வணங்கி ஆசி வாங்கிக் கொண்டிருக்கும்போது, அந்தக் கிளி துறவியைப் பார்த்து மிக மோசமான வார்த்தைகளால் திட்டியது. அதைக் கேட்ட வணிகன் "கிளியே...வாயை மூடு!" என

திட்டினான். அனால், கிளி இன்னும் மிக மோசமான வசைச் சொற்களைக் கொண்டு துறவியைத் திட்டியது.
இதைக் கண்ட துறவி "இந்தக் கிளி மிக அபாயகரமானது. இதைக் கொன்றுவிடு!" என்றார். ஆனால் அந்த வணிகனுக்கு அந்தக் கிளியைக் கொல்ல மனமில்லை. ஆகவே கூண்டை விட்டு வெளியே பறக்கவிட்டான்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வணிகன் காசிக்குச் சென்றான். அங்கே அந்தக் கிளி ஒரு பண்டிதரின் முன்னால் அமர்ந்து வேதம் சொல்லிக் கொண்டிருந்தது. அது தனது கிளிதான் என்பதை அறிந்து, அதனருகே சந்தோஷத்துடன் சென்று "எப்படி இவ்வளவு இனிமையாக வேதம் ஓது கிறாய்?" எனக் கேட்டான் வணிகன்.

அதற்கு அந்தப் பண்டிதர் பதில் சொன்னார்: பழக்கம்தான் காரணம். யாரோ அதற்கு வசைச் சொற்களைப் பழக்கிக் கொடுத்திருந்தார்கள். நான் அதை மாற்றி வேதம் கற்றுத் தந்தேன். தவறு கிளியுடையது இல்லை. அதை வளர்க்கும் மனிதர்களுடையதே என்றார்.

வணிகனுக்கு அப்போதுதான் தனது தவறு புரிந்தது என முடிகிறது அந்த காஷ்மீரத்து கதை.

இந்தக் கதையில் வரும் கிளியைப் போலதான் நாமும் வசைச் சொற்களை நம்மை அறியாமலே கற்று வைத்திருக்கிறோம். எங்கே பிரயோகம் செய்கிறோம் என அறியாமல் பிரயோகிக்கவும் செய்கிறோம். சொல்லை அறிந்து சரியாக பயன்படுத்தினால் அதுவே நம் வாழ்வை மாற்றும் பெரும் சக்தியாகும் என்பதே நிஜம்!

## பகுதி 66 - கூடி உண்போம்!

அனைவரும் ஒன்றுகூடி உணவருந்தும்போது நம்மில் ஒருவராக கடவுளும் இருக்கிறார் என்றொரு யூதப் பழமொழி இருக்கிறது. சந்தோஷங்களில் பெரியது, கூடி உண்பதாகும்.

ஓட்டல்களில் போய் சாப்பிடுவதற்கு அதுவும் ஒரு காரணம். பலரும் அவரவருக்கு விருப்பமான உணவை சாப்பிடும் இடத்தில் நாமும் அமர்ந்து நமக்கு விருப்பமான உணவை உண்பதும், அடுத்தவர் சாப்பிடுவதை ரகசியமாக பார்த்து ரசிப்பதும் இதனால்தான்.

குகையில் வாழ்ந்த நாட்கள் முதல் மனிதர்கள் வேட்டையில் கிடைத்த இறைச்சிகளை, காய் கனிகளை ஒன்றாக கூடியே உண்டார்கள். இன்றும் பழங்குடி மக்களிடம் கூட்டு சமையலும் கூடி உண்பதும் இருக்கிறது. விவசாய வாழ்க்கையே தனிச் சமையலை உருவாக்கியது. ஆயினும் தொழிற் சாலைகளில், அலுவலகங்களில், கல்வி நிலையங்களில் கூடி உண்பதும் இன்றும் தொடரும் பழக்கமே.

நாம் என்ன சாப்பிடுகிறோம். எப்படி யாருடன் பகிர்ந்து சாப்பிடுகிறோம் என்பது பண்பாட்டின் அம்சம். ஒவ்வொரு பண்பாடும் அதற்கான பகிர்வை, உணவு முறையை, விலக்கப்பட்ட உணவு வகைகளைக் கொண்டிருக்கிறது. இந்தியா போன்ற பன்மைத்துவம் நிரம்பிய நாட்டில், உணவுப் பண்பாடு மிகப்பெரியது. விருந்தினர்களை உபசரிப்பதில் உணவு தருவதே தலையானது.

இரண்டு நாட்களுக்கு முன்பாக ஒரு டிரைவருடன் பேசிக் கொண்டிருந்தேன். வாடகை கார் ஒன்றின் ஒட்டுநராக வேலை செய்கிறார். அவர் வருத்தத்துடன் சொன்னார்:

"தினமும் வீடு போய் சேருவதற்கு இரவு 12 மணியாகிவிடுகிறது. மனைவி, பிள்ளைகள் உறங்கியிருப்பார்கள். அதற்குப் பிறகு குளித்துவிட்டு தனி ஆளாக உட்கார்ந்து சாப்பிடுவேன். அப்போது உடன் உட்கார்ந்து சாப்பிட யாராவது ஒருவர் இருக்கக் கூடாதா என ஆதங்கமாக இருக்கும். இந்த அர்த்தராத்திரியில் யாரை எழுப்பி து உடன் சாப்பிடச் சொல்வது? ஆகவே, சாப்பாட்டில் விருப்பமே இருக்காது. பல வருஷங்களாக இரவுகளில் நான் ஒற்றை ஆளாகத்தான் சாப்பிடுகிறேன். காலையில் பிள்ளைகள் எழுவதற்குள் வேலைக்குப் போய்விடுவேன். ஓடியோடி உழைத்தும் வீட்டில் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டு பல வருஷமாகிவிட்டது" என்றார்.

**பறந்து போன ருசி**

அவரது வருத்தம் பலருக்கும் உரியதே.

என் சிறுவயதில் வீட்டில் அத்தனை பேரும் ஒன்றாக, வட்டமாக அமர்ந்து சமைத்த உணவை வைத்துக் கொண்டு தேவையான அளவு எடுத்துப் போட்டு சாப்பிட்ட நாட்கள் நினைவில் ஓடுகிறது. டைனிங்டேபிள் வந்த பிறகு உணவுக்கு சுவை போய்விட்டதோ என்று கூட சில சமயம் தோன்றும். உண்மையில் டைனிங் டேபிளில் இல்லை பிரச்சினை. கூடி உண்ணும் மனதும் விருப்பமானதை மற்றவருக்கு பகிர்ந்து தரும் ஆசையும் போய்விட்டது தான் உணவு ருசிக்காமல் போனதற்குக் காரணம். இன்றைக்கும் நண்பர்களுடன் தரையில் அமர்ந்து சாப்பிடுவது எனக்கு விருப்ப மானதே.

**கையில் தட்டு, ரேடியோ பாட்டு**

பிளாட்ஃபாரத்தில் வசிக்கும் குடும்பத்தில் பலரும் தட்டில் சோறு, குழம்பு ஊற்றி பிசைந்தபடியே ரேடியோவில் பாட்டு கேட்டுக் கொண்டே, சாலையில் போகிற வருகிறவர்களைப் பற்றிய கவலையின்றி சந்தோஷமாக சாப்பிடுகிறார்கள். அவர்கள் தாங்கள் சாப்பிடுவதை மற்றவர்கள் பார்க்கிறார்களே என ஒளித்துக் கொள்கிறவர்களில்லை. வசதியும், அதிகாரமும் அதிகமானதும் நாம் சாப்பிடுவதை யாரும் பார்த்துவிடக்கூடாது என்பதில் கவனம் கொள்கிறோம். உயரதிகாரிகள், பிரபலங்கள் பலரும் தனியாகத்தான் உண்ணுகிறார்கள்.

'ருசியின் உளவியல்' நூலை எழுதிய பிரில்லட் சவாரன் (Brillat Savarin) என்ற வழக்கறிஞர் 'நீ என்ன சாப்பிடுகிறாய் என்று சொல். நீ யார் என்று நான் சொல்லிவிடுகிறேன்' என்று கூறுகிறார். அது உண்மையே.

பண்டிகைகள். விழாக்கள் உருவாக்கபட்டதன் முக்கிய காரணம் மனிதர்கள் பரஸ்பரம் அன்பு செலுத்தவும், கூடி உண்ணவும், கூடிக்களிக்கவும்தான். இன்றைக்கோ பண்டிகை நாட்களில் வீட்டில் நம்மைத் தவிர, சாப்பிடுவதற்கு வேறு எவரையும் அழைப்பதில்லை. நெருக்கமான நண்பர்களைத் தவிர வேறு எவரையும் ஒருபோதும் சாப்பிடக் கூப்பிடுவதே இல்லை.

**சப்பாத்திகளின் நெடும் பயணம்**

கிழக்கிந்திய கம்பெனியின் ஊழியராக இருந்த டாக்டர் கில்பர்ட் ஹாடோ '1857 சிப்பாய் எழுச்சி' நடந்த நாட்களில் நடந்த சம்பவம் ஒன்றை குறிப்பிடுகிறார். "பிரிட்டிஷ் அரசை எதிர்த்து போரிட்டவர்களுக்கு உணவு தருவதற்காக ஒவ்வொரு வீட்டிலும் தங்கள் உணவில் ஐந்து சப்பாத்திகளை தனியே ஒரு துணியில் கட்டி வீட்டின் வெளியே வைத்து விடுகிறார்கள். இந்த சப்பாத்திகள் இரவோடு இரவாக சேகரிக்கப்பட்டு எங்கே, யாருக்குத் தேவைப்படுகிறதோ அங்கே விநியோகம் செய்யப்படுகிறது. 300 மைல் தூரம் வரை சப்பாத்திகள் பயணிக்கின்றன.

யார் இந்த சப்பாத்திகளைக் கொண்டு போகிறார்கள்? எப்படி கைமாறுகிறது என்பது யாருக்கும் தெரியவில்லை. இந்தியர்கள் வீட்டில் தயாரித்து கொடுக்கும் சப்பாத்தியே சுதந்திர போராட்ட வீரர்களுக்கு உணவாகிறது. இதை எங்களால் தடுக்க முடியவே இல்லை. 'ஐந்து சப்பாத்தி இயக்கம்' என்றே இதை அழைக்கிறார்கள்" எனக் குறிப்பிடுகிறார்.

உணவு அரசியலாகிப் போன இக்காலகட்டத்துக்கும், உணவை கொண்டு பிரிட்டிஷ் அரசை எதிர்த்த அந்தக் காலத்துக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது பாருங்கள்.

சாப்பிட அழைத்து அவமானப்படுத்துவது சகித்துக் கொள்ள முடியாத விஷயம். அந்த வெறுப்பு மனதை விட்டு எளிதில் அகலாது. ஆகவே, எதிரியே சாப்பாட்டுக்கு வந்தாலும் இனிமையாகத்தான் நடத்தவேண்டும் என்கிறது நமது பண்பாடு.

**பெரும் இதிகாசத்தின் தொடக்கம்**

'சரமா' என்ற நாய் இந்திரன் வளர்த்தது. அதற்கு 'சரமேயஸ்' என்கிற பெயரில் இரண்டு குட்டிகளும் உண்டு. மகாபாரதம் ஒரு நாய்க்கு ஏற்பட்ட அவமானத்தில் இருந்தே தொடங்குகிறது.

பரீக்ஷித்தின் மகன் ஜனமேஜயன் தனது தம்பிகளுடன் சேர்ந்து வேள்வி ஒன்றை நடத்திக் கொண்டிருந்தான். அந்த இடத்துக்கு சரமாவின் குட்டி ஒன்று வந்து சேர்ந்தது. வேள்விக்காக வைத்திருந்த உணவை தின்றுவிட்டதோ என நினைத்து ஜனமேஜயனின் தம்பிகள், அந்த நாய் குட்டியை அடித்து துரத்தினார்கள். ஒரு தவறும் செய்யாத தன்னை அடித்து விரட்டியதைப் பற்றி நாய்குட்டி தனது தாய் சரமாவிடம் முறையிட்டது.

உடனே சரமா அந்த வேள்விக் கூடத்துக்கு வந்து "வேள்விக்கு வைத்திருந்த நெய்யோ, உணவோ எதையும் நாக்கால் தொட்டுக்கூட பார்க்காத என் குட்டியை ஏன் அடித்து விரட்டினீர்கள்?" என நியாயம் கேட்டது.

அவர்களால் பதில் பேச முடியவில்லை.

"செய்யாத தவறுக்காக தண்டிக்கபட்ட என் குட்டியைப் போல, நீங்கள் அறியாத சமயத்தில் உங்களை தீமை வந்து அடையும்" என ஜனமேஜயனுக்கு சரமா சாபம் கொடுத்தது. அந்த சாபமே மகாபாரதக் கதையின் தொடக்கப் புள்ளியாகும்.

உணவை புசித்துவிட்டதாக தவறாக தண்டிக்கப்பட்ட நாயின் கதையில் இருந்துதான் பெரும் இதிகாசமே தொடங்குகிறது.

மனிதனோ, நாயோ யாராயினும் விருந்தில் அவமதிக்கப்பட்டால் அது பகையாகவே உருமாறிவிடுகிறது.

வாழ்வின் பல்வேறு தருணங்களை, பல்வேறு நிலைகளை, அதன் புதிர்களை, துயரங்களை அடையாளம் காட்டி அதில் இருந்து விடுபடவும் வாழ்க்கையை மேம்படுத்த செய்யவுமே கதைகள் உதவுகின்றன. இதிகாசம் என்பது கதைகளின் பெருங்கடலே.

## பகுதி 67 - ஏழு அதிர்ஷ்டங்கள்

தன்னுடைய தவற்றை உணர்ந்து கொள்ள ஒருவருக்கு எவ்வளவு நாள் தேவைப்படுகிறது. சிலர் உடனே உணர்ந்துவிடுகிறார்கள். சிலரோ வருஷம் கடந்தாலும் உணர்வதில்லை. இன்னும் சிலரோ உணர்ந்தாலும் வெளிப் படுத்திக் கொள்வதில்லை. முதுமை தவறுகளின் வடிகாலுக்கான காலம்போல மாறி விடுகிறது. அதுவும் மரணப்படுக்கையில்தான் பலர் தனது தவற்றை நினைத்து வருந்துகிறார்கள். அப்போது வருந்தி ஆகப்போவதென்ன!

வாழும்போதே தவறை உணர்ந்து திருந்துவதும், யாருக்கு தவறு செய்தோமோ அவர்களுக்கு நன்மைகள் செய்வதும்தானே நல்வாழ்வின் அடையாளம்!

பள்ளி வயதில் இருந்து எத்தனையோ நீதிமொழிகள், அறவுரைகள் படித்திருந்தாலும் மனிதர்கள் மனதில் நீதி வேரூன்றவில்லை. தனக்கு அநீதி இழைக்கபடும்போது மட்டுமே நீதிக்காகக் குரல் கொடுக்கிறோம்.

ஒவ்வொரு மனிதனின் மனதிலும் ஒரு தராசு ஊசலாடிக் கொண்டுதான் இருக்கிறது. அது அவனது செயல்களை எடைபோடுகிறது. தவறுகளின் தட்டு ஒருபக்கமாக இழுக்கும் போது அவனை எச்சரிக்கை செய்கிறது. ஆனால், மனிதர்கள் அதைக் கண்டுகொள்வதே இல்லை. அங்கே தான் அவனது வீழ்ச்சி தொடங்குகிறது.

**வேட்டையின் ஆதாரம்**

சில நாட்களுக்கு முன்பு நேஷனல் ஜியாகிரபி சேனல் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு விலங்கும் எப்படி ஒரு வேட்டை முறையை கைக்கொள்கிறது என்பதைப் பற்றி விரிவாக காட்டிக் கொண்டிருந்தார்கள்.

தந்திரம்தான் வேட்டையின் ஆதாரம். நம்பவைப்பது போல நிதானமாக செயல்பட்டு எதிர்பாராமல் தாக்கி தனது இரையை கொல்கின்றன விலங்குகள்.

அந்த விவரணப்படத்தின் இயக்குநர் விலங்குகளைப் பற்றி சொல்லிக்கொண்டு வரும்போது, 'இந்த எல்லா வேட்டைமுறைகளையும் ஒருங்கே செய்யக்கூடிய ஒரே விலங்கு மனிதன் மட்டுமே. மனித மூளை யோசிக்கும் அளவுக்கு வேறு எந்த விலங்கும் திட்டமிடுவதோ, தாக்குவதோ கிடையாது!' என்றார்.

காட்டில் உடல் வலிமையான விலங்குகளே வலிமையற்றதை வேட்டையாடுகின்றன. ஆனால், மனிதர்கள் விஷயத்தில் இதற்கு நேர் எதிர். மனிதன் தனது அறிவை கொண்டே வேட்டையை நிகழ்த்துகிறான். உடல் உறுதி கொண்ட உழைப்பாளிகளை அதனால்தான் நோஞ்சை யான பணக்காரனால் எளிதாக வீழ்த்திவிட முடிகிறது.

**பிரியமற்ற பிரிட்டா**

ஸ்காண்டிநேவியா கதை ஒன்று மன்னித்தலின் மகத்துவத்தைக் கூறுகிறது. ஏழு குழந்தைகளைப் பெற்ற ஒரு விவசாயியின் மனைவி எட்டாவது பிரசவத்தின்போது இறந்துபோய்விடுகிறாள்.

ஏழு குழந்தைகளையும் தான் ஒருவ னால் வளர்க்க முடியாது என நினைத்த விவசாயி, பிரிட்டா என்ற இளம் பெண்ணை திருமணம் செய்துகொள்கிறான்.

பிரிட்டாவுக்கு குழந்தைகள் என்றாலே பிடிக்காது. அதுவும் குழந்தைகளின் அழுகை சத்தம் கேட்டால் காதை பொத்திக் கொண்டுவிடுவாள்.

அவளிடம் தனது பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு அந்த விவசாயி தன்னுடைய பண்ணை வேலைக்குப் போய்விடுவான். அவளோ ஏழுபிள்ளைகளையும் ஏழு பாவங்கள் என்று சொல்லி அடித்து, உதைத்து இம்சை செய்தாள். ஆனால், ஒரு குழந்தை கூட சிற்றன்னையின் செயல்களைப் பற்றி தவறாக தனது தந்தையிடம் புகார் சொல்லவில்லை.

ஒருநாள் பிரிட்டா மந்திரவாதி ஒருவரிடம் போய் மந்திரப் பொடி வாங்கி வந்து, அந்த ஏழு குழந்தைகளையும் ஏழு பூனைக் குட்டிகளாக உருமாற்றி வீட்டில் இருந்து துரத்திவிட்டாள்.

மாலையில் விவசாயி வந்து கேட்டபோது, " ஏழு பிள்ளைகளும் தன்னை அடித்து உதைத்துவிட்டு எங்கோ ஓடிப்போய்விட்டார்கள்" என்றாள்.

வருஷங்கள் கடந்தன. பிரிட்டாவும் கிழவியானாள். அந்த நாட்டில் கொள்ளை நோய் வந்தது. நோயால் மக்கள் எல்லோரும் கஷ்டப்பட்டார்கள்.

பிளேக் நோயில் விவசாயி இறந்துபோனான். பிரிட்டாவுக்கு போக்கிடம் இல்லை. அவளை வறுமை வாட்டியெடுத்தது.

பசியோடு ஒரு நகருக்கு வந்து சேர்ந்தாள். அங்கே ஒன்று போல ஏழு மாளிகை கள் இருந்தன. அந்த மாளிகையின் முன்னால் போய் நின்று பிச்சை கேட்டாள்.

**மன்னிக்கும் கருணை**

கதவைத் திறந்து வெளியே வந்த அந்த வீட்டின் வேலைக்காரி, பிரிட்டாவை அந்த வீட்டின் எஜமானர்கள் உள்ளே அழைப்பதாகச் சொன்னாள்.

பிரிட்டா உள்ளே போனபோது பட்டாடையும் வைர நகைகளும் ஜொலிக்க நான்கு பெண்களும், இளவரசர்கள் போல மூன்று ஆண்களும் முன்வந்து நின்று, “எங்களை தெரியவில்லையா..?” எனக் கேட்டார்கள்.

பிரிட்டாவுக்கு அவர்களை அடையாளம் தெரியவில்லை.

“ஏழு பாவங்களை நினைவிருக்கிறதா.” என்றனர்.

‘பூனையாக மாற்றப்பட்டவர்கள், எப்படி இப்படி மாறினார்கள்!’ என திகைத்துப் போனாள் பிரிட்டா.

ஏழு பேரில் மூத்தவள் சொன்னாள்: “அம்மா... நீங்கள் எங்களை மந்திரத்தால் பூனையாக மாற்றி துரத்திவிட்டீர்கள். நாங்கள் போகுமிடம் தெரியாமல் அலைந்தபோது, இன்னொரு மந்திரவாதி எங்களை மீண்டும் மனிதர்களாக மாற்றினார். அவரே வேலைக்காக கடல் வணிகர் ஒருவரிடம் அனுப்பி வைத்தார்.

அந்த வணிகரிடம் பதினாலு வருஷங்கள் கடுமையாக உழைத்தோம். அவருக்கு எங்களைப் பிடித்துப் போகவே, எங்களை தனது வாரிசுகளாக அறிவித்துவிட்டார். இப்போது அவரது சொத்துகளுக்கு நாங்கள்தான் அதிபதி!

எங்கள் ஏழு பேருக்கும் ஏழு மாளிகைகள் இருக்கின்றன. ஏழு வீடுகளுக்கும் சேர்ந்து ஒரே ஒரு உணவு மேஜை. ஒன்றாக உண்கிறோம். ஒன்றுபோல உடை உடுத்துகிறோம். ஒன்றாகப் பிரார்த்தனை செய்கிறோம். ஒவ்வொரு நாளும் எங்கள் பிரார்த்தனையின்போது உங்களையும் அப்பாவையும் நினைத்துக்கொண்டு நீங்கள் நலமாக வாழ பிரார்த்தனை செய்வோம்!” என்றாள்.

பிரிட்டா குழப்பத்துடன் கேட்டாள்: “என் மீது உங்களுக்கு கோபமோ, வெறுப்போ இல்லையா?”

“இருந்ததுதான். ஆனால், அதை நாங்கள் பகையாகவோ, விரோதமாகவோ, பழிவாங்கும் செயலாகவே மாற்றிக் கொள்ளவில்லை. உங்கள் தவறுக்கு காலமே தண்டனை வழங்கிவிடும் என நம்பினோம். அதுவே நடந்துவிட்டிருக்கிறது.

அம்மா... குளிர்காலத்தில் ஒருநாள் நாங்கள் நடுங்கிக் கொண்டிருந்தபோது, வேண்டா வெறுப்பாக நீங்கள் கம்பளி ஒன்றை எடுத்து எங்கள் மீது வீசினீர்கள். அந்த ஒரே ஒரு நற்செயல் நீங்கள் செய்த ஆயிரம் தவறுகளையும் சரிசெய்துவிட்டது தாயே! வாருங்கள் இனி, எங்களுடனேயே தங்கலாம். சாப்பிடலாம். இது உங்கள் மாளிகை!” என்றான் அந்த ஏழு பேரில் ஒருவன்.

பிரிட்டா அவர்களின் நற்செய்கையை நினைத்து கண்ணீர்விட்டு அழுதுகொண்டே சொன்னாள்: "நான் உங்களை எவ்வளவோ மோசமாக நடத்தியபோதும், நீங்கள் என்னை மன்னித்துவிட்டதோடு மீண்டும் எனக்கொரு வசதியான வாழ்க்கையும் தர முன் வந்திருக்கிறார்கள். உண்மையில் நீங்கள் ஏழு பாவங்கள் இல்லை. ஏழு அதிர்ஷ்டங்கள்!"

அந்த ஏழு பிள்ளைகளும் பிரிட்டாவுக்கு பட்டாடைகள் வழங்கி, விருந்து கொடுத்து தங்க கட்டிலில் படுக்க வைத்தார்கள்.

**உள்ளேயிருந்து ஒரு குரல்**

அன்றிரவு பிரிட்டாவின் மனசாட்சி அவளை கேலி செய்து பேசியது: 'பிரிட்டா... அந்த ஏழு பேரும் வேண்டுமானால் உன்னை மன்னித்திருக்கலாம்.

நான் மன்னிக்கவே மாட்டேன். நாளை முதல் ஒவ்வொருவேளை நீ சாப்பிடும்போதும், 'நீ உண்பது உன் தவறை மறந்து அவர்கள் போடும் பிச்சை என்றே கூறுவேன். உனக்கு மீட்சியே கிடையாது!'

பிரிட்டாவின் மனசாட்சி அவளை வாழ்நாளின் கடைசி வரை கேலி செய்தே கொன்றது என அந்தக் கதை முடிகிறது.

நற்குணமும். பெருந்தன்மையும். பேரன்பும் கொண்டவர்களால் மட்டுமே இப்படி நடந்துகொள்ள முடியும். ஆனால், நாம் அவ்வளவு பெரிய மனது கொண்டவர்களில்லை. அதனால்தான் இது போன்ற கதைகள் மன்னித்தலின் பெருமையை நமக்கு நினைவூட்டி, நம் மனதை பக்குவப்படுத்துகின்றன!

## பகுதி 68 - வீட்டின் தூண்கள்!

கட்டிடக் கலை நிபுணர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தேன்.

அவர் சொன்னார்: "இப்போதெல்லாம் தூண்கள் வைத்து வீடு கட்டும் வழக்கம் போய்விட்டது. பழைய வீடுகளில் உள்ள தூண்களின் கம்பீரம் எனக்குப் பிடித்தமானது. அந்தத் தூண்கள் உறுதியின் அடையாளம். நிறைய தூண்கள் கொண்ட மண்டபங்கள் பேரழகானவை. அவை காலத்தை வென்று நிற்கின்றன!"

உண்மை. நவீனமாக கட்டப்பட்ட வீடு எதிலும் தூண்களைக் காண முடிவதில்லைதான்.

நான் வேடிக்கையாக, "கண்ணுக்குத் தெரிகிற தூண்கள் காணாமல் போய்விட்டதைப் போலவே, கண்ணுக்குத் தெரியாத தூண்களும் காணாமல் போய்விட்டன!" என்று சொன்னபோது, நண்பர் புரியாதவராக என்னிடம் கேட்டார்: "அது என்ன கண்ணுக்குத் தெரியாத தூண்கள்?"

“ஒவ்வொரு வீட்டுக்கும் நான்கு அரூபமான தூண்கள் இருக்கின்றன. அவற்றின் மீதுதான் வீடு நிலை கொண்டிருக்கிறது. ஒரு தூணின் பெயர் அன்பு. ஆம், அன்பு செலுத்துதலே குடும்பத்தின் ஆதாரம். இன்னொரு தூண் உபசரித்தல். அறிந்தவர், அறியாதவர் என பேதமின்றி இன்மொழி பேசி, உணவு கொடுத்து உபசரித்தல். மூன்றாவது தூண் நல்லொழுக்கங்களையும் பண்புகளையும் கடைபிடித்தலும் கற்றுத் தருவதுமாகும். நான்காவது தூண் எளிமையும் தூய்மையும். சின்னஞ்சிறு குடிசை வீடாக இருந்தாலும் மாளிகையாக இருந்தாலும் சரி, வீட்டை இந்த நான்கு தூண்களே தாங்கிக் கொண்டிருந்தன!” என்று நான் விளக்கியபோது, நண்பர் வாய் பிளந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

**வீடும் கற்பிக்கலாம்**

குடும்பம் என்பது எந்த பேதமும் இன்றி, ஒருவரோடு மற்றவர் அன்பு செலுத்துவதாகும். உறவுகளைப் பேணுவதே அதன் இயல்பு. தாய் தன் பிள்ளைகளுக்கு உணவிடும்போதே அன்பையும் சேர்த்து படைப்பாள். அது பிள்ளைகளின் ஊனில் கலந்துவிடும். இந்த அன்பு காலாகாலத்துக்கும் தொடரக்கூடியது.

இது போலவே, அதிதிகள் யார் வந்தாலும் வறுமையிலும் கூட அவர்களுக்கு முடிந்த வகையில் உதவிகள் செய்வதோடு உணவு கொடுத்து உபசரிப்பார்கள்.

பேச்சிலும், நடத்தையிலும், சிந்தனையிலும் நல்லதே இருக்க வேண்டும் என்பதை பாலபாடமாக வீடுதான் கற்பித்தது. சமூகத்துக்கு பயப்படாத மனிதன் கூட வீட்டுக்கு பயப் படுவான். தன்னை சொந்த தாய், தந்தை மதிக்க மாட்டாரே என அஞ்சுவான். பிள்ளைகள் வெறுத்துவிடுவார்களே என பயப்படுவான். நல்லொழுக்கங்களைப் பேணும் குடும்பமே நற்குடும்பமாக அறியப்பட்டது. இந்த ஒழுக்கமும், பண்பாடும் குழந்தை பருவத்திலேயே அறிமுகப்படுத்தபட்டு, வளர்த்தெடுக்கப்பட்டது.

எவ்வளவு வசதியிருந்தாலும், வறுமையில் இருந்தாலும் சரி, அகங்காரமின்றி எளிய வாழ்க்கையை வாழ வேண்டும். உடலையும் மனதையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வீடு என்பது கோயிலைப் போன்றது. சுத்தமாக, எளிமையாக, ஒளிர்தலுடன் இருக்க வேண்டும் என நினைத்தார்கள்.

இன்றைக்கு பெரும்பான்மை குடும்பங்களில் இந்த நான்கு தூண்களும் மறைந்துபோய்விட்டன. பிள்ளைகள் தாய், தந்தையை வெறுக்கிறார்கள். முதிய வயதில் வீட்டைவிட்டு துரத்தி வெளியே அனுப்பு கிறார்கள். ‘யாருக்கு வேண்டும் அன்பு? பணம் இருந்தால் மட்டும் போதும்’ என நினைக்கிறார்கள். கணவன், மனைவி உறவும் பணத்தால் மதிப்பிட முடிவதாகிவிட்டது.

**குற்றங்களுக்கான விதை**

உபசரிப்பு என்பது அநாவசியம் என்றாகிவிட்டது. முன்பின் தெரியாத ஒருவருக்கு ஒரு குவளை தண்ணீர் தருவதற்குக் கூட இன்று யாரும் முன்வருவதில்லை.

வீடும், கல்வி நிலையங்களும் ஒருசேர ஒழுக்கத்தை போதிப்பதை நிறுத்திக் கொண்டுவிட்டன. சகல ஒழுக்கக் கேடுகளையும் வீட்டுக்குள் தொலைக்காட்சி காட்சிப்படுத்திக்

கொண்டேயிருக்கிறது. குடி, போதை, வன்முறை போன்றவை வீட்டுக்குள் நுழையாமல் இருக்கலாம். ஆனால், காட்சி ஊடகங்களின் வழியே பிள்ளைகளுக்கு எளிதாக இவை எல்லாம் அறிமுகமானதோடு, அதுதான் கொண்டாட்டம், அதுதான் சாகசம் என்ற மன நிலையையும் உருவாக்கிவிடுகிறது.

வீடு சிறியதோ, பெரியதோ எதிலும் எளிமையும் தூய்மையும் இல்லை. நுகர்வு கலாச்சாரம் தேவையற்ற பொருட்களை வாங்கி, வீட்டை குப்பை மேடாக்கிவிட்டிருக்கிறது. 'எல்லாவற்றுக்கும் ஆசைப்படு' என நுகர்வு பண்பாடு தூண்டுகிறது. அடையமுடியாத ஆசைகளே குற்றங்களுக்கான விதையாக உருமாறுகிறது.

நவீன வீடுகள் நவீன மனிதனைப் போல அடைத்து சாத்தப்பட்டதாகிவிட்டன. வாழ்வின் ஆதாரங்கள்தான் தூண்கள் என உருவகப்படுத்தபட்டன. இந்தத் தூண்களை இழப்பது உண்மையில் ஒரு சமூகத்துக்கு பெரும் கேடுதான்!

**காசுக்கு கிடைக்குமா அன்பு?**

பிரெஞ்சு நாட்டுப்புறக் கதையொன்று இதைப் பற்றிப் பேசுகிறது.

தெற்கு பிரான்சில் உள்ள ஒரு கிராமத்தில், ஒருவன் அடகுக் கடை நடத்தி வந்தான். அவன் மக்களை ஏமாற்றி வாழ்ந்து கொண்டிருந்தான். ஏழை, எளிய மக்களின் அடகு வைக்கப்பட்டப் பொருட்களுக்கு அநியாயமாக வட்டி வாங்குவான். தாங்கள் அடகு வைத்த பொருட்களை அவனிடம் இருந்து மீட்க முடியாத அளவுக்கு அவனது வட்டி மக்களை வாட்டியது. மீட்க முடியாத பொருட்களை விற்று நிறைய பணம் சேர்ந்தான். அவன் மனைவியும் இரக்க குணமற்றவள். அந்த அடகு கடைக்காரனுக்கு பெரிய மாளிகை கட்ட வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு.

அதன்படி அவன் ஒரு வீடு கட்ட ஆரம்பித்தான். பாதி வீடு கட்டிக்கொண்டிருக்கும்போது, திடீரென ஒருநாள் அக்கட்டிடத்தின் வலது பக்கச் சுவர் சரிந்து விழுந்தது. 'இது என்ன சோதனை?' என நினைத்து, மறுபடியும் அந்தச் சுவரை எடுத்துக் கட்டினான். மறுபடியும் அந்தச் சுவர் இடிந்து விழுந்தது. 'இது எதனால் ஏற்படுகிறது?' எனத் தெரியாமல் குழம்பிப் போனான் அடகு கடைக்காரன். உள்ளூர் பாதிரியாரிடம் சென்று ஆலோசனை கேட்டான்.

அவர் சொன்னார்: "உன் பாவம்தான் உனது புதிய வீட்டை கட்ட முடியாமல் தடுக்கிறது. உன்னை யார் மனதில் அன்போடு நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் ஒரு கல்லை எடுத்து வைத்து கட்டினால் மட்டுமே சுவர் நிற்கும்!"

'தன்னைத்தான் ஊரில் எவருக்குமே பிடிக்காதே. தன் மீது யார் அன்பு செலுத்துவார்கள்?' எனக் குழம்பிப் போனான் அடகு கடைக்காரன். 'காசு கொடுத்தால், அந்தக் காசுக்காகவாவது தன் மீது நிச்சயம் அன்பு செலுத்துவார்கள்' என நினைத்து, காசு கொடுத்து ஆட்களை அழைத்து வந்து, ஒவ்வொருவராக கல்லை எடுத்துத் தரச் சொல்லி, வீட்டின் சுவரை கட்ட ஆரம்பித்தான். ஆனால், அவன் அழைத்து வந்த நபர்கள் எடுத்துக் கொடுத்த, எந்தக் கல்லாலும் அந்தச் சுவர் நிற்கவே இல்லை. மாதங்கள் போய்க் கொண்டேயிருந்தன.

'தன் மீது உண்மையான அன்பு கொண்ட ஒருவர் கூட இல்லையே. இவ்வளவு நாட்களில் அப்படி ஒரு மனிதனை தான் சம்பாதிக்கவே இல்லை!' என்பதை அந்த அடகு கடைக்காரன் உணர்ந்துகொண்டான்.

**பாசம் வெளுப்பதில்லை**

பின்னொரு நாள், உடம்பெல்லாம் கொப்பளங்களுடன் ஒருவன் அந்த ஊருக்கு வந்திருந்தான். அடகு கடைக் காரனின் சுவர் விஷயத்தை கேள்விபட்ட அந்தப் புதியவன். "நான் வேண்டுமானால் ஒரு கல்லை எடுத்து தரட்டுமா..?" எனக் கேட்டான்.

அடகு கடைக்காரனுக்கு அவனை பார்த்தாலே குமட்டிக் கொண்டு வந்தது. ஆனாலும், கல்லை எடுத்துத் தர அவனுக்கு அனுமதி தந்தான்.

அந்தப் புதியவன் ஒரு கல்லை எடுத்து வைத்து கட்டியதும், அந்த வலது பக்கச் சுவர் சரியாமல் நிமிர்ந்து நின்றது. இதைப் பார்த்த ஊர் மக்கள் வியந்தார்கள்.

அடகு கடைக்காரன் அவனை பார்த்து, "என் மீது அன்பு கொண்ட நீ யார்?" எனக் கேட்டான்.

"இளம் வயதில் உன்னால் வீட்டைவிட்டு துரத்தப்பட்ட உனது தம்பிதான் நான். என் சொத்துகளைப் பறித்துக் கொண்டு, என்னை துரத்திவிட்டாய். அலைந்து திரிந்து கஷ்டப்பட்டு, நோயாளியாகி இப்போது திரும்பி வந்திருக்கிறேன். ஆயிரம் பேர் உன்னை வெறுத்தாலும், உன் மீதான எனது அன்பு மாறவே இல்லை!" என்றான் பாசம் பொங்க அந்தப் புதியவன். அதைக் கேட்ட அடகு கடைக்காரன் 'ஊரே தன்னை வெறுக்கிறது. விரட்டி அடிக்கப்பட்ட தம்பியோ தன்னை நேசிக்கிறான். ரத்த உறவின் வலிமை இதுதானோ' என கண்ணீர்விட்டான்.

அடகு கடைக்காரன் மனம் திருந்தியவனாகச் சொன்னான்: "கல்லும் மண்ணும் கொண்டு கட்டுகிற வீடு நிலைப்பதில்லை. அன்பால் கட்டப்படும் வீடே நிலைத்து நிற்கக் கூடியது என உணர்ந்து கொண்டேன். இனி, யாரையும் நான் ஏமாற்ற மாட்டேன். என் வீட்டில் இனி பசித்தோருக்கு உணவிடப்படும். என் தம்பியும் எங்களோடு வாழ்வான்!"

காலம்... வீடு கட்டுவதில் எத்தனையோ மாற்றங்களை, புதுமைகளை உருவாக்கிவிட்டது. ஆனால், வீட்டில் வசிக்கும் மனிதர்களின் அன்பும் அக்கறையும் எல்லா காலத்துக்கும் பொருந்தக்கூடியதுதானே. அதை ஏன் கைவிட வேண்டும்?

## பகுதி 69 - யானையும் கொசுவும்!

ஒரு கொசு தன்னை அலங்காரப் படுத்திக் கொண்டு அழகான மண மகனைத் தேடிப் புறப்பட்டது. அப்போது இன்னொரு கொசு கேட் டது. "இது என்ன புதுப் பழக்கம்? ஒரு கொசு எதற்காக மாப்பிள்ளை தேட வேண்டும்?"

இதைக்கேட்ட பெண் கொசு சொன்னது: “அடித்தால் செத்துப் போய்விடக்கூடிய நோஞ்சான் கொசுவை நான் கட்டிக்கொள்ள மாட்டேன். பலசாலியான ஒரு ஆண் மகனைத்தான் நான் கல்யாணம் செய்துகொள்வேன்!”

இதைக் கேட்ட ஆண் கொசு சொன்னது: “அது நடக்கவே நடக்காது பார்...”

அதைக் கேட்டு எரிச்சலடைந்த பெண் கொசு, எதுவும் சொல்லாமல் பறக்க ஆரம்பித்தது.

**மரம் சொன்ன அறம்**

பறக்கும் வழியில் இருந்த ஒரு மரம் கொசுவைத் தடுத்து, “கொசுவே கொசுவே... எங்கே போகிறாய்?” எனக் கேட்டது.

“மாப்பிள்ளைத் தேடிப் பறந்து கொண்டிருக்கிறேன். பலசாலியான ஆணாக இருந்தால், என்னிடம் சொல்!” என்று பதில் சொன்னது கொசு.

“நான் அறிந்தவரைக்கும் ஒட்டகச்சிவிங்கிதான் பலசாலி. அதைக் கட்டிக் கொள். அது உன்னை உசரமான இடத்தில் வைத்துக் கொண்டாடும்!” என்றது மரம்.

இதைக் கேட்ட அந்தப் பெண் கொசு, ஒட்டகச்சிவிங்கி யைத் தேடிப் போனது.

ஒட்டகச்சிவிங்கி கொசுவின் கோரிக்கையை ஏற்க மறுத்ததோடு, அது சொன்னது: “நீ அசிங்கமாக இருக்கிறாய். உன்னை எனக்குப் பிடிக்கவில்லை. நான் என்னைப் போல் கழுத்து நீண்ட ஒட்டகச்சிவிங்கியைத்தான் கட்டிக்கொள்வேன்!”

இதைக் கேட்டு வருத்தப்பட்ட கொசு மீண்டும் மாப்பிள்ளை தேடிப் போனது.

**பெண்புலியே என் பெருவிருப்பம்**

அப்போது ஒரு குரங்கு, கொசுவிடம் சொன்னது: “எனக்குத் தெரிந்து புலிதான் வலிமையானது. நீ புலியைக் கட்டிக் கொள்!”

அந்த யோசனையும் பிடித்துப்போகவே, புலியைத் தேடி காட்டிற்குள் போனது கொசு. ஒரு புலியை சந்தித்து, “என்னை திருமணம் செய்துகொள்வாயா?” எனக் கேட்டது கொசு. அதற்கு புலி, “நீ ஒரு அற்ப கொசு! உன்னை நான் எப்படி திருமணம் செய்துகொள்ள முடியும்? எனக்கு இணையாக வலிமையான ஒரு பெண்புலிதான் தேவை!” என்றது

இதனால் மனம் உடைந்துபோன பெண் கொசு, யாரை திருமணம் செய்துகொள்வது எனத் தெரியாமல் அலைந்து திரிந்தபோது, வண்ணத்துபூச்சி சொன்னது: “காட்டில் மிக வலிமையானது யானைதான். அப்பாவியும் கூட. அதை நீ திருமணம் செய்துகொள்ளலாம்!”

உடனே கொசு யானையைத் தேடிப் போனது. ஒரு நதியில் யானைக் கூட்டமே குளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தது கொசு.

இந்த யானைக் கூட்டத்தில் ஒரு யானை கூடவா என்னை கல்யாணம் செய்துகொள்ளாது?' என நினைத்துக்கொண்டு, யானைகளின் முன்னால் போய் நின்றுகொண்டு "யாராவது என்னை திருமணம் செய்துகொள்வீர்களா?" எனக் கேட்டது.

கொசுவின் வருத்தமான குரலைக் கேட்ட ஒரு யானை, கொசுவைத் திருமணம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டது.

**தந்தமுள்ள யானைக்கு சொந்தமான கொசு**

கொசுவுக்கும் யானைக்கும் திருமணம் நடந்தது. அன்றிரவு யானை ஆசையோடு கொசுவை அணைத்துக்கொள்ள முயன்றபோது, கொசு நசுங்கி செத்துப்போனது.

இதைக் கேள்விப்பட்ட மரம் கண்ணீர்விட்டு இலைகளை உதிர்த்தது. வானம் இருண்டு மழையை பொழிந்தது. ஆற்றில் வெள்ளம் வந்து கரை புரண்டு ஓடியது.

ஏன் இப்படி வெள்ளம் போகிறது என ஊர்மக்கள் கேட்டதற்கு, "யானையின் மனைவி கொசு செத்துப்போய்விட்டது. அந்தத் துக்கம் தாங்க முடியாமல்தான் இயற்கையே அழுகிறது!" என்று பதில் கிடைத்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, இன்றுவரை தன்னை மொய்க்கும் கொசுக்களை யானை அடித்துக் கொல்வதில்லை என்று நீள்கிறது இடுக்கி பழங்குடி மக்கள் சொல்லும் கதை ஒன்று.

**களைகட்டும் கல்யாண களேபரங்கள்**

யானையும் கொசுவும் திருமணம் செய்துகொண்டன என கேட்கும்போது நமக்கு சிரிப்பாக இருக்கிறது. ஆனால், நிஜவாழ்வில் யானையும் கொசுவும் போன்றவர்கள் பெரிய மண்டபம் பிடித்து, லட்சக்கணக்கில் செலவு செய்து திருமணம் செய்துகொள்வது கண்முன்னே நடந்துகொண்டுதான் இருக்கிறது.

தனக்கு ஏற்ற மணமகனை, மணமகளைத் தேடுவது தவறில்லை. ஆனால், எதை வைத்து ஏற்றவர், ஏற்றவரில்லை என முடிவு செய்கிறார்கள்? இன்று திருமணங்களை முடிவுசெய்வது பொருளாதாரமே. பணமும், வசதியும், அதிகாரமும் இருந்துவிட்டால் கொசுவுக்கு யானை கிடைப்பது பிரச்சினையே கிடையாது. ஆனால், பணமில்லாத வறுமையில் வாடும் யானைக்கோ கொசு போல பெண் கிடைப்பது எளிதில்லை.

திருமணத்தை எளிமையாக நடத்தவேண்டும் என்ற எண்ணம் நூற்றில் ஒருவருக்குக் கூட கிடையாது. சமீபத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஓர் இளைஞர் தனது திருமண வரவேற்புக்கு ஹெலிகாப்டரில் வந்து இறங்கியிருக்கிறார். இவர் பெரும் பணக்காரர் இல்லை. துபாயில் வேலை செய்து திரும்பிய மெக்கானிக். ஆனால், திருமணத்துக்காக வாடகைக்கு ஒரு ஹெலிகாப்டரை ஏற்பாடு செய்திருக்கிறார். திருமணம் நடைபெற்றது சிறிய மண்டபத்தில். ஆனால் ஹெலிகாப்டர் செலவு 10 லட்சம் ரூபாய். இதன் விளைவு அந்த ஆளை வருமான வரித் துறையினர் தேடிப் போய் விசாரணை செய்திருக்கிறார்கள்.

**ஆடம்பரங்களுக்கும் எல்லையுண்டு**

சமீபத்தில் கலந்துகொண்ட ஒரு திருமண நிகழ்வில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதற்கு மட்டும் 80 லட்ச ரூபாய் செலவு செய்திருந்தனர். நான்கு விதமான திருமண ஆல்பம் தருவதோடு, சிறிய திரைப்படம் ஒன்றையும் எடுத்து திரையிட்டு காட்டுவார்களாம். அந்தச் சிறிய திரைப்படம் திரையிடப்படும் நாளில், உறவினர்களுக்கு தனி விருந்தும் வழங்கப்படும் என்றார் மணமகளின் தந்தை.

இன்னொரு பக்கம், பிள்ளையார் கோயிலில் வைத்து தாலி கட்டிவிட்டு, சாலையோர உணவகத்தில் சாப்பிட்டுவிட்டு, நகரப்பேருந்து பிடித்து வீடு போவதற்காக காத்திருக்கும் குடும்பம் ஒன்றையும் விழுப்புரம் அருகே கண்டேன். இரண்டும் திருமணங்கள்தான்.

திராவிட இயக்க எழுச்சியால் சீர்திருத்தத் திருமணங்கள் பிரபலமாகின. எளிமையான அந்தத் திருமண முறையில் சடங்குகள், சம்பிரதாயங்களுக்கு இடம் கிடையாது. செலவும் குறைவு. அப்படி திருமணம் செய்துகொண்டவர்களில் பல பேர் இன்றும் சந்தோஷமான குடும்பங்களாக விளங்குகிறார்கள். இதைக் கண்டபிறகும் ஏன் பலரும் பிரம்மாண்ட திருமணங்களை விரும்புகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

பெருநகர திருமணங்களில் ஆடம்பரமும் வீண்செலவுகளும் அதிகம். இன்று எல்லோருமே பிரம்மாண்டமாக திருமணம் செய்யவே ஆசைப்படுகிறார்கள். இதில் உணவுக்காவே பெரும்பணத்தை நிறைய செலவு செய்கிறார்கள். திருமண ஆடம்பரங்களில் கூடுதல் கவனம் செலுத்துபவர்கள், அந்த மண உறவு வலிமையாக இருக்க வேண்டும்; நீடித்து வளர வேண்டும் என்பதில், சிறிதுகூட கவனம் கொள்வதே இல்லை.

**கவர்மெண்ட் கட்டுமா கல்யாண மண்டபம்?**

ஊடகங்கள் உருவாக்குகிற கற்பனைகளே பலரது மனதில் பிம்பங்களாக தங்கிவிடுகின்றன. சினிமா காட்சிகளைப் போல தமது வாழ்விலும் அரங்கேற்றிப் பார்க்க வேண்டும் என்றே பலரும் துடிக்கிறார்கள். டூயட் பாடல்கள் மட்டும்தான் மிச்சம். விரைவில் அதையும் ஆடம்பர செட் போட்டு, பாடல் கம்போஸ் செய்து படமாக்கிவிடுவார்கள் பாருங்கள்.

திருமண வயதை நிர்ணயம் செய்த அரசு, ஒரு திருமணத்துக்கு இவ்வளவுதான் செலவு செய்ய வேண்டும் என்று ஏதாவது ஒரு கட்டுப்பாடு கொண்டுவந்தால் நலமாக இருக்கும்.

அதுபோலவே திருமண மண்டபங்களை அரசே கட்டி சலுகைக் கட்டணத்தில் தந்து உதவினால் பலருக்கும் உதவி யாக இருக்கும். வசதியானவர்கள் தன் விருப்பம் போல செலவு செய்வது, அவர்கள் உரிமையாக இருக்கலாம். ஆனால் வீணடிக்கப்படும் உணவு, மின்சாரம். குடிநீர், இதரப் பொருட்கள் பொது சமூகத்துக்கு தேவையானவை இல்லையா? அதைக் கணக்கில் கொள்ளத்தானே வேண்டும்!

## பகுதி 70 - யார் துணை?

நடைப்பயிற்சிக்குச் செல்லும் பூங்காவுக்கு தினமும் ஒரு கருவுற்றப் பெண் வருவதைக் கண்டேன். ஒருநாளும் அவருடன் துணைக்கு யாரும் வருவது இல்லை. வெளிறிய முகத்துடன் வீங்கிய கண்களுடனும் அவர் மிகமெதுவாக நடந்து வருவார். 30 வயதிருக்கக்கூடும். அவர் நடப்பதைப் பார்க்கும்போது நமக்கே சிரமமாக இருக்கும். ஏன் அவருடன் கணவரோ? வீட்டாரோ யாரும் வருவதில்லை? எப்படி அதை அவரிடம் கேட்பது?

ஒருநாள், அவர் சிரமத்துடன் பெஞ்சில் உட்கார முயன்றபோது "ஏதாவது உதவி வேண்டுமா?" எனக் கேட்டேன்.

"இல்லை சார். கால் வலிக்குது..." எனச் சொல்லி சிரித்தார்.

அடுத்த இரண்டு நாட்களுக்கு அவரை அங்கு காணவில்லை. மூன்றாம் நாள் வந்தபோது மெல்லிய புன்னகையோடு "உடல்நலமில்லை சார்..." என்றார்.

"உங்களுடன் யாரும் துணைக்கு வருவதில்லையா?" எனக் கேட்டேன்.

அவர் தலைகவிழ்ந்தபடியே "யாருமில்லை. திருமணமாகி இரண்டு ஆண்டுகளாகின்றன. தனியேதான் வசிக்கிறோம். கணவருக்கு ஐ.டி. வேலை. காலை ஆறரை மணிக்கே புறப்பட்டுவிடுவார். நான் விடுப்பில் இருக்கிறேன்" என்றார்.

**தனிமைக்கு மருந்தில்லை...**

இதுதான் சென்னை வாழ்வின் நிதர்சனம். 'கால் வலிக்கிறது வெந்நீர் ஒத்தடம் வைத்து தர முடியுமா?' எனக் கேட்க உதவி ஆள் கிடையாது. 'வாய் கசக்கிறது. ஒரு துவையல் அரைத்து தர முடியுமா?' எனக் கேட்க அறிந்த மனிதர்கள் அருகில் இல்லை. காலிங்பெல் சத்தம் கேட்டால் உடனடி யாக எழுந்து வந்து திறக்க முடியாது. உதவிக்கு ஆள் கிடையாது. இப்படி கருவுற்றப் பெண்ணின் தனிமை வலியும், வேதனையும் நிரம்பியது. மருத்துவ வசதிகள் நிறைய வந்துவிட்டன. உண்மைதான். ஆனால், தனிமையைத் தீர்த்துக் கொள்ள என்ன மருந்திருக்கிறது?

கிராமப்புறங்களில் கருவுற்றப் பெண்ணுக்கு விரும்பியதை சமைத்துக் கொடுப்பார்கள். அவள் வயிற்றில் வளரும் குழந்தைக்காகவே அவளை கவலையில்லாமல் வைத்துக் கொள்வார்கள். ஒரு சுடு சொல் பேச மாட்டார்கள். தாயோ, பாட்டியோ யாரோ அவளுடன் கோயிலுக்கு போய் வருவார்கள். பிரசவம் முடிந்து ஆறு மாதங்கள் வரை அவளை பூப்போலவே கவனித்துக் கொள்வார்கள்.

இன்று நிறை கருவுற்றப் பெண்ணுக்கு ஒரு நடைத் துணையில்லை. விதவிதமான மாத்திரை மருந்துகள் கிடைக்கின்றன. ஆனால், ஆறுதலான வார்த்தைகள் கிடைப்பதில்லை. ஸ்கேன் செய்து சிசுவின் வளர்ச்சியைத் தவறாமல் கண்காணித்துக் கொள்கிறார்கள். ஆனால், கருவை சுமக்கும் பெண்ணின் மனவேதனைகளைப் புரிந்துகொள்வதே இல்லை.

**இப்படித்தான் இருக்கிறது சமூகம்**

கருவுற்ற காலத்தில் பெண்களுக்கு ரத்த அழுத்தம் அதிகரிக்கக்கூடும். சாதாரண பெண்களுக்கு தேவைப்படும் இரும்புச்சத்து அளவைவிட கருவுற்றப் பெண்ணுக்கு 50 சதவீதம் அதிகளவு தேவைப்படும். மனச்சோர்வுடன் இருந்தால் உடலில் சுரக்கும் சுரப்பிகள் சரியாக செயல்படாமல் போய்விடும். இதனால், பிறக்கும் குழந்தை பாதிக்கப்படலாம். எனவே, எப்போதும் கலகலப்பாக இருக்க வேண்டும். இன்று அவர்களை மகிழ்ச்சிப்படுத்த தொலைக்காட்சி மற்றும் சினிமா தவிர, வேறு வழிகளே இல்லை.

இளம் தம்பதிகளில் பலர் வருமானம் போய்விடுமே என, குழந்தைப்பேற்றைத் தள்ளிப்போடுகிறார்கள். விரும்பியபோது சுற்றுப்பயணம் போகலாம். குழந்தை பெற்றுக்கொள்ள முடியுமா என்ன? ஆனால், அப்படித்தான் இன்றைய சமூகம் இருக்கிறது.

மறுபக்கம் குழந்தையின்மைக்காக பல லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டு மருத்துவ சோதனைகள், மாற்றுவழிகள் என பல பேர் போராடிக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைப்பேறு வாழ்க்கையின் பிடிமானம் என்பது உண்மைதான். ஆனால், அந்தக் குழந்தையை முறையாக நாம் வளர்க்கிறோமோ? அன்பு செலுத்துகிறோமா? அக்கறை காட்டுகிறோமா என்றால்... கேள்விக்குறியாகவே இருக்கிறது.

வெளியே செல்லும்போது ‘குழந்தையை நான் தூக்கிக் கொண்டு வர மாட்டேன். என் இமேஜ் போய்விடும்...’ என மறுக்கும் இளம்தாய்கள் உருவாகிவிட்டார்கள். தந்தைக்கோ கொஞ்சுவதற்கும் பாசத்துக்கும் மட்டுமே மகனோ, மகளோ வேண்டுமே தவிர, அவர்கள் நோயுற்றால் மருத்துவமனைக்குக் கொண்டுபோய் காத்திருக்க மனதில்லை. “நீ போ. நீ போய் காட்டு...” என மனைவியைத் துரத்துகிறார்கள். வீட்டில் குழந்தை அழுதால் கோபித்துக் கொள்ளும் ஆண்கள் அதிகம். இப்படி குழந்தைகளை சுமையாக நினைக்கும் போக்கு வளர்ந்துகொண்டே வருகிறது.

**வண்ணநிலவனின் ‘பலாப்பழம்’**

தமிழ் இலக்கியத்தின் மகத்தான எழுத்தாளரான வண்ணநிலவன் ‘பலாப்பழம்’ என்றொரு சிறுகதையை எழுதியிருக்கிறார். அக்கதையில் நிறைசூலியாக இருக்கிறாள் செல்லப்பாப்பா. கணவன் மாதச் சம்பளக்காரன்.

ஒருநாள் அடுத்த வீட்டில் யாரோ பலாப்பழம் சாப்பிடுகிறார்கள். அவளுக்கும் பலாப்பழம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை பிறக்கிறது. மரத் தடுப்புக்கு அப்பாலுள்ள பக்கத்து வீட்டுக் குழந்தைகள், ஆசையோடு பலாப்பழம் சாப்பிடும்போது அவள் ஏக்கத்துடன் வெறும் வாசனையை மட்டும் நுகர்கிறாள்.

திடீரென பக்கத்து வீட்டுச் சிறுமி வந்து கதவை தட்டுகிறாள். உடனே செல்லபாப்பா என எங்கே தனக்கு பலாப்பழம் கொண்டு வந்திருப்பாளோ என ஆசையாக அவளை ஏறிட்டு பார்க்கிறாள்.

“கோவிலுக்கு வருகிறீர்களா?” என அம்மா கேட்கச் சொன்னதாக சொல்லும் அந்தச் சிறுமியின் கடைவாயில் மேல் உதட்டோரமாக பலாப்பழ நார் ஒட்டியிருந்ததை செல்லப்பாப்பா பார்க்கிறாள்.

“நான் வரவில்லை...” என்கிறாள் ஏமாற்றத்துடன்.

வெளியே செல்லும் அவளது கணவன் இரவில் வீடு திரும்புகிறான். அவனாவது பலாச்சுளைகளை வாங்கி வருவான் என நினைக்கிறாள். அதுவும் நடக்கவில்லை. ஆசையை மனதில் புதைத்துக் கொண்டபடியே அவள் வெறும் நினைப்பிலே முடங்கிவிடுகிறாள் என அந்தக்் கதை முடிகிறது. வறுமை, குடும்பக் கஷ்டம் கருவுற்றப் பெண்ணின் சின்ன ஆசையை கூட நிறைவேற்றமுடியாமல் போய்விடுகிறது என்பதை வண்ணநிலவன் அழுத்தமாக கூறியிருக்கிறார்

வீட்டைத் துறந்து காதல் திருமணம் செய்து கொண்ட பலரும் தங்கள் முதற்குழந்தை பிறந்தபோது ஏற்பட்ட சங்கடங்களை, கசப்பான நிகழ்வுகளை மறக்காமல் மனதில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கர்ப்ப காலத்தில் தனக்கென யாருமில்லையே என அழுத பெண்களை நான் அறிவேன்.

பிறப்பிலே வருவது மட்டும் உறவில்லை. ஏற்படுத்திக் கொள்வதும் உறவுதான். நல்ல நண்பர்களை உருவாக்கி கொள்ளுங்கள். உங்கள் துணையாக, தோழமையாக யாராவது நிச்சயம் உடன் வருவார்கள். அந்த நம்பிக்கை போதும் சந்தோஷமாக வாழ்ந்துவிடலாம்.

## பகுதி 71 - நட்பின் வயது

திருமணமாகி 25 ஆண்டுகள் ஆகிவிட்டதை கொண்டாடுவது போல, நட்பாகி 25 ஆண்டு ஆனதை யாராவது கொண்டாடுவார்களா என்ன?

சமீபத்தில் அப்படி ஓர் அழைப்பிதழைக் கண்டேன். ஆவடியில் உள்ள பள்ளி ஆசிரியர் ஒருவர், தனது நண்பருடன் நட்புகொண்டு 25 ஆண்டு தொடங்குகிறது, அதைக் கொண்டாடுவதற்காக அந்த அழைப்பிதழை அனுப்பியிருந்தார். அழைப்பிதழை கையில் வைத்தபடியே யோசித்துக் கொண்டிருந்தேன்.

ஒருவரின் நட்பு எத்தனை காலம் நீடிக்கக்கூடியது?

கடந்த காலங்களில் நட்பின் வயது நீண்டது. பள்ளி வயதில் தொடங்கிய நட்பை வாழ்நாளின் இறுதிவரை உறுதியாகக் கொண்ட பலரை நான் அறிவேன். இன்று, அதுபோன்ற நட்புகள் குறைவு. ஃபேஸ்புக்கில் ஒருவருக்கு நூறோ இருநூறோ நட்புகள் இருக்கிறார்கள். நிஜத்தில் ஐந்தோ பத்தோ இருக்கக்கூடும். அதில், ஒருவரோ அல்லது இருவரோதான் நெருக்கமான நண்பர்கள். அவர்களுடன் கூட சில ஆண்டுகளில் நட்பு முறிந்துவிடுகிறது அல்லது விலகிப் போய்விடுகிறது.

**பேசும் மவுனம்...**

நட்பைக் கொண்டாடுகிற நம்முடைய காலத்தில், ஏன் நட்பின் காலம் இவ்வளவு குறைவாக இருக்கிறது?

புதிய புதிய நண்பர்களைத் தேடி நேசிப்பது நல்ல பழக்கம்தான், ஆனால் நெருக்கமான நண்பர்களைக் கூட நாம் ஏன் விலக்கிவிடுகிறோம்? அல்லது புரிந்துகொள்ளாமல் போகிறது.

நல்ல நண்பர்கள் சதா பேசிக்கொண்டே இருப்பதில்லை. அவர்கள் மவுனத்தை புரிந்துகொள்கிறார்கள். பணமோ, பொருளோ எதற்காகவும் நட்பாக பழகுவதில்லை. மனதைப் புரிந்துகொண்டு ஆறுதலாகப் பேசுகிறார்கள். வழிகாட்டுகிறார்கள்.

ஒரேயொரு நல்ல நண்பன் இருந்தால்கூட போதும். வாழ்க்கை சிறப்பாக அமைந்துவிடும். ஆனால், இன்று ஐந்து நிமிஷத்தில் நட்பு தொடங்கி, ஐந்து அல்லது ஆறு மணி நேரத்தில் முடிந்து போய்விடுகிறது.

வேலை அல்லது தொழில் காரணமாக நண்பர்கள் பிரிந்து போவது உண்டு. ஆனால், அவர்களின் நட்பு பிரிவுபடுவது இல்லை. எங்கிருந்தாலும் நலம் விசாரித்துக்கொண்டு உண்மையான அன்போடுதான் இருக்கிறார்கள். ஆனால், இன்றைய இளைய தலைமுறைக்கு நட்பு என்பது விளையாட்டுத்தனமாகவே இருக்கிறது.

அற்ப விஷயத்துக்காக நட்பை உதறி எறிகிறார்கள். நட்பெனும் உணர்ச்சிபூர்வமான உறவை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. பண விஷயமும், சந்தேகமுமே பலரது நட்பை முறித்திருக்கிறது.

இரண்டு தனிப்பட்ட மனிதர்களின் நட்பு, இரண்டு குடும்பங்களின் நட்பாக மாறி இருவரது வாழ்க்கையும் மேம்படுத்திய நிகழ்வுகளை நான் அறிவேன். யார் பெரியவர்? யார் சிறியவர்? யார் படித்தவர்? யார் ஏழை என எந்த பேதமும் நட்புக்கு கிடையாது. நம்முடைய வீட்டைப் போலவே உரிமையுடன் நண்பனின் வீட்டிலும் பழகவும், சாப்பிடவும் முடியும் என்பதே நிஜம்.

**பிரிவின் தேநீர்...**

நடைபயிற்சிக்குச் செல்லும் பூங்காவில் இரண்டு வயதானவர்களைக் கண்டிருக்கிறேன். இருவரும் நெருக்கமான நண்பர்கள். ஒருவர் தாடி வைத்திருப்பார். 70 வயது இருக்கும். அவர் எப்போதும் பிளாஸ்கில் தேநீர் கொண்டுவருவார். இருவரும் அதைக் குடிப்பார்கள்.

சில நாட்கள் ஒருவர் வரவில்லை என்றால் மற்றவர் கவலையோடு உட்கார்ந்திருப்பதையும் கண்டிருக்கிறேன். சமீபத்தில், இருவரையும் காணவில்லை. “என்னவானது அவர்களுக்கு?” என இன்னொரு நண்பரிடம் கேட்டேன்.

“தாடி வைத்திருந்த நாராயணன் இறந்துபோய் விட்டார். அன்றுமுதல் அவரது நண்பர் ஆறுமுகம் பூங்காவுக்கு வருவதில்லை...” என்றார். கேட்கவே வருத்தமாக இருந்தது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஆறுமுகத்தை மறுபடியும் பூங்காவில் பார்த்தேன். அடர்ந்த தாடி. கவலை படிந்து போன முகம். அவர் கையில் ஒரு பிளாஸ்க். கூடவே இரண்டு குவளைகள். எப்போதும் போல இரண்டு குவளையிலும் தேநீர் ஊற்றிவிட்டு ஒன்றை குடித்துவிட்டார். மற்றதை அருகில் வைத்தபடியே வெறித்து பார்த்துக்கொண்டே இருந்தார். அந்த டீயைக் குடிப்பதற்கு நாராயணன் உலகில் இல்லையே என்ற ஏக்கம் அவரது முகத்தில் வலியாக படர்ந்திருந்தது.

பூங்காவை விட்டுக் கிளம்பும்போது அந்த தேநீரை அருகிலுள்ள செடி ஒன்றில் கொட்டிவிட்டு கிளம்பிப் போனார். அதன்பிறகு ஆறுமுகம் ஒவ்வொரு நாளும் இதுபோல செய்வதை கண்டேன்.

நாராயணனின் பிரிவை அவரால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. நட்பின் வலி அவருக்குள் ஆழமாக இறங்கியிருந்தது. ஆகவே, நண்பருக்கான தேநீரை தினமும் கொண்டுவந்து காணிக்கையாக்குகிறார். இப்படி நட்பைப் போற்றும் மனிதர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

இதன் இன்னொரு பக்கம் ஃபேஸ்புக்கில் அறிமுமான நண்பன் ஏதோ கோபத்தில் எழுதிவிட்டான் என, வீட்டில் அழுது கொண்டு சாப்பிடாமல் கிடக்கும் இளைய தலைமுறையைக் காணும்போது, இவர்களுக்கு நட்பை எப்படி புரிய வைப்பது என கவலையாக இருக்கிறது.

### முயலுக்கு புரிந்த நிஜம்

அதிக நண்பர்களைக் கொண்டவர்களுக்கு ஆபத்தில் ஒருவர் கூட உதவ மாட்டார்கள் என்று ஒரு கதையை ஈசாப் சொல்லியிருக்கிறார். சிறார்களுக்கு சொல்லப்படும் இக்கதை பெரியவர்களுக்கும் ஏற்றதே.

காட்டில் வாழ்ந்து வந்த முயலுக்கு நிறைய நண்பர்கள். பூனை, குரங்கு, காட்டெருமை, மான், யானை, சிறுத்தை, மாடு, ஆடு என எல்லாவற்றையும் தனது நண்பனாகக் கருதியது. எல்லா விலங்கும் தனது நண்பர்களே என பெருமை அடித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் காட்டில் ராஜாவின் வேட்டை நடைபெற்றது. வேட்டை நாய்கள் ஆவேசத்துடன் பாய்ந்து வந்தன. இதைக் கண்ட முயல், தன்னை வேட்டை நாய்கள் கொன்றுவிடக் கூடாதே எனப் பயந்து, வேகமாக தாவியோடி மானிடம் சென்று, “நண்பா... என்னை காப்பாற்று. உன் முதுகில் ஏற்றிக்கொண்டு ஒடு” என சொன்னது.

அதற்கு மான், “என்னை காப்பாற்றிக் கொள்வதே பெரிய வேலையாக இருக்கிறது. உன்னை எப்படி நான் காப்பாற்றுவது?” என மறுத்துவிட்டது. உடனே, முயல் மலை உச்சியை நோக்கி ஒடியது.

வழியில் தென்பட்ட காட்டு எருமையிடம், “நீயாவது என்னை காப்பாற்ற உதவி செய்யேன்...” எனக் கேட்டது. காட்டு எருமையும் உதவ மறுத்துவிட்டது.

இப்படி ஆடு, குரங்கு, கரடி என எந்த விலங்கும் அதற்கு உதவ முன்வரவில்லை.

'நிறைய நண்பர்கள் இருப்பதாக பெருமையாக இருந்தேனே. இன்று ஆபத்தில் ஒருவர் கூட உதவ முன்வரவில்லையே...' என முயல் வருந்தியது. இதற்குள் வேட்டை நாய்கள் அதை நெருங்கிவிட்டன. முடிவில் வேறுவழியின்றி முயல் மலைஉச்சியில் இருந்து தாவிக் குதித்து உயிர் தப்பியது.

அதன்பிறகே உண்மையான நண்பன் ஒருவன் இருந்தால்கூட போதும் என்கிற உண்மை முயலுக்கு புரிந்தது என, அந்தக் கதை முடிகிறது.

இது சிறார்களுக்கு சொல்லப்படும் எளிய கதை. ஆனால், இந்தக் கதை இன்றைய ஃபேஸ்புக் யுகத்துக்கும் பொருத்தமானதே. ஃபேஸ்புக், ட்விட்டரில் உருவான நண்பர்கள், உங்களை வேடிக்கை பார்ப்பவர்கள்.

ஆபத்தில் உங்களை கைவிட்டுவிடுவார்கள். அரிதாக ஒரு சிலரே உதவக்கூடியவர். பெரும்பான்மையினர் உங்களைப் புரிந்துகொள்வதில்லை. ஒரு சிலர் உங்களை ஆபத்தில் மாட்டி விடுவதும் உண்டு.

ஆகவே, நட்பு என்பது நிமிட நேரத்தில் தோன்றி மறையும் மின்னல் என நினைக்க வேண்டாம். உண்மையான நட்பு என்பது ஆலமரத்தின் வேரைப் போல கண்ணுக்குத் தெரியாமல், உறுதியாக, ஆழமாக புதையுண்டிருப்பது. நீங்கள் நல்ல நண்பனாக இருங்கள். நல்ல நண்பர்களை உருவாக்கிக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் எந்த சிக்கலையும் தைரியமாக எதிர்கொண்டு ஜெயிக்கலாம்.

## பகுதி 72 - பறவைகளின் மொழி

அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் உள்ள வீட்டின் மூடப்பட்ட கண்ணாடி ஜன்னலை காகம் ஒன்று கொத்திக் கொண்டிருப்பதைக் கண்டேன். அந்த வீடு சில மாதங்களாகப் பூட்டப்பட்டே இருக்கிறது. தூசிபடிந்துபோன ஜன்னல்கள்.

அது கண்ணாடி என்று தெரிந்துதான் கொத்துகிறதா.. இல்லை தெரியவில்லையா எனப் புரியவில்லை. அந்த காகத்தைப் பார்த்தபடியே இருந்தேன்.

ஒருமுறை கொத்திவிட்டு, ஜன்னல் திறக்கிறதா என உன்னிப்பாகப் பார்க்கிறது. பிறகு பறந்துவிடுகிறது. சில நிமிஷங்களுக்குப் பிறகு மீண்டும் கண்ணாடியை நோக்கிவந்து கொத்துகிறது. உண்மையில் அந்த காகம் என்னதான் தேடுகிறது? முன்பு, மூடப்பட்ட ஜன்னலுக்குப் பின்னால் அந்த காகத்துக்கு உணவு கிடைத்திருக்கக்கூடும். அதைத்தான் தேடுகிறதா, இல்லை இது வெறும் விளையாட்டா? எனக்குப் புரியவில்லை.

ஆனால், ஒவ்வொரு முறை காகம் பலமாக தனது அலகால் கொத்தும்போது உண்டாக்கும் சப்தம் மனதை வருத்துவதாக இருந்தது.

பாவம், அந்த காகம் எதற்காக இப்படிப் போராடிக் கொண்டிருக்கிறது? அந்த வீட்டு மனிதர்கள் ஊரில் இல்லை என்று அதனிடம் எப்படி தெரிவிப்பது? சில நேரம் காகம் ஆவேசமாக கண்ணாடியைக் கொத்துவதைக் காணும்போது இது பைத்தியக்காரத்தனமா, வேண்டும் என்றேதான் முட்டிக் கொண்டிருக்கிறதா? என்றுகூட தோன்றியது.

மனிதர்களுடன் காகங்கள் எளிதாகப் பழகிவிடுகின்றன. மனிதர்களைக் கண்டு பயப்படுவதுபோல நடிப்பது அதன் இயல்பு. உண்மையில் காகங்கள் பயப்படுவதில்லை. மாறாக, ஜன்னலில் வைக்கப்படும் உணவை ஒரு நொடிக்குள் கொத்திக்கொண்டு பறந்துபோகும் சரியான தருணத்துக்காக காத்திருக்கிறது. பாய்ந்து எடுத்த உணவை, பறந்துபோய் மொட்டைமாடி ஒன்றில் அமர்ந்து உண்ணுகின்றன. சாப்பிடும்போதும் பயம் கொள்ளும் பறவை காகம் ஒன்றுதானோ!

காகங்கள் சில நாட்கள் அந்திவேளையில் குழப்பத்துடன் சுற்றி அலைகின்றன. வடக்கும், தெற்குமாகப் பறந்து அலைகின்றன. எதற்காக அந்த அலைச்சல் எனப் புரியவில்லை. அதுபோல, மழை பெய்து வெறித்த பிறகு காகங்களின் இயல்பு மாறிவிடுகிறது. ஈரத்துக்குள் உணவு தேடுவது எளிதானதாக இல்லை.

கண்ணாடியைக் கொத்திக் கொண்டிருக்கும் காகம்போலதான் நாமும் பலநேரம் நடந்துகொள்கிறோம். நமக்கு என்ன வேண்டும் என புரிவதில்லை. என்றோ கிடைத்த ஒன்றுக்காக, இன்றைக்கும் கொத்திக்கொண்டே இருப்பதுதான் நமது வாழ்க்கையா, இல்லை எப்படியாவது ஆசைப்பட்டது கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையா? ஒவ்வொரு முறை கண்ணாடி ஜன்னல் திறக்காமல் போகும்போதும் காகம் ஏமாற்றத்துடன் பறந்துபோகிறது. நாமும் அப்படிதான் பல நாட்கள் சோர்ந்துபோய் வீடு திரும்புகிறோம். காகம் கொத்துவது கண்ணாடியை. அதை எளிதில் திறக்கமுடியாது என நமக்காவது தெரிகிறது. ஆனால் வாழ்க்கையில் நாம் எதனிடம் மோதி தோற்கிறோம்? அந்த கதவு ஏன் திறக்கப்படுவதில்லை என தெரிவதே இல்லை.

காகங்களை எப்போது காணும்போதும், அதன் ஆரோக்கியத்தைக் கண்டு வியக்கிறேன். நோயுற்ற காகத்தைக் காண்பது அரிது. பெரும்பாலும் காகங்கள் துடிப்போடு இருக்கின்றன. அதன் வேகமான ரெக்கையடிப்பில் அதன் துடிப்பை உணர்ந்துகொள்ள முடிகிறது.

சென்னையை உலுக்கியெடுத்துக் கொண்டிருந்த மழைநாளில் ஸ்கூட்டர் ஒன்றில் மழை கோட் அணிந்தபடியே வீடு வீடாகப் போய் பால்பாக்கெட் விநியோகம் செய்பவரைக் கண்டேன். அந்த மழையிலும் அவர் முகத்தில் வெளிப்பட்ட உற்சாகம், சந்தோஷம் தருவதாக இருந்தது. ஆரோக்கியமான உடல்தான் அந்த சந்தோஷத்தின் முதல்காரணம்.

அவர் தன் உடலை உறுதியாக வைத்திருக்கிறார். ஆகவே, மழைக்கு அவர் பயம்கொள்வதில்லை. ஈரமோ, குளிரோ அவரை வாட்டுவதில்லை. ஆனால் கதகதப்பான வீடுகளுக்குள், அவசர உணவுக்குப் பழக்கப்பட்டுப் போன பலருக்கோ வெயிலும் சரிப்பட்டு வருவதில்லை; மழையும் சரிப்பட்டு வருவதில்லை. ஆரோக்கியமான உடல் கொண்டிருந்தால்

எதையும் சாதிக்கலாம். அதுதான் உண்மையான செல்வம். பணம் தேடி அலையும் இன்றைய வாழ்க்கையில் பலரும் அதை உணர்வதே இல்லை. ஆனால், பறவைகளும், விலங்குகளும்கூட உணர்ந்திருக்கின்றன. நாள் முழுவதும் சாய்மானத்திலே கிடக்கும் மனிதர்களைக் கண்டிருக்கிறேன். அப்படி ஒரு விலங்கைக் கண்டதில்லை.

நவீன வாழ்க்கையில் மனிதனும், பறவைகளும் பசியால் துரத்தப்படுகிறார்கள். உணவுக்காக அல்லாடுகிறார்கள். பறவைகளுக்கான தானியங்களும், புழு புச்சிகளும் மாநகரில் அற்றுப்போய்விட்டன. ஆகவே, எதைச் சாப்பிடுவது எனத் தெரியாமல் பறவைகள் அல்லாடுகின்றன.

‘அந்திக்கருக்கலில்

இந்தத் திசை தவறிய

பெண் பறவை

தன் கூட்டுக்காய்

தன் குஞ்சுக்காய்

அலைமோதிக் கரைகிறது

எனக்கதன்

கூடும் தெரியும்

குஞ்சும் தெரியும்

இருந்தும்

எனக்கதன்

பாஷை புரியவில்லை’

என்று கவிஞர் கலாப்ரியா ஒரு கவிதை எழுதியிருக்கிறார். கண்ணாடியைக் கொத்தும் காகத்தைக் கண்டபோது எனக்கு இந்தக் கவிதையே நினைவுக்கு வந்தது. பறவைகளின் பாஷையை யார் அறிவார்கள்?

கற்கால மனிதன் முதல் இன்று வரை விலங்குகள், பறவைகளுடன் பேசுவதற்கான மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என மனிதர்கள் முயற்சித்தே வருகிறார்கள். அதைப் பற்றி நிறைய கதைகளும் இருக்கின்றன. ரஷ்யக் கதை ஒன்று இதைப்பற்றி பேசுகிறது.

ரஷ்யாவில் வணிகரின் மகன் ஒருவன் ஒருநாள் காட்டில் நான்கு வாத்துக் குஞ்சுகளை வேட்டைக்காரர்களிடம் இருந்து காப்பாற்றினான். இதற்கு நன்றிக்கடனாக அவனுக்கு பறவைகளின் மொழியை வாத்து கற்றுத் தந்தது. பறவைகளின் மொழியைக் கற்றுக்கொண்ட அவன் ஒருநாள் வீட்டில் பெற்றோருடன் பேசிக்கொண்டிருக்கும்போது ஆந்தை கத்துவதைக் கண்டான்.

“ஆந்தை என்ன சொல்கிறது?” என்று அவனது தந்தை கேட்டார்.

“நீங்கள் பரம ஏழையாகப் போகிறீர்கள். நானோ ராஜாவாகப் போகிறேன் என்று ஆந்தை சொல்கிறது” என்றான். இதைக் கேட்டு கோபமடைந்த அப்பா, அவனை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார்.

போகுமிடம் தெரியாமல் அவன் கடற்கரைக்கு வந்தான். ஒரு வணிகக் கப்பலில் அவனை வேலைக்கு சேர்த்துக்கொண்டார்கள். கடலில் செல்லும்போது, புயல் வரப்போவதாக பறவைகள் பேசிக்கொண்டு செல்வதைக் கேட்டான். உடனே இதை மாலுமியிடம் சொன்னான். ஆனால், மாலுமி அதைக் கேட்டுக்கொள்ளவில்லை. புயல் தாக்கி கப்பல் மோசமாக சேதமடைந்தது.

கடலில் மிதந்தபடியே உயிர்தப்பிய அவன் ஒரு நகரை அடைந்தான். அந்த நாட்டு அரசனின் மாளிகை ஜன்னலை மூன்று காகங்கள் தினமும் வந்து கொத்திக்கொண்டிருந்தன. எவ்வளவு தடுத்தும் அவற்றை நிறுத்தமுடியவில்லை. இதைத் தடுத்து நிறுத்துகிறவர்களுக்கு பரிசு அளிப்பதாக மன்னன் அறிவித்தான்.

இதைப் பற்றி கேள்விப்பட்ட இளைஞன், அந்தப் பறவைகளுடன் பேசினான். “அரண்மனை தோட்டத்தில் காகங்கள் குடியிருக்கும் மரத்தை வெட்டப்போவதாக மன்னர் அறிவித்துள்ளார். அதைத் தடுக்கவே அவரது ஜன்னலை தட்டுகிறோம்” என்றன.

இந்த உண்மையை மன்னரிடம் எடுத்துச் சொன்னான் இளைஞன். உடனே மன்னர் அந்த மரத்தை வெட்டக் கூடாது என ஆணையிட்டார். அதோடு, பறவைகளின் மொழி அறிந்த அவனை தனது ஆலோசகனாக வைத்துக்கொண்டார். அவனது அறிவும், ஆற்றலும் மன்னருக்கு வழிகாட்டின. பிறகு, அவனுக்கு தன் மகளைத் திருமணம் செய்துவைத்து மன்னனாக்கினார்.

அந்த முடிசூட்டு விழாவின்போது, வணிகம் நொடித்துப் போய் பிச்சைக்காரர்களில் ஒருவராக தனது தந்தை அரண்மனை வாசலில் நிற்பதைக் கண்டான்.

ஆந்தை சொன்னது முழுமையாக பலித்துவிட்டது என அறிந்துகொண்டான். தந்தையை அடையாளம் கண்டு, தன்னோடு அவரை வைத்துக்கொண்டான். அவனது ஆட்சிக்காலத்தில் இயற்கையைக் காத்து சிறப்பாக ஆட்சி செய்தான் என கதை முடிகிறது.

பறவைகள், விலங்குகள், மனிதர்கள் எல்லோரும் புரிந்துகொள்ளும் ஒரு மொழி இருக்கிறது. அதன் பெயர் அன்பு. அதை வெளிப்படுத்தும்போது எல்லா உயிர்களும் புரிந்துகொள்கின்றன. அதைத்தான் நாம் கற்றுக்கொள்ளவும், கற்றுத் தரவும் வேண்டும்.

## பகுதி 73 - உழைப்பின் பாடல்!

சுதந்திரத்துக்கு முந்தைய இந்தியா வைப் பற்றிய ஆவணப்படம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதில், தமிழகத்தின் கிராமப்புறக் காட்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. 75 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகம் எவ்வளவு செழுமையாக, இயற்கையோடு இணைந்த வாழ்க்கை யோடு இருந்திருக்கிறது என்பதைக் காணும்போது, பெரும் ஆதங்கமாக இருந்தது.

அந்த ஆவணப்படத்தில் வயல்வெளியில் வேலை செய்துகொண்டிருப்பவர்கள் பாடு கிறார்கள். ஏற்றம் இரைப்பவன் அலாதியான குரலில் பாடுகிறான். விவசாயத் தொழி லாளர்கள் எனப் பலரும் தங்களை மறந்து பாடுகிறார்கள். அசலான கிராமத்துக் குரல்கள். கடின உழைப்பாளிகளுக்கு பாட்டுதான் ஒரே துணை. அவை எழுதிக் கொடுத்து பாடப்பட்ட பாடல்கள் இல்லை. மனதில் ஊற்றெடுக்கும் பாடல்கள். அவர்களே மண்ணின் ஆதிகவிகள்!

விவசாயம் அழியத் தொடங்கியதோடு அந்தப் பாடல்களும் நம்மிடம் இருந்து விடைபெற்றுப் போய்விட்டன. இன்று, தமிழகத்தில் எங்கேயாவது விவசாய வேலைகளுக்கு நடுவே யாராவது பாடுகிறார்களா? தன்னை மறந்து நெசவாளிகளும், ஆடு மேய்கிறவர்களும், கடலில் மீனவர்களும் இப்போதும் பாடுகிறார்களா? உழைப்பாளிகளின் பாடல்களைக் கேட்டு பல காலம் ஆகிவிட்டது. அவர்கள் மவுனமாகிவிட்டார்கள். அவர்களின் நாக்கை அரசாங்கமும் அதிகாரமும் ஒடுக்கிவிட்டது.

**கேட்க கிடைக்கும் பாடல்கள்...**

இன்று ரேடியோ பாடிக் கொண்டிருக்கிறது அல்லது ஒலிபெருக்கிப் பாடிக்கொண்டிருக்கிறது. தொலைக்காட்சி, அல்லது செல்போனில் மட்டுமே பாடல் கேட்கிறார்கள். அந்தப் பாடல் அவர்கள் மனதின் பாடலில்லை. கேட்க கிடைக்கிற பாடல்கள் மட்டுமே.

வயிற்றுப் பசி உழைப்பாளிகளின் வாயை அடைத்துவிட்டது. உண்மையில் வேறு எந்த தேசத்திலும் இப்படி அந்த மண்ணின் மைந்தர்கள் தங்கள் சொந்தக் குரலை, சொந்த பாடும் முறையை இழந்திருப்பார்களா எனத் தெரியாது.

இன்றைக்கும் ஆப்பிரிக்க கிராமங்களில் உழைப்பாளிகள் பாடுகிறார்கள். இரவானதும் ஊர் ஒன்றுகூடி விடுகிறது. இசையும் நடனமும் இணைந்ததுதான் வாழ்க்கை. ஆனால், தமிழ் வாழ்க்கையிலோ நடனம் என்பது உயர்தட்டு மக்களுக்கானது. அதுவும் இரவு கேளிக்கைக்கானது.

ஒடிசாவின் கோராபுட் மாவட்டத்துக்குப் போயிருந்த போது பழங்குடி மக்கள் நடனமாடுவதைக் கண்டேன். அவர்கள் வேடிக்கை பார்ப்பவர்களையும் அழைத்து கைகோத்துக்கொண்டு ஆடுவார்கள். அப்படி எங்களையும் அழைத்தார்கள்.

அப்போதுதான் இந்தப் கால்கள் எவ்வளவு இறுகிப் போனவை; அவற்றை நான் கவனம்கொள்ளவே இல்லை என்பதை உணர்ந்தேன். ஆண், பெண் என பேதமின்றி ஒருவரோடு ஒருவர் கைகோத்து விடிய விடிய ஆடுகிறார்கள். நடனத்தின்போது வெளிப்படும் சந்தோஷம் நிகரற்றது. ஆனால், அதை நடுத்தரவர்க்க மக்கள் உணரவே இல்லை.

பள்ளிப் பருவத்தில் களத்தில் நெல் அடிக்கும்போது பெண்கள் கூடி ஆடுவதைக் கண்டிருக்கிறேன். உழைத்து உரமேறிய உடல்களின் பேரழகுமிக்க நடனம் அது!

ஆடிமுடித்து வியர்வை வழிய... வழிய, அவர்கள் வெறுந்தரையில் உட்கார்ந்துகொண்டு ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக்கொள்வார்கள். அந்தச் சிரிப்பு கூடிக் கழித்த மகிழ்வின் அடையாளம். இன்று அத்தனையும் நாம் தொலைத்துவிட்டோம் என்பது வருத்தமளிக்கிறது.

**பாட வா... உன் பாடலை**

பூம்பூம் மாட்டுக்காரனின் பாடல் ஒருவிதம், கருவாடு விற்பவரின் குரலின் இனிமை ஒரு விதம். சாணை பிடிப்பவர்களின் குரல் கத்தி போல மினு மினுப்பாக இருக்கும். இப்படி நூறு நூறு தனிக்குரல்கள். ஒவ்வொன்றும் ஒருவகை இனிமை. இன்று கேட்கும் குரல்களில் பாதி கோபத்தில், இயலாமையில், ஆத்திரத்தில் ஒலிப்பவை. அதிலும் நகரப் பேருந்துகளில், ரயில்களில், பொதுவெளியில் கேட்கும் குரல்கள் தகரத்தை ரம்பத்தால் அறுப்பதுபோல இம்சிக்கின்றன.

பூங்காவில், ரயில் மற்றும் பேருந்து பயணங்களில் எல்லோரது காதுகளிலும் ஒரு இயர்போன் பொருத்தப்பட்டிருப்பதைக் காண்கிறேன். இவ்வளவு இசை கேட்கிற சமூகம் ஏன் பாடத் தயங்குகிறது?

தொலைகாட்சியில் நடைபெறும் போட்டி நிகழ்ச்சிகளில் பரிசு பெற வேண்டி குழந்தைகளைப் பாட வைக்கிறார்கள். அதே குழந்தை மழை பெய்யும்போது தன்னை மறந்து பாட நினைத்தால் பள்ளிக்கூடம் அனுமதிக்குமா? அல்லது வீட்டில்தான் பாடவிடுவார்களா?

நமக்கு குரல் இருப்பது ஏவல் சொல்லத்தான் என்றாகிவிட்டது. குரலை உயர்த்துகிறவனைக் கண்டு உலகம் பயப்படுகிறது. ஆனால், பாடுவதில்தான் குரலின் உண்மையான அழகு வெளிப்படும். குரலின் இனிமை உணரப்படும். அது யாரோ சிலருக்கு உரியது என நினைத்து ஒதுக்கிவிட்டோம்.

**நிறுத்தப்பட்ட பாடல்...**

கம்பம் பகுதியில் உள்ள தென்னந்தோப்பு ஒன்றுக்கு போயிருந்தேன். அங்கே ஆங்காங்கே ஸ்பீக்கர் கட்டியிருந்தார்கள். வேலைப் செய்பவர்கள், பாட்டு கேட்க விரும்புகிறார்கள் என்பதால் அந்த ஏற்பாடு என்றார்கள். “ஏன் அவர்களுக்கு பாடத் தெரியாதா?” எனக் கேட்டேன். “ஒருவருக்கும் பாடத் தெரியாது...” என்றார்கள். ஒரு பாட்டியிடம் “உங்களுக்குக் கூட பாடத் தெரியாதா?” எனக் கேட்டபோது, “முன்னாடியெல்லாம் பாடுவேன், இப்போ யாரு கேட்கிறா?” எனச் சொன்னார்.

“நாங்கள் கேட்கிறோம், பாடுங்கள்” என்றேன். அவர் பாடத் தொடங்கினார். பூமியில் புதிதாக வேர் ஊன்றிய ஒரு செடி பச்சை இலை விரிப்பதைப் போல அத்தனை அழகுடன், ஈர்ப்புடன் இருந்தது பாடல். பாடி முடித்தபோது, அவரை அறியாமல் கண்ணீர் வந்தது. கேட்டுக் கொண்டிருந்தவர்கள் தங்களை மறந்து கைதட்டினார்கள். எத்தனையோ ஆண்டுகளாக தடுத்து நிறுத்தப்பட்ட பாடலால் பீறிட்ட சந்தோஷம் அன்றைக்கு அந்தப் பாட்டியின் முகத்தில் தெரிந்தது.

பாடத்தெரிந்தவர்களைப் பாடவிடாமல் எது தடுத்து வைத்தது? பாடிய பிறகு ஏன் கண்ணீர் வந்தது? அந்தக் கண்ணீர் பாடலுக்காக வந்த கண்ணீர்தானா? விவசாயமும் அது சார்ந்த தொழில்களும் அழியத் தொடங்கியதே இதற்கான முதற்காரணம். விவசாயிகள் அதிகம் பேசுவதில்லை. அவர்களின் மவுனத்தை நாம் புரிந்துகொள்ளத் தவறிவிட்டோம்.

வாழ்வோடு இருந்த கலைகளைத் தொலைத்துவிட்டு காசு கொடுத்து இசையை, பாடல்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பது வேதனையளிக்கிறது.

**பாடத் தெரிந்த பறவை**

சீனக் கதையொன்று நினைவுக்கு வருகிறது. இனிமையாக பாடும் பறவை ஒன்றிருந்தது. அதன் குரல் கேட்பவரை மயக்கிவிடும். அந்தப் பறவை ஒருநாள் அரண்மனை தோட்டத்தில் வந்து அமர்ந்து பாடியது. அதைக் கேட்ட அரசன் தன்னை மறந்து ரசித்தான். பின்பு அதை சொந்தமாக்க நினைத்து பறவையைப் பிடித்துவரும்படி ஆணையிட்டான். பறவையோ வீரர்கள் கையில் அகப்படாமல் பறந்துபோய்விட்டது. எங்கிருந்தாலும் அதை துரத்திப் பிடித்து வரும்படி ஆணையிட்டான் அரசன். படைவீரர்கள் அதைப் பின்தொடர் ந்தார்கள்.

அந்தப் பறவை ஆறுகளைத் தாண்டி, மலையைத் தாண்டி மறுபக்கம் போய்விட்டது. அது ஒரு சிற்றரசனின் நாடு. ஆகவே, பறவையை பிடிக்க வேண்டி அந்தச் சிற்றரசனின் நாட்டை வீரர்கள் கைப்பற்றினார்கள். அதன் தலைநகரத்தை தீவைத்து எரித்தார்கள். அப்போதும் பறவையைப் பிடிக்கவே முடியவில்லை. பறவை பறந்து வேறு நிலம் நோக்கி போனது. பறவையை பிடிப்பதாகச் சொல்லி படைப்பிரிவு ஒவ்வொரு ராஜ்ஜியமாக பிடித்துக்கொண்டே போனது. ஆயிரக்கணக்கான மனிதர்கள் கொல்லப்பட்டு, வீடுகள் எரிக்கப்பட்டு, முடிவில் பறவை பிடிக்கபட்டது. ஆனால், அது அரண்மனைக்கு வந்தபோது பாடுவதை நிறுத்திக்கொண்டது.

ஏன் பறவை பாடவில்லை என மன்னருக்கு புரியவில்லை. அப்போது ஒரு மந்திரி சொன்னார்: “தன்னைச் சுற்றிச் சுழன்ற வாழ்க்கையின் சந்தோஷத்தை கண்டே அந்தப் பறவை பாடியது. இப்போது அந்தப் பறவை கண்டது அத்தனையும் கோரக் காட்சிகள், அவலங்கள். உயிருக்கு போராடும் மனிதர்களின் குரலை கேட்டு கேட்டு வருந்தி அது பாடுவதையே நிறுத்திக் கொண்டுவிட்டது” என்றார்.

பறவைகள் மட்டுமில்லை; மனிதர்களுமே தன்னைச் சுற்றிய வாழ்வின் சந்தோஷத்தில் இருந்தே பாடுகிறார்கள். அதை அழித்துவிட்ட பிறகு அவர்களிடம் பாடல் எப்படியிருக்கும்? பாடத் தெரிந்த மனிதர்களின் நாக்கை கட்டுப்போட்டு வைத்திருப்பது எவ்வளவு துயரமானது? ஏன் அதை இந்த சமூகம் உணர மறுக்கிறது.

எப்போதும் மீண்டும் உழைப்பின் பாடலை கேட்க முடியும்?

மனசாட்சி உள்ள எல்லோரும் இதற்கான பதிலை நோக்கி காத்திருக்கிறார்கள்.

## பகுதி 74 - மனிதர்கள் பலவிதம்

மனிதர்கள் யாவரும் ஏன் ஒன்றுபோல இருப்பதில்லை?

ஒருவர் அற்ப ஆயுளில் இறந்து விடுகிறார். இன்னொருவரோ 100 வயதைத் தொட்டு ஆரோக்கியமாக இருக்கிறார். ஒருவருக்கு உழைத்தால் மட்டுமே சாப்பாடு. இன்னொருவருக்கோ உட்கார்ந்து சாப்பிட்டாலும் ஏழு தலைமுறைக்குத் தேவையான சொத்து இருக்கிறது. ஒருவர் படித்துக்கொண்டே இருக்கிறார்.

வேறு ஒருவர் எதையும் படிக்காமல் லட்ச லட்சமாக சம்பாதிக்கிறார். இப்படி ஆயிரமாயிரம் வேறுபாடுகள். மனிதர்களை எப்படி புரிந்துகொள்வது?

இந்த சந்தேகத்துக்கு ஆட்பட்ட மிலிந்தா என்ற மன்னன் இது பற்றிய விளக்கம் வேண்டி ஒரு பவுத்த ஞானியிடம் கேட்கிறான்.

அவர் பதில் சொல்வதற்கு மாறாக இன்னொரு கேள்வியை அவனிடம் கேட்கிறார்:

“ஏன் ஒரு மரம் இனிப்பான கனியைத் தருகிறது? வேறு ஒரு மரம் கசப்பு கனியை ஏன் தருகிறது? ஒரு செடியோ முள்ளாக இருக்கிறது. வேறு ஒரு மரமோ வான்நோக்கி மிக உயரமாக வளர்கிறது. ஒரு மலர் சிவப்பாக இருக்கிறது. வேறு மலர் மஞ்சளாக இருக்கிறது...”

அதற்கு மிலிந்தா “இயற்கையின் நியதி அப்படிப்பட்டது” என்று பதில் சொன்னார்

அதைக் கேட்டு ஆமோதித்த ஞானி. “அது மனிதர் களுக்கும் பொருந்தக்கூடியது. ஒரே வேறுபாடு, மனிதர்கள் தனது நற்செயலால், நற்சிந்தனையால் மாற்றத்தை உண்டு பண்ணக்கூடியவர்கள். வறுமையான வாழ்க்கையில் நீங்கள் இருந்தாலும் உங்களது நற்செயல்கள் வழியாக மேன்மையை அடைய முடியும். எந்த மரமும் தனது கனிகளைத் தானே புசித்துக்கொள்வது இல்லை. ஆகவே கொடுப்பது இயற்கையின் இயல்பு!”`

**நம் காலத்திய பிரச்சினை**

நம்காலத்தின் மிகப்பெரிய பிரச்சினை மிதமிஞ்சிய சுயநலம்.

சுயநலம் கூடாதா? ‘எல்லாக் காலங்களிலும் சுயநலத்தை பேணித்தானே வந்திருக்கிறார்கள்’ என்ற கேள்வி எழக்கூடும். உண்மை. சுயநலம் தேவைதான். ஆனால், அது பொதுநலனுக்குத் தீங்கு விளைவிக்காமல் இருக்க வேண்டும். அடுத்தவர் வாழ்க்கையை அடித்து பறிக்காமல் இருக்க வேண்டும். சுயநலம் பெருகுவதற்குப் பேராசையே முதற்காரணம்.

‘எல்லோரும் வாழவேண்டும்...’ என்று நினைத்தால், அதில் உங்கள் வாழ்க்கையும் அடங்கிவிடும்தானே. இன்று பொதுநலனில் ஈடுபடுவதாகக் கூறும் பலரும் அதைக்கொண்டு சுயநலனைப் பெருக்கிக்கொள்கிறார்கள். சுயநலத்தின் வரம்புகள் மற்றும் அளவுகள் மாறிக்கொண்டே இருக்கின்றன.

தனது அடிப்படை தேவைகளைப் பூர்த்திசெய்ய ஒருவன் பாடுபடுவது சுயநலம்தான். அதே நேரம் ஆயிரமாயிரம் கோடிகளைச் சேர்த்து தன் குடும்பத்துக்கு, தனது ஏழேழு தலைமுறைகளுக்குப் பணம் சேர்ப்பதும் சுயநலம்தான். இரண்டும் ஒன்றில்லை.

இன்று சுயநலம் என்பது பூதத்தின் வயிற்றை போலாகிவிட்டது. எவ்வளவு கொடுத்தாலும் அதன் பசியைக் கட்டுபடுத்தவே முடியாது. சுயநலமிகள் உலகை பங்கு போட்டுக்கொள்ளத் துடிக்கிறார்கள். சுயநலமிகளுக்கு இரண்டு கைகள் போதவில்லை. சுயநலமிகளின் ஆசைகள் முடிவற்றது.

ஜெர்மானிய நாடகம் ஒன்றை இணையத்தில் பார்த்துக்கொண்டிருந்தேன். அதில், ஒரு பணக்கார கதாபாத்திரம் மற்றொரு கதாபாத்திரத்திடம் சொல்கிறது:

“ஏழைகள், நடுத்தர மக்கள் வீடு கட்டிக்கொள்வது தாங்கள் வாழ்வதற்காக. ஆனால், என்னைப் போன்ற பெரும்பணக்காரர்கள் வீடு கட்டுவது எங்களால் ஆடம்பரமாக காசை செலவழித்து கட்ட முடியும் என்பதைக் காட்டுவதற்காக.

வீடு பெரிதாக, பெரிதாக உலகம் வியந்து பார்க்கிறது. ஆனால், அந்த பெரிய வீட்டுக்குள் எவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. சந்தோஷம் அங்கே குடியிருப்பதில்லை என்பதை மறந்துவிடுகிறார்கள். பணக்காரன் இன்னொரு பணக்காரனுடன் போட்டியிடுகிறான். அதுதான் அவனது சவால். முடிவற்ற இந்தப் போட்டி அவனையும் கவலைகொள்ளவே செய்கிறது. பணத்தால் சந்தோஷத்தைத் தற்காலிகமாக அடைய முடியும். நிரந்தரமாக வைத்துக்கொள்ள முடியாது!”

**சுயநலம் புகட்டும் கல்வி**

சுயநலம் கொண்டவர்கள் அடித்தட்டு, நடுத்தரம், மேல்தட்டு என எல்லாத் தரப்பிலும் இருக்கிறார்கள். விதிவிலக்குகளும் அப்படியே. இன்றைய கல்வியும், சமூகமும் சுயநலத்தையே ஒருவனுக்குள் புகட்டுகின்றன.

தானும் தன் குடும்பமும் மட்டுமே வாழ வேண்டும், சகல இன்பங்களையும் அடைய வேண்டும் என்ற நினைப்பை அழுத்தமாக பதிவுசெய்து வருகிறார்கள். இதை அடைய அவர்கள் எந்த குறுக்குவழியிலும் செல்லத் தயராகவே இருக்கிறார்கள். வன்முறையைத் துணைக்கொள்கிறார்கள். ஒருவரது அழிவில் இருந்து தனது வளர்ச்சி தொடங்குவதாக நினைக்கிறார்கள். சுயநலம் கூடாது எனச் சொல்ல மாட்டேன். ஆனால், சுயநலம் மட்டுமே வாழ்க்கையில்லை என்று சொல்வேன். உங்களிடம் இருப்பதை பகிர்ந்து பாருங்கள். உங்களால் முடிந்ததைக் கொடுத்துப் பாருங்கள். பொது விஷயம் என்பது, யாரோ செய்ய வேண்டியதில்லை. நீங்களும் நானும் சேர்ந்து செய்யவேண்டிய பொதுப்பணி.

**கடவுள் கேட்ட யாசகம்**

பின்லாந்து கதை ஒன்று சுயநலத்தின் வீழ்ச்சியைப் பற்றி பேசுகிறது.

அறுவடைகாலத்தில் மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள். 'உக்கோ' என்கிற மழைக் கடவுளைக் கொண்டாடுவார்கள். இந்தக் கொண்டாட்டத்தை ஏற்றுக்கொள்ள 'உக்கோ' மனித உருவம் எடுத்து பூமிக்கு வருவார். அப்படி பூமிக்கு வந்த 'உக்கோ' ஒரு பிச்சைக்காரனைப் போன்ற தோற்றத்தை உருவாக்கிக்கொண்டு ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தார். ஒரு விவசாயி வீட்டில் ரொட்டி சுடும் வாசனை கம கமவென அடித்தது. அந்த வீட்டை தேடிப் போய் யாசகம் கேட்டார் 'உக்கோ'.

வீட்டுப் பெண் கதவை திறந்து வெளியே வந்து "என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

"நீங்கள் சுடுகின்ற ரொட்டியின் வாசனை கமகமவென மூக்கைத் துளைக்கிறது. பசியைப் போக்க ஒரு ரொட்டி கொடுங்களேன்..." எனக் கேட்டார்.

வாசலில் காத்திருக்கும்படி சொல்லிவிட்டு உள்ளே போனாள். சில நிமிட இடைவெளிக்குப் பிறகு வெளியே வந்து சொன்னாள்: "உனக்கு ரொட்டி தர முடியாது. உனக்கு ரொட்டி கொடுத்தால், ஊரில் உள்ள எல்லாப் பிச்சைக்காரனுக்கும் சொல்லிவிடுவாய். அவர்கள் அத்தனை பேருக்கும் ரொட்டி கொடுக்க என்னால் முடியாது. வேண்டுமானால் ஒரு சிறிய பன் ஒன்று மட்டும் தருகிறேன். சாப்பிட்டுவிட்டுப் போ..." என்றாள்.

"சரி அதையாவது கொடுங்கள்" எனக் கேட்டார். வீட்டுக்குள் போன அவள், அடுத்த பத்து நிமிடம் கழித்து வெளியே வந்து சொன்னாள்: "பிச்சைக்காரனுக்கு யாராவது இனிப்பு பன் கொடுப்பார்களா என்ன? மீதமான பிஸ்கட் ஒன்று கிடக்கிறது. அதை வேண்டுமானால் தருகிறேன். சாப்பிட்டுத் தொலை..."

அதற்கும் 'உக்கோ' சரியென தலையாட்டினார். அந்தப் பெண் சில நிமிடங்களுக்குப் பிறகு வெளியே வந்து, "பிச்சைகாரனுக்கு எதற்காக பிஸ்கட் தர வேண்டும்? நாய்க்குப் போட்டால் கூட நன்றியோடு இருக்கும். ஒன்றும் கிடையாது போ... போ" என துரத்தினாள்.

"நான் பிச்சைக்காரன் இல்லை. மழைக் கடவுள் உக்கோ" என அவர் சொன்னபோதும், அவள் நம்பாமல், "பிச்சைக்காரனின் பொய்யைப் பற்றி எனக்குத் தெரியும்..." என அடித்துத் துரத்தினாள். கோபமடைந்த மழைக் கடவுள், "இவ்வளவு விளைச்சல் இருந்தும் ஒரு ரொட்டியைக் கூட ஏழைக்கு தர மனம் இல்லை. உன் மனதில் கருணையே இல்லை. ஆகவே உன்னை சபிக்கிறேன். என்னைப் போல நீயும் பசியில் துடித்துக் கொண்டிருப்பாய். ஒருபோதும் உன் பசியைப் போக்கிக்கொள்ளவே முடியாது" என அவளை ஒரு மரங்கொத்தியாக மாற்றிவிட்டார்.

அன்று முதலே மரம்கொத்தி தன் அலகால் மரத்தை கொத்தி கொத்தி அலைகிறது. மரம் கொத்தும் 'டொக் டொக்' என்ற சத்தம் இரக்கமற்ற மனிதர்கள் இப்படித்தான் ஆவார்கள் என்பதன் எச்சரிக்கை ஒலியாகக் கேட்கிறது என அந்தக் கதை முடிகிறது.

தன்னலத்தின் மீது காட்டும் அக்கறையை, அன்பை பொதுவிலும் எவர் காட்டுகிறாரோ... அவருக்கு சுயநலம், பொதுநலம் என்ற பேதமிருப்பதில்லை என்பதே நிஜம்.

## பகுதி 75 - குற்றத்தின் விதை

‘அரூபமாக மறைந்துபோகும் சக்தி உங்களுக்கு கிடைத்தால் என்ன செய்வீர்கள்?’ என்று ஒரு இணைய இதழ் பலரிடமும் வாக்கெடுப்பு நடத்தியிருக்கிறது. 90 சதவீதம் பேர் சொன்ன பதில் திகைப்பூட்டுகிறது. ‘வங்கியைக் கொள்ளையடிப்பேன்’, ‘பாரில் போய் மூக்கு முட்டக் குடிப்பேன்’, ‘நண்பனின் மனைவியை அடைவேன்’, சூதாட்ட விடுதிக்குள் போய் பணத்தை அள்ளுவேன்’, ‘பெண்கள் ஹாஸ்டலுக்குள் போய் இளம்பெண்களிடம் தகாது நடப்பேன்’, ‘அதிகாரத்தைக் கைப்பற்ற கொலை செய்வேன்’ என தவறான வழிகளில் ஈடுபடவே விருப்பம் தெரிவித்துள்ளனர்.

வயது வேறுபாடின்றி, ஆண் பெண் பேதமின்றி, தாங்கள் அரூபமாக முடிந்தால் அடக்கிவைக்கப்பட்ட ஆசையை வெளிப்படுத்துவேன் என்றுதான் பதில் கூறியுள்ளனர். குற்றம் செய்யத் தயாராகவே மக்கள் இருக்கிறார்கள்.

கடவுள் மீதான பயம், சட்டம் மீதான பயம், தண்டனை மீதான பயம் என, பயம்தான் அவர்களைத் தடுத்து வைத்திருக்கிறது என்பதுதான் நிஜமா?

அதிநவீன தொழில்நுட்பச் சாதனங்களின் வளர்ச்சி சகலரையும் எளிதாக குற்றங்களில் ஈடுபட வைக்கிறது. செல்போன்களால் இவ்வளவு குற்றங்கள் உருவாகும் என யாராவது கற்பனை செய்திருப்பார்களா, என்ன?

‘சுய ஒழுக்கம் என்ற ஒன்றே இன்று தேவையற்றதாகிவிட்டதா?’ என்ற கேள்வி எழுகிறது. சுய ஒழுக்கத்துடன் வாழ்பவனை உலகம் பரிகாசம் செய்கிறது. அசடு என அடையாளப்படுத்துகிறது. ஆனால், சுய ஒழுக்கத்தைத் தவிர வேறு என்ன கவசம் ஒரு மனிதனைக் காப்பாற்றிவிட முடியும், சொல்லுங்கள்!

**எது ஈடுபட வைத்தது?**

பிஹாரில் ஒரு விவசாயி, அவரது மகன், அவனது நண்பர்கள் நால்வரும் சேர்ந்து ஒரு மாணவியை வன்புணர்ச்சி செய்துவிட்டார்கள் என டைம்ஸ் தொலைக்காட்சி செய்தி ஒன்றில் காட்டுகிறார்கள். விவசாயிக்கு 60 வயதிருக்கும். அவரது மகனுக்கு 35 வயதிருக்கும். தந்தையும் மகனும் சேர்ந்து செய்கிற செயலா இது? அவர்கள் கேமராவை பார்த்துப் பேசும்போது, கண்களில் குற்ற உணர்ச்சியே இல்லை.

அந்த ஆளின் மனைவியோ, மகளோ, பேத்தியோ இந்தச் செய்தியைப் பார்க்கும்போது என்ன ஆவார்கள்? எது இந்த விவசாயியை பாலியல் குற்றத்தில் ஈடுபட வைக்கிறது. வெறும் உடல் இச்சை என்பதை மட்டும் ஒப்புக்கொள்ளமாட்டேன்.

அவரால் இந்தக் கொடூரம் நிகழ்த்தப்பட்ட மாணவி அவரது பேத்தி வயது கொண்டவள்தானே. அது ஏன் அவரது புத்தியில் உறைக்கவே இல்லை?

ரயிலில், பேருந்தில், பொதுவெளியில் என எங்கேயும், எவரும் குற்றச்செயல்களில் ஈடுபடத் தயங்குவதே இல்லை. சில நாட்களுக்கு முன்பு அப்படி ஒரு வீடியோவை ஒரு நண்பர் வாட்ஸ்அப்பில் அனுப்பியிருந்தார்.

ஸ்கூட்டியில் வரும் ஒரு பெண், அடைத்து சாத்தப்பட்ட கடையின் முன்னால் இருந்த சிமென்ட் பேக்குகளை, யாருமில்லை என்ற காரணத்தால் திருடிப் போகிறாள். ஆனால், ரகசிய கேமரா அவளைப் பதிவு செய்துவிட்டது. திருட்டில் ஈடுபடும் அந்த பெண்ணுக்கு 20 வயதே இருக்கக்கூடும். அவளிடம் சிறு தயக்கம்கூட இல்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் எல்லா குற்றங்களும் அரங்கேற்றமாகிவிடுமா என்ன?

பின்பு எதற்கு இத்தனை நீதி நூல்கள், அறங்கள். ஞானமொழிகள்?

**உதாரணமாக ஒரு கதை**

அறம் பற்றிய விவாதம் ஒன்றை மேற்கொள்ளும்போது பிளேட்டோவின் சகோதரன் கிளாக்கோன் ஒரு கதையை உதாரணமாகச் சொல்கிறான்.

கிரேக்கத்தில் ஆடு மேய்ப்பவன் ஒருவன் இருந்தான். மேய்ச்சலுக்கு ஆடுகளை ஓட்டிச் செல்வது, இரவில் வீடு திரும்பி, கிடைத்த உணவை சாப்பிட்டுவிட்டு நிம்மதியாக உறங்குவது என அவனது வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது.

ஒருநாள் அவன் ஆடுகளை மேய்ச்சலுக்கு விட்டுக்கொண்டிருந்தபோது, ஒரு பாறையின் அடியில் இருந்து ஒரு புதையலைக் கண்டெடுத்தான். அது ஒரு பெட்டி. திறந்து பார்த்தால் உள்ளே ஒரு மோதிரம் இருந்தது. அதை கையில் மாட்டிக்கொண்டான். அந்த மோதிரம் எப்படிப்பட்டது? யாருடையது என எதையுமே அவன் ஆராயவில்லை.

ஒருநாள் அவனது மந்தையில் இருந்து ஒரு ஆடு தப்பி ஓடிவிட்டது. அதை தேடிக்கொண்டுப் போகும்போது, கையில் அணிந்திருந்த மோதிரத்தைத் தற்செயலாக தேய்த்தான். மறுநிமிஷம் அவன் அரூபமாக மறைந்துவிட்டான். ஆஹா! இது மாய மோதிரமாக இருக்கிறதே என மகிழ்ந்தபடியே தனது ஆட்டை எளிதாக தேடிக் கண்டுபிடித்துவிட்டான்.

மாயமோதிரம் கைக்கு வந்தபிறகு, தான் அரூபமாகிவிட்டால் யாராலும் கண்டுபிடிக்க முடியாதே என்று நினைத்த அவன், உல்லாச வழிகளைத் தேடி ஈடுபடத் தொடங்கினான். ஒருநாள் அரண்மனையில் நடக்கும் விருந்துக்கு ஆடு கொண்டுபோக வேண்டிய தேவை அவனுக்கு ஏற்பட்டது. அரண்மனைக்குள் நுழைந்த அவன் மாய மோதிரத்தின் உதவியால் அரூபமாகி அந்தப்புரத்துக்குள் நுழைந்தான்.

மகாராணியின் அழகைக் கண்டு மயங்கி, அவளது படுக்கையில் அரூபமாக உடன் படுத்துக்கொண்டான். யாரோ தன்னை அணைப்பதை அவள் உணர்ந்தபோதும், ஆள் உருவம் தெரியவில்லை. தனது கற்பனையோ என நினைத்து அவள் உறங்கிவிட்டாள்.

அவளை எப்படியாவது மயக்கிவிட நினைத்த இடையன், தனது உருவத்தை வெளிப்படுத்தி தனது மாய மோதிரத்தின் சக்தியைப் பற்றி எடுத்துச் சொன்னான். அதைக் கேட்ட மகாராணி, “நீ இந்த மாய மோதிரத்தைக் கொண்டு அரூபமாகி மன்னரின் அறைக்குப் போய் அவரைக் கொன்றுவிடு. பின்பு நீயும் நானும் இன்பமாக வாழலாம்” என்றாள்.

அதன்படியே இடையனும் அரூபமாக மன்னரின் அறைக்குச் சென்று அவரைக் கொலை செய்கிறான். யார் கொன்றது என ஒருவராலும் கண்டறிய முடியவில்லை. தன் அடையாளத்தை மாற்றிக்கொண்டு, மகாராணியை அடைந்த அவன் நாட்டுக்கே அரசனாகிவிடுகிறான். ஒரே ஒரு மாயசக்தி கிடைத்தால் போதும், எல்லாத் தவறுகளும் அரங்கேற்றப்பட்டுவிடுகின்றன என்ற உண்மையை எடுத்துச் சொல்கிறது இக்கதை.

**மாய மோதிர ஏக்கம்**

இந்த கதையைப் பற்றி விவாதிக்கும் சாக்ரடீஸ், ‘உலகில் எல்லா மனிதர்களும் இதுபோன்ற ஒரு மாய மோதிரம் தனக்கு கிடைக்காதா என ஏங்குகிறார்கள்’ எனக் கூறுகிறார்.

உண்மையில் இப்படி ஒரு மோதிரம் கிடைத்துவிட்டால், எந்த தவறையும் மனிதர்கள் துணிந்து செய்வார்கள். அரூபமாக சென்று நன்மைகள் செய்யலாமே என நினைப்பவர்கள் வெகு சொற்பமே.

சுய ஒழுக்கம் என்பது பெண்களுக்கு மட்டுமே போதிக்கப்பட வேண்டியது என பண்பாடு நினைக்கிறது.

ஆனால், அது ஆண் - பெண் இருவருக்கும் பொதுவானது என்பதை நினைவூட்ட வேண்டியிருக்கிறது. எது சுதந்திரம், எது கட்டுப்பாடு என்பதை புரிந்துகொள்வதில் நாம் தவறு இழைக்கிறோம். எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம் என்பது அராஜகம் இல்லையா? அதை எப்படி சுதந்திரம் என அழைக்கமுடியும்?

பண்பாட்டின் பெயரால் ஒடுக்கப்பட்ட விஷயங்களை நாம் விலக்கிவைக்கலாம். ஆனால், சுய ஒழுக்கம் என்பதே முட்டாள்தனமானது என நினைப்பதை ஏற்கமுடியாது.

ஸ்வீடிஷ் இயக்குநரான இங்க்மர் பெர்க்மன் இயக்கிய ‘வெர்ஜின் ஸ்பிரிங்’ படத்தில் ஒரு இளம்பெண் அழகான ஆடை அணிந்து தேவாலயத்துக்குப் போகிறாள். வழியில் 3 இடையர்கள் அவளுடன் சந்தோஷமாகப் பேசிக்கொண்டு துணைக்கு வருகிறார்கள். ஒரு வெட்டவெளியைக் கடக்கும்போது திடீரென அவர்கள் முகம் மாறுகிறது. அவள் தனியே இருக்கிறாள் என்பதை உணருகிறார்கள். உடனே அவள் மீது பாய்ந்து அவளுடன் வல்லுறவு கொண்டு, கொன்றுவிடுகிறார்கள்.

ஒளிரும் தேவதை போன்ற அந்த பெண் ஏன் கொல்லப்படுகிறாள்? குற்றம் நம் மனதில் ஒளிந்தே இருக்கிறதா? படத்தில் அந்தப் பெண் இறந்துபோனதும் ஒரு நீரூற்று தோன்றுகிறது. அதுதான் சாட்சி. அது மனசாட்சியின் அடையாளம். அவள் இறந்து போயிருக்கலாம். ஆனால், அவளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்டே அந்த நீரூற்று எழுகிறது.

யாரும் அறியாமல் நடக்கும் எல்லா குற்றங்களுக்கும் இப்படி ஒரு நீரூற்று பொங்கவே செய்யும். அதுவே உலகின் நியதி!

## பகுதி 76 - தந்தையெனும் தியாகி!

வயதான காலத்திலும் தந்தை வேலை செய்து சம்பாதிக்க வேண்டுமா? எந்த வயதில்தான் ஒரு தந்தை ஒய்வு பெற முடியும் என்பது குறித்த, ஒரு தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் கலந்துகொள்ளச் சென்றிருந்தேன். 60 வயதுகளைக் கடந்த பல தந்தைகள் குடும்பச் சுமையைத் தாங்குவதற்காக வேலைக்குப் போய் வருவதாகச் சொன்னார்கள். அதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

ஆனால், வேலைக்குப் போகாவிட்டால் வீட்டில் இவர்களை வைத்து சமாளிக்க முடியாது; ஊர் விஷயங்களில் நாட்டம் கொண்டுவிடுவார்கள்; வெட்டி அரசியல் பேசுவார்கள்; சின்ன விஷயங்களைப் பெரிதுபடுத்தி சண்டையிடுவார்கள்... ஆகவே வயதானாலும் ஆண்கள் வேலைக்கு போயாக வேண்டும் என, ஒரு பெண் உணர்ச்சிபூர்வமாகச் சொன்னார். இது பொதுபுத்தியின் குரல். தவறான எண்ணம்.

இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு 15 வயது வந்துவிட்டாலே, ஆண் சம்பாதிக்க தொடங்கிவிட வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. அதனால், படிப்பை விட்டு வேலைக்குப் போய் குடும்ப பொறுப்புகளை ஏற்றுக் கொண்டவர்கள் ஏராளம். அந்தத் தலைமுறையினருக்கு அறுபது, எழுபது வயதுகள் ஆனாலும் ஓய்வே கிடையாது. மகனுக்காக, மகளுக்காக, பேரன் - பேத்திகளுக்காக வாழ் நாள் முழுவதும் அவர்கள் உழைத்துக்கொண்டேதான் இருக்க வேண்டும்.

**ஆண் அழக்கூடாதா?**

பெண்ணின் வலியும், வேதனையும் கண்ணீராக வெளிப்பட்டுவிடுகின்றன. அதிலும் ஆண்கள் அழக்கூடாது என்ற கட்டுப்பாடு இருப்பதால், அவர்களின் துயரம் உறைந்து இறுகி மவுனமாகிவிடுகிறது. அந்தச் சுமையைத் தாங்குவது எளிதானது இல்லை.

தந்தை என்றாலே தியாகி என்ற பிம்பம் பண்பாட்டினால் உருவாக்கப்பட்டதே. தலை நரைக்கத் தொடங்கியதும் அவர் எளிய ஆசைகளைக் கூட கைவிட்டுவிட வேண்டும். கோயிலைத் தவிர அவருக்கு புகலிடம் கிடையாது. முதியவர்கள் சத்தமாக சிரித்து பேசினால்கூட தவறாக கருதப்பட்டது. அதிலும், மனைவியை இழந்த முதியவரின் துயரம் சொல்லில் அடங்காதது. அது, வலது கை துண்டிக்கபட்ட ஒருவனின் நிலையை போன்றது.

பிள்ளைகளுக்குத் தந்தை ஆற்ற வேண்டியது கடமை. பொறுப்பு எனக் கருதப்படுகிறது. அதே நேரம் பிள்ளைகள் விருப்பமிருந்தால் மட்டுமே தந்தைக்கு உதவிகள் செய்யலாம். வைத்துப் பராமரிக்கலாம் என்று கருதப்படுகிறது. அது தவறானது.

**பிள்ளையின் மனசில் பிம்பம்**

பிள்ளைகளின் வீட்டில் முதுமையைக் கழிக்க தந்தை ஏன் தயங்குகிறார்?

பிள்ளைகளை அவர்தான் வளர்த்தார் என்றபோதும், அவர்களுக்கு தான் சுமையாகிவிடக் கூடாது என நினைக்கிறார். அதுபோலவே இத்தனை ஆண்டுகளாக அவர்களுக்கு பணம் கொடுத்து பழகிய நாம், எப்படி அவர்களிடம் பணம் கேட்பது என்று தயங்குகிறார். அது இயல்பான தயக்கம்தானே. தாயோடு பிள்ளைகளுக்கு உள்ள நெருக்கம், தந்தையிடம் அவ்வளவாக இருப்பது இல்லை. பெரும்பான்மை தந்தைகள் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்திக்கொள்ளத் தெரியாதவர்கள். அல்லது மிகையாக, தவறாக வெளிப்படுத்துகிறவர்கள். அது, அவர்கள் குறித்த மனப்பதிவு ஒன்றை பிள்ளைகள் மனதில் ஆழமாக பதித்துவிடுகிறது.

மேற்குலகில் தந்தையின் பொறுப்பு படிக்க வைப்பதுடன் முடிந்துவிடுகிறது. வேலை தேடுவது, திருமணம் செய்துகொள்வது, குடும்பத்தை அமைத்துக்கொள்வது எல்லாமும் பிள்ளைகளின் வேலை. பிரார்த்தனையின்போது அவர்கள் ஒருவர் நலத்துக்காக மற்றவர் பிரார்த்தனை செய்துகொள்கிறார்கள். மற்றபடி, தந்தையின் வருவாயை நம்பி மட்டுமே பிள்ளைகள் இருப்பதில்லை. தந்தைகளும் தன் பிள்ளைதானே என்று வைத்து தாங்கிக்கொண்டே இருப்பதில்லை.

**தாங்க முடியாத ஏமாற்றம்**

மனிதனைத் தவிர, வேறு எந்த விலங்கும் இத்தனை காலம் பெற்றோர்களால் பராமரிக்கப்படுவதில்லை. அதனால்தான் உறவு அழுத்தமாக இருக்கிறது. தன் கஷ்டங்களைப் பெற்றோர் வெளிப்படுத்திக்கொள்வது இல்லை. கொள்ளக்கூடாது எனப் பண்பாடு தடுத்துவைத்திருக்கிறது. ஆனால், இன்று தந்தையான இளைய சமூகம் நாளை நிச்சயம் அப்படி நடந்துகொள்ளாது. 70 வயதான தனது தந்தை வேலை பார்க்க வேண்டும் எனச் சொல்லும் இளைஞன், நிச்சயம் அவனது 50 வயதுக்கு மேல் வேலைக்குப் போக மாட்டான்.

காலம் மாறிக்கொண்டே வருகிறது. ஆனால், அந்த மாற்றம் சென்ற தலைமுறைக்குச் சுமையாக இருக்கிறது. அவர்கள் தத்தளிக்கிறார்கள். தங்கள் கஷ்டங்களைப் பகிர்ந்துகொள்ள ஆள் இன்றி துயரம் கொள்கிறார்கள். உலகம் தன்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்று ஆதங்கப்படுவதை விடவும், சொந்தப் பிள்ளைகள் தன்னைப் புரிந்துகொள்ளவில்லையே என்று ஆதங்கப்படுகிறவர்கள்தான் அதிகம். அந்த ஏமாற்றம் தாங்க முடியாதது.

படித்த பிள்ளைகளை விடவும் படிக்காத பிள்ளைகள் பெற்றோர்களை முறையாக வைத்துப் பேணுகிறார்கள் என்று ஒரு வயதானவர் சொன்னார். அதில் நிஜம் இருக்கவே செய்கிறது.

**கண் பேசும் சோக மொழி**

இயந்திரங்கள் கூட குறிப்பிட்ட காலம் வரை மட்டுமே ஓடக்கூடியது. மனிதர்கள் இயந்திரங்கள் இல்லை. அவர்கள் மனம் விரும்புவது போல உடல் ஒத்துழைப்பு தராது. தனக்காக பணம் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்காத தந்தை முடிவில் கைவிடப்படுகிறார். நிர்கதியாக நிற்கிறார். அப்படி பொதுமருத்துவமனையில் நோயாளியாக நிற்கும் பலரைக் கண்டிருக்கிறேன். அவர்கள் கண்களில் வெளிப்படும் சோகம் தாங்கமுடியாதது.

ஜப்பானில் அந்தக் காலங்களில் ஒரு பழக்கம் இருந்தது. முதுமையை எய்தியதும் அவர்களை மலைமேல் கொண்டுபோய்விட்டுவிட்டு வந்துவிட வேண்டும். அது பிள்ளைகளின் கடமை. ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் மலைக் குகையில் தனியாக வாழ்ந்து மரணத்தை சந்திக்க வேண்டும். இப்படியொரு பழக்கம் சட்டமாகவே இருந்தது.
இந்தப் பழக்கம் பற்றிய உண்மை சம்பவம் ஒன்றை பழங்கதையாக இன்றும் ஜப்பானில் சொல்கிறார்கள்.

**தூக்கி வளர்த்த துயரம்**

கிச்சிரோ என்ற இளைஞன் தனது வயதான தாயை மலையில் கொண்டுபோய் விட்டுவிட முடிவு செய்தான். தாயோ தனது மகனை, பேரன் - பேத்திகளை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருந்தாள். ஆனால், மகனும் - மருமகளும் அவளை மலையில் கொண்டுபோய்விட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

குறிப்பிட்ட நாளில் கிச்சிரோ தாயைத் தூக்கிக்கொண்டு மலைக்குச் சென்றான். அடர்ந்த காடுள்ள மலை அது. அம்மாவை முதுகில் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். வழியில் அம்மா ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. மலையின் உச்சிக்குக் கொண்டுபோய் அங்கிருந்த குகையில் விட்டுவிட்டு மகன் திரும்பும்போது அம்மா அழுதாள்.

“ஏன் அம்மா அழுகிறாய்? சாவை கண்டு பயமா..?” என கிச்சிரோ கேட்டான்.

“இல்லை மகனே! நீ தூக்கத்தில் அம்மா அம்மா என்று புலம்புவாய். எழுந்து வந்து நான் உன் நெற்றியைத் தடவி ஆறுதல் படுத்துவேன். இத்தனை வயதாகியும் அந்தப் பழக்கம் உன்னை விட்டுப் போகவே இல்லை. நாளை நீ தூக்கத்தில் புலம்பும்போது நான் உடனிருக்க மாட்டேன் என்பதுதன் கவலை அளிக்கிறது. அதுபோல உடல் நலமில்லாமல் போனாலும், கஷ்டம் வந்தாலும் அம்மா அம்மா என என்னைத் தேடுவாய். பெற்றோர்கள் தங்கள் நோயை, வலியை தாங்கிக்கொள்வார்கள். ஆனால், பிள்ளைகளின் கண்ணீரை அவர்களால் தாங்கவே முடியாது. ஓடி அணைத்து ஆற்றுபடுத்தத் துடிப்பார்கள். நான் உயிரோடு இருந்தும் உன் கண்ணீரைத் துடைக்கமுடியாமல் போய்விடுமே.. என்றுதான் வருந்துகிறேன்” என்றாள்.

அதைக் கேட்ட மகன் அழுதான். தன்னை அரசன் தண்டித்தாலும் பரவாயில்லை என்று, தனது தாயை வீட்டடுக்குத் திரும்ப அழைத்து வந்தான். அரசாங்க வீரர்கள் அவனைப் பிடித்துக்கொண்டுப் போய், சிறையில் அடைத்தார்கள். இந்த விஷயம் பொதுமக்கள் மத்தியில் பரவியது. அரசை எதிர்த்து பலத்த போராட்டங்கள் உருவாகின. அதன் பின்பே அந்தச் சட்டம் கைவிடப்பட்டது. அரசே அதன்பின்பு முதியவர்களுக்கான பராமரிப்பையும் உதவித் தொகை வழங்குவதையும் நடைமுறைப்படுத்தத் தொடங்கியது என, அந்தக் கதை முடிகிறது.

ஒவ்வொரு தலைமுறையும் தனக்குப் பின்னால் வரும் அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டுகிறது. ஆகவே, இந்தத் தலைமுறையில் பலர் பெற்றோர்களை மோசமாக நடத்துகிற விதம் நாளை அவர்களுக்கே வந்து சேரப் போகிறது என்பது நிதர்சனம்!

## பகுதி 77 - மவுனத்தின் எடை!

இந்த உலகில் மிகவும் கனமான பொருள் எதுவென்று கேட்டால் புரிந்துகொள்ளப்படாத மவுனம்தான் என பதில் சொல்வேன். மவுனத்தின் எடையை ஒருவராலும் தீர்மானிக்கவே முடியாது. கடலின் ஆழத்தில் உறைந்துபோன பாறையைப் போல, அது கண்ணுக்குத் தெரியாமல் விரிந்திருக்கிறது. பேச்சையே புரிந்துகொள்ளாத நம் சமூகம் மவுனத்தை எப்படிப் புரிந்துகொள்ளும்? ஆண் - பெண் என்கிற பேதமின்றி எல்லோரும் தீர்க்கப்படாத, மவுனத்தைச் சுமந்துகொண்டு அலைகிறோம். தனி மனிதர்களைப் போலவே சமூகமும் பல விஷயங்களில் மவுனம் காக்கிறது.

**வெற்றுச் சுவர் ரகசியம்**

மனிதனைத் தவிர, வேறு எந்த விலங்கும் தனது கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்க விரும்புவதே இல்லை. மனிதர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயலிலும் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். ஒருபோதும் திரும்பிப் போக முடியாத கடந்த காலம் ஏன் மனிதர்களைத் துரத்திக்கொண்டே இருக்கிறது? நாட்கள் கடந்துபோய்விட்டன. நிகழ்வுகள் கடந்துபோய்விட்டன. ஆனால், அது ஏற்படுத்திய வலியும், வேதனையும் கடந்துபோவது இல்லை. வலி உறைந்துவிடுகிறது. அதுதான் மவுனத்தின் சாரமா?

பவுத்த துறவி ஒருவர் சுவரைப் பார்த்து அமர்ந்தபடியே பல ஆண்டுகள் ஒருவருடனும் பேசாமல் இருந்தார் என வாசித்திருக்கிறேன். அவர் மவுனமாக இருந்ததைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், ஏன் சுவரைப் பார்த்து அமர்ந்திருந்தார்? வெற்றுச்சுவர் என்பது அவரது மனதின் வெளிப்பாடுதானா? இல்லை, மனிதர்களைப் பார்த்தபடியே இருப்பவர்களால் பேச்சை கட்டுப்படுத்த முடியாதா?

குழந்தைகளுக்கு மொழி பழகும்வரை எல்லாமும் காட்சிகள்தான். விரும்பியபடியே ஒலி எழுப்பி உலகோடு அவர்கள் விளையாடுகிறார்கள். எந்தப் பொருளுக்கும் பெயர் கிடையாது. குழந்தைகளுக்கு உலகிலுள்ள எல்லாப் பொருளும் மவுனமானதுதான். ஒரு குழந்தை தனது கையில் ஆப்பிள் பழத்தைப் பிடித்தபடியே வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தது. என்ன பார்க்கிறது? ஆப்பிள் ஏன் மவுனமாக இருக்கிறது என அது யோசிக்கிறதா? குழந்தை ஆப்பிளை வைத்து விளையாடுகிறது. திடீரென ஆப்பிளைக் கடித்துப் பார்க்கிறது. நாவில் அதன் சுவை படருகிறது. இரண்டாவது கடியோடு ஆப்பிளைத் தூக்கி எறிந்து விடுகிறது. குழந்தை சுவைத்தது ஆப்பிளை மட்டுமில்லை; மவுனத்தையும்தானே!

**பொம்மை சிநேகம்**

குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் பேசத் தெரியாதவை. அவற்றோடு குழந்தைகள் எளிதாக சிநேகம் கொண்டுவிடுகிறார்கள். பேசத் தெரிந்தவர்களுடன் உறவுகொள்வதுதான் முழந்தைகளுக்குப் பிரச்சினை. பெரியவர்கள் எல்லாவற்றுக்கும் காரணம் கேட்பார்கள். விளக்கம் சொல்கிறார்கள்.

அதுதான் குழந்தைகளுக்குப் பிடிப்பதில்லை. குழந்தை உலகை வியப்பதுபோலவே தன் உடலையும் கண்டுவியக்கிறது. தன்னு டைய கை, கால்களைத் தானே ஆட்டி ஆட்டிப் பார்த்துக்கொள்கிறது. கண் ணாடி தேவையின்றித் தன்னை அறிந்துகொள்வதில் அதற்கொரு ஆனந்தம்! மவுனத்தைக் கடந்து பேச்சுக்குள் பிரவேசித்தப் பிறகு குழந்தை உருமாறிவிடுகிறது. பின்பு வாழ்நாள் எல்லாம் அது மவுனத்துக்காக ஏங்கிக்கொண்டே இருக்கிறது.

மவுனம் எப்படியிருக்கும் காட்டுங்கள் எனக் கேட்டதற்கு, ஜென் துறவி ஒருவர் - வெள்ளைக் காகிதம் ஒன்றை நீட்டினார் எனக் கேள்விப்பட்டு இருக்கிறேன்.

**மவுனத்தின் பக்கங்கள்**

கானக்கூத்தனின் கவிதை ஒன்றில் 'வெள்ளைப் பேப்பருக்கு முன்பக்கம், பின்பக்கம் என்று கிடையாது. எதை முதலில் பார்க்கிறோமோ, அதுவே அதன் முன்பக்கம்' என்றொரு வரியை வாசித்திருக்கிறேன். மவுனத்துக்கும் முன்பக்கம், பின்பக்கம் உண்டா ?

உங்கள் பேச்சு மவுனத்தை விடச் சிறப்பாக இருக்குமானால் மட்டுமே பேசுங்கள். இல்லையேல் மவுனமே நல்லது என்கிறது கிரேக்க ஞானம். மவுனம் என்பது வாய் மூடியிருப்பது மட்டுமில்லை; அதிலும் உயர்ந்த மவுனம் இன்னொன்று உள்ளது. அது அகத்தினுள் நிகழும் மவுனம். வாயை மூடிக்கொண்டிருக்கும் மவுனமும் நமக்குத் தேவை. ஆழமான அகமவுனமும் தேவை. இரண்டும் எளிதில் உருவாகிவிடுவதில்லை.

நம் பிரச்சினைகளுக்குக் காரணம் எங்கே பேசக் கூடாது எனத் தெரியாமல் போனதுதான். ஞானிகள் குறைவாகப் பேசுவதற்குக் காரணம், அவர்களுக்கு மவுனத்தின் வலிமை புரிந்திருப்பதுதான். மவுனத்தைச் சுமையாக்கிக்கொள்பவர்களும் இருக்கிறார்கள். சக்தியாக மாற்றிக்கொள்பவர்களும் இருக்கிறார்கள்.

**ஸ்பானிய கதை**

ஒரு காலத்தில் மனிதர்களைப் போலவே மேகங்களுக்கும் பேசும் சக்தியிருந்தனவாம். இதனால் பூமியில் யார் என்ன தவறு செய்தாலும், அதை மேகங்கள் காட்டிக் கொடுத்துவிடுமாம். ஒருநாள் மழைக் கடவுள் பூமிக்கு வந்தார். அழகான இளம்பெண் ஒருத்தி தனியே வீட்டில் நெசவு நெய்துகொண்டிருந்தாள். அவளை அடைவதற்காக அவர் சேவல் உருவமெடுத்து அவளின் வீட்டின் முன்பாகச் சென்றார். அந்த இளம் அழகான செங்கொண்டை சேவலைக் கண்டு ஆசையாகி அதைத் துரத்திப்பிடித்து அணைத்துக் கொண்டாள்.

மறுநிமிஷம் மழைக் கடவுள் தன்னுடைய உருவத்தை அடைந்து, அவளுடன் வல்லுறவு கொண்டார். ஆசை தீர்ந்தவுடன் மழைக் கடவுள் வானுலகுக்குப் போய்விட்டார். அந்தப் பெண் கர்ப்பிணியானாள்.

அந்தப் பெண்ணுக்குப் பையன் பிறந்தான். தனது மகனுக்கு மழைக் கடவுள்தான் தகப்பன் என அவள் வாதிட்டார். யாரும் நம்பவில்லை. தனக்காக யாராவது சாட்சி சொல்ல மாட்டார்களா என அவள் அழுதாள். மேகங்கள் அவளுக்காகச் சாட்சி சொல்ல முன்வந்தன. மழைக் கடவுளால்தான் அவள் கெடுக்கப்பட்டாள். ஆகவே, அவளது பிள்ளைக்குத் தந்தை மழைக் கடவுளே என மேகங்கள் சாட்சியம் சொன்னது. இதனால், ஆத்திரம் அடைந்த மழைக் கடவுள் என்னைக் காட்டிக் கொடுத்த காரணத்தால் இனி உங்களுக்குப் பேச்சு மறைந்துபோய்விடும் எனச் சாபம் கொடுத்துவிட்டார்.

அன்று முதல் மேகங்கள் மவுனமாக உலவுகின்றன. தான் கண்ட உண்மைகளை வாய்விட்டுச் சொல்ல முடியாமல் அவற்றை மழையாகப் பொழிகின்றன என்றொரு ஸ்பானிய நாட்டுப்புறக் கதை சொல்கிறது. உண்மைதான் மழையாகப் பொழிகிறது என்பது எவ்வளவு கவித்துவமாக இருக்கிறது பாருங்கள்!

**ஒளிரும் மவுனம்...**

கவிஞர்களும், எழுத்தாளர்களும், ஓவியர்களும், இசைக் கலைஞர்களும் மவுனத்தைப் புரிந்துகொள்கிறார்கள். தனது படைப்பின் வழியே மவுனத்தை ஒளிரச் செய்கிறார்கள். பேசப்படாத விஷயங்களே இலக்கியத்தின் ஆதாரம்.

வரலாற்றின் மவுனத்தையும் பண்பாட்டின் மவுனத்தையுமே எழுத்தாளன் கேள்வி கேட்கிறான். அதிகாரம் எதைஎல்லாம் மறைத்து வைக்க நினைக்கிறதோ, அதற்கு எதிராகக் குரல் எழுப்புகிறான். உறைந்துபோன மவுனத்தைக் கூரான வாள்போல உருமாற்றி, அதைக்கொண்டே சமர் செய்கிறான். பேச்சை புரிந்துகொள்வது போலவே மவுனத்தைப் புரிந்து கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும். அதற்குக் கலையும் இலக்கியமும் பேருதவி செய்யக்கூடும். உலகம் மறந்துபோன எத்தனையோ தகவல்களை, நினைவுகளை, நிகழ்வுகளைக் கதைகள் காப்பாற்றி வைத்திருக்கின்றன. திரும்பத் திரும்ப உலகுக்கு நினைவுபடுத்திக்கொண்டே இருக்கின்றன.

உலகின் ஆதிசெல்வம் கதைகளே! அவை தீர்ந்து போவதே இல்லை. உலகில் வாழும் மனிதர்களின் எண்ணிக்கையைவிட நிச்சயம் கதைகளின் எண்ணிக்கை அதிகமாகத்தான் இருக்கக்கூடும். ஆகவே, கதை சொல்லுங்கள். கதை கேளுங்கள். கதைகளின் வழியே வாழ்க்கையைக் கண்டடையுங்கள்!

**- நிறைந்தது**